
தமிழரசு
ஜூலை 1 1971 35 காசு

# அரசு சிமெண்ட்

## வலிவும் வனப்பும் வாய்ந்தது




நீண்டகாலம் மங்காத அழகுடன் விளங்க வேண்டுமென்றே தயாரிக்கப்படுகிறது, புதிய அரசு போர்ட்லண்ட் சிமெண்ட், வெகு அருமையான மூலப் பொருள்களும் அதி நவீன தொழில் நுட்பமும் ஈடுபடுத்தி உற்பத்தி செய்யப் படுவதால், அரசு சிமெண்ட் மிக மிகச் சன்னமாக விளங்குகிறது. கட்டிடம் கட்டுபவர்களில் பெரும்பாலோர் அரசு போர்ட்லண்ட் சிமெண்ட்தான் வேண்டும் என்று கேட்டு வாங்குகிறார்கள். நீங்களும் ஏன் கூடாது ?

TIDCO

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (வ.து.)**
(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)
150-A, மவுண்ட் ரோடு, எல்.எல்.ஏ. கட்டிடம்,
3வது மாடி, தபால் பை நெ. 5205, சென்னை-2.
தொழிற்சாலை: தமிழ்நாடு சிமெண்ட்ஸ்,
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்


# இரண்டாவது ஆண்டு துவங்குகிறது!

SL V2I1 M/N70 N71.2

**அன்புள்ள நெஞ்சங்காள்! அகங்கனிந்த கைகூப்பு!**

உங்கள் 'தமிழரசு' ஓராண்டைக் கடந்தின்று இரண்டாவதாண்டில் இனிய அடி வைக்கிறது.

பல்வேறு துறைகளிலும் பயன்கூட்ட வெளிவந்த சிற்றேடு மலரினையும் சேர்த்து தோன்றும் இணைத்திங்கே வண்ணக் களஞ்சியமாய் வனப்பூட்டி வாழ்வூட்டும் எண்ணக் களஞ்சியமாய் இணையற்ற நல்லேடாய் உருவாக்கப்பட்டது தான் உங்கள் 'தமிழரசு'.

இந்தியா முழுவதிலும் இத்தகையதோர் அரசிதழ் வேறெங்கும் இல்லையென இந்தியப் பேரரசில் இருப்பவரே வியக்கின்றார்! 'தமிழரசு'க்கு இப்பெருமை சேர்வதற்குத் துணை நிற்கும் அனைவர்க்கும் மனங்கலந்த அன்புதோய்ந்த நன்றியினை அறிவித்து மகிழ்கின்றோம்.

நன்றி தெரிவித்து நனிமகிழும் வேளையிலே இன்று [illegible] சில செய்தி எடுத்துரைக்க விரும்புகிறோம்.

'தமிழரசு' இதழுக்குத் தனி அச்சகம் அமைக்கும் [illegible] பெரும்பணி விரைவில் வெற்றிபெறும். ஆதலினால் 'தமிழரசு' தவறாமல் உரிய நேரத்தில் உங்களைத் தேடிவரும்.

முன்னிலும் புதுமுறையில் [illegible] வண்ணமொடு புதிய எண்ணங்கள் பூத்துப் பொலியும் பூக்காடாகும்.

இணைக்கும்.

69596

மலர் 2 1-7-1971 இதழ் 1




வரவு செலவு
திட்டத்தின் வாயிலாக
நலவாழ்வு நல்கும்
நமது அரசின்
திட்டங்கள்
அரசு
உழவர் பெருமக்களுக்கு
குறுகிய கால கடன் வசதி 61.5 கோடி ரூபாய்
முன்பு நீண்டகாலக் கடன் 3 கோடி ரூபாய்
இப்பொழுது நீண்டகாலக்கடன் 21 கோடி ரூபாய்
இந்த ஆண்டில் குடிநீர் வடிகால் திட்டங்களுக்கு 18 கோடியே 43 இலட்ச ரூபாய் செலவிடப்படுகிறது.
காடுகள் என்ற பெயரால் உள்ள, சாகுபடிக்கேற்ற 50,000 ஏக்கர் நிலங்கள் நிலமற்ற ஏழை மக்களுக்கு நிலப்பட்டாவாகத் தரப்படும்


அறிஞர் அண்ணா ... கல்லூரி
கல்லூரி
1971-72-ல் கல்வி வளர்ச்சிப் பணிகளுக்கு 81 கோடியே 84 லட்சம் ரூபாய் செலவிடப்படும்
235 லட்ச ரூபாய் செலவில் 9 புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் செயல்படும்
"பாசனத்துக்கு வழி பொறந்தாச்சு"
"எப்படி இருந்த கிராமம்; என்னமா மாறிடிச்சு!"
வரும் ஆண்டில் 51,000 கிராமங்களுக்கு மின் வசதி கிடைக்கும்!




# இனியவை இருபது



## 19. பாராளுமன்றங் கண்ட பிரிட்டன்

ஜூலைத் திங்கள் பதினைந்தாம் நாள் பகல் 1-25 மணிக்கு பாரிசிலிருந்து ஹீத்ரோ (Heathrow) விமான நிலையத்தை வந்தடைந்தேன். ஐரோப்பிய விமான நிலையங்களில் இலண்டன் விமான நிலையம் முக்கியமான ஒன்றாகும். சில நேரங்களில் ஐந்து அல்லது பத்து நிமிடங்களுக்கு ஒரு விமானம் வருவதும் போவதுமாக இருக்கிறது. பிரம்மாண்டமான இந்த விமான நிலையமும், இலண்டன் மாநகரமும் இரண்டாவது உலகப் போரின்போது எப்படியெல்லாம் சீரழிக்கப்பட்டன என்று இன்று நினைத்தாலும் சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிர்க்கிறது.

1940-ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் நவம்பர் வரை வெடிகுண்டுகள் விழாத இரவே இல்லை; மக்கள் வேதனையால் துளைக்கப்படாத நாளும் இல்லை. ஆயகலைகள் பலவற்றிற்கும் ஊற்றெனத் திகழும் அழகுத் திருநகர் அழிவின் கோரப் பிடியில் அல்லலுற்றுக் கொண்டிருந்தது! முதியோரும் இளையோரும் ஆடவரும் பெண்டிருமாக பூமித் தாயின் மடியில் புதைகுழிகளில் தஞ்சம் புகுந்தனர்.

அந்தப் பயங்கர இரவுகளும், மனத்தைப் பதைக்க வைக்கும் பகல்களும் 1944-ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கூடத் தொடர்ந்தன. 50,000 டன் எடையுள்ள வெடிகுண்டுகள் அந்நகரின் மீது வீசப்பட்டிருக்கின்றன.

**முதல்வர் எழுதும் பயணக் கட்டுரை**



ஹைட் பார்க்

அங்கு 1944-ஆம் ஆண்டில் மூன்றே மாதத்தில் எறியப்பட்ட குண்டுகளின் எண்ணிக்கை மட்டும் 2,300. அவற்றால் பாழான வீடுகள், கலைக்கூடங்கள், கவின்மிகு திருக்கோயில்கள் 15 இலட்சத்திற்கும் மேல்! பலியான மக்கள் 29,890 பேர். உறுப்புகள் சிதைவுற்றோர் 50,000 பேர்.

இட்லரின் வெறி ஆட்டம் அடங்கியதும் வெளியான இந்தப் புள்ளி விவரங்களைக் கண்டு புவியோர் திடுக்கிட்டனர். சீறும் புயலில் சிக்கிய பூங்கொடியென இலண்டன் அலைவுற்றபொழுதும், சித்தம் கலங்காது தாங்கிக்கொண்ட அம்மாநகரத்து மக்களின் மனத்திண்மையைக் கண்டு திகைத்தனர். இலண்டன் நகரமே அழிந்தாலும் London will take it என்று கூறி இறுதி வெற்றி எமதே என்ற நம்பிக்கையுடன் இருந்திட்ட இரும்பு மனிதன் சர்ச்சிலைத்தான் இந்த உலகம் மறக்குமோ !

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் ரோமானியரால் உருவாக்கப்பட்ட இந்நகரம் போர்க்காலச் சோதனைகளையும் தாங்கிக்கொண்டு இன்றும் ஈடும் இணையும் அற்று எடுப்புடன் விளங்குகிறது. எனது மேலை நாட்டுப் பயணத்தின்போது ஐந்தாறு நாட்கள் ஒரே இடத்தில் தங்கி இருந்தது இலண்டன் மாநகரில்தான். அந்நகரின் முக்கியமான பகுதிகள் சிலவற்றைச் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பும் அப்பொழுதுதான் எங்களுக்குக் கிட்டியது.

ஹைட் பார்க் (Hyde Park) அழகானதொரு சோலை மட்டுமல்ல; அது ஓர் " அரசியல் அங்காடி " என்றுகூடக் கூறலாம். பல்வேறு திறத்தவரின் கருத்துக்கள் இங்கு எந்நேரமும் விற்பனை ஆகிக்கொண்டிருக்கும். யார் வேண்டுமானாலும் எதைப் பற்றி வேண்டுமானாலும் இங்குப் பேசலாம். அதையும் கேட்டிட, இரசித்திட இலண்டன் மாநகர மக்கள் திரள் திரளாகக் கூடுகின்றனர். அமைதிக்கு ஊறு விளைந்தாலன்றிக் காவலர் அதனைத் தடுப்பதில்லை. ஆங்கிலேயர் மிகவும் போற்றுகின்ற அரச பரம்பரையினரை ஆசை தீரத் தாக்கிப் பேசும் உரிமை கூட இந்த இடத்தில் ஒரு குடிமகனுக்கு உண்டு ! வியட்நாம் பிரச்சினை முதல் வீட்டு விவகாரம் வரை, உயர்ந்த மதக் கோட்பாடுகள் முதல், திருடுவது குற்றமல்ல ; .திருடத் தூண்டிய சமூகம்தான் குற்றவாளி என்பது வரை எப்பொருள் பற்றியேனும் எவர் வேண்டுமானாலும் பேசலாம்—பேசுகின்றனர். ஒவ்வொரு பேச்சாளரையும் நூறு பேர் சூழ்ந்து நிற்கின்றனர். ஆனால் பேச்சு முடிந்தவுடன்

எப்பொருள் யார்யார்வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு

என்ற குறளைச் சொல்லாமல் சொல்லிச் செல்கின்றனர்.

இந்தியாவின் உரிமைப் போராட்டக் காலத்தில் இலண்டனிலிருந்த நாட்டுப்பற்று மிக்க இந்தியர்களும், இந்தியாவின் நண்பர்களும், இந்தியாவின் வழக்கை மக்களுக்கு எடுத்துச் சொல்லிட இந்தப் பூங்காவைப் பயன்படுத்தினார்களாம். அவ்வாறு அங்கு நமக்காகப் பேசிய தலைசிறந்த பேச்சாளர்களாகவும், அரசியல்வாதிகளாகவும் இருந்தவர்களில் ஒருவர்தான் திரு வி. கே. கிருஷ்ண மேனன்.

பழைமையிலும் பற்றுவிடாது புதுமையிலும் பற்றுக் கொண்டு வாழும் நாடு பிரிட்டன். அதன் எண்ணக் கலவையை எழுச்சிமிக்க அரசியின் அரண்மனையிலும், பாராளுமன்றக் கட்டடங்களிலும் காண முடிந்தது.

மக்களாட்சி முறைக்கு வடிவம் கொடுத்த பெருமை பண்டைக் கிரேக்கருக்கும் ரோமானியருக்கும் உண்டு என்றாலும், பல்வேறு தொகுதிகளிலிருந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றம் என்னும் அமைப்பினை ஏற்படுத்தி, " அமைச்சரவை " (Cabinet) என்ற அரசியல் அமைப்பை உலகிற்குத் தந்த சிறப்பு பிரிட்டனுக்கு உண்டு.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எண்பேராயம் என்றும் ஐம்பெரும் குழு என்றும் ஒருவகையான ' காபினெட் ' முறை ஆட்சியைக் கண்ட பெருமை நமது தமிழகத்திற்கும் உண்டல்லவா ?

940 அடி நீளத்திற்குப் பாராளுமன்றத்தின் மகத்தான கட்டடங்கள் அமைந்திருக்கின்றன. விக்டோரியா டவர் எனப்படும் 340 அடி உயரக் கோபுரத்தின் உச்சியில், பாராளுமன்றம் கூடும்பொழுது அதனைக் குறித்திடக் கொடி ஒன்று பறக்க விடப்படுகிறது.

இந்த மாளிகையில் மாடிப்படிகள் மட்டும் நூறு இடங்களில் அமைந்திருக்கின்றனவாம். ஆயிரத்துக்கு மேற்பட்ட அறைகள் இங்கு உண்டு.



பாராளுமன்றத்துக்குப் பின்னால் உலகப் புகழ்பெற்ற ' பிக்பென்' மணிக்கூண்டு திகழ்கிறது. அற்புத ஒலியும் இனிமையும் அழகும் மிக்க அதன் மணி ஓசை பி.பி.சி. யின் மூலம் உலகெங்கும் கேட்கிறது.

பாராளுமன்றத்திற்குப் பக்கத்தில் ' வெஸ்ட்மினிஸ்டர் ஆபி ' எனப்படும் கிறித்துவத் திருமடம் அமைந்திருக்கிறது. இங்கிலாந்திற்குப் புகழும் பெருமையும் கூட்டிய அரசர்கள், இலக்கிய ஆசான்கள், கலைஞர்கள், கவிஞர்கள், இசை வேந்தர்கள், இரண்டாம்உலகப்போரின்போது இன்னுயிர்நீத்த வீரர்கள் ஆகியோரின் சடலங்கள் இங்கே புதைக்கப்பட்டிருக்கின்றன. அந்த நாட்டு மக்களின் நன்றியுணர்ச்சிக்கு எடுத்துகாட்டாக அந்தத் திருமடம் திகழ்கிறது. பாராளுமன்றத்திற்கு எதிரே, தேம்ஸ் நதி எழில் கொழிக்க ஓடுகிறது. ஜான் பர்ன்ஸ் என்பவர் தேம்ஸ் நதியினை வரலாற்றின் கரைசல் (Liquid History) என்று குறிப்பிட்டிருக்கிறார். தேம்ஸ் நதியின் வரலாறு இங்கிலாந்தின் வரலாற்றோடு இரண்டறக் கலந்துவிட்டது. இலண்டன் துறைமுகத்துடன் இணைக்கும் வழியாகவும் இந்நதி திகழ்கிறது. சிறு படகுகள் முதல் பெரும் கப்பல்கள் வரை தேம்ஸ் நதியில் மிதக்கின்றன. ஆறு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களுக்கு அன்றாடம் தேவையான தண்ணீரையும் தேம்ஸ் நதி வழங்குகிறது.

இலண்டனின் இதயமாகக் கருதப்படுவது ஆகஸ்போர்டு வீதி. கலை வளர்ச்சியும் கல்வி வளர்ச்சியும் மிக்கதும் நாகரீகமும் நளினமும் ததும்புவதுமான நகரில் நடமாடிக் கொண்டிருக்கிறோம் என்ற உணர்வு அந்த வீதியில் நடை பயில்வோருக்கு ஏற்படும். அழகுமிக்க அங்காடிகள் இருபுறமும் அலங்கரிக்கக் காண்கிறோம். புதிய ஆடை அணிகளைத் தோற்றுவிப்பதில் உலகப்புகழ் பெற்ற பாண்ட் வீதியும் மற்றுமொரு சிறப்புமிக்க சாலையுமான ரீஜண்ட் வீதியும் ஆகஸ்போர்டு வீதியுடன் கலக்கின்றன.

இலண்டனில் மற்றொரு சிறந்த அம்சம் பாதாள இரயில்களாகும். 1895-ஆம் ஆண்டிலே பூமிக்கடியில் புகைவண்டிகளை விடுகின்ற புதுமை பிரிட்டனில் தோன்றியது. விரைவாகவும் வசதியுடனும் இனிது ஓடுகின்ற அத்தகைய இரயில் நிலையங்களில் "பிக்காடில்லி சர்க்கஸ்" அருகே அமைந்திருக்கும் இரயில் நிலையம் அற்புதமானதாகும். இங்கு 86 அடிக்குக் கீழே ஒன்றும், 106 அடிக்குக் கீழே மற்றொன்றுமாக இரு இரயில் நிலையங்கள் இயங்குகின்றன. இலண்டனின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பது இந்தப் பாதாள இரயில்கள்தாம் !

இயற்கை, மனிதன் வாழ்வதற்கு நிலத்தைத் தந்தது ! மனிதன் அது போதாது என்று காற்றிலேறி விண்ணையும் சாடுகிறான்; ககனத்தில் தளங்கள் அமைக்கிறான்; பூமிக்குக் கீழே குடைந்து செல்கிறான் ; வாழ்விடங்கள் தேடுகிறான் ; வசதிகள் பெருக்கிடுகின்றான். மனிதனின் ஆசைகளுக்கு அளவேது? அவன் ஆற்றல்களுக்குத்தான் எல்லையேது ?

இலண்டனில் " பெட்டிகோட் லேன் " என்பது ஞாயிறுதோறும் வாரச் சந்தை கூடும் இடமாகும். அங்கு இலண்டனில் உற்பத்தியாகும் மலிவான பீங்கான் பொம்மைகள், துணிவகைகள், வாசனைப் பொருள்கள், தின்பண்டங்கள் போன்ற பலவும் விற்கப்படுகின்றன. இது ஒரு வேடிக்கையான இடம். விசித்திரமான மக்கள் பலரையும் காணலாம். அங்கு வாங்கும் பொருள்களின் தரம் நாம் பேரம் பேசக்கூடிய திறமையைப் ( Bargaining power ) பொறுத்திருக்கிறது. பத்து ஷில்லிங்கிற்கு, உயர்ந்த பட்டுச் சட்டை கிடைத்தாலும் கிடைக்கலாம், வீடு வந்து பிரித்துப் பார்த்தால் கையில்லாத பழைய சட்டையாக இருந்தாலும் இருக்கலாம் ; பொருள்களைச் சோதித்துப் பார்த்து வாங்க அங்கு அனுமதி கிடையாது. ஆனால் என்னுடைய நல்வாய்ப்பு நான் வாங்கிய சட்டைக்குக் கைகள் இருந்தன.

1805-ஆம் ஆண்டில் ஸ்பெயின் நாட்டின் தென்கடற்கரையில் உள்ள டிரஃபல்கார் (Trafalgar) என்ற இடத்தில் ஸ்பெயின்-பிரஞ்சு நாட்டுக் கப்பற்படையை ஆங்கில நாட்டுக் கப்பற்படை வெற்றி கண்டது. இந்த வெற்றி இங்கிலாந்து நாட்டிற்குப் பெரும்புகழை ஈட்டித் தந்தது. அதன் நினைவாக இலண்டன் மாநகரில் டிரஃபல்கார் தெரு (Trafalgar Street) டிரஃபல்கார் சதுக்கம் ( Trafalgar Square )

அணிவகுப்புகளும், ஆர்ப்பாட்டங்களும் நடைபெறும் டிரஃபல்கார் சதுக்கம்.



என்றெல்லாம் பெயரிடப்பட்டுள்ளன. டிரஃபல்கார் சதுக்கத்தில் போரின் வெற்றியைக் குறிக்கும் சுமார் 100 அடி உயரமுள்ள தூண் ஒன்றும் வீரமும் கலையழகும் மிளிரும் சிலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இது இலண்டனில் பார்க்கத்தக்க ஓர் இடமாகும். ஹிப்பிகள் இந்த இடத்தையும் ஆக்கிரமிக்கத் தவறவில்லை.

இலண்டன் மாநகரம் ஆங்கில நாடகங்களுக்குப் பெயர் பெற்ற இடம். ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் பல இன்றும் நடிக்கப்படுகின்றன. ''கூரையின் மேல் யாழ் வாசிப்பவன்'' (Fiddler on the roof) என்ற நாடகத்தைப் பார்க்கும் வாய்ப்பு எங்களுக்குக் கிட்டியது. இதனைத் தொடர்ச்சியாகச் சுமார் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரே அரங்கத்தில் நடத்திக்கொண்டு வருவதாகக் கூறினார்கள். அரங்க அமைப்பு, நடிகர்களின் கலைத்திறன், கதையின் போக்கு இவை யாவும் மெச்சத் தக்கவையாய் அமைந்திருந்தன.

ஜூலைத் திங்கள் பதினாறும் நாள் பொதுநல விவகாரத் துறை அமைச்சர் திரு ஜோசப் காட்பர் (Mr. Joseph Godber) என்னை வரவேற்று இந்திய-இங்கிலாந்து நாட்டு அரசியல் பற்றிக் கலந்துரையாடினார்.

மாலை 5-00 மணிக்கு வெளிநாட்டு வளர்ச்சி அமைச்சர் திரு ரிச்சர்ட் உட் (Mr. Richard Wood) அவர்களைச் சந்தித்தேன். ஆங்கிலேய அரசு ஆரம்ப காலத்தில் செயலாளர் (Secretary of States) ஒருவர் மூலம் இந்திய விவகாரங்களைக் கவனித்து வந்தது. அந்தச் செயலாளர் இருந்த அறையில்தான் எங்கள் சந்திப்பு நடந்தது. அங்கு இன்றும் முகலாய மற்றும் இந்திய மன்னர்கள் படங்கள் பலவும் மாட்டி வைக்கப்பட்டுள்ளன. (சுவரை அலங்கரிக்கின்றன).

கடல் கடந்த நாடுகளில் பிரிட்டனுக்கு நல்லுறவை ஏற்படுத்தவும், வளர்க்கவும், பல்வேறு நாடுகளின் சமுதாய, பொருளாதார நிர்மாணத் திட்டங்களில் பங்கேற்கவும், யுனெஸ்கோ (UNESCO) எப். ஏ. ஓ. (F.A.O.) போன்ற உலக உதவிக் கழகங்களுக்கு உறுதுணையாக விளங்கவும் பிரிட்டிஷ் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள அமைச்சகத்தின் தலைவர் இவர்.

திரு ரிச்சர்ட் உட் தனது நாட்டுக்காகத் தன்னலியன்ற

முதல்வர் கலைஞர் அவர்கள் இங்கிலாந்து பொதுநல வெளி விவகாரத்துறை அமைச்சர் திரு ஜோசப் காட்பருடன்.



எல்லாவற்றையும் பணயம் வைக்க முன்வந்த ஒரு தேச பக்தர். உலகப் பெரும்போரில் ஈடுபட்டுத் தழும்புகளை ஏற்றவர்.

இந்தியாவின் வைசிராயாக இருந்த லார்ட் ஹாலிஃபாக்சின் மகன் என்ற முறையில் ரிச்சர்ட் உட் இந்தியாவுடன் தொடர்பு கொண்டவர் என்பதையும் அறிந்து நான் மிகவும் மகிழ்ந்தேன்.

திரு உட் அவர்களிடம் இங்கிலாந்தின் தொழில் நிறுவனங்கள் பொருளாதாரத் தொழில் நுட்பத் துறையில் இன்னும் தமிழகத்துடன் நெருங்கி ஒத்துழைப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி விவாதித்தேன். சுமார் ஒரு மணி நேரத்திற்கு உரையாடல் தொடர்ந்தது.

இங்கிலாந்து நாட்டுடன் தமிழ் நாட்டுக்கும் இந்தியாவுக்கும் இருந்து வந்த உறவை அமைச்சர் நினைவூட்டினார்.

இத்தாலி, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், ஹாலந்து நாடுகளைப் பார்த்த பின்னர் இங்கிலாந்திற்கு வந்துள்ளேன். வரலாற்றுப்படி ரோமாபுரிதான் தமிழகத்தோடு முதலில் வர்த்தகம் மூலம் உறவு கொண்டது. மேலை நாடுகளைப் பொறுத்தவரை இங்கிலாந்து இந்தியாவோடும் அதன் அங்கமான தமிழகத்தோடும் கடைசியாகத் தொடர்பு ஏற்படுத்திக் கொண்ட நாடு. எனவேதான் எனது சுற்றுப் பயணத் திட்டத்தில் இங்கிலாந்து வருகை கடைசியாக இணைக்கப்பட்டிருக்கிறது என்றேன்.

ரிச்சர்ட் உட் என்னைப் பல படப் பாராட்டிப் பேசினார். "சிறப்பு வாய்ந்த சொற்பொழிவாளராக—நுண்ணறிவு மிக்க அரசியல் வாதியாக—40-க்கு மேற்பட்ட நாடகங்களை இயற்றிப் புகழ்பெற்ற நாடகாசிரியராக—தலைசிறந்த முதலமைச்சராக நீங்கள் விளங்குவது கண்டு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்'' என்று கூறினார். "உங்கள் கட்சிக்கு நிதி திரட்டுவதற்காக நாடகங்களில் நீங்களே பங்கேற்று நடித்திருக்கிறீர்களாமே" என்று என்னைப்பற்றி என்னிடமே கூறி என்னை நாணவைத்தார். எங்கள் சந்திப்பை இங்கிலாந்து அரசின் சார்பில் செய்திப் படமாக்கித் தமிழகத்தைக் கௌரவித்தனர்.

இலண்டனில் பி.பி.சி.யினர் என்னைப் பேட்டி கண்டனர். வெளி உலகின் செய்திகளை இங்கிலாந்து நாட்டார் அறியவும் இங்கிலாந்தின் கருத்துக்களை மற்றைய நாட்டார் புரிந்துகொள்ளவும் ஆங்கிலத்திலும் மற்றும் 39 உலக மொழிகளிலும் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும் பி.பி.சி. யின் புறச் செய்திப் பிரிவின் (B.B.C. External Services) வானொலி நிருபர் நான் பார்த்த நாடுகளைப் பற்றியும் என்னுடைய சுற்றுப் பயணத்தால் உற்ற பயன்களைப் பற்றியும் கேட்டார்.

அந்தப் பேட்டியின் போது கேட்கப்பட்ட கேள்விகளும் எனது பதிலும் வருமாறு :—

கேள்வி.—முதன் முதலாக நீங்கள் மேற்கொண்ட இந்த அயல்நாட்டுச் சுற்றுப்பயணம் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்.—பிறநாடுகளின் பண்பாட்டைப் புரிந்து கொள்ளவேண்டும், பிறநாடுகளோடு இந்தியாவுக்குள்ள வணிக-தொழில் தொடர்புகளை வளர்க்க வேண்டும் என்பனவே எனது சுற்றுப் பயணத்தின் நோக்கங்கள்; இந்த நாடுகளின் தொழில் முதலிய துறைகளில் பெற்ற அனுபவங்களைத் தமிழ்நாட்டில் இயன்றஅளவில் பயன்படுத்திக் கொள்ள நான் முயல்வேன்.

கேள்வி.—இலண்டனுக்கு வருவதற்கு முன் நீங்கள் எந்தெந்த நாடுகளைப் பார்த்தீர்கள்? அங்கு உங்கள் அனுபவம் என்ன?

பதில்.—ரோமின் மகிமை மிக்க வரலாறு பற்றி நான் படித்திருக்கிறேன். ஏன்? எழுதவும் செய்துள்ளேன். ஆனால் அவற்றை இப்போது நேரடியாகப் பார்க்கும் வாய்ப்பையும் பெற்றேன்.

சுவிட்சர்லாந்தைப் பார்த்தேன். அது இயற்கை எழிலின் தொட்டில். அந்த நாட்டில் உல்லாசப் பயணம் செழித்துக் கொழிக்கிறது. அந்த நாடு உல்லாசப் பயணத்தின் மூலம் பெறும் வருமானம், பெரிய நாடான அமெரிக்கா உல்லாசப் பயணத்தின்மூலம் பெறும் தொகைக்குச் சமமாகும்.

பாரிசில், பிரெஞ்சு அமைச்சர் திரு மைக்கேலைச் சந்தித்தேன்.



கலைஞரைக் கைகுலுக்கி வரவேற்கிறார் இங்கிலாந்து வெளிநாட்டு வளர்ச்சி அமைச்சர் திரு ரிச்சர்ட் உட்.

தொழிலதிபர்களையும் வணிக சபைத் தலைவரையும் கூடச் சந்தித்தேன். தமிழ் நாட்டுக்கும் பிரான்சுக்குமுள்ள, பண்பாட்டு-வரலாற்றுத் தொடர்புகளை இவர்களிடம் விவாதித்தேன்.

எழில் நகரமாம் பாரிசுக்கு வருவதற்கு முன்னர், ரோமில் போப்பாண்டவரையும் கண்டேன்.

நாசங்கள் நர்த்தனமாடிய இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின் ஜெர்மனி புதிய உருப் பெற்றிருப்பதையும் கண்டேன். அந்த நாடு தொழில் துறையில் மிகவும் முன்னேறியுள்ளது. ஆமாம்! வேலைக்காகத் தொழிலாளர்கள் இறக்குமதி செய்யப்படுகிறார்கள்! அபரிமிதமாகத் தொழிலாளர் சக்தி படைத்திருக்கும் தமிழ்நாடும் தொழில்துறையில் இதுபோல் முன்னேறமுடியுமா என்று ஏங்கினேன்.

ஹாலந்தில் பிலிப்ஸ் ரேடியோத் தொழிற்சாலையைப் பார்த்தேன். பத்துத் தொழிலாளர்களோடு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தொழிற்சாலை, இன்றையதினம் உலகெங்கும் மூன்று லட்சத்து அறுபத்தையாயிரம் பேருக்கு வேலை தரத்தக்க விதத்தில் எவ்விதம் எழுபதாண்டுகளில் வளர்ந்தது என்பதையும் அறிந்து வியந்தேன்.

கேள்வி.—நீங்கள் தற்போது தான், பாரிசில் நடக்கும் மூன்றாம் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டு விட்டுத் திரும்பி வந்திருக்கிறீர்கள்! அதைப் பற்றி நாங்கள் அறியலாமா?

பதில்.—முதலாம் உலகத் தமிழ் மாநாடு 1966-ல் கோலாலம்பூரில் நடந்தது. இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு, மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்களின் சீரிய முயற்சியால் சென்னையில் 1968-ல் நடத்தப்பட்டது. அவர் இன்றையதினம் நம்மிடையே இல்லையே என்று வருத்தப்படுகிறேன். எனினும் அவரது பேராவல் நிறைவேறியது கண்டு மகிழ்கிறேன். இந்த மாநாட்டைத் திறந்து வைக்கிற வேளையில், ''அயல்



பி. பி. சி.யின் புதிய டெலிவிஷன் நிலையம்.

நாடுகளில் வாழும் தமிழர்கள் தமிழை மறந்து வருகிறார்கள். அவ்வாறு நடக்கக் கூடாது. அவர்கள் தமது பாரம்பரியத்தைக் காத்திட வேண்டும். தமிழ் மொழியை வளர்க்கவும் ஒவ்வொரு நாட்டுக்குமிடையே நெருங்கிய உறவை வளர்க்கவும் மாணவர்கள் பரிமாற்றத் திட்டம் ஒன்று வேண்டும். சங்க இலக்கியங்களில் காணப்படும் சொற்கள் சுமார் மூன்று லட்சமாகும். தற்போது புழக்கத்தில் உள்ள வார்த்தைகளையும் சேர்த்துச் சுமார் ஆறு லட்சம் வார்த்தைகளைக் கொண்டதாய் ஓர் ஆங்கில-தமிழ் அகராதியைத் தயாரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்! தமிழர்கள் பிற நாடுகளுடன் தமது பண்பாட்டு உறவுகளை வளர்த்துக் கொள்ளவேண்டும்,'' என்றும் குறிப்பிட்டேன்.

**கேள்வி :** தமிழ் நாடு அதன் நல்ல நிர்வாகத்திற்காகப் பாராட்டப் படுகிறதே! அதற்குக் காரணம் என்ன?

**பதில் :** இதற்குக் காரணங்கள், நிலையான ஆட்சியும், தமிழ் நாட்டு அரசாங்க அதிகாரிகளின் பாரம்பரிய ரீதியான திறமையுமே ஆகும்.

**கேள்வி :** தமிழ் நாட்டு அரசாங்கத்திற்கும் மத்திய அரசாங்கத்திற்குமிடையே எந்த விதமான உறவு நிலவுகிறது? மத்திய ஆட்சிக்கும் மாநிலங்களுக்குமிடையே சுமுக உறவு நிலவ நீங்கள் தரும்அறிவுரை என்ன?

**பதில் :** மத்திய ஆட்சிக்கும் தமிழ் நாட்டுக்கும் இடையே நிலவும் உறவு மிக சுமுகமாயுள்ளது. தற்போது உறவுக்குக் கரம் கொடுப்பதும் உரிமைக்குக் குரல் கொடுப்பதும், அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்பதும் மத்திய அரசால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாய் எடுக்கப்படும் பெரும் முடிவுகளில் மாநிலங்களுக்கும் பங்குஇருக்க வேண்டும் என்பதும் எங்கள் கொள்கை.

**கேள்வி :** இந்தியாவில் மத்திய அரசை ஆளுகின்ற கட்சியில் தகராறு ஏற்பட்டுள்ளது. மனச்சாட்சியின்படி வாக்களிக்கக்கூட அனுமதிக்கப்பட்டது. இந்த நிலையில் இந்திய ஐக்கியத்திற்கும் ஒருமைப்பாட்டுக்கும் தங்கள் அறிவுரை என்ன?

**பதில் :** மத்திய ஆட்சியிலுள்ள கட்சியில் ஏற்பட்ட பிளவை வரவேற்காதவர்களில் நானும் ஒருவன். எனினும், இது தவிர்க்க முடியாததாகிவிட்டது. இந்தக் கட்சியினர் மறுபடியும் ஒன்று கூடுவரா என்பது கேள்விக் குறியே! எதிர்காலத்தில் இந்திய ஒற்றுமைக்கும் ஒருமைப் பாட்டுக்குமான தீர்வு '' மாநில சுயாட்சி; மத்தியில் கூட்டாட்சி '' என்ற முழக்கத்திலேயே உள்ளது.

**கேள்வி :** முந்தைய இங்கிலாந்து அரசாங்க அமைச்சரான திருமதி ஜூடித் ஹார்ட் தமிழ் நாட்டைப் பார்வையிட்டபோது அங்கு-குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்டிருந்த பசுமைப் புரட்சியை வானளாவப் புகழ்ந்தார்களே! அது பற்றி நீங்கள் ஏதேனும் சொல்ல முடியுமா?

**பதில் :** அவர் தமிழகப் பசுமைப் புரட்சியைப் பாராட்டியதற்கு நான் மகிழ்கிறேன்; நன்றி தெரிவிக்கிறேன். தமிழ்நாடு தற்போது உணவில் தன்னிறைவு பெற்றுள்ளது. கடன், மானியம் இன்ன பிற உருவங்களில் விவசாயிகளுக்கு நாங்கள் எல்லா உதவிகளையும் செய்து வருகிறோம். ஆதார விலைக் கொள்கையைப் பின்பற்றிஉணவுப் பொருள்களின் விலை சரிந்து விடாமல் பார்த்துக் கொள்கிறோம்.

**கேள்வி :** பதவிக்கு வந்தபின்னர் தொழில் துறையில் தி.மு.க. அரசு சாதித்த சாதனைகள் என்ன?

**பதில் :** எங்களது ஆட்சிக்காலத்தில் தொழில் துறையில் தமிழ் நாடு பெற்ற வளர்ச்சியைக் காட்டுவதற்கான புள்ளி விவரங்கள் இப்பொழுது என்னிடமில்லை. தொழிலபிவிருத்திக்காக நாங்கள் எந்த முயற்சியையும் விட்டு வைக்கவில்லை, என்பதை மட்டும் நான் அழுத்தமாகக் கூற இயலும் என்பதோடு என் பேட்டி முடிவுற்றது.



மாஸி-பர்கூசன் (Massey Ferguson) நவீன விவசாய இயந்திரங்களை உற்பத்தி செய்வதில் உலகப் புகழ் பெற்ற நிறுவனமாகும். சென்னையிலிருந்து அப்பொழுது லண்டன் வந்திருந்த சிம்சன் நிறுவனத்தின் தலைவர் திரு. சிவசைலம் அவர்கள் மாஸி-பர்கூசன் நிறுவனத்தின் சார்பாக என்னை அன்புடன் அழைத்தார். அந்த அழைப்பை மறுக்க என்னால் இயலவில்லை. காரணம், அந்நிறுவனத்தினர் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் மூலதனமிட்டுத் தமிழ் நாட்டில் டிராக்டர் தொழிற்சாலை ஒன்றை உருவாக்கி இருக்கின்றனர்.

ஜூலைத் திங்கள் 17-ஆம் நாள் கவன்ட்ரி என்னுமிடத்திலுள்ள அந்நிறுவனத்தைப் பார்வையிடச் சென்றோம். அவர்கள், நான்கு வகையான டிராக்டர்களை நாளொன்றுக்கு 400 வீதம்உற்பத்தி செய்கின்றனர். வாங்குபவர் சொல்கின்ற முறையில் விருப்பத்திற்கேற்றபடியும் செய்து தருகின்றனர்.

அந்நிறுவனத்தினர் அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு என்ன என்ன வாழ்க்கை வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பதைக் கண்டு வியப்புற்றேன். அந்தத் தொழிலாளிகளுக்கு ஊக்க போனஸ் தருவதனால் அவர்கள் உற்பத்தியை அதிகப் படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் ஆர்வமுடன் முனைப்பாக வேலை செய்வதைக் கண்டேன். அவர்களுடைய அன்றாடக் கோரிக்கைகளையும் பிரச்சினைகளையும் பெரும்பாலும் பேசி உடன்பாடு காண்கிறார்கள். நிறுவனத்தின் உற்பத்தியையும் தொழிலாளர்களின் ஊதியத்தையும் பாதிக்கும் வகையில் எந்த நடவடிக்கையிலும் அவர்கள் ஈடுபடுவதில்லை. அந்த நிறுவனத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் வாழ்க்கைத் தரம் எவ்வளவு உயர்ந்திருக்கிறது; அவர்கள் எப்படி வறுமையற்று வாழ்கிறார்கள் என்பதற்கு அந்த நிறுவனத்தில் அமைக்கப்பட்டிருக்கும் மிகப் பெரிய கார் நிறுத்துமிடமே (Car Park) போதிய சான்றாகும்.

அந்நிறுவனத்தின் இயக்குநர்களான பீத்(Mr. J.W. Beith)ரைட் (Mr. P. T. Wright) ஆகியோர் இந்தியா விவசாயத் துறையில் வேகமாக முன்னேறும் என்ற தங்களுடைய நம்பிக்கையைத் தெரிவித்து அந்த நம்பிக்கையின் நினைவாக அந்த நிறுவனத்தில் உற்பத்திசெய்த ஒரு டிராக்டரை எனக்குப் பரிசாக வழங்கினார்கள். அந்தப் பரிசுப்பொருளைக் கோவை விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பி வைப்பேன் என்று அவர்களிடம் தெரிவித்தேன்.

பின்னர், 'ஸ்டோன்லி ஆபே' (Stoneleigh Abbey) என்ற இடத்திலுள்ள பயிற்சிப் பள்ளியைப் பார்வையிட்டேன். அங்கு டிராக்டர் உற்பத்தி, பயன்படுத்துதல், பழுது பார்த்தல் போன்ற பல்வேறுபட்ட பயிற்சிகளையும் பல மொழிகளிலும் அளித்து வருகிறார்கள். அங்கு, இந்திய மாணவர்களைக் கண்ட எனக்குப் பெருமகிழ்ச்சி. அந்த மிகப் பெரிய நிறுவனத்தின் தொழிற் கூடத்தையும் பயிற்சிப் பள்ளியையும் பார்வையிட்டுவிட்டு அன்று மாலை இலண்டன் திரும்பினேன்.

ஜூலைத் திங்கள் 20-ஆம் நாள் மாலை 10 மணிக்கு இலண்டன் 'ஹித்ரோ' விமான நிலையத்தை வந்தடைந்தேன். விமானத்தில் ஏறிய பிறகு, விமானம் சுமார் அரை மணி நேரத்திற்குக் கிளம்பவில்லை. காரணம், ஏற்கனவே இரண்டு மூன்று விமானங்கள் கிளம்புவதற்காக அங்கு வரிசையில் காத்துக் கொண்டிருந்தன. அவைகள் கிளம்பிய பின்னரே எங்கள் விமானம் கிளம்பிற்று. செக்கஸ்லோவாகியா நாட்டின் தலைநகரான பிரேக் நகரை விமானம் வந்தடைந்தது. அங்கு இந்தியத் தூதர் எங்களை வரவேற்று விமான நிலையத்திலேயே சற்று ஓய்வெடுக்கச் செய்தார். மீண்டும் எங்கள் பயணம் தொடர்ந்தது. மாலை சுமார் 7 மணிக்கு ரோம் வழியாக எகிப்து நகர் வந்தடைந்தோம். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்துடன்தொடர்பு கொண்டதும் பண்டைய நாகரீகத்தின் இருப்பிடமுமான எகிப்து நாட்டின் தலைநகராகிய கெய்ரோவின் மண்ணை மிதித்ததும் என்னையும் அறியாமல் ஏதோ ஒரு உணர்வு என்னிடம் தோன்றிற்று. விமானம் கிளம்ப சுமார் ஒருமணி நேரம் ஆகும் என்றார்கள். விமான நிலையத்திலேயே அந்த ஒரு மணி நேரத்தையும் போக்கிவிட்டோம். சுமார் 8 மணிக்கு விமானம் கெய்ரோவிலிருந்து பம்பாய் நோக்கிக் கிளம்பிற்று.

கட்சிப் பணிகள், அரசு அலுவல்கள் என்று பல வேலைகளைப் பார்த்து வந்த எனக்கு, விருந்தினராக என்னை அழைத்து, குறிப்பிட்ட ஒரு சில நிகழ்ச்சிகளிலேயே கலந்து கொள்ள வேண்டுமென்று அன்புக்கட்டளையிட்டது ஓரளவிற்குச் சங்கடமாகவே இருந்தது. மீண்டும், தாயகத்திற்கு எவ்வளவு விரைவில் திரும்புவோம் என்ற ஆவல் பீரிட, எனது பயணம் தொடர்ந்தது.

ஜூலைத் திங்கள் 21-ஆம் நாள் காலை சுமார் 7 மணிக்கு பம்பாயிலுள்ள சாந்தா குருஸ் விமான நிலையத்திற்கு விமானம் வந்து சேர்ந்தது.

(தொடரும்)

ஹோட்டல்
ஸ்ரீ லேகா
அண்ணா சாலையில்
(தேவிபாரடைஸ் திரையரங்கம் அருகில்)
அமைந்துள்ள
இவ்வுணவு விடுதியில்
எல்லா வசதிகளும்
உண்டு.
தொலைபேசி எண்
88078
மாநகரின்
நடுவில்
மாபெரும்
ஹோட்டல்!


■ஏர் கண்டிஷன் உணவுக் கூடம்
■ஏர் கண்டிஷன் அறைகள்!
குறைந்த வாடகை
அறைகளும் உண்டு
நவீன வசதிகளுடன்
நாகரிகத் தோற்றமுடன்
நகரில் நடுநாயகமாக
அமைந்த விடுதி இது!
14.7.1971 அன்று
முதல்வர் கலைஞர்
திறந்து வைக்கிறார்கள்!
சட்டமன்ற மேலவைத் தலைவர்
திரு. சி. பி. சிற்றரசு அவர்கள்
தலைமை தாங்குவார்.
எம். பி. நாராயணன்.
உரிமையாளர்
ஜோன்...



# செய்யும் செந்நாப்போதாரும்

## சு. செல்லப்பன்

'செய்' என்பது நிலம். செய்யில் இட்ட வித்து முளைக்க நீர் இன்றியமையாதது; செழித்து வளரக் காற்றும், சூரிய ஒளியும் தேவை. நல்ல வித்தாயினும் பாறைமேல் இட்டால் பயிர் முளைக்குமா? சிறந்த நிலமாயினும் சொத்தை வித்தினை வித்தினால் பலனேது? பண்பட்ட நிலத்தில் பொறுக்கு விதைகளையிட்டாலும் நீரில்லாவிட்டால் அவை முளைக்கமாட்டா. முளைத்த பயிருக்குச் சூரிய ஒளி இல்லையேல் அது வெளுத்து நாளடைவில் அழிந்துவிடும். அனைத்தும் பொருந்திய நிலையில் முளைக்கும் பயிரோ செழிந்து வளர்ந்து சிறந்த பயனை நல்கும்.

வள்ளுவரின் பண்பட்ட உள்ளமாகிய நிலத்தில் பதிந்த கருத்து வித்துக்கள், அவருடைய பட்டறிவாகிய நீர் பட்டமையால், குறட்பயிர்களாக முளைத்தன. அவருடைய புலமை ஒளிபெற்று, அக்குறட்பயிர்கள் உரத்துடன் வளர்ந்து, உலகுக்கு நலம் விளைத்தன. வள்ளுவரின் உள்ளச் செய்யில் தோன்றி வளர்ந்த குறள், உலகச் செய் கொண்டு விளக்கும் கருத்துக்களை இனிக் காணலாம்.

ஒரு பாத்தியில் பயிர்கள் வளர்ந்து வருகின்றன. நீர் பாய்ந்து, களையெடுத்துக் கொத்திவிட்டமையால் நிலம் புழுதி படிந்த நிலையில் இருக்கிறது. அடுத்து நீர் பாய்ச்சப்படுவதை எதிர்பார்த்துள்ள நேரம். அந்நிலையில் நீர் பாய்ந்தால் பயிரின் வளர்ச்சி மகிழ்வூட்டக் கூடியதாய் இருக்கும். தேவைக்கு மேல் நீர் பாய்ந்து சதுப்புற்ற நிலத்தில் மேலும் நீரைப் பாய்ச்சினால் பயிர் அழுகிக்கெடும்; அளவுக்கு மிஞ்சி நிலம் வறண்டு போனாலும் பயிர் கருகிவிடும்.



எதிர்நோக்கி நிற்கும் தருணத்தில் பாய்ச்சப்படும் நீர்தான் வளர்ச்சிக்கு உதவும். அவை அறிந்து பேச வேண்டிய இன்றியமையாமையை வலியுறுத்த வள்ளுவர் வளரும் பயிருக்கு நீர்பாய்ச்சும் நிலையைச் சுட்டிக் காட்டுகிறார்.

பேசுவோர், அவையின் தன்மையை அறிந்து ஏற்ற சொற்களை ஆராய்ந்து சொல்ல வேண்டும். அவையறியாது பேசுவோரின் பேச்சு, பேசியும் பேசப்படாததேயாகும். அறிவிற் சிறந்தவர்முன் பேசுவோர், தாமும் அறிவிற் சிறந்தோராய்ப் பேச வேண்டும். அறிவில் இளையார்முன் பேசும்போதோ, தாமும் அந்நிலை நின்றே பேசவேண்டும். அவர்கட்குப் புரியாத உயர்ந்த கருத்துக்களை அங்குப் பேசுவதால் பயன் ஏதுமில்லை. தாமே உணர்ந்து கொள்ளும் தன்மையுடையவர்முன் கற்றவர் பேசுதல், வளரும் பயிர் உள்ள பாத்தியில் உரிய வேளையில் நீரைச் சொரிந்தது போலாகும். நீரை எதிர் பார்த்திருந்த பயிருக்கு நீர் கிடைக்கிறது; சேர்ந்த நீரும் பயிர் வளரப் பயன்படுகிறது.

'உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று."

மக்களில் தீயவர்கள், கயவர்கள் இருப்பார்கள். கழுத்திலிருக்கும் நகைக்காகக் குழந்தையைக் கொல்லும் கயமைத்தனம் நிறைந்தோரும் மனித வடிவில் உலவுவதுண்டு. அந்நகையோரிடம் இரக்கம் காட்டித் தண்டிக்காது விட்டுவிட்டால் சமுதாயம் பாழ்பட்டுவிடும். வயலில் பசுமையான பயிரினூடே முளைக்கும் களையும், பயிரைப் போலவே பசுமையாகவும் செழிப்பாகவும் தோற்றமளிக்கும். பசுமைத் தோற்றத்தால் பயிரைப் போன்று இருக்கும் தன்மை கொண்டு—களையைக் களையாது விட்டுவிட்டால், அது வளரத் தொடங்கி, நாளடைவில் பயிரையே நசுக்கிவிடும். பயிருக்கிடையே காணப்படும் களையை அகற்றுவது போலச் சமுதாயத்தில் தோன்றும் கொடியவர்களைக் களைய வேண்டியது நல்லாட்சியின் அவசியச் செயலாகும்.

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்."

இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்.



கொடியவர் சிலரைக் கொலைத் தண்டனையால் அரசன் ஒறுத்தல் பயிரைக் காப்பாற்றக் களையைக் களைவதற்கு நிகரான செயலாகும் என்பது இதன் பொருள். இக் கருத்தினை—இக்குறட்பொருளை எளிய நடையில், படிப்போர் உள்ளத்தில் பதியும் வண்ணம் கவிஞர் வல்லம் வேங்கடபதி அவர்கள் அழகுற எடுத்துக் கூறுகிறார்கள் :

“கயவரும்மேன் மக்கள்போல் தோன்று வார்கள்
கண்மறையில் பொய்மையினைப் போற்று வார்கள்!
நயத்தக்க நாகரிகம் அவரால் வாழ்வில்
நசித்துவிடும்; பண்புகெடும்; நன்மை வாடும்
வயலிலுமிக் கதைநடக்கக் காண லாகும்
வளமாகப் பயிரோடு பயிராய்ப் போலிப்
பயிரான களைமுளைக்கும்; பச்சை கட்டும்
பயிருக்கே பகையாகிப் பலனைத் தின்னும்!

நல்லோர்கள் மத்தியிலே புல்லர் தம்மை
நடமாட விட்டுவிட்டால் நாடென் னாகும்?
பொல்லாங்கே சூழமத னாலே அந்தப்
பொல்லாரைச் சிறைப்படுத்தி வைத்தல் போலே
பல்கியெங்கும் பயிரோடு பிணைந்து நிற்கும்
பாழ்களையை வேரோடு பறிக்க என்றே
நல்லுழவர் செயத்தக்க செயலைச் சுட்டி
நயம்படவே நவில்கின்றார் அறத்தின் செம்மல்!”

வள்ளுவர் மக்களிடையே குலம் பிரிக்கிறார் ; உயர்ந்த குலம் என்றும் தாழ்ந்த குலம் என்றும் பேதப்படுத்துகிறார். உலக ஒருமைப்பாடு பற்றிப் பேசிய அவ்வொப்பில் புலவன் குலப்பாகுபாடு பற்றிக் கூறியிருப்பானா என்ற ஐயம் உடனே அனைவர்க்கும் தோன்றும். “ சாதிகள் இல்லையடி பாப்பா ; குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் தீது ” என்றார் பாரதியார். வள்ளுவர் பிரிக்கும் குலம் இச்சாதி சமயத்தை அடிப்படையாகக் கொண்டது அல்ல! ‘ பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் ’ என்று முழங்கிய முதற் புரட்சியாளர் அவர். “ சாதியிரண்டொழிய வேறில்லை........ இட்டார் பெரியோர் ; இடாதோர் இழி குலத்தோர் ” என்றாள் அறநெறி கூறிய ஔவைப் பாட்டி. கொடையாளர் உயர் சாதியினர் ; இட முடிந்தும் இட இடந்தரா உள்ளமுடையோர் இழி சாதியினர்—இஃது ஔவையின் கருத்து. குலத்தைப் பிரிக்க ஔவை கொண்ட அளவுகோல் கொடைத்தன்மை ; இதற்கு வள்ளுவர் கொள்ளும் அளவுகோலோ நமக்கு வியப்பூட்டுவதாக உள்ளது ! அவர் நாவலர் அல்லவா ? எனவே ஒருவனுடைய நாக்கைக் கொண்டு இனம் பிரிக்கிறார். எவ்வாறு ? எந்த நாக்கு உயர்ந்த, சீரிய, அறிவு நலம் சான்ற சொற்களை வெளிப்படுத்துகின்றதோ அந்நாக்குக்குரியவன் உயர் குலத்தவன். கீழ்த்தரமான, முறையற்ற, கேடான, கயமைத்தனம் நிறைந்த சொற்களை எவனுடைய நா பேசுகிறதோ அவன் கீழ்க் குலத்தவன். இது வள்ளுவர் கருத்து.

“நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.





ரசிகர்களின் கனவுக் கன்னி

முளைத்து வரும் வித்து, நிலத்தின் தன்மையை—அது சத்துள்ள நிலமா, சத்தற்ற நிலமா என்ற கூறுபாட்டைக் காட்டும். அதேபோல், ஒருவனுடைய வாயிலிருந்து பிறக்கும் சொல் அவனுடைய குடியைக் காட்டும். இதன் பொருள் என்ன ? செம்மையான சொற்களைக் கூறுவோர் உயர்ந்த குடியினர். நலம் பயக்காத மொழி பேசுவோர் தாழ்ந்த குடியினர் என்பதேயாம்.

சொற்களைக் கூறவேண்டிய முறையைப் பற்றித் தெய்வப் புலவர் வலியுறுத்திக் கூறியுள்ள கருத்து ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டிய ஒன்று. நம் வாயிலிருந்து பிறக்கும் சொல் தரும் பொருள் என்ன, அவ்வாறு பேசுவது முறைதானா, நம்முடைய பண்பாட்டுக்கு அது ஏற்றதா, என்பன போன்றவற்றைச் சிந்தியாமலேயே பல வேளைகளில் நாம் பேசிவிடுகிறோம். எடுத்துக் காட்டுக்கு ஒன்று குறிப்பிடுவேன். ஒருமுறை பாலக்காட்டுக்கு ஒரு திருமணத்திற்கு நண்பர்கள் ஒன்றுகூடி ஒரு பேருந்தை (Bus) எடுத்துச் சென்றிருந்தோம். திருமணம் முடிந்ததும், ஊருக்குத் திரும்புவதன் முன், அருகிலிருந்த மலம்புழா அணைக்கட்டைப் பார்த்துத் திரும்பலாம் என்ற எண்ணத்துடன் அங்குச் சென்றோம். பிற்பகல் ஐந்து மணிக்குள்ளாகச் சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்பினோம். அப்போது எதிரே ஒரு பேருந்து சென்றது. அதில் பெண்கள் நிறைந்திருந்தனர். ஒரு கல்லூரியைச் சார்ந்தவர்கள் சுற்றுலா வந்திருந்தனர். நாங்கள் வெளியேறும் வேளையில் அவ்வண்டி உள்ளே சென்றது. எனக்கு அருகில் அமர்ந்திருந்தவர்—படிப்பில் இரண்டு பட்டங்கள் பெற்றவர்—எதிரே இருந்த வண்டியைப் பார்த்துக் கொண்டே சொன்னார் ; “ அடடே ! கொஞ்சம் முந்தி வந்துவிட்டோம். சிறிது நேரம் கழித்து இங்கு வந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே” என்றார். அப்பேச்சின் பொருள் என்ன ? அப்பெண்கள் இங்கிருக்கும் நேரத்தில் நாமும் இங்கிருக்குமாறு வந்திருக்கக் கூடாதா என்பதேயாம். அவர் தவறான உள்ளம் கொண்டவர் அல்ல ; நேர்மையாளர் ; நல்லொழுக்கமுடையவர். ஆயினும், “ வேடிக்கையாகப் ” பேசுவதாக எண்ணிக்கொண்டு. கூறுகின்ற சொற்களின் பொருள் எவ்வளவு கேவலமானது என்ற சிந்தனையேயின்றிப் பேசுகிறார் ; திரைப்பட விளம்பரங்களிலும், பத்திரிகைகளிலும், “ ரசிகர்களின் கனவுலகக் கன்னி.................நடிப்பது ” என்ற எழுத்துக்களைக் காணுகிறோம். சிந்தித்துப் பார்த்தால் இதன் பொருள் எவ்வளவு கேவலமானது ? உறங்குபவன் தனக்கு உரியவள் அல்லாத ஒருத்தியைக் கனவிலே கண்டு துயில்கிறான் என்றால் அது எவ்வகைப் பண்பாகும் ? பொருள் பற்றிச் சிந்தியாமலேயே எழுதிவிடுகிறோம், பேசி விடுகிறோம். இது தவிர்க்கப்படவேண்டும். உயர்ந்த நிலையிலே இருப்பவர்கள் ஆயினும், செல்வர்கள் ஆயினும், செல்வாக்கு மிகுந்தவராயினும், தகுதியற்ற சொற்களைப் பேசும் நாவைக் கொண்டிருப்பின் அவர்கள் தாழ்ந்தவரே யாவர் ! இழிவான சொற்களைக் கூறுவோர், இரண்டு பட்டங்கள் பெற்றவரேயாயினும், அவர்கள் இழிந்த குலத்தவரே என்பது வள்ளுவர் கருத்து. பண்புநலம் கலையப் பேசும் பழக்கத்தை வள்ளுவரின் இக்குறள் வலியுறுத்துகிறது. நாட்டு மக்கள் பின்பற்றி ஒழுகவேண்டிய மிகச் சிறந்த கருத்து இது.

“ மக்கள் பொறையுடையவர்களாக இருக்க வேண்டும். பிறர் செய்யும் தீங்கையும் பொறுக்க வேண்டும். அத்தீங்கை நினைவில் கொள்ளாது மறந்து விடுதல் பொறுத்தலைவிட நல்லதாகும் ” என்பதனைத் திருவள்ளுவர் நிலத்தைக் கொண்டு விளக்குகிறார். நிலத்தை அகழ்கின்றார்கள் ; தனக்கு ஊறு செய்கிறார்களே என்று அந்நிலம் வெகுண்டு அவர்களை அழிப்பதில்லை. மாறாக அகழ்வோர் நின்று கொள்ள இடத்தை

“ அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல”





நல்குகிறது. அது மட்டுமா ? இன்னா செய்தார்க்கும் இனியவே செய்கிறது. தோண்டத் தோண்டத், தோண்டுபவர்கட்குப் பல பயனுள்ள பொருள்களை நல்குகிறது. நீரைத் தருகிறது ; நிலக்கரியைத் தருகிறது ; தங்கத்தைத் தருகிறது ; எண்ணெய்யைத் தருகிறது ; மேலும் ஏற்றமிகு பொருள்கள் எவ்வளவோ தருகிறது. அகழ்வாரைத் தாங்குவதோடு அவர்கட்கு நன்மையையும் நல்கும் நிலத்தின் இந்தப் பண்பு வள்ளுவரால் பெரிதும்பாராட்டப்படுகின்றது.

“அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.”

நிலத்தின் மீது நின்றுகொண்டு அதே நிலத்தை வெட்டுவது போன்றே, நம்மால் புரக்கப்படுபவர்களே நம்மை இகழ்ந்து பேசவும் நேரலாம். அதை நாம் பொறுமையுடன் தாங்க வேண்டும். ஒருவன் அகழ்வதினாலேயே நிலத்துக்கு அழிவு ஏற்பட்டு விடுவதில்லை. அகழ்ந்த அந்த இடம், வாவியாக, கூவலாக மாறிச் செம்மை பெறுகிறது. பிறர் இகழ்வதைப் பொறுமையுடன் ஏற்றால் அது நமக்குப் பெருமையாகவே முடியும்.

விசும்பில் உள்ள நீருக்கு நிறம், மணம், சுவை கிடையாது. அது கீழே வீழ்ந்து நிலத்தில் படியும்போது, சேர்ந்துள்ள நிலத்தின் தன்மைக்கேற்ப நிறம், சுவை முதலியன மாறுபடுகின்றன. அதுபோன்றே ஒருவரின் தனித்த இயல்பான அறிவு, சேரும் இனத்திற்கேற்ப மாறுபடும் என்பதால், சிற்றினம் சேரக்கூடாது என வள்ளுவர் வற்புறுத்துகிறார். நல்லினம் சேர்ந்தால் நன்மை கிட்டும் ; பூவோடு சேரும்போது நாரும் மணம் பெறுதல் போல ! சிற்றினம் சேர்ந்தாலோ அனைத்தும் அழியும் ; சாக்கடையிற் சேரும் பன்னீரும் சாக்கடையாவது போல ; ஆகவே ஆராய்ந்து இனம் சேர வேண்டும் என்பது அறிவிக்கப்படுகிறது.

“நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு.”

களர் நிலம் விளைவுக்கு ஒவ்வாதது ; வித்திய வித்தை முளைக்கவொட்டாமற் செய்வது. நிலம் என்ற பெயரில் ஒரு பரப்பைக் கொண்டிருப்பது தவிர அதனால் பயனேதுமில்லை. கல்லாதாரை வள்ளுவர் களர் நிலத்தோடு ஒப்பிடுகிறார். அவர்கள் பிறப்பு எவ்விதத்திலும் பயனற்றது. இருந்தும் அவர்கள் இல்லாதவர்களே ! களர் நிலத்தைப்போல அவர்கள் வடிவோடு உலவுவது தவிர அவர்களால் சமூகத்திற்குப் பயனில்லை ;

“உளரென்றும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர்.”

நாட்டில் கல்லாமையாகிய களரை இல்லாமையாக்கி, அதை நலம் கொழிக்கும்

நன்செய்யாய் மாற்றும் பணியில் அரசன் அயராது உழைக்க வேண்டுமென வள்ளுவர் அவாவுகிறார்.

வலிமையும் பெருமையும் உடையவராயினும் தமக்கு வாய்ப்பில்லாத இடத்தில் இருந்தால் மிக எளியவராலும் வெல்லப் பட்டு விடுவர். ஆண்மை செறிந்த யானையாயினும் கால் புதையக்கூடிய களர் நிலத்தில் சிக்கிக் கொண்டால், கேவலம், நரி கூட அதைத் துன்புறுத்தி மகிழும்.

"காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு."

எவ்வளவு வலிமை பொருந்தியவராயினும் ஏற்ற காலமும் இடமும் அமையாவிடில் எடுத்த செயலைச் சிறப்புற முடிக்க முடியாதவராகிவிடுவர்.

சறுக்கு நிலங்களில் கவனமுடன் நடக்க வேண்டும் ; இன்றேல் வழுக்கி விழ நேரிடும். அங்கு, ஒரு கோலை ஊன்றி நடப்பது பாதுகாப்பாகும். வழுக்கல் நிலத்தில் கோல் ஊன்றி நடப்பதைப் பார்த்த வள்ளுவர் அதுகொண்டு ஓர் அரிய கருத்தை உரைக்கிறார். வாழ்க்கை ஒரு நீண்ட பயணம். அதில் நம்மை இடர வைக்கும் இடங்களும் இருக்கலாம். அவற்றைக் கடக்கும்போது உயர்ந்தோர்களின் மொழியினை ஊன்று கோலாகக் கொண்டால் இடரேதும் நேராது.

"இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்."

விளைநிலத்தைக் கவனித்துப் பார்த்துப் பருவத்தில் செய்ய வேண்டியன செய்ய வேண்டும். உழுதல், எருப்பெய்தல், களை கட்டல், நீர்பாய்ச்சல், காத்தல் என்றவைகளை முறைப்படி ஆற்ற வேண்டும். அவ்வாறு அடுத்தன செய்யாது சோம்பியிருப்பானின் நிலம், பயனைத் தராது. நிறை காத்து ஒழுகும் புகழ்புரிந்த இல்லாளைப் பெற்ற ஒருவன் அவளை நாடோறும் பேணி, நகைமுகம் காட்டி, நலம் புனைந்துரைத்து, உளம் மகிழச் செய்வானேல் அவளும், " கூடிமுயங்கிக் " குறைவற்ற இன்பம் தருவாள். அவளைப் பிரிந்து காணுதிருப்பினே ஊடிக் கொள்வாள். இஃது இல்லத்தில் நிகழ்வது. அது போன்று, நிலமங்கையை மணந்துள்ள உழவ மகனும் நாடொறும் அவளைக் கண்டு—உர உணவு வேண்டுமா, நீராடையை நிறை





காலாழ் களரில்.........(குறள்)

வுறப் பெற்றிருக்கிறாளா ; இல்லக் காப்பாகிய வேலி ஊறின்றி உள்ளதா என்பன போன்ற அவள் தேவையறிந்து உதவ வேண்டும். இன்றேல் அவளும் ' தன்னுடைய அலங்காரமாகிய பயிர்க்கோலம் ' அழிந்து ஊடிவிடுவாள். அதன் விளைவு, விளைவு கிடைக்காது. மனையாளின் நலம் கவனியாதவன் போகமிழக்கிறான் ; அதுபோன்றே நிலத்தைக் கவனியாதவனும் ' போக ' மிழக்கிறான்.

" செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்."

நம்மிடம் ஏதுமில்லை என்று ஏங்கியிருப்பாரைக் கண்டு நிலமங்கை சிரிக்கிறாள். இறகால் உடலை நீவிடில் நம் உடலெங்கும் மயிர் சிலிர்க்கும். அதேபோல் கொழுமுனை பட்டால் போதும், நிலமங்கை கூசி, உடல் குழைந்து, பயிராகிய மயிர் சிலிர்ப்பாள். இதையறிந்து உழைத்து, உயர்வு தேடாது சோம்பித் திரிபவர்களைப் பார்த்து இரக்கப் படும் நிலமங்கை சிரிக்காது என் செய்வாள் !

"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும். "

இக்குறளுக்கு ஓர் அரிய விளக்கம் போல அமைந்துள்ளது தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஒரு கவியரங்கப்பாடல் :

எதுவும் இல்லையென ஏங்கியி நப்பாரைக் கண்டு,
எது இல்லை என் மகனே!
வெடித்திருக்கும் என் வயிற்றில் மண்வளம் பார்;
வெகுதூரம் அகழ்ந்திட்டால் வைரமணி வழங்கிடு
வேன்;
வெறுளியாய் வாழாமல் வேளாண்குடி பெருக்கிடுக,
எனச் சிரித்து நிலமடந்தை நிற்கின்றாள்!
உழவர் திருமகனே! உணர்ந்திடுக புவிச் சிரிப்பு;
உழைத்துப் பெற்றிடுக உடனடியாய்ப் புதுச் செழிப்பு!

# சிங்கார படகு

# சிமெண்ட் படகு



சென்னைத் துறைமுகத்தை நோக்கி வரும் கப்பல்களின் தலைவர்கள் தங்கள் ' தொலை நோக்குக்' கண்ணாடி வழியாகப் பார்க்கும்போது அவர்களுக்குத் தென்படும் முதல் காட்சி சென்னைக் கடற்கரையில் வரிசையாக வைக்கப்பட்டிருக்கும் விசைப் படகுகளே ! கப்பல்கள் கரையை அடைந்ததும், கப்பல்களின் தலைவர்கள், அந்த விந்தைமிகு விசைப் படகுகளைக் காண ஓடோடி வருவார்கள். கண்ணையும், கருத்தையும் ஈர்க்கும் அத்தகைய கவின்மிகு காட்சியைத் தருவது தமிழகத்தின் மீன்துறையைச் சார்ந்த இராயபுரம் மீன் பிடி படகு கட்டும் நிலையத்திலும் சென்னை, சிங்கார வேலர் மீன் பிடி படகு கட்டும் நிலையத்திலும் கட்டி முடிக்கப்பட்ட விசைப் படகுகள்தான் !

இந்த விசைப் படகுகள் தமிழக அரசுக்குப் பெருமை சேர்க்கும் பெட்டகங்கள் ! வளரும் தமிழகத்தின் புகழ்வானில் ஒளிசிந்தும் நட்சத்திரங்கள் ! இந்த விசைப் படகுகளுக்கு ஒரு வீர வரலாறு உண்டு. ஆம் ! இந்த விசைப் படகுகள் இந்தியாவிலேயேமுதன் முதலாகத் தமிழகத்தில்தான் கட்டப்பட்டன. 1953-ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்ட இப்பணி பாங்குடன் வளர்ந்து பாரெங்கும் புகழ் பரப்பி வருகின்றது. மேல் நாடுகளில் இத்தகைய படகுகளை ஏராளமாகக் கட்டுவது பொதுவாக, இல்லை என்றே கூறலாம். அவரவர் தேவைக்கான படகை அவரவர் செய்து கொள்வர். ஆகவே ஒட்டு மொத்தமாக வரிசை வரிசையாக இவ் விசைப் படகுகளை மேலை நாட்டில் காண்பதரிது. ஆனால் தமிழகத்தில்......

தமிழகத்தில் சாதனைகள் பல உண்டு. தமிழகம் பல துறைகளில் இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களைக் காட்டிலும் சிறந்த சாதனைகளைப் புரிந்துள்ளது. சில துறைகளில் இந்தியாவிற்கே வழி காட்டியாக உள்ளது. தமிழகத்து மீன் துறையினரால் கட்டப்படும் ' விசைப் படகுகளும் ' இந்தியாவிற்கே வழிகாட்டியாக உள்ளன. தமிழகத்தில் படகு கட்டும் நிலையங்கள் நாகைப்பட்டினம், மன்டபம், சென்னையில் இராயபுரம், மெரினு கடற்கரை ஆகிய நான்கு இடங்களில் செயல்படுகின்றன. இங்கு கட்டிமுடிக்கப்படும் விசைப் படகுகள் மீனவர்களுக்கு வழங்கப் படுகின்றன. இப் படகுகளின் தயாரிப்புச் செலவில் 25 சத வீதம் உதவித் தொகையாகவும், மீதி கடனுகவும், வழங்கப்படுகிறது. பொதுவாக 30 அடி, 32 அடி, 36 அடி நீளமுள்ள விசைப் படகுகளைத் தயாரிக்க முறையே 54,500, 82,250, 1,12,000 ரூபாய்கள் செலவாகின்றன. மூலப் பொருள்களின் விலை உயர்வினுல் தயாரிப்புச் செலவு அதிகமாகிக் கொண்டே போகிறது.

ஆகவே தமிழக அரசின் உதவித் திட்டத்தின் கீழ் இந்த விசைப் படகைப் பெறும் மீனவர்களுக்குக் கடன் சுமையும் அதிகரித்துக் கொண்டே போகிறது. மேலும் தயாரிப்புச் செலவு அதிகரித்துக் கொண்டே போவதால் படகுகளைத் தேவையான அளவு தயாரிக்க முடிவதில்லை. அதே நேரத்தில் படகுகளை எதிர்பார்க்கும் மீனவர்களோ ஏராளமாக உள்ளனர். இந்நிலையை மாற்றி அமைக்கப் பெரும்பான்மையான மீனவப் பெருங்குடி மக்களுக்கு வழங்க, ஏராளமான விசைப் படகுகளைத் தயாரிக்க அதே நேரத்தில் குறைந்த விலையில் நவீன முறையில் தயாரிக்கத் தமிழக அரசு முயற்சியினை மேற்கொண்டது.

### மீனவ மக்களுக்கு ஆவன செய்ய

1970-ஆம் ஆண்டு மே திங்கள் 27ஆம் நாள் மீன்துறை இயக்குநா மீனவர்களுக்கு ஆவன செய்யப் பல தொழில் வல்லுநர்களுடன் இது பற்றிக் கலந்துரையாடினார்; தற்போது நடைமுறையிலுள்ள விசைப் படகுகள் யாவும் மரத்தினுல் செய்யப்பட்டுச் செப்புத் தகடுகளாலும், அலுமினியத் தகடுகளாலும் கவசமிடப்பட்டவை. செப்புத் தகடுகளினுல் கவசமிடுவதால் ஏராளமான அந்நியச் செலாவணி தேவைப்படுவதுடன்

செப்புத் தகடுகளை இறக்குமதி செய்வதில் உள்ள சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டியுள்ளது. எனவே இரும்பிலும், 'பைப்பர் க்ளாஸ்' 'பிளாஸ்டிக்' ஆகிய பொருள்களிலும் படகுகளைக் கட்டுவது பற்றி ஆலோசிக்கப்பட்டது. இவற்றிற்கான மூலப் பொருள்களைப் பெறுவதில் உள்ள சிரமத்திலும், இப் பொருள்களில் படகு கட்டுவதால் தேவைப்படும் அந்நியச் செலாவணியைக் கருத்தில் கொண்டும் இம்முயற்சி கைவிடப்பட்டது. ஆயினும் குறைந்த விலையில் படகுகளைக் கட்டுகின்ற முயற்சி கைவிடப்படவில்லை. ஏழை மீனவ மக்களுக்கு எப்படியாவது உதவ வேண்டும்—ஏராளமான மீனவ மக்களுக்குக் குறைந்த விலையில் விசைப் படகுகளை வழங்கவேண்டுமென்ற ஒரே குறிக்கோளுடன் இரும்புக் கம்பிகளுடன் சிமெண்ட் கலவையினால் படகு கட்டுவது பற்றி ஆராயப்பட்டது.

ஏழைமக்களுக்கு உதவவேண்டுமென்ற எண்ணத்தினால் எழுந்த இந்த யோசனையை ஏற்க மறுத்தனர் சிலர்.

'சிமெண்டினால் படகா— சிரிப்புத்தான் வருகுதையா!'—என்றனர் சிலர்.

'என் வாழ்நாளில் இப்படி ஒரு விந்தையான சிந்தனையைக் கண்டதில்லை' என்றனர் இன்னும் சிலர்.

'இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது சிமெண்டினால் செய்கிறார்களா' என 'முன்னோடி'யைத் தேடினார் முதியவர் ஒருவர்.

இந் நாட்டு வருங்காலச் சிற்பிகளுக்கு இலவசக் கல்வி வழங்குவதிலும், இளம் சிறார்க்கு இலவச பகல் உணவு வழங்குவதிலும், குக்கிராமங்களுக்கெல்லாம் மின் விசை வழங்குவதிலும்—ஏன்—இரந்துண்ணும் பிச்சைக்காரர்களுக்கு இனியதொரு வாழ்வளிக்க—மறு வாழ்வளிக்கத் திட்டம் தீட்டுவதிலும், இந்தியாவுக்கே வழிகாட்டியாகத் திகழும் தமிழகம், சிமெண்ட் கலவையில் குறைந்த விலையில் விசைப் படகுகளைக் கட்டுவதிலும் இந்தியாவிற்கே வழி காட்டியாகத் திகழ முடிவெடுக்கப்பட்டது. விஞ்ஞானம் வளராத காலத்திலேயே கடல் கடந்த நாடுகளை எல்லாம் தோணியிலேயே சென்று தோற்கடித்த பெருமைமிக்க தமிழ் மகனுக்கு சிமெண்ட் கலவையில் படகு கட்டும் பணி முடியாத ஒன்று அல்ல! ஆகவே, சிமெண்ட் கலவையினால் படகு கட்டுவதென தீர்மானிக்கப்பட்டது.

சிமெண்ட் கலவையினால் படகு கட்டி முடிக்கப்படுமேயானால் இன்றைய தினம் மரத்தினால் படகின் உடற் பகுதி (Hull) கட்டுவதற்கு ஆகின்ற தயாரிப்புச் செலவில் குறைந்தது 50 சதவீதம் குறைக்க முடியும். தயாரிப்புச் செலவில் 50 சதவீதம் குறைந்தால் தயாரிக்கப்படும் படகுகளின் எண்ணிக்கை அதிகமாகும். அத்துடன் படகுகளைப் பெறும் மீனவருக்குக் கடன் சுமை குறையும். ஆகவே சிமெண்ட் கலவையினால் படகு கட்டத் தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## முன்னோடியை உருவாக்க முயற்சி

சிமெண்டினால் படகு கட்டும் முறைக்கு இந்தியாவில் 'முன்னோடி' இல்லாத காரணத்தால் இம்முயற்சியில் முன்னெச்சரிக்கையாகச் சில ஆராய்ச்சிகள் அவசியம் எனக் கருதப்பட்டன. எனவே சிமெண்ட் கலவையினால் செய்யப்பட்ட பலகை வடிவான பல துண்டங்களைச் சென்னை கிண்டியிலுள்ள கிராம, நெடுஞ்சாலைத் துறையின் ஆராய்ச்சிக் கூடத்திற்கு அனுப்பி அவைகளின் தன்மைகள் அறியப்பட்டன. இந்த ஆராய்ச்சியின் துணையைக் கொண்டு சிமெண்ட் கலவையினாலான 'படகின்' உடற் பகுதியை வலிவுடனும், விரிசல் காணாத தன்மையிலும் தயாரிக்க முடிந்தது. எனவே விசைப்படகுகள் கட்ட விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

முதன் முதலில் சிறிய அளவில் 5 அடி நீளத்தில் மாதிரிப் படகு ஒன்று கட்டப்பட்டது. இரும்புக் கம்பிகளால் இணைக்கப்பட்ட இம்மாதிரிப் படகை பார்க்கும் போது, வழக்கிலுள்ள 32 அடி நீளமுள்ள விசைப் படகுகளினிடையே இம்மாதிரிப் படகு வைக்கப்பட்டிருக்கும் நிலையைப் பார்க்கும் போது—மழைக் காலத்தில் இளஞ்சிறார்கள் விடும் காகிதக் கப்பல் நம் கண்முன்னே தோன்றுகிறது. சாலை ஓரத்தில் வழிந்தோடும் நீரில் சாய்ந்து சாய்ந்து நகரும் அந்தக் காகிதக் கப்பல் எத்தனை எழிலாகக் காட்சியளிக்கின்றதோ அத்தனை எழிலை மாதிரிப் படகும் காட்டுகின்றது. மனத்தைக் கவரும் மாதிரிப் படகை வைத்துக் கொண்டு மனித உயிர்களை ஏற்றிச் செல்லும் விசைப் படகு முதன் முதலில் 15 அடி நீளத்தில் கட்டி முடிக்கப்பட்டது. இக் கட்டுமானப் பணியில் ஈடுபட்டோர், சென்னை இராயபுரம் படகுகட்டும் நிலையப் 'பணி மேலாளரும்', அவருக்குத் துணையாகத் தொழில் நுட்பம் அறிந்த உதவியாளர் ஒருவரும், தொழில் நுட்பம் அறியாத (unskilled) பத்துத் தொழிலாளர்களும் ஆவர். இச் சிறிய குழுவே இப் புதிய படகைச் சிறப்பாக அமைத்தது. இப் படகின் விளிம்புப் பாகமும், உடற் பகுதியும் சிமெண்ட் கலவையில் கட்டப்படுவதற்கு முன்னே, இரும்புக் குழாய்களினால் படகின் வரி வடிவம் கட்டப்படுகின்றது. இரும்புக் கம்பிகளையும், குழாய்களையும் சாரமாகக் கட்டி அவற்றின் மீது கான்க்ரீட் வைத்துக் கட்டடங்கள் எப்படிக் கட்டப்படுகின்றனவோ அதே முறையில் இரும்புக் கம்பிகளினால் படகின் உடற் பகுதியை வடித்துக் கொண்டு, அதன் மீது சிமெண்ட் கலவை, கையினாலேயே பூசப்படுகிறது. இப்படி முடிக்கப்பட்ட படகிற்கு அழகிய வர்ணம் பூசியவுடன் சிமெண்ட் படகு முடிவடைந்து விடுகிறது. அதன் பிறகு வழக்கமாக மற்றப் படகுகளில் வைக்கப்படும் இயந்திரத்தை இப்படகிலும் பொருத்திவிட்டால் கடல் அலைகளைக் கிழித்துக்கொண்டு மிக வேகத்தில் செல்லும் இப்படகு!

''15 அடி நீளமுள்ள இப்படகு 5-3-1971-அன்று வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது. ஐந்து அல்லது ஆறு பேர் செல்லக் கூடிய இப்படகு கடலில் சுமார் இரண்டுமணிநேரம் வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது. இப்படகின் பயணம் வெகு அமைதியாக இருந்ததுடன் பெருத்த நம்பிக்கையையும் அளித்தது. மரத்தினால் செய்யப்பட்ட படகில் செல்லும் பயணத்திலிருந்து இப் படகில் செல்லும் பயணம் எந்த விதத்திலும், அபாயமுள்ளதாக இருக்கவில்லை. எனவே 38 அடி நீளமுள்ள பெரிய படகினைக் கட்டி முடிக்கும் பணியில் களிப்புடன் இறங்கியுள்ளோம்''— என்று இராயபுரம் படகு கட்டும் நிலையத்தின் பணி மேலாளர் திரு. கனகசபாபதி கூறிய போது வெற்றியின் மகிழ்ச்சி அவர் முகத்தில் மலர்ந்தது.

## இந்தியாவிற்கு வழிகாட்டி இந்த சிமெண்ட் படகு!

விசைப் படகுகளைக் கட்டுவதில் இந்தியாவிற்கே வழி காட்டியாகத் திகழும் தமிழகம் சிமெண்ட் கலவையினால் படகுகளைக் கட்டுவதிலும் 1971-ஆம் ஆண்டிலே இந்தியாவிற்கு வழிகாட்டியாக விளங்குகிறது. கண்ணால் பார்த்தவற்றை—படித்தவற்றைத் தம் கலைத்திறனாலும் தொழில் திறனாலும் கட்டி முடிக்கும் கலை வல்லுநர்களும், தொழிற் சிற்பிகளும் வாழும் தமிழகத்தின் சிறப்புமிக்க தொழிலாளர்கள்தான் இந்த சிமெண்ட் படகையும் கட்டி முடித்தார்கள். எந்த மேல்நாட்டு நிபுணரும் இதற்கென வரவழைக்கப்படவில்லை. எந்த மேல் நாட்டிலிருந்தும் எந்தக் கருவிகளும் இதற்காக வரவழைக்கப்படவில்லை. இங்கு இருப்பதை வைத்துக்கொண்டு மேல் நாடுகள் சிலவற்றில் மட்டுமே செய்யப்படும் இந்த சிமெண்ட் படகை மீன் துறையினர் மிகக் குறுகிய காலத்தில், பத்தே மாதங்களில் கட்டி முடித்துள்ளனர் என்பதை எண்ணும்போது தமிழகத்திற்கு இணை தமிழகம்தான் என்று துணிந்து சொல்லலாம். 15 அடி நீளமுள்ள இச்சிமெண்ட் படகின் உடற் பகுதியைக் கட்டி முடிக்க ரூ. 2,831.76 மட்டுமே செலவாகி உள்ளது. சாதாரணமாக 30 அடி நீளமுள்ள படகின் உடற் பகுதியை மரத்தினாலும்—பித்தளைத் தகட்டினாலும் செய்வதற்குச் செலவாகும் தொகை ரூ. 25,500. 15 அடி நீளமுள்ள சிமெண்ட் படகின் உடற் பகுதியைக் கட்டி முடிக்க ரூ. 2,900 மட்டுமே செலவாயிற்று எனில் 30 அடி நீளமுள்ள அல்லது 36 அடி நீளமுள்ள சிமெண்ட் படகின் உடற்பகுதியைக் கட்டி முடிக்க ரூ.10,000-க்கு அதிகமாக ஆகாது என்று நிச்சயமாக நம்பலாம்.

படகின் உடற் பகுதியின் உற்பத்திச் செலவில் 50 சதவீதம் குறைக்க முடியுமென்ற சாதனையைப் புரிந்துள்ள தமிழக அரசு இச் சாதனையை மக்களுக்கும் பயன்பட வேண்டுமென்பதற்காக இப்போது 38 அடி நீளமுள்ள சிமெண்ட் படகினைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது. இதன் உடற் பகுதிக்கான அடிக்கட்டை (Keel) இரும்புக் குழாய்களால் தயாரிக்கப்பட்டு சிமெண்ட் கலவையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இதன் வெள்ளோட்டம் விரைவில் நடைபெறவிருக்கிறது. வெள்ளோட்டம் வெற்றியடையும் நாள் தமிழகத்தின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் நாள்!

## படகைத் தயாரிக்கப் பயன்படும் பொருள்கள்.

இந்த சிமெண்ட் படகைத்தயாரிக்கத் தேவையானதெல்லாம் சிமெண்ட், மணல், இரும்புக் கம்பிகள், படகின் அடிக்கட்டைக்கு ஒரு நீளமான இரும்புச் சட்டம்! மரத்தினால் படகு கட்டும் தொழில் நுட்பம் தெரிந்த ஒருவரும் அவருக்குத் துணையாக தொழில் நுட்பம் அறியாத 6 தொழிலாளர்கள் மட்டுமே இருந்தால் சிமெண்ட் படகைக் கட்டி விடலாம். ஆனால் மரத்தினால் படகுகட்டுவதென்றால் அதற்குப் பணி புரியும் அத்தனை பேருமே தொழில் நுட்பம் அறிந்தவர்களாக (Skilled) இருக்க வேண்டும். இந்த வகையிலும் சிமெண்ட் படகு கட்டுவதில் நன்மையுள்ளது. மேலும் சிமெண்ட் படகின் அடிக்கட்டையைத் (keel) தொழில் நுட்பம் அறிந்த ஒருவர் தயாரித்துக் கொடுத்துவிட்டால் மீனவக் குடும்பத்தினரே இச் சிமெண்ட் கலவையைப் பூசி படகை முடிக்கின்ற பணியை மேற்கொள்ளலாம். எனவே சிமெண்ட் படகு கட்டும் முறை மக்களிடையே பரவினால் படகின் அடிக்கட்டையை வைத்துக் கொண்டு எங்கு வேண்டுமானாலும் படகைக் கட்டி

இரும்புக் கம்பிகளால் கட்டப்பட்ட படகின் வரிவடிவம்.





1-7—5அ

முடிக்கலாம். இதனல் ஆங்காங்கே அதிகமான படகுகளைக் கட்டி முடிக்க வாய்ப்புள்ளது.

### சிமெண்ட் படகின் சிறப்புகள்.

சிமெண்ட் கலவையினல் படகு கட்டுவதால் தயாரிப்புச் செலவு குறைவதுடன் மேலும் பல நன்மைகள் உள்ளன. கட்டி முடிக்கப்பட்ட படகிற்குப் பராமரிப்புக்கெனச் செலவழிக்கத் தேவையில்லை. தேவையானல் வண்ணப் பூச்சு மட்டுமே செய்யலாம். வேறு எந்தப்பராமரிப்பும்தேவையில்லை. மராமத்தும்தேவையில்லை. இச் சிமெண்ட் படகு தீப்பிடிக்காதது. எங்கும் ஓட்டை விழாது. மரத்தைத்துளையிடுகின்ற கடலில் வாழும் பூச்சிகளினல் படகின் உடற் பகுதி பழுதாகாது. மரத்தினல் செய்யப்பட்ட படகானல் இப்பூச்சி மரத்தின் உள்ளே சென்று துளையிட்டுக் கொண்டே செல்லும். ஆனல் வெளித்தோற்றத்திற்கு மரப்படகு நல்ல முறையில் இருக்கும். படகின் மரத் துண்டுகளில் துளைகள் பெருகி, பிறகு படகே மூழ்கும் நிலை ஏற்படும். இத்தகைய அபாயம் சிமெண்ட் படகில் ஏற்பட வாய்ப்பே இல்லை. மரப்படகில் இணைப்புகள் அதிகம், ஆகவே இணைப்புகளைச் செப்புத் தகடு கொண்டு மறைக்க வேண்டும். இல்லையெனில் இணைப்பு வழியே நீர் படகின் உள்ளே செல்லும். செப்புத் தகடுகளைப் பயன்படுத்துவதால் செப்புத் தகடுக்கான அந்நியச் செலாவணி தேவைப்படுகிறது. சிமெண்ட் படகில் இணைப்புகளே இல்லை. ஆகவே நீர் உள்ளே செல்லும் வாய்ப்பில்லை. விபத்துக்களினல் ஏற்படும் பாதகம் மிகச் சொற்பம். விபத்தினல் எந்த இடத்தில் சேதம் ஏற்பட்டதோ அந்த இடத்தில் உள்ள கம்பியை நிமிர்த்திவிட்டுசற்று சிமெண்டை பூசி விட்டால் சேதம் சரியாகி விடும். அத்துடன் மரத்தினல் செய்யப்பட்ட படகின் மரச்சட்டங்களில் மண்ணும், மணலும் சேர்ந்து விட வாய்ப்புண்டு. சிமெண்ட் படகில் மண் சேராது. மரப்படகின் உடற் பகுதி 1.5" பருமன் உள்ளது. சிமெண்ட் படகின்உடற்பகுதி 0·75"பருமன் உள்ளது. மரப் படகு தண்ணீர் ஊற ஊற பலவீனமாகிக் கொண்டே இருக்கும். சிமெண்ட் படகு தண்ணீரில் ஊற ஊற வலிவுள்ளதாக மாறிக்கொண்டேஇருக்கும்.

இத்தகைய சிறப்பு மிக்க சிமெண்ட் படகு மீனவர்களுக்குப் பெரிதும் பயன்படும். பயன் மிக்க இச்சிமெண்ட்படகு மீனவர் வாழ்வில் பெரும் மாறுதலை உண்டாக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை !



முற்றுப்பெற்ற சிமெண்ட் படகு !

சிமெண்ட் படகு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.







# தமிழ்நாட்டில் தக்கைக்கல் தொழிற்சாலை

தக்கைக்கல் தொழிற்சாலை தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. "தக்கைக்கல்லா? கல்லில் அப்படியொரு கல் உண்டா ?" என்று கேட்கிறீர்களா ?

கனமில்லாக் கலவைக்கல்லின் பெயர்தான் 'தக்கைக்கல்'!

இந்தத் தக்கைக்கல் எங்கே கிடைக்கிறது, இதனல் என்ன பயன், என்ற ஐயப்பாடுகளும் எழுவதும் நியமானதே!

ஏனெனில் நம் நாட்டுக்குத் தக்கைக்கல் மிகப் புதியது.

தக்கைக்கல் - செங்கல்லுக்கும் கற்காரைக்கும் சிறந்த மாற்றாக அமைந்துள்ள கல்லாகும்.

வழக்கம்போல் இந்தியாவுக்கும் வழிகாட்டும் பெருமையை உரிமையாக்கிக் கொள்ளும் தமிழ்நாடு முதன் முதலாகத் தக்கைக்கல்லைத் தயாரிக்கும் பெருமையை உரிமையாக்கிக் கொண்டுள்ளது.

போலந்து, ரஷ்யா மற்றும் மேலை நாடுகளில் வான் முட்டக் கட்டப்படும் பல அடுக்கு மாடிக் கட்டடங்கள் இந்தத் தக்கைக்கல்லால்தான் கட்டப்பட்டு வருகின்றன.

செல்லுலார் கான்க்ரீட் என்று வழங்கப்படும் கலவைக்கல்லே தக்கைக்கல் (Celcrete) என்று கூறப்படுகிறது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை எண்ணூரில் உள்ள அனல் மின் நிலையம் அருகில் தக்கைக்கல் தொழிற்சாலையைக் கட்டி வருகிறது.

நவம்பர் திங்களில் உற்பத்தியைத் தொடங்கவிருக்கும் தக்கைக்கல் தொழிற்சாலை, போலந்து நாட்டுத் தொழில் நுட்ப உதவியுடன் கட்டப்பட்டு வருவதாகும்.

ரூபாய் 365 லட்சம் செலவில் கட்டப்பட்டு வரும் இந்தத் தொழிற்சாலை இந்தியாவிலேயே முதன் முதலாகக் கட்டப்பட்டு வரும் தக்கைக்கல் தொழிற்சாலையாகும். ஆண்டுதோறும் இத் தொழிற்சாலையில் ரூ. 125 இலட்சம் மதிப்புக்குத் தக்கைக்கல் உற்பத்தியாகும்.

இத் தொழிற்சாலையில் நாள் ஒன்றுக்குப் பதின்மூன்ருயிரம் கற்கள் உற்பத்தியாகும். எழு நூறு தக்கைக்கல் பலகைகளும் உற்பத்தியாகும்.

தக்கைக்கல் ஒன்றின் பரிமாணம் பதினைந்து சாதாரணச் செங்கற்களின் இடத்தை நிரப்பும்.

போலந்து, ரஷ்யா போன்ற நாடுகளில் மிக அதிகமாகத் தக்கைக்கல் தொழிற்சாலைகள் உள்ளன. அமெரிக்க நாட்டிலும் தக்கைக்கல் தொழிற்சாலைகள் உள்ளன. அந்த நாடுகளில் பல அடுக்குகள் உள்ள மாடிக் கட்டடங்கள் மிக விரைவாகக் கட்டி முடிப்பதற்குக் காரணம் தக்கைக்கல்தான்.

தக்கைக்கல் தயாரிப்பைப் பற்றி முதலில் தெரிந்து கொள்ளுவோம்.

மணலையும், சுண்ணாம்பையும் கலந்து பிரும்மாண்டமான இயந்திரங்களால் மிக மிக சன்னத்தூளாய் நீர்விட்டு அரைக்கப்படும். அரைத்த அக்கலவையில் அலுமினியப் பொடியும் குறைந்த அளவில் கலக்கப்படும்.












இந்தக் கலவை இயந்திரங்களின் மூலம் ஓடி நுரைத்துப் பொங்கி, சாந்து இறுகிய பின்னர் அளவுக்கு ஏற்ப இயந்திரத்தால் அறுத்து, நீராவியில் வேகவைத்து எடுக்கப்படும்.

கட்டடக் கூரைகளுக்கு ஏற்ற வகையிலும், தளம் அமைக்கவும், தக்கைக்கல் பலகைகளை உருவாக்கிக் கொள்ளலாம்.

தாய்ச்சுவர், தடுப்புச் சுவர் முதலியவைகளுக்காகத் தக்கைக் கல் பாளங்களை உருவாக்கிக் கொள்ளலாம்.

செங்கல் எடையில் மூன்றில் ஒரு பங்குதான் தக்கைக்கல் இருக்கும். கற்காரையின் எடையில் நான்கில் ஒரு பங்குதான் தக்கைக்கல் பலகை இருக்கும்.

தக்கைக்கல் இப்படி எடை குறைந்திருந்தாலும் மிக வலிமையானது. தக்கைக்கல்லால் கட்டப்படும் கட்டடத்தை வெளிப்புற தட்ப வெப்பம் தாக்குவதில்லை.

கனமில்லாக் கலவைக் கல்லாகத் தக்கைக்கல் இருப்பதால் உயரமான கட்டடங்களைக் கட்ட மிக ஆழமான அளவுக்கு அடிப்படை அமைக்க வேண்டியதில்லை. தாய்ச்சுவரும் மிக அகலமானதாக அமைய வேண்டியதில்லை.

தக்கைக்கல்லின் மூலம் கட்டடம் கட்டத் தொடங்கினால் கொத்தனாரின் வேலைத்திறன் இரட்டிப்பாகும். சிற்றாளின் வேலைத்திறன் மும்மடங்காகும். கட்டட அடிப்படையின் அகலம் பாதியாகக் குறையும்.

தக்கைக்கல் தொழிற்சாலையை அமைப்பதற்காகத் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் ஆறு பொறியியல் வல்லுநர்களை, போலந்து நாட்டுக்கு அனுப்பியது;

திருவாளர்கள் பி. டி. தெஜூராமன், ஜெகதீசன், பி. எஸ். நடராசன், எஸ். நடராசன், எஸ். கணேசன் முதலியோர் போலந்து நாட்டுத் தக்கைக்கல் தொழிற்சாலைகளில் பயிற்சி பெற்றபின்னர் நம் நாட்டுக்குத் திரும்பினர். நம் நாட்டுக்கு ஏற்ற வகையில் இங்குத் தக்கைக்கல் தொழிற்சாலையை அமைத்திட இப்பொறியியல் வல்லுநர்கள் அரும்பாடு பட்டுள்ளனர்.

முதலில் இரண்டு ஆண்டுகளுக்கு மணலைப் பயன்படுத்த இருக்கும் தக்கைக்கல் தொழிற்சாலை எண்ணூர் அனல்மின் நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் நிலக்கரிச் சாம்பலைக் கொண்டு தக்கைக்கல்லைத் தயாரிக்கும்.

கட்டடப் பொருள்களில் ஒரு புதுமையாக அமைந்துள்ள தக்கைக்கல்—

நீரில் மிதக்கும்,<br>
நெருப்பை எதிர்க்கும்,<br>
கானல் தணிக்கும்,<br>
கடுங்குளிர் போக்கும்,<br>
பாரமும் தாங்கும்,<br>
பார்வைக்கும் அழகாய் இருக்கும்!

இந்தத் தக்கைக்கல்லால் சென்னையில் உருவாகவிருக்கும் 65 மாடிக்கட்டடம் கட்டப்படலாம். தக்கைக்கல்லால் கட்டுவது விரைவாக வேலை நடைபெறுவதுடன் குறைவான செலவிலும் அமையும்.

வருங்காலத் தமிழகத்தில் எழுப்பப்படும் உயரமான கட்டடங்கள் அனைத்தும் தக்கைக் கல் பாளங்களாலும் பலகைகளாலும் கட்டப்பட்டால் வியப்பேதுமில்லை.

இப்பொழுது தக்கைக்கல் உற்பத்தியானதும் வீட்டு வசதி வாரியத்தின் கட்டடங்கள் அனைத்தும் தக்கைக்கல்லைப் பயன்படுத்தியே கட்டப்படும்.

நல்ல கட்டடங்கள், அமைத்து நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையப்போகும் தக்கைக்கல் பற்றிய விவரங்கள் இன்னும் தமிழ்நாட்டு மக்களுக்குப் பரவலாக—விவரமாகத் தெரியவில்லை. இக்குறையைப் போக்கும் வகையில் தக்கைக்கல் பற்றிய திரைப்படம் ஒன்றையும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் விரைவில் தயாரித்து வெளியிடத் திட்டமிட்டுள்ளது.



## பல்கலைக் கழகங்கள்

ஜூன் 27-ல் தமிழகத்தில் கோவையில் விவசாயப் பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக் கழகங்கள் ஆங்கிலத்தில் (University) என்று அழைக்கப்படுகிறது.

ஐரோப்பாவில் முதலில் பல்கலைக் கழகம் இத்தாலியில் உள்ள பொலோஞ (Bologna) என்னும் ஊரில் 12-ஆம் நூற்றாண்டில் தோன்றியது. இது ஐரோப்பாவின் தென் பகுதியில் தோன்றிய பல்கலைக் கழகங்களுக்கு முன் மாதிரியாக இருந்து வந்தது.

அதேபோல், ஐரோப்பாவின் வட பகுதிக்கு முன் மாதிரியாக அமைந்தது, பிரான்ஸ் நாட்டுத் தலைநகராகிய பாரிசில் தோன்றிய பல்கலைக் கழகமாகும்.

இங்கிலாந்தில் சிறப்பு வாய்ந்த பல்கலைக் கழகங்கள், ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகமும், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகமுமாகும்.

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் தோன்றியது 1167-ல். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது 1209-ல்.

ஜெர்மனியில் பல்கலைக் கழகம் முதன் முதலில் பிரேகு (Prague) என்னுமிடத்தில் 1348-ல் எழுந்தது.

ரஷ்யாவில் முதல் பல்கலைக் கழகம் தோன்றியது 1730-ல் பீட்டர்ஸ்பர்க் நகரிலாகும்.

இந்தியாவில் தட்சசீலம் என்ற ஊரிலிருந்த குருகுலம் 7-ஆம் நூற்றாண்டில் பல்கலைக் கழகமாக மாறியது. இது 10 நூற்றாண்டுக்காலம் சிறப்புடன் விளங்கியது. அதன் பிறகு உஜ்ஜயினி, விக்கிரமசிலா, காசி, காஞ்சி, திருச்சாணம் போன்ற இடங்களில் பல்கலைக் கழகங்கள் தோன்றி விளங்கின.

பௌத்த மதம் செழித்தோங்கிய காலத்தில் அவர்களுடைய மடங்களாகிய விகாரைகளும் பல்கலைக் கழகங்களாகச் செழித்து ஓங்கின.

நாளந்தாவிலிருந்த பல்கலைக் கழகம் இவற்றுள் மிகச் சிறந்தது.

தென்னகத்தில் 11-ஆம் நூற்றாண்டில் கடிகைகள் என்னும் வடமொழிப் பல்கலைக் கழகங்கள், காஞ்சி, நாகை, எண்ணாயிரம், திருபுவனி, திருமுக்கூடல் முதலிய இடங்களில் நன்கு நடைபெற்று வந்தன.

ஆங்கிலேயர் ஆட்சியில் முதன் முதலில் நிறுவப்பட்ட பல்கலைக் கழகங்கள் கல்கத்தா, பம்பாய், சென்னைப் பல்கலைக் கழகங்களாகும். இவை தோன்றியது 1857-ல். பஞ்சாப் பல்கலைக் கழகம் 1882-லும், அலகாபாத் பல்கலைக் கழகம் 1887-லும் எழுந்தன. 1916-ல் காசி இந்துப் பல்கலைக் கழகம் காணப்பட்டது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1929-ல் தோன்றியது. அதன் பிறகு பல பல்கலைக் கழகங்கள் நாட்டில் தோன்றின. சில ஆண்டுகளுக்கு முன்னால் மதுரைப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது.

பல்கலைக் கழக வரிசையில், தொழில் நுணுக்க வரிசையில், கோவை விவசாயப் பல்கலைக் கழகம் தமிழகத்தின் அறிவாலயங்களில் ஒன்றாகத் திகழ்ந்து, தன்னுடைய பகுதியையும் சேர்த்து, தொண்டாற்றத் துவக்கப்பட்டுள்ளது ஜூன் 27-ல்.



திருமணம் வெகுமதிகளுக்கு
தேவையான காஞ்சிபுரம்
பனாரஸ் பட்டுப்புடவை
ரகங்களுக்கு...
தனிப்பெரும்
கைராசி நிறுவனம்!
தந்தி: "ரஞ்சனாஸ்"
தபால் பெட்டி: 348
போன்: 5454, 6385, 5063.
ரஞ்சனா ஸ்டோர்ஸ்
[டீலக்ஸ் ஏர்-கண்டிஷன் ஷோ ரூம்]
பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்
& விற்பனையாளர்கள்.
மலைவாசல், திருச்சி-2.
CHANDER



சிறுசேமிப்பு
இன்றைய சேமிப்பு
நாளைய பாதுகாப்பு!
காற்றுள்ளபோதே
தூற்ற வேண்டும்
காசுள்ளபோதே
சேர்க்க வேண்டுமல்லவா?
நாட்டுக்கும் வீட்டுக்கும்
நலந்தரும் திட்டம்
சிறுசேமிப்பு
இன்றே உங்கள் அருகிலுள்ள அஞ்சலகத்துடன் தொடர்பு கொள்க!
இயக்குநர்
சிறுசேமிப்பு நிறுவனம்
சென்னை-9

# சுவை தரும் மா வகைகள்

‘ரூ அல்பான்சோ’ என்ற பிரெஞ்சுக்காரரின் முயற்சியால் உருவாக்கப்பட்டதாகும். இது இந்தியாவின் மிகச் சிறந்த ரகமாகும். இந்த ரகத்தைச் சென்னையில் ‘காதர்’ என்றும், சேலம், திருச்சி மாவட்டங்களில் ‘குண்டு’ என்றும், நெல்லை மாவட்டத்தில் ‘பட்டணம் ஜாதி’ என்றும் கூறுகிறார்கள். உயர்ந்த தரம், நீண்ட நாட்களுக்குக் கெடாமல் இருக்கும் தன்மை இதன் சிறப்புக் குணங்களாகும். இந்த ரகப் பழத்தின் தோல் மெலிந்து இருக்கும். அல்பான்சோ மாம்பழம் மிகவும் இனிப்பாக இருக்கும். பதனப்படுத்துவதற்கும், பழச்சாறு தயாரிப்பதற்கும் இந்த ரகம் மிகவும் ஏற்றது.

பெங்களூரா.—இது தமிழ் நாட்டின் முக்கிய வாணிக ரகமாகும். அதிக அளவு காய்கள் காய்த்தல், தவறாமல் ஆண்டுதோறும் தொடர்ந்து காய்க்கும் தன்மை, பெங்களூரா ரகத்தின் சிறப்புத் தன்மைகளாகும். பெயரைக் கொண்டு பார்த்தால் இந்த ரகம் பெங்களூருடன் தொடர்புடையதாக இருக்கும் என்று தோன்றினாலும், பெங்களூரில் இந்த ரகத்தை ‘தோட்டாபூரி’ என்றே குறிப்பிடுகிறார்கள்.

இந்த ரகத்திற்கு ‘கல்லாமை’, ‘கலெக்டர்’, சுந்தர் ஷா’, ‘பர்மோடிலா’, ‘கிளி மூக்கு’ என்ற வேறு பெயர்களும் வழக்கத்தில் உள்ளன. பெங்களூரா பழத்தின் தோல் தடிப்பாக இருக்கும். இந்த ரகப் பழம் நடுத்தரமான இனிப்புச் சுவையுடையது. நீண்ட நாட்களுக்குக் கெடாமல் இருப்பதுடன், நீண்ட தூரத்தில் உள்ள விற்பனைக் கூடங்களுக்கு அனுப்ப இந்த ரகம் மிகவும் ஏற்றது.

பங்கனபள்ளி.—இது ஆந்திர மாநிலத்தின் முக்கிய ரகம். தமிழ் நாட்டின் தென் மாவட்டங்களில் இந்த ரகத்தை ‘சப்பட்டை’ என்று கூறுகிறார்கள். இந்த ரகம் அதிக மகசூல் அளிக்கும் ஆற்றல், தொடர்ந்து பலன் கொடுக்கும் தன்மை உடையது. இப்பழத்தில் தோல் மென்மையாக இருக்கும்; நார் இருக்காது. பங்கனபள்ளி பழம் இனிப்பாக இருக்கும். நீண்ட நாட்களுக்குக் கெடாமல் இருப்பதுடன், நீண்ட தூரம் உள்ள இடங்களுக்கு அனுப்பவும் ஏற்றது.

நீலம்.—தமிழ் நாட்டின் முக்கிய ரகங்களில் இதுவும் ஒன்று. இந்த ரகம் தொடர்ந்து அதிகமாகக் காய்க்கும் ஆற்றல் உடையது. ஆனால் இந்த ரகம் பெரும்பாலும் பின்பருவத்திலேயே (ஜூன்-ஆகஸ்ட்) அறுவடைக்கு வரும். இந்த ரகம் மாம்பழப் பருவமில்லாக் காலத்திலும் காய்க்கும் பண்புடையது. அதாவது வேறு எங்கும் மாம்பழம் கிடைக்காத காலமான செப்டம்பர்-அக்டோபர் மாதங்களிலும் தமிழ் நாட்டில் நீலம் மாம்பழங்கள் கிடைக்கிறது. இதற்கு ‘கார் மாங்காய்’ என்றும் சொல்லப்படுகிறது. எனவே இந்த ரகம் ‘ஆப்சீசன் வெரைடி’ (off Season variety) என்றும் அழைக்கப்படுகிறது. இந்த ரகத்தின் பழம் நீண்ட நாட்களுக்குக் கெடாமல் இருப்பதால், நெடுந்தொலைவில் உள்ள விற்பனைக் கூடங்களுக்கு ஏற்றுமதி செய்ய ஏற்றது. இப்பழத்தின் தோல் நடுத்தரத் தடிப்பு உடையது. நீலம் மாம்பழம் இனிப்பான சுவையுடையது. பழச்சதையில் நார் இருக்காது. இப்பழத்தை ‘காசாலட்டு’ என்றும் கூறுகிறார்கள்.

ருமானி.—செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் புகழ் பெற்ற ரகம் இது. இப்பழம் இனிப்பாகவும், மெலிந்த தோலுடனும், நார் இல்லாமலும் இருக்கும். இந்த ரகம் அக்டோபர்-நவம்பரிலும் அறுவடை கொடுக்கும். ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்ல ஏற்ற ரகம் இது.

மல்கோவா.—மிகச் சிறந்த வணிக ரகம். மிகவும் இனிப்பான சுவையுடையது. பழச்சதை கெட்டியாகவும், நார் இல்லாமலும் இருக்கும். ஆனால் இந்த ரகம் அதிகம் காய்க்காது. மல்கோவா மாம்பழம் தரம் மிகுந்தது. நீண்ட நாள் கெடாமல் இருக்கும் தன்மையுடையது.

பைரி.—அல்பான்சோவிற்கு அடுத்தபடியாகச் சிறப்புடைய ரகம் இது. இதைத் தமிழ் நாட்டில் ‘நடுச்சாலை’’, ‘பீட்டர்’ என்றும் கூறுகிறார்கள். மிகுந்த இனிப்புடையது. சில நாட்களுக்கே கெடாமல் இருக்கும். தொடர்ந்து ஒரே மாதிரியாகக் காய்க்காது.

ஹிமாயூதின்.—மசூலிப்பட்டண நவாபினால் உருவாக்கப்பட்ட ரகம் இது. மிகவும் சிறந்த ரகம். மிகுந்த இனிப்புடையது. இந்த ரகத்தை ‘ஹமாம்’ என்றும், ‘இமாம்பசந்த்’ என்றும் அழைக்கிறார்கள். நடுத்தரமாகக் காய்க்கும் தன்மையுடையது.

பாதிரி.—இந்த ரகம் தஞ்சை மாவட்டத்தில்—அதுவும் குறிப்பாக மாயவரம் பகுதியில்—புகழ்பெற்ற ரகம். தோல் நடுத்தர தடிப்பாக இருப்பதுடன் உண்மையான தோலைப் போலவே இருக்கும். மிகவும் இனிப்பாக இருக்கும். ஆனால் நடுத்தரமாகவே காய்க்கும்.

பஞ்சவர்ணம்.— இராசபாளையம் பகுதியில் சிறப்பாகக் காணப்படுகிறது. இனிப்பான சுவையுடையது. நடுத்தரமாகவே காய்க்கும்.

ஜஹாங்கிர்.—மிகுந்த இனிப்பு உடையது. பழம் பெரியதாக இருக்கும். தோல் தடிப்பாக இருக்கும். நார் இருக்காது. இவ்வகை மரம் மிகவும் குறைவாகவே காய்க்கும். இவ்வகைப் பழங்களை அதிக நாட்களுக்கு வைத்திருக்க முடியாது. புகழ்பெற்ற ரகம் இது.

சிறுநிலக்கிழார்களும் சீரும் சிறப்பும் பெற்று வாழவேண்டும் என்பதற்காக, தமிழ் நாடு அரசு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

தற்பொழுது தமிழ்நாடு அரசு, சிறுநிலக்கிழார்களுக்கு உதவி செய்யப் புதியதோர் திட்டம் தயாரித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் உழவர்களுக்கு இரசாயன உரம், பொறுக்கு விதைகள், வேளாண்மைக்கருவிகள் வழங்கப்படும். கிணறு வெட்டவும் பம்புசெட் அமைக்கவும் கடன் கொடுக்கப்படும்.

இதற்காக ரூபாய் 5 கோடி 60 இலட்சத்தைத் தமிழ் நாடு அரசு ஒதுக்கியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 3 முதல் 5 ஏக்கர் வரை புன்செய் நிலம், 2 முதல் 3 ஏக்கர் வரை நன்செய் நிலம் உள்ள உழவர்களுக்கு மட்டுமே கடன் கொடுக்கப்படும். கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும் கிணறு வெட்டுவதற்குக் கடன் கொடுக்கப்படும்.

இப்புதிய திட்டம் தென் ஆர்க்காடு, மதுரை, திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களில்மட்டும் தற்பொழுது செயல்படுத்தப்படும்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கீழ்க்கண்ட ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் இந்த ஆண்டில் நிறைவேற்றப்படும்.

1. பண்ணுருட்டி.
2. நல்லூர்.
3. முகையூர்.
4. திருவெண்ணெய்நல்லூர்.
5. திருக்கோவிலூர்.
6. கோலியனூர்.

மேற்கூறப்பட்ட ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் புதிதாக 3,500 கிணறுகள் வெட்டப்படும். அத்துடன் 3,500 பம்புசெட்டுகள் அமைக்க நிலவள வங்கிகள் மூலம் கடன் கொடுக்கப்படும். அக்கடனை 10 தவணைகளில் திருப்பிக் கட்ட வேண்டும்.

மதுரை மாவட்டத்தில் பின் கண்ட ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் இந்த ஆண்டில் செயல்படுத்தப்படும்.

1. வட மதுரை.
2. வேடசந்தூர்.
3. பாளையம்.
4. சாணார்பட்டி.
5. செல்லம்பட்டி.
6. கல்லுப்பட்டி.
7. கள்ளிக்குடி.
8. திருமங்கலம்.
9. நத்தம்.

இப்பகுதிகளில் 2,000 கிணறுகள் புதிதாக வெட்டவும், 2,500 பம்பு செட்டுகள் அமைக்கவும் நிலவள வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படும். இப்பகுதிகளில் முந்திரி பயிரிடுவோர்களுக்கு மட்டும் தனிச் சலுகை தரப்படும்.

நெல்லை மாவட்டத்தில் கீழ்க்கண்ட ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் இந்த ஆண்டில் நிறைவேற்றப்படும்.

1. ஆலங்குளம்.
2. விளாத்திகுளம்.
3. புதூர்.
4. புதுக்கோட்டை.
5. வல்லநாடு.
6. கயத்தாறு.
7. கோயில்பட்டி.
8. ஓட்டப்பிடாரம்.
9. நாங்குநேரி.
10. வள்ளியூர்.
11. இராதாபுரம்.

மேற்கூறிய பகுதிகளில் 2,000 கிணறுகள் வெட்டவும், 1,000 பம்புசெட்டுகள் அமைக்கவும் கடன் கொடுக்கப்படும்.

இத் திட்டத்தைப் பயன்படுத்தித் தீவிரமாக வேளாண்மையில் ஈடுபட்டு, உற்பத்தியைப் பெருக்கி உயரிய வருவாயைப் பெற்று வளமாகவாழுங்கள் என்று சிறுநிலக்கிழார்களைக் கேட்டுக் கொள்கிறோம்.






ஏற்றத்தாழ்வற்றதும், விஞ்ஞான யுகத்திற்கு ஏற்றது மான சமதர்மச் சமுதாயத்தை உருவாக்கிட வேண்டு மென உறுதிபூண்டு, தமிழ்ப்பெருங்குடி மக்களின் அன்பும், பரிவும் மிக்க ஆதரவைப்பெற்றுள்ள இந்த அரசு, கொண்ட கொள்கைக்கெனக் விடுதலையும் கிடைத்தாகவேண்டும். அதற்குச் சமூக அமைப்பில் எல்லா வகையிலும் தாழ்வுற்றுக் கிடப்போரின் வேதனை தீர்க்கும் திட்டங்களை விரைவிலே நிறைவேற்றியாக வேண்டும்.





# சமதர்மத் திருப்பணிக்கு வழிவகுக்கும் வரவு செலவுத் திட்டம்

கொற்றம் அமைந்திடத் தடைக்கற்கள் உண்டென்றாலும் தடந்தோள் உண்டு எனத்துணிந்து நடைபோடும் என்பதை இந்த நிதி நிலை அறிக்கையின் முன்னுரையாகவும், எமது சூளுரையாகவும் வெளியிடுவதில் பெருமை அடைகிறேன்.

புதிய சோஷலிசச் சமுதாயத்தின் சமூகப் பொருளாதாரக் கொள்கைகளை வலியுறுத்தும் வகையில், இந்த அரசு தன் பணிகளை மேற்கொள்ளும் என்கிற நம்பிக்கை உடையவர்களாக இம் மாநிலத்து மக்கள் இருக்கின்றார்கள் என்பதை இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்கும்போது நான் கிஞ்சிற்றும் மறந்தேன் இல்லை என்பதைக் காழ்ப்பு சிறிதுமின்றி இந்த அறிக்கையை ஊன்றிப் படிப்பவர்கள் தெளிவுற உணர்வர்.

பொருளாதாரத் துறையில் நடவடிக்கை எடுக்கச் சிறகடித்துப் பறக்கும் நமது ஆர்வம், சமுதாயத் துறையில் கீழ்த்தட்டில் கிடக்கும் பெரும்பாலான மக்களைக் கைதூக்கி விடுவதிலும் காட்டப்பட்டாக வேண்டும். சோஷலிசம், பொருள் பொதிந்த ஒன்றாக அமைய வேண்டுமென்றால், சமூக அமைப்பில் தாழ்வுற்றோரின் நிலை உயர்த்தும் திட்டங்களை, அது தன்னகத்தே கொண்டதாகத் திகழ வேண்டும். பொட்டுப்பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய் இருக்கின்ற மக்கள், புதியதோர் உலகு காண, அவர்தம் வாழ்வில் புத்தொளி பரவிடப், பொருளாதார முன்னேற்ற சாதிபேதமற்ற சமத்துவ நிலையும், மூட நம்பிக்கைகளைக் கருவியாகக் கொண்டு அவர்களை ஆட்டிப்படைக்கும் ஆதிக்கச் சக்திகளிடமிருந்து

இந்நாட்டில் சோஷலிசச் சமுதாயத்தை உருவாக்குவதற்குக் குவிந்து கிடக்கும் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதும் ஏற்றதொரு வழியாகும். இல்லையேல் அதிகாரக் குவியலும், அதைச் சார்ந்துள்ள அதிகார வர்க்கமும். சோஷலிசத்தைப் பொருளற்றதாக ஆக்கிவிடும். வங்கிகளையும் காப்புறுதி நிறுவனங்களையும் நாட்டுடைமை ஆக்கும்போது ஏற்பட்டதைப் போல, அதிகார மையம் தமிழ் நாட்டில் இருக்கும் முதலாளிகளிடமிருந்து பம்பாயிலோ, புதுடெல்லியிலோ உள்ள சில அதிகாரிகளின் கைக்கு மாறிவிடும் வகையிலே மட்டும் எடுக்கப்படும் நடவடிக்கைகள், சோஷலிசத் தத்துவத்தை முழுமைப்படுத்திவிட முடியாது. இந்த நிறுவனங்களின் நிர்வாகத்தை நடத்திச் செல்வதில் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு மாநில அரசுகளுக்குப்பங்களிக்கக் கூடிய திட்டங்களை விரைவில் தீட்டிட, மத்திய அரசு, இன்னும் முன்வராமலிருப்பது வருந்தத்தக்கதாகும்.

ஜனநாயக சோஷலிச அமைப்பில் அதிகாரங்கள் பரவலாகப் பிரித்தளிக்கப்பட வேண்டும். இதனையொட்டி, மத்திய-மாநில உறவு பற்றி ராஜமன்னார் குழு அண்மையில் அளித்துள்ள அறிக்கையை, மாநிலக் கட்சியின் ஆட்சி ஒன்று, தன்னிடமுள்ள அதிகாரத்தை மேலும் பெருக்கிக்கொள்ள எடுத்திருக்கும் முயற்சி என்று யாரும் கருதிவிடக் கூடாது.



மக்கள் சக்தியின் கருவிகளாய் உள்ள அமைப்புகளிடம், தேவையான நிதி வாயில்களும் அதிகாரங்களும் அளிக்கப்பட வேண்டுமென்கின்ற சோஷலிசக் கொள்கையை நிறைவேற்றுவதற்கான வழிவகை ஆதாரமாகவே அந்த அறிக்கையைக் கருத வேண்டும். அரசியல் வழியிலும், புவியியல் அளவிலும் சிறப்புமிகு அமைப்புகளாய் உள்ள மாநிலங்களுக்குத் தன்னாட்சி உரிமை வழங்குவதுதான், இந்தியாவைப் போன்ற பெரியதொரு நாட்டில் சோஷலிசக் கொள்கையை நிலைநாட்டுவதற்கு எளிதான வழியாகும். மாநிலங்கள் வளமாகவும், மத்திய அரசு பலமாகவும் இருக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்ற தன்னாட்சி லட்சியத்தை நாம் வலியுறுத்துகிறோம்.

உரிமைக்குக் குரல் கொடுப்போர் மாநில அரசிலும், உறவுக்குக் கைகொடுப்போர் மத்திய அரசிலும் இருந்திடும் இந்தக் காலத்திலேயே, தமிழகத்தின் முறையீடுகள் பல, தட்டிக் கழிக்கப்படுகின்றன வென்றால், தயவுக்குத் தவம் கிடப்போர் மாநிலத்திலும், தாராள சிந்தையற்றோர் மத்திய அரசிலும் இருந்திட்டால், மாநிலத்தின் வேண்டுகோள்கள் விழலுக்கு இறைத்த நீராகும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ! அதனால்தான், அரசுப் பொறுப்பில் இருப்போரைப் பற்றிக் கணக்கில் எடுக்காமல் அமைப்பு முறையே மாற்றப்பட்டு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் தன்னாட்சிக் கொள்கை பற்றி, மத்திய அரசினர் சிந்தித்திடத் தயக்கம் காட்டலாகாது.

ராஜமன்னார் அறிக்கையை நாட்டிலுள்ள பல கட்சியினரும் ஆதரித்துள்ளனர். அதனை எதிர்த்திடும் கட்சியிலே கூடத் தெளிவு படைத்தோர் சிலர், அந்த அறிக்கையின் அடிப்படைக் கொள்கைக்கு ஆதரவினை நல்கியுள்ளனர். ஒருசில மாநில முதலமைச்சர்கள் நமது முயற்சிக்கு வலுவூட்டும் வகையில் ராஜமன்னார் அறிக்கை பற்றிய கருத்துக்களை வழங்கியுள்ளனர். சோஷலிச சமுதாயத்தை உருவாக்குவதில், மாநிலங்களும் தோழமையுடன் பங்கேற்கும் வகையில் மத்திய அரசு, தற்போதைய தன் வீண் பிடிவாதமான நிலையினின்றும் இறங்கிவந்து மாநில நிர்வாகத்தின் பல முனைகளில் தலையிடுவதைக் குறைத்துக் கொள்வதின் வாயிலாக—வளமும், வலிவும் பொருந்திய புதிய இந்தியாவைப் படைத்திட வழிகோலும்.

பகிர்ந்தளிக்கப்படும் அதிகாரங்களைக் கொண்டு பயன்மிகு காரியங்கள் பலவற்றைச் செய்யலாம் எனினும், இன்றைய நிலையில் மாநில அளவில் உள்ள அதிகாரங்களைக் கொண்டு, பாத்திரத்தில் உள்ளதை மட்டும் சிந்தாமல், சிதறாமல், அயராமல் ஆறிடாமல் பரிமாறும் பாங்கு போல், தமிழக அரசு செயல்படுத்தியுள்ள செழுமையான திட்டங்களை இந்த நிதி நிலை அறிக்கையில் விரித்துரைப்பதும் கோடிட்டுக் காட்டுவதும் என் கடமையாகும்.

வேளாண்மைத் துறையில் பசுமைப் புரட்சி செய்திட நாம் ஆற்றியுள்ள பணிகளின் பட்டியல் வருமாறு :—

ஏற்கனவே அளித்ததற்கு மேலாகக் கடன் வசதிகளை அளித்தல், பாசன வசதிகளைப் பெருக்குதல், உரவகைகளை வழங்குதல், முதலீடுகளை உயர்த்துதல், ஆகியவற்றில் உழவர்தம் ஊக்கம் பெருகிட அரசு ஆக்கம் தந்துள்ளது. வேளாண்மைக்கு என முதலீடு செய்யப்படும் தொகை 1967-68-ல் ஏறத்தாழ ரூபாய் 13·4 கோடி. யிலிருந்து 1971-72-ல் ரூபாய் 18·84 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது.

மிகுபயன் தரும் விதை ரகங்கள் 1970-71-ல் 49·11 லட்ச ஏக்கரில் பயிரிடப்பட்டது. 1971-72-ல் 59 லட்சம் ஏக்கராக அதனை உயர்த்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. பருப்பு வகைகளின் தட்டுப்பாடு, அதன் காரணமாக அவைகளின் விலை உயர்வு ; இதனைக் களைய எண்ணிய இந்த அரசு 1970-71-ல் 5·35 லட்சம் ஏக்கர் பரப்பளவில் பருப்பு வகை பயிரிடமுனைப்புத் திட்டம் ஒன்றைத் தொடங்கியது. 1971-72-ல் இத் திட்டத்தின் கீழ் 23·38 லட்சம் ஏக்கரில் பருப்பு வகை பயிரிடும் செயலாக்கம் வெற்றியுறும். இத் திட்டத்தின் விரிவான வளர்ச்சியால் பருப்பு வகைகளுக்கு வெளி மாநிலங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை தவிர்க்கப்பட்டு, விலையேற்றம் தடுக்கப்படும் நன்னாள் அண்மையில் வந்திடும்.

பல போகப் பயிர்த் திட்டத்தின் (Multiple cropping) கீழ் மாத்திரம் இந்த ஆண்டு 13 லட்சம் ஏக்கரைப் பயன்படுத்தக் கருதியுள்ளோம். உற்பத்திப் பெருக்கத்திற்குப் பலரக உர வகைகளையும் தேவைக்கேற்ப வழங்கிடத் திட்டமிட்டுள்ளோம். வேளாண்மையில் புதிய முறைகளைப் புகுத்துவதற்கு வேளாண்மைக் கல்வியின் விரிவாக்கம் கருதி, கோவையில் ஓர் பல்கலைக் கழகம் இற்றைத் திங்களில் தொடங்குவது கண்டு உழவர் உலகம் களிபேருவகை கொள்கின்றது. குடுமியான் மலை அண்ணா பண்ணையில் ஆராய்ச்சி நிலையம் ஒன்றையும் அமைத்துள்ளோம். அதன் வேலை இந்த ஆண்டே தொடங்கியுள்ளது.

கூட்டுறவுத் துறையில் உழவர்களுக்கு அளித்துள்ள கடன் வசதி 1967-68-ல் ரூபாய் 37·26 கோடி. 1970-71-ல் ரூபாய் 44·43 கோடி. இது 1971-72-ல் ரூபாய் 61·5 கோடிக்கு உயருமெனக் கருதுகின்றேன். 117 புதிய நிலவள வங்கிகள் நிறுவப்பட்டுள்ளன. நிலவள வங்கிகள் வாயிலாக 1966-67-ல் ரூபாய் மூன்று கோடியும், 1968-69-ல் ரூபாய் 14·67 கோடியும் நீண்டகாலக் கடனுகை வழங்கப்பட்டதற்கு மாறாக, 1971-72-ல் ரூபாய் 21 கோடி அளவுக்குக் கடனுகை வழங்க இயலும் என எண்ணுகிறோம். . இதற்கு மேலும், உரங்களுக்கான கடன் வகையில், அரசே 6·25 கோடி ரூபாய் நேரடியாக வழங்க வகை செய்கிறது.

மற்றும் கிணறுகள் தோண்டுவதற்காகவும், குழாய்க் கிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்காகவும், டிராக்டர்கள் வாங்குவதற்காகவும் வேளாண்மை மறுநிதி நிறுவனத்திற்கும், மற்ற வங்கிகளுக்கும் நாம் அனுப்பியிருந்த திட்டம், உலக வங்கியின் கீழ் நடைபெறும் அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தால் (International Development Association) ஏற்கப்பட்டிருப்பதை இப்பேரவைக்குப் பெரும் மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறேன். மாநில நிலவள வங்கியின் தலைவரும், அரசு அதிகாரிகளும் 1971 ஏப்ரல், மே திங்களில் வாஷிங்டனில் நடைபெற்ற உரையாடல்களில் கலந்துகொண்டு, சென்ற பணியினை வெற்றிகரமாக முடித்து அதன் விளைவாக நமக்கு ரூபாய் 40 கோடி அளவுக்குக் கூடுதல் கடன் வசதி கிட்டிட ஏற்பாடுகள் செய்து முடித்துள்ளனர். இந்த உடன்பாட்டின் விளைவாக சற்றேறப்ப 10,000 கிணறுகள், 7,000 வடிமுனைக் கிணறுகள், 4,500 குழாய்க் கிணறுகள் அமைத்திடவும், 1,500 டிராக்டர்கள் வாங்கிடவும், நிலவள வங்கிகளும், வணிக வங்கிகளும் கடன் தொகைகளை அளித்திட முன்வரும்.

கடந்த ஆண்டில், இவ்வரசு மத்திய அரசின் உதவி பெறுவதில் எய்தியுள்ள வெற்றி காரணமாகத் தென்னார்க்காடு, மதுரை, நெல்லை மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும், ஒரு கோடியே அறுபது லட்சம் செலவில், சிறு உழவர் வளர்ச்சி நிறுவனங்களை ஏற்படுத்த முடிந்தது. ஆதாயம் குறைவாக உள்ள மிகச்சிறு உழவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் வட ஆர்க்காடு, சேலம் மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு கோடி ரூபாய் அளவில் திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டுள்ளது.

மேலும், வேளாண்மைத் துறையில் 1·07 கோடி ரூபாய்ச் செலவில் நிறைவேற்றப்படுவதற்கான புதிய திட்டங்கள் இடம் பெறுகின்றன. போளூர், கள்ளக்குறிச்சி, ஆகிய இடங்களில் மூன்று பொறுக்கு விதைப் பிரிவுகளை நிறுவுவதற்கும், தர்மபுரியில் மண்டல ஆராய்ச்சி நிலையம் அமைவதற்கும், கோவை மதுரை, காஞ்சி, கோவில் பட்டி, குடியாத்தம் ஆகிய இடங்களில் மண்வள சோதனைக் கூடங்களை மேலும் உருவாக்குவதற்கும் இந்த ஆண்டு வகை செய்யப்பட்டுள்ளது.




பாசனத்தின் மேம்பாடு கருதி அரசு வகுத்துள்ள புதிய திட்டங்களாவன :—

1. சின்னாறு.
2. பரப்பலாறு.
3. பாலாறு-பொரந்தலாறு
4. தண்டரை.
5. நந்தன் கால்வாய்.
6. கருப்பா நதி.
7. பொன்னனியாறு.
8. பிளவுக்கல்.
9. பரலியாறு.

இவற்றிற்கு 1971-72-ல் இரண்டு கோடியே முப்பத்தைந்து இலட்சம் ரூபாய்க்கு வகை செய்யப்பட்டுள்ளது. இவற்றுடன் பரம்பிக்குளம்-ஆளியாறுத் திட்டம், சித்தாறு-பட்டணங்கால் திட்டம், கடானா நதித் திட்டம், வைகைக் கால்வாய்களைப் புதுப்பிக்கும் திட்டம் ஆகியவை சிறப்புடன் நடந்தேறுகின்றன. பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காக மொத்தத் தொகையாக ரூபாய் 608 லட்சமும், 785 சிறு பாசனப் பணிகளை நிறைவேற்றி முடித்திட ரூபாய் 252 லட்சமும் ஒதுக்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நமது பாசனத் திட்டங்கள் அனைத்தையும் படிப்படியாகப் புதுப்பித்து, கிடைக்கும் நீரை மேலும் சீரிய வழியில் சிக்கனமாகப் பயன்படுத்தத் திட்டமிட்டு அதில் ஒரு கட்டமாக, தாமிரபரணிப் பகுதியில் உள்ள கால்வாய்களில் சீர்திருத்தப்பணி நடந்து வருகிறது. அதே போல், தஞ்சை மாவட்டத்துக்



1-7—8ஏ

கால்வாய்களைச் சீர்படுத்த ஒரு வரைவுத் திட்டம் உலக வங்கியினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தும்கூட, மத்திய அரசின் அனுமதி அதற்கு இன்னும் கிடைத்தபாடில்லை.

உற்பத்தியைப் பெருக்குமாறு நாம் விடுத்த வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து ஆக்கமளித்த உழவர் பெருமக்கள் அனைவரும் நன்றிக்குரியவர்கள். விவசாயிகளின் முயற்சி, விவசாயத் தொழிலாளர்களின் உழைப்பு, அரசு அளித்த உதவி இவைகளின் காரணமாக உணவுப் பொருட்களுக்கு வெளியாரை எதிர்நோக்கியிருந்த நிலை முற்றிலும் மாறி, 1970-71-ல் உணவுப் பொருள் வழங்கும் நிலையில் பிறர்க்கு உதவிடும்



பெருமையினைப் பெற்றுள்ளோம். 1967-68-ல் நமது உணவு உற்பத்தி 57·72 லட்சம் டன்னாக இருந்ததற்கு மாறாக, 1970-71ல் 70·03 லட்சம் டன் அளவுக்கு அதிகரித்துள்ளது. நடப்பு ஆண்டிற்கான நமது குறிக்கோள் அளவு 73 லட்சம் டன்னாகும்.

இந்நிலைக்கு இயற்கையின் ஒத்துழைப்பு மட்டும் தான் காரணமென்று இயம்பிட இயலாது. இயல்பான மழை அளவு, ஆண்டிற்கு 945·7 மில்லி மீட்டர் என்பதாகும். ஆனால், 1967-68, 1968-69, 1969-70 ஆண்டுகளில், சராசரி மழை அளவு 892·5 மில்லி மீட்டராகத் தான் இருந்தது. அதற்கு முந்திய நான்கு ஆண்டுகளில் சராசரி மழை அளவு 947·6 மில்லி மீட்டர் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். 1970-71-ஆம் ஆண்டிலும், மழை அளவு, இயல்பான அளவிற்கும் குறைவானதே. இயற்கையின் ஒத்துழைப்பு பெருமளவுக்கு இல்லாத இச் சூழ்நிலையை எண்ணிப் பார்த்தால் தான் நமது உழவர்களும், உழவுத் தொழிலாளர்களும், அரசும் உணவு உற்பத்தித் துறையில் எய்திய சாதனையின் பெருமை விளங்கிடும். எனவே, உற்பத்தியாளர்களுக்கு இருக்கும் இன்னல்களை உணர்ந்து அதனைத் தவிர்க்கப் பல்வேறு சலுகைகளைச் செய்துவருகிறது, இந்த அரசு.

நகர்ப்புறங்களின் வசதி வாய்ப்புகளை, கிராமப்புறத்து மக்கள், ஒரு காலக் கட்டத்திற்குள் பெற்றிட வேண்டுமென்னும் குன்றா ஆர்வத்துடன் செயல்படும் இந்த அரசு, வெகு விரைவில் எல்லாக் கிராமங்களுக்கும் மின்னொளியும், மின் வசதியும் கிடைத்திட முயற்சிகள் மேற்கொண்டிருப்பதை இந்த அவை அறியும். நமது மாநிலத்தில் மொத்தம் உள்ள 57,678 கிராமங்களிலும், சிற்றூர்களிலும், 1966-67 முடிய மின் வசதி செய்யப்பட்டவை 25,129 கிராமங்களும், சிற்றூர்களும் ஆகும். 1967-68 முதல் 1970-71 முடிய 17,100 கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும், மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது. 1971-72-ல் மேலும் 9,000 கிராமங்களுக்கு மின் வசதி அளிக்கத் திட்டமிட்டுள்ளோம். 1970-71 முடிய 5·3 லட்சம் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 1971-72-ல் 60,000 விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படும். கிராம மின் வசதித் திட்டங்களுக்கான நிதிகளும், மூலப் பொருட்களும் கிடைப்பது பெரிதும் இடர்ப்பாடாக உள்ளது. வேளாண்மைக்குக் குறைவான மின் கட்டணம் நாம் விதிப்பதின் காரணமாக இத்திட்டத்தின் மூலம் நமக்குரிய ஆதாயம் கிட்டவில்லை என்பதால், நிதி வழங்கும் நிறுவனங்களும் நமது திட்டங்களுக்கு உதவிட முன்வரவில்லை. இவ்வளவு நெருக்கடிக் கிடையே இந்த ஆண்டு இறுதிக்குள் வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, மதுரை, திருநெல்வேலி, நீலகிரி, கோவை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின் வசதி கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்கிறேன். ஏற்கனவே மின் வசதி முற்றிலும் பெற்றுவிட்ட சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்கள் உட்பட, மாநிலத்திலுள்ள 14 மாவட்டங்களில், 9 மாவட்டங்கள் இவ்வாண்டு இறுதிக்குள் முழுமையாக மின் வசதி பெற்றுவிடும்.

தொழிற்சாலைகளைப் பரவலாக ஏற்படுவதை ஊக்குவிக்கும் வகையிலும், தொழில் துறையில் பின் தங்கிய பகுதிகளை வளர்ச்சியுறச் செய்யவும் அரசு பல்வேறு முடிவுகளை எடுத்துள்ளது. பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்படும் தொழிற்சாலைகளுக்கு, நிதி நிறுவனங்களிடமிருந்து சலுகைகள் அளிக்கும் திட்டம் ஒன்று, மத்திய அரசினால் வகுக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் சலுகை பெறும் மாவட்டங்களாக, நம் மாநில அரசின் வலியுறுத்தலின் பயனாக, எட்டு மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவை தென்னார்க்காடு, வட ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், தர்மபுரி, கன்னியாகுமரி ஆகியனவாகும். இராமநாதபுரம், முதுகுளத்தூர், சிவகங்கை, பரமக்குடி, திருவாடானை, திருப்பத்தூர், வேலூர், ஆலங்குடி, குளத்தூர், திருமயம் ஆகிய தாலுகாக்களில், ரூ. 50 லட்சத்திற்கு மேற்படாத முதலீடு உள்ள புதிய தொழிற்சாலைகளின் மூலதனச் சொத்துக்களின் பத்தில் ஒரு பங்கை, நேரடி மானியமாக மத்திய அரசு கொடுக்கும் மற்றொரு திட்டமும் செயல்படுத்தப்படும். இத் திட்டங்கள் தவிர, மாநில அரசின் முழுப் பொறுப்பில், தொழில் துறையில் முன்னேற்றமடையாத 40 வட்டங்களில் நிறுவப்படும் தொழில்களுக்கு மின்சாரக் கட்டணச் சலுகைகளும் அளிக்கப்படும். அதன் காரணமாக ஏற்படும் நட்டத்தை மாநில அரசே ஏற்கும்.

இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள சிறு தொழில் நிறுவனங்களுக்கு உதவும் நோக்குடன்; சிறு தொழில் மேம்பாட்டுக் கழகம் (Small Industries Development Corporation) ஒன்றை அரசு நிறுவியுள்ளது. இக்கழகம், சிறு தொழிலதிபர்களுக்கு நிதி உதவியையும் மூலப் பொருள்களையும் நல்கும். அரிதாகக் கிடைக்கக்கூடிய மூலப் பொருள்களை, ஒரு கோடி ரூபாய் அளவுக்கு, கையிருப்பில் வைப்பதற்கான மூலப்பொருள் கிடங்குகளுக்கு, இக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது. இம் மாநிலத்தில் வணிக வங்கிகளால் சிறு தொழில்களுக்கு வழங்கப்பட்ட கடன், 1968 ஜூன் மாதத்தில் ரூ. 26·21 கோடியாக இருந்தது. 1970 மார்ச்சில் ரூ. 49·45 கோடியாக உயர்ந்தது. தமிழ் நாட்டுத் தொழில் முதலீட்டுக் கழகத்தின் பணிகளையும் நாம் விரைவுபடுத்தியுள்ளோம். சிறு தொழில்களின் மூலதனத் தேவைகளில் 75 சதவீத அளவு வரை இக் கழகம் வழங்கும். இம் மாநிலத்தில் 1967-68-ல் இருந்த சிறு தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை 13,571 ஆகும். 1970-71-ல் அவற்றின் எண்ணிக்கை 22,899 ஆக உயர்ந்தது. வரும் ஆண்டுகளில் மேலும் பல சிறு தொழில் நிலையங்கள் நிறுவப்படுவதை நாம் முனைந்து ஊக்குவிப்போம்.

நீண்டகாலப் பயன் விளைவுடைய மற்றுமொரு வளர்ச்சிப் பணி, தமிழ் நாட்டிற்கென, மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம் ( State Industrial promotional Corporation of Tamil Nadu) ஒன்றை நிறுவியுள்ளதாகும். இம் மாநிலத் தொழில் மேம்பாட்டுக் கழகம் ரூ. 5 கோடியளவிற்கு அதிகாரமளிக்கப்பட்ட மூலதனத்துடன் நிறுவப்பட்டுள்ளது.

பெருந் தொழில்களைப் பொறுத்தமட்டில், தூத்துக்குடியில் கூட்டுத் துறையில் (Joint Sector ) நிறுவப்படவிருக்கிற ரூ. 62 கோடி உரத் தொழிற்சாலைத் திட்டத்திற்கான மூலப் பொருளான நாப்தாவை வழங்க இந்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது குறித்து, நாம் உண்மையில் பெருமைப் படலாம். இதற்கு மேலாக, உரத் தொழிற்சாலைக்குத் தொடர்பாக கன நீர்த் (Heavy Water) தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்காக இந்திய அரசு ரூ. 20 கோடி முதலீடு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தொழிற்சாலைக்கான நிதி வசதிகளுக்கு அணுசக்தி ஆணைக்குழு ( Atomio energy Commission ) பொறுப்பேற்கும். நாளொன்றுக்கு 1,100 டன் அமோனியாவும், 1,600 டன் யூரியாவும் உற்பத்தி செய்யவிருக்கும் தூத்துக்குடி உரத் தொழிற்சாலை, ஆசியாவிலேயே மிகப் பெரிய தொழிற்சாலைகளில் ஒன்றாக இருக்கும். இந்தக் கூட்டுத் துறைத் திட்டத்தின் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன.

சேலம் உருக்காலை குறித்து நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இந்தத் துறையின் மத்திய அமைச்சர் காட்டும் ஆர்வம் போற்றத்தக்கதாயினும் அதன் பொருள் கலவை ( product mix ) பற்றி இந்திய அரசு இறுதி முடிவினை விரைவிலே செய்து, இத்தனை ஆண்டு ஏற்பட்ட காலதாமதம் போதும், இனியும் வேண்டாம் அந்தத் தாமதம் என்று கூறி விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசினரை வலியுறுத்துகிறேன்.

சிகரெட்டுகள், சோடியம் ஹைடிரோ சல்பைட், டயர், ட்யூப் பொருட்கள், பி.வி.ஸி. தூள், சோடா மாவு, அமோனியம் குளோரைடு போன்ற பொருள்களைத் தயாரிப்பதற்குத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கார்ப்பரேஷன் மூலம் அரசு ஒப்புதல் கடிதம் பெற்றுள்ளது. இத் தொழிற்சாலைகள் கூட்டுத் துறையில் ( Joint Sector ) அமைக்கப்படும். இத் துறையில், சதர்ன் அக்ரிபரேன் (Southern Agrifurane) தொழிற்சாலை நான்கு கோடி ரூபாய் முதலீடு செய்து, லைசின் என்னும் பொருளையும், பர்புரால் என்ற பொருளையும் உற்பத்தி செய்யும். இத் தொழிற்சாலை கடலூரில் நிறுவப்படும். தனியார் துறையில் மேலும் பல தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு வருகின்றன என்பதை இம் மாமன்றம் அறியும். மணலிக்கு அருகில், நைலான் இழையைத் ( Nylon cord ) தயாரிக்க எட்டரைக் கோடி ரூபாய் செலவில், ஒரு தொழிற்சாலையை நிறுவ, டெல்லி துணி ஆலைக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. கரிக் கறுப்பு ( Carbon Black ) தயாரிப்பதற்காக கமானி சகோதரர்கள் மணலியில் தங்களது இரண்டு கோடி ரூபாய் தொழிற்சாலையின் வேலையைக் கூடிய சீக்கிரத்தில் தொடங்கவிருக்கின்றனர். பாலியெஸ்டர் இழைகளைத் தயாரிப்பதற்காக இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் நிறுவனத்தார் ஏற்கனவே வேலைகளைத் தொடங்கிவிட்டனர்.

எண்பது கோடி ரூபாய் மூலதனமுள்ள பெட்ரோ கெமிகல் (Petro—chemical) தொழிற்சாலையையும், பாலிதீன், பிளாஸ்டிக், பாலியெஸ்டர்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் பிரிவுகளையும் நிறுவுவதற்கான ஒப்புதல் கடிதத்தை அளிக்குமாறு மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்தி வருகிறது என்பதையும், இம் மன்றம் நன்கு அறியும். நைலான் இழைகள், அலுமினிய அணுத் தூள், பசை, போரக்ஸ், போரிக் அமிலம் முதலியவற்றைத் தயாரிக்க அனுமதி வழங்கவும் மத்திய அரசுக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு உரிமங்கள் வழங்குவதில் ஏற்படும் கால தாமதமும், தொழில்வளம் பெருக மாநில அரசுக்கு இயலாத நிலையில் அதன் கைகள் கட்டப்பட்டிருப்பதும், ஈண்டுக் கூர்ந்து கவனிக்கத் தக்கவையாகும். இந்த இடர் நீங்கின், ஏற்றமிகு தொழிலகமாகத் தமிழகம் செழிக்கும்.

தொழில் வளமும், வேளாண்மை வளர்ச்சியும் தொடர்புகளும் விரிவடைந்திட, சாலைப் போக்குவரத்துகளின் இன்றியமையாமையை உணர்ந்து இந்த அரசு திட்டங்களைத் தீட்டுகிறது. சாலைகளைப் பேணுவதற்கு 1967-68-ல் ஒதுக்கப்பட்டிருந்த ரூபாய் 565 லட்சம் ; அது 1971-72-ல் 686 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இது தவிர, 1971-72-ல், ரூபாய் 100 லட்சம் மதிப்புள்ள புதிய திட்டங்களும் மேற்கொள்ளப்படும். புதிய சாலைப் பணித் திட்டங்களை நிறைவேற்ற ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்கள் அளிக்க ரூபாய் 110 லட்சம் ஒதுக்கப்படும். இந்திய அரசிடமிருந்தும், மத்திய சாலை நிதியிலிருந்தும், நிதி ஒதுக்கங்களைப் பெற்று, தேசிய நெடுஞ்சாலைகளுக்காக 1971-72-ல் 619 லட்சம் ரூபாய் செலவிடக்கூடும். 630 லட்ச ரூபாய் மதிப்பீட்டுத் தொகையுள்ள பாம்பன் பால வேலைகளை இவ்வாண்டில் தொடங்க, மத்திய அரசின்

ஒப்புதலை எதிர்நோக்கியுள்ளோம்.

சமூகப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் களைந்து, மூட நம்பிக்கை, பழங்கால வழக்கங்கள் அகன்று, அறிவொளி பாய்ச்சிட வல்லது கல்வி வாய்ப்பேயாகும். அந்த அடிப்படையில், கல்விக்காக 1967-68-ல் ரூ. 53·56 கோடியளவில் இருந்த நிதி ஒதுக்கீடு, 1971-72-ல் ரூ. 81·84 கோடியாக உயர்ந்துள்ளது. ரூ. 1·47 கோடிச் செலவில், 6,500 புதிய ஆசிரியர்களை வேலையில் அமர்த்துவதற்கு நாம் வகை செய்திருக்கிறோம். இதற்கு மேலாக, தொழில்-பயில் ஆசிரியர் (Apprentice teachers) திட்டத்தின் கீழும் 6,500 ஆசிரியர்கள் தொடர்ந்து வேலைசெய்து வருவர். தொடக்கப் பள்ளிகளைக் கட்டுவதற்காக, பல தலைப்புகளின்கீழ், நிதி மதிப்பீடுகளில் மொத்தம் ரூ. 1·22 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. வருகிற ஐந்தாண்டுகளுக்குள்ளாக, எல்லாத் தொடக்கப் பள்ளிகளுக்கும் கட்டடம் அமைந்திட நாம் ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை வகுத்துள்ளோம்.

பயிற்று மொழித் திட்டம் பற்றி ஆய்வு செய்த லட்சுமண சாமி முதலியார் குழுவின் அறிக்கையினை அவையினர் அறிவர். அதற்கேற்ப அரசு நடவடிக்கை மேற்கொண்டதோடு, தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொள்ளும் மாணவர்களுக்கு, புகுமுக வகுப்பில் புத்தகங்கள் வாங்குவதற்கு, ஆண்டு ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு 50 ரூபாய் வீதமும், பட்டப் படிப்பு வகுப்புகளில் படிக்கும் மாணவர் ஒருவருக்குக் கல்லூரிக் கட்டணத்துக்காக ஆண்டு ஒன்றுக்கு 180 ரூபாய் வீதமும் வழங்கத் தீர்மானித்துள்ளது.

இம் மாநிலத்தில் மருத்துவ வசதிகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகின்றன. நிதி வாயில்கள் போதிய அளவிற்கு இல்லாவிடினும், மருத்துவ, பொதுச் சுகாதாரத் திட்டங்கள் குறித்த நிதி ஒதுக்கத்தை, 1967-68-ல் ரூ. 17·89 கோடியிலிருந்து, நடப்பு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 33·20 கோடியாக உயர்த்தியுள்ளோம். இதற்கும் மேலாக, நகர்ப்புற-கிராமப்புற மருத்துவ மனைகளுக்கான கட்டடத் திட்டங்களுக்காக, பரிசுச் சீட்டு நல நிதியிலிருந்து 75 லட்சம் ரூபாய் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம், தூத்துக்குடி, அருமன, பண்ணுருட்டி, கீழ்நிலை, கருப்பம்பலம், பண்ணைக்காடு, அரக்கோணம், ஹோசூர் ஆகிய இடங்களில், மருத்துவ மனைகளுக்குக் கட்டடங்கள் கட்டும் பணிகள் வரவு-செலவுத் திட்டத்தில் அடங்கியுள்ளன.

திண்டுக்கல்லிலும், மதுரையிலும் கண் நோய்த் துறைகள்; ஈரோட்டில் மார்பு நோய் தனி மருந்தகம்; அரசிதழ்ப் பதிவு பெறாத அரசுப் பணியாளர்களுக்கென உதகமண்டலத்திலும், நாகர்கோயிலிலும் இரண்டு சிறப்பு மருந்தகங்கள் தொடங்கப்படுகின்றன. திருச்சிராப்பள்ளி, காஞ்சீபுரம், வேலூர், சேலம், நாகர்கோயில், உளுந்தூர்ப்பேட்டை, தென்காசி, தோப்பூர் ஆகிய இடங்களில் கூடுதல் இட வசதிகள் செய்யவும், கூடுதலாக 205 செவிலியர்களை, தேவைப்படும் மருத்துவ மனைகளில் நியமிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது. வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றுக்கும் ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்றை நிறுவும் பணி, 1971-72-ஆம் ஆண்டில் முற்றுப்பெறும்.

இவ்வாறு இயங்கி வரும் ஆரம்பச் சுகாதார நிலையங்களில், மேலும் 75 நிலையங்களுக்கு நிரந்தரமான கட்டடங்கள் கட்டித் தரவும் வகை செய்யப்பட்டுள்ளது. பல்வேறு மருத்துவக் கல்லூரிகளிலும் மேம்பாடு செய்வதற்கு ரூ. 76·12 லட்சம் நிதி ஒதுக்கமும் இவ்வாண்டுத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. வேலையின்மையைப் போக்குவதற்காக, மருத்துவக் கல்லூரி இணைந்திராத மருத்துவ மனைகளில், 50 கூடுதலான உதவி மருத்துவர் பதவிகளை ஏற்படுத்தவும் அரசு முடிவு செய்துள்ளது. இவை தவிர, முன்னோடித் திட்டம் என்ற முறையில் 100 மருத்துவப் பட்டதாரிகளுக்குத் திங்களொன்றுக்கு ரூ. 250 பயிற்சி உதவித் தொகைக்கு உத்தரவாதமளிக்கும் திட்டத்தைக்கொண்டுவர, அரசு கருதுகிறது. பல்வேறு மருத்துவ மனைகளில் வருங்காலத்தில் ஏற்படக்கூடிய முறையான காலியிடங்கள், இப் பயிற்சி பெற்றவர்களிலிருந்து நிரப்பப்படும். மருத்துவப் பட்டதாரிகளிடையே நிலவும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்த அரசு கொண்டுள்ள அக்கறையின் ஓர் அடையாளமாக இந்த நடவடிக்கை அமைகிறது.

பரந்து கிடக்கின்ற பல்லாயிரம் கிராமங்களிலும், பட்டினக் கரைகளிலும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் அளிப்பது என்பதை, நோயற்ற வாழ்விற்கான அருமருந்தாகக் கருதி, இந்த அரசு, வேகமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றக் குடிநீர் வாரியம் ஒன்றை அமைத்துள்ளது. சென்னை நகர் நீங்கலாக குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான செலவு 1967-68-ல் 127 லட்சம்; 1971-72-ல் அச்செலவு 745 லட்சமாக ஆக்கப்பட்டுள்ளது. சென்னைக்கு வீராணம் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான நிதி ஒதுக்கம், 1971-72-ல் 772 லட்சம் ரூபாயாக இருக்கும்.

கடந்த மூன்று ஆண்டுகளில், கிராமப்புறக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக ரூபாய் 438 லட்சம் செலவிட்டுள்ளோம். இது தவிர, வறட்சி நிவாரணக் காலத்தின்போது, குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு 1969-70-ல் நாம் செலவு செய்த 560 லட்சம் ரூபாயைத் தனியாகக் கணக்கில் கொள்ளவேண்டும்.

இந்த ஆண்டு, கிராமக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு 164 லட்சம் ரூபாய் செலவிடப்படும். எல்லா ஊராட்சி ஒன்றியங்களும் தங்களுக்குக் கிடைக்கும் நீர் வசதியைப் பயன்படுத்திக் குழாய் மூலம் குடிநீர் வழங்க ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று வகுக்கப்படும். குடிநீர் தட்டுப்பாடும் தொத்து நோயும் கொண்ட கிராமங்களில் ஐந்தாண்டிற்குள் 8,850 குழாய்க் கிணறுகளை அமைக்க யூனிசெஃப் (UNICEF) நிறுவன உதவியுடன் நாம் உருவாக்கியுள்ள தனிச் சிறப்பு வாய்ந்த திட்டம் ஒன்றினையும் இங்குக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். இதற்கென ரூபாய் 271 லட்சம் செலவாகும். இந்த ஆண்டிற்கு மட்டும் 55 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து 1,770 குழாய்க்கிணறுகள் தூய குடிநீருக்காகக் கிராமங்களில் அமைக்கப்படும்.

இந்தப் புதிய அரசு, தொழிலாளர் நல அரசு என்ற திருப்பெயருடனேயே தொடங்கிற்று. அதற்கேற்ப, அவர்கள் நலனுக்கென, அரசு, தொழிலாளர் நல நிதி ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இந் நிதிக்குத் தொடக்கத்தில் 5 லட்சம் ரூபாய் அரசினரால் வழங்கப்பட்டுள்ளது. தொழிலாளர் அரசுக் காப்புறுதித் திட்டம் இவ் வரசினால் செவ்விய முறையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

தொழிலாளர் அரசுக் காப்புறுதித் திட்டத்திற்கு ஆகும் செலவில், இம் மாநிலத்திற்குத் தரப்படும் பங்கு அளவிற்கு மேல், ரூபாய் 112 லட்சம் கூடுதல் செலவு செய்துள்ளது. இந்திய அரசிடமிருந்து இதற்கு இணையாக உதவித் தொகை கிடைக்காதபோது, தொழிலாளர் நலனைக் கருதியே, அரசு இத் திட்டத்தின்கீழ் கணிசமான அளவிற்குச் செலவு செய்து வருகிறது. இத் திட்டத்தின் வாயிலாக, இப்போது தொழிலாளர்களும் அவர்கள் குடும்பத்தினருமாக மொத்தம் 15 லட்சம் பேர் பயன்பெற்று வருகின்றனர். சென்னை மாநகரிலும், கோவை, மதுரை, கோயில்பட்டி ஆகிய இடங்களிலும், மருத்துவ மனைகளில் சேர்த்துக்கொண்டு சிகிச்சை அளிப்பது உட்பட, முழு மருத்துவ நன்மைகளும் இந்தத் திட்டத்தின்கீழ் இப்போது அளிக்கப்பட்டு வருகின்றன.

தொழில் தகராறுகளைப் பொறுத்த வரையில், அத்தகராறுகளைத் தீர்த்து வைக்க வசதி செய்வதே, தொடர்ந்து அரசின் கொள்கையாய் இருந்து வருகிறது. தொழில் தகராறுகளைப் பொறுத்தவரை, தொழிலாளர்களுக்குப் பரிவு காட்டும் அதே நேரத்தில், தொழில் துறை உற்பத்தி குலையாமல் பார்த்துக் கொள்வதும், தொழில் நிர்வாகிகளின் நியாயமான நலன்கள் பாதுகாக்கப்படுவதும், நமது கொள்கையாக எப்போதும் இருந்து வந்துள்ளது. இம் மாநிலத்தில், தொழிலாளர்களுக்கும் தொழில் நிர்வாகத்தினருக்கும் இடையே இணக்கமான நல்லுறவுகள் நிலவிட, கடமையைச் செய்பவர்களுக்கு உரிமையைப் பெற்றுத் தருவதிலும், உரிமை கேட்பவர்களுக்குக் கடமையை உணர்த்துவதிலும் இந்த அரசு பொறுப்புடன் செயல்பட்டு வருகிறது.

1961-62-ல், அரிசன நலம் குறித்த நிதி ஒதுக்கம் ரூ. 267 லட்சமாக இருந்தது; இப்போது பேரவை முன் வைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தில் ஏறத்தாழ ரூ. 700 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அரிசன நலத் திட்டங்கள் பெரும்பாலானவற்றிற்கு மத்திய உதவி நிறுத்தப்பட்டுவிட்டபோதிலும், மேலே குறிப்பிட்ட அளவிற்கு நிதி ஒதுக்கம் செய்துள்ளோம்.

அரிசனங்களுக்குக் கல்வி நிலையங்களிலும், வேலைவாய்ப்புகளிலும் ஒதுக்கப்படும் இடங்களை 16 சத வீதத்திலிருந்து 18 சத வீதமாக உயர்த்துவதென்று அரசு அண்மையில் முடிவுசெய்துள்ளது. ஒன்பதாம் வகுப்பு முதல் பதினொன்றும் வகுப்பு வரை பயிலும் அரிசன, பழங்குடி வகுப்பு மாணவர்களுக்கு, சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. மருத்துவம், பொறியியல், கால்நடை மருத்துவம், வேளாண்மை போன்ற தொழிற்பாட முறைகளில், அரிசன வகுப்பு மாணவர்களுக்கும், பழங்குடி மாணவர்களுக்கும் கடன்கள் வழங்கும் திட்டம் ஒன்றும், 1971-72 முதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதிதாக மாணவர் விடுதிகளைத் தொடங்குவதற்காக ரூ. 3 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரிசன மாணவர்களுக்கு உண்டி-உறையுள் மாத உதவித் தொகையாக இதுவரை சென்னையில் வழங்கப்பட்டுவந்த ரூ. 60ஐ ரூ. 70 ஆகவும், பிற இடங்களில் ரூ. 50-லிருந்து ரூ. 55 ஆகவும் இவ்வாண்டு முதல் உயர்த்த அரசு தீர்மானித்துள்ளதை அவையினர் வரவேற்பார்கள். இந்த அரசு, சென்ற ஆண்டு காந்தியடிகள் நினைவு உதவிச் சம்பளத் திட்டம் கொண்டுவந்ததை இம் மாமன்றத்தினர் அறிவர். அதன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும், கல்லூரிப் புகுமுக வகுப்பில் மிக உயர்ந்த மதிப்பெண்கள் வாங்கியுள்ள இரண்டு அரிசன மாணவர்களுக்கு, ஒவ்வோராண்டும் பத்துத் திங்களுக்குப் படிப்பு உதவிப்பணம் கிடைக்கும். அரிசன, பழங்குடி வகுப்பு மாணவர்களுக்கு, பட்ட மேற்படிப்புக்காக வழங்கப்படும் படிப்பு உதவிச் சம்பளங்களின் எண்ணிக்கைமீது தற்போதுள்ள வரையறைகள் நீக்கப்பட்டுள்ளன. தீண்டாமை ஒழிப்புக்கு எதிராகக் குற்றம் புரிவோரைத் தடுப்பதற்கு வட்ட, மாவட்ட, மாநில அளவில் குழுக்கள் அமைத்திடவும், குற்றம் புரிவோரைக் கடுமையாகத் தண்டிக்கவும் இந்த அரசு தீவிர நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள இருக்கிறது.

அரசு அமைத்திட்ட பின்தங்கியோர் நலக் குழுவின் பரிந்துரைகளை, நமது நிதி நிலையை ஒட்டிப் படிப்படியாக ஆய்ந்து நிறைவேற்றுவதில் நாம் தீவிரம் காட்டி வருகிறோம் என்பதற்கேற்ப, இத்துறைக்கு 1961-62ல் ஒதுக்கப்பட்ட ரூ. 97 லட்சத்துக்கு மாறாக, 1971-72 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 442




லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1967-68-க்கும், 1971-72-க்கும் இடையிலேயே 2·8 கோடி ரூபாய் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கென 1971-72-ல், 50 மாணவர் விடுதிகள் தொடங்கப்படும்.

அரசினர் மாணவர் விடுதிகளில் தங்கியுள்ள பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் இரண்டு சீருடைத் தொகுதிகள் வழங்குவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதே போல், விடுதிகளில் தங்கும் பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு உணவுக்கான செலவு வரம்புகள் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும், மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் உண்டி-உறையுள் மாத உதவித் தொகையை, சென்னையில்

ரூபாய் 40-லிருந்து ரூபாய் 60 ஆகவும், மற்ற இடங்களில் ரூபாய் 35-லிருந்து ரூபாய் 50 ஆகவும், இவ்வாண்டு முதல் உயர்த்த அரசு தீர்மானித்துள்ளது. சலவைத் தொழிலாளர்களுக்கும் முடிதிருத்துபவர்களுக்கும் இலவசமாகத் தொழில் புரிவதற்கான கருவிகள் வழங்கப்படும். மாவட்டத்திற்குச் சுமார் 100 பேராக, 1,000 பேர் ஆண்டுதோறும் இத் திட்டத்தினல் பயனடைவர். இதுவன்றி, பின்தங்கியோர் நலனுக்கெனக் கல்வி நிலையங்களிலும், வேலைவாய்ப்புகளிலும் ஒதுக்கப்படும் இடங்களை 25 சத வீதத்திலிருந்து, 31 சத வீதமாக உயர்த்தவும் அண்மையில் அரசு முடிவு செய்தது.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற இலட்சியப் பயணத்தின், மற்ருெரு கட்டமாக அமைந்ததுதான், குடிசை மாற்று வாரியம். 1969-70 ஆம் ஆண்டில் குடிசைப் பகுதி மாற்றுப் பணிகளுக்கான செலவு, 75 லட்சம் ரூபாயாக இருந்தது. இத் திட்டத்திற்காக, 1971-72 ஆம் ஆண்டில் 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை 4 கோடி ரூபாய் அளவில் உயர்த்த அரசு முயற்சி எடுத்து வருகிறது. இந்த ஆண்டில் 10,000 இருப்பிடங்கள் (Tenements) கட்டி முடிக்கப்படும். 1967 முதல் 1971 வரை நான்காண்டுக் காலத்தில், 7,722 இருப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன; அத்துடன் 2,300 தீப்பிடிக்காத இல்லங்களும் உருவாக்கப்பட்டன. நம் நாடு விடுதலை அடைந்ததிலிருந்து 1967 வரையில், 4,155 இருப்பிடங்களே கட்டப்பட்டன என்பதை நினைவு கூர்ந்தால், இந்த அரசு குடிசைப் பகுதி மக்களின் வாழ்வில் ஒளி விளக்கேற்றி வைக்கவேண்டுமென்பதற்காக எடுத்துள்ள சீரிய முயற்சியின் சிறப்புத் தெள்ளென விளங்கும். முன்னுரிமை வரிசைத் திட்டம் ஒன்றை வகுத்துக்கொண்டு எந்தெந்தக் குடிசைப் பகுதிகளை மாற்றியமைப்பது எனத் திட்டமிட்டு அந்த வரிசைப்படி வேலைகளைத் தொடங்க முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நகர்ப்புறங்களில் மட்டுமின்றி கிராமப் பகுதிகளிலும் ஏழை மக்களுக்கு வீட்டுமனைகளை ஒப்படை செய்வதில் இந்த அரசு கண்ணும் கருத்துமாய் இருந்து வருகிறது. 1969 ஜூன் முதல் 1970 மார்ச் வரை, ஏழையெளியவர்க்கு 93,472 வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்பட்டன. 1970 ஏப்ரல் முதல் 1971 ஜனவரி வரை, 1,36,000 வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்பட்டுள்ளன. எனவே இதுவரை ஏறக்குறைய 2,30,000 ஏழை மக்களுக்கு வீட்டுமனைகள் சொந்தமாக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் வாழும் இலட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களின் வறுமையை விரட்டிட, இந்த அரசு, நிலச்சீர்திருத்தச் சட்டங்களைத் தீவிரமாக அமல் நடத்துவதிலும் புதிய சட்டங்களை உருவாக்குவதிலும் தொடர்ந்து அக்கறை காட்டி வருகின்றது. தஞ்சை மாவட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு, கூலி நிர்ணயச் சட்டம் கொண்டு வந்தது நினைவுகூரத்தக்கது. ஏழ்மையில் வாடிடும் இந்த விவசாயத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பதற்கு மனையிடம் வழங்கிடுவது நமது கடமையாகும். இவர்கள் தற்காலம் குடியிருந்துவரும் மனையிடங்களிலிருந்து, அல்லது குடிசைகளிலிருந்து வெளியேற்றுவதைத் தடுக்கவும், அந்த இடங்களை அவர்களுக்கே சட்டபூர்வமாகச் சொந்தமாக்கவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் வாழும் விவசாயத் தொழிலாளர்களின் அல்லலை உணர்ந்தவர்கள் இத் திட்டத்தின் பயனை நன்கு உணர்வார்கள்.

விவசாயத் தொழிலாளர்கள், தாங்கள் விவசாயம் செய்யும் நிலங்களுக்கு அருகாமையில் குடியிருப்பதில் இருந்து வெளியேற்றுவதை அனுமதித்தால், வேளாண்மைத் துறையினுடைய உற்பத்தியைப் பாதிக்கும் என்பதையும், ஏழைத் தொழிலாளருடைய நிம்மதியான வாழ்வு சீர்குலையுமென்பதையும், மன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இதைத் தடுத்து நிறுத்தி, ஏழை விவசர்யத் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். எல்லார்க்கும் வீடு என்கிற நமது இலட்சியப் பயணத்தின் ஒரு கட்டமுமாகும் இம் முயற்சி.

சாகுபடிக்கென நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு, 1967 முதல் 1971 மார்ச்சு முடிய 2,02,246 பேர்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பது இந்த அரசின் சோஷலிசக் கொள்கைக்கு மற்றுமோர் எடுத்துக் காட்டாகும். காடுகள் என்ற பெயரில், உண்மையில் காடுகள் அல்லாத பகுதிகளில், நிலமற்ற ஏழைகளுக்குத் தந்திடுவோம் என அறிவித்ததற்கிணங்க, இந்த ஆண்டு 50,000 ஏக்கரா பரப்பளவுள்ள காட்டு நிலங்கள், அதன் தரத்திற்கேற்றவாறு, மூன்று முதல் ஐந்து ஏக்கரா வரை, ஒவ்வொரு நிலமற்ற ஏழை விவசாயிக்கும் பகிர்ந்தளிக்கப்படும் என்பதைப் பூரிப்புப் பொங்கிட இந்த மாமன்றத்தில் அறிவிக்கின்றேன்.

இந்திய அரசு அறிவித்துள்ள கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் தமிழகத்தில் 15,000 பேர்களுக்கே பயனளிக்கின்றது. மக்கள் தொகை, வட்டாரம், இவையிரண்டின் அடிப்படையில் இல்லாமல் மாவட்டங்களின் அடிப்படையில் நிதி உதவியினைப் பகிர்ந்தளிப்பதால், இம் மாநிலத்திற்குக் கிடைக்கவேண்டிய நிதி ஒதுக்கம் கிடைக்காமல் போய்விட்டது.

வட இந்திய மாநிலங்களில், இந்த மாவட்ட அடிப்படை அவற்றிற்கு சாதகமாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் அந்த அடிப்படை பொருந்தாது. ஏனெனில், இம்மாநிலத்தில் மாவட்டங்கள், எண்ணிக்கையில் சிறுத்தும் பரப்பளவில் பெருத்தும் உள்ளன. எனவே, பத்தொன்பது மாநிலங்கள் கொண்ட இந்திய நாடு முழுவதற்கும் ரூபாய் 50 கோடியைப் பகிர்ந்தளிக்கையில், தமிழகத்திற்கு ரூபாய் 1·6 கோடி மட்டுமே கிடைத்துள்ளது.

இதை மறு ஆய்வு செய்யுமாறும், மாவட்டங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அல்லாமல், வட்டாரங்களின் அடிப்படையில் தொகை ஒதுக்கித் தருமாறும், தலைமை அமைச்சருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளோம். நமது முறையீட்டின் முடிவு எவ்வாருயினும், அது வரையில் காத்திருந்து காலம் கடத்தாமல், மேலும் பலர் இத்திட்டத்தின்கீழ் வேலை வாய்ப்புப் பெறுவதற்காக இவ்வரசு நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் ஒதுக்குவதென முடிவு செய்துள்ளோம். அப்போதுதான், ஒவ்வொரு மாவட்டத்திலும் மேலும் 10 வட்டாரங்களை இத்திட்டத்தின் கீழ் காண்டுவர முடியும். இதன் வாயிலாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் 20 வட்டாரங்களில் இந்த வேலை வாய்ப்புத் திட்டம் விரிவாக்கப்பட்டு, தமிழகக் கிராமப் பகுதிகளில் மொத்தம் 30,000 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிட்டும்.

படித்தவர்களிடையே வேலையின்மையைப் போக்குவதும் ஒரு நல்ல அரசின் திட்டமாக இருந்திடல் வேண்டும். படித்தவர்களுக்கு வேலை அளிப்பதில், சில இடர்ப்பாடுகள் உள்ளன. அவர்களில் பலர் சிறப்புப் பயிற்சி பெற்றிருப்பதால், குறிப்பிட்ட வேலைகளில் அன்றி, வேறு வேலைகளில் அவர்களை அமர்த்த முடியாத நிலை ஏற்படுகின்றது. பொறியாளர்களைப் பொறுத்த வரையில் 2,400 பேருக்கு வேலை பழகும் சிறப்புத் திட்டத்தையும், ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், 6,500 பேருக்கு வேலை பழகும் திட்டத்தையும் உருவாக்கி, இரு சாராருக்கும் வேலை வாய்ப்பளிக்கச் சுமார் 40 லட்ச ரூபாய்ச் செலவில், வேலைத் திட்டம் ஒன்றை இந்த அரசு நிறைவேற்றியுள்ளது.

வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்குவதில் மேலும் ஒரு கட்டமாக, தமிழ்நாடு காவலர் படையில் "முதல் நிலைக் காவலர்" (Grade I Constable) என்கிற புதிய பதவி ஒன்றினை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்புதிய தரத்தில் 2,000 பதவிகளை ஏற்படுத்தி, அவைகளில் பள்ளி இறுதி வகுப்பில் தேறியுள்ள தகுதியுள்ள இளைஞர்கள் நேர்முகமாக 1,000 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்படுவதோடு, இலாகாவில் ஏற்கனவே பணியாற்றுபவர்களில் மேற்கண்ட தகுதியுடையோராயிருப்பின் பதவி உயர்வு பெற்று 1,000 பேரும் நியமிக்கப்படுவர். காவலர்கள் நிலையில்தான், காவற்படைக்கும் பொது மக்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு ஏற்படுகிறது. இந்த நிலையில், காவற்படைக்குப் படித்த இளைஞர்களை நியமிப்பது இன்றியமையாததென்றும், காவலர்கள் பொது மக்களிடம் மரியாதை, பரிவு, உதவியளிக்கும் மனப்பாங்கு இவற்றுடன் பழகும் வகையில் அவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படவேண்டுமென்றும் கருதுகிரும். காவலர்களுக்குப் பொதுவாகவும், சிறப்பாகவும் உள்ள கடமைகளை அவர்கள் மேலும் நல்ல முறையில் உணர்ந்து, உரிய காலத்தில் அவற்றை நிறைவேற்றவும் வேண்டும். எனவே, பள்ளி இறுதி வகுப்பில் தேறி, இப் புதிய பதவித் தரத்துக்கு நியமிக்கப்படவிருப்பவர்கட்கு, இப்போது உதவி சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு எந்த



அளவில் பயிற்சியளிக்கப்படுகிறதோ, அதே அளவில் பயிற்சி அளிக்கப்படும். காவலர்கள் பெறுவதற்குரிய பிற நலன்களும் இவர்களுக்கு வழங்கப்படும். மற்றும், இவர்களுக்கெனத் தனியே சீருடையும் வழங்கப்படும். முக்கியக் காவல் நிலையங்களுக்கு இவர்கள் அனுப்பப்பட்டு, வழக்குகளைத் துப்புத்துலக்குவதிலும், வழக்குகள் தொடர்வதிலும், அறிவுநுட்பம், திறமை இவற்றைப் பயன்படுத்தி நிறைவேற்ற வேண்டிய காவல்துறை அலுவல்களிலும் இவர்கள் உதவி புரிவர்.

இதைப் போலவே இன்றியமையாத மற்ருெரு திட்டத்தையும் அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். தொழில் நுணுக்கப் பள்ளிகளில் பயின்று, தேர்வு பெற்று, வேலையின்றியிருக்கும் தகுதியுள்ள இளைஞர்கள் 3,000 பேர்களுக்கு, ஒவ்வொருவர்க்கும் ரூபாய் 1,000 வீதம் கடன் உதவி அளிக்க இத் திட்டம் வகை செய்கிறது. கிராமங்களில் சிறு அளவில் தொழிற்பணிமனைகளைத் தொடங்குவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் தகுதி பெற்ற இளைஞர்களுக்கு நியாயமான வட்டிக்கு இத் தொகை வழங்கப்படும். இரண்டு ஆண்டுக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்திவிடத்தக்க இத் தொகை, சுழல்நிதியாகப் பயன்படும். இத்திட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செயல்படுத்துவர். இதற்கெனப் பரிசுச் சீட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இது தவிர, படித்துப் பட்டம் பெற்றுள்ள இளைஞர்களுக்கு வேலைக்கமளிக்கப் புதியதோர் திட்டம் ஒன்றை நிறைவேற்றிட அரசு முடிவெடுத்துள்ளது. அந்த அடிப்படையில், சமூகத்தொண்டாற்றுவதற்காக இளைஞர் அணி (Youth Corps) ஒன்று தொடங்கப்படும். இந்த அணியில், கல்லூரிகளிலிருந்து பட்டம் பெற்றுவரும் 2,000 இளைஞர்கள் சேர்க்கப்படுவர். கல்வி, மருத்துவம், வேளாண்மை, பொறியியல், அறிவியல், கலை போன்ற துறைகளில் பட்டம் பெற்றவர்களிலிருந்து இவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். 50 இளைஞர்களைக் கொண்ட ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தலைவர் இருப்பார். இந்த இளைஞர் அணி, முதற்கண் கிராமப் புறங்களில் ஆக்கப்பூர்வமான சமூகத் தொண்டாற்றுவதற்குப் பயன்படும். இவர்களது அன்ருடச் செலவுகளுக்காக ஒவ்வொருவர்க்கும், மாதம் ஒன்றுக்கு ரூபாய் 175 வழங்கப்படும். இம்மாநிலம் முழுவதிலும் உள்ள பற்பல வட்டத் தலைமை அலுவலகங்களுக்கு இவர்கள் அனுப்பப்படுவர். அங்கிருந்து ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திற்கும் சென்று, முதியோர் கல்வி, சுற்றுப்புற சுகாதாரம், குடும்ப நலத்திட்டம், கிராமத்திற்குரிய தேவைகள் உட்பட, மக்கள் நல்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வதோடு, தீண்டாமை, சாதி வேற்றுமை, காழ்ப்புணர்ச்சி, சமூக ஏற்றத் தாழ்வுகள், தீய பழக்கவழக்

கங்கள் முதலியவற்றிலிருந்து மக்களை விடுவிக்கவும் அறிவொளிப் பிரச்சாரம் செய்வார்கள்.

இந்த அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மருத்துவ இளைஞர்களுக்கு, கிராம மக்களின் மருத்துவத் தேவைகளைக் கவனித்துக் கொள்வதற்காக இன்றியமையா மருந்துகள் அடங்கிய சிப்பமும் வழங்கப்படும். உழவர்கள் புதிய சாகுபடி முறைகளை மேற்கொள்ளவும், புதிய தொழில் நுட்ப உத்திகளையும், புதிய ரக விதைகளையும் பற்றி அவர்களுக்கு எடுத்துச் சொல்லவும் இவ்வணியினர் உதவி புரிவர். இவ்வணியில் சேரும் உறுப்பினர்கள் ஓராண்டுக் காலத்திற்கு மட்டும் பணியாற்றுவர். அரசுப் பணிகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும்போது, மற்றவர்களை விட இவர்களுக்குத் தகுதி அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும். இந்த இளைஞர் அணி 2,000 பேருக்கு வேலை தருவது மட்டுமன்றி, புதிய சமுகப் பொருளாதார சமதர்ம யுகத்தைத் தோற்றுவிப்பதில் இம் மாநிலத்திலுள்ள படித்த இளைஞர்களுக்கு நல்வாழ்வு வழங்கும் என்பது என் நம்பிக்கையாகும். இத் திட்டத்திற்குப் பரிசுச் சீட்டு நல நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்படும்.

வேலையற்றோர், வாழக் கதியற்றோர், பாதுகாக்கும் பண்பற்ற குடும்பத்தால் கைவிடப்பட்டோர், இரந்து உயிர் வாழ்கின்ற இழிநிலையை நீக்கிடப் பிச்சைக்காரர் மாறுவாழ்வுத் திட்டமொன்றை நமது மாநில அரசு தயாரித்துள்ளது. அறுபதாயிரத்துக்கு மேற்பட்டோர் ஈடுபட்டுள்ள இந்த அவல வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்திட முனைந்துள்ள தமிழக அரசு, இந்த ஆண்டு, முதற்கட்டமாக, ஆறுயிரம் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு அடைக்கலம் தந்து சிகிச்சையும் தொழிற்பயிற்சிகளும் அளித்து, அவர்களை ஆறு விடுதிகளில் வாழ்ந்திட வழி வகுத்துள்ளது. இந்த நற்காரியத்திற்கெனத் திரட்டப்படும் நிதிக்கு, வள்ளல்தன்மை வாய்ந்தோரும், மனிதாபிமான மிக்க நடுத்தர, சாதாரண, பாமர மக்களும் வாரி வழங்கி வருகின்றனர். அவர்கட்கு, அரசின் சார்பில், என் ஆழ்ந்த நன்றியை உரியதாக்கிக் கொள்கிறேன்.

இன்றைய அரும்புகள், நாளைய மலர்கள்; இன்றைய மழலைகள், நாளைய நமது மரபு காக்கும் மாண்புறு செல்வங்கள்; அவைகளை அளவோடு பெறுவதும், வளமோடு வாழ வைப்பதும், அரசு, ஆடவர், பெண்டிர், இம்மூவரின் ஒத்துழைப்பின்பாற் பட்டதாகும். பிறக்கும் குழந்தைகள் அளவில் அதிகம் இருக்கக்கூடாது என்று கூறும் அதே சமயத்தில், பிறந்த குழந்தைகளை வலிவு குறையாமல் வளர்க்கவேண்டிய பொறுப்பையும் மறந்திடல் ஆகாது. பிஞ்சு வயதிலேயே சத்து மிக்க உணவைக் குழந்தைகளுக்கு வழங்குவது, அவைகளின் மூளை வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்பது வல்லுநர்கள் கண்ட முடிவு. இளம் வயதில் புரதச்சத்து இல்லாமல் வளரும் குழந்தைகள், பிற்காலத்தில் அந்தச் சத்தைப் பெறும் நிலை ஏற்பட்டாலும் உரிய பலன் கிடைக்காது என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். எனவே, இளம் தலைமுறையினரின் எதிர்கால வாழ்வின் மேம்பாட்டிற்காக, ஊட்டச் சத்துணவுத் திட்டம் ஒன்றை மத்திய அரசின் உதவியினைப் பெற்று, இந்த அரசு, படிப்படியாக நிறைவேற்றி வருகின்றது. ஏர்க்காடு, கொல்லி மலைப் பகுதிகளிலும், சென்னை நகரிலுள்ள குடிசைப் பகுதிகளிலும் சென்ற ஆண்டு தொடங்கிய இத் திட்டம், இந்த ஆண்டு, சென்னை, சென்னையைச் சுற்றிலுமுள்ள புறநகர்ப்பகுதிகள், திருச்சி, மதுரை, கோவை மற்றும் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 15 நகர்களிலுள்ள குடிசைப் பகுதிகளிலும் செயல்படுத்தப்படும். இதன் பயனாக, 1,35,000 குழந்தைகளின் வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவையான ஊட்டச்சத்துணவை வழங்குகின்ற பணியினை, ஆங்காங்கு உள்ள பொதுநல நிறுவனத்தினரும், சீரணித் தொண்டர்களும், அரசு அலுவலர்களும், ஏற்றுள்ளனர். இந்தத் திட்டத்தை, வசதியற்ற நிலையில் உள்ள எல்லாக் குழந்தைகளும் பயனடையுமாறு செய்ய, இந்த அரசு பல்வேறு கட்டங்களில் முயற்சிகளை எடுக்கும்.

" இலமென்று அசைஇ
இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்'

என்னும் பொய்யா மொழிக்கேற்பத் தமிழகத்தின் இயற்கை வளங்கள் அனைத்தையும் ஆராய்ந்து, அதன் பயன்களைப் பெற்றிடவும், பல்வேறு துறைகளில் இது வரை அடைந்துள்ள வளர்ச்சியையும், இனி அடைய வேண்டிய முன்னேற்றத்தையும் சீர்தூக்கி, செழுமியசெயல்முறைக் கருத்துக்கள் தந்திடவும், பத்தாண்டுக் காலத்திற்கான வளர்ச்சித் திட்ட வரைவு ஒன்றை உருவாக்கும் நோக்கத்துடன், தக்க வல்லுநர்களைக்கொண்டு மாநிலத் திட்டக் குழு ஒன்றினை இந்த



அரசு நிறுவியுள்ளது. புதிய பத்தாண்டு வருங்கால வளர்ச்சித் திட்டத்தைத் தீட்டுவதில், தன்னை முற்றிலும் ஈடுபடுத்திக்கொள்கிற இந்தக் குழு தன் வேலைகளை ஜூன் திங்கள் 17-ஆம் நாள் அன்று தொடங்கியுள்ளது.

ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கும் பணிக்கு மாநிலத் திட்டக்குழுவை ஏற்படுத்தியுள்ள அதே நேரத்தில், நிகழ்கால ஆக்கப் பணிகளை மேலும் செவ்விய முறையில் செயல்படுத்துவது இன்றியமையாததாகும். வெற்றி முகட்டிற்கு விரைந்தோடிடப் பந்தயக் குதிரை வேகத்தில் போய்க் கொண்டிருக்கும் இந்த அரசு, காலதாமதம், வீண் விரயம் ஆகியவற்றைத் தவிர்க்க, " செய்தக்க அல்ல செயக் கெடும் " எனும் குறள் மொழி வழி நின்று, "செய்தக்க செய்யாமையானும் கெடும் " என்னும் சீரிய கொள்கை போற்றி, தங்கு தடையின்றி எல்லா மக்களுக்கும் பணியாற்றும் பணியைத் தொடர்ந்திட, நிர்வாகச் சீர் அமைப்புக் குழு ஒன்றினை நியமித்துள்ளது. நிர்வாகத் துறைகளில் பல தரப்பட்ட அனுபவமுள்ள அதிகாரிகளையும், பல்லாண்டுக் கால அனுபவம் வாய்ந்த அரசுச் சார்பற்ற உறுப்பினரையும் கொண்ட இக் குழு, அரசின் பல்வேறு நிர்வாக அமைப்புகளையும் நுணுகி ஆராய்ந்து சீரமைப்பிற்கான முறைகளை விரைந்து அரசுக்குத் தெரிவிக்கும். இக்குழுவின் பணிகள் இந்தத்திங்கள் 10-ஆம் நாள் அன்று தொடங்கப்பட்டுவிட்டன.

1971 -72-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள திட்ட அளவு 106.71 கோடி ரூபாய் என்பதை இவ்வவையினர் அறிவர். திட்டக் குழுவிடம் நாம் ஒப்புதல் கேட்டுள்ள குறைந்த பட்சம் ரூ. 575 கோடி அளவுள்ள ஐந்தாண்டுத் திட்டத்துடன் ஒப்பு நோக்கினும், இந்த அளவிலுள்ள ஆண்டுத் திட்டம் போதுமானதாகாது. மாநிலத் திட்டங்களை நிறைவேற்றுவது ஒரு புறமிருக்க, மத்தியத் திட்டத்தில் சேர்க்க வேண்டியதும், நெடு நாள் தயக்கமாக உள்ளதுமான சேதுசமுத்திரத் திட்டம், நெய்வேலி இரண்டாவது சுரங்கப் பணித் திட்டம், தூத்துக்குடி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை போன்ற, இம் மாநிலத்தின் எதிர்காலத்தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையான வேலைகளில் நடவடிக்கை எடுப்பதில் இந்திய அரசு எவ்விதத் தாமதமும் இனியும் செய்யலாகாது. மேலும் மத்திய அரசு, மேற்கு மலைத் தொடரிலே வீணாகும் நீரை ஒருங்கிணைப்புத் திட்டம் மூலம் பயன்படுத்தி, அவற்றைக் கிழக்கு இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள வறண்ட நிலங்களுக்குப் பயன்படுமாறு செய்ய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். நெடுநாள் பயன் விளைவிக்கக்கூடிய திட்டங்களைப்பற்றி எண்ணும்போது காவிரி பாசனப் பகுதியைச் சீரமைக்கும் வேலை, விரைவிலே செயல் படுத்த வேண்டும் என்றும் இம் மாநில அரசு உறுதியாக எண்ணுகிறது. இம் மாநிலத்தின் பொருளாதாரத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பைத் தவிர்க்கக் காவிரி நீர் தகராற்றை நடுவர் தீர்ப்புக்கு விரைவில் விடுமாறு மத்திய அரசை நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். மேற்கூறிய திட்டங்களுக்கான நடவடிக்கையை விரைவில் எடுக்குமாறு நான் மத்திய அரசிற்கு விடுத்துள்ள வேண்டுகோளை இம் மன்றம் முழுமையாக ஆதரிக்கும்என நம்புகிறேன்.

புதிய சமதர்ம வளங்கெழு அரசை எய்துவதற்கு நமது முயற்சியின் பகுதியாக, வரவு - செலவுத் திட்டத்தில் நாம் சேர்த்துள்ள பல்வேறு வேலைத் திட்டங்களையும் திட்டப் பணிகளையும் நான் விளக்கியுள்ளேன். வரி விதித்து வருமானம் திரட்டுவதில் மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் உள்ள அதிகார வேறுபாடுகள், அதாவது, மத்திய அரசுக்குள்ள அதிகாரப் பெருக்கமும் மாநில அரசுகளுக்குள்ள அதிகாரக் குறுக்கமும், நமது வரவு-செலவுத் திட்டத்தில் ஆண்டுக்காண்டு பற்றுக் குறை பெருகி வருவதிலிருந்தே தெள்ளெனத் தெரிந்து கொள்ளலாம். ஆண்டுகள் செல்லச் செல்ல, ஒரு புறம் நமது பொறுப்புகள் பெருகி வருகின்றன. மறுபுறமோ, நீட்சித் தன்மையுள்ள வரி விதிப்பு வாயில்கள் அனைத்தும், பொதுக் கடன் திரட்டுவதிலுள்ள மேலாதிக்கமும் மத்திய அரசிடமே குவிந்திருக்கின்றன. இதன் விளைவாக, நமது வருமானத்திற்கும் செலவுக்கும் உள்ள இடைவெளி நீண்டு கொண்டே போகிறது. மத்திய -மாநில நிதி உறவுகளைப் பெரிதும் மாற்றியமைத்தால் தான், இந்த நிலையைச் சீர்படுத்த முடியும். இதற்காக மத்திய அரசிடம் தொடர்ந்து வாதாடி வந்திருக்கிறோம்.

நமது வருமான வாயில்கள், வருந்தத்தக்க வகையில் எவ்வளவு குறைவாக இருக்கின்றன என்பதை இந்த வரவு-செலவுத் திட்டம் சுட்டிக் காட்டுகிறது. வருவாய்க் கணக்கில், நமது வருவாயைவிடச் செலவு இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 10.96 கோடி கூடுதலாக இருந்ததற்கு மாறாக, இத் துண்டு ரூ. 15.87 கோடியாக உயர்ந்திருப்பதைத் திருத்திய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளிலிருந்து அறியலாம். வருவாய்க் கணக்கில் உள்ள இந்தப் பற்றுக் குறை, புதிய பணிகளுக்குக் கிட்டத்தட்ட ரூ. 6.77 கோடி வகை செய்த பின்னர் எழுந்துள்ளது. இவ்வாறே, மூலதனக் கணக்கிலும் கடன் வழங்கு கணக்கிலும் பெருமளவு பற்றுக் குறை நிலவுகிறது. 1971 -72-ஆம் ஆண்டின் மொத்தப் பற்றுக் குறை ரூ. 36 கோடியாக உள்ளது. இதில் சற்றேறக் குறைய 17 கோடி ரூபாய் புதிய பணிகளுக்கான செலவாகும். மேலும், சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் காரணமாக ஏற்பட்ட கூடுதல் ஊதியச் செலவு ரூ. 29 கோடியையும் இம் மதிப்பீடுகள் எதிரொளிக்கின்றன. 1971-72-ஆம்ஆண்டின்தொடக்க இருப்பு 1970 -71 திருத்த மதிப்பீடுகளின்படி சுமார் (ரூ - 23.23) கோடியாகும். இதையே நமது தொடக்க இருப்பாக வைத்துக் கொண்டு பார்த்தால், 1971 -72 -ஆம் ஆண்டின்இறுதியில்மொத்த பற்றுக்குறை ரூபாய் 59.00 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தை இப் பேரவை முன் வைத்து நான் உரையாற்றுங்கால் இதற்கான காரணங்களை நான் தெளிவுபட விளக்கியுள்ளேன். நிதி ஆணைக்குழுவின் பரிவுரைகளைப் பொறுத்தவரை, இந்த மாநிலத்திற்குக் காட்டப்பட்ட சாதகமற்ற மனப்பான்மை, சம்பள ஆணைக்குழுவின் பரிவுரைகளால் ஏற்படும் நிதி விளைவு, மத்திய நிதி உதவி, சிறப்பு நிதி உதவிகளைப் பகிர்ந்தளிப்பதில் இருந்த பாரபட்சம்—இவையே, நமது மாநில நிதிச் சீர்குலைவுக்குப் பொறுப்பென்பதை நான் தொடர்ந்து வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். சம்பள ஆணைக் குழுவின் பரிவுரைகளின் பயனாக எழும் நிதி விளைவினை, நிதி ஆணைக் குழு ஓர்ந்து பாராமல் புறக்கணித்துவிட்டது.

திட்டத்திற்காக மத்திய அரசு நமக்கு ரூ. 250 கோடி உதவி அளிப்பதாக முன்பு வாக்களித்திருந்தது. பின்னர் அதை ரூ. 202 கோடியாகக் குறைத்து விட்டது. இந்தக் குறைப்பின் காரணமாக, திட்டக் காலத்தில், நாம் ரூ. 48 கோடி இழக்க நேரிட்டது. இவை தவிர, 9 மாநிலங்களுக்கு உதவி அளிப்பதற்கென மத்திய அரசு ஒதுக்கி வைத்திருந்த ரூ. 800 கோடியிலிருந்து

நமது மாநிலத்திற்கும் சிறப்பு நிதி வசதி அளிக்குமாறு மத்திய அரசை வேண்டினோம். உண்மையில் இச் சிறப்பு நிதியுதவி, திட்டத்திற்கான கூடுதல் மத்திய நிதி உதவியாகவே அமைந்துள்ளது. இதிலும் நமக்குப் பங்குவேண்டும் என்ற நமது நியாயமான கோரிக்கையை இந்திய அரசு இதுவரை புறக்கணித்துள்ளது.

மேலும், இடைக்கால வரவு-செலவுத் திட்ட உரையில் நான் வலியுறுத்திக் காட்டியுள்ளபடி, திட்டக் காலத்தில் நாம் இந்திய அரசுக்குக் கடனைத் திருப்பியளிக்கும் தொகை (ரூ. 160 கோடி), நமக்கு இந்திய அரசிடமிருந்து கடனாகக் கிடைக்கும் தொகை (ரூ. 141 கோடி) யை விடக் கூடுதலாயிருப்பதும் நமது பற்றாக்குறைக்கு ஒரு காரணமாகும். இது தொடர்பாக, அண்மையில் தலைமை அமைச்சருக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதியுள்ளேன். சுருங்கக் கூறின், இந்திய அரசு நமக்களிக்கும் திட்டத்திற்கான உதவியை ரூ. 250 கோடியாக உயர்த்த வேண்டும்; நாம் மத்திய அரசுக்குத் திருப்பித் தர வேண்டிய கடனைக் கொடுப்பதற்குரிய காலக் கெடுவை மாற்றியமைக்க வேண்டும் ; சிறப்பு நிதி உதவியில் நமக்கும் ஒரு பங்கு அளிக்க வேண்டும் ; சம்பளக் குழுவின் பரிவுரைகளை நிறைவேற்றுவதற்கு நமக்கு நிதி உதவி நல்க வேண்டும். இவையே நான் அக் கடிதத்தில் விடுத்துள்ள முறையீடுகளாகும். இதற்கு மத்திய அரசு செவி சாய்த்தால், நமக்கு ஓரளவு கூடுதல் நிதிவசதி கிட்டும். அவ்வாறு கிட்டினால், இந்த ஆண்டிலும், வரும் ஆண்டுகளிலும் நமக்குள்ள பற்றாக் குறையை ஓரளவு போக்குவதற்கு அது உதவியாக இருக்கும்.

இது போன்ற நிதி பற்றாக் குறை மிகுந்த நிலையில் இவ்வரசு தனது வரிவிதிப்பு முறைகளை ஆய்ந்து சில முடிவுகளை எடுத்துள்ளது. சோஷலிச அமைப்புள்ள சமுதாயத்தை உருவாக்கும் கருவியாகவும் தாங்க இயலாதவர்களைக் கூடுமான வரை பாதுகாத்துத் தாங்கக் கூடியவர்களைத் தொடக்கூடியதாகவும் வரிவிதிப்பு முறைகள் இருக்கவேண்டுமென்ற இந்த அரசின் வரிவிதிப்புக் கொள்கையைக் கருத்தில் கொண்டும் மக்கள் நலன்களைப் பெருக்குவதற்கு நிதிவாயில்களைக்




காணவேண்டும் என்கின்ற நோக்கத்தோடும் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

முதலாவதாக, நகர நிலவரி விதிப்பு முறையில், சமதர்ம சமுதாயத்திற்கேற்பப் படிப்படியாக உயர்வினைக்கொண்டுவரத் தீர்மானித்துள்ளோம். தற்போது, சென்னை நகரத்திலுள்ள நில உடைமையாளர்கள் எல்லோரும் ஆண்டொன்றுக்கு நிலத்தின் மதிப்பில் 0·4 சதவிகிதம் நகர நில வரியாகச் செலுத்தி வருகிறார்கள். புதிய விகிதங்களின் படி, ஒரு மனை (Ground) (2,400 சதுர அடி) வரை நிலம் வைத்திருப்போர்கள் இவ் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுவார்கள். 66,000 சிறிய நில உடைமையாளர்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய, சோஷலிசக் கண்ணோட்டத்துடன் அமைந்த, இந்த மாற்றத்தை இம்மன்றம் வரவேற்கும் என்று நான் நம்புகின்றேன். ஒரு மனைக்கு மேற்பட்டு இரண்டு மனை வரை உள்ளவர்கள், இனிமேல் 0·5 சதவிகிதமும் 2 மனைக்கு மேற்பட்டு 5 மனை வரை வைத்திருப்பவர்கள் 0·7 சதவிகிதமும், 5 மனைக்கு மேல் 10 மனை வரை வைத்திருப்பவர்கள் 0·8 சத விகிதமும், 10 மனைக்கு மேல் வைத்திருப்பவர்கள் 1 சத விகிதமும் நகர நில வரியாகச் செலுத்துவார்கள். தனிப்பட்டவர்கள் வசம் அதிகப்படியாக நகர நிலங்கள் குவிவதைத் தடுப்பதும், நில உடைமையாளர்கள் தங்களுடைய நிலத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தத் தூண்டுவதும் இம்மாற்றத்தின் ஒரு நோக்கமாகும். நகர நிலம் வைத்திருப்பதற்கான உச்ச வரம்பு கட்டுவதற்கான முயற்சியிலும் இது ஒரு முன்னோடியாகும்.

அறக் கட்டளைகளும் பிற நிறுவனங்களும் நகர நில வரி செலுத்துவதிலிருந்து பெற்றுள்ள விலக்குகளை ரத்து செய்வது பற்றி அரசு நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளது. இத்துடன், நகர நில வரிச் சட்டத்தின் கீழ், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய நகரங்களையும் 1971–72ஆம் ஆண்டிலிருந்து கொண்டு வரவும் அரசு தீர்மானித்திருக்கிறது. இவற்றின் பயனாக, ஏறத்தாழ 1 கோடி ரூபாய் கூடுதல் வருமானம் எதிர் பார்க்கப்படுகிறது.

நிதி வசதிகளைப் பெருக்கும் நமது முயற்சியில் மற்றொரு கூறு, தமிழ் நாடு பொது விற்பனை வரியின் கீழ் உள்ள பல முனை வரியை 3-லிருந்து 3½ சத வீதமாக உயர்த்துவது என்பதாகும். இதன் வாயிலாக ஆண்டொன்றுக்கு 3·8 கோடி ரூபாய் கூடுதல் வருமானம் எதிர்பார்க்கப்படுகின்றது.

வரி விதிப்பின் அடுத்த முயற்சி, சென்னை நகரத்தில் வசூலிக்கப்படும் விற்பனைவரி மீது 10 சதவிகிதத்திற்கு மேல் வரி (Surcharge) விதிப்பது பற்றியதாகும். இதன் மூலம் ஏறத்தாழ 3 கோடி ரூபாய் வருமானம் கிட்டும். இவ்வருமானம் முக்கியமாகக் குடிசைகளை மாற்றிஅமைப்பதற்கும், சென்னை நகரப் பகுதியின் சாலைகள், குடி தண்ணீர் போன்ற அடிப்படை அமைப்புகளை மேம்படுத்துவதற்கும் செலவிடப்படும். டெல்லி, கல்கத்தா, பம்பாய் போன்ற பெரிய நகரங்களில் இச் செலவினங்களை ஈடு கட்டுவதற்காக விதிக்கப்படுகிற சுங்கத் தீர்வைக்குப் (Octroi) பதிலாக இந்த "மேல் வரி" விதிக்க எண்ணியுள்ளோம். சுங்கத் தீர்வை (Octroi) போக்குவரத்திற்கும் வர்த்தக வளர்ச்சிக்கும் இடையூறாக இருக்கும் என்பதனால், அதற்குப் பதிலாக நேரடியான மேல் வரியாக விதிக்க அரசு முடிவு செய்துள்ளது.

அரசு முடிவு செய்துள்ள நான்காவது வரி விதிப்பு யோசனை வேளாண்மைத் துறை, மாநிலத்தின் நிதிவசதிகளுக்குச்செலுத்தும் பங்காக அமையும். எல்லாப் புஞ்சை நிலங்களையும், 5 ஏக்கருக்கு உட்பட்ட நஞ்சை நிலங்களையும் அடிப்படை நில வரியிலிருந்து இவ்வரசு விலக்கு அளித்துள்ளதை இம்மன்றம் அறியும். இவ் வரிவிலக்கு, சமதர்ம சமுதாயத்தின் இலக்குகளுக்கேற்பக் கொண்டு வரப்பட்டது. நிலவரி யென்பது வருவாய்க்கு ஏற்ப நெகிழ்ந்து உயரும் தன்மையுள்ள வரி அல்ல என்பதும், இவ்வரி விலக்கு அளித்ததற்கு ஒரு முக்கிய காரணமாகும். எனினும் விவசாயத் தொழிலின் மூலம் அதிக வருமானம் பெறுவோர், எடுத்துக் காட்டாகப் பணப் பயிர்களின் மூலம் பெரும் பயனடைவோர் நாட்டின் எதிர்கால மேன்மைக்குத் தங்களின் பங்கினைச்செலுத்த வேண்டுமென்பது நியாயத்தின் பாற்பட்டதொன்றாகும். அந்த அடிப்படையில் ஏற்கனவே அமலிலுள்ள வேளாண்மை வருமான வரிச் சட்டத்தில் சில மாற்றங்களைச் செய்வதற்கு அரசு முடிவெடுத்திருக்கிறது.

உடைமைகள் சிலரிடையே குவிந்து கிடப்பதற்கு மாறாக, பெறத் தகுதியுள்ள பலரிடையே பரவலாக்கப்படுவதும், நாட்டுப் பொருளாதார அமைப்பிற்கு அடிப்படையானவற்றை அரசுடைமை ஆக்குவதும், சமதர்ம அரசுநிறுவும் முயற்சியின் முக்கிய கூறுகளாகும். இன்று 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19-ஆம் நாள் இந் நிதிநிலை அறிக்கை இம் மன்றத்தின் முன் படிக்கப்படும் போது, 50ம் அதற்கு மேற்பட்டதுமான பயணிப் பேருந்து உரிமங்களை வைத்திருக்கும் பெரிய போக்குவரத்து நிறுவனங்களின் பயணிப் போக்குவரத்துப் பிரிவுகளை அரசு நாட்டுடைமையாக்க முடிவு செய்துள்ளதை அறிவிக்கின்றேன். இவ்வாறே, பயணிப் பேருந்து உரிமையினர் ஒவ்வொருவரிடமும் 10 உரிமங்களுக்கு மேல் இருக்கக் கூடாதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான சட்டங்கள் விரைவில் இந்த அவையில் கொண்டு வரப்படும். அவையின் எல்லாப்பகுதியினரும் சோஷலிச அமைப்பின் ஓரம்சமான இம்முடிவினை வெகுவாக வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை ஒட்டி, இவ்வரசு மேற்கொண்ட முடிவுகளின் விளைவாக, அரசு அலுவலர்கள் அனைவரும் ஓரளவு அதிகப்படியான வருவாய் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இவ் வதிகப்படி வருமானத்தை முற்றிலும் உடனடியாகச் செலவு செய்து விடாமல், அவர்களுடைய பிற்கால வாழ்விற்குப் பயன் அளிக்கும் வகையிலே வருங்கால வைப்பு நிதியில் (Provident Fund) கூடுதலாகச் செலுத்துவதற்கு வகை செய்யவும் இவ்வரசு முடிவு செய்துள்ளது. தற்போது சம்பளத்தில் குறைந்த அளவு 6 சத வீதம் வைப்பு நிதிக்கு அலுவலர்கள் செலுத்தி வருகின்றனர். அரசு அத் தொகைக்கு ஆண்டு ஒன்றுக்கு 4.80 சத வீதம் வட்டி செலுத்தி வருகின்றது. அலுவலர்கள் அவர்கள் விருப்பத்தின் பேரில் மேலும் 4 சத வீதம்வரை செலுத்துவதற்கு முன் வருவார்களானால் அவர்கள் அப்படிச் செலுத்தும் அதிகப்படி சிறப்பு வருங்கால வைப்பு நிதிக்கு (Special provident Fund) ஆண்டொன்றுக்கு 8 சத வீதம் வட்டி தரவும் அரசு முடிவு செய்துள்ளது.

அரசு, கிராமப்புறங்களுக்கு மின்சாரம் தருகின்ற பணியை விரைந்து செயல்படுத்தி முடிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் மின்சார வாரியத்திற்குத்தன்னால் இயன்ற அளவு கடன்களை வழங்கிப் பிற நிதி நிறுவனங்களிடமிருந்தும் தக்க அளவு நிதியைப் பெறவும் முயற்சிகள் எடுத்து வருகின்றது. மின்சார வாரியம் தனது கிராமப்புற மின் வழங்கும் திட்டத்தை விரைந்து செயல்படுத்துவதற்குக் கிராமக் கடன் பத்திரங்கள் (Rural (Debentures) வாயிலாக 3½ கோடி ரூபாய் நிதி திரட்டவும் தீர்மானித்துள்ளது.

மேற் கூறிய பல்வேறு நிதி திரட்டும் முயற்சிகளின் பலனாய் 12 கோடி ரூபாய் கூடுதல் வருமானம் இவ்வாண்டில் கிடைக்குமென நம்பப்படுகிறது. இதன் விளைவாக நிதிநிலையில் துண்டு 47 கோடி ரூபாயாக மாறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதுபோன்ற நிதிப் பற்றாக் குறை மிகுந்த ஒரு சூழ்நிலையில் உத்தமர் காந்தியடிகளின் ஒப்புயர்வற்ற திட்டங்களில் ஒன்றான மது விலக்குத் திட்டத்தை, அவரது கொள்கைகளைப் பொன்னேபோல் போற்றி வந்த பல்வேறு மாநிலங்கள் படிப்படியாகக் கைவிட்டு, இறுதியில் தென்னகத்தைப் பொறுத்த வரையில் ஆந்திரத்திலும், கேரளத்திலும், கர்நாடகத்திலும், அருகிலுள்ள புதுவையிலும் மது விலக்குக் கொள்கை பிடிப்பற்றுப் போய்விட்ட நிலையை மத்திய அரசுக்கு எடுத்துக் காட்டி, தமிழகம் மாத்திரம் தனித்து நின்று மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்த இயலாமல் தத்தளிப்பதையும் சுட்டிக்காட்டி, அண்ணல் காந்தியின் மதுவிலக்குக் கொள்கையை அனைத்திந்திய அளவில் ஏற்க வேண்டுமென்றும் அல்லது நமக்கு நேரிட்டுள்ள இழப்பினை ஈடு செய்ய வேண்டுமென்றும் பலமுறை வலியுறுத்தி வந்திருக்கிறோம்.

புனித நோக்கத்தோடு, இந்தியப்புவி முழுதும் எந்தக் கொள்கை விரிவாக்கப்படவேண்டுமென்று கூறினோமோ, அந்தக் கொள்கை — புண்ணியமூர்த்தி காந்தி மகான் வலியுறுத்திய கொள்கை—அவர் ஏந்திய கொடி நிழலில் அணிவகுத்து நின்ற, அவர்தம் தானைத் தளபதிகளாம் மாநில முதல்வர்களாலேயே பின்பற்ற முடியாமல் போனது மட்டுமல்ல, மத்திய அரசினை நடத்தும் மகாத்மாவின் வாரிசுகளாலும் புறக்கணிக்கப் பட்டுவிட்டது வேதனை தரும் செய்தியாகும்.

கொழுந்து விட்டெரியும் நெருப்பு வளையத்திற்குள் கொளுத்தப்படாத கற்பூரமாகத் தமிழ் நாடு எத்தனை நாளைக்குத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் ? தமிழகத்தில் மட்டும் மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரப் படுத்துவதால், மதுவிலக்கின் வாயிலாக நாம் காப்பாற்ற விரும்பும் ஒழுக்கம், நாணயம், நேர்மை இவைகளையே பாதுகாக்க வாய்ப்பில்லாமல் போகிறது. வரக்கூடிய வருமானத்தையும் இழந்து, கொள்கையை அமல்படுத்துவதிலும் வெற்றி காண முடியாத அளவிற்குப் புறச்சூழ்நிலைகள் உருவாகி, சிறைகள் வழிந்திடவும், கொடிய நோய்கள் பெருகிடவும் இந்தச் சட்டம் காரணமாக இருந்ததேயன்றி உற்ற பயன் ஒரு சிறிதும்

வளையவலலை எனபதை ஒததுக கொள்வதில் நாம் வெட்கப் படத் தேவையில்லை. எனவே உயர்தனிக் கொள்கையான மது விலக்கில் இந்த அரசு தொடர்ந்து நம்பிக்கை வைத்திருக்கிறதெனி னும் இந்திய நாடு முழுவதற்கு மாக இந்தக் கொள்கையை அமல்படுத்த மத்திய அரசு பொறுப்பேற்றுக் கொள்ளும் வரையில் தமிழகத்தில் மது விலக்குச் சட்டம் செயல்படு வதை ஆகஸ்ட் 30-ஆம் நாளில் இருந்து ஒத்திவைக்க இந்த அரசு முடிவு செய்கிறது என் பதை வருத்தத்துடன் தெரி வித்துக் கொள்கிறேன்.

நலிவு தீர்த்து சமதர்மம் தழைத்தோங்கும் நாட்டினை



உருவாக்கும் வகையில் இந் நிதிநிலையறிக்கையில் பல முற் போக்குத் திட்டங்கள் இடம் பெற்றுள்ளன. அவையாவன:—

(1) உழவர் பெருமக்களுக் காக வழங்கும் நீண்டகாலக்கடன் களின் தொகை ஆண்டொன் றுக்கு ரூ. 3 கோடியிலிருந்து ரூ 21 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது. குறுகிய காலக் கடன் வசதி ரூ. 61·5 கோடி யளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

(2) 9 புதிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ரூ. 235 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(3) 1971-72-ல 51,000 கிராமங்களிலும் சிற்றூர்களி லும் மின் வசதி செய்து கொடுக் கும் ஏற்பாடு முடிவடையும்.

(4) 1967 முதல் 1971-க் குள் 2,02,246 நிலமற்ற ஏழை மக்களுக்குச் சாகுபடிக்கென நிலம் ஒப்படை செய்யப்பட் டுள்ளது. மேலும் காடுகள் என்ற பெயரால் உள்ள சாகு படிக்கேற்ற 50,000 ஏக்கர் நிலங்களை நிலமற்ற ஏழை களுக்கு வழங்க முடிவு செய்யப் பட்டுள்ளது.

(5) 1969 ஜூன் முதல் 1971 ஜனவரி வரை, 2,30,000 மனைப் பட்டாக்களும் வழங்கப் பட்டுள்ளன. மேலும் தஞ்சை மாவட்டத்திலுள்ள நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு அவர்கள் குடியிருக்கும் இடங் களை ஒப்படை செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

(6) 1967-68-ல் கல்வி வளர்ச்சிக்காக ரூ. 53·56 கோடி ஒதுக்கப்பட்டதற்கு மாறாக ரூ. 81·84 கோடி 1971-72-ல் ஒதுக்கப்பட்டுள்ளது.

(7) 1967-68-ல் ரூ. 17·89 கோடியளவில் இருந்த மருத்துவ பொது சுகாதார நிதி ஒதுக்கம் ரூ. 33·20 கோடியாக உயர்ந் துள்ளது.

(8) குடிநீர் வாரியம் நிறு வப்பட்டு, பல்வேறு குடி நீர் வழங்கும் திட்டங்களுக்கு 1971-72-ல் ரூ. 18·43 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(9) அரிசன நலனுக்காக நிதி ஒதுக்கீடு 1967-68-ல் 470 இலட்சமாக இருந்ததற்கு மாறாக, 1971-72-ல் ரூ. 700 இலட்சமாக உயர்த்தப்பட்டுள் ளது.

(10) பின்தங்கிய வகுப்பினர் நலனுக்காக நிதி ஒதுக்கீடு 1967-68-ல் 161 இலட்ச மாக இருந்ததற்கு மாறாக, தற் போது 442 இலட்சமாக உயர்த் தப்பட்டுள்ளது.

(11) அரிசன மாணவர் களுக்கான உண்டி உறையுள் உதவித் தொகைகள் அதிகரிக் கப்பட்டுள்ளன.

(12) பின் தங்கியோர் நலக் குழுவின் பரிந்துரைகளை ஆய்ந்து நிறைவேற்றுவதற்கு வகை செய்து, பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்குரிய உண்டி உறையுள் மானியங்கள் உயர்த் தப்பட்டுள்ளன.

(13) கல்வி நிலையங்களிலும், வேலை வாய்ப்புகளிலும் பின் தங்கிய வகுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் இடங்கள் 25 சத வீதத்திலிருந்து 31 சத வீதமாகவும், அரிசனங்களுக்காக ஒதுக்கப்படும் இடங்கள் 16 சத வீதத்திலிருந்து 18 சத வீதமாகவும் உயர்த்தப்பட்டுள் ளது.

(14) முடி திருத்துபவர்களுக் கும், சலவைத் தொழிலாளர் களுக்குமாக 1,000 பேருக்கு இலவசமாகக் கருவிகள் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளது.

(15) குடிசைப் பகுதிகளை மாற்றியமைப்பதற்காகக் குடிசை மாற்று வாரியம் அமைத்து அதற்கென 1971-72-ல் ரூ. 4 கோடி ஒதுக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

(16) மாநிலத்திலுள்ள பல் வேறு நகரங்களில், 1,35,000 குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து ணவை வழங்குகின்ற திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

(17) பிச்சைக்காரர்கள் மறு வாழ்வு நிதி ஒன்று அமைக்கப் பட்டுப் பிச்சை எடுக்கும் தொழி லையே குறித்த காலத்திற்குள் அறவே நீக்குவதற்கும், தொழு நோயாளிகளான பிச்சைக்கா ரர்களை முதற் கட்டமாக ஆதர வில்லங்களில் சேர்ப்பதற்கும் திட்டம் ஒன்று வகுக்கப்பட் டுள்ளது.

(18) கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு அதிகரிப்பதற் காக மத்திய அரசு வகை செய் துள்ள நிதி ஒதுக்கம் போதா மையால் மாநில அரசின் சார்



பில் மேலும் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தப்பட்டு, இதன் வாயிலாக மேலும் 15,000 பேருக்கு வேலை வாய்ப் புக் கிட்டுவதற்கு வகை செய் யப்பட்டு, மொத்தம் 30,000 பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க வழிவகுக்கப்பட்டுள் ளது.

(19) வேலையற்ற 6,500 ஆசிரியர்களுக்கு வேலை வழங்கு வதற்கு ஏறத்தாழ ஒரு கோடி ரூபாயும், 2,400 பொறியாளர் களுக்கு வேலை அளிப்பதற்காக 40 லட்ச ரூபாயும் ஒதுக்கப் பட்டுள்ளது. இதற்கும் மேலாக மதிப்பீடுகளில் 6,500 ஆசிரியர் களுக்கு வேலை அளிக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(20) 50 உதவி மருத்துவர் பதவிகள் புதிதாக உருவாக்கப் பட்டுள்ளன. வேலையின்றியிருக் கும் 100 மருத்துவர்களுக்கு ரூ. 250 மாத உதவித் தொகை அளிக்கும் திட்டமொன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

(21) 205 செவிலியர் பதவி களை உருவாக்கியதன் மூலம் வேலை வாய்ப்பு வசதிகள் பெருகியுள்ளன.

(22) படித்தவர்களிடையே வேலையின்மையைப் போக்குவ தற்காகக் காவல் துறையில் 2,000 முதல் நிலை காவலர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள் ளது. அவற்றில் 1,000 பதவிகளில் பள்ளி இறுதித் தேர்வு பெற்ற இளைஞர்கள் நேரடியாக நியமிக்கப்படுவார் கள்.

(23) சமூகப் பணியாற்று வதற்காக இளைஞர் அணி ஒன்று தொடங்கப் பெற்று சமூகப் பணி ஆற்றும் பொருட்டு 2,000 பட்டதாரி களுக்கு வேலை வாய்ப்பு அளிக் கப்படும்.

(24) தொழில் நுணுக்கப படிப்பில் தேர்வுபெற்று வேலை யின்றி இருக்கும் இளைஞர்கள் 3,000 பேர் தாமே தொழில் தொடங்கிக் கொள்வதற்காகத் தலைக்காயிரம் ரூபாய் கடன் வழங்கும் புதிய திட்டமொன்று செயற்படுத்தப்படும்.

(25) நகர்ப் பகுதியில் பெரிய மனை உடைமையாளர் கள் அதிக அளவில் வரி செலுத்தும் வகையிலும், சிறிய மனை உடைமையாளர்கள் 66,000 பேருக்கு வரி விலக்கும் வகை யிலும் வரி விதிக்கும் கட்டுக் கோப்பு சீரமைக்கப்பட்டுள் ளது.

(26) பேருந்து உரிமையாளர் கள் நடத்தும் பேருந்து களின் எண்ணிக்கைக்கு உச்ச வரம்பு கட்டப் பட்டுள் ளது. பெரிய பேருந்து நிறு வனங்களின் "பயணிகள்— பேருந்துப் பிரிவுகள்" தேசிய மயமாக்கப்பட்டுள்ளன.

வாழ்வில் வளம் கொண்டோர் சிலரும், விழிகளில் குளம் கொண் டோர் பலருமாக இருக்கின்ற சமுதாயத்தை மாற்றி அமைக் கும் சமதர்மத் திருப்பணிக்கு, மாநிலத்தில் நமக்குள்ள அதிகா ரங்களின் அளவிலும், இதி லேயே சிலவற்றுக்கு மத்திய அரசின் ஒப்புதலை எதிர்பார்க் கும் நிலையிலும் நம்மாலியன்ற அளவுக்கு ஏழை, எளியோர், நடுத்தர மக்கள் வாழ்வை அடிப் படையாக வைத்து இந்தச் சீரிய முயற்சிகளைத் தொடங்கி யுள்ளோம். இவற்றை இந்த மாமன்றமும், தமிழ் மாநிலப் பெருமக்களும் மகிழ்ச்சி பூத்திட வரவேற்பர் என்ற நம்பிக்கை யுடன் மேலும் இது போன்ற இலட்சியப் பயணத்திற்கு ஆதரவு நல்கிட வேண்டுமென் றும் மிகுந்த பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

[தமிழ் நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 1971-72-ஆம் ஆண் டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்ட மன்றப் பேரவை முன் வைத்து 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19-ஆம் நாளன்று ஆற்றிய உரை.]

## வெண்பாப் போட்டி-13

ஈற்றடி : கொண்டாடச் சொன்னார் குறித்து

முடிவு நாள் : 15—7—1971

பரிசு ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.

குறிப்பு : நேரிசை வெண்பா மட்டுமே அனுப்பவேண்டும். முடிவு தேதிக்குப் பின்னர் வருபவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

# லாஸ்ஸோ களைகளை முளைக்கு முன்னரே அழித்து விடுகிறது!



## வேர்க்கடலை மகசூலைப் பெருக்குகிறது

உறுதியான பயன்தரும் களைகொல்லி-லாஸ்ஸோ வேர்க்கடலைப் பயிர் நிலத்தில் முளைக்கும் புல் பூண்டுகளையும் அகன்ற இலையுடைய களைகளையும் நிச்சயமாகக் கட்டுப்படுத்துகிறது. முளைக்கு முன்னரே அழிக்கும் களைகொல்லியானதால் பூண்டுகளை முளைக்கவே விடாது! பயன்: பூச்சிகள் அணுகா, உங்கள் வேர்க்கடலை பயிர் உரம், சூரிய வெளிச்சம், ஈரம், மண்சத்து ஆகியவற்றின் பூரண பலனையும் பெறுகிறது. மகசூல் பெருகுகிறது. உழைப்பிற் கேற்ற உயர்ந்த லாபத்தை நீங்கள் பெறுவீர்கள்.

50% ஈ.ஸி. மற்றும் 10% குறுணையாகவும் கிடைக்கிறது.

**லாஸ்ஸோ.**

ஹெர்பிஸைடு தயாரிப்பாளர்- **Monsanto.**
மான்ஸான்டோ

மான்ஸான்டோ கெமிகல்ஸ் ஆஃப் இந்தியா பிரைவேட் லிட்
தலைமையகம்: வேக்ஃபீல்ட் ஹவுஸ், 11, ஸ்ப்ராட் ரோடு, பாலர்டு எஸ்டேட், பம்பாய்-1.
கிளைகள்: புதுதில்லி, கல்கத்தா, சென்னை




களைகளைப் போக்கி விளைச்சலைப் பெருக்குங்கள்

® மான்ஸான்டோ கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடுமார்க்-அங்கீகாரத்துடன் மான்ஸான்டோ கெமிகல்ஸ் ஆஃப் இந்தியா பிரைவேட் லிட உபயோகிப்பது.

MC.G.10.TM





# கட்டுக்கலங்காண கதிர் உழக்க நெற்காண எட்டுத்திக்கும் பயிரிடுவோம் ஐ.ஆர். 8




"கோயம்புத்தூர் மாவட்டம், பூந்தோட்டம் கிராமத்தில் உள்ள திரு தி. நாராயணசாமி என்ற உழவர் பெருமகன் 1968-69-ஆம் ஆண்டில் ஐ.ஆர். 8 நெல் பயிரிட்டு ஏக்கருக்கு 5,551·2 கிலோ மகசூல் விளைவித்து மாநில நெல் விளைச்சல் போட்டியில் முதற் பரிசு பெற்றுள்ளார். அவருக்குத் தமிழ் நாடு அரசு ரூபாய் 2,000 மதிப்புள்ள வேளாண்மைக் கருவிகளைப் பரிசாக வழங்கியுள்ளது.

அதே நாராயணசாமி அடுத்த ஆண்டில், அதாவது 1969-70-ஆம் ஆண்டில் ஐ. ஆர். 8 நெல் பயிரிட்டு ஏக்கருக்கு 6,244 கிலோ (ஹெக்டேருக்கு 15,422·6 கிலோ) மகசூல் எடுத்துள்ளார். இந்த அளவு மகசூலை இதுவரை இந்தியாவில் யாரும் விளைவிக்கவில்லை.

1969-70-ஆம் ஆண்டின் இறுதி முன்னறிவிப்புப் புள்ளி விவரப்படி தமிழ் நாட்டில் சராசரியாக ஏக்கருக்கு 1,021·5 கிலோ நெல் (ஹெக்டேருக்கு 2,523 கிலோ நெல் அல்லது 1,682 கிலோ அரிசி) மட்டுமே விளைந்துள்ளது.

திரு நாராயணசாமி 1969-70-ஆம் ஆண்டில் எடுத்துள்ள உச்ச அளவு மகசூலையும், தமிழ் நாட்டில் அந்த ஆண்டு விளைந்துள்ள சராசரி ஏக்கர் மகசூலையும் ஒப்பிட்டுப் பார்த்தால், திரு நாராயணசாமி அவர்கள் மாநில சராசரி ஏக்கர் மகசூலைப் போல் 6 மடங்கு விளைவித்துள்ளாரென்பது தெளிவாகிறது.

நமது ஊரில் குறுவை பயிரிட்டுப் பெரும்பாலும் 75 கிலோ கொண்ட மூட்டை 12 அல்லது 15 தான் எடுக்கின்றோம். ஆனால், திரு நாராயணசாமி அவர்கள் 75 கிலோ கொண்ட மூட்டை 83-க்கு மேல் விளைவித்துள்ளார். அவரைப்போல் நாமும் பயிரிட்டால், அதே அளவு மகசூல் எடுக்க முடியாதா? சிந்தித்துப் பாருங்கள்! திரு நாராயணசாமியைப் போல் 6 மடங்கு விளைவிக்க முடியாவிட்டாலும் அதில் பாதியளவாவது—அதாவது 3 மடங்கேனும் விளைவிக்கலாமல்லவா? இந்த ஆண்டு குறுவைப்பட்டத்தில் நம்ஊரிலுள்ள எல்லா உழவர் பெருமக்களும், ஐ. ஆர். 8 நெல்லைத்தான் பயிரிடவேண்டும். அப்பொழுதுதான் ஏழை உழவர்களான நாமெல்லாம், வறுமையின் பிடியில் சிக்காமல் பசியின்றி வாழவும் வருவாயைப் பெருக்கிக்கொண்டு வளமாக வாழவும் முடியும்.

இதுபற்றிச் சிந்தித்து முடிவு எடுக்கவே இந்தக் கூட்டத்தைக் கூட்டினேன். உங்களுக்கெல்லாம் ஐ.ஆர். 8 நெல் பற்றிய விளக்க மளிப்பதற்காகவே நமது ஊராட்சி ஒன்றிய வேளாண்மை வளர்ச்சி அலுவலரும், கிராம சேவகரும் வந்துள்ளார்கள். அவர்களிடம் உங்ளுடைய சந்தேகங்களை எல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இரவு நேரத்திலே எண்ணெய்விளக்கின் வெளிச்சத்திலே நடைபெறும் இந்தக் கூட்டத்திற்கு எல்லாரும் திரண்டு வந்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைவதுடன், என் வேண்டுகோளுக்கிணங்க வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் வருக, வருக, என்று வரவேற்கின்றேன். இந்தக் கூட்டத்திற்கு நமது ஊர் பெருநிலக்கிழார் திரு ஆறுமுகம் அவர்களைத் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்" என்று ஊராட்சி மன்றத் தலைவர் கரிகாலன் கூறினார்.

பெருநிலக்கிழார் ஆறுமுகம் எழுந்து, "ஐ. ஆர். 8 நெல் அதிகமாக மகசூல் கொடுக்குமென்று நானும் கேள்விப்பட்டேன். பத்திரிகைகளில் கூடப் பார்த்தேன். ஆனால், ஐ. ஆர். 8 நெல்பயிரிட அதிகச்செலவாகும்; பூச்சி நோய் அதிகமாகத் தாக்கும்; செலவுக்கு ஏற்ப வருவாய் இருக்காது; தொடர்ந்து பயிரிட்டால் நிலத்தின் சத்து குறைந்துவிடும் என்றெல்லாம் சில பெரியவர்கள் குறிப்பிட்டார்கள். அதைக் கேட்ட பின்பு, ஐ. ஆர் 8 பற்றியே நான் நினைத்ததில்லை. ஐ. ஆர். 8 பயிரிட்டு அதிக மகசூல் எடுக்க வேண்டுமென்ற ஆசை இருந்தாலும், எங்கே நட்டமடைந்துவிடுவோமோ எனற அச்சம் இருக்கிறது. இந்த சந்தேகங்களை எல்லாம் எங்களுக்குத் தெளிவாக விளக்கிக் கூறுமாறு நமது வேளாண்மை வளர்ச்சி அலுவலரைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறி அமர்ந்தார்.

வேளாண்மை வளர்ச்சி அலுவலர் திரு பாண்டியன் அவர்கள், "தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போன்ற சந்தேகங்கள் உங்களுக்கு மட்டுமல்ல, தமிழகத்தின் பல ஊர்களில் உள்ளவர்களுக்கும் முன்பு இருந்தன. ஆனால், ஒருதடவை பயிரிட்டுப் பார்த்தபின்பு, அவர்ளுக்கெல்லாம் சந்தேகம் தெளிவாகி, உண்மை புரிந்து, மீண்டும் மீண்டும் ஐ. ஆர். 8 நெல்லையே பயிரிட்டு வருகின்றனர்.

"1967-68-ஆம் ஆண்டில் 12,465 ஏக்கரில் மட்டுமே தமிழ் நாட்டில் ஐ. ஆர். 8 நெல் பயிரிடப்பட்டது. ஆனால் சென்ற ஆண்டில் அதாவது 1970-71-ஆம் ஆண்டில் ஏறத்தாழ 20 இலட்சம் ஏக்கரில் ஐ. ஆர். 8 நெல் பயிரிடப்பட்டுள்ளது. தலைவர் அவர்கள் குறிப்பிட்டதெல்லாம் உண்மையாக இருக்குமானால் 4 ஆண்டுக் காலத்தில் ஐ. ஆர். 8 நெல் இவ்வளவு பரப்பில் பரவியிருக்குமா, இந்த ஆண்டில் 30 இலட்சம் ஏக்கரில் ஐ. ஆர். 8, மற்றும் அதைத் தழுவிய ரகங்களைப் பயிரிடத் திட்டமிடப் பட்டிருக்குமா, என்பதைச்சிந்தித்துப் பாருங்கள். இவ்வாறு பரவியுள்ளதிலிருந்தே மேற்கூறிய ஐ. ஆர். 8 பற்றிய குற்றச்சாட்டுகள் முழுக்க முழுக்க உண்மையல்ல என்று கூறிவிடலாம்! ஆயினும் உங்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டுமென்பதற்காகச் சற்றுத் தெளிவாகவே விளக்கிக் கூற விரும்புகிறேன்.

ஐ. ஆர். 8 நெல் சாகுபடி செய்யச் செலவு அதிகம் என்பது உண்மைதான் எனினும், அதிலிருந்து கிடைக்கும் மகசூலைக் கணக்கிட்டுப் பார்த்தால் நிகர லாபம் அதிகமாகவே இருக்கும். நாடு இன்று உள்ள நிலைமையில் ஒவ்வொரு உழவர் பெருமகனும் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டியது அவசியமாகும். உள்ளூர் இனங்களைப் பயிரிட்டுக் கிடைக்கும் மகசூலைவிட, ஐ.ஆர். 8 பயிரிட்டு அதிக மகசூல் எடுப்பது நாட்டிற்குச் செய்யும் நல்ல தொண்டாக அமையும். அதிகச் செலவு செய்வதற்கு ஏற்ப அதிக மகசூலும், இலாபமும் கிடைக்கும் என்பதில் ஐயமே வேண்டாம்.

"யானை விற்றால் தான் யானை
அளவு பணம் கிடைக்கும்,
பானை விற்றால் பானை
அளவு பணம்தான் கிடைக்கும்"

என்பது பழமொழி. அப்பழமொழி ஐ. ஆர். 8 நெல்லிற்கு மிகவும் பொருந்தும். யானையைப் பராமரிக்கும் செலவும் அதிகம். யானையை விற்பதனால் கிடைக்கும் வருமானமும் அதிகம். அதுபோல் ஐ.ஆர். 8 நெல் பயிரிடச் செலவும் அதிகம். அது கொடுக்கும் வருமானமும் அதிகமே. எனவே ஐ.ஆர். 8 பயிரிட்டுப் பெரும் லாபம் அடையுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்து, பூச்சி நோய் அதிகமாகத் தாக்குகிறது என்றார். தற்பொழுது எல்லா வகை நெல்லிலும்மே பூச்சி நோய் தாக்குகிறது. இதற்கு இயற்கை மாறுபாடுகளும், ஒன்றுக்கு மேற்பட்ட சாகுபடியைத் தொடர்ந்து செய்வதும், உயர் விளைச்சல் ரகங்களுக்கு அதிக அளவு இரசாயன உரமிடுவதுமே காரணங்களாகும். சாதாரண நெல்லிற்கும் நாற்றங்காலில் ஒருமுறையும், நட்டபின் 2 அல்லது 3 முறையும் மருந்து தெளிக்கும்படி ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஐ.ஆர். 8 நெல்லிற்கு அதிகமாக 2 தடவை அதாவது மொத்தம் 5 தடவை மருந்து தெளிக்க வேண்டியுள்ளது. இரண்டு தடவை கூடுதலாக மருந்து தெளிக்க ஆகும் செலவையும், அதனால் கிடைக்கும் அதிக மகசூலையும் கணக்கிட்டுப் பார்த்தால், 2 தடவை அதிகமாக மருந்து தெளிப்பதனால் நிகர லாபம் பெருகுவது புலனாகும். நாங்கள் கூறும் பருவத்திலும், முறையிலும் பயிரிட்டால் பூச்சி, நோய் தாக்குதலைக் குறைக்க முடியும். எனவே பூச்சியும் நோயும் அதிகமாக ஐ.ஆர். 8 நெல்லைத் தாக்கும் என்பதை நம்ப வேண்டாம்; அது பற்றி அஞ்ச வேண்டாம் என்று கூறிக்கொள்கின்றேன்.

ஐ. ஆர். 8 நெல்லைத் தொடர்ந்து பயிரிட்டால் நிலத்தில் சத்துக் குறைந்துவிடும் என்று கூறுவதும் பொருத்தமற்றது.

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பவானியில் திரு மகாலிங்கம் என்ற உழவர் பெருமகன், யூ. எஸ். ஏ. ஐ. டி. ( U. S. A. I. D. ) திட்ட அலுவலர்களின் மேற்பார்வையில் ஐ.ஆர். 8 நெல்லைத் தொடர்ந்து மூன்று முறை பயிரிட்டு முதல் தடவை ஏக்கருக்கு 3,820 கிலோவும், இரண்டாம் தடவை 4,602 கிலோவும், மூன்றும் தடவை 4,847 கிலோவும் பெற்றுள்ளார். 13½ மாதத்தில், ஒரு ஏக்கர் நிலத்தில் 13,269 கிலோ நெல் விளைவித்துள்ளார். அதாவது மாதம் ஒன்றுக்கு 1 டன் விளைச்சல் பெறமுடியும் என்று கூறி ஐ.ஆர் 8 நெல் பயிரிடுமாறு யு. எஸ்.ஏ. ஐ.டி. திட்ட நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.

அதுபோலவே கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரி நன்செய் நிலத்தில் 16—2—68 முதல் 28—5—70 வரை தொடர்ந்து 6 முறை பயிரிட்டு வந்துள்ளனர். அதிலிருந்து முதல்தடவை ஏக்கருக்கு 2,904 கிலோவும், ஆருவது தடவை ஏக்கருக்கு 3,158 கிலோ மகசூலும், சராசரியாக ஒவ்வொரு முறையும் ஏக்கருக்கு 3,046 கிலோ மகசூல் கிடைக்கும் என்பதும் தெளிவாகியுள்ளது.

ஐ. ஆர். 8 நெல்லைத் தொடர்ந்து பயிரிடுவதால் மகசூல் குறைந்துவிடும் அல்லது நிலம் வளமற்றுவிடும் என்று அஞ்சவேண்டாம். வேளாண்மைத்துறை பரிந்துரைக்கும் அளவு இரசாயன உரங்களை மட்டும் தவருமல் இட வேண்டியது மிகவும் முக்கியம். எனவே ஐ.ஆர். 8 நெல்லைப் பயிரிடுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன் '' என்ருர்.

உடனே ஒருவர் எழுந்து, '' ஐ. ஆர். 8 அரிசி பெரியது ; சாப்பாட்டிற்கு ஏற்றதல்ல என்கிருர்களே அது உண்மையா ?'' என்ருர்.

ஐ. ஆர். 8 அரிசியை விடப் பெரிதாக உள்ள முரட்டு கார் ரகங்களையும் பல்லாயிரக் கணக்கான மக்கள் தமிழ்நாட்டில் சாப்பிட்டு வருகிருர்கள். சில ஊர்களில் போடப்படும் சாப்பாட்டைப் பார்த்தால் ஒவ்வொரு சோறும் கொட்டை முத்து அளவுக்கு இருக்கிறது. அதையே விரும்பிச் சாப்பிடுபவர்களும் இல்லாமல் இல்லை. கேரளா போன்ற வேறு சில மாநிலங்களில் ஐ. ஆர். 8 அரிசியை விடக் கனபரிமாணம் அதிகமாக உள்ள அரிசியைப் பெரும்பாலோர் சாப்பிட்டு வருகிருர்கள். எனவே. ஐ.ஆர். 8 அரிசி பெரியது என்று கூறுவது பொருத்தமற்ற வாதமேயாகும். பெரியதாக இருக்கிறது என்பதற்காக ஐ.ஆர். 8 அரிசிச் சோறு சாப்பிடமாட்டேன் என்று இதுவரை யாரும் சொல்லிச்சாப்பிடாமலே இருந்துவிட்டதற்கும் சான்று இல்லை.

'' ஐ.ஆர். 8 அரிசி சாப்பாட்டிற்கு ஏற்றதல்ல என்பதும் முழுக்க முழுக்கப் பொய்யான கூற்றுத்தான். சாப்பாட்டிற்குத் தகுதியில்லாத அரிசி கொடுக்கும் நெல்லையா அனைத்து நாட்டு நெல் ஆராய்ச்சி நிலையத்தில், பல புகழ் பெற்ற— திறமை வாய்ந்த நிபுணர்கள் கூடி உருவாக்கியிருப்பார்கள் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சாப்பாட்டிற்குத் தகுதியில்லாத அரிசியையா பிலிப்பைன்சு, வியட்நாம், மலேயா, சிங்கப்பூர், இலங்கை இன்னும் பல நாடுகளில் உள்ள மக்கள் சாப்பிடுகிருர்கள் என்று யோசித்துப் பாருங்கள். சாப்பிடத் தகுதியில்லாத அரிசியைக் கொடுக்கும் ஐ. ஆர். 8 நெல்லையா வியட்நாம் மக்கள் '' தாங்க் நாங்க்'' அதாவது வேளாண்மைத் தெய்வத்தின் அமுதம் (Food of Agriculture God) என்று புகழ்ந்திருப்பார்கள்! ஆராய்ந்து பாருங்கள்.

நாக்கு ருசி ஒன்றையே கருதுபவர்களுக்கு வேண்டுமாஞல் கிச்சிலி அரிசியும், சீரகச் சம்பாவும் பாகமதியும் தேவைப்படுமே ஒழிய, நாளொன்றுக்கு ஒரு வேளை கூட முழு அளவு சாப்பாடு கிடைக்காமல் வாடி வதங்கும் ஏழைகளுக்கு எந்த அரிசியும் ஒன்றுதான்.

'' பாடாத தேனீக்கள், பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ ?'' என்று கேட்டார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். ' இல்லை ' என்றுதான் பதில் சொல்ல வேண்டியுள்ளது.

பசித்திடும்வயிற்றுக்குச் சோறுதான் வேண்டுமே ஒழிய, அது சிறிய சோருே அல்லது பெரிய சோருே என்பது முக்கியமல்ல. அதுவும் ஐ.ஆர். 8 சோறு புரதச் சத்து நிறைந்த சோறு என்பதை மறந்து விடாதீர்கள்! எனவே ஐ. ஆர். 8 பயிரிட உடனே விரைந்து செயல்படுங்கள் '' என்ருர் பாண்டியன்.

'' இதுவரை நீங்கள் கூறிய விளக்கத்தைக் கேட்டதும், ஐ. ஆர். 8 நெல் பயிரிடுவதைத் தடுத்து வந்த எனக்கே, ஐ.ஆர். 8 பயிரிட வேண்டும் என்ற ஆசை தோன்றிவிட்டது. வருகிற குறுவையில் ஐ.ஆர். 8 தவிர வேறு நெல்லைப் போடமாட்டேன். இது உறுதி. நான் எப்படிச் செய்கின்றேனே அது போலவே இந்த ஊர் உழவர்கள் அனைவரும் செய்வார்கள். எனவே தயவுசெய்து ஐ.ஆர். 8 நெல் பற்றியும், அதைப் பயிரிடும் முறை பற்றியும் விளக்கிச் சொல்லி விடுங்கள் '' என்று கேட்டார் தலைவர் ஆறுமுகம்.

'' தலைவர் கூறியது போல் நாங்கள் அனைவருமே குறுவையில் ஐ.ஆர். 8 நெல் பயிரிடுகிருேம் ; ஐ.ஆர். 8 நெல் சாகுபடி முறைகளைக் கூறுங்கள் '' என்று உழவர் பெருமக்கள் அனைவரும் சொல்லி வைத்தாற்போல் ஒரே நேரத்தில் கேட்டுக் கொண்டனர்.





ஐ. ஆர். 8 என்ற நெல் பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள அனைத்து நாட்டு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் (International Rice Research Institute) கண்டுபிடிக்கப்பட்ட ரகமாகும். ' டெய்வான் ' நாட்டில் பயிரிடும் குட்டை ரக நெல்லை '' டி-ஜியோ-வோ-ஜென் '' என்பதுடன், '' பீடா '' என்ற உயரமாக வளரும் பிலிப்பைன்ஸ் நாட்டு நெல் வகையை மகரந்தச் சேர்க்கை மூலம் ஒட்டுச் சேர்த்து (hybridisation) கண்டு பிடிக்கப்பட்டதே ஐ.ஆர். 8 நெல்.

## ஐ.ஆர். 8 நெல்லின் குணங்கள்

மூர்த்தி சிறியதானுலும் கீர்த்தி பெரியது '' என்பது போல் ஐ.ஆர். 8 நெல் குட்டையாக இருந்தாலும், அது அதிக மகசூல் அளிக்கக்கூடியது என்ற பெருமை பெற்றுள்ளது. இது 105 சென்டி மீட்டர் அல்லது 39 அங்குல உயரமே வளரக் கூடியது. பயிரின் தண்டு உறுதியானது. மழையிலும், காற்றிலும் கூடப் பயிர் சாய்ந்து விடாத தன்மை உடையது.

இதனுடைய வயது 130 முதல் 135 நாட்களேயாகும்.

அதிக அளவு த்ழைச்சத்தைக் கிரகித்துக் கொண்டு அதற்கேற்ப, அதிக மகசூல் கொடுக்கும் ஆற்றல் உள்ளது. ஏக்கருக்கு 75 கிலோ வரை தழைச்சத்தை இடலாம். அதே அளவு தழைச்சத்தை நம் உள்ளூர் ரகங்களுக்கு இட்டால் பயிர் வளர்ந்து பூ பூப்பதற்குமுன்பே கீழே விழுந்து சேதமடையும். எனவே ஐ. ஆர். 8 இவ்வகையில் தனித்தன்மை வாய்ந்தது.

நாற்றுகள் உறுதியாகவும், விரைவாகவும் வளரும்.

நெல் சிறிது பருமனுகவும், அரிசி வெள்ளையாகவும் இருக்கும். சோறு வெண்மையாகவும், சுவையாகவும் இருக்கும்.

அறுவடைக்குப் பின் உடனே நெல் முளைக்காது. 3 வாரங்களுக்குப் பின்ஞல்தான் முளைக்கும். நம் உள்ளூர் ரகங்கள் அறுவடைச் சமயத்தில் மழை பெய்து தண்ணீர் தேங்கி நின்ருல் சாய்ந்து கிடக்கும் கதிர்களில் உள்ள நெல் மணிகள் முளைத்துவிடும். மழையின் காரணமாக ஒரு வாரம் வரைக்கும் நெல் அடிக்க முடியாமல் கட்டுகளாகவே வைக்கப்பட்டிருந்தால், நம் உள்ளூர் ரகங்கள் முளைத்துவிடும். ஆனல் ஐ.ஆர். 8 முளைக்காது.



உள்ளூர் ரகங்களின் கதிர்களில் இருந்து நெல்மணிகள் உதிர்ந்துவிடும். ஆஞல் ஐ.ஆர். 8 அவ்வளவு எளிதாக உதிராது.

நெல்லை அரைக்கும்பொழுது அரிசி சிறிது உடைந்துவிடும். 'பேக்டீரியல் பிளைட் ' என்னும் இலைக்கருகல் நோய் தாக்கும். இவ்விரண்டு குறைபாடுகளே ஐ. ஆர். 8 நெல்லில் உள்ளன.

இதுவரை பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள அனைத்து நாட்டு நெல் ஆராய்ச்சிப் பண்ணையில் சோதனை செய்த நெல் வகைகளில் ஐ.ஆர். 8 ரகமே அதிக அளவு மகசூல் கொடுத்துள்ளது. எனவேதான் இதற்கு '' அதிசய நெல் '' (Wonder Rice) என்ற பெயரைக் கொடுத்திருக்கிருர்கள்.

இத்தகைய பெருமை பெற்ற ஐ. ஆர். 8 நெல்லை வேளாண்மைத்துறை பரிந்துரைக்கும் முறையில் சாகுபடி செய்வீர்களேயானுல், நீங்களும் பெருமகசூல் பெற்றுப் பெரு லாபம் அடைந்து பெரு வாழ்வு வாழலாம்.

அடுத்து ஐ. ஆர். 8 நெல் பற்றிய சாகுபடி முறைகளைச் சுருக்கமாக விளக்குகின்றேன். ஐ. ஆர். 8 பயிரிட முன்வரும் ஒவ்வொருவருக்கும் சாகுபடிக் குறிப்புகள் பற்றிய முழு விவரங்களும் அடங்கிய சிறு புத்தகத்தை இலவசமாக அளிக்கின்றேன். அத்துடன் அவ்வப்போது உங்களைச் சந்தித்து ஐ. ஆர். 8 சாகுபடி பற்றிய விளக்கங்களை நானும், கிராம சேவகரும் அளிக்கின்ருேம். எனவே இப்பொழுது சுருக்கமாகவே தெரிவிக்கின்றேன்.

## சாகுபடி முறைகள்

தமிழ்நாட்டில் ஐ. ஆர். 8 நெல்லை கார், சொர்ணவாரி பருவத்திலும், (மே முதல் செப்டம்பர் வரை) நவரைப் பருவத்திலும் (ஜனவரி முதல் மே வரை) பயிரிடலாம். கீழ் பவானி, அமராவதி புதிய பாசனப் பகுதிகளில் சம்பா பருவத்தில் (ஆகஸ்ட்டு முதல் டிசம்பர் வரை) பயிரிடலாம். மிகுந்த கவனத்துடன், முன்னெச்சரிக்கையுடன் சாகுபடி செய்வதென்ருல் ஆண்டு முழுவதுமே ஐ. ஆர். 8 நெல்லைப் பயிரிடலாம்.

ஒரு ஏக்கர் நடவுசெய்ய 18 கிலோ விதையை 12 சென்ட் நாற்றங்காலில் விதைக்க வேண்டும்.

ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் கரிம பாதரசக் கலவை மருந்து அல்லது டீ.எம்.டீ.டி. (T.M.T.D.) என்ற மருந்து விதையுடன் சேர்த்து விதையுடன் மருந்து கலக்கும் கருவியில் இட்டு (Seed treating drum) விதையுடன் மருந்து நன்கு கலக்கும்படிச் செய்ய வேண்டும். அதன் பின் விதையை முளை கட்ட வேண்டும்.

போட வேண்டும் என்று சொல்கிறீர்களே அது உண்மையா ?'' என்று கேட்டார் ராமசாமி என்ற ஊராட்சி மன்ற உறுப்பினர்.

'' பேக்டீரியல் பிளைட் '' என்னும் நோயால் தாக்கப்பட்ட நெற்பயிரிலிருந்து கிடைத்த விதைகளை நாற்று விடுவதற்குப் பயன்படுத்தினால் மட்டுமே வெந்நீர்ச் சிகிச்சை செய்ய வேண்டும். வெந்நீர்ச் சிகிச்சை செய்வது சற்றுக் கடினமானது. கவனமாகச் செய்ய வேண்டும். உங்களுக்கு நல்ல தரமான விதைகளைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கின்றேன். நீங்கள் வெந்நீர்ச் சிகிச்சை செய்ய வேண்டாம். தேவைப்பட்டால் கிராம சேவகரே அதைச் செய்து கொடுப்பார். அது பற்றிய கவலை வேண்டாம்.

நாற்றங்கால் அமைப்பது பற்றி நாங்களே செய்து காட்டுகிறோம். இரும்புக் கலப்பையால் நடவு வயலை நன்கு உழுது பண்படுத்த வேண்டும். ஏக்கருக்கு 2,300 கிலோ தழை அல்லது 10 வண்டி தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு போட வேண்டும்.

கடைசி உழவில் 35 கிலோ மணிச்சத்து அளிக்க 220 கிலோ சூப்பர் பாஸ்பேட்டையும், 35 கிலோ சாம்பல் சத்து அளிக்க 60 கிலோ மூரியேட் ஆப் பொட்டாசையும் அடி உரமாக இடவேண்டும்.

நடுவதற்கு முன்பு 45 கிலோ தழைச்சத்து அளிக்க 225 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 100 கிலோ யூரியாவைப் போடவும்.

நாற்றுவிட்ட 26 முதல் 28 நாட்களில் நாற்றை நட்டுவிட வேண்டும். நாற்றுகளை வரிசைக்கு வரிசை 20 சென்டி மீட்டர் (8 அங்குலம்), வரிசையில் பயிருக்குப் பயிர் 10 சென்டி மீட்டர் (4 அங்குலம்) இடைவெளி விட்டு, குழிக்கு 2 பயிர் வைத்து நடவுசெய்ய வேண்டும்.

நடவுசெய்த 15-ஆம் நாள் ஊடு உழவுக் கருவியால்



( Inter cultivator ) முதல் களை எடுத்து மருந்து தெளிக்க வேண்டும்.

'' களையெடுத்த பின்புதான் மருந்து தெளிக்க வேண்டுமா ?'' என்றார் ஆறுமுகம்.

'' எண்ணெய் தேய்த்துக் கொண்டு கறி சாப்பிடுகிறீர்களே அதுபோல் களையெடுத்து விட்டு மருந்து தெளிப்பது நல்லது '' என்றார் பாண்டியன்.

எல்லாரும் சிரித்தனர்.

நடவுசெய்த 21-ஆம் நாள் 15 கிலோ தழைச்சத்து அளிக்க 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 33 கிலோ யூரியாவைப் பயிர் வரிசைகளுக்கு இடையில் மேலுரமாகத் தூவ வேண்டும்.

நடவுசெய்த 30-ஆம் நாள் 2-ஆம் முறை மருந்து தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 40-ஆம் நாள் 2-ஆம் முறை களையெடுக்க வேண்டும்.

3-ஆம் முறை மருந்து தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 49 முதல் 54 நாட்களுக்குள் (பூ உருவாகும் சமயத்தில்) 15 கிலோ தழைச் சத்து அளிக்க 75 கிலோ அமோனியா சல்பேட் அல்லது 33 கிலோ யூரியாவை இரண்டாம் தடவையாக மேலுரமாக இடவேண்டும்.

தொண்டைப் பூவாக இருக்கும் சமயத்தில் 4-ஆம் முறை மருந்து தெளிக்க வேண்டும்.

நெற்பூவில் பால்பிடிக்கும் சமயத்தில் பி.எச்.சி. மருந்துத் தூளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவ வேண்டும்.

மருந்து கலப்பது, தெளிப்பது பற்றிய முழு விவரங்களையும் பின்பு ஒரு நாள் செய்து காட்டுகிறோம். அப்பொழுதுதான் உங்களுக்கு எளிதில் புரியும்.

இவ்வாறு முறைப்படி சாகுபடி செய்தால், நிச்சயமாக நீங்களும் ஐ. ஆர். 8 நெல் பயிரிட்டு அதிக மகசூல் பெறலாம். எனவே ஐ. ஆர். 8 பயிரிட முன் வாருங்கள் என்று உங்கள் அனைவரையும் மீண்டும் கேட்டுக் கொள்கின்றேன் '' என்று கூறி அமர்ந்தார் பாண்டியன்.

அடுத்து கிராமசேவகர் சேரலாதன் எழுந்து, '' ஐ. ஆர். 8 நெல் சாகுபடி செய்வதற்குத் தேவையான விதைகளையும், பூச்சி, பூஞ்சாள மருந்துகளையும் ஜீப்பில் கொண்டு வந்து உங்கள் ஊரிலேயே கொடுத்து விடுகின்றோம். இரசாயன உரம் வாங்கக் கடன் தேவைப்பட்டவர்கள் நாளையே மனு எழுதிக் கொடுத்தால், இன்னும் ஒரு வாரத்திற்குள்ளாகவே தீவிர உரக்கடன் திட்டத்தின் கீழ் கடன் கிடைக்க ஏற்பாடு செய்து விடுகின்றோம். உங்களுக்கு எல்லா உதவிகளையும் எப்பொழுதும் செய்ய நமது ஊராட்சி ஒன்றிய ஆணையாளரும், வேளாண்மை வளர்ச்சி அலுவலரும், நானும் காத்திருக்கின்றோம். எங்களது இலட்சியமெல்லாம் நீங்கள் அனைவரும் ஐ.ஆர். 8 நெல் பயி



ரிட்டு முன்னேற வேண்டும் என்பதுதான். ஆனால் ஒரே ஒரு நிபந்தனை ! நாங்கள் கூறும் முறைப்படியும், குறிப்பிட்ட காலத்திலும் ஒவ்வொரு சாகுபடி வேலையையும் தவறாமல் செய்ய வேண்டும் '' என்று கூறி முடித்தார்.




'' இன்றுதான் நம் ஊர் உழவர்களுக்கு எல்லாம் நல்ல காலம் பிறந்திருக்கிறது என்று நினைக்கின்றேன். அதற்கு அடையாளமாக, இன்னும்



கொஞ்ச நேரத்திலேயே மழை வந்துவிடும் என்று நினைக்கின்றேன். நல்ல காலம் பிறப்பதற்கு மூவேந்தர்களும் நமக்கு உதவி செய்துள்ளார்கள். மூவேந்தர் என்று யாரைக் குறிப்பிடுகின்றேன் என்று புரியவில்லையல்லவா உங்களுக்கு? நம்ம ஊராட்சி மன்றத் தலைவர் கரிகாலன், வேளாண்மை வளர்ச்சி அலுவலர் பாண்டியன், கிராம சேவகர் சேரலாதன் ஆகியவர்களையே குறிப்பிடுகின்றேன். அவர்களுக்கு நம் அனைவரின் சார்பாகவும் நன்றியைக் கூறிக் கொள்வதுடன்,

கட்டுக்கலங்காண கதிர் உழக்கு நெற்காண எட்டுத்திக்கும் பயிரிடுவோம் ஐ. ஆர். எட்டு என்று உறுதி கூறுவோம் '' என்றார் தலைவர் ஆறுமுகம். எல்லாரும் அவர் கூறியது போல் கூறினார்கள். முழக்கம் பேரொலியாகக் கிளம்பியது. அதே நேரத்தில் மழையும் பொழிய ஆரம்பித்து விட்டது. உறுதியோடு கூட்டம் கலைந்தது.


# காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கலைமிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற வடுக்களை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந்திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.
மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய '[illegible]' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ !

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB






# பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காக

தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம் வாரி வழங்கிடும் ஏராளப் பரிசுகள்! மொத்தப் பரிசுத் தொகை:

**38 லட்சம் ரூபாய். 3333 பரிசுகள்!**

ஜூன் 3ல் முதல்வர் பிறந்த நாளில் 33-வது குலுக்கல் துவக்கம்

சிறப்புப் பரிசுகள்: ஒரு முதற் பரிசு 10 லட்சம் ரூபாய்

- ஒரு இரண்டாவது பரிசு 2 லட்சம் ரூபாய் • ஒரு மூன்றாவது பரிசு 1 லட்சம் ரூபாய்
- 30 நான்காவது பரிசுகள் (ஒவ்வொன்றும் பத்தாயிரம் ரூபாய்) ... 3 லட்சம் ரூபாய்



100 பேருக்கு ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் 5000 ரூபாய்
100 பேருக்கு ஆறாவது பரிசுகள் ஒவ்வொன்றும் 3000 ரூபாய்
100 பேருக்கு ஏழாவது பரிசுகள் ஒவ்வொன்றும் 2000 ரூபாய்
1000 பேருக்கு எட்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் 1000 ரூபாய்
2000 பேருக்கு ஒன்பதாவது பரிசுகள் ஒவ்வொன்றும் 100 ரூபாய்

**துவக்கம் ஜூன் 3 குலுக்கல்: 12-7-1971**

*இதுவரை தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம் உருவாக்கிய லட்சாதிபதிகள் எண்ணிக்கை: 245*

வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9.
10 வரிசைகள் வெளியிடப்பட்டது
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: இயக்குநர், தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு, சென்னை-2

10 வரிசைகள்
இவ்வளவு பரிசுகளுக்கும்
உரிய சீட்டு
ஒன்றின் விலை ரூ. 1/- தான்

செலவு ஒரு ரூபாய்



வரவோ பல லட்ச ரூபாய்


# பார்வையற்றவர்க்கும் பயனுள்ள வாழ்வு

காணார்!

கேளார்!

கால் முடம்பட்டோர்!

பேணுநர் இல்லோர்!

ஆகியவர்களில் பெரும்பாலோர் 'பிச்சை எடுப்பது ஒன்றுதான் பிழைப்புக்கு வழி' என்று கருதுகிறார்கள்.

ஆனால் பிச்சை எடுப்பவர்களில் பெரும்பாலோராய் உள்ள காணார் (Blind) காண்பவர்க்கும் வழிகாட்ட முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார் திரு சாதன் சந்தர குப்தா.

கல்கத்தாவில் உள்ள பார்வையை இழந்த திரு சாதன் சந்தர குப்தா சமுதாயத்திலே மேன்மையான நிலைமைக்கு உயர்ந்திருப்பதை நோக்கும்பொழுது பார்வையில்லாத குறை அவருடைய வளர்ச்சியைத் தடை செய்துவிடவில்லை என்பது புலனாகின்றது.

பார்வையற்ற அவர் *1934*-ஆம் ஆண்டில் 'மெட்ரிகுலேஷன்' தேர்வு எழுதி நான்கு பாடங்களில் உயர்ந்த நிலையில் (Distinctions) தேர்ச்சி பெற்றுள்ளார். *1936*-ஆம் ஆண்டில் இடைநிலைத் தேர்வு (Intermediate Examination) எழுதித் தேர்ச்சி அடைந்துள்ளார். *1938*-ஆம் ஆண்டில் 'ஆனர்ஸ்' பட்டதாரியானார். அதன் பின் எம். ஏ., எல். எல். பி. தேர்வுகளில் வெற்றி பெற்று சட்ட நிபுணராக (Barrister-at-law) ஆனார். அவர், பாராளு மன்ற உறுப்பினராகவும் சில ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். இவ்வாறு தனக்கென ஓர் ஒப்பற்ற நிலைமையை இந்த நாட்டில் உருவாக்கிவிட்டார்.

அவரது வாழ்க்கை, 'பார்வை இழந்தவர்களுக்குத் தகுந்த வாய்ப்பளித்தால் அவர்களால் பார்வை உள்ளவர்களுக்கும் நல்ல வழி காட்ட முடியும்' என்பதைத் தெளிவாக்குகிறது. வியப்புக்குரிய அவரது வாழ்க்கை வரலாறு, கல்வி கற்கும் வயதில் இந்தியாவில் உள்ள *15,00,000* பார்வை இழந்தவர்களைப் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்பாததனால் இந்திய நாட்டிற்கு ஏற்பட்டுள்ள நிலையான ஆற்றல் இழப்பைக் காட்டும் கருவியாக அமைந்துள்ளது.

பார்வை இழந்தவர்களுக்கு அளிக்கப்படும் மேற்படிப்பு—விதிவிலக்காக அவர்கள் தனி ஆற்றல் பெற்றவர்களாக இல்லாவிட்டால்-அதிகப் பயனளிக்காது என்பதும் உண்மை. ஆனால், அவர்களுக்குக் கைத்தொழில் கற்றுக் கொடுப்பது, அவர்களுடைய பிழைப்புக்கு வழி செய்து கொடுத்து வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கும் சிறந்த வழியாக அமையும். கூடைகள், கயறு விரிப்புகள், தூரிகைகள், பாய்கள், பிரம்பு நாற்காலிகள் ஆகியவைகளைச் செய்தல், செருப்புகளைச் செப்பனிடுதல், ஆடைகளில் பூவேலைப்பாடு செய்தல், கைத்தறி ஆடை நெய்தல், நாற்காலிகளில் மீண்டும் பிரம்பு களினால் பின்னுதல் போன்ற கைத்தொழில்களை அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பது நல்லதோர் பணியாகும்.

## தமிழ்நாடு அரசின் பணி.

வாழும் வகையற்றுச் சமுதாயத்தின் அடித்தளத்திலே வாடி வதங்கும் ஏழை எளியவர்களின் வாழ்வை வளப்படுத்தி ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண முயலும் தமிழ்நாடு அரசு, பார்வை இல்லாதவர்களும் தொழிற்சாலைகளிலே வேலை செய்து சம்பாதித்து வாழ அவர்களுக்குத் தொழிற் பயிற்சி அளிக்கக் கிண்டியில் உள்ள தொழிற்பேட்டையில் ஒரு பட்டறையை நிறுவியுள்ளது. தமிழ் நாடு அரசின் இப்புதிய முயற்சி உண்மையிலேயே ஒரு பெரிய செயல் மட்டுமல்ல; அரிய செயலுமாகும்.

பார்வையற்றவர்களுக்குத் தொழில் பயிற்சி அளிக்கும் அப்பட்டறையின் பராமரிப்புச் செலவுகளைத் தமிழ்நாடு அரசு ஏற்றுவருகிறது. அமெரிக்க அரசு ரூபாய் *2,54,640* மானியம் வழங்கியிருக்கிறது.

கடைசல், துளையிடுதல் ஆகிய வேலைகளுக்கான விசைப் பொறிகள் உள்ள அப்பட்டறையில் சென்ற *3* ஆண்டுகளாக *100* இளைஞர்களுக்கும் மேல் பயிற்சி பெற்றுள்ளனர். அவர்களுள் *38* பேர்களுக்குக் கிண்டியிலும், பிற இடங்களிலும் உள்ள தொழிற்சாலைகளில் வேலை கிடைத்திருக்கிறது.

பார்வையற்றோருக்கான பயிற்சிப் பட்டறையை நடத்துபவர் திரு பி. ஏ. நந்தகோபால் என்பவராவார். நிர்வாகத் திறமைமிருந்த அவர், பூவிருந்தவல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசினர் பயிற்சிப் பள்ளியின் முதல்வர் என்பதும் குறிப்பிடத்தகுந்ததாகும்.

கண் பார்வையற்றவர்கள் தங்கள் கைகளாலேயே வேலை செய்து பிழைப்பதற்கு அமெரிக்காவில் எப்படிப் பயிற்சி அளிக்கின்றார்கள் என்பதை நேரில் சென்று அறியும் வாய்ப்பு அவருக்கு *1967*- ஆம் ஆண்டில் கிடைத்தது. தமிழ்நாட்டில் எந்தெந்தவகை வேலைகள் எளிதாகக் கிடைக்குமோ அவைகளின் அடிப்

படையிலேயே தொழிற் பயிற்சித்திட்டத்தை அவர் அமைத்துள்ளார். அவர் முதல்வராக இருக்கும் பூவிருந்தவல்லி அரசினர் பயிற்சிப் பள்ளியில் 300 மாணவர்கள் பள்ளியிறுதி ஆண்டுத் தேர்வுவரை கற்கிறார்கள். அங்கு பார்வையற்றவர்களுக்கு ஆசிரியர் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. அப்பயிற்சிக்கு ஐ. நா. கல்வி விஞ்ஞான பண்பாட்டுக் கழகம் (யுனெஸ்கோ) உதவி செய்து வருகிறது. அத்துடன் அமெரிக்க அரசின் தொழில் மறுவாழ்விப்பு நிர்வாகமும் பூவிருந்தவல்லியிலுள்ள பயிற்சிப் பள்ளிக்கூடத் திட்டத்துடன் ஒத்துழைக்கிறது.



இண்டியிலுள்ள தொழிற் பேட்டையில் பார்வையற்ற தொழிலாளி ஒருவர் கடைசல் இயந்திரத்தில் வேலை செய்கிறார்.

பார்வையற்றவர்கள் விசைப்பொறி நிலையங்கள், அச்சுக்கூடங்கள், சிப்பம் கட்டும் இடங்கள், சிறிய பொறியியல் கூடங்கள் ஆகியவைகளில் வேலை செய்ய எளிதில் பழகிக் கொள்ளலாம். அவ்வாறு பழகிக் கொண்டால், பார்வையற்றவர்களுக்கு மறுவாழ்வு கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

சிறிய பொறியியல் வேலைகளில் பயிற்சி அளித்துப் பார்வையற்றவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம் இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழ் நாட்டில் நடை பெறுகிறது. இப்பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை கொடுத்து உதவத் தனிப்பட்ட தொழிலதிபர்களும் முன் வந்தால், மேலும் பல பார்வையற்றவர்களுக்குப் பயிற்சியும் மறுவாழ்வும் தமிழ் நாடு அரசால் அளிக்க முடியும்.

## கண் பார்வையற்றவர்களின் கணக்கு.

இவ்வாறு அரசும், தனிப்பட்டவர்களும் கண்பார்வை இழந்தவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க முயன்று வந்த போதிலும் உலகெங்கணும் உள்ள 1,50,00,000 பார்வையிழந்தவர்களின் இருண்ட வாழ்வுக்கு இன்னும் விடிவு காலம் ஏற்படவில்லை. அவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் அதாவது 50 இலட்சம் கண் பார்வை இழந்தவர்கள் இந்தியாவில் இருப்பதாக 1969-ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்திய அரசின் மாதிரி ஆய்வு கூறுகிறது.

நரக வேதனையுடன் கசப்பான வாழ்க்கையை அனுபவித்துவரும் கண் பார்வை இழந்தவர்கள், நாட்டு மக்கட் தொகையில் ஒரு பகுதியினராகவே விளங்குகிறார்கள். இவர்களில் 90 சதம் பேர்களைக் கண் பார்வை இழப்புக்கு ஆளாகாமலேயே மீட்டிருக்க முடியும்; 5 சதம் பேர்களைச் சிகிச்சை செய்து குணப்படுத்தியிருக்க முடியும்; ஆனால் ஏழ்மையும் அறியாமையும் அல்லவா அவர்களை அடிக்கடி அணுகும் பெரும் தரகர்களாக விளங்குகின்றன!

## பார்வையிழப்புக்கான காரணங்கள்.

குழந்தைகளாக இருக்கும் பொழுது ஏற்படும் கண்ணோய், பெரிய அம்மை, மேகநோய், கண் இமைகளின் உட்பகுதியில் தோன்றும் 'டிரகோமா' (trachoma) அல்லது 'கிரனுலர்லிட்ஸ்' (granular lids), வயிற்றுக்குப் பற்றாத சத்தற்ற உணவு, தவறான சிகிச்சைகள், விபத்துகள், காயங்கள், கிட்டப் பார்வை (short sight) கருடப்பார்வை (squint) கண்ணிலே சதைபோல் வளர்ந்து பார்வையை மங்கச் செய்யும் 'கேட்டராக்ட்' (cataract) என்னும் நோய், கண்மணியில் ஏற்படும் அதிக அழுத்தம் காரணமாகக் கண் பார்வையைக் குறைக்கும் 'கிளாகோமா' (glaucoma) என்னும் நோய் ஆகியவைகளே கண் பார்வை இழப்புக்கான முக்கிய காரணங்களாகும்.

பெரும்பாலான கண் பார்வை இழந்தவர்கள் ஏழையாக இருப்பதால் பள்ளிக்கூடம் சென்று பயிலவோ ஏதேனும் ஒரு தொழிலைக் கற்றுக் கொள்ளவோ வாய்ப்பின்றி இருக்கிறார்கள். அவர்களுக்குப் பிச்சை எடுப்பது ஒன்றுதான் வாழ்வுக்குரிய வழியாகத் தோன்றுகிறது. இதனால் நாட்டின் பொருளாதாரத்தில் சீர்குலைவு ஏற்படுகிறது. இந்தியாவில் உள்ள 50 இலட்சம் பார்வை இழந்தவர்களில் 30 சத வீதம் பேர்கள் அதாவது 15,00,000 பேர்கள் கல்வி கற்பதற்குரிய வயதினராகவே உள்ளனர்.

## பார்வையற்றவர்களுக்கான கல்விக்கூடங்கள்.

அவர்களது வாழ்க்கைப் பிரச்சனையைக் கல்வி மூலமாகவே தீர்த்துவைக்க இயலும். ஆனால் இந்தியாவெங்கும் கண்பார்வையிழந்தவர்களுக்குக் கல்வி அளிப்பதற்கென உள்ள பள்ளிக்கூடங்கள் 120தான். அவைகளில்5,000 பேர்களுக்கு மட்டுமே கல்வி கற்பிக்க வசதியுள்ளது.

கண்பார்வைஇழந்தவர்களுக்குக் கல்வி கற்பிப்பதென்பது எளிய செயலல்ல ; நீண்ட காலத்திற்கு மேற்கொள்ள வேண்டியதும் தொல்லை மிகுந்ததுமான செயலாகும். அதற்கு அதிகச் செலவு செய்ய வேண்டியிருப்பதுடன், தனிச் சாதனங்களையும் பயன்படுத்த வேண்டியுள்ளன. இருப்பினும் ஒருசில பள்ளிக்கூடங்களுக்கு அரசு அளிக்கும் மானியம்



மிகவும் குறைவாகவே இருக்கிறது. கண் பார்வை இழந்த குழந்தைகள் ஏழ்மை என்னும் அடித்தளத்திலிருந்தே கல்வி கற்க வருவதாலும், அவர்களால் கல்வி கற்பதற்குரிய கட்டணங்களைச் செலுத்தமுடியாமல் இருப்பதாலும் இப்பள்ளிக்கூடங்களை நடத்த தவிர்க்க முடியாத சங்கடங்களுக்களுக்கு எதிராகப் போராட வேண்டியுள்ளது. மேலும் அப்பள்ளிக் கூடங்களில் நிலவும் பொருளாதாரப் பற்றுக்குறை, பள்ளிக்கூடத் தலைவர்கள் ஆசிரியர்களின் வாழ்வுக்குத் தேவையான கூலியைக் கொடுப்பதையும்தடுக்கிறது.எனவே, அப்பள்ளிக்கூடங்களில் சொற்ப சம்பளத்தை ஏற்றுக் கொள்ளுமாறு ஆசிரியர்கள் வற்புறுத்தப்படுகிறார்கள். பார்வையிழந்தவர்களுக்காக உள்ள பள்ளிக்கூடங்களில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள், சாதாரண பள்ளிக்கூட ஆசிரியர்களின் வேலையைவிட இரண்டு மடங்கு சிக்கலான வேலையை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதன் காரணமாகவும் ஆசிரியர்கள் கிடைப்பதில்லை. இருக்கின்ற ஒரு சில ஆசிரியர்களும் வெறுப்புடனோ அல்லது நிறுவனத்தின் மீது கொண்டுள்ள ஆர்வம் காரணமாகவோ தான் பணியாற்றுகிறார்கள்.

கண் பார்வையற்ற குழந்தைகள் பள்ளிக் கூடங்களில் மற்றுமொரு சங்கடத்தை அனுபவிக்க வேண்டியுள்ளது. ஒரு சில பாடப் புத்தகங்களே 'ப்ரெய்ல்லி' (braille) முறையில் அச்சிடப் பெற்றுள்ளன. எனவே அநேக புத்தகங்கள் சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன .'பாரதி ப்ரெய்ல்லி' (Bharati braille) முறையில் மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

தற்பொழுது இந்தியாவில் ஒரே ஒரு 'ப்ரெய்ல்லி' அச்சகம்தான் உள்ளது. அதுவும் டேராடூனில் உள்ளது. அங்கிருந்து இந்தி மொழியில் ஒரு இதழ் வெளியிடப்படுகிறது. மேலும் இந்திய அரசின் கல்வி அமைச்சகம் டேராடூனில் வயது வந்தவர்கள் பயிற்சி நிலையம் ஒன்றையும் நடத்தி வருகிறது. அந்நிலையம் 1943-ஆம் ஆண்டில் கலோனல் சர் குளுதா மெக்கன்சி (Colonel Sir Clutha Mackenzie) என்ற கண் பார்வையிழந்த முன்னாள் படைவீரரின் வழி காட்டுதலுடன் துவக்கப்பட்டது. சில ஆண்டுகளுக்கு முன்பு, கண் பார்வையிழந்த அயல்நாட்டினருக்கு உதவி செய்யும் அமெரிக்க நிறுவனம் கல்கத்தாவிலுள்ள பார்வை யிழந்தோர் பள்ளிக்கு ஒரு 'ப்ரெய்ல்லி' அச்சகத்தைப் பரிசாக அளித்தது. ஆனால் அது இன்றும் பயன்படுத்தப்படாமலே உள்ளது. இந்திய அரசு டேராடூனில் ஒரு மாதிரி பள்ளிகூடத்தையும்,பெண்கள் பயிற்சிப் பள்ளியையும், 'ப்ரெய்ல்லி' முறையில் அச்சிடப்பெற்ற புத்தகங்களைப் பரப்பும் நூல் நிலையம் ஒன்றையும் அமைக்க விரும்பியுள்ளது; இத்திட்டத்திற்கென ரூபாய் 3,50,000 ஒதுக்கியுள்ளது.

## பார்வையற்றவர்களுக்கு உதவும் சங்கம்.

பார்வை இழந்தவர்களுக்கு உதவி செய்ய முதன் முதலில் ஒருமுகப்படுத்தப்பட்ட நடவடிக்கை எடுத்தது இந்திய அரசு அல்ல ; இந்திய மக்களே என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1952-ஆம் ஆண்டில் பம்பாய் நகரில் அனைத்திந்திய பார்வை இழந்தோர் மாநாடு நடந்தபோதே அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பயனாய் பார்வையிழந்தோர்களுக்கான தேசிய சங்கம் (National Assosiation of the blind) துவக்கப்பட்டது. அதே நேரத்தில் ஒரு குழு 'பார்வையிழந்தோர் வாரவிழா' ஏற்பாடு செய்து பாதுகாவலான பணிமனை (Sheltered workshop) ஒன்று அமைக்க ரூபாய் 1·5 இலட்சம் நிதி திரட்டியது. பார்வை யிழந்தோர்களுக்கான தேசிய சங்கம் பார்வையற்ற தொழிலாளிகளுக்குப்பயிற்சி அளிக்கவும், வேலை அளிக்கவும் பம்பாய் நகரில் 20 பணி மனைகளை அமைத்துள்ளது. அரிமா சங்கத்தினரின் கூட்டுறவுடன் 1970-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29-ஆம் நாள் வயது முதிர்ந்த பார்வையிழந்தோர்களுக்குரிய இல்லத்தை அச்சங்கம் அமைத்துள்ளது. இம்மாதிரி இல்லம் இந்தியாவிலேயே ஒன்றுதான் உள்ளது.

இண்டி தொழிற் பேட்டையில் பார்வையற்றவர் பயிற்சி பெறுகின்றார்.



மேலும் அச்சங்கம் பார்வையிழந்தோர் நல்வாழ்வு (Blind welfare) என்ற இதழை ஆண்டிற்கு மூன்று முறை வெளியிடுகிறது.

பார்வை யிழந்தவர்களுக்கான பள்ளிக்கூடங்களில் ஆண் பெண் இரு பாலர்களும் கல்வி கற்பிக்கப்பட்டு வந்தபோதிலும், அப்பள்ளிகளில் படிக்கும் பெண்களின் தொகை மிக மிகச் சொற்பமாகவே உள்ளது. இந்திய அரசின் 1944-ஆம் ஆண்டின் அறிக்கையின்படி அந்த ஆண்டில் 180 பார்வையிழந்த பெண்கள் மட்டுமே இந்தியாவில் படித்துள்ளனர். அதன் பிறகு கல்வி கற்கும் பார்வையிழந்த பெண்களின் தொகை உயரவே இல்லை. ஒவ்வொரு 100 பார்வையற்ற ஆண்களுக்கும் இந்தியாவில் 111 பார்வையற்ற பெண்கள் உள்ளனர். அப்படி இருந்தும் கல்வி கற்கும் பார்வை

யற்ற பெண்களின் தொகை உயராதது வருத்தத்திற்குரியதே என்றால் மிகையாகாது.

பார்வை அற்றவர்களுக்குரிய கல்வி வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே இருந்தாலும், அவர்களை எதிர்நோக்கியுள்ள தடைகள் அவர்களுக்கு எரிச்சலூட்டுவதாக இருந்தாலும், பார்வையிழந்த மாணவர்கள் சிறந்த முடிவுகளைத் தோற்றுவிக்கின்றனர். பார்வை இழந்தவர்களாலும் இந்த நாட்டின் முன்னேற்றத்திற்குக் குறிப்பிடத் தகுந்த அளவு உதவ முடியும்.

எனவேபார்வையிழந்தவர்களை ஒரு சில தயாளகுணம் படைத்த பெரும் பணக்காரர்களின் உதவியினால் மட்டுமே வாழ்பவர்களாக விட்டுவிடக்கூடாது. ஊனமுற்றவர்கள் பொதுவாகவே நுண்ணறிவு உள்ளவர்கள்.

---

**உண்மையைக் கூறவேண்டும்**

தம்மால் இயலவில்லை என்பதைக் கூறிடுவது தகுதிக்குக் குறைவல்ல! உண்மை நிலையை மறைப்பது நீதி ஆகாது என்ற உணர்வு உடையவர்கள், தம்மால் பணியாற்ற முடியாது போயிற்று என்பதனைக் கூறிடுவர். இவ்வகையினர் மிகச் சிலரே! மிகப் பலருக்கு இத்தகைய இயல்பு ஏற்படாது.

—பேரறிஞர் அண்ணா

---

ஆனால் உணர்ச்சி வயப்பட்டவர்கள். இன்னல்படுவதற்காகவே இவ்வுலகில் வாழ்கின்றோம் என்ற எண்ணத்தைப் போல் வேறு எதுவும் அவர்களைமனவேதனையுற வைக்காது. ஆகவே அத்தகைய எண்ணம் அவர்கள் மனத்தில் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நம் அனைவரின் கடமையுமாகும். தங்களுக்குள்ள ஒருசில வாய்ப்புகளைக்கொண்டே வியக்கத்தக்க சாதனைகளைத் தோற்றுவிக்கக் கூடியவர்கள் அவர்கள். உலகெங்கிலும் உள்ள பார்வையிழந்தவர்களே முதன் முதலில் 'ப்ரெய்ல்லி' என்ற ஒரே மாதிரியான எழுத்துகளைப் பயன்படுத்திவருவதால், 'காணார் காண்பவர்க்கு வழிகாட்ட முடியும்' என்பதற்குச் சான்றாக விளங்குகிறார்கள். அவர்கள் வாழ்வு வளம் பெற நாமும் ஏதாவது உதவ வேண்டாமா ?

## காணாதவர்களுக்குக் கல்வி தரும் கருவி

கண் பார்வை இழந்தவர்களுக்குக் கற்பிப்பதற்குரிய ஒரு புதிய சாதனத்தை ஸ்வீடன் நாட்டிலுள்ள சாப்-ஸ்கேனியா ஏபி (Saab-Scania AB) என்ற நிறுவனம் சமீபத்தில் உருவாக்கியுள்ளது. அச் சாதனம் ஒரு 'எலக்ட்ரானிக்' படம் அச்சிடும் கருவியாகும். அக்கருவி ஆசிரியரால் வரையப்பட்ட சித்திரத்தையோ அல்லது உருவத்தையோ பார்வையிழந்தவர்களும் அறிந்துகொள்ளும் வகையில் மாற்றிக் காட்டும் தன்மையுடையது.

அக்கருவியில் 3 முக்கிய பகுதிகள் உள்ளன. முதல் பகுதி சித்திரம் வரையும் பலவகைப் பகுதியாகும். இதில் படம் வரையும் கை (Drawing arm) பொருத்தப்பட்டிருக்கும். ஆசிரியர் அக்கையைப் படம் வரையும் முழுமைக்கும் நகர்த்தக்கூடிய நிலைமையில் பொருத்தப்பட்டிருக்கும்.

இரண்டாவது பகுதி பார்வையிழந்தவர்கள் படிக்கும் பகுதியாகும். அதில் தடிப்பான காகிதம் ஒன்று பொருத்தப்பட்டிருக்கும். சித்திரம் வரையும் பகுதியிலிருந்து 'எலக்ட்ரானிக்' சைகை கிடைத்தவுடன் தடித்த காகிதத்தின் கீழேயுள்ள மேடு பள்ளங்களைக் குறிக்கும் பேனா (Relief pen) சித்திரத்தைக் காகிதத்தில் தடிப்புகள் வடிவில் உருவாக்கிவிடுகிறது.

மூன்றாவது பகுதி ஒரு டேப் ரிக்கார்டராகும். இதிலிருந்து முன்பே பதிவு செய்யப்பட்ட அறிவிப்புகள் ஏக காலத்தில் ஒலி எழுப்பும். விரும்பினால் டேப் ரிக்கார்டரை நிறுத்திவிட்டு, ஆசிரியரே நேரடியாக வகுப்பு நடத்தலாம்.

இக்கருவியின் மூலம், தற்பொழுது வழக்கத்திலுள்ள முன் தயாரிப்புப் படங்களின் மூலம் கற்பிப்பதில் உள்ள கால தாமதத்தையும், மன எரிச்சலையும் தவிர்க்க முடியும். இக்கருவியை உருவாக்கும் செலவில் பெரும் பகுதியையும் 'சாப் ஸ்கேனியா' நிறுவனமே ஏற்றுக் கொண்டுள்ளது. ஓரளவு மானியத்தை ஸ்வீடன் நாட்டு நுட்ப மேம்பாட்டு வாரியம் கொடுத்துள்ளது. ஊனமுற்றோர்க்கான ஸ்வீடன் நாட்டு நிறுவனமும், பார்வையற்றவர்களுக்கான ஸ்வீடன் நாட்டுச் சங்கமும் ஒன்று கூடியே இந்த எலக்ட்ரானிக் கருவியை உருவாக்கியுள்ளன.



# பாவையின் பயணம் மலை மீது...

" "சிறுவரும் புலியதனை முறத்தினாலே சிங்கார மறத்தி ஒருத்தி துரத்தினளே!" என்று பைந்தமிழ்ப் பாடல் ஒன்று பழந்தமிழ்நாட்டில் வாழ்ந்த பெண்ணொருத்தியின் வீரத்தைப்பற்றி வியந்துரைக்கிறது. அத்தகைய வீரமும் தீரமும் உள்ள பெண்கள் இன்றைய தமிழகத்திலும் உள்ளார்கள் என்பதற்கோர் எடுத்துக்காட்டாய் விளங்குகிறார் செல்வி ஹேமா.

கொட்டும் பனியையும், குலை நடுங்க வைக்கும் குளிரையும், குருதியை உறிஞ்சக் காத்திருக்கும் அட்டைகளையும் கண்டு அஞ்சாமல், "கரணம் தப்பினால் மரணம்" என்று சொல்லக் கூடிய, விபத்து நிறைந்த செங்குத்தான மலைச்சரிவுகளில் உயிரையும் பொருட்படுத்தாமல் ஏறிச்சென்று 13,500 அடி உயரத்தில் உள்ள பிந்தாரி பனிப் படலம் (Pindari Glacier) வரை பயணம் சென்று திரும்பிய பதினேழு வயதுப் பாவை ஹேமா.

மலையேறும் பயிற்சிக்குத் தமிழ் நாட்டிலிருந்து சென்று வெற்றியுடன் திரும்பிய ஒரே பெண்மணி ஹேமா. தமிழ் நாட்டுக் கல்லூரிகளில் இருந்து மலையேறும் பயிற்சிக்கு ஒன்பது பேர்கள் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டனர். அந்த ஒன்பது பேர்களில் இருவரே மாணவிகள். அந்த இருவரில் ஒருவர் இமயமலையடிவாரத்தை நெருங்காமலே திரும்பிவிட்டார். மற்றொருவரான செல்வி ஹேமா தமிழ்நாட்டிலிருந்து புறப்பட்டு குமாயூன் மலைமீது ஏறிப் 'பிந்தாரி பனிப்படலம்' வரை சென்று திரும்பிய ஒரே வீர மங்கை என்ற பெருமையைத் தட்டிக்கொண்டு வந்துள்ளார்.

"நல்ல குடும்பம் ஓர் பல்கலைக் கழகம்" என்று கூறினார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள். அதற்குப் பாட்டுக்கோர் எடுத்துக் காட்டாய் விளங்குகிறது, டெல்லி டிபென்ஸ் காலனி திரு. ஜே. மோகன்ராவ் அவர்களது குடும்பம்! பட்டாளத்தில் பொறியியற் கலைஞராக விளங்கும் அவருடைய துணைவியார் திருமதி சகுந்தலா மோகன்ராவ் ஒரு இரட்டைப் பட்டதாரி. பி.ஏ. பட்டம் பெற்றபின் பி.எட். பட்டமும் பெற்றுள்ளார். அவர், வீணை வாசிப்பதில் மிகவும் திறமை வாய்ந்தவர். அவர்களுடைய அருமைப் புதல்வி தான் செல்வி ஹேமா.

செல்வி ஹேமா சென்னையிலுள்ள எத்திராஜ் மகளிர் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பி.ஏ. வகுப்பில் பயின்று வருகிறார். படிப்பில் மட்டுமல்ல, விளையாட்டிலும் மிகு ஆர்வமுள்ளவர். கல்லூரி பேச்சுப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசும் பெற்றுள்ளார். பரத நாட்டியம் ஆடும் திறமை வாய்ந்த இவர் தேசிய மாணவப் படையில் சேர்ந்து ஓராண்டு பயிற்சி பெற்றுள்ளார். இப்படிப் பல்வேறு திறமை வாய்ந்திருக்கும் செல்வி ஹேமா காண்பதற்கு மிகவும் சாது. இந்தப் பெண்ணா பெற்றோரைப் பிரிந்து, தனியே சென்று, மலைமீது ஏறி, வெற்றி வாகை சூடி வந்தது என்று பார்ப்பவர்கள் வியந்து கூறுகிறார்கள். ஆனால் அந்தப் பெண்ணுடன் ஒரு சிறிது நேரம் உரையாடிப் பார்த்தால், அந்தப் பெண்ணின் ஆழ்ந்த அறிவும் தொல்லை கண்டு துவளாத துணிவும், விடா முயற்சியும் தெற்றெனத் தெரிகிறது.

"தமிழரசு" இதழுக்காகப் பேட்டி காணச் சென்ற நான் கேட்ட கேள்விகளையும் செல்வி ஹேமா கொடுத்த பதில்களையும் கீழே சுருக்கித் தந்துள்ளேன்.

"மலையேறும் பயிற்சியில் கலந்து கொள்ள வேண்டும்

என்ற ஆர்வம் உங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது ?''

'' என் அப்பா பட்டாளத்தில் லெப்டினெட் கர்னலாகப் பணியாற்றி வருகிருர். அவருடன் சேர்ந்து இளமையிலேயே வேட்டையாடப் போவேன். குதிரையேற்றத்தில் எனக்கு நல்ல பழக்கம் உண்டு; வீட்டில் இருப்பதை விடக் காட்டில் உலவுவது என்ருலே எனக்குச் சிறு வயது முதலே பெருவிருப்பம், வீர தீரமான செயல்களில் நான் ஈடுபட வேண்டுமென்பதே என் அப்பாவின் விருப்பம். அதற்கு ஏற்ப என்னை ஊக்கப்படுத்தி வந்தார். என் அப்பாவும் என் அம்மாவும் எனக்கு அளித்து வந்த ஊக்கமே மலையேறும் பயிற்சியில் நான் ஈடுபட்டதற்கு மூல காரணமாகும். அடுத்து என் அப்பா ஜம்மு காஷ்மீரில் பணியாற்றியபோது எனக்குப் பனிச் சறுக்கல் விளையாட்டில் நல்ல அனுபவம் ஏற்பட்டது. அந்த அனுபவமும் என்னை மலையேறும் பயிற்சிக்குச் செல்லத் தூண்டியது.

'' இந்த வாய்ப்பை நீங்களே தேடிக் கொண்டீர்களா ? அல்லது எவரேனும் அளித்தனரா ?''

'' மலையேறும் பயிற்சிக்குச் செல்லும் வாய்ப்பை அளித்தவர்கள் எங்கள் கல்லூரி முதல்வர் அவர்களும் ஆசிரியர்களுமே யாவர். அவர்களே என்னைத் தேர்ந்தெடுத்து, கலந்துகொள்ளுமாறு என்னைத் தூண்டினர்.''

'' உங்கள் தாய் தந்தையர் உங்கள் பயணத்தைத் தடுக்கவில்லையா ? ''

'' என் அம்மா, மலையேறும் பயிற்சிக்கு என் உடல் நிலை ஒத்துக் கொள்ளாது என்று கருதி, எனது பயணத்திற்குத் தடை விதித்தார்கள். ஆனல் என் அப்பாவே கடைசியில் என் ஆர்வத்தைத் தடுக்காமல் ஊக்கப்படுத்தி அனுப்பி வைத்தார்.''

''உங்கள் பயணத்தைப் பற்றிச் சுருக்கிச் சொல்வீர்களா ?''

''ஓ ! தாராளமாகச் சொல்கிறேன் ! நானும் எங்கள் குழுவினரும் 1971, மே மாதம் 18-ஆம் நாள் சென்னையை விட்டுப் புறப்பட்டோம். ஆக்ரா சென்று, அங்கிருந்து ' குமாயூன்' துரித வண்டி மூலம், உத்திரப் பிரதேசத்திலுள்ள கடைசி புகை வண்டி நிலையமான காத்கோடம் (Kathgodam) என்ற இடத்திற்குச் சென்ருேம். அதன் பின் பேருந்து மூலம் 'பாகேஸ்வர்' (Bhageswar) என்ற இடத்திற்குச் சென்ருேம். அங்குதான் எங்களது பயணத்திற்கான அடித்தள முகாம் ( Base camp ) அமைக்கப்பட்டிருந்தது. அங்கிருந்து ' காப் கோட் ' ( Kapkote ) என்ற இடத்திற்குப் பேருந்து மூலமே சென்ருேம். காப்கோட்டிலிருந்தே எங்களது மலையேறும் உண்மையான பயணம் துவங்கியது. மலையில் ஏறிச் செல்வதற்கு ' ட்ரெக்கிங் ' ( Trekking ) என்று சொல்லப்படுகிறது. காப்கோட்டிலிருந்து 25—5—71 அன்று காலை 9 மணிக்கு லோகர்கேட் ( Loharkhete ) நோக்கிச் சென்ருேம். ' சரயு ' என்ற ஆற்றங்கரை ஓரமாகவே நடந்து சென்று, 10 மைல் தூரத்தைக் கடந்து அன்று மாலையே, ' லோகர் கோட் ' போய்விட்டோம். அங்குள்ள முகாமில் இரவு தங்கிவிட்டு மறுநாள் தாக்குரி (Thakuri) என்ற இடம் நோக்கிச் சென்ருேம். அந்த இடம் ஆறு மைல் தூரத்தில் 4,000 அடி உயரத்தில் உள்ளது. அந்த 4,000 அடி உயரத்தையும் கடப்பதுதான் மிகவும் கடினமான செயலாக இருந்தது. ஒவ்வொரு 15 நிமிடப் பயணத்திற்கும் ஒரு சில நிமிடம் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. ' தாக்குரி ' என்ற இடத்தை அடைந்தபின் ஒரு நாள் ஓய்வு எடுத்துக் கொண்டோம். அதன் பிறகு அடர்த்தியான வெளிச்சமே இல்லாத இருண்ட காட்டிற்குள் நடந்து 30 மைல் தூரத்தைக் கடந்து புர்க்கியா ( Phurkia ) என்ற இடத்தை அடைந்தோம். இது 10,700 அடி உயரத்தில் உள்ளது. இதுவே எங்களது கடைசி முகாமாகும். எனவே அங்கு 2 நாள் தங்கி ஓய்வு எடுத்துக் கொண்டு 6 மைல் தூரம் நடந்து மே 31 ஆம் நாள் பிந்தாரி பனிப்படலத்தை அடைந்தோம். அதுதான் நாங்கள் செல்ல வேண்டிய கடைசி எல்லை ( Zero Point ). மலைமேல் ஏறுவதற்கு 5 நாட்களும், இறங்கி வருவதற்கு 4 நாட்களும், ஓய்வு எடுத்துக் கொள்ள 3 நாட்களும் ஆக 12 நாட்கள் எங்கள் மலையேறும் பயணத்திற்கு ஆகியது.''

'' மலையேறிச் சென்ற போது என்ன உணவு சாப்பிட்டீர்கள்? தேவையான அளவு உணவு கிடைத்ததா ?''

'' பூரி உருளைக்கிழங்கு தான் எங்களுக்குப் பெரும்பாலும் கிடைத்தது. சில தடவை ' சன்ன ' எனப்படும் சுண்டலும், ' ராஜ்மா ' என்னும் ஒரு வகை உணவும் எங்களுக்குக் கிடைத்தது. பொதுவாகப் பயணம் சென்று கொண்டிருக்கையில் அதிகமாகச் சாப்பிடக் கூடாது என்றும், வழியில் கிடைக்கும் தண்ணீரைக் குடிக்கக் கூடாது என்றும் அறிவுரை கூறினார்கள். சில இடங்களில் நல்ல தேநீர் கடைகள் உள்ளன. அங்கு பெரும்பாலும் பால், கட்டி கட்டியாக உறைந்துபோய் இருக்கிறது. அதைக் காய்ச்சியே தேநீர் போட்டுக் கொடுக்கிருர்கள்; தேநீர் மிகவும் சுவையாக இருக்கிறது ''.

'' பயணத்தின்போது உங்கள் உடல் நலம் பாதிக்கவில்லையா ? ஏதேனும் தடுப்பு முறைகள் செய்து கொண்டீர்களா ?''

'' எனக்கு உடல் நலம் பாதிக்கவில்லை. ஆனல் குளிர் அதிகமாக இருந்ததன் காரணமாக என் முகத்தில் வெடிப்புகள் ஏற்பட்டுத் தோல் உரிந்தது. ஒவ்வொருவருக்கும் தேவையான இருமல் மருந்து, மாத்திரைகள் ஆகியவற்றை எங்களிடமே கொடுத்து விட்டார்கள். நாங்களே அவைகளை எடுத்துக் கொண்டு சென்ருேம். தேவையான பொழுது பயன்படுத்திக் கொண்டோம். நாள் தோறும் காலையில் குறைந்தது பல சத்து வைட்டமின் மாத்திரை (multy vitamin tablet) ஒன்று எங்களுக்குக் கொடுக்கப்பட்டது.

'' பயணத்தின்போது உங்களுக்கு எப்பொழுதாவது விபத்து ஏற்பட்டதா ?''

'' பிந்தாரி பனிப் படலத்தில் உள்ள பனிக்கட்டிகள் நகரும்





தன்மையுடையன. அங்கு இருக்கும் பொழுது பனியில் சறுக்கி விழுந்துவிட்டேன். என் முதுகு அடிபட்டுவிட்டது. பனிக் கட்டிகளிடையே நான் முழுவதும் அமிழ்ந்து விட்டேன். இத்துடன் என் வாழ்வு முடிந்து விடப்போகிறது என்று கூட நினைத்துவிட்டேன். ஆனல் மற்றவர்கள் செய்த உதவியினலும், என்னுடைய விடா முயற்சியினலும் எழுந்து, தப்பித்துக் கொண்டேன். அடுத்து, திரும்பி வரும் பொழுது எங்களுடைய பஸ் கவிழ்ந்து விட்டது. அதிலும் சிறு காயங்களுடன் தப்பித்துக்கொண்டேன் '' என்று கூறிப் பெருமூச்சு விட்டார்.

'' உங்களுடன் வந்த மாணவர்களும் மாணவிகளும் உங்களுடன் எப்படிப் பழகினர்கள்?''

எங்களுடைய குழுவில் தமிழ் நாட்டு மாணவர்கள் 7 பேரும், டெல்லி கல்லூரி மாணவர்கள் 3 பேரும் இருந்தனர். பொதுவாக மாணவர்கள் என்னைவிட வேகமாக நடந்து சென்று முன்னே போய் விடுவார்கள். சில சமயங்களில் நான் மட்டும் தனியே செல்லவேண்டி இருக்கும். ஆனல் எங்கள் குழுத்

தலைவர் திரு. ரெட்டி அவர்களும் மற்ற மாணவர்களும் அவ்வப்போது எனக்காகக் காத்திருந்து கூட்டிச் செல்வார்கள். முதலில் தனி ஒரு பெண்ணாக ஆண்களுடன் செல்வதற்குப் பயந்தாலும், போகப்போக அவர்கள் காட்டிய அன்பும், பரிவும் என் பயத்தைக் குறைத்து விட்டது. நானும் ஓர் ஆண்பிள்ளையைப் போலவேபயமின்றிப்பழகினேன். என் பெற்றோர்களுக்கு நான் ஒரே ஒரு பெண்பிள்ளையானதாலும், அதுவும் முதற் பிள்ளையாதலாலும் 'உன்னை எப்படி அனுப்பினார்கள் ?' என்று எல்லாரும் வியப்பாகக் கேட்டார்கள். எல்லாரும் என்னிடம் அன்புடனும் பண்புடனும் பழகினார்கள்.

" உங்களுடைய அடுத்த இலட்சியம் என்ன ? "

" மலையேறுவதில் அடிப்படை மற்றும் உயர் பயிற்சிக்கு (Basic and advanced course in Mountaineering) செல்ல விரும்புகின்றேன். ஆனால் அரசு உதவி செய்தால்தான், என்னால் அப்பயிற்சிக்குப் போக முடியும். இப்பொழுது சென்ற பயணத்திற்கே ரூபாய் 500 செலவாகியுள்ளது. "

" பிந்தாரி பனிப்படலத்தை அடைந்ததும் நீங்கள் என்ன நினைத்தீர்கள் ?"

" என்னுடைய மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு வெற்றியடைந்து விட்டதாக நினைத்தேன். என் முயற்சிக்கு எதிராகத் தடைகள் பல தோன்றினாலும், அவைகளைத் தகர்த்தெறிந்துவிட்டுச் 'செய்து முடிக்க வேண்டும் என்று எண்ணியதை என்னியபடியே முடித்துவிட்டேன்' என்ற மனத்திருப்தி அடைந்தேன்."

" உங்கள் பயணம் பற்றி வேறு ஏதேனும் சுவையான நிகழ்ச்சிகள் உள்ளனவா ?"

" ஆமாம், சொல்ல மறந்துவிட்டேன். பிந்தாரி பனிப்படலம் செல்லும் வழியில் சாதுக்கள் குகை (Sadhus cave) என்று ஒன்று உள்ளது. அந்தக் குகைக்குப் பெண்கள் செல்லக் கூடாதாம் ; மீறிச் சென்றால் திடீரெனக் காலநிலைமாறி, மோசமாகி விடுமாம் ; அதனால் அப்பகுதிக்குச் சென்றவர்கள் ஆபத்துக்குள்ளாவார்கள் என்ற கருத்து நிலவுகிறது. அதனால் என்னுடன் வந்தவர்கள் அந்தக் குகையைப் பார்க்க என்னை அனுமதிக்கவில்லை.

ஆயினும் திரும்பி வரும் பொழுது அந்தக் குகையை எட்டிப் பார்த்து விட்டேன். சற்று நேரத்தில் பனி மழை பெய்ய ஆரம்பித்து விட்டது. உடன் வந்தவர்கள் என்னைக் கோபித்துக் கொண்டார்கள். ஆனால் நாங்கள் விரைந்து வந்து தப்பித்துக் கொண்டோம் ".

" பி.ஏ. படித்துவிட்டு மேல் படிப்புக்குச் செல்வீர்களா ?"

"மேல் படிப்புக்குச் செல்ல விரும்பவில்லை. ' ஐ.ஏ.எஸ் ' தேர்வு எழுத விரும்புகின்றேன். அதற்காக இப்பொழுது முதலே தயாராகி வருகின்றேன். என் முயற்சியில் வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது " என்றார்.

'தமிழரசு' இதழை ஆவலுடன் படிக்கிறார்









செல்வி ஹேமாவும் தாயார் சகுந்தலாவும்.

திருமதி சகுந்தலா அவர்களிடம் " பெண்களுக்குப் பட்டப் படிப்பு வேண்டுமா ?" என்றேன்.

"அவசியம் வேண்டும். பெண்கள் படித்து முன்னேறினால் தான் நாடு முன்னேறும் " என்றார்.

"உங்கள் பெண்ணின் விருப்பப் படியே நடந்து கொள்வீர்களா?" என்றேன்.

"எங்களுடைய குழந்தைகளுடைய விருப்பம், ஆர்வம், திறமை ஆகியவைகளை உணர்ந்து அதற்கு ஏற்பவே நடந்துகொள்கிறோம். நாங்களாக எதையும் கட்டாயப்படுத்திச் செய்யச் சொல்வதில்லை . என்றார்.

" உங்களைப் போல் ஒவ்வொரு தாய்மார்களும், தங்கள் குழந்தைகளை வளர்த்தால் அல்லவா, அக்குழந்தைகள் அவரவர்களுக்கு விருப்பமான துறையில் படித்து முன்னேறுவார்கள்" என்றேன்.

" நீங்கள் சொல்வது மிகவும் சரி " என்றார்.

" வெள்ளிப் பனி மலை மீதுலாவுவோம் " என்று அன்று பாரதியார் பாடினார். ஆந்திரத்திலே பிறந்து, தமிழ் நாட்டிலே தற்பொழுது கல்வி பயின்று வரும் செல்வி ஹேமா, இமயமலையின் ஒரு பகுதியான குமாயூன் மலை உச்சிக்குச் சென்று ' வெள்ளிப் பனி மலையில் உலாவிவிட்டு' வெற்றியுடன் திரும்பி வந்துள்ளார். அவரிடம் தேசிய ஒருமைப்பாடு காணப்படுகிறது.



# திருவாளர் பொன்மொழியார்

'இளவல்'

**2**

'ஒரு நல்ல பெண் இருக்கும் வீட்டில் ஆனந்தம் ஜன்னல் வழியாகச் சிரிக்கிறது' என்பது ஆலந்து நாட்டுப் பழமொழியாகும்.

பொன்மொழியார் வீட்டிலே ஆனந்தம் ஜன்னல் வழியாகச் சிரிக்கவில்லை. வாசற்படி வழியாகவே சிரித்தது—பொன்மொழியார் உருவில்.

ஆமாம், திருவாளர் பொன்மொழியார் தம் அருமருந்தன்ன மனைவி அருந்ததி செய்யும் அரும்பெரும் செயல் கண்டே அப்படி ஆனந்தத்தில் மூழ்கினார்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை தண்ணீராகக் காட்சி யளிக்கும் கடல் நீரைக் குடிக்க முடியாது. ஆனால் சின்னஞ்சிறிய ஊற்றின் நீரை அள்ளிக் குடிக்கலாம்.

இத்தனை காலமாக அருந்ததி எத்தனையோ செயல்களைச் செய்திருக்கலாம். அத்தனையாலும் பொன் மொழியார் ஆனந்தப் பட்டதில்லை. ஆனால் இன்று அவர் மனைவி செய்து கொண்டிருக்கும் செயலோ அவர் நெஞ்சிருக்கும் வரை நிலைத்திருக்கும் காட்சி அல்லவோ !

பழைய குப்பைகள், பயன் படாத காகித மூட்டைகள், அழுக்குப் புத்தகங்கள், பழுப்பேறிய காகிதக் கட்டுகள், வீட்டின் அழகைக் கெடுக்கும் அர்தப் பழசுகள் என்று அடிக்கடி அருந்ததி அர்ச்சனை செய்வதுண்டு—பொன்மொழியார் கண்ணேபோல் காத்துவரும் புத்தகங்களைப் பார்க்கும் பொழுதெல்லாம்!

ஆனால் இன்று—அந்த அருந்ததியே அதே புத்தகங்களின் மீது படிந்திருக்கும் தூசுகளைத் தட்டி, துப்புரவுப்படுத்தி அழகாக அடுக்கி வைக்கும் காட்சிதான் என்னே !

அன்புள்ள இதயம் என்றும் இளமையானதல்லவா ? அதனால் கையில் பாதி உதிர்ந்தும், உதிராமலும் இருந்த மாலையை அருந்ததி கழுத்தில் போடத் துடித்தார் பொன்மொழியார்.

அருந்ததியோ கருமமே கண்ணாயிருந்தாள்.

' உண்மையான குடும்பப் பெண் ஒரே சமயத்தில் அடிமையாகவும், எஜமானியாகவும், இருப்பாள் ' என்று எங்கேயோ எப்பவோ படித்தது பொன்மொழியாருக்கு நினைவு வந்தது. எனவே தன்மனைவியின் பணியின் இடையில் தடையாக நுழைந்திட விரும்பவில்லை.

அந்த நேரத்தில் பொன்மொழியாரின் நண்பர் பூகம்பசாமி, அவரைத் தேடிக்கொண்டு வந்து விட்டார்.

' ஒரு வௌவால் வீட்டிற்கு இன்னொரு வௌவால் வந்தால் அதுவும் தொங்கிக் கொண்டுதான் இருக்க வேண்டும். ஆகவே பொன்மொழியாரின் அறைக்குஅவரைத்தொடர்ந்து நடந்தார் பூகம்பசாமி.



அந்த வீட்டின் மாடியில் வடக்குப் பகுதியில் இருந்த அறையைத்தான்பொன்மொழியாருக்கு அவர் மனைவி ஒதுக்கி விட்டிருந்தாள். அந்த அறையில்தான் அகில உலக அறிவுக் கருவூலங்களைப் பொன் மொழியார் கரைத்துக் குடித்துக் கொண்டு இருந்தார்—இருக்கிறார். அதன் அடையாளங்கள் வரலாற்றுச் சின்னங்களாக எங்கும் காணப்படும், அந்த அறையில் பொன் மொழியாருடன் வந்து அமர்ந்தார் பூகம்பசாமி.

வழக்கம்போல் பூகம்பசாமி பொன்மொழியாரைக் கண்டு பெருமூச்சுவிட்டார். 'நெருப்புக்காகப் புகையைப் பொறுத்துக்கொள்வதுபோல்' பொன்மொழியாருக்காக அருந்ததியின் வெறுப்புப்பார்வையைப் பொறுத்துக் கொள்பவர் அவர்.

காதலித்தவனைக்கைப்பிடித்தால் சீதனத்தோடு வரவேண்டிய அவசியம் இல்லையே! ஆதலால் அன்று ஒரு சிறு துரும்பையும் பொன்மொழியார் வீட்டுக்கு அருந்ததி கொண்டு வரவில்லை. ஆனால், இன்று அருந்ததியின் அனுமதி இல்லாமல் ஒரு துரும்பையும் பொன் மொழியார் அசைக்க முடியாது.

இந்தச் சரித்திரத்தைத் தெரிந்தவர் என்பதால் பூகம்பசாமி

பொன்மொழியாரைப் பார்க்கும் பொழுதெல்லாம் பெருமூச்சு விடுவார். அருந்ததியைப் பற்றி மூச்சு விடமாட்டார். 'கழுதையின் வீட்டுக்குப் போனால் காதைப்பற்றிப் பேச முடியுமா ?' ஆனால் பொன் மொழியார் தம் மனைவியைப் பற்றிப் பூகம்ப சாமியிடம் மெதுவான குரலில் பேசுவார்.

கறியின் சுவை அகப்பைக்குத் தெரியுமா ? இலக்கிய ரசனை அருந்ததிக்கு உண்டா? ....உம் என்ன செய்வது? எப்படித் திருத்துவது ? என்று கவலைப்படுவார்.

' கவலைக்கு மருந்து அதைக் காலின் கீழ் போடுவதுதான் ' என்று ஆறுதல் கூறுவதும் பூகம்பசாமிக்கு வழக்கம்.

ஆனால், இன்று நிலைமை வேறாகிவிட்டது !

அருந்ததி அந்தாதி பாடத் தொடங்கிவிட்டார்.

" சுட்டால் செம்பொன் கெட்டா போகும் ? இத்தனை நாள் நாகரிக மோகமும் செல்வச் செருக்கும் அருந்ததியை ஆட்டிப் படைத்திருக்கலாம் ; ஆனால் அவள் உள்ளம் இன்று திருந்தி விட்டது. தணலில் தங்கம் எரிந்து விடாது. மெருகுதான் கூடும்."

பூகம்பசாமி சொன்னார் : "ஆரம்ப நாட்களில் அருந்ததியைத் திருத்து திருத்து என்று சொன்ன பொழுது எல்லாம் ' ஓடிக் கொண்டிருக்கிற குதிரைக்கு லாடம் அடிக்க முடியாது ' என்று சொன்ன நீயே, இப்பொழுது இப்படிப் பேசுகிறாயே ......என்னப்பா இப்படி திடீர் மாற்றம்.......? "

' தீயவைகளைப் பனிக்கட்டியில் எழுத வேண்டும்; நற்செயலைப் பாறையின் மேல் எழுத வேண்டும். அதனால்தான் உன்னிடம் சொல்கிறேன் "

பூகம்பசாமி சிரித்தார்.

"ஏன் சிரிக்கிறே—"பொன்மொழியார் கேள்வி.

" நீ முன்பு சொன்ன பொன்மொழி ஞாபகத்துக்கு வந்தது அதனாலே...... அது என்ன பொன் மொழி தெரியுமா ? ' மடமைக்கு அதன் அளவு தெரியாது ' என்பதுதான் "

"பசி தீர்ந்தவன் எப்போதும் பசிக்கிறவனை நம்புவதில்லை ........நிம்மதியாக வாழ்க்கை நடத்தும் நீ எனக்கு ஏற்பட்டிருக்கும் மகிழ்ச்சியை நம்பாததில் வியப்பில்லை...."

" பொன்மொழி ! உன் வீட்டுக்கு வந்தால் நான் அருந்ததியைப் பற்றிப் பேசுவதேயில்லை. நீதான் உன் மனைவியைப் பற்றி என்னிடம் விமர்சனம் செய்வாய்; ஆரம்பத்தில் நீ இடம் கொடுத்து விட்டாய். அலட்சியமாக இருந்துவிட்டாய். அப்பொழுதே சொல்லியும் இருக்கிறேன். ' சிங்கம் இல்லாத இடத்தில் நரி சிம்மாசனம் ஏறும் '—ஜாக்கிரதை என்று! இப்பொழுது அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறாய். இன்று திடீரென்று நீயே அவள் திருந்தி விட்டாள், என்கிறாய். நம்ப வேண்டுமென்றால் நம்புகிறேன்.'

" பூகம்பசாமி, 'சக்கி முக்கி' கல்லைத் தேய்த்தால் நெருப்பு உண்டாகும். தேய்க்காவிட்டால் புகை கூட வராது. அருந்ததி திருந்தாமல் நான் சும்மா சொல்லவில்லை. நீயே போய்க் கீழே பார். நான் சேர்த்து வைத்திருக்கும் அறிவுப் புதையல்களை அலட்சியப் படுத்தியவள் இன்று அவைகள் மீது படிந்திருக்கும் அழுக்கைத் தட்டித் துப்புரவுப் படுத்தி அடுக்கி வைக்கிறாள்! 'பொன்னைச் சோதிப்பது நெருப்பு; பெண்ணைச் சோதிப்பது பொன் ; ஆணைச் சோதிப்பது பெண்' என்பதை உறுதிப் படுத்திக்கொண்டு என்னை இத்தனை நாள் சோதித்தவள் இன்று திருந்தியிருப்பது எவ்வளவு திருப்தி தெரியுமா ? "

" பொன்மொழி, உன்மொழி போல் உண்மையில் நடந்திருந்தால் உன்னைவிட மகிழ்ச்சி அடைவேன் நான்! ஆனால் நீயே எனக்குச் சொல்லியிருக்கிறாய் 'உண்மையைவிட நம்பத் தகுந்த பொய்கள் உண்டு' என்று"—இப்படிப் பேசிய பிறகு பூகம்பசாமி வேறு பக்கமாகத் தன் பேச்சைத் திருப்பினார். பொன்மொழியாருக்கு நடத்தப் பட்ட பாராட்டு விழாவுக்கு வர முடியாததற்குக் காரணங்களை அடுக்கிக் கொண்டிருந்தார்.

ஆனால், அந்தப் பேச்சில் பொன் மொழியார் மனம் ஈடுபடவில்லை. அது, அருந்ததி திருந்திய ஆனந்தத்திலேயே அந்தப் பெருமையிலேயே பறந்துகொண்டிருந்தது.

பூகம்பசாமி பேச்சோ ?' கடலுக்குள் பன்னீரை ஊற்றுவது போலப்' பயனற்றுப் போய்க் கொண்டிருந்தது. அனாவசியமாகத் தன் நண்பன் பேசிக் கொண்டிருப்பதை மாற்றி, தன் மனைவியின் பெருமையை நிலை நாட்ட, மிகுந்த ஆர்வத்துடன் வழக்கத்துக்கு மாறான துணிவுடன் கீழே இறங்கினார்.

அங்கே நண்பர்கள் கண்ட காட்சி அவர்கள் வாயை அடைத்தது. மௌனமானார்கள்.

மௌனத்தைத் தவிர வேறு எதையும் உலகத்தில் அளந்து விடலாமே !

அளக்க முடியாத அந்த மௌனத்தின் காரணம் ஆழமான சோகம்தான்.

எத்தனை பேருக்குப் பொன் மொழியார் சொல்லியிருப்பார்?

" கண்ணால் காண்பதும்பொய் காதால் கேட்பது பொய் " என்றும்

" அவசர முடிவு அறிவுக்குப் பகை " என்றும் . . . .

அவைகளை ஏனோ மறந்தார்!

தாங்க முடியாத துயரம் அவருக்கு வீரத்தை அளித்தது. அடிபட்ட புலிதானே சீறும் !

கோபத்தோடு அழைத்தார், " அருந்ததி! என்னுடைய புத்தகங்களை—அறிவுச் சுரங்கத்தை என்ன செய்தாய்? எங்கே அவைகள் ? "

அந்த அம்மாள் அமைதியாகச் சொன்னாள் ; போக வேண்டிய இடத்துக்குப் போய் விட்டது "

" எங்கே ? "

" பழையபேப்பர் கடைக்கு "

" குருட்டுப் பூனை செத்த எலியைத்தானே பிடிக்கும்! நீ பழைய பேப்பர் கடைக்குத் தான் அனுப்புவாய் " என்று இரைந்தார் !

(தொடரும்)






# 11. இரந்தும் ஒழிப்போம் இரப்பு

சாதி ஒழிந்தாலும் சாரமிலை; சமய
பேதமொழிந் தாலும் பெருமைநமக்—கேதிங்(கு)
இரந்துண்போர் உள்ளவரை? எம்முதல்வர் சொற்கேட்(டு)
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—சி. திருநாவுக்கரசு, சேலம்-1.

எங்கும் சமதர்மம் ஏறுநடை போடத்
தங்கத் தமிழ்நாட்டுத் தானையனின்—செங்கை
உரம்பெற்று வாழ உயிர்பெற்ற நாங்கள்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—சுப. சுந்தரம், காட்டுப்புத்தூர்.

காலிழந்து கையிழந்து கண்ணிழந்து கஞ்சியின்றிக்
கூலிகளாய் வாழ்ந்திடவும் கூடாமல்—கேலி
அரும்பும் இறைவனின் ஆற்றலைச்சீர் செய்ய
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—ஆ. புகழேந்தி, கோவை.

பிச்சை எடுப்பால்நம் பேரெழில் நாட்டினையே
துச்சமாய் எண்ணிட்டார் தூரநாட்டார்—பிச்சை
துறந்தும் மகிழ்ந்தும் தொழில்செய்தும் வாழ
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—மா. பா. மணியன், வாரியங்காவல்.

ஏழைக் குரலை இதயக் குரலாக்கி
வாழும் வழிதந்தார் மாமுதல்வர்—ஏழை
இருவிழி இன்ப ஒளியெய்தி வாழ
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—சாந்தா வெங்கடேசன், நெய்வேலி-2.

ஏடேந்தும் நண்பா! எழுத்தெல்லாம் கண்ணீராம்!
ஓடேந்தும் கூட்டம் ஒருபால்காண்!—நாடேந்
தருங்கலைஞர் தந்தவழி ஆர்வமுடன் போற்றி
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—முத்து வேங்கடேசன், திருமயம்.

பாரிதந்தான் முல்லை படரப் பவளத்தேர்
காரிஓரி பேகனுமே காட்டுநெறி—வாரிச்
சுரப்பாரும் ஈங்கிருக்கச் சுற்றமில்லாச் சுற்றம்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—அ. மலர்வேந்தன், அனுமந்தன்பட்டி

இடையிற் றுகிலொன்றும் இன்றிப் பிறந்தோம்
கடையிற் றுணையொன்றும் காணோம்—மடையென்று
பறந்தும், பசியுறும் பாரினிலே பலதிக்
கிரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—தாமரைச் செல்வன் பழனி

குளமான கண்ணில் குடியேறி வாழ்ந்தும்
வளமான வாழ்வு விழையான்—களமாய்ப்
பரந்த புவியில் பயணம் தொடங்க
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—சி. டி. பிரேமேந்திரன், சென்னை–12

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:
திரு சி. திருநாவுக்கரசு,
மாவட்ட குடும்பநலத் திட்டச் செயலகம்,
டாக்டர் ராமநாதன் சாலை, சேலம்-1.

உண்ணும் உணவுக்கே ஊரூராய்ச் சென்றிரப்போர்
மண்ணில் படுந்துயர்கள் மாய்ந்திடவே—எண்ணிக்
கரவிலா உள்ளக் கலைஞர் வழியில்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—புலவர் தண்ணொளியான், கண்ணமங்கலம்.

தாழ்வதூஉம் வாழ்வதூஉம் முற்பிறப்பால் என்றுரைப்போர்
ஏழ்மையை வாழவிடும் எத்தர்களே—வாழ்வில்
வருந்தும் இரப்போர் துயர்போக்க இன்றே
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—ஏகம்பவாணன், திமிரி.

பாரியற்றி யோனே பரந்து கெடுகவெனப்
பேரியல்பின் வள்ளுவனார் பேசிட்டார்—சீரில்
இரப்போரும் இவ்வுலகை ஈன்றவனும் உய்ய
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—ந. அப்துல்லா, சுக்கூர்.

அச்சு நிகர்கலைஞர் ஆய்ந்துணர்ந்து கொண்டுவரும்
மெச்சு புகழ்த்திட்டம் வெற்றிபெற—நச்சி
பரந்த மனங்கொண்டு பல்பொருள்கள் ஈந்தும்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—சுப்பராயலு, பெரியகுளம்.

கன்னித் தமிழ்நாட்டில் கையேந்தும் காட்சியா?
இன்னே இதையொழிக்க எல்லாரும்—ஒன்றாய்ப்
பெருஞ்செல்வம் ஈந்திடுவோம்; பிற்பட்டோர் வாழ
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—பரிதியார், சென்னை-32.

கோயிலின் வாயிலெங்கும் கூடிக் கலமேந்தி
வாயின்றிக் காலின்றிக் கண்ணின்றி—நோயால்
வருந்தும் இரவோர் மறுவாழ்வுக் காய்நாம்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—வ. வீ. பெருமாள், வந்தவாசி.

''ஏற்ப திகழ்ச்சி யெனும்இழிவுக் கோர்பொறுப்பை
ஏற்பதுயார் என்றாய்வில் எம்கலைஞர்—ஏற்றார்;
கரம்நீட்டும் ஏழைகட்குக் கைகொடுக்க நாமும்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—கலாவதி காசிநாதன். அமிர்தராயன்கோட்டை.

இரத்தல் இழிவென்ற என்றமிழ் நாட்டின்
சரித்திரத்தை மீண்டும் சமைப்போம்—இரந்தும்
வருந்தியுயிர் வாழ்வோர் வளவாழ்வு காண
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—முத்துச்சோழன், கோவை-1.

வாடுகிறார் எண்ணற்றோர் வாய்க்குணவு கொஞ்சமின்றி
நாடுகிறார் நம்போன்ற நல்லோரை!—நாடும்
வரம்பின்றித் துன்புறுவோர் வாட்டத்தைப் போக்க
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—இரா. மைக்கேல், காஞ்சிபுரம்.

கூழும் குடிக்காமல் கும்பியெரி கின்றவர்கள்
வாழும் வகையற்று வாடுகிறார்!—தோழா!
பரந்த மனத்தோடு பண்பாட்டைக் காக்க
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—பாவலர் இலக்கியன், ஆலிங்காயம்.

எல்லாரும் மன்னரென ஏட்டளவில் சொல்லிவிட்(டு)
இல்லாதார் சூழ இருக்கின்றோம்—நல்லீர்
வரம்பெற்ற சோதனைகள் வந்துற்ற போதும்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—இரா. இராகவன், வாணியம்பாடி-2.

ஆனைகட்டிப் போரடித்து ஆண்டிருந்த தென்னகத்தில்
பானைக் கரிசியின்றிப் பட்டினியா?—ஊனைத்
துறந்தும் ஒழிப்போம் துயரை; முடிவில்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—கு. பெருமாள்சாமி, அருவன்காட்டுவலசு.

பிச்சைதனை ஏற்கப் பிறந்திட்டார் என்றுசொலும்
நச்சுக் கருத்துடையோர் நாவடங்க—பிச்சை
இரந்துண்போர் இந்நிலத்தில் இல்லையெனச் செய்ய
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—அ. சுந்தரேசன், மேட்டுப்பாளையம்.

இரந்தும் உயிர்வாழும் ஏழை பசியைத்
தெரிந்தும்நாம் வாளா திருத்தல்—பொருந்தாதே
இருந்தும் கொடுக்க இசையா ரிடத்தே
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—அ. லலிதா, கோவை-1.

---

கல்லாமை போக்கும் கலைஞரின் ஆட்சியிலே
இல்லாமை மட்டும் இருப்பதுவோ?—இல்லை
பரந்தும் பசியாளர் பாரில் இலாமல்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—வாவாசியண்ணன், திருப்பனந்தாள்.

பிச்சுப் பிடுங்குகின்ற பேய்வறுமைப் பேரிடரால்
குச்சிகளாய்த் தேகம் குலைந்தமக்கள்—எச்சில்
விருந்துக்குக் கையேந்தும் வேதனைகள் நீங்க
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—துறவி, சென்னை-12.

சகதியில் சத்திரத்தில் சாக்காட்டில் என்றும்
அகதிகளாய் அல்லலுற வேண்டாம்—செகத்தில்
பரந்தலைந்து செல்வம் படைத்தோரை நாடி
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—மு. பூங்கோவன், சென்னை-7.

உண்ண உணவும் உறைவதற்(கு) ஓரிடமும்
இன்னும் எமக்குத்தான் இங்கில்லை—என்போர்
வருத்தம் தனைப்போக்கி வாழ்ந்திடவே என்றும்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—அ. காந்தி, தேவத்தூர்.

அம்மா பசியென் றவலக் குரலெழுப்பல்
இம்மா நிலத்திற்(கு) இழிவன்றோ—நம்மால்
வருந்தும் மனிதர்கள் வாழ்வுநலம் காண
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—வ. பெ. ராமசாமி, சென்னை-18.

இரந்துறைவார் இந்நாட்டில் இல்லா தொழிக்க
இரந்தார் முதல்வர் இனிதாய்!—இரந்தார்க்(கு)
இரங்கார் இனியுண்டோ? இன்றின்றும்! ஈண்டே
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—கருவூர் பாரி, கரூர்.

இல்லாமை ஏழ்மைநிலை இன்று தமிழகத்தில்
இல்லையென்று பூரிக்க இன்றரசு—நல்ல
பரந்தமனம் கொண்டதுகாண்! பார்போற்றும் வண்ணம்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—தா. சு. ஆ. தமிழ்க்குமரன், ஈரோடு-1

அம்மாபிச் சையென்றே அன்றாடம் கெஞ்சுகின்ற
வெம்மைக் கொடுமைநிலை வீழாதோ—நம்மில்
நிரந்தரமாய் இந்தநிலை நீக்கிடுவோம் நாமே
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—மு. முத்துகிருஷ்ணன், புரிசை.

உப்பளத்து நீராய் உலர்ந்திடவோ? நாளெல்லாம்
சுப்பரையை ஏந்திக் களைத்திடவோ?—குப்பம்
இருந்துழல்வார் செல்வரெனும் இந்தநிலை மாற
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—ச. கருப்பையா, திருச்சிராப்பள்ளி-1.

இறப்பும் எளிதே இரப்பதினும்; நாட்டுச்
சிறப்பும் அதனால் சிதையும்;—அறப்போர்
பரவட்டும்! நாமும் படையினிலே சேர்ந்து
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—ந. விசுவநாதன், திருச்சி-1.

பொய்யா வளஞ்சூழ்ந்து பூரித்த நம் நாட்டில்
'ஐயா, பசி!' என்(று) அழுங்குரல்ஏன்?—வையம்
'சிறந்ததமிழ் நாடென்றே சீராட்டிப் போற்ற
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—மு. தங்கவேல், வேடசந்தூர்.

இரந்துறைவார் பல்லோர் இருக்கப் பொருளைக்
கரந்துறைதல் பண்பாமோ? காகம்—கரைந்தே
நிரந்துண்ணல் காணீர்! நிதிதாரீர்! வாரீர்!
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—ஆ. கோவிந்தராசன், குடவாசல்.

இரப்பார்க்கு வாழ்வளிக்க எம்கலைஞர் நாட்டில்
இரக்கின்றார்; நாம்முந்தி ஈவோம்—இரப்பார்
இரத்தல் தனியின்பம் என்றால், அவரை
இரந்தும் ஒழிப்போம் இரப்பு!

—கரு. செல்லமுத்து, புதுக்கோட்டை.

வீதியிலே உழல்கின்றான்; வீணாய் அலைகின்றான்
நாதியில்லை அவனுக்கோ நாட்டினிலே—வீதி
இரந்து திரியும் இவனிலையைப் போக்க
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—அன்புகணபதி, ஈரோடு.

நீர்திருத்திக் கார்குவிக்கும் ஏர்திருத்த மில்லாமல்
நேர்ப்படுத்தும் சீர்திருத்த மில்லையே—பாரில்
இரந்துணவு கொள்வாரை ஏற்றமுறச் செய்ய
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—பெ. சி. மாணிக்கம், விருத்தாசலம்.

இறப்பே வரினும் இரவா திருத்தல்
சிறப்பே! மிகநற் சிறப்பே!—மறுத்தே,
இரப்பின் கீழ்மை இவண்விட் டகல,
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—அ. கு. முரளிதரன், சென்னை-5.

அல்லல் அகற்றும் அருமைத் தமிழரசார்
தொல்லை அகற்றுதற்குத் தோள்கொடுத்தார்—நாட்டில்
மறந்தும் இரந்துண்ணும் வாழ்வகற்ற இன்றே
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—வெ. இராமசாமி, பேரையூர்.

ஏழைச் சிரிப்பில் இறைவனைக் கண்டிடவே,
தோழா! எழுகநீ! தொண்டாற்று!—வாழை
மரம்போல் செயல்புரிவோம்! வாழ்க்கை மலர,
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—கருமலைப்பழம்நீ, ஊத்தங்கரை.

ஈனன் றிரங்கும் இழிதொழிலை இப்போதே
போஎன் றுரைத்தே புறப்பட்டு—வாயிங்(கு)
இரப்பாரே இந்நாட்டில் இல்லாமல் போக்க
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—ஆலோசனைமரியான், தருவைக்குளம்.

அல்லும் பகலும் அயராது சுற்றியும்
கொல்லும் பசிநீங்கக் கூழுமின்றிச்—செல்லும்
பரதேசி வாழ்வும் பயனுள்ள தாக்க
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—வெ. குமாரசாமி, பாலசமுத்திரம்.

அருளுள்ளம் கொண்டோரே! ஆக்கவழி நிற்போம்!
அருகிருக்கும் அற்றோர்க்(கு) அளிப்போம்—கருணை
சுரந்து பிறப்பொக்கும் சீர்மை யுணர்ந்து
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—ந. தமிழரசன், ஆண்டிமடம்.

ஈன்றெடுத்த தாயுந்தம் இல்லாளும் தாமொதுக்கக்
கூன்குருடாய் வீதியிலே கூவிடுவார்—யாண்டும்
நிரம்பா வகைசெய்ய நாமிந்த நாட்டில்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—கூமா. மூ. இராமசாமி, சேத்தூர்.

பிச்சையென் றேவருவோர் பேரரவ மாகிவிட்டார்;
பச்சையாய் மானம் இழக்கின்றார்—பிச்சைக்
கரம்படவே காணவொண்ணா நல்லோரே, வாரீர்!
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—பொன். கோவிந்தராசன், சங்கரன்பந்தல்.

இருந்தும் இரப்போர்க் கிலையென்போர் வாழின்
திருந்துமோ இவ்வுலகு தானும்?—வருந்திப்
பரந்து கெடுகின்ற பாமரர்கள் உய்ய
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—வெ. கு. பாலசுப்பிரமணியன், பட்டரைபெரும்பூதூர்.

இல்லாமை காட்டும் இரவச்சம் எஞ்ஞான்றும்
சொல்லாமை வேண்டும் சுடர்க்கொடியே!—நல்லோர்
பரந்து கெடுகவெனச் சாடுதற்கு முன்னம்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—கோ. சீனிவாசன், தாரமங்கலம்.

வந்தவருக் கெல்லாம்நல் வாழ்வளித்த தால்சிறந்த
செந்தமிழ் நாட்டின் தவமுதல்வர்—நொந்தார்க்(கு)
உரந்தந்தார் ஏழ்மை ஒழியக் கரம்தருவீர்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—அறவாழி, பெங்களூர்-1.

ஏழ்மை இரப்பெனும்நோய் இல்லாத நாடொன்றே
தாழ்வற்ற நாடாம்; தமிழ்நாட்டின்—வாழ்வுப்
பெருமை இரப்பாரால் பின்னடைய லாமா?
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—கதிரொளி, பெங்களூர்-1.

இரத்தல் வசையெனினும், ஈதல் இசையன்றோ?
கரத்தல், இரத்தலினும் கடையன்றோ?—புரத்தல்
புரிந்து, பொருள்தந்து, புகழ்பெறவே தமிழ்ப்புலத்தீர்
இரந்தும் ஒழிப்போம் இரப்பு.

—புலவர் அ. கு. காந்தி, மதுரை.

# நாளைய தலைமுறை



தாமஸ் ஆல்வா எடிசன்! பள்ளி மாணவர்களுக்குக் கேட்டுக் கேட்டுப் பழகிப்போன ஒரு பெயர். மின்சார விளக்கு, இசைத் தட்டு போன்ற பல அரிய சாதனங்களை உருவாக்கித் தந்த மேதை எடிசன் 60 ஆண்டுக் காலத்தில் உருவாக்கித்தந்தவை 1,100 கண்டு பிடிப்புகளாகும்.

இன்றைய நவ நாகரிக வாழ்க்கைக்கு அடித்தளமான தேவைகளைக் கண்டுபிடித்துத் தந்த இந்த அறிவியல் மேதையின் வாழ்க்கையும் சுவையான கதையாகும்.

உலக சரித்திரத்திலே, விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் தலைமகனை இவர், ஒழுங்காகப் பள்ளி சென்று பயின்றது மூன்று மாத காலம்தான். அடிக்கடி கேள்வி கேட்கும் மாணவன் எடிசனை ஆசிரியர் இடைவாரினல் (பெல்ட்) பதம் பார்க்கவும், பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

புத்திசாலியான மகனின் ஆர்வத்தைக் கண்ட தாய், வீட்டிலேயே பல புத்தகங்களை வாங்கிக் கல்வி கற்பித்தாள்.

எடிசன் 9 வயதாக இருந்த போதே இரசாயனப் புத்தகங்களைப் படிப்பதோடு நின்று விடவில்லை. அதிலுள்ள கூற்றுகள் சரியா என்பதனை அறியத் தானே அவற்றை ஆய்வு செய்து வந்தான். இதற்காகப் பல இரசாயனப் பொருட்களை வீட்டில் வாங்கி வைத்திருப்பது எடிசனின் வழக்கம்.

12 வயதில் புகை வண்டியில் நாளிதழ் விற்கும் பணியை மேற்கொண்ட எடிசன், புகைவண்டியிலேயே வீக்லி ஹெரால்ட் என்ற பத்திரிகையை நடத்தினர். புகை வண்டியில் வெளியான முதல் இதழ் உலகிலேயே இது தான்!

இன்று குழந்தைகள்
நீங்கள்; எனினும்
இனிஇந்த நாட்டினை
ஆளப் பிறந்தீர்!
நன்றாய்ப் படியுங்கள்
நாட்டின் குழந்தைகாள்
ஒன்றாய் இருங்கள்
உயர்வினை எண்ணுங்கள்!
— பாரதிதாசன்

இவ்வாறு ஓடும் ரெயிலை ஆய்வுச் சாலையாக நடத்தி வரும் போது, ஒரு நாள் இவர் வைத்திருந்த பாஸ்பரஸ் தீப்பிடித்துப் புகை வண்டி புகை மயமாகவே, ரெயில் அதிகாரி ஒருவர் எடிசனின் காதில் செம்மையாக ஒரு குத்து விட்டார். சின்னாள் கழித்து ஓடும் ரெயிலில் தாவி ஏறிய எடிசன் கீழே விழுந்துவிடாமல் இருக்க, ரெயிலில் நின்ற அதிகாரி எடிசனின் காதைப் பிடித்து மேலே தூக்கினர். காது அறுந்து அவர் கையோடு போய் விடுவது போலிருந்தது எடிசனுக்கு. இவ்விரு சம்பவங்களாலும், அவர் காது பாதிக்கப்பட்டு, செவிடாக வேண்டிய நிலை ஏற்பட்டது. அறுவைச் சிகிச்சை மூலம் காது கேட்கும்படிச் செய்திருக்க முடியும். ஆனால் காது செவிடானதைப் பொருட்படுத்த வேயில்லை எடிசன். தனது ஆராய்ச்சியில் கவனம் செலுத்தவும், பிறர் சொல்வதை அனுவசியமாகக் காதில் போட்டுக் கொள்ளாமலிருக்கவும் இதனைப் பெரும் வரப் பிரசாதமாகக் கருதினர் அவர்.



எடிசன் கண்டு பிடித்த முதல் கருவி. பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடைபெறும் போது, தானாக வாக்கெடுப்பு நடத்தும் (Electric-vote Recording Machine) மின் கருவியாகும். அதனை அமெரிக்க சட்ட மன்றத்திற்கு எடுத்துச் சென்றார் எடிசன். ஆனால் அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்குக் கூறப்பட்ட காரணம், "உனது இயந்திரத்தின் மூலம் வாக்குப் பதிவு செய்தால் ஒரு நிமிடத்தில் வேலை முடிந்துவிடும். நாங்களாக வாக்குகளைக் கேட்டு எண்ணினால் 45 நிமிடம் கிடைக்கும். அந்த நேரத்தில் கட்சிக் கொள்கைக்கு ஆள் திரட்ட அவகாசம் கிடைக்கும். எனவே, உனது கருவி வேண்டாம்" என்பதுதான்.

அன்று எடிசன் ஓர் உறுதி மொழி எடுத்துக் கொண்டார். "மக்கள் விரும்பாத எதையும் இனி நான் கண்டு பிடிக்கமாட்டேன்" என்பதுதான் அந்த உறுதி மொழி. கடைசி வரை அக் கொள்கையைக் கடைப் பிடித்து வந்தார்.

ஒரு நாள் ரெயில் நிலையத்தில் நாளிதழ் விற்றுக் கொண்டிருந்தார் எடிசன். அப்போது தண்டவாளத்தில் நின்று கொண்டிருந்த ரெயில் நிலைய அதிகாரியின் மகன் மீது ரயில் மோத இருந்தது. உடனே பாய்ந்து சென்று அச் சிறுவனைக் காப்பாற்றினார் எடிசன். அந் நன்றிக் கடனுக்காக ரெயில் நிலையத்தில் தந்தி அனுப்பும் வேலை வாங்கித் தந்தார் அந்த அதிகாரி.



ஒண்டாரியா (கனடா) என்ற ரெயில் நிலயத்திலிருந்து டொரண்டோ ரெயில் நிலையத்திற்கு ஒவ்வொரு மணிக்கு ஒரு முறை தந்தி மூலம் தகவல் தருவதுதான் அவருக்குத் தரப்பட்ட பணி. வெட்டியாக உட்கார்ந்து இருப்பது எடிசனுக்குப் பிடிக்கவில்லை. உடனே ஒரு மணிக்கு ஒரு முறை தானாகவே தந்தி கொடுக்கும்படி கருவியைக் கெடிகாரத்துடன் இணைத்து வைத்துவிட்டுத் தூங்கி விட்டார். கருவியும் தவறாமல் பணியினைச் செய்தது. ஆனால் இதனைக் கண்டு கொண்ட அதிகாரி, வேலை நேரத்தில் தூங்கியதற்காக இவரை வேலையை விட்டே தூக்கி விட்டார்.

வேலையில்லாமல்— கையில் காசில்லாமல் நியூயார்க் நகரம் வந்து சேர்ந்தார், எடிசன். தலை சாய்க்க இடமில்லை. கெஞ்சிக் கூத்தாடி, ஒரு தொழிற் கூடத்தில் தூங்க இடம் கேட்டுப் பெற்றுக் கொண்டார். அங்கு தூங்கும் வேளையில் அவர்கள் தந்தி கொடுக்கப் பயன்படுத்தும் கருவியை நன்கு ஆய்ந்து வைத்திருந்தார். திடீரென்று ஒரு நாள் கருவி பழுது அடைந்து விட்டது. பெரிய பெரிய 'மெக்கானிக்கு'கள் வந்து பழுது பார்த்தும் அதனை இயக்க முடியவில்லை. எடிசன் முன்வந்து அதனைச் சரி செய்து விட்டார். திண்ணை தூங்கிய சிறுவன் பெரிய சாதனை செய்தது தொழிற்கூட அதிபரை அயர வைத்து விட்டது. உடனே மாதம் 300 டாலர் (சுமார் 2,000 ரூபாய்க்கும் அதிகம்) சம்பளத்தில் எடிசனை வேலைக்கு நியமித்தார். 1869-ஆம் ஆண்டில் இது மிகப் பெரிய ஊதியமாகும்.



எடிசனின் திறமையைப் பார்த்த மற்றொரு தந்தி நிறுவனத்தார் எடிசனுக்கு அழைப்பு விடுத்தனர். தந்தி சம்பந்தப்பட்ட எல்லாக் கருவிகள் தயாரிப்புக்கு மொத்தமாக எவ்வளவு பணம் தேவை என்று எடிசனிடம் கேட்டனர்.

ஐயாயிரம் டாலர் கேட்கலாம். மூவாயிரம் டாலர் தந்தால் ஒத்துக் கொள்ளலாமென்று நினைத்தார், எடிசன். அவர் சிந்திப்பதைக் கண்ட அந்த நிறுவனத் தலைவர் நாற்பதாயிரம் டாலருக்குத் தரச் சம்மதமா என்று கேட்டார். எடிசன் சுய நினைவு பெறச் சற்று நேரம் பிடித்தது. தட்டுத்தடுமாறிச் சம்மதம் தெரிவித்தார். எடிசன் கண்டு பிடித்தவைகளில் அவருக்கு மிகவும் பிடித்தது இசைத் தட்டு. (The Phonograph) தான். ஓர் ஆள் மரத்தை ரம்பத்தால் அறுப்பது போல் தாளில் (அல்லது அட்டையில்) வெட்டிச் சிறுவர்கள் விளையாடுவார்களே அது போன்று ஒன்று தயாரித்து அதனருகில் 'மேரி ஹேட் ஏ லிட்டில் லாம்ப்' (Mary had a little lamp) என்ற பாட்டைச் சத்தம் போட்டுப் பாடினார். பாட்டுக்கு ஏற்றவாறு அந்தப் பொம்மை ஆடியது. இதனைக் கண்ணுற்றதும், அந்தச் சத்த அலையினைப் பதிவு செய்தால் என்னவென்று சிந்தனை செய்தார். சிந்தனை செயலாயிற்று. மாதிரிக் கருவி ஒன்றின் படம் வரைந்து, தனது ஆய்வுக் கூடக்காரரை அழைத்து, அதனைச் செய்யச் சொன்னார். எதற்கு என்று அந்தத் தொழிலாளர் கேட்டார். இந்தக் கருவி பேசப் போகிறது என்று எடிசன் பதில் தந்தார். தொழிலாளருக்கு ஒன்றும் புரியவில்லை. எடிசன் சொன்னபடியே ஒரு கருவியைத் தயாரித்துக்கொண்டு வந்தார்.

எடிசன் அந்தக் கருவியின் உருளை மீது ஒரு மெல்லிய தகரத் தகட்டினைப் பொருத்தினார். பின் 'மேரிஹேட் ஏ லிட்டில் லாம்ப்' என்று பாடினார். அவரது குரல் அந்தத் தகட்டில் பதிவாகியது. பிறகு தகட்டினை ஓட விட்டார். முதலில் ஒரு முறை அது சரியாக இயங்கவில்லை. இரண்டாவது முறை ஓட விட்ட போது எடிசன் சொன்ன வார்த்தைகளை அது திருப்பிக் கூறிற்று. தொழிலாளரால் இதனை நம்ப முடியவில்லை. முகம் வெளிறிவிட்டது. பேயறைந்தவர்போல் ஆனார். எடிசனுக்குக் கூட இது அதிசயமாகத் தானிருந்தது.

மின்சார பல்பு கண்டு பிடிக்கவும் எடிசன் அரும்பாடு பட்டார். ஏற்கனவே, பல அறிஞர்கள் ஆய்வு நடத்தி வந்தார்கள்.

பல்புக்குள் வைக்கப்படும் மெல்லிய கம்பிக்கு எதனைப் பயன்படுத்தலாமென்பதற்கு இரண்டாண்டுக் காலம் அவர் தொடர்ந்து ஆய்வு நடத்தினார். அமேசான் காடுகளுக்கு ஒருவரையும், ஜப்பான் காடுகளுக்கு ஒரு நிபுணரையும், அனுப்பினார். கார் மெழுகைக் கம்பி போல் திரித்தும், நூல் இழையினைப் பயன்படுத்தியும், பல்பு தயாரித்தார். நூலை எரித்துக் கம்பி போலிருக்கும் அதன் கரியைக் கம்பியாகப் பாவித்து பல்பு தயாரித்தார். அந்த பல்பு 1879-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19-ஆம் நாள் வெற்றிகரமாக எரியத் தொடங்கியது. 20-ஆம் தேதி காலையிலும் தொடர்ந்து எரிந்தது. எடிசன் ஏற்றி வைத்த அந்த விளக்கு இன்று அகிலமெல்லாம் ஒளி ஏற்றி நிற்கிறது.

# படியம்மா! பழகம்மா!!

குமரிக் கவி...

காலை பள்ளிப் பாடத்தைக்
கருத்தாய் ஊன்றிப் படியம்மா!
வேலை வீட்டில் செய்யம்மா:
வீணே காலம் கழியாதே!

தாயைப் போற்றி வாழம்மா
தந்தை சொல்லையும் கேளம்மா!
தூய உடைகள் அணியம்மா!
தோழமை கொண்டு பழகம்மா!

அன்பும் பணிவும் கொண்டிடுவாய்
அயலார் தம்மை நேசிப்பாய்
துன்பம் யார்க்கும் நினையாமல்
தொண்டு செய்தே வாழம்மா!

சண்டை வினைப் போடாதே
சச்சர வெதுவும் செய்யாதே
அண்டை வீட்டுக் குழந்தையுடன்
அன்பாய் என்றும் பழகம்மா!

வீட்டோர் போற்ற வாழ்ந்திடுவாய்
விதி மெச்ச விளங்கிடுவாய்
நாட்டோர் வாழப் பலபணிகள்
நாளும் செய்தே நலம்பெறுவாய்!






ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தித்துறை இயக்குநர், தமிழ் நாடு அரசு. அச்சிடுபவர்: அச்சக எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1.



அரசு விளம்பரங்கள்
அனைத்தும்
(அரசு நிறுவனங்கள்—
வாரியங்கள், கழகங்கள்
விளம்பரங்கள் எல்லாம்)

ஆகஸ்ட்
1உ
முதல்

தமிழரசு இதழில்தான்

வெளிவரும்

சீட்-
டெண்டர்
விளம்பரங்கள்

தமிழரசு தமிழ், ஆங்கில
இதழ்களில் மட்டுமதான்
இடம் பெறும்



# தமிழரசு

மலர் 2 16–7–1971 இதழ் 2

இந்த இதழில்

கல்விக்கு நாலில் ஒரு பங்கு
செக்கச் சிவந்த தக்காளி
ஏழைவீட்டுத் திருமணத்தைப்போல்
தமிழ் தந்த பரிசு
தலைவன் கட்டுகிறான் பாலம்
நெருப்புச் சிரிப்பு (கவிதை)
கேளுங்கள் கொடுக்கப்படும்
திருவாளர் பொன்மொழியார்
மாணவர் அரங்கம்
ஏன் இந்தக் காதல் (தொடர்கதை)
வெண்பாப் போட்டி

முதல்வர் எழுதும்
இனியவை இருபது



# 20. இனிது! இனிது!!

அந்த இருபது நாட்கள்—இனிமையும் புதுமையும் பொங்கித் ததும்பிய அந்த இருபது நாட்கள்—பயணமும் சுவையும் மிக்கதொரு சூழ்நிலையில் என்னை மிதக்கவிட்ட அந்த இருபது நாட்கள்—உருண்டோடி விட்டன.

அறைக்குள்ளே அமர்ந்து ஆயிரம் நூல்களைப் படிப்பதைக் காட்டிலும் ஒரு சிறிய நாட்டுக்குச்சென்று பார்த்து அங்குள்ள மக்களுடன் பழகுவது எவ்வாறு சிந்தனையை வளப்படுத்திச் சகிப்புத் தன்மையையும் பண்பாட்டையும் வளர்த்துப் பரந்த மனப் பான்மையினைப் பெருக்கிப் பயனளிக்கக் கூடும் என்பதனை என் பயணத்தின்போது நான் கண்டேன்.

காடென்றும் மேடென்றும் கடலென்றும் மலையென்றும் பாராது கடுங்குளிருக்கும் கதிரவனின் வெம்மைக்குமிடையே சித்தம் கலங்காது நீண்ட பயணங்களை மேற்கொண்ட மறவர்களைப் பற்றி வரலாற்றில் கேள்விப் பட்டிருக்கிறோம். புதிய நாடுகள், புதிய மனிதர்களைச் சந்திப்பதில் மனிதனுக்கு இயல்பாகவே ஆர்வம் உண்டு. தாம் வாழும் 'குண்டு சட்டியே குவலயம்' என்னும் குறுகிய நினைப்பு சிலருக்கு இருந்தபோதிலும் பல நாடுகளுக்குச் சென்று பல இடங்களையும் கண்டு அறிவினைப் பெருக்கிட வேண்டும் என்ற ஆர்வம் மனிதரில் பலருக்கு இருப்பது இயல்பே—பள்ளி செல்லும் கொழுந்துகள் முதல் பருவங்கள் முடிந்து பழுத்தவர்கள் வரை!

விஞ்ஞான வளர்ச்சியில் இயற்கையால் விளைந்த தடைகள் எல்லாம் பெரும்பாலும் தகர்க்கப்பட்டுவிட்டன. ''விசா''வும் ''பாஸ்போர்ட்''டும் தான் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குத் தாராளமாகச் செல்ல இயலாத தடைக் கற்களாக இருக்கின்றன.

இன்றைய உலக சமூகப் பொருளாதார அரசியல் அமைப்பில் அவைகள் தவிர்க்கப்பட முடியாதவைகள் — எனினும் நானிலத்து மக்கள் அனைவரும் சகோதரரே என்ற நல்லுணர்வு பூத்து, வாழத் தொடங்கியுள்ளனர். அதன் அறிகுறிகள் நம் கண்ணில் தென்படாமல் இல்லை. உலகம் ஓர் பூக்காடாகி மனிதர்கள் அங்குத் தும்பிகளாகிப் பறக்கும் நாள் வந்தே தீரும்.

ஐந்து கண்டங்களையும் கண்டு, அதற்கு அப்பாலும் அண்டவெளியில் மின்னுகின்ற கோள்களையும் சென்று காண வேண்டும் என்னும் ஓர் துடிப்பு—ஆசை—பரவியுள்ள இந்நாளில்— நான் கண்டு வந்தது ஒரு கண்டம் தான்—எனினும், அங்குக் கண்ட காட்சிகள், கேட்ட செய்திகள், பெற்ற படிப்பினைகள் இன்றும் என் இதயத்தில் பசுமையான நினைவுகளாகப்பதிந்திருக்கின்றன.

வீரம் செறிந்த ரோமாபுரியின் வரலாற்றுச் சுவடுகளையும், அதன் அழிவிற்குக் காரணமான நிகழ்ச்சிகளையும், அழிந்ததையும் நினைத்து ஏக்கமுறாமல் இன்று வளமாக அந்நாடு வாழ்வதும்,

பயங்கரப் போரினால் பாதிக்கப்பட்ட மேற்கு ஜெர்மனி குறுகிய காலத்தில் அற்புதமாக வளர்ந்திருக்கின்ற காட்சியும்,

இயற்கை அன்னையின் எழில் கொழிக்கும் சுவிஸ் நாடும்,

வையத்து நாடுகளின் ஆடம்பரமும் நாகரீகமும் கொட்டிக் கிடக்கும் பாரீஸ் நகரமும்,

கடலோடு போராடிப் போராடித் திண்மை பெற்ற ஹாலந்து நாடும்,

நவீன ஜனநாயகத்தின் பிறப்பிடம் என்றழைக்கப்படுகின்ற லண்டன் மாநகரும்

அனைத்தும் என்னைக் கவர்ந்தன.

அந்த நாடுகள் இடையூறுகளுக்கிடையேயும் வேகமாக முன்னேறியுள்ளன; செழுமை கொழிக்கிறது; மக்கள் வளமாக வாழ்கின்றனர். அங்கெல்லாம், ''இரப்பார் இன்மையால் இடுவோருமில்லை.'' பஞ்சாப் மாநிலத்தில் பிச்சைக்காரர்களே இல்லை என்பதைக் கண்டு வந்திருந்தும், மேலை நாடுகளிலும் இரப்போர் அறவே இல்லை என்பதைப் பார்த்த பின்னரும், ''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து கெடுக உலகியற்றியான்'' என்ற குறள் அறிந்த பிறகும், பிறந்த பொன்னாட்டில், வளம் கொழிக்கும் இந்த மண்ணில், 'சாலையோரத்தில் வேலையற்றது' களாய் வாழ வழியின்றிப் பிணி மூப்பால் அவதியுறும் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வேயில்லையா என்ற ஏக்கம் என் நெஞ்சைக் குலுக்கியது.

கண்டு, கேட்ட அனுபவங்களை, என் மனத்தில் மொண்டுவந்த உணர்ச்சிகளைப் பிறந்த பொன்னாட்டைச், சீரிளமைத்திறம் குன்றாச் செந்தமிழ் மண்ணை வளமாக்கப் பயன்படுத்திட வேண்டும் என்ற ஆர்வந்தான் எனக்கு மிகுந்தது!

மேலை நாடுகள் மகத்தான வளர்ச்சியைப் பெற்றதற்குக் காரணம் அந்நாட்டு மக்களின் கடுமையான உழைப்புத்தான். ஓயாது உழைக்கவும் உழைப்பவர்களைப் போற்றவும் கற்றலன்றி முன்னேற்றப் பாதையில் யாரும் விரைந்துசெல்லஇயலாது.



மேலை நாட்டு மக்கள் கடுமையாக உழைப்பதோடு, உழைப்பால் பெற்ற ஊதியத்தின் ஒரு பகுதியை ஓய்வு நாட்களில் புதிய இடங்களைச் சென்றுகண்டு உடலுக்கும் உள்ளத்திற்கும் புத்துணர்ச்சி பெறப் பயன்படுத்தும் மனப்பக்குவத்தினையும் பெற்றிருக்கின்றனர். இதனால் அவர்கள் உள்ளமும் உடலும் உறுதி பெறுகின்றன. சுற்றுலா மூலம் அந்த நாடுகளின் வருமானமும் பெருகுகிறது. பழைய நினைவுச் சின்னமானாலும் நவீனப் பூங்காவானாலும் அங்கெல்லாம் அயல் நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆயிரக்கணக்கில் பயணிகளாக வருகின்றனர். அவை மக்களைக் கவரத்தக்க வகையில் பேணிப் பாதுகாக்கின்றன அந்தந்த அரசுகள்.

இந்தியாவிலும், அதன் ஒரு பகுதியான இன்பத் தமிழகத்திலும், அத்தகைய இயற்கைச் செல்வங்களும் செயற்கைக் கோலங்களும் இல்லாமலில்லை. குளிர் அருவி பொங்குகின்ற குற்றாலமும், குறிஞ்சித் தேன் பாய்கின்ற கொடைக்கானலும், உள்ளத்தை அள்ளுகின்ற உதகையும், தமிழகத்தின் திறமைக்கும் நாகரீகத்திற்கும் சான்று கூறும் எழிலார்ந்த கோவில்களும், வற்றா எழில்மிக்க காஞ்சியும், கடல் மல்லையும், திராவிடக் கட்டடக் கலையின் திறமையெல்லாம் மிளிர்கின்ற இராமேசுவரக் கோயிலும், இந்தப் பட்டியலில் சமீபத்தில் சேர்ந்த அண்ணா சதுக்கமும் இங்கிருந்தும், போதிய விளம்பரம் இல்லாமையால், வெளிநாட்டாரின் விழிகளில் அவைகள் விழவில்லை.

நமது தமிழகத்தின் எழிலைப் படம் பிடித்துக் காட்டும் வகையில் பேரறிஞர் அண்ணா எழுதியிருப்பது என் நினைவிற்கு வருகிறது ...

'' சேல் குதிக்கும் மலர்ச் சோலை! தேன் குதிக்கும் நான்கு திக்கும் என்று கூறப்பட்டிருப்பது மொழியின் அழகுக்கு மட்டுமல்ல, தமிழ் நிலத்தின் எழிலுக்கும் முற்றிலும் பொருத்தம்தான்.

எரிமலை இல்லை. நீர்வீழ்ச்சி உண்டு! பாலைவனமில்லை, சோலைவனம் எங்கும்!

பச்சை மாமலைகள்
பாங்கான காட்சிகள்
பாடும் அருவி
பயமற்ற மிருகங்கள்
ஓங்கி வளர்ந்த மரங்கள்
தேக்கங்கள், தேனுறுகள்

இவை தமிழகத்தின் எழிலுக்கு எடுத்துக் காட்டுகள் '' என்று.

இப்படி எழிலார்ந்த பூமி— தொல்புகழ் மிக்க வரலாற்றைச் சொந்தமாகக் கொண்டது. இந்த மண்ணில் சுற்றுலா வளர்ச்சியைக் காணல் அரிதன்று! நம் முயற்சிகளை விரைவில் செயல்படுத்தினால் மேலை நாடுகளுக்கு இணையாக இத்துறையில் வளர முடியும்.

வரலாற்றுப் பெருமை மிக்க நம் நாட்டில், சுற்றுலாத் துறை வளர வேண்டிய அளவுக்கு இன்னும் வளரவில்லை. குறிப்பாகத் தென்னகத்தில் சுற்றுலாத் துறை வளர்ச்சிக்காக எல்லா முயற்சிகளையும் விரைந்து செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தின் விளைவு இன்று தமிழகத்தில் சுற்றுலாத் துறை அமைச்சரும், சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், சுற்றுலா வளர்ச்சி இயக்குநர் அலுவலகமும் அமைவதற்கு அடிகோலிற்று.

மேலை நாடுகளில் அவ்வரசுகள் இயற்கைக் காட்சிகள், பார்க்கத் தகுந்த இடங்கள். அனைத்தையும் பல வண்ணங்களில் அஞ்சல் அட்டைகளில் அச்சேற்றி விற்கின்றன. அது சுற்றுலாப் பயணிகளை மெத்தவும் கவர்கிறது. அந்த விளம்பரத்தை நாம் அனைத்திந்திய அளவில் கடைப்பிடிக்கவேண்டுமெனில் அஞ்சல் துறை மூலமாக இந்தியா முழுமைக்கும் பரவலாகச் செயல்படுத்தலாம் என்ற எண்ணம் என்னுள் வலுப்பெற்றது.

பயணத்திற்கு மணி மகுடமாக அமைந்த அரிய நிகழ்ச்சி

பாரிஸ் விமான நிலையத்தின் வரவேற்புக் கூடத்தில் முதல்வரும் அவரது குழுவினரும்








ஜெர்மனியில் உள்ள கோலன் நகரில், மின்னியல் முறை [எலக்ட்ரானிக்]யில் பயிர் அறுவடை ஆகும் காட்சியை முதல்வர் காண்கிறார்.

' பாரி மாநகரில் ' நான் கலந்து கொண்ட மூன்றாம் உலகத் தமிழ் மாநாடாகும். தேமதுரத் தமிழோசையை வெளிநாடொன்றில் பெருமையுடன் கேட்கின்ற பேற்றினை நான் பெற்றேன். முடிசூடி, புகழ் சூடி, முத்தமிழ் மீண்டும் முது வையம் ஆளுகின்ற நேரம் நெருங்குகின்றதோ என்ற ஆசை உணர்வுகள் அகத்தில் பூத்து, அவற்றில் விளைந்த தேன் என் நெஞ்செல்லாம் படர்ந்து இனித்தது. பன்னாட்டவர் கூடி ஆராய்கின்ற பெருமையினை வேறு எம்மொழியேனும் பெற்றுள்ளதோ என்று எண்ணி வியந்திட்டேன். என்னுயிர்ச் செந்தமிழ் என்றும் வாழ்ந்திட என்னால் இயன்றதைச் செய்யச் சூளுரை கொண்டேன்.

ஐரோப்பிய நாடுகளில் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஊறின்றி, அதிக அதிகாரங்களுடன் மாநிலங்கள் செயலாற்றுகின்ற திறனை, அது போன்ற அரசியல் அமைப்பால், மாநிலங்கள் முன்னேறுகின்ற பாங்கினை, மக்களின் ஒற்றுமை மேலும் வலுவடைந்திருக்கின்ற மாண்பினை நம் நாட்டிலும் காணும் நாள் தொலைவில் இல்லை என்ற எண்ணமும் என் மனத்திரையில் காட்சியாகியது.

வற்றாத ஆறு, வளமான பூமி! பூமிக்கடியில் புதைந்து கிடக்கும் தங்கம், நிலக்கரி, எண்ணெய்! இப்படிப் பல வளமும் கொழிக்கும் இந்த நாட்டில் வறுமை! ஏனிந்த நிலைமை ?

மக்கள் பெருக்கம் ஒரு காரணம் என்றாலும், மைய அளவிலும் மாநில அளவிலும் திறம்படத் திட்டங்களைத் தீட்டிக் கடுமையாக எல்லாரும் உழைப்போமேயானால் வறுமையை விரைவில் போக்கிட இயலும் என்ற நம்பிக்கை என் மனத்தில் எழுந்தது.

தொழில்களைத் தனியாரும் மாநில அரசுகளும் துவக்குவதில் காலதாமதம் ஏற்படுத்தும் நடைமுறைச் சிக்கல்களைப் போக்கினால் முன்னேற்றத்தை விரைவில் காண இயலும் என்ற நம்பிக்கையும் வளர்ந்தது. விவசாயமும் தொழிலும் ஒருங்கே வளரவேண்டும். இப்படிப் பல எண்ண அலைகள் என் மேலை நாட்டு அனுபவம் என்ற கரையில் மோதி மோதிக் கரைந்தன.

அந்த இருபது நாட்கள்—
அவை இனியவைதாம்!

எனினும் முத்துமாலையினூடே பொன்னிழை ஓடுவதைப் போல்துன்ப உணர்வு ஒன்றினைப் பெற வேண்டிய சந்தர்ப்பமும் எனக்கு நேர்ந்தது.

என்னுடைய சுற்றுப் பயணத்தைப் பற்றியும், செல்லும் இடங்களில் எல்லாம் தரப்படும் அயல் நாட்டு அமைச்சர்களின் மதிப்பும் கனிவும் மிக்க வார்த்தைகளைப் பற்றியும், என் மேலைநாட்டுப் பயணத்தின்போது இந்தியப் பத்திரிகைகள் உன்னிப்பாகக் கவனித்து நல்லமுறையில் விமர்சித்துள்ளன என்றெல்



ஜெர்மனி நாட்டின் அந்நியச் செலாவணியை அதிகரிக்க உதவும் கார் தயாரிப்புக் கூடத்தில்—கார்களின் அணிவகுப்புக் காட்சி.

லாம் எழுதிவிட்டு, உலகத் தமிழ் மாநாட்டில் நான் கலந்து கொள்ளப் போவதைப் பற்றியும் புகழ்ந்துரைத்து விட்டு, இறுதியில், இவற்றையெல்லாம் பார்த்துத் தம்பியின் புகழ் கண்டு இரசிக்க அண்ணன் இல்லையே என்று கடிதத்தை முடித்திருந்தார் தமிழக நண்பர் ஒருவர். அந்தக் கடைசி வரிகள் என் கண்களில் நீரைப் பொழிய வைத்தன. என் அன்னைக்குப் பிறகு அன்னையாய் விளங்கிய அண்ணனும் இல்லையென்று அவர் சுட்டிக் காட்டினால் என் உணர்ச்சிகளை எப்படிக் கட்டுப் படுத்திட முடியும்!

என்னை எதிர் கொண்டு அழைக்கச் சென்னையிலிருந்து பம்பாய் வந்திருந்த நண்பர்களுடன் சாந்தாகுரூஸ் விமான நிலையத்தை விட்டுப் புறப்பட்ட விமானம் பகல் 2-15 மணிக்குத் தமிழகத் தலைநகரின் வானில் தவழ்ந்து கொண்டிருந்தது.

மேலே—

வெள்ளிக் கதிரவனின் ஒள்ளிய கதிர்களில் வெண் பஞ்சுக் கூட்டமென மின்னிக் கொண்டிருந்தன மேகங்கள்!

கீழே—

கன்னங்கரிய வங்கக் கடல், அலை வீசி என் வரவை எதிர் நோக்கி இருந்தது. கடலல்ல அது ! என்னைக் காண வந்த தோழர்களின் உற்சாக வெள்ளம்தான் அது! இடமோ மீனம்பாக்கம் விமான நிலையம்!

'' அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ் '' என்னும் குறள் வரிகள் என் சிந்தனையில் மின்னி என் கண்களைக் குளமாக்கிப் பார்வையையும் மறைத்தன

'' என்னை அடிமை கொண்ட அன்பு உள்ளங்களே! உங்கள் அடிதொழுது விடைபெறுகிறேன், விரைவில் திரும்பி வந்து உங்களை மீண்டும் சந்திக்கிறேன்'' என்று கூறிச் சென்னை விமான நிலையத்தில் நான் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்ட காட்சியைத் தான் மறக்க முடியுமா?

ஆல்ப்ஸ் மலையின் அழகுச் சிகரங்களில் காணமுடியாத குளுமையினைத் தம் ஆயிரம் ஆயிரம் விழிகளில் தேக்கிக் கொண்டு இங்கு விமான நிலையத்தில் கூடியிருக்கும் அன்புச் சகோதரர்களின் பாச வலையில் கட்டுண்டவனாய் விமானத்திலிருந்து கீழே இறங்கிக் கன்னித் தமிழ் மண்ணில் மீண்டும் கால் வைத்தேன்.



நெதர்லாந்து நாட்டில்—இயந்திரங்களின் உதவியினால் பசுக்களிடமிருந்து பால் கறக்கும் காட்சி.

வழியெல்லாம் நான் கண்ட வளைவுகளும் வரவேற்புப் பதாகைகளும் என்னை ஆளாக்கிய அண்ணனின் அன்புக் கரங்களாகவே எனக்குத் தோன்றின.

இல்லம் செல்வதற்கு முன்னால், அண்ணன் துயில் புரியும் வங்கக் கடற்கரைக்குச் சென்றேன்.

நள்ளிரவு நேரமானாலும் இலட்சக்கணக்கானோர் காத்து நிற்கப் பழந்தமிழகத்தின் பட்டி தொட்டி தோறும் பகுத்தறிவுப் பயணம் நடத்திய அண்ணனின் கல்லறை முன்னால்—

பசுவைக் காணவந்த கன்று போல நின்றேன்.

என் இதயம் இருபது நாட்களாகச் சுமந்துவந்த பயணத்தின் நினைவுகளை அவர் செவிகளில் உணர்த்திவிட்டேன்— மௌனம் என்னும் மொழியால்.

இந்த இருபது நாள் பயணத்தின் இனிமையை யெல்லாம் நான் பேசுகின்ற கூட்டங்களில் எடுத்துரைக்க வேண்டும் என்ற துடிப்பு, உள்ளத்தில் எழுந்தாலும், மற்றுமோர் எண்ணம் அதற்கு அணை போட்டது ; அதற்குக் காரணம் உண்டு !

இங்கிலாந்து அரசு என்னைத் தனது நாட்டிற்கு அழைத்த பொழுது சுற்றுலாவிற்கான செலவினைத் தானே ஏற்றுக் கொள்ள விழைந்தது. ஆனால், விருந்தினராகச் செல்லும் அமைச்சர் போன்றோரின் பயணச் செலவினை அந்நந்த அரசே மேற்கொள்ள வேண்டும் என்று அண்மைக்காலமாக இந்திய அரசு கடைப்பிடித்து வரும் மரபினை ஒட்டி, அரசாங்கச் செலவிலேயே நான் வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ள நேரிட்டது. இந்த '' நன்றிக் கடனை '' ஓரளவு தீர்க்க, என்னுடைய பயண அனுபவங்களை மேடைகளில் கூறாது, அரசாங்க ஏடான '' தமிழரசு'' வாயிலாக வெளியிட்டு முடித்திருக்கிறேன்.

வணக்கம்.

(முற்றும்)







**சரமாரிக் கேள்வி! சமத்காரப் பதில்!**

இலண்டன் நிருபர்கள் கேட்டுள்ள வினாக்களுக்கு மிக அருமையாக விடை தந்திருக்கிறார் நமது மாநில முதல்வர் என்பதை அவரது 'இனியவை இருபது' தெளிவாக்கியிருக்கிறது. அடேயப்பா! சரமாரியான கேள்விகள்! சமத்காரமான பதில்கள்! படிக்கப் படிக்கச் சுவை தருகின்றன.

—எம். எஸ். விவேகானந்தன்,
எட்டையாபுரம்.

**வழிகாட்டும் தமிழ் நாடு!**

அனைத்து இந்திய அளவில் மிகச் சிறந்த கிராமமாகத் தமிழ் நாட்டிலுள்ள 'மணவாளக் குறிச்சி' என்ற கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதல் பரிசு பெற்றுள்ளது. தமிழ்நாட்டிற்கு இதனினும் வேறு புகழ் வேண்டுமா? இதன் வாயிலாகத் தமிழ் நாடு மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டியாகத் திகழ்கிறது என்பது விளங்குகிறது.

—கே. எஸ். கலியபெருமாள்,
கட்டமுத்துப்பாளையம்.

**நிதி அறிக்கைக்கு நன்றி!**

நாட்டினர்தாம் போற்றும் நிதி அறிக்கை பொன்னை ஏட்டிலே தந்திட்டீர் நன்றி.

—ஏ.கே. கருப்பையா, குளித்தலை.

**தக்ககல் தக்கைக்கல்!**

தக்கைக்கல் என்று ஒரு வகைக்கல் இருப்பதை நாங்கள் இதுவரை அறிந்ததில்லை. 'தமிழரசு' ஜூலை முதல் தேதி இதழைப் படித்துத்தான் தெரிந்து கொண்டோம். 'தமிழரசு'க்கு நன்றி; ஏற்றுக்கொள்ளுக!

—ஸ்டெல்லா, சென்னை-33.

**பெண்ணின் பெருமை!**

பனிமலை மீது பயணம் செய்த பாவை ஹேமாவைப் பற்றிய கட்டுரை சுவையாக இருந்தது. புராண காலத்திலும் சரி இந்த நவீன காலத்திலும் சரி பெண்கள் வல்லவர்கள் என்ற தத்துவத்தை விளக்கிக் காட்டும் ஹேமாவுக்கு எங்கள் பெண் இனத்தின் சார்பாக நன்றியைத் 'தமிழரசின்' வாயிலாகத் தெரிவிக்கிறோம்.

—லதா, லலிதா,
கோயம்புத்தூர்-3.

**மேதைகளைத் தருக!**

நாளைய தலைமுறை என்ற தலைப்பில் தாமஸ் ஆல்வா எடிசன் பற்றிவெளியாகிஇருந்த கட்டுரை சுவையாக இருந்தது. மேதைகளின் வாழ்க்கை வரலாற்றை அடிக்கடி 'தமிழரசு' படைக்க வேண்டும் என்று வாசகர்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

—சுந்தரராசன், சென்னை-48.

**இரண்டாம் வயது வாழ்த்து!**

திரண்ட கருத்தை அழகாகச்
செப்பும் இதழாய் ஓராண்டு
உருண்டேஎழிலாய் நடைபோடும்
உயர்ந்த இதழே! தமிழரசே!
இரண்டாம் ஆண்டில் அடி
யெடுத்து
இனிதாய்வந்துளாய் வாழியவே!
வறண்ட பயிர்க்கோர் பெரு
மழைபோல்
வடிவாய் என்றும் வாழியவே!

—வித்துவான் நெல்லை
ஆ. கணபதி,
—வித்துவான் ஆ.சுப்பு
லட்சுமி கணபதி,
சென்னை-15.

## வெண்பாப் போட்டி-14

**ஈற்றடி : நிலையை ஒழிக்க நினை**

முடிவு நாள் 2—8—1971

பரிசு: ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு.

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2

குறிப்பு: நேரிசை வெண்பா மட்டுமே அனுப்ப வேண்டும். முடிவு தேதிக்குப் பின்னர் வருபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா!



# உணவுக் களஞ்சியம்

நல்ல 'உணவுக் களஞ்சியங்களாக'வும், 'உர உற்பத்திச் சாலைகளாகவும், 'உழைப்பின் சின்னங்களாகவும்' விளங்கும் கால்நடைகளின் பெருமைகளைப் பலர் இன்னும் அறியாமல் இருக்கிறோம் என்பது மட்டுமல்ல—அவற்றை நன்கு பேணிக்காப்பதில் போதுமான அளவு அக்கறை காட்டாமலும் இருந்து வருகிறோம் என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

பட்டிதொட்டிகளிலும் சிற்றூர்களிலும் வாழ்கின்ற மக்களுக்குக் கால்நடைகளே சிறந்த செல்வங்கள். எனினும், அவற்றிற்கு வந்த நோயைப் போக்கவும், நோய் வராமல் பாதுகாக்கவும் வழிவகையறியாமல், அவற்றால் பெறக்கூடிய முழுப்பயனையும் பெற முடியாமல் கால்நடை வளர்ப்புப் பற்றிய அறிவியலறிவு இல்லாமல்—அதனைப் பெறுதற்கான அக்கறையுமில்லாமல் பெரும்பான்மையானவர்கள் வாழ்கின்ற நிலைமையை நாம் கண்டு வருகிறோம். கால்நடைகளின் வளர்ச்சியிலும், அவற்றின் நல்வாழ்விலும் அக்கறை காட்டுவதன் மூலம்-வீடும் நாடும் நலம் பெறும்! வாழ்வு வளம் பெறும்! இந்த நாட்டில் உணவுப் பற்றாக்குறை நீங்கும்-நல்ல சத்துணவு கிடைக்கும்-சிற்றூர்களும் பேரூர்களும் நல்ல செல்வச் செழுமை பெறும்.




மேலே குறித்துள்ள இந்தப் பேருண்மைகளைச் சாமான்ய அறிவினர்க்கும் உணர்த்தும் பெரும் ஏற்றுள்ளதுதான் நமது தமிழக அரசின் கால்நடை வளர்ச்சித் துறை. இத்துறையினர் ஆங்காங்கு பல்வேறு கிராமங்களிலும் கிராம கால்நடை வளர்ச்சி முகாம்களை நடத்தி வருகின்றனர்.

இவ்வகையில் அண்மையில் 18—6—71-ல் செங்கற்பட்டு மாவட்டம் படப்பை கால்நடை மருந்தகத்தில் தமிழ் நாடு கால்நடை வளர்ப்புத் துறையினர் கால்நடை வளர்ச்சி முகாம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத் துறையமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் முகாமைத் துவக்கி வைத்து, முகாமின் இன்றியமையாத் தன்மையையும், மக்கள் பெறத்தக்க பெரும் பயன்களையும் எளிதாக—தெளிவாக எடுத்துக் கூறினார். பின்னர்,

''இன்று நம்மைச் சுற்றிச் சூழ்ந்துள்ள சிலந்திக்கூடு போன்ற வறுமைக் கூட்டத்தைத் தகர்த்தெறிய நாம் நல்ல தரமான ஆடு, மாடு, கோழி, பன்றி முதலியவற்றை வளர்க்க வேண்டும்'' என்றும், ''வளரும் உயிரினங்களை வளர்த்து, உற்பத்தியைப் பெருக்கினால் பஞ்சம், பசி, பட்டினி யாவும் பறந்து, புக்கள் பெருகும்'' என்றும், ''இப் பகுதி வாழும் மக்களிடையே கால்நடை வளர்ப்புப் பற்றிய அறிவையும் ஆர்வத்தையும் கிளறித் தூண்டிவிட இந்த முகாமும், இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள கண்காட்சியும் பயன்படுமாறு செய்யத் தொடர்புடைய அலுவலர்கள் அனைவரும் பெருமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்'' என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

முகாமில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த கிராமக் கால்நடைக் கண்காட்சியைச் சட்டமன்ற உறுப்பினர் திரு. கோபால் திறந்துவைத்தார்.

கால்நடை வளர்ப்பதில் ஈடுபட்டுள்ளவர்களும், அதில் ஈடுபட விருப்பமுடையவர்களும் அறிந்துகொள்ள வேண்டிய பல்வேறு செய்திகளையும், செயல் முறைகளையும், எல்லாரும் எளிதில் புரிந்து கொள்ளத்தக்க வகையில் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கால்நடைகளைப் பற்றக்கூடிய நோய்களையும், அந்நோய் வராமல் தடுக்கும் வழிவகைகளையும், நோய் வந்தபின் செய்ய வேண்டிய சிகிச்சை முறைகளையும், கால்நடைகளால் நாம் பெறத்தக்க பெரும்பயன்களையும், கால்நடை வளர்ச்சித் திட்டப் பயன்களையும் யாவரும் எளிதில் புரிந்து கொள்ளத் தக்கவகையில் கண்காட்சி அமைந்திருந்தது.






கால் நடைகளிடமிருந்து நாம் பெறுவது மிகமிக அதிகம் என்பதைக் கீழ்க்கண்ட புள்ளி விவரம் நமக்கு உறுதிப்படுத்துகிறது. ஆண்டுதோறும் நாம் நமது தமிழ் நாட்டில் கால்நடைகளின் மூலம் பெறுகிற வருமானம் பின்வருமாறு;—

பால் 9,071 இலட்சம் ரூபாய். பால் பொருள்கள் 846.16 இலட்சம் ரூபாய். கோழி இறைச்சி, முட்டை 1,007. இலட்சம் ரூபாய். மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, பன்றிறைச்சி 155. இலட்சம் ரூபாய். உரோமம், கம்பளம், மாட்டுத்தோல், ஆட்டுத்தோல் 239. இலட்ச ரூபாய். எரு, கொம்பு, எலும்பு 675.84 இலட்சம் ரூபாய்.

அடுத்து, கால்நடை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கது செயற்கைக் கருவூட்டல். ஆம்! கலப்பின மாடுகள், கோழிகள் முதலியன.

அதிகப் பால் தருகிற திறன் கொண்ட அயல்நாட்டு பிரிசியன், ஜெர்ஸ் போன்ற உயர்தர-உயரினக் காளைகளைக் கொண்டு செயற்கை முறையில் கலப்பின மாடுகளை உற்பத்தி செய்கிற கால்நடை வளர்ச்சித் துறையின் சாதனை பாராட்டத் தக்கதாகும்; இதன் மூலம், விவசாயிகள் தனித் தனியே காளை வளர்க்க வேண்டிய அவசியமும், சிரமம் இல்லாமற் போகிறது. தரம் குறையாமல் இனத்தைப் பாதுகாக்க முடிகிறது. பசுக்களுக்கு நோய் பரவாமல் தடுக்க முடிகிறது.

இனி கோழி வளர்ப்புப் பற்றியும் பல நுணுக்கமான இன்றியமையாத செய்திகளை நாம் கண்காட்சியிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. சாதாரணமாக ஒருவர் 100 கோழிகள் வளர்த்தால் அந்தக் கோழிகளுக்குச் செலவாகிற எல்லாச் செலவுகளும் நீங்கலாக, மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் இலாபம் பெறலாம். 'பெட்டைகளைப் பேணி முட்டைகளைச் சேமி' என்று ஒரு 'புதுமொழி'யையே உருவாக்கியிருக்கிறார்கள். கோழி வளர்ப்புப் பிரிவில், ஒரு விசித்திரமான கோழி இனத்தை நாங்கள் கண்டு மகிழ்ந்தோம்.

ஒயிட்லெக்கன் என்னும் ஒரு வகை ஆஸ்திரேலிய கோழியினத்தை நாம் அறிவோம். அந்தக் கோழி நல்ல தூய வெண்ணிறமுடையது. இது குறைந்த அளவுத் தீனியைத் தின்று நிறைந்த அளவு முட்டைகளையிடுவது. வெள்ளைக் கோழி கொள்ளை இலாபம் என்பார்கள்.

இதுபோலவே, ஆஸ்திரேலியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஒரு கோழியினம் ஆஸ்டிரலார்ப் என்பது. ஆஸ்டிரலார்ப் கோழிகள் கொல்லைப்புறத்திலும், குப்பையிலும் சிந்திக் கிடக்கும் தீனியைத் தின்று வளர்ந்து ஏராளமான முட்டைகளையிட்டுத் தருவது. இது மைபோன்ற கறுப்பு நிறமுடையது.

மேற்கூறிய வெள்ளைக் கோழியையும் அடுத்துக் கூறிய கறுப்புக் கோழியையும் இணைத்து அதன் மூலம் தோற்றுவிக்கும் புதிய கலப்பினமே ஆஸ்ட்ரோ வெள்ளை யினம் என்பது.

இந்த ஆஸ்ட்ரோ வெள்ளை யினம் கறுப்பு நிறப் புள்ளிகளையுடைய வெள்ளைநிறக் கோழியாக உள்ளது. இது, தான் இட்ட முட்டைகளைத் தானே தனது அலகால் கொத்தி உடைத்து நாசம் செய்துவிடுமாம். இதைத் தவிர்க்க இந்தக் கோழியின் மேலலகு நுனியை உடைத்துவிட்டிருக்கிறார்கள்.

இனி, இன்னொரு முக்கியமான செய்தியையும் நாம் தெரிந்து கொள்கிறோம். அதாவது, பயனற்றவை என்று கருதி ஒதுக்கிக் குப்பையில் கொட்டுகிற கோழி இறகுகள் மெத்தையில் அடைக்கவும், கால்நடைத் தீவனத்திற்கான உணவு மாவு தயாரிக்கவும் பயன்படுகின்றன என்பதும், கோழியின் இரத்தம், தலை, கால்கள் முதலியன பூனை, நாய், பன்றி, மீன் ஆகியவற்றிற்கு உணவாகின்றன என்பதும் நம்மில் பலருக்குப் புதிய செய்திதானே!



அடுத்துபசுவுக்குநல்ல சத்தூட்ட உணவாகப் பயன் படுகிற புல் வளர்ப்பது. சாதாரணமாக ஒரு ஏக்கரில் இந்தப் புல்லை 1 லட்சம் ராத்தல் மகசூல் செய்யலாமாம்; இதனைப் பயிரிடுவதற்கான செலவு 500 ரூபாய். இந்தப் புல்லைக் கொண்டு மூன்று கறவைப் பசுக்களையும் ஒரு பால் வற்றிய பசுவையும் பராமரிக்கலாம். பசுக்களிலிருந்து நாள்தோறும் கிடைக்கும் பால் 15 லிட்டர். இதனால் கிடைக்கும் ஆண்டு வருமானம் ரூபாய் 4,380. மூன்று பசுக்களையும் பராமரிக்கும் மொத்தச் செலவு ரூ. 1,520. புல் பண்ணை வைத்து மூன்று பசுக்களையும் பராமரிப்பவர் பெறுகிற நிகர லாபம் ரூ. 2,860. இத்தகைய பல்வேறு செய்திகளை நாம் கண்காட்சியிலிருந்து தெரிந்து கொள்கிறோம். இதுபோல ஆடு வளர்ப்பு,

!!

பன்றி வளர்ப்புப் பற்றியும், பல்வேறு உண்மைகளையும் நாம் தெரிந்து கொள்கிறோம்.

பொதுவாக, நம்மில் பலருக்குப் பன்றியின் சிறப்புத் தெரிவதில்லை. சீமைப் (யார்க்ஷயர்) பன்றி மிக நல்ல இலாபம் தரும் ஒன்று. குறைந்த செலவில் நிறைந்த இலாபம் பெற எண்ணுகிறவர்கள் பன்றி வளர்ப்பில் அக்கறை செலுத்தலாம். இதனை இழிவென எவரும் கருதவேண்டியதில்லை.

கண்காட்சியைப் பார்ப்பவர்கள் கால்நடை வளர்ச்சித் துறையின் அளப்பரிய சாதனைகளை எண்ணி வியக்காமலிருக்க முடியாது! விவசாயிகள் மட்டுமல்ல-வேறு பலரும் கால்நடை வளர்ப்பதை ஒரு துணைத் தொழிலாகக் கூட மேற்கொள்ளலாம். அது, நாட்டையும் வீட்டையும் பல்லாற்ருனும் வளர்க்கப் பயன்படும்.

கொத்தித் திரியும் அந்தக்
கோழி—அதைக்
கூட்டி விளையாடு பாப்பா.

• • • •




பாலைப் பொழிந்துதரும்
பாப்பா—அந்தப்
பசுமிக நல்லதடி
பாப்பா'

• • • •

..................நெல்
வயலில் உழுதுவரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை
ஆடு—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா'

• • • •

என்கிற பாரதியாரின் பாடல் வரிகளும்

நிறையப் பால்தரும்
கறவை—நீ
மறவேல் அதன்
உறவை

என்னும் பாரதிதாசனின் கவிதை வரிகளும்,

குறு நொய்யும் தவிடும் பெட்டைக்
கோழி தின்கின் றவற்றை மாற்றி
வறுமை தீர் வழியில் செல்வம்
வாய்த்திட்ட முட்டை நல்கும்

• • • •

நாடுகள் மதிக்கச் செல்வம்
நாடொறும் பெருகக் காளை
உழுதுநீர் இறைக்கும் வண்டி
ஓய்விலா திழுக்கும்......

என்னும் புதுமைக் கவிஞர்களின் பாடல்களும் கால்நடைக் கண்காட்சியில் இலக்கிய விருந்தாக அமைந்து இன்பம் பயக்கின்றன.

விழாவில் நலத்துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட நெல் அறுவடைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினர். பின்னர், புறக்கடை கோழித்திட்டத்தின்கீழ் கோழிகளும், ஒருநாள் கோழிக் குஞ்சுகளும், மாடுகள் கடன் வழங்குத் திட்டத்தின்கீழ் மாடுகளும், மாண்டியா செம்மறியாடுகளும், ஆண் பன்றிகளும் வழங்கினர்கள்.











எஸ். வி. சிட்டிபாபு (பள்ளிக் கல்வி இயக்குநர்)

தென்றலுடன் பிறந்த தமிழ் மணக்கும் தமிழகம் படிப்படியாக வளர்கிறது; தொடர்ந்து வளர்கிறது. வளர்ச்சிக்கு அடிப்படை, கல்வி. இம்மை பயப்பதும், மம்மர் அறுப்பதும் கல்வி அன்றோ? அதை நாம் உணர்வோம்—நமது அரசும் அறியும். கல்வியில் சிறந்த தமிழ் நாட்டில் மேலும் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் பல பொன்னொளி வீசும் வகையில் கல்வித் துறை வரலாற்றில் காணக் கிடக்கின்றன.

எல்லாருக்கும் கல்வி. அதுவும் பல்கலைக் கழக புகுமுக வகுப்பு வரை யாவருக்கும் இப்பொழுது இலவசக் கல்வி; துவக்கப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், போன்ற கல்விக்கூடங்கள் அனைத்திலும் கணிசமான வளர்ச்சியைக் காண்கிறோம்.

'' தெருவெல்லாம் இரண்டொரு பள்ளி'' என்ருர் பாரதியார். 300 மக்கள் தொகை கொண்ட எல்லா ஊர்களிலும் இப்பொழுது தமிழ் நாட்டில் பள்ளிகள் உள்ளன. கடந்தநான்கு ஆண்டுகளில் மட்டும் 724 துவக்க, உயர் துவக்கப் பள்ளிகளும், 263 உயர் நிலைப் பள்ளிகளும் திறக்கப் பட்டுள்ளன. 1967-ஆம் ஆண்டில் இருந்ததை விட துவக்க, உயர் துவக்கப்பள்ளிகளில் மட்டும் சுமார் எட்டு இலட்சம் மாணவர்கள் அதிகமாகப் பயிலுகின்றனர். 6—11 வயதுப் பிள்ளைகளில் 94.1 சதவிகிதமும், 11—14 வயதுக் குழுவினரில் 55.1 சதவிகிதமும், 11—17 வயதுக்குழுவினரில் 35.4 சதவிகிதமும் இப்பொழுது கல்விக் கூடங்களில் பயின்று வருகின்றனர்.

1966-ஆம் ஆண்டு இருந்ததை விட மற்ருெரு பங்கு அதிகமான மாணவர்கள் கல்லூரிகளில் படிக்க வசதி ஏற்பட்டுள்ளது. 1966-ஆம் ஆண்டில் 80,000 மாணவர்கள்தான் இருந்தனர். இன்றே 1,66,000 மாணவர்கள் கல்லூரியில் பயிலுகின்றனர். நாடு சுதந்திரமடைந்த இரு தலைமுறைகளுக்குப் பின் அதாவது 1967-ல் நமது மாநிலத்தில் 105 கல்லூரிகள்தான் இருந்தன. ஆனல் கடந்த ஆண்டுகளில் மட்டும் 56 புதுக் கல்லூரிகள் துவக்கப்பட்டு இன்று நமது மாநிலத்தில் 161 கல்லூரிகள் இருக்கின்றன.

தொடர்ந்து கல்லூரியில் படிப்பதற்கு வசதியற்றுப் படிப்பை நிறுத்திவிட்டுப் பணியில் புகுந்தோருக்கும் கல்லூரிக் கல்வி பெற விரும்பும் மற்ருேர்க்கும் மாலைக் கல்லூரிகள் (Evening Colleges) மூலம் கல்வி பெறும் வாய்ப்பினையும் அரசு பெருக்கியுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 20 மாலை நேரக் கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ளன. 1966-ஆம் ஆண்டில் நமது மாநிலத்தில் இருந்த மாலை நேரக்கல்லூரிகள் ஐந்துதான். இப்பொழுது 25 உள்ளன.

முந்திய தலைமுறையில் துவக்கப்பட்ட பள்ளி மதிய உணவுத் திட்டமும் மிக விரைவில் பரவியுள்ளது. 1 முதல் 8 வகுப்பு வரை உள்ள மாணவர்களில் 18 இலட்சம் மாணவர்கள் இப்பொழுது மதிய உணவு பெறுகின்றனர். இவர்கள் துவக்க, உயர் துவக்கப்பள்ளி மாணவர் தொகையில் மூன்றில் ஒரு பங்காவர். கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்காக 748 இலட்சம் ரூபாய் தமிழக அரசு செலவு செய்துள்ளது. பள்ளிகளில் மதிய உணவு வழங்குவதில் ஆசிரியர்களுக்கு இருக்கின்ற சில தொந்தரவுகளைக் குறைப்பதற்காகவும் சுகாதாரம் மிகுந்த சூழ் நிலையில் மதிய உணவினைச் சமைப்பதற்காகவும், மூன்று மைய சமையற்கூடங்கள் கேர் நிறுவனத்தாரின் உதவி கொண்டு அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும் 30 மைய சமையற்கூடங்களுக்கான கட்டட வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. திட்டத்தின்படி நாளடைவில் ஒவ்வொரு

ஊராட்சி ஒன்றியத்திலும் குறைந்தது ஒரு மைய சமையற்கூடம் இருக்கும். மைய சமையற்கூடங்களில் தயாரிக்கப்படுகின்ற உணவுப் பொருள்கள் தகுந்த பாத்திரங்களில் பக்குவமாக, இத்திட்டத்திற்கென கேர் நிறுவத்தினரால் வாங்கப்பட்டுள்ள ஊர்திகளின் மூலம் கிராமங்களிலுள்ள பள்ளிகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. மதிய உணவுத் திட்டத்திற்கான பண்டங்களைப் பக்குவமாகச் சேமித்துவைப்பதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்று என வட்டார மதிய உணவுப் பொருள் கிடங்குகள் சுமார் 30 இலட்சம் ரூபாயில் கட்டத் திட்டமிட்டு வேலை நடந்து வருகிறது.

பள்ளிகளில் படிக்கும் ஏழைப் பிள்ளைகளுக்கு உணவு அளிப்பதோடு மட்டுமல்லாது, 1 முதல் 3 வகுப்பு வரையில் படிக்கின்ற ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசப் புத்தகங்களும், முதல் வகுப்பில் படிக்கின்ற பிள்ளைகளுக்கு இலவசச் சிலேட்டுகளும் 1967-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன. இத் திட்டத்தினால் கடந்த நான்கு ஆண்டுகளில் சுமார் 46 இலட்சம் பிள்ளைகள் பயனடைந்துள்ளனர்.

அரசு செய்கின்ற ஆக்க வேலைகளைக் கண்டு களிக்கின்ற பெற்றோர், பல்வேறு கிராமங்களில் ஒன்றுகூடி கல்வித்துறையினரின் ஒத்துழைப்புடன் கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும், 115 பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தி, 345 இலட்சம் ரூபாய் பெறுமானம் உள்ள பள்ளிப் பொருட்களைப் பல்வேறு பள்ளிகளுக்கு வாரி வழங்கி



உள்ளனர். அத்துடன் 31 இலட்சம் ரூபாய்மதிப்புடைய சீருடைகளையும் பள்ளிக்குழந்தைகளுக்கு வழங்கியுள்ளனர்.

பள்ளி மற்றும் பள்ளிகளின் கட்டட வசதிகளைப் பெருக்குவதற்கும், உயர்நிலைப்பள்ளிகளில் உள்ள ஆய்வுக்கூட வசதிகளை விரிவுபடுத்துவதற்காகவும், கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழகத்தில் ரூ. 712 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. கட்டட வசதிகளைப் பெருக்குவதோடு மட்டும் இல்லாது, பள்ளிகளுக்குத் தேவைப்படுகின்ற தளவாடச் சாமான்கள், நூலகப் புத்தகங்கள், கற்பித்தலுக்குத் தேவையான துணைக்கருவிகள் ஆகியவை வாங்குவதற்காக 75 இலட்ச ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. ஆய்வுக்கூடங்கள் இல்லாத பள்ளியின் குறைகளைப் போக்குவதற்காகஒருமுன்னோடித் திட்டம் அமைத்து அத்திட்டத்தின்படி இப்பொழுது இரண்டு இயங்கு ஆய்வுக்கூடங்கள் (Mobile Laboratories) தஞ்சாவூர் மாவட்டத்தில் பணியாற்றி வருகின்றன.

## ஆசிரியர் நலன்

கல்விக்கூடங்கள் எண்ணிக்கையைப் பெருக்கிக், கல்விக்கூடங்களுக்குத்தேவைப்படும் வசதிகளைக் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவுசெய்துவிரிவுபடுத்தி, படிக்கின்றமாணவர்களின்தொகையை இலட்சக்கணக்கில் பெருக்கி, எல்லாருக்கும் இலவசக் கல்வி, கல்லூரி புகுமுக வகுப்பு வரை அளித்து, கல்வி வரலாற்றில் புதியதொரு முன்னேற்றத்தைப் புகுத்திய தமிழக அரசு, ஆசிரியர்களின் குறைகளையும் படிப்படியாகத் தீர்க்கப், பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயலாற்றியுள்ளது. ஆசிரியர் தேங்கினால் பள்ளிகள் தேங்கும். பள்ளிகள் தேங்கினால் ஊர் தேங்கும். ஊர் தேங்கினால் நாடு தேங்கும் என்பது மேலைநாட்டுப் பழமொழிகளில் ஒன்றாகும். ஆசிரியப் பொதுமக்களின் வசதிகளைப் படிப்படியாகப் பெருக்குவதுடன் சமுதாயத்தில் அவர்கள் மதிக்கத்தக்கதொரு இடத்தைப் பெறுவதற்காகச் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் பலவாகும்.

பல்வேறு நிர்வாகத்திற்கடியில் பணிபுரியும் ஆசிரியர்களிடையே காணப்படுகிற வித்தியாசங்



களையும், குறைபாடுகளையும் நீக்கும் முகத்தான் எல்லாப் பள்ளிகளிலும் பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு ஒய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், நகர ஈட்டுப் படி, விடுப்பு வசதிகள், வீட்டு வாடகைப் படி, பண்டிகை முன்பணம் பெறுகின்ற வசதி, அரசினர் மருத்துவ மனைகளில் இலவச மருத்துவ வசதி, திருமணச் செலவிற்கான கடன் பெறும் வாய்ப்பு, மலைப்படித் தொகை, குளிர்காலப் படித் தொகை போன்ற பல்வேறு நலன்கள் வழங்கப்பட்டு உள்ளன. படிப்பிற்குத் தகுந்த பணியிடம் பெறாத செக்கண்டரி கிரேடு ஆசிரியர் 19,500 பேருக்கு செக்கண்டரி கிரேடு சம்பள விகிதத்தில் சம்பளம் பெறும் வாய்ப்பினை இவ்வரசு அளித்துள்ளது. ஆசிரியர்கள் தங்கள் கல்வித்தகுதியினை உயர்த்திக் கொள்கின்ற நிலையில், அவர்கள் பணிபுரியும் இடங்களில் சம்பள அளவையில், இருபடி சம்பள உயர்வு கொடுத்துள்ளது. தொடக்க, உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டு வந்த அரசாங்க விருதுகளை உயர் நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்க ஏற்பாடு செய்துள்ளது. நம் அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும், ஆசிரியர் இல்லங்கள் அமைப்பதற்காக ஆசிரியர்கள் தாமாகவே ஏற்படுத்திக்கொண்ட திட்டத்திற்கு ஊக்கம் அளிக்கும் வகையில், வட ஆர்க்காடு மாவட்ட ஆசிரியர்களின் முயற்சியால் ஏற்படுத்தப்பட்ட ஆசிரியர் இல்லத்திற்கு அரசு ரூ. 50,000 மானியம் அளித்துள்ளது: அரசின் நிர்வாகத்தின் கீழ் பணிபுரியும் பள்ளித்துணை ஆய்வர் மற்றும் பி.டி.ஆசிரியர் ஆகியோர் தொழில் துறையில் தமது தகுதியினைப் பெருக்கிக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கும்பொருட்டுஆண்டுதோறும்அரசாங்கச்செலவிலேயே பத்துப்பேர் (எம். எட்.) படிக்க வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.



ஆசிரியர் பயிற்சி பெற்றபின் வேலைவாய்ப்பினைப் பெறாது நின்ற பி.டி. ஆசிரியர்கள், செக்கண்டரி கிரேடு, எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்கள் 6,500 பேருக்கு தொழில் பயில் ஆசிரியப் பணியிடங்கள் அமைத்துக் கொடுத்துள்ளது நம் அரசு. புதிய சம்பள ஆய்வுக்குழு அறிக்கையின்மூலம் பல்வேறு நிலையில் உள்ள ஆசிரியர்களுக்கு, தேர்வு நிலைப் பணியிடங்கள் (செலக்ஷன் கிரேடு)வழங்கியுள்ளது. இவையெல்லாம் தமிழ்நாடு கல்வித்துறை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

## ஊனமுற்றோர் நலனுக்காக

துவக்கக் கல்வி, உயர்துவக்கக் கல்வி, உயர்நிலைக்கல்வி, கல்லூரிக் கல்வி, ஆசிரியர்களுக்கான வசதிகள் ஆகியவைகளில் கவனத்தைச் செலுத்திய அரசு, கண் இழந்தோர், காது கேளாதோர், உடல் உறுப்புக்குறைபாடுற்றோர், பிள்ளைப் பருவத்தில் தகுந்த பராமரிப்பை இழந்தோர் ஆகியவர்களுக்கும் கல்வி வசதிகளைப் பெருக்கப் பல திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. கண் இழந்தோருக்குக் கல்வியுடன் வாழ்க்கை நடத்தத் தேவைப்படும் பொறியியல் பயிற்சியும் அளிக்கும் திட்டம் ஒன்றினை 1967-ஆம் ஆண்டில் கிண்டியில் தொடங்கி நடத்தி வருகிறது. இத் திட்டத்தின் கீழ், பார்வையற்றோர் 91 பேர் பயிற்சிபெற்றுப்பயனடைந்துள்ளனர். மேலும் தமிழ்நாடு, ஆந்திரம், மைசூர், கேரளம் ஆகிய தென்மாநிலங்களில் உள்ள கண் இழந்தோர் கல்விக்கு வேண்டிய பிரெய்ல்லி (Braille) புத்தகங்களை வெளியிடப் பூவிருந்தவல்லியில் உள்ள கண் இழந்தோர் பள்ளியில் ஓர் அச்சகம் 1968-ல் தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது.

குழந்தைப் பருவத்தில் பெற்றோரின் பராமரிப்பை இழந்த குழந்தைகளைக் காக்கின்ற இல்லங்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்ற மான்யம்1969-ஆம்ஆண்டிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது. உடலுறுப்புக் குறைந்த குழந்தைகளுக்காக மத்திய அரசு கொடுக்கின்ற பண உதவித் திட்டம் போதாது எனக் கண்ட இம்மாநில அரசு 1969-ஆம் ஆண்டு முதல் இம் மாநிலத்தில் அத்தகைய குழந்தைகளுக்குப் பல உதவிகள் அளிக்கத் தனியான ஒரு திட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்துள்ளது.

உரிமையிழந்து இலங்கையில் இருந்தும், பர்மாவிலிருந்தும், தமிழ்நாட்டில் வந்து குடியேறிய மக்களின் குழந்தைகள் பள்ளியில் படிப்பதற்கு வசதி செய்து தரும் வகையில் அவர்கள் எந்த விதத் தனிச்சம்பளமும் கட்ட வேண்டாம் என்ற சலுகையை அரசு அளித்துள்ளது.

எழுத்தறிவு பெறாத முதியோர்களுக்கு அவர்களின் தொழிலை ஒட்டி எழுத்தறிவு கொடுப்பதற்காகப் பல செயல்முறை எழுத்தறிவு நிலையங்கள், தஞ்சாவூர், கோயமுத்தூர், வட ஆர்க்காடு, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் படிப்படியாக 1969-ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு வந்துள்ளன. மேலும் மாவட்ட நூலக ஆணைக் குழுக்களின் மேற்பார்வையில் நடத்தப்படும் பொதுநூலகங்கள், கிளை நூலகங்கள், நூல் வழங்கும் நிலையங்கள், இயங்கும்நூலகங்கள் ஆகியவை படிப்படியாகப் பெருகி வருகின்றன.

ஒரு நாட்டின் சிறப்பும், பெருமையும், ஆக்கமும், வலிவும் அதன் மக்கள் பெறும் கல்விச் செல்வத்தையே ஒட்டியுள்ளது எனும் உண்மையை முழுக்க முழுக்க உணர்ந்துள்ள நம் அரசு இன்று நிதி வருவாயில் நான்கில் ஒரு பங்கினைக் கல்விக்காக மனமுவந்து செலவு செய்கின்ற காரணத்தினால்தான் இத்தனை அளவிற்குக்கல்வித்துறைவளர்ந்து வந்துள்ளது. இதற்காக நம் அரசிற்கு நமதுஆழ்ந்தநன்றியைத் தெரிவித்துக் கொள்வோமாக! இறுதியாக ஒன்று நமது நன்றிக் கடனைச் சொல்லளவில் நிறுத்திக் கொள்ளாமல் அளிக்கப்பட்டுள்ள பெருவாரியான கல்வி நலன்களைச் சீரிய வகையில் பயன்படுத்தித் தமிழ்நாட்டின் கீர்த்தியினை மேலோங்கச் செய்வோமாக!

## மாம்பழத்திலுள்ள சத்துக்கள்!

| | |
|---|---|
| புரதச் சத்து | 0.6 சதம் |
| கொழுப்புச் சத்து | 0.1 " |
| தாதுப் பொருள்கள். | 0.3 " |
| சர்க்கரை, மாவு வகைப்பொருட்கள் | 11.25 " |
| சுண்ணும்புச் சத்து | 0.01 " |
| பாஸ்பரஸ் சத்து | 0.02 " |
| இரும்புச் சத்து | 0.30 " |
| வைட்டமின் 'ஏ' | 4,800 யூனிட்டுகள் |
| வைட்டமின் 'சி' (100 கிராமில்)..... | 52.7 மில்லி கிராம் |
| வெப்ப அளவு (கலோரி)........ | 50 |

மாம்பழங்களில் இருக்கும் வைட்டமின் 'சி' சத்து ஆப்பிள் பழங்களில் உள்ளதை விட சிறந்து காணப்படுகிறது!




## முகப்பிலே . . . .

தித்திக்கும் தமிழ் தவழும் திருநெல்வேலி மாவட்டத்தின் எல்லையில் அமைந்தது குளிர் தூங்கும் குற்றுலம்; கண்ணையும் கருத்தையும் கவரும் விண்ணளாவிய குன்றங்கள்; பச்சைப் பசும் போர்வையைப் போர்த்துப் புன்னகை பூத்துப் பொலியும் பூஞ்சோலைகள்; வானமங்கை தண்ணருளை வாரிப் பொழிவது போல் பாய்ந்து வரும் வெள்ளருவி; மலைமாது குன்றெனும் தன் மார்பை வெள்ளிய அருவியெனும் மெல்லிய துகிலால் மறைத்து நிமிர்ந்து நிற்கும் திருக்கோலம்; பொங்கி வரும் நுரை மலர்களை அவள் தன் அலைக்கரங்களால் விண்ணிலே வாரி இறைத்து மகிழும் திருவிளையாடல்; வண்ணக் கவிஞனின் முத்தமிழ்மாது பூவாடை புனைந்து படிப்படியாய் மலையினின்று இழிந்துவந்து மண்ணக மங்கையை அன்புடன் முத்தமிட்டு இன்பவெள்ளம் பெருக்கெடுத்துப் பொலியும் பொங்குமாங்கடலின் தோற்றம்; குமுறிக் குதித்துக் கும்மாளமிட்டுக் கொக்கரித்து ஆடிப்பாடி, அலைக்கரம் வீசி ஒய்யார நடையிட்டு உள்ளமெல்லாம் அள்ளும் குற்றுல அருவி மங்கையின் இன்பத் தோற்றம் என்றும் மனத்தை விட்டு மாருத காட்சி அல்லவா?

" போதும் பொன்னும் உந்தி அருவி புடைசூழக் கூதல்மாரி நுண்துளி தூங்கும் குற்றுலம் " சுற்றுலாத் துறைக்கு மிகவும் பயன்படுகிறது. வெளிநாட்டாரையும் கவர்ந்திழுக்கும் இந்தக் குற்றுலம் அகில உலகப் புகழ் பெற்றுவிட்டது.




ஒட்டக வறுவல், சாப்பிடுவதற்கு மிகவும் சுவையாக இருக்குமாம். உலகத்திலேயே மிகப் பெரிய தனி உணவு, ஒட்டக வறுவலேயாகும். ஒட்டக' வறுவல் தானே என்று நினைத்துவிடாதீர்கள்!

ஒட்டகத்திற்குள்ளே செம்மறி ஆடு இருக்கும்!
செம்மறியாட்டுக்குள்ளே கோழி இருக்கும்!
கோழிக்குள்ளே மீன் இருக்கும்!
மீனுக்குள்ளே கோழி முட்டை இருக்கும்!

இப்பொழுது நினைத்துப் பாருங்கள் அந்த ஒட்டக வறுவலை! சுவையாக இருக்குமா, இல்லையா வென்று சொல்லுங்கள்! எப்படிச் செய்கிறுர்கள் என்று தெரிந்துகொண்டால், அது எங்கே கிடைக்கும் என்று சிலர் கேட்டாலும் கேட்கலாம்!

வேகவைத்த முட்டையை மசாலாவுடன் சேர்த்து மீனின் வயிற்றுக்குள் திணிக்கிறுர்கள். அந்த மீனை வேகவைத்த கோழியினுள் மசாலாவுடன் சேர்த்து வைக்கிறுர்கள். அதன் பின் அந்தக்கோழியை வறுக்கப்பட்ட செம்மறியாட்டினுள் திணிக்கிறுர்கள். பின்பு அந்தச் செம்மறியாட்டை ஒட்டகத்தினுள் திணித்து ஒட்டகத்தை வறுவல் செய்கிறுர்கள்.

இம்மாதிரி வறுவல், கடைகளில் கிடைக்காது. ஆனால் திருமண விருந்துக்குச் சென்றுல் மட்டுமே கிடைக்கும்! எவர் வீட்டு விருந்தில் என்றுதானே கேட்கிறீர்கள்? பெடோவின்(Bedovin) என்ற நாடோடி அரபு மக்களது திருமண விருந்தில் மட்டுமே கிடைக்கும்.




## 1. பூச்சூட்டலாமா?

இளநீல நிறங்கொண்ட ‘பியட்’ கார் ஒன்று கடற்கரையை அடுத்த நெடுஞ்சாலையிலே கடுவேகமாகப் பறந்து கொண்டிருந்தது.

வாக்களிக்கத் தேவையான வயதும் வாளிப்பான உடற்கட்டும் அமைந்த தேன்மொழிதான் அதனை அவ்வாறு ஓட்டிச் சென்ருள்.

காலை நேரத்துக் குளிர்காற்று, சற்று அழுத்தமாகவே அவளுடைய தளிருடலைத் தழுவித் திளைத்தது; மேலாடையையும் சலசலக்கச் செய்தது.

கிழக்கே, கதிரவனின் ஒளிப் பூச்சினுல் மெருகேறிப் பளபளவென்று நெளிந்தன கடலலைகள்; காரை ஓட்டியவண்ணமே தங்கள் மீது ஓரப் பார்வை வீசுகின்ற அவளது விழிக் குவளைகளுக்கு அந்த மலர்ச் சுருளைகளும் எழில் விருந்தினைப் பரிமாறின.

அழகும் அமைதியும் இணைந்து முறுவலித்து இதமாகக் கொஞ்சுகின்ற இந்த இனிய காலை வேளையில்—பேருந்துகளைத் தவிர வேறு வண்டி-வாகனங்களின் நெருக்கடிகள் அவ்வளவாக இல்லாத அந்த நெடிய சாலையில்—காரை ஓட்டுவதென்ருல் தேன்மொழிக்கு எப்போதுமே தெவிட்டாத இன்பக் கொள்ளைதான்!

அதுவும் இன்றைக்கோ....?

அவளது மனப்பரப்பு முழுவதும் மகிழ்ச்சித் தேனின் சிலிர்ப்புகள்—சிதறல்கள்!

‘டேபிள் டென்னிஸ்’ (மேசைப் பந்தாட்டம்) ஒற்றையர் ஆட்டப் பந்தயத்தில் மாநிலத்திலேயே முதல் வீராங்கனையாக வெற்றிக் கொடி நாட்டிய அவளுக்கு உவகைப் புனல் பொங்கிப் பெருக்கெடுப்பது இயற்கை தானே! அதோடு, முந்தின நாள் மாலை, தான் எப்படியெல்லாம் அந்த ‘முட்டைப் பந்தை’ ஓங்கித் தட்டி ஆடினுளோ அந்த அங்க அசைவுகளை அப்படியே இன்று காலை வந்த ஆங்கில இதழ்களில் படமாகப் பார்த்த பொழுது....

* * * *

கார் விவேகானந்தர் இல்லத்தைக் கடந்து சில அடிகள் கூடச் சென்றிருக்காது; சிறுவன் ஒருவன் குறுக்கே வந்து பாய்ந்து விட்டான்.

கண் மூடிக் கண் திறப்பதற்குள்.... தேன்மொழி எப்படித்தான் தன் காருக்குக் ‘கடிவாளம்’ இட்டாளோ? பையனுக்கும் உயிர் ‘வெல்லம்’ போலும்! தப்பித்துக் கொண்டு விட்டான். ஆனுல், ஓடிய வேகத்தில், அருகிலிருந்த நடைபாதை மேடையில் குப்புற விழுந்து விட்டான் நடுநடுங்கிப்போய்.

பதறிப் போன தேன்மொழி, காரை விட்டுக் கீழே இறங்கி அவன் அருகே ஓடினுள். எழுவதற்கு முயன்று கொண்டிருந்த அவனைத் தூக்கி நிமிர்த்தினுள்.

"ஏண்டா, சனியனே! இப்படித்தான் காரிலே வந்து விழுகிறதா? இந்நேரம் எமலோகத்துக்கே போயிருப்பாயே!"

—என்று படபடப்புடன் பகரும்பொழுதே பையனின் முழங்கால்கள் இரண்டிலும் சிராய்ப்புகள் ஏற்பட்டுக் குருதி கசிவதை அவள் கவனித்து விட்டாள்.

"அய்யய்யோ! இரத்தங் கூட வந்துவிட்டதே!"

—என்ற வாறே தன் இடுப்பிலே செருகியிருந்த கைக்குட்டையை எடுத்து அந்தச் சிராய்ப்புகளைத் துடைத்தாள். குருதித் துளிகள் அவளது உள்ளங்கையிலும் சிறிது ஒட்டிக் கொண்டன;

"சரி வா; டாக்டரிடம் போய் மருந்து போட்டுக் கொண்டு வரலாம்"

"அதெல்லாம் வேண்டாங்க; எங்க அம்மா கொஞ்சம் மஞ்சப் பத்துப் போட்டாலே இந்தச் சின்னக் காயமெல்லாம் ஆறிப் போயிடாதா?"

—புன்னகையோடு சொன்ன அந்தப் பையன் அப்பால் நகரத் தொடங்கினுன். "அற்பமானவற்றுக்கெல்லாம் இப்படி ஆர்ப்பாட்டம் செய்யலாமா?"—என்று இளக்காரமாய்க் கேட்பது போல் ஒலித்தன அவனது வார்த்தைகள்.

"ரொம்ப அனுபவப்பட்டவன் மாதிரிப் பேசுறியே? சரி இந்தா, இந்தப் பணத்தையாவது வாங்கிக் கொண்டு போ"

காருக்குள்ளே இருக்கும் கைப்பையைத் திறந்து பணத்தை எடுத்துக் கொடுக்கத் தேன்மொழி திரும்பினுள்.

அதற்குள் அந்தச் சிறுவன்,

"எதுக்குங்க பணம்?"—என்று கேள்விக் கணையைத் தொடுத்து அவளைத் திணற அடித்தான்.

"சும்மா செலவுக்கு வைத்துக் கொள்ளத்தான்"

"நல்லா இருக்கே! நானு வந்து விழுந்ததுக்கு நீங்க எதுக்குங்க பணம் கொடுக்கிறது? அப்படியெல்லாம் பிறத்தியார் பொருளுக்கு ஆசைப் படுகிறது ‘பெரிய தப்பு’ன்னு, சாக மூணு நாள் முன்னே எங்கப்பா எனக்குச் சொல்லிட்டுப்போயிருக்காரு. அவர் வார்த்தையை மீறலாங்களா?....அப்புறம்....இனிமே இந்த மாதிரி கடலைப் பாத்துக்கிட்டே காரை ஓட்டாதீங்க, அக்கா!"

—இப்படித் துணிந்து சொல்லி விட்ட அவனுக்கு எங்கே அவளுடைய கையிலே சிக்கினுல் நையப் புடைப்பாளோ என்கிற அச்சம் வந்துவிட்டது போலும்! ஒரே ஓட்டமாக ஓடியே போய்விட்டான் அவன்!

தேன்மொழியோ, அப்படியே திகைத்துப் போய் விட்டாள்; அவள்சென்ற திக்கையே வெறித்துப்போய்ப் பார்த்து நின்ருள்; யாரோ தன் தொண்டைக் குழியிலே துணியை வைத்துச் செம்மிய மாதிரி, நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்தது அவளுக்கு; கண்களும் பனித்தன!

‘அரும்புப் பருவத்திலேயே இப்படியொரு ஆசை கொள்ளாத மன முதிர்ச்சியா?

* * * *

"என்ன தேன்மொழி, இங்கே தன்னந் தனியாக நின்று கொண்டிருக்கிறீர்கள்? காருக்கு ஏதாவது பழுது ஏற்பட்டு விட்டதா?"

—மாதவனின் மிடுக்கான குரல் எங்கோ சிறகடித்துத் திரிந்து கொண்டிருந்த அவளது சிந்தனைப் பறவையைக் கூட்டுக்குள் கொணர்ந்து தன்னினைவு பெறச் செய்தது.

கும்பிடப்போன தன் 'குரு' இவ்வளவு விரைவில் தனக்குக் குறுக்கே வந்து நிற்பான் என்று எதிர்பார்க்காத தேன்மொழி முன்னைவிடத் திகைப்பு மேவிய களிப்பினால் திணறிப் போனாள்.

"உஊம்.... ஒன்றுமில்லை! ஒரு பையனுக்கு விபத்து ஏற்பட இருந்தது. ஆனால் தப்பித்துக் கொண்டு ஓடிப்போய் விட்டான். அவனைப் பற்றிய எண்ணத்தில் ஆழ்ந்துதான் இப்படி நின்று விட்டேன்."

—என்று விளக்கமளித்த அவள் தன் நிலாப் பிஞ்சு நெற்றியிலே விழுந்து புரண்ட கேசக்கற்றைகளை இடக்கையால் ஒதுக்கிவிட்டவாறே, தன் முகத்தைத் திருப்பி அவனை நேருக்கு நேர் நோக்கினாள்.

"ஆமாம்; நீங்கள் எங்கே இந்த நேரத்தில் இங்கே வந்தீர்கள்?"

"இன்று ஞாயிற்றுக்கிழமை அல்லவா? வழக்கம் போலக் கடலிலே குளித்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்."

—மாதவனின் கூற்றினை மெய்ப்பிப்பது போலவே, அவன் அணிந்திருந்த அரைக்கால் சட்டை, விளையாட்டு வீரர்களுக்கே உரிய பின்னல் பனியன், பச்சை வண்ணத் தேங்காய்ப் பூத் துண்டு—எல்லாமே ஈரத்தில் தோய்ந்து காட்சியளித்தன; தலை முடியும் வாரி விடப்படாத அலங்கோலத்துடன் காற்று வீச்சிலே ஊஞ்சலாடியது; நெடுநேரம் கடலின் மடியிலேயே புதைந்து கிடந்ததாலோ என்னவோ அவனது கரிய விழிகளும் சிவப்பேறி இருந்தன.

அவனுடைய பரந்த முகத்தையும் அகன்ற மார்பையும், திண்மையான தோள்களையும் உருண்டு திரண்ட கை-கால்களையும் நெடுநெடுவென்ற கம்பீரத்தோற்றத்தையும் தன் விழிவீச்சினால் அளவெடுத்துக் கிறங்கிய தேன்மொழி, மேலும் அவனுடைய கண்களை நேருக்கு நேர் சந்திக்கும் தெம்பினை இழந்தவளாகச் சட்டென்று தன் முகப் பூவைக் கவிழ்த்துக் கொண்டாள் தரையை நோக்கி; குப்பென்று சிவந்தன அவளது மாதுளங் கன்னங்கள்.

"சரி; இப்போது எங்கேதான் போய்க் கொண்டிருக்கிறீர்கள்?"

—என்று அமைதியைக் கலைத்தான் மாதவன்.

"உங்களைக் கண்டு நன்றி சொல்வதற்குத்தான்."

"வேடிக்கையாக இருக்கிறதே! எனக்கு எதற்கு நன்றி?"

"நேற்று நான் 'டேபிள் டென்னிஸ்' சில் வெற்றி பெற்றதே நீங்கள் கொடுத்த பயிற்சியினால்தானே!"

"ஓ, அதற்கா....? ஆனால் அதற்கெல்லாம் நன்றி சொல்ல என்ன இருக்கிறது? உங்களுடைய சொந்தத் திறமையும், விளையாட்டிலே உங்களுக்குள்ள அழுத்தமான பிடிப்பும், விதி முறைகளைப் பிறழாமல் கடைப்பிடிக்கிற உங்கள் கண்டிப்பும், உணர்ச்சிக்கு இரையாகிப் பந்தைக் கண்டபடி அடிக்க முற்பட்டுவிடாத உங்கள் நிதானமுந்தான் உங்கள் வெற்றிக்குக் காரணங்களேயொழிய என்னுடைய பயிற்சியிலே என்ன இருக்கிறது? நானுந்தான் எத்தனையோ பேருக்குப் பயிற்சியளித்திருக்கிறேன்; எல்லாருமா இப்படிப் பந்தயங்களிலே வெற்றி பெற்றுப் பரிசுகளைத் தட்டிச் சென்றிருக்கிறார்கள்?"

"நீங்கள் வேண்டுமானால் தன்னடக்கத்திற்காக இந்த மாதிரித் தாழ்வாகப் பேசிக் கொள்ளலாம். ஆனால் நீங்கள் அளிக்கும் பயிற்சியிலேயுள்ள நேர்த்தி, நிறைவு பக்குவம் எனக்கல்லவா புரியும்?"

"ம்..ம்.. நான் என்னதான் மறுத்தாலும் நீங்கள் விடவா போகிறீர்கள்? போகட்டும்; இங்கேயே தான் நன்றி சொல்லிவிட்டீர்கள்; இனிமேல் நீங்கள் இப்படியே திரும்ப வேண்டியதுதானே! இல்லை இன்னும் யாரையாவது பார்க்கப் போகிறீர்களா?"

"என்னுடைய தோழி ஒருத்திக்குப் பிறந்த நாள் விழா; அவளைப் பார்த்து வாழ்த்துக்கூற வேண்டும். .... அதோடு நடுவழியிலேயே உங்களுக்கு நன்றி சொல்வது முறையாகுமா? அதனாலே உங்கள் வீடு வரைக்கும் வந்து விட்டுத்தான் திரும்பப் போகிறேன்; காரில் வந்து ஏறிக் கொள்ளுங்கள்."

—என்ற தேன்மொழி மாதவனின் மறுமொழி எதற்கும் காத்திராமல் காரினுள் போய் அமர்ந்து, முன்னிருக்கைக்குரிய கதவை அவனுக்காகத் திறந்து விட்டாள்.

ஆனால் அவனோ பின்னிருக்கையிலேயே போய் உட்கார்ந்து கொண்டான்.

அவனுடைய அந்தச் செய்கை தேன் மொழிக்குச் சற்று மனத் தாங்கலையே தந்தது. '.. .... துளிக்கூடப் புதுமையாக—'மாடர்னாக'— இல்லாமல் ஏன் இப்படி ஒதுங்கி ஒதுங்கிப் பயந்து பயந்து சாகிறார்?'—என்று உள்ளூற எண்ணிக் கொண்ட அவள், "முன்னால் உட்கார்ந்தால், 'டேபிள் டென்னி'சைப் பற்றி வசதியாகப் பேசிக் கொண்டு போகலாமே என்று பார்த்தேன் ...."

—என்று மெல்ல முணுமுணுத்தாள்.

"முன்னால் வந்து உட்காரலாந்தான் .... ஆனால் என்ன இருந்தாலும் நீங்கள் என் முதலாளியின் பெண் அல்லவா? உங்கள் பக்கத்தில் நான் வந்து அமர்வது ஒழுங்கான மரியாதை ஆகுமா?"

—என்று அடக்கமாக மொழிந்தான் மாதவன்.

"இதோ பாருங்கள்; இன்னொரு முறை இப்படிப் பிரித்துப் பேசினீர்களோ எனக்குப் பொல்லாத கோபம் வந்துவிடும்; அப்புறம் நான் நன்றாக அழுது விடுவேன்!"

—தேன்மொழியின் இந்தமிரட்டலைக் கேட்டுச் சிரிப்புத்தான் வந்தது மாதவனுக்கு.

"கோபம் வந்தால் திட்டித் தீர்ப்பது தானே; அதை விட்டுவிட்டு அழுதுதொலைப்பானேன்? வேடிக்கையாகத்தான் இருக்கிறது நீங்கள் கூறுவது!"

"பின்னே என்ன? எப்போது பார்த்தாலும் ஏன் இந்த 'முதலாளி—தொழிலாளி'ப் பேச்சு! கரடு முரடான மலையிலும் களைப்பை அடக்கும் சுனை இல்லையா? அருவி இல்லையா? அப்படியே பார்த்தாலும் இந்த 'டேபிள் டென்னிஸ்' ஆட்டத்தைப் பொறுத்த மட்டிலுமாவது நீங்கள் என் 'குரு' தானே! நாம் இருவரும் அருகருகே நின்று விளையாடியதில்லையா?.... என் இருதய பீடத்தில் எவ்வளவு உயர்வான நிலையில் உங்களை வைத்திருக்கிறேன் என்பது உங்களுக்கு எள்ளளவாவது தெரிந்தால்தானே!....எங்கே தெரியப் போகிறது....?"

—இப்படிச் சொல்லி வரும் பொழுதே தேன்மொழிக்குத் தொண்டை கம்மி விட்டது. வார்த்தைகள் அதற்குமேல் வெளி வர இயலாமல் உள்ளடங்கி நின்றுவிட்டன.

• • • • •

விமானத்திலிருந்து கீழே வேடிக்கை பார்ப்பவர்களுக்கு, நீண்ட சதுரமான மைக்கூடு போல் காட்சி தரக் கூடிய அந்தச் சின்னஞ் சிறு கார் இப்போது திருவல்லிக்கேணி—பைக்ராப்ட்சு சாலையில் திரும்பிற்று.

"இந்தப் பக்கம் எதற்கு?" —தயங்கியவாறே வினவினான் மாதவன்.

"மாலைகள் வாங்குவதற்குத் தான்."

"ஓகோ! தோழிக்கா?"

"ஏன், உங்களுக்கும்தான்!"

"நன்றியை வார்த்தைகள் மூலம்—செயல்களின் மூலம்—வெளிப்படுத்தினாலே போதாதா? அதுவும் எனக்குப் போய் இந்த மாலை—மரியாதை எல்லாம் எதற்கு?"

"என்னுடைய நெஞ்சின் நிறைவுக்காகத்தான் அந்தச் சிறு மாலையையாவது உங்களுக்குக் காணிக்கையாகச் செலுத்தலாம் என்று நினைக்கிறேனேயல்லாமல், அதன் மூலம் ஏதோ ஒரு பெரியசிறப்புச்செய்துவிட்டோம் என்று இறுமாப்புக்கொள்வதற்காக இல்லை! அதுவும் வேண்டாம் என்றால் சரி; இப்படியே திரும்பி விடுகிறேன்."

"அய்யய்யோ! அப்படியெல்லாம் மன வருத்தப் படுவதாக இருந்தால் நீங்கள் எத்தனை மாலைகளை வேண்டுமானாலும் எனக்கு வாங்கிக் கொடுங்கள்; எனக்கு ஒன்றும் மறுப்பு இல்லை."

—என்று அவளைத்தேற்றுகின்ற முறையில் பகர்ந்தான் மாதவன்.

பூக்கடைகளின் பக்கமாக வந்ததும் காரை நிறுத்தினாள் தேன்மொழி. சற்றுமுன் தன்னிடம் இருந்த படபடப்புக்கும் குதர்க்கத்திற்கும் விடை கொடுத்தவள் போல், தன் முகத்திலே நண்மை தவழ்ந்திட பின்னால் திரும்பி மாதவனை நோக்கினாள்.

"....எனக்கு இப்போது ஒரு சின்ன உதவி செய்வீர்களா?"

—அவளது குயிலின் மென்குரல் வழக்கத்தை மீறிக் கொஞ்சலாக இழைந்தது.

"என்ன உதவி?"

"..உங்களிடம் இப்படிச் செய்யச் சொல்வதே முறையில்லைதான்; இருந்தாலும் எனக்கும் வேறு வழி இல்லை."

"நீங்கள் என்ன செய்யச் சொன்னாலும் அதை மதிப்புக் குறைவாக எடுத்துக் கொள்ள மாட்டேன்; ஆகவே தாராளமாகச் சொல்லுங்கள்."

"ஒன்றும் இல்லை; என் உள்ளங் கைகளைப் பார்த்தீர்களா? ....காரில் வந்து விழுந்தானே அந்தப் பையனின் சிறுய்ப்புகளைத் துடைத்து விட்டதில் இரத்தத் துளிகள் ஒட்டிக் கொண்டு விட்டன. இவற்றோடு அந்த மாலைகளை எப்படிக் கையால் தூக்கி வருவது?"

"இதற்குத் தானா இப்படித் தயங்குகிறீர்கள்? நானே அந்த மாலைகளைக் கொண்டு வந்து காரில் வைக்கிறேன்."

—என்று காரை விட்டுக் கீழே இறங்கினான்.

தேன்மொழியும் அவனைப் பின் தொடர்ந்து சென்றாள். மாலைகள் இரண்டுக்கு விலை பேசியதோடு அவள் நிற்கவில்லை; தனக்கென்று இரண்டு முழம் மல்லிகைச் சரமும் கட்டச் சொன்னாள்.

கார் மீண்டும் அங்கிருந்து கிளம்பிற்று.

சிறிது தூரம் சென்றதும்,

"இந்த மல்லிகைச் சரத்தை இப்போதே தலையில் சூடிக் கொள்ள வேண்டுமென்று ஒரே ஆசையாக இருக்கிறது"

—என்று ஆர்வத்துடன் கூறினாள் தேன்மொழி.

## கீல்வாதந் தீர்க்கும் கே. வைட்டமின்

இன்று கடைகளிலே ஊட்டச் சத்தூட்டும் வைட்டமின் மாத்திரைகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. அவற்றை வாங்கிச் சாப்பிடுகிறவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு வருகின்றது.

இப்போது வைட்டமின் 'கே' என்னும் புதியதொரு மாத்திரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய மாத்திரை, கை கால் நரம்புகள் முறுக்கிக் கொண்டு அசைக்க முடியாமல் செய்துவிடுகிற கீல் வாத நோய்க்கு அருமையான மருந்தாகப் பயன்படுகிறது என பிரிட்டானிய மருத்துவர்கள் கண்டறிந்துள்ளனர்.

தற்போது கீல் வாதத்திற்கு வேறு சில மருந்துகளும் உள்ளன. எனினும், இந்த வைட்டமின் கே. மற்ற மருந்துகளைப் போல் கடுமையான பிறவிளைவுகளை ஏற்படுத்தாதாம்.

## தமிழ்நாடு அரசின்

கல்வித்துறையில் தமிழ்நாடு அரசின் சாதனை பாராட்டத்தக்கது; 1960 ஆம் ஆண்டில்தமிழ்நாட்டில் கல்விக்காக ரூபாய் 15 கோடியே ஒதுக்கப்பட்டது. சென்ற ஆண்டு அந்தத் தொகை ரூபாய் 67 கோடியாக உயர்ந்தது; அதாவது நான்கு மடங்கு அதிகமாகியது; படித்தவர்களின் எண்ணிக்கையும் சென்ற 10 ஆண்டுகளில் 31·4 சதவிகிதத்திலிருந்து 39·39 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.

—டாக்டர் மால்கம் ஆதிசேஷையா.

தானே ?''

—என்றான் மாதவனும்.

''....அது எப்படி ? உள்ளங்கை இரத்தத் துளியோடு அதை எப்படித் தொட்டுப் பிரித்துச் சூடிக் கொள்வதாம் ?.. ஆனால்?''

'' என்ன 'ஆனால்'?''

'' ஆபத்துக்குப் பாவம் இல்லையென்று நீங்கள்தான் கொஞ்சம் ....?''

'' நன்றாக இருக்கிறது நீங்கள் சொல்வது ! நான் எப்படி உங்கள் தலைக்குப் பூச்சூட்டி விடுவது ?''

'' ஏன், சூட்டினால்தான் என்னவாம் ?''

—வேட்கையின் வெப்பத்தையெல்லாம் சுமந்த வண்ணம் கொஞ்சலாக மிதந்து வந்த தேன்மொழியின் இந்தச் சொற்களைக் கேட்டதும், மாதவனிடமிருந்து ஒரு வறட்டுத்தனமான நகைப்பொலியே வெளிப்பட்டது !



''.. .. இந்தக் கேள்வியை நீங்கள் புரிந்துதான் கேட்டீர்களோ ? புரியாமல் தான் கேட்டீர்களோ ? விளையாட்டாகத்தான் கேட்டீர்களோ ? வினையாகத்தான் கேட்டீர்களோ ? .. .. நானாவது இனிமேலும் இன்னொரு பெண்ணுக்குப் பூச்சூட்டுவதாவது ?''

'' நீங்கள் சொல்வதைப் பார்த்தால் முன்பே யாரோ ஒரு பெண்ணுக்குப் பூச்சூட்டி இருப்பீர்கள் போல் தெரிகிறதே ?''

—உள்ளூறத் தன் இதயத் துடிப்புகளைப் பிசைந்தெடுக்கும் ஓர் அச்சத்துடனேதான் கேட்டாள் தேன்மொழி.

'' உண்மைதான் ! .. .. முன்பே ஒரு பெண்ணுக்கு நான் பூச்சூட்டிக் கொண்டுதான் இருந்தேன்.''

—மாதவனின் கரகரப்பான குரல் அந்தப் பேதையின் நெஞ்சிலே இடியாகவே விழுந்தது ; உலகமே திடீரென்று இருண்டு போய் விட்டது அவளுக்கு ; தன்னை—யாரோ அந்த பியட் காரோடு சுழற்றி எடுத்து எங்கோ அதலபாதாளத்தில் தூக்கி வீசிய மாதிரி நடுநடுங்கிப் போனாள் அவள் !

(தொடரும்)









| பெயர். | தொகை. ரூ. | கா. |
|---|---|---|
| திரு டி. கே. பகவதி | 10 | 00 |
| ,, டி. எஸ். மணி | 10 | 00 |
| ,, வி. டி. ராமனுதன் | 101 | 00 |
| ,, ரங்கனுதன், எம்.சி. | 25 | 00 |
| ,, கே. ஏ. கிருஷ்ணசாமி, சென்னை | 10 | 00 |
| ,, நெல்லை நெடுமாறன், தூத்துக்குடி. | 501 | 00 |
| ,, டி. கேசவலு, எம்.எல்.ஏ., வேலூர். | 10 | 00 |
| ,, குளிக்கரை பிச்சையப்பா, திருவாவடுதுறை. | 20 | 00 |
| ,, பெத்தண்ணன், தஞ்சாவூர் | 51 | 00 |
| ,, எஸ். பரிசுத்தம் சகோதரர்கள், தஞ்சாவூர். | 25 | 00 |
| ,, டி. எஸ். கல்யாணசுந்தரம், திருத்துறைப்பூண்டி. | 10 | 00 |
| ,, கே. வேலவன், செயலாளர், தென் ஆர்க்காடு தி.மு.க. | 20 | 00 |
| ,, எஸ். அகமத் ஷெர்புதீன், விருதுநகர், ராமனுதபுரம். | 3 | 00 |
| ,, என். பரசுராமன், அருள் குடில், தென் ஆர்க்காடு மாவட்டம். | 1 | 00 |
| ,, இ. பரசுராம முதலியார், தலைவர், ஆரணி லாரி உரிமையாளர் சங்கம். | 101 | 00 |
| ,, எஸ். சிவப்பிரகாசம், திருச்சி | 10 | 00 |
| ,, டி. எஸ். தியாகராசன், ஆசிரியர், மாயூரம், தஞ்சாவூர் மாவட்டம். | 11 | 00 |
| ,, எம். பரமசிவம், எம்.எல்.ஏ., சேலம் மாவட்டம். | 10 | 00 |
| ,, டி. மணியநாதன், ஆண்டிமடம் | 10 | 00 |
| ,, ராயபுரம் கோபால் | 101 | 00 |
| ,, கே. சுப்பராயலு, திருவனந்தபுரம். | 11 | 00 |
| ,, டி. அண்ணாதுரை, அரசு உயர் நிலைப் பள்ளி, மட்டப்பாறை, மதுரை. | 10 | 00 |

| பெயர். | தொகை. ரூ. | கா. |
|---|---|---|
| திரு பி. முத்துசாமி, வேடசந்தூர், மதுரை. | 25 | 00 |
| ,, எஸ். பொன்னுசாமி, திருநெல்வேலி. | 10 | 00 |
| ,, எம். சம்பத், அறந்தை வட்டம், தஞ்சாவூர். | 10 | 00 |
| ,, புருஷோத்தமன், பி. முத்தூர், பரங்கிப்பேட்டை. | 10 | 00 |
| ,, பி. ராஜகோபால், வெங்கிட்டம் பேட்டை. | 10 | 00 |
| ,, கிருஷ்ணசுவாமி, சம்மடிக்குப்பம் | 15 | 00 |
| ,, எஸ். கே. சிவனையா, தலைவர், அருதயனூர் ஊராட்சி மன்றம். | 10 | 00 |
| ,, ஏ.எம்.டி.நாச்சியப்பன், எம்.எல்.ஏ., ஆத்தூர், மதுரை மாவட்டம். | 10 | 00 |
| ,, இ. எஸ். முத்துசுவாமி, தி. மு. க. தலைவர், திருச்செங்கோடு வட்டம். | 10 | 51 |
| ,, பி. சந்திரன், தலைவர், ஊராட்சி ஒன்றியம், சேலம் மாவட்டம் (அரசிராமணி). | 10 | 00 |
| ,, பி. வெங்கடகிருஷ்ணன், மாயூரம் வட்டம். | 10 | 00 |
| ,, கே. கோவிந்தராஜு, ஆசிரியர், பஞ்சாயத்துச் செய்தி. | 10 | 00 |
| ,, சி. வேலமுத்து (பொற்கொல்லர்), சர்ச் வீதி, கோயமுத்தூர். | 4 | 80 |
| மாண்புமிகு ராமசாமி, உள் இலாகா அமைச்சர், பாண்டிச்சேரி. | 10 | 00 |
| திரு கே. எஸ். கோதண்டராமையா, எம்.எல்.ஏ. | 10 | 00 |
| ,, என். பி. அரன், ராசிபுரம், சேலம் மாவட்டம். | 10 | 00 |
| ,, டாக்டர் என். எஸ். நரசிம்மன், சென்னை-17. | 10 | 00 |

| பெயர். | தொகை. ரூ. | கா. |
|---|---|---|
| செல்வி கிரிமோலின் விக்டோரியா, நாகர்கோயில். | 1 | 00 |
| செல்வி தமிழ்ச்செல்வி, எம். ஏ., நாகர்கோயில். | 50 | 00 |
| திரு சர்க்கரை செளகதலி, சையத் சுலைமான் (மற்றும் பலர்), ஓளரங்காபாத். | 5 | 00 |
| மெஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி ... | 1,000 | 00 |
| திரு சண்முகசுந்தரராஜன் .. ... | 1,000 | 00 |
| ,, வி. கே. ராஜா பிள்ளை, எம்.எல்.ஏ. | 101 | 00 |
| ,, ராஜேஷ் கன்னு (காசோலை) .. | 11,000 | 00 |
| ,, ராஜேஷ் கன்னு (தொகை) .. | 10 | 00 |
| ,, ஈரோடு விஸ்வநாதன் ... ... | 101 | 00 |
| சவுத் இண்டியா ஷிப்பிங் கார்ப்பொரேஷன், சென்னை (காசோலை). | 5,000 | 00 |
| இந்தியா சிமெண்ட்ஸ் (காசோலை) ... | 2,501 | 00 |
| திருமதி பத்மினி சிவசுப்பிரமணியன், ஷெனாய் நகர் சங்கம் (காசோலை). | 101 | 00 |
| திரு டாக்டர் டி. வி. அய்யாசாமி (காசோலை). | 100 | 00 |
| ஓரியண்டல் டாக்கீஸ் (காசோலை) ... | 1,001 | 00 |
| திரு ரிசப்சந்த் கன்க்ரியா (காசோலை) ... | 101 | 00 |
| ,, ஏ. எஸ். பார்த்தசாரதி, சேலம் (காசோலை). | 250 | 00 |
| ,, சிவகுருநாதன், மதுரை ... .. | 10 | 00 |
| ,, ஏ. எஸ். பார்த்தசாரதி ... .. | 92 | 00 |
| ஆணையர், கொடுமுடி ஊராட்சி ஒன்றியம், ஈரோடு (காசோலை). | 4,168 | 00 |
| திரு சுரேஷ்குமார், தாம்பரம் .. | 5 | 10 |
| ,, பி. வீரராகவன், தலைவர், வேங்கைவாசல் ஊராட்சி ஒன்றியம். | 11 | 00 |
| ,, தெய்வசிகாமணி, செயலாளர், தி.மு.க. | 12 | 91 |
| ,, பி. பொன்னுசாமி, எம்.ஜி.ஆர். பொதுப்பணி மன்றம், சேலையூர். | 10 | 00 |
| ,, பி. எஸ். செல்வராஜ், விஜயபுரம் (அஞ்சல்), திருவாரூர். | 15 | 00 |
| ,, கே. விஸ்வநாதன், கள்ளக்குறிச்சி வட்டம், தென் ஆர்க்காடு. | 2 | 00 |
| ,, கே. ஆர். தோட கௌண்டன், தர்மபுரி. | 11 | 55 |
| ,, டி. அன்பழகன், ஹை அல்டிட்யூட், வார்பார்பள்ளி. | 10 | 00 |
| ,, ஷாகுல் ஹமீது, பொள்ளாச்சி வட்டம், கோயமுத்தூர். | 10 | 50 |
| ,, எஸ். ஏ. அசோகன் ... ... | 1,000 | 00 |
| ,, கன்யகா பரமேஸ்வரி தேவஸ்தானம். | 1,116 | 00 |
| திரு கே. பாலகிருஷ்ணன், நகரசபை ஆதாரப்பள்ளி, பண்ணுருட்டி (அஞ்சல் காசோலை). | 0 | 50 |
| டாபிலெட்ஸ் பிரைவேட் லிமிடெட். | 1,001 | 00 |
| திரு டி. எஸ். கிளிகோதண்டம், சமூக நலச் சங்கம். | 101 | 00 |
| ஒலிம்பிக் மனமகிழ் மன்றம் ... ... | 101 | 00 |
| ' நாடகக் கலை ' ஆசிரியர் .. .. | 10 | 00 |
| திரு டி. எஸ். குருநாதன் .. ... | 25 | 00 |
| செங்கை மாவட்ட சுகாதார ஆய்வாளர் சங்கம். | 201 | 00 |
| வருவாய்த்துறை அலுவலர் சங்கம், மன்னார்குடி. | 50 | 00 |
| தஞ்சாவூரில் நடத்தப்பட்ட கூட்டங்கள் மூலம் வரவு. | 45 | 00 |
| திரு எம். எம். ஆதம் .. .. ... | 5 | 00 |
| கே. லக்ஷ்மி நகரம் கூட்டுறவு அங்காடி. | 101 | 00 |
| திரு எஸ். பி. சென்னகிருஷ்ண நாடார், சிங்காரப் பேட்டை. | 48 | 48 |
| ,, பார்த்தசாரதி, சக்தி விலாஸ், பொறையார். | 2,010 | 00 |
| ,, எம். பி. கௌண்டர் .. .. | 10 | 00 |
| ,, எம். டி. தியாகராஜ பிள்ளை, கொரடாச்சேரி. | 10 | 00 |
| ,, திரவியம், சித்தமல்லி, திருநெல்வேலி. | 5 | 00 |
| ,, குட்டித் துரை, நெல்லை மாவட்டம். | 2 | 00 |
| ,, திருமலைசுவாமி கௌண்டர், மதுரை | 11 | 01 |
| எம். ஜி. ஆர். மன்றம், பழனிவட்டம். | 5 | 00 |
| திரு எஸ். முத்துசுப்பிரமணியம், மேட்டூர் அணை. | 3 | 00 |
| ,, ஜி. ராதாகிருஷ்ணன், மாயூரம் ... | 10 | 00 |
| ,, கஸ்தூரி லால்கோலி, புதுடெல்லி .. | 10 | 00 |
| ,, எஸ். என். பஸ்லுல்லா, சென்னை ... | 20 | 00 |
| ,, இ. சோனைமுத்து .. .. .. | 10 | 00 |
| ,, பாலகிருஷ்ணன், செயலாளர், தி.மு.க. விருதாசலம். | 10 | 00 |
| ,, எஸ். கோதண்டராமன், கும்பகோணம். | 100 | 00 |
| ,, ஆர். ஜெகனுதன், ஏர்க்காடு .. | 25 | 00 |
| ,, கலீல், ஆம்பூர் .. .. | 10 | 00 |
| ,, திருமலை முத்துசுவாமி .. .. | 10 | 00 |
| ,, கே. வி. எம். மொஹய்தீன், கீழக்கரை. | 11 | 00 |
| ,, ஹெர்பெர்ட்லோகெர், ஆம்பூர் ... | 100 | 00 |

(தொடரும்)



"செந்தில் இல்லியாம்மா?"

பழக்கமான அந்தக் குரலைக் கேட்டு, காடா விளக்கை ஏற்றிக் கொண்டிருந்த அன்னம்மா திரும்பிப் பார்த்தாள். அந்தச் சின்னஞ்சிறு வீட்டின் வாயிற்புறத்தே அவளுக்கு மிகவும் பரிச்சயமான அந்தத் தோற்றம் தென்பட்டது.

தமிழ் ஆசிரியர் நின்றிருக்கிறார். "வாத்தியாரய்யாவா? வாங்க சாமி......" என்று பதற்றத்துடன்—அதே சமயத்தில் பாச உணர்வு பொங்கும் மரியாதையுடன் அழைத்தவாறே எழுந்தாள் அன்னம்மா.

ஆசிரியர் அதே இடத்தில் நின்றிருந்தார்.

"உள்ளே வாங்க சாமி" என்று பாயை எடுத்து விரித்து விட்ட அன்னம்மா, ஓர் ஓரமாக ஒதுங்கி நின்றுகொண்டாள். பிரமாதமான வரவேற்போ—உபசரிப்போ இல்லையென்றாலும், அன்னம்மாவின் குரலில் இழைந்திருந்த அந்த பக்திபூர்வமான உணர்வு, ஆசிரியர் மேல் அவள் கொண்டிருக்கும் அளவற்ற கௌரவத்தைக் கோடிட்டுக் காட்டியது.

ஆசிரியர் உள்ளே வந்து அமர்ந்தார். பிறகு "சௌக்கியமா இருக்கீங்களா அம்மா?" என்று கேட்டார்.

அன்னம்மாவின் முகத்தில் கோடி நன்றி நிரம்பியது. கண்களில், அந்த நன்றி உணர்வின் சின்னமாகக் கண்ணீர் துளிர்த்தது.

"நீங்க செய்த உதவியாலே நாங்க வயிறாரச் சாப்பிட்டுட்டு, நிம்மதியா இருக்கோம் சாமி" என்று அடக்கத்தோடு பதில் கூறிய அன்னம்மா, ஆசிரியர், செந்திலைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறார் என்பதைத் திடீரென்று நினைத்துக்கொண்டவளாய் "செந்தில் இன்னும் பள்ளிக் கூடத்திலேயிருந்து வரலியே சாமி! மணி ஏழு இருக்கும் இல்லீங்களா?" என்று கேட்டாள்.

ஆசிரியர் தம் கைக்கடிகாரத்தைப் பார்த்தார். மணி ஏழுதான். செந்தில் இப்போது வீட்டில் இருக்கமாட்டான் என்று தெரிந்துதான் அவர் வந்தார்.

"என்னமோ சாமி ...... இப்ப வரவர அவன் ஸ்கூல்லேயிருந்து லேட்டா வர்றான். ஏழு ஏழரை ஆயிடுது...." என்று சொல்லிக்கொண்டு வந்த அந்த அன்னை, "சாமி எதுனாச்சும் சாப்பிடுறீங்களா?" என்றும் கேட்டாள்.

"ஒண்ணும் வேணும்மா. இப்பத்தான் காபி சாப்பிட்டுட்டு வந்தேன்...." என்று கூறிய ஆசிரியர், தாம் சொல்ல வந்த சேதியை எப்படிச் சொல்லத் தொடங்குவது என்று விளங்காமல் சிறிது நேரம் அந்தச் சிறு வீட்டை அங்குமிங்குமாகப் பார்த்தபடியே இருந்து விட்டுப் பிறகு மெதுவாகச் சொன்னார்.

"செந்திலைப் பற்றி உங்க கிட்டே ஒரு விஷயம் சொல்லணும்...."

அவர் சொன்ன விதம்...... அன்னம்மாவின் இதயத்தில் சந்தடியில்லாமல் ஒரு பயம் வந்து இறங்கியது.

"என்ன சாமி?...." என்று சற்றுப் பரபரப்போடு கேட்டவள் "செந்தில் நல்லாப் படிக்கிறான்லே சாமி?" என்று வினவினாள்.

"....ம்....ம்.. நல்லாத்தான் படிக்கிறான். வகுப்பிலே முதல்மார்க் வாங்குறான். படிப்பைப் பற்றியெல்லாம் ஒண்ணும் குறை சொல்ல முடியாது. ஆனா...." என்று கூறிய படியே, வலது கை ஆள் காட்டி விரலால் தரையைக் கீறத் தொடங்கினார் அவர்.

"ஆனா என்ன சாமி?" என்று கேட்டவாறு ஓடி முன்னால் வந்து நின்றாள் அன்னம்மா.

"நான் சொல்றேன்னு தப்பா நினைச்சுக்காதீங்க.... என்ன காரணத்துக்காகவோ இந்த ரெண்டு மூணு நாளா பள்ளிக்கூடத்திலேயிருந்து மத்தியானம் அரை நாள் லீவு வாங்கிக்கிட்டு வெளியிலே போய்விட்டான்.." என்று ஆசிரியர் சொல்லி முடிப்பதற்குள்...

"எதுக்காக லீவு போட்டான்?" என்று அவசரப்பட்டுக் குறுக்கே கேட்டாள் அன்னம்மா.

"எனக்கும் அது விளங்காமல்தான் இருந்தது. ஆனா இன்னைக்கி சாயந்திரம் பள்ளிக்கூடம் முடிஞ்சு, நான் என் சொந்த வேலையா அண்ணா சாலை பக்கம் போனபொழுது அங்கே ஒரு சினிமா தியேட்டரிலே டிக்கட் வாங்கு

றதுக்காக செந்தில் கியூவிலே நின்னுருந்தான்....''

அவ்வளவுதான். அன்னம்மா விக்கித்துப் போனாள்.

''செந்திலா நின்னுருந்தான்?'' என்று கேட்டாள்.

''நீங்க இப்போ சந்தேகப் பட்டுக் கேட்ட மாதிரி, நானும் முதல்லே நம்பாமல், இது செந்தில்தானான்னு பார்த்தேன். அவன் செந்தில்தான்........ அதிலே சந்தேகம் இல்லே..''

சிறிது நேரம் அங்கு கனமான அமைதி நிலவியது. காரணம் அந்தச் சேதி அந்த இருவருக்குமே அதிர்ச்சியான ஒன்றுதான். அதிலும் அன்னம்மாவுக்குத்தான் எவ்வளவு பெரிய அதிர்ச்சி! பள்ளியில் படிக்கும் தன் மகன், நல்ல முறையில் பண்போடு வளர்ந்து ஆளாவான் என்று நினைத்திருந்த அவள் நினைப்பு எங்கே? இப்போது செந்தில் நடக்கிற அந்த நடப்பு எங்கே?

''அதாம்மா உங்க கிட்டே சொல்லிட்டுப்போகலாம்னு வந்தேன்...... ஏதோ ஒரு ஆசையிலே சினிமாவுக்குப் போயிருப்பான்னு நினைக்கிறேன். நீங்க லேசு பாசா அவனைக் கண்டிச்சி வையுங்க. ... நானும் நல்ல புத்தி சொல்றேன்'' என்று ஆதரவாக ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்துவிட்டு ஆசிரியர் போய் விட்டார்.

ஆனால் அன்னம்மாவின் நிலை?

மரத்தூணோரத்தில் தானுமொரு தூணாக நின்றுவிட்டாள் அவள். இலையைக் கிள்ளியதும் காம்பில் பால் துளிர்ப்பது போல், அவள் கண்களில் கண்ணீர்த் துளிகள்..!

'கப கப' வென்று பழைய நினைவுகள் மனத்தில் தோன்றி மறைந்தன.

நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு, கொடிய காச நோய்க்குக் கணவனைப் பலி கொடுத்துவிட்டு ஏழுஎட்டு வயதான செந்திலோடு அவள் பட்டணத்துக்கு வந்ததும், வேலை இல்லாமல், பிழைப்பதற்கு வழியுமில்லாமல் சில சமயங்களில் அவர்கள் பிச்சை எடுத்ததும் பின்னர் ஓர் நாளில் இதே தமிழாசிரியர் உதவியுடன் ஒரு பெரிய செல்வந்தர் வீட்டில் அன்னம்மா வேலைக்காரியாக அமர்ந்ததும், அதை அடுத்து செந்திலைப் பள்ளியில் சேர்த்ததும் அவனைப் பார்த்துப் பார்த்துத் தன் கடந்த காலத் துயரங்களையெல்லாம் மறந்துவிட்டு, ஒளிமயமான எதிர்காலத்தைப் பற்றி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அவள் கனவு கண்டு கொண்டிருந்ததும் இன்று அந்தக் கனவுகள் எல்லாம் தூள் தூளாகச் சிதறிவிழுவதும்..

அன்னம்மாவின் நெஞ்சில் ஒரு துயரக் கடலே பொங்கிவிட்டது.

'இன்று சினிமாவுக்குப் போகிறான்! நாளைக்கு சிகரெட், பீடி குடிப்பான். அதற்கு அடுத்த நாள்..?

''வரட்டும். வரட்டும்..'' என்று குமுறியபடி, வீட்டை விட்டு வெளியில் வந்து நின்று கொண்டாள். அப்படி எவ்வளவு நேரம் நின்றாளோ?

''என்னம்மா! வெளியிலே நின்னுக்கிட்டிருக்கே'' என்ற செந்திலின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

செந்தில் நின்றிருந்தான் — முகத்தில் புன்னகையோடும், கை நிறையப் பள்ளிப் புத்தகத்தோடும்.

செந்தில் மீண்டும் கேட்டான்; ''ஏம்மா வெளியிலே நின்னுக் கிட்டிருக்கே?''

அவள் பதில் சொல்லவில்லை. மகனை வெறித்துப் பார்த்தாள். இரவு நேரம்தான். அங்கே போதிய வெளிச்சமும் இல்லைதான். ஆனாலும் அன்னை, தன்னைக் கோபமாகப் பார்ப்பதைச் செந்தில் புரிந்துகொண்டு விட்டான். மனத்தில் பயம் இடறியது.

''எனக்குப் பசிக்குதும்மா.'' என்று அரைத் தொனியில் முணுமுணுத்தபடியே வீட்டுக்குள் நுழைந்த செந்திலைப் பின் தொடர்ந்து அன்னம்மாவும் புயல்போல் பிரவேசித்தாள்.

''எங்கேடா போயிட்டு வர்றே?'' அன்னம்மாவின் சீற்றம் தொடங்கியது. புத்தகங்களைப் பெட்டியில் வைப்பதற்காகக் குனிந்த செந்தில், நிமிர்ந்து விட்டான். நிமிர்ந்தவன் திரும்பிப் பார்த்தான். அப்பப்பா அந்தத் தாயின் முகத்தில் எத்தனை கோபக்கனல்! அவன் ஒரு நாளும் பார்த்ததில்லையே..?

''என்னடா பேசாமெ இருக்கே? எங்கே போயிட்டு வர்றே?''

என்ன பதிலைச் சொல்வது? அம்மாவுக்குத் தெரிந்து விட்டதா? எப்படித் தெரிந்தது?

''அம்மா.. வந்து..''

பளீரென்று ஓர் அறை அவன் கன்னத்தில் விழுந்தது. விரல்களின் தழும்பு பதிந்தது!

''அம்மா!''

மறுபடியும் ஓர் அறை. ''சினிமாவுக்கா போறே? லீவு போட்டுட்டா போறே. போ.. போய் சினிமா தியேட்டர்லேயே விழுந்து தூங்கு'' என்று சீறியபடியே, செந்திலின் தலை மயிரைப் பிடித்து இழுத்து விட்டாள் அன்னம்மா!

தள்ளாடிப் போய்— அந்தத் தாக்குதலைச் சமாளிக்கமுடியாமல் சுவரின் மேல் போய் முட்டினான் செந்தில். முட்டியவன் ''நான் சொல்றதைக் கேளம்மா'' என்று கூறியபடியே சரிந்து விழுந்தான்.





அன்னம்மா இப்போது கையில் ஒரு சிறு விறகை எடுத்துக் கொண்டாள்.

''எத்தினி நாளா இப்படிக் கெட்டுச் சீரழியிறே..? சினிமாவுக்குப் போனியே.. சிகரெட், பீடி குடிச்சியா.. குடிச்சியா..?'' என்று ஆங்காரமாகக் கத்தியவாறு செந்திலின், மேல்உதட்டை அந்த விறகுக் கட்டையால் இடித்தாள்.

''ஐயோ!'' என்று கத்திவிட்டான் செந்தில்.

''கத்தாதே.. கொன்னுடுவேன்... டிக்கட் வாங்குறதுக்கு கியூவிலே நின்னப்ப மட்டும் சந்தோஷமா இருந்துதா? இந்தக் கால் தானே கியூவிலே நின்னது? இந்தக் கால்தானே..!''

இரண்டு முழங்கால்களின் மீதும் மாறி மாறி விறகுக் கட்டை விளையாடியது. அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் எல்லாம் என்னவோ-ஏதோ என்று ஓடி வந்துவிட்டார்கள்.



''குழந்தையை அடிக்காதே... குழந்தையை அடிக்காதே!''

''ஏண்டி பாவி.... குழந்தையைப் போட்டுக் கொல்றே..?

இப்படிப் பலரும், பல விதமாகத் தடுத்தும், அன்னம்மாவின் ஆத்திரம் வெகு நேரத்துக்குக் குறையவில்லை. அந்த ஆத்திரத்திலிருந்து செந்திலும் மீளவில்லை. வாழ்க்கையில் படவேண்டிய அடியெல்லாம் அவன் இப்போது பட்டாயிற்று.

: : : : :

இரவு நழுவிக்கொண்டிருந்தது.

மூலையில் சுருண்டு விழுந்து படுத்துவிட்டான் செந்தில். சுவரில் சாய்ந்து அமர்ந்திருந்த அன்னம்மாவின் கன்னங்களில் கண்ணீர்க் கோடுகள்....!

பக்கத்து வீடுகளில் எந்த அரவமும் இல்லை. மணி, பத்துக்கு மேல் ஆகியிருக்கலாம்.

பார்வையை மட்டும் திருப்பி மகனைப் பார்த்தாள் தாய். அவன் தளர்ந்து போய் விழுந்து கிடந்த காட்சி..! நெருப்பே நீராகக் கனிந்ததுபோல் அன்னம்மாவின் நெஞ்சம் இளகியது.

''டேய் ராஜா..'' என்று குரல் கொடுத்தாள்; பதில் இல்லை.

''செந்தில்... டேய் கண்ணு, எந்திரிச்சி சாப்பிடுடா...''

அதற்கும் பதில் இல்லை,

மெதுவாக எழுந்து செந்திலின் அருகே வந்தாள். அமர்ந்தாள். அவன் முகத்தை எடுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டாள். நெஞ்சில் துயரம் முட்டியது. அழுதாள். மௌனமாக அழுதாள்.

செந்தில் இப்போது புரண்டு படுக்க முயன்றான். அந்த இயக்கத்தில் அவன் தூக்கம் கலைந்துவிட்டது. கண்களைத் திறந்து பார்த்தால்— அன்னையின் முகம் —கண்ணீர் ததும்பிய முகம்..

''அம்மா.. அம்மா..'' என்று செந்தில் விம்மத் தொடங்கிவிட்டான்.

''ஏண்டா ராஜா.. இப்படிக் கெட்டுப் போயிட்டே..? பள்ளிக்கூடத்துக்கு லீவு போட்டுட்டு, யாருகிட்டேயும் சொல்லாமெ சினிமாவுக்குப் போறதுக்கு யாருடா உனக்குச் சொல்லிக் கொடுத்தா....?'' என்று அடிபட்ட மகனை ஆரத் தழுவிக் கொண்டு புலம்பினாள் அன்னம்மா.

''சினிமா பார்க்கிறதுக்காக நான் டிக்கட்டு வாங்கலேம்மா.. மற்றவங்களுக்கு விக்கிறதுக்காக வாங்கினேன்.. அதுக்காகத்தான் லீவு போட்டேன்..'' என்றான் செந்தில் விம்மியபடி.

அன்னம்மாவுக்கு விளங்கவில்லை. இவன் என்ன உளறுகிறான்? அடிபட்ட பயத்தில் புலம்புகிறானா? அல்லது தவற்றை மறைப்பதற்காகப் பொய் சொல்கிறானா..?

''என்னடா செந்தில்சொல்றே? விக்கிறதுக்காக டிக்கட் வாங்கினியா?'' என்று மகனை நிமிர்த்தி வைத்துக் கேட்டாள்.

''ஆமாம்மா.. அந்தப் புதுப் படத்துக்கு டிக்கட் எடுத்துவித்தா

ரெண்டு மூணு ரூபா அதிகமா விற்கலாம். நேத்திக்கும் முந்தா நாளும் இன்னிக்கும் லீவு போட்டுட்டுப் போயி டிக்கட்டு எடுத்து வித்தேம்மா! மொத்தம் எட்டு ரூபா அதிகம் கிடைச்சுது" என்று நிஜார் பைக்குள் கையை விட்டுக் கசங்கிய ரூபாய் நோட்டு களை எடுத்து நீட்டினுன் செந்தில்.

அன்னம்மாவுக்குப் பெரிய புதிராகப் போய்விட்டது. பணம் சம்பாதிப்பதற்காக இவன் எதற்கு இந்த வழியில் இறங்கினுன் ?

'' செந்தில் . . இந்த யோசனை உனக்கு ஏண்டா வந்தது? யாருக்கு இந்தப் பணம் ?''

'' அம்மா உனக்கு ஞாபகம் இருக்கா . . அஞ்சாறு வருஷத்துக்கு முந்தி இந்த மெட்ராஸ் தெருவிலே நானும் நீயும் கை நீட்டிப் பிச்சை எடுத்திருக்கோம். அப்ப நாம எப்படியெல்லாம் வேதனைப்பட்டு அழுதிருக்கோம்'' என்று சொல்லிவிட்டு, அந்தத் துயரமான பழங்காலத்தை, நேருக்கு நேர் பார்ப்பதுபோல் எங்கோ வெறித்துப் பார்த்தான் செந்தில்.

"அதையெல்லாம்இப்ப ஏண்டா நினைக்கிறே ?''

'' அம்மா . . . . தமிழ்நாட்டிலே பிச்சைக்காரங்களே இல்லாமெ செய்யனும்ன்னு நிதி திரட்டுறுங்களாம் அம்மா . . அதுக்கு.."

'' அதுக்கு ?''

'' அதுக்குத்தாம்மா . . இந்த எட்டு ரூபா . . . . ''

அவ்வளவுதான் . . . . அன்னம்மாவின் உடல் சிலிர்த்து விட்டது. மகனின் இளம் உள்ளத்தில் இப்படியொரு உயர்ந்த எண்ணமா ? அப்படியே ஆரத் தழுவிக் கொண்டாள் செந்திலை.

அவர்கள் தலைக்குமேலே சுவரில் ஒரு காலண்டர் படம்.

கடற்கரை ; இராமாயணக் காவியத் தலைவன் இராமன் நின்றிருக்கிறுன். கடலுக்குப் பாலம் கட்டும் வேலை. அணில் ஒன்று மணல் சுமந்து கொண்டு வருகிறது.

அது ஒரு புராணக் கதை ; கற்பனை.

ஆனுல். இப்போது பல ஆயிரக் கணக்கான பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வறுமை நோயில் வாடும் அவர்களைப் புது வாழ்வு என்னும் அக்கரைக்குக் கொண்டு சேர்க்க, தமிழகத்தின் தலைவன் பாலம் கட்டத் தொடங்கியிருப்பது,

நாம் அனைவரும் நேரில் காண்கின்ற அதிசயம் !

---

## இலக்கிய மீன்கள்

பொருநையாற்றிலே மழை பெய்து வெள்ளம் பெருகி வருகிறது ; ஆற்று வெள்ளம் கண்ட பள்ளருக்கும் பள்ளியர்க்கும் ' களிப்பால் உள்ளம் துள்ளுகிறது. கரை கடந்து வருகின்ற நீர் கடலின் வயிற்றைக் கிழித்துக் கொண்டு கதிரவன் தோன்றும் உதயகிரிவரை ஊடுருவிப் பாய்கிறது. இப்பால் பொருநையாறு தோன்றுகின்ற பொதிகை மலைவரை மோதுகிறது ; இவ்வாறு இருபாலும் உதைத்துப் பொங்கித் திணறிப் பாயும் பொருநையாற்று நீரை அதன் அழகைப் பார்க்க,

பொருநையாறு பெருகிவர
புதுமை பாரும் பள்ளீரே

எனப் பள்ளியரை அழைக்கின்றனர். இவ்வாறு கரை கடந்து, கவின் நிறைந்து பாயும் ஆறு பல்வகை மீன்களையும் அள்ளிவருகின்றது. அழகர் கருணை போல் பெருகி வரும் ஆற்றிலே, தண்ணீரை எதிர்த்து வரும் மீன்கள் பல; தவழ்ந்து வரும் மீனினங்கள் பல ; துள்ளிக் குதிக்கும் மீன்களும், வெள்ளத்தோடு விரைந்து செல்லும் மீன்களும் பலப்பல ; எத்தனை எத்தனை வகையான மீனினங்கள் ; சிறியவை, பெரியவை, நீண்டன ; நெகிழ்வன ; பாய்வன ; பதுங்குவன ; மிதப்பன ; குதிப்பன ; மின்னுவன ; மேலே தாவுவன ; முக்கூடற் பள்ளாசிரியர் இவற்றை, பரவை, குரவை, வாளை, கோளை, தேளி, மயிந்தி, உழுவை, அயிந்தி, கூனி, மணலி, ஆரால், ஓரா, அயிரை, கெண்டை, கெளிறு, வரால், துதிக்கை, மூக்கன், பண்ணை சாளை, எண்ணெய், பசலி, திருக்கை, கசலி, கெளுத்தி, பண்ணுங்கு, பாசி, மகரம், சள்ளை, மத்தி, உல்லம்' பொத்தி, மடந்தை, கடந்தை' செம்பொன் நொறுங்கி, மலங்கு, பஞ்சலைக் கெண்டை, கருங்கண்ணி எனவகை வகையாகக் காட்டுகிறுர்.

---

# செய்திகள் செய்திகள் செய்திகள்

ஆப்பிரிக்காவில் உகாண்டா என்று ஒரு நாடு உள்ளது. அந்த நாட்டில் 'கரமோஜ' என்ற மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த ஆதிவாசிகள் துணியே உடுத்துவதில்லையாம். அந்த ஆதிவாசி மக்களின் தலைவன், அவர்களை ஆடை உடுத்தி நாகரிகமாக வாழுங்கள் என்று சொன்ஞராம்.

அதைக் கேட்ட ஆதிவாசிகள் ''உங்கள் நவீன கருத்துக்கள் நாசமாய்ப் போகட்டும்; இப்படிப்பட்ட புதுமைகளால்தான் ஊரே குட்டிச் சுவராய்ப் போகிறது; காலரா நோய் பரவி 12 பேரைப் பலி கொண்டதற்கு உங்கள் நவீன கருத்துக்கள் தான் காரணம்'' என்று சொல்லி, ஆடை அணிந்திருந்த அந்தத் தலைவனை ஆடையில்லாமல் வாழும் அந்த மக்கள் அடித்து நொறுக்கியதுடன், '' இனி மேல் தலைவராக இருக்க வேண்டாம் ''என்றும் கூறி விட்டார்கள்.

'ஆடைக் குறைப்பு செய்யக்கூடாது' என்று ஒரு பக்கம் பலத்த முழக்கம் கேட்கிறது. ''ஆடையே அணியமாட்டோம் ! அது எங்கள் பிறப்புரிமை'' என்ற முழக்கம் மறுபக்கம் கேட்கிறது. என்ன உலகமடா இது?

* * *

இத்தாலி நாட்டில் கடலுக்கு அடியில்—நீர் மட்டத்திற்கு 50 மீட்டர் கீழே புகைவண்டிப் பாதை ஒன்றும், பேருந்துகள், கார்கள் செல்ல 2 பாதைகளும் அமைக்கும் புரட்சித் திட்டம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை பிரிட்டன் நாட்டு விஞ்ஞானிகள் ஏற்றுள்ளனர்.

இத்தாலியின் ஒரு பகுதி சிசிலி; ஆனுல் கடலால் துண்டிக்கப்பட்டு—தனியாக இருக்கிறது; இடையில் 3 கிலோ மீட்டருக்குக் கடல் சூழ்ந்துள்ளது. இத்தாலியை சிசிலியுடன் இணைக்கவே இத் திட்டம் வகுக்கப் பட்டது.

சிசிலியிலிருந்து சுரங்கப் பாதை போல் —— துவங்கி அந்த 3 பாதைகளும் கடலின் அடி வழியாக இத்தாலியில் உள்ள ஒரு நகருக்குச் செல்லுகிறது. புகை வண்டிப் பாதை ஒன்றும் (போக-வர), பேருந்துகள், கார்கள் ஆகியவற்றிற்கான பாதைகள் இரண்டும் (போக-வரத் தனித்தனியாக) ஆக 3 பாதைகள் போடப்படுகின்றன.

இடைப்பட்ட கடல் பகுதியில் ஒரு சில இடங்களில் கடல் சுமார் 1,000 அடி ஆழம் இருந்தாலும், நீர் மட்டத்திலிருந்து 50 மீட்டர் கீழே அப்பாதைகள் அமைக்கப்படுகின்றன.

உருக்கு மற்றும் கான்கிரீட்டால் செய்யப்பட்ட குழாய்களை அந்த ஆழத்தில் நிறுத்தி அதற்குள் பாதை அமைக்கிறுர்கள். இத் திட்டத்திற்கு 40 கோடி பவுன்கள் (ரூபாய் 720 கோடி) செலவு ஆகும்.

இந்தப் புரட்சித் திட்டத்தை அறிவித்ததற்காகவே, பிரிட்டன் நாட்டு நிறுவனத்திற்கு இத்தாலி நாட்டு அரசாங்கம் 10,000 பவுன்களைப் பரிசு தருவதாக அறிவித்துள்ளது.



சென்ற 4 ஆண்டுகளாக சூயஸ் கால்வாய் மூடப் பட்டுக்கிடப்பதன் காரணமாக உலக நாடுகளுக்குச் சுமார் 340கோடி டாலர்கள் அதிகப்படியாகச் செலவாகியிருக்கு மென்று மதிப்பிடப் பட்டிருக்கிறது.

இந்த ஆண்டும் இது திறக்கப்படவில்லை என்றால் இந்த நட்டம் 500 கோடி டாலர்களாக உயர்ந்து விடும்.



இந்தியாவில் சுமார் 22·50 இலட்சம் பேர் தொழு நோயால் (குட்ட நோய்) பாதிக்கப் பட்டுள்ளார்கள். இவர்களில் 10 இலட்சத்துக்கும் குறைவானவர்களுக்கே மருத்துவ வசதி கிடைக்கிறது. இந்தியாவில் 219 தொழு நோய் மருத்துவ மனைகள் உள்ளன; அவைகளில் 28,000படுக்கை வசதிகள்தான் உள்ளன.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தொழு நோயாளிகளின் மருத்துவ வசதிக்காக ரூபாய் 5·12 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டிற்கு மட்டும் ரூபாய் 60 இலட்சம் செலவிடப்படும்.



அண்மையில் ஆஸ்திரேலியாவில் ஒரு பெண் ஒரே பிரசவத்தில் 9 குழந்தைகளைப் பெற்றெடுத்தாரல்லவா? அவருடைய கணவர் அந்த அதிசயப் பிரசவம் பற்றிய கதையை வெளியிடும் முழு உரிமையையும் 'சிட்னி' நகரச் செய்தித்தாள் ஒன்றினுக்கு விற்றுவிட்டாராம். அவ்வாறு கதை வெளியிடும் உரிமையை வழங்கியதற்காக அவருக்கு 5 இலட்சம் ஆஸ்திரேலிய டாலரை அந்தச் செய்தித்தாள் வழங்கியுள்ளது.



வேலூர் சி.எம்.சி. மருத்துவ மனையின் இயக்குநராக இருக்கும் இங்கிலாந்து நாட்டு டாக்டர் ''வெப்'' என்பவருக்கு ''ஓ.பி.இ.'' என்ற கவுரவப்பட்டத்தை, தனது பிறந்தநாள் விழாவன்று இங்கிலாந்து நாட்டின் ராணி எலிசபெத் அவர்கள் வழங்கியுள்ளார்.



வடஆர்க்காடு மாவட்டம் திருவண்ணாமலையை அடுத்த செங்கம் பகுதியில் 11,000 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு பெரிய விதைப்பண்ணை விரைவில் அமையவிருக்கிறது.

அந்தப் பண்ணையில் உயர் ரகப் பயறுவகைகள், நிலக்கடலை, சோளம், கம்பு, காய்கறிகள் ஆகியவைகளுக்கான விதைகள் உற்பத்தி செய்யப்படும். நெல், கரும்பு ஆகியவைகளுக்கும் அந்தப் பண்ணையில் ஒரு சிறு பகுதி ஒதுக்கப்படும்.

அந்த விதைப்பண்ணையில் 110 கிணறுகள் தோண்டப் படும். ஒவ்வொரு கிணறும் 70 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி அளிப்பதாக இருக்கும்.

அந்தப் பண்ணையை அமைக்க ரூபாய் 4 கோடி செலவிடப்படும். அங்கு 3,000 முதல் 4,000 பேர்களுக்கு வேலை கிடைக்கும்.



தமிழ் நாடு அரசாங்க ஊழியர்கள் வேலையில் இருக்கும்பொழுது திடீரென்று இறந்துபோனால், அவர்களது குழந்தைகளுக்குப் போதிய கல்விச் சலுகைகள் அளிப்பதற்குத் தமிழ் நாடு அரசு முடிவு செய்திருக்கிறது. இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் மீது இந்த முடிவு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இதன்படி, பதவியில் இருக்கையில் இறந்து போகும் அரசு ஊழியர்களின் பிள்ளைகள் பட்டப் படிப்பை முடிக்கும் வரையிலோ—திருமணம் செய்து கொள்ளும் வரையிலோ அவர்களது கல்விக்கான எல்லாக் கட்டணங்களும் ரத்து செய்யப்படும்.

அத்தகையவர்கள் விடுதிகளில் தங்கிப்படித்தால்—அவர்களின் குறிப்பிட்ட படிப்பு முடிந்து மேற்கொண்டு படிப்பைத் தொடரச் சொந்தஊருக்குச் செல்லும் வரையில் அவர்களின் விடுதிக் கட்டணங்களையும் அரசாங்கமே செலுத்தும்.

அவர்களின் சொந்த ஊர்களில் மேற்கொண்டு படிப்பைத் தொடருவதற்கு வசதியில்லாமல் இருக்குமானால், தற்பொழுது படித்து வரும் இடங்களிலேயே படிப்பைத் தொடர விடுதிக் கட்டணத்தை அரசு செலுத்தும்.



## அண்ணா கனவு நிறைவேறியது !



இந்தியாவுக்கு ஆகாய விமானம் வேண்டுமென்று கேட்கலாம், அதிலே நியாயமிருக்கிறது. கப்பல்கள் வேண்டுமென்று கேட்கலாம், அந்தத் துறையிலே இன்னும் நாம் தேர்ச்சி பெறவில்லை என்பதால்! ஆனால் சோறு போடு என்று அன்னியரிடம் கேட்பது?

—பேரறிஞர் அண்ணா

"உற்பத்தியைப் பெருக்குமாறு நாம் விடுத்த வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து ஆக்கமளித்த உழவர் பெருமக்கள் அனைவரும் நன்றிக்குரியவர்கள். விவசாயிகளின் முயற்சி, விவசாயத் தொழிலாளர்களின் உழைப்பு, அரசு அளித்த உதவி இவைகளின் காரணமாக உணவுப் பொருட்களுக்கு வெளியாரை எதிர்நோக்கியிருந்த நிலை முற்றிலும் மாறி 1970-71-ல் உணவுப் பொருள் வழங்கும் நிலையில் பிறர்க்கு உதவிடும் பெருமையினைப் பெற்றுள்ளோம். 1967–68-ல் நமது உணவு உற்பத்தி 57·72 லட்சம் டன்னாக இருந்ததற்கு மாறாக, 1970–71-ல் 70·30 லட்சம் டன் அளவுக்கு அதிகரித்துள்ளது."



—முதல்வர் கலைஞர்
(1971–72-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில்.)

# நெருப்புச் சிரிப்பு

மின்னலே ! விண்மகள் பின்னிய வெளிச்சப்
பின்னலே ! சுடரிழைப் பிணையலே ! கொட்டும்
சரமழை கொளுத்திய சாட்டைமத் தாப்புநீ !
நிறக்கரு முகில்களின் நெருப்புச் சிரிப்புநீ !
இடிவெடி வெடிக்குமுன் எழும் சுடர் வெளிச்சமே !
துடிதுடிப் புடன்நட மிடும்புது நடிகைநீ !
திங்கள் செங்கதிர் தங்கள் உறவால்
எங்கள்முன் வரும்இத் கொழுந்துக் குழந்தைநீ !
திருச்செங் கோடோ ஊர்ப்பெயர் ; வான்ஊர்
திருச்செங் கோடுநீ ! தேனிசை மகுடியில்
மயக்கம் கொள்ளா வான்வெளிப் பாம்பே !
தயக்கம் கொள்ளாத் தங்க ரேகையே !
தங்க ரேகைநீ தங்கா ரேகையே
தங்க மங்கையர் தங்கள் மேனியில்
தங்க நகைகளைத் தங்கிட வைப்பர் ;
பொன்னகை கண்டால் புன்னகை புரிவர் !
உன்னகை நகைக்கென உதிக்காப் புன்னகை !
களைக்கும் இடிக்குரல் கருமுகில் மழைஉளை
நனைக்கும் அனையா நல்ல நெருப்புநீ !
உறவுமாப் பிள்ளையின் வரவுகண் டொளியும்
பருவப் பெண்போல் பதுங்குகின் றுயே !
கட்டி யணைக்கவும் எட்டிப் பிடிக்கவும்
திட்டமிட் டெவன்உனைத் தேடித் திரிகிறுன் ?
விளங்கிய அறிவின் விஞ்ஞான வித்தகர்
களங்க நிலாவினைக் கலங்கிட வைக்கிருர் !
விண்வெளிப் பயணம் உன்வழிப் பயணமாய்
மண்வெளி மாந்தர் மாற்றிட மாட்டார் !
ஓடு காலிநீ ! உனைஎவன் பிடிப்பான் ?
பாடும் கவிஞர் பலபேர் உன்னை
உடுப்பும் எடுப்புமாய் உலவும் பெண்களின்
இடுப்புக் கிணையாய் இயம்புவர் ! பாவலர்
பாவாடை [illegible] பளிச்சிடும்

வண்ணக் கொடி[illegible] [illegible] [illegible]
மின்னற் கொடிஎன மேம்படப் புகழ்வர் !
பேர்தனிற் கொடிஎனும் பெருமைநீ பெறினும்
ஊர்வலக் கொடியாய் உலாவரு வாயா ?
காற்றிலே ஆடிநீ கம்ப உச்சியில்
ஏற்றிய கொடிப்புகழ் ஏற்றிடு வாயா ?
அரைத்துக் கரைத்த சந்தன நிறத்தை
உரித்த பலாச்சுளை ஒளிர்நிறம் தன்னை
சிரித்த தாழம் பூமடல் நிறத்தினை
விரித்துக் காட்ட விளங்கிடும் விளக்குநீ !
அலைநீர்க் குமிழிபோல் அழகுவான் வில்போல்
நிலையா வாழ்க்கையின் நிலைத்த உவமைநீ !
வெளிச்சம் போதும் வெகுபலர் உயர்கிருர் ;
பளிச்சிடும் நீஏன் பயத்துடன் ஒளிகிறுய் ?
திங்களின் விடுமுறை திங்களுக் கொருமுறை !
இங்குன் வருகை என்றே ஒருமுறை !
மின்மினிச் சரமே ! மெலிந்தபூச் சரமே !
விண்ணகத் தில்நீ வெளிச்ச விருந்தினள் !
நெளிவதை அலையிடம் நீகற் றுயா ?
ஒளிவதைக் காலடி ஓசையைக் கேட்டே
ஒளியும் திருடர் உணர்த்திவிட் டாரா ?
ஒளியுடல் இளைத்தநீ ஓடும் ஓட்டம்
குதிரை கற்றுக் கொடுத்ததா ? முன்னர்
மதுரையை ஆண்ட மதுரச் செந்தமிழ்ப்
பாண்டியர் வாளிடம் பளபளப் பைநீ
வேண்டிப் பெற்று விளங்குகின் றுயா ?
அற்பம்உன் ஆயுள் அற்புதம் உன்எழில் !
கர்ப்ப முகில்தரும் கர்ப்பூ ரச்சுடர்
மேனி யிருந்தும் மேல்நீ யிருந்தும்
வானில் நிலைத்திட வழியிலை ; மறைகிறுய்
அடக்கமாய் உன்னிடம் அழகே இருக்கையில்
நடுக்கம் எதற்கு ? நீ நடுங்கிட லாமா ?
மழைக்குளிர் நடுக்கமா ? மகிழ்ச்சியின் நடனமா ?
அழைக்கிறேன் இறங்கிவா ! அழைப்பிற் கிரங்கிவா !
ஓலைக் குடிசையின் ஏழைப் பெண்களாம்
சேலை நிலாக்களின் சிந்தை மகிழ்ந்திடத்
தங்கச் சங்கிலி யாடைத்
தங்கக் கம்பியே ! தரைக்குவா விரைவிலே!

புலவர் பொன்னிவளவன்

# கேளுங்கள் கொடுக்கப்படும்!

திருநெல்வேலி மாவட்டம், அம்பா சமுத்திரம் வட்டம் மணிமுத்தாறுக் கருகிலிருக்கும் எனது புன்செய் நிலத்தை அபிவிருத்தி செய்து கிணறு வெட்டி, பம்பு செட் வைத்து நீர்ப்பாசன வசதி செய்துகொள்ளவும் தமிழக அரசு "அபிவிருத்திக் கடன்" உதவி அளித்து வருகின்றது எனக் கேள்வியுற்றேன். அதையொட்டி தமிழக அரசைச் சார்ந்த துறையின் பெயர், தொடர்பு கொள்ளவேண்டிய அலுவலரின் பெயர், முகவரியையும் எனக்குத் தெரிவிக்கவும். மேலும் மண் பரிசோதனை செய்யும் அரசாங்க பரிசோதனை நிலைய முகவரியையும் தெரியப்படுத்தக் கோருகிறேன்.

*எச். சங்கரன்,*
*மாதுங்கா, பம்பாய்-19.*

புன்செய் நிலத்தை அபிவிருத்தி செய்து கொள்ளவும், கிணறு வெட்டி பம்புசெட் வைத்து நீர்ப்பாசன வசதி செய்து கொள்ளவும் தேவைப்படும் கடன் தொகையைத் தற்பொழுது தமிழ்நாடு அரசு, கூட்டுறவுத்துறை மூலமாகவே கொடுத்து உதவுகிறது. கூட்டுறவுத்துறையின் முக்கிய அங்கமாக விளங்கும் நிலவள வங்கிகள் (Land Development Banks) இதற்கான கடன்களை வழங்குகிறது. உங்கள் ஊருக்கு அருகில் உள்ள நிலவளவங்கியிலேயே நீங்கள் கடன் பெறலாம். உங்கள் ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றும் கூட்டுறவு வளர்ச்சி அலுவலர் [Extension Officer (co-operation)] அவர்களுடன் இதுபற்றித் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுடைய ஊர் தெரிந்தால் தானே எந்த ஊராட்சி ஒன்யத்தைச் சேர்ந்தது என்று கண்டுபிடித்து முகவரியைத் தெரிவிக்க இயலும்?

திருநெல்வேலி மாவட்ட உழவர்கள் மண் பரிசோதனை செய்ய வேண்டுமானால், உங்கள் வேளாண்மை வளர்ச்சி அலுவலர் அல்லது ஊர்நல ஊழியர் (கிராம சேவகர்) உதவியுடன் மண் மாதிரிகளை எடுத்து, உங்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மூலமாகப் பின் கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

"உதவி மண் இரசாயன வல்லுநர்,
மண்பரிசோதனை நிலையம்,
கோவில்பட்டி (அஞ்சல்),
திருநெல்வேலி மாவட்டம்.


நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண்: 52670 - 52671
52672 - 52673

தந்தி: MONARCH

Sarath


தமிழரசு இதழில் (சனவரி 1,1971) "உழவர் பெருமக்களுக்கு காணிக்கை" என்ற தலைப்பில் 'பொகைன்வில்லா ஜின்னே' என்ற செடி பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. செடி அல்லது விதை எங்குக் கிடைக்கும் என்பதையும், அதை எப்படிப் பெறுவது என்பதையும் தெரிவிக்க வேண்டுகிறேன். 'சேம்பிள் போஸ்டில்' பெறுதல் முடியுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

*கா. நாகராசன்,*
*புதுப்பட்டி.*

'பொகைன்வில்லா ஜின்னே' வேர்விட்ட தண்டுப்பதியங்களாகவே கிடைக்கும். இச்செடிக்கு விதை கிடையாது. வேர்விட்ட தண்டுப்பதியங்கள் (Rooted Cuttings) வேண்டுமானால் பின்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளுங்கள் :

"மலர்வகை நிபுணர்"
(Floriculturist)
வேளாண்மைக் கல்லூரி
ஆராய்ச்சி நிலையம்,
கோயம்புத்தூர்-3.

முன்பணம் கட்டியே பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கும். மேற்கண்ட முகவரிக்கு எழுதிக் கேட்டுக் கொள்ளுதல் நல்லது.

நான் தமிழரசை ஒழுங்காகப் படிப்பவன். முக்கியமாக, 'கேளுங்கள் கொடுக்கப்படும்' பகுதியை ஒழுங்காகப் படிப்பவன். நான் ஒரு கேள்வி கேட்கிறேன்! நான் ஒரு தாவர இயல் பட்டதாரி (B.Sc. Botany). விவசாயம் செய்ய அதிக விருப்பமுள்ளவன். ஆனால் நிலம் கிடையாது. ஆகவே என் எண்ணத்தைச் செயலாற்ற வசதி இல்லை. ஆதலால் அரசாங்கப் பண்ணைகள் உதவுமா? அரசு உதவி செய்யுமா?

*ராபின்சன் லேவி, காட்டுவிளை.*

உங்களுக்கு ஆசை இருக்கிறதே ஒழிய, உங்களிடம் ஆர்வமும், முயற்சியும் இல்லை என்றே எண்ணுகிறேன். தாவர இயல் பட்டதாரியான. தாங்கள் நிலமில்லாமலேயே வேளாண்மை செய்ய முடியும். பெட்டிகளிலும், தொட்டிகளிலும், தகரடப்பாக்களிலும் கூடக் காய்கறிச் செடிகளைப் பயிரிடலாம். மொட்டை மாடிகளிலே நெல் சாகுபடியும் செய்து வருகிறார்கள் சிலர். முயற்சியும் ஆர்வமும் இருக்குமானால் நிலம் இல்லையே என்று கவலைப்படாமல் மேற்கூறிய முறையில், முதலில் காய்கறிச் சாகுபடி செய்ய முயலுங்கள். அதன்பின் நெல் முதலிய மற்றவைகளைப் பயிரிடுவதுபற்றிச் சிந்திக்கலாம்.

நிலமற்ற ஏழைகளுக்குத் தமிழ் நாடு அரசு நிலப்பட்டா கொடுத்து வருவது உங்களுக்குத் தெரியாதா? உங்கள் கோரிக்கையைக் குறிப்பிட்டு நிலப் பட்டா கொடுக்குமாறு உங்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மனு அனுப்பினீர்களா? அல்லது இதுபற்றி நேரில் சந்தித்தாவது மனு கொடுத்தீர்களா? இல்லையென்றால் இனி யாவது முயற்சி செய்யுங்கள். நிலப்பட்டா கிடைக்கவில்லையென்றாலும், குத்தகைக்கும் வாரத்திற்கும் பயிரிடலாமே! அவ்வகையிலாவது தாங்கள் முயன்றிருந்தால், உங்கள் ஆசை நிறைவேறியிருக்குமல்லவா?

இராமநாதபுரம் மாவட்டம் புதுவயல் அருகாமையில் உள்ள என் நிலத்தில் இதுவரை சம்பா, சித்தடியான் போன்ற நெல் வகைகள் தான் பயிரிட்டு வந்தேன். ஐ. ஆர். 8 நெல் அதிக மகசூல் தரும் என்று கூறப்படுவதால் இனிமேல் அதையே பயிரிடலாம் என எண்ணுகிறேன். ஐ.ஆர். 8 பயிரிட்டு அதிக விளைச்சல் காண என்ன உரம் இடவேண்டும், எப்படிச் செய்ய வேண்டும், என்பதை விளக்கிக் கூறுங்கள்.

*மெ.லெ. பழனியப்பன்,*
*சென்னை-17.*

உயர்விளைச்சல் தரும் ஐ.ஆர்.-8 ரக நெல்லை கார், சொர்ணவாரி பட்டத்திலும் (மே முதல் செப்டம்பர்வரை) நவரைப் பட்டத்திலும் (ஜனவரி முதல் மே வரை), கீழ்பவானி மற்றும் அமராவதி புதிய ஆயக் கட்டுப்பகுதிகளில் மட்டும் ஆகஸ்டு முதல் டிசம்பர் வரையான காலத்தில் சாகுபடி செய்யுமாறு வேளாண்மைத் துறை பரிந்துரைக்கிறது. சம்பாப் பட்டத்திற்கு ஐ.ஆர்.-8 பயிரிடுவது விரும்பத்தக்கது அல்ல. ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் மப்பும் மந்தாரமாகவும் உள்ள நிலைமை 'பேக்டீரியல் இலைக்கருகல்' நோயைத் தோற்றுவிக்குமாதலின் சம்பாப் பட்டத்தில் ஐ.ஆர்.-8 ரகத்தைப் பயிரிடுவது விரும்பத்தக்கது அல்ல. எனவே சம்பாவுக்குப் பதிலாக ஐ.ஆர்.-8பயிரிடுவதைத் தவிர்க்குமாறு வற்புறுத்துகின்றோம். மேலே குறிப்பிடப் பட்ட பட்டங்களில், தாங்கள் ஐ.ஆர்.-8 பயிரிட முடியுமெனில் செய்யலாம்.

ஐ.ஆர்.-8 நெல் சாகுபடி பற்றிய முழு விளக்கம் 1—7—71 இதழில் வெளியிடப் பட்டுள்ளது. அதைப்படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

**வேளாண்மை பற்றிய**
**வினாக்களே கேட்கப்பட**
**வேண்டும்!**

'' ஏய்! மஞ்சுளா! செக்கச் சிவந்த தக்காளிப் பழம்போல தளதளவென்று இருக்கிறாயே! எப்படியடி இப்படியானாய்? கல்லூரியில் புகுமுக வகுப்பில் படித்துக் கொண்டிருந்த பொழுது ஒல்லியாக, அதாவது என்னைப்போல், எலும்பும் தோலுமாக இருந்தாயே! இப்பொழுது எப்படியடி இந்த அளவுக்குத் தளதளவென்று ஆகியுள்ளாய்?'' என்று எதிரில் வந்து கொண்டிருந்த மஞ்சுளாவை, மருத்துவக் கல்லூரி மாணவியான மாலா வியப்புடன் கேட்டாள்.

'' மாலா! நலமாக உள்ளாயா? உன் அப்பா, அம்மா, அண்ணன் மாமா எல்லாரும் நலமா? இப்போ என்ன செய்து கொண்டிருக்கிறாய்? '' என்று அன்புடன் கேட்டாள் மஞ்சுளா.

'' எல்லாரும் நலமாகத் தான் உள்ளோம். உன் அப்பா, தம்பி எல்லாரும் நலமா? நான் மருத்துவக் கல்லூரியில் கடைசி ஆண்டு படித்துக் கொண்டிருக்கின்றேன். நீ என்னடி செய்து கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டாள் மாலா.

'' அப்பாவுக்கு உடல் நலமில்லாமல் வீட்டிலேயே இருக்கின்றார். தம்பி, பி.ஏ. படித்துத் தேர்வு பெற்று உள்ளான்; வேலை தேடி அலைந்து கொண்டிருக்கின்றான். நான் பி.எஸ்சி படித்து முடித்துவிட்டு, தற்பொழுது வேளாண்மைத் துறையில் இளநிலை எழுத்தராகப் பணியாற்றி வருகின்றேன். எங்கள் தெருவில் உள்ள குழந்தைகளுக்கு இரவில் டியூஷன் சொல்லிக்கொடுத்து மாதம் ரூபாய் 100 அல்லது 150 சம்பாதித்துக் கொண்டிருக்கேன். சம்பளத்தையும், டியூஷன் மூலம் கிடைக்கும் வருமானத்தையும் வைத்துத் தான் குடும்பத்தை நடத்தி வருகின்றேன். தம்பியையும் படிக்க வைத்து விட்டேன். அவனுக்கும் ஒரு வேலை கிடைத்துவிட்டால், எங்கள் கஷ்டம் தீரும் என்று நம்புகிறேன்'' எனக் கூறிப் பெருமூச்சு விட்டாள் மஞ்சுளா.






'' ஐயோ பாவம்! உன் கஷ்டம் இன்னுமா தீரவில்லை? உன் கஷ்டத்திற்கெல்லாம் சீக்கிரம் விடிவுகாலம் பிறக்குமடி! கவலைப்படாதே! உன்னைப் பார்த்ததும், நானும் உன்னைப்போல் தளதளவென்று ஆகணும் என்ற ஆசை பிறந்து விட்டது. எனக்கும் அந்த ரகசியத்தைச் சொல்லு மஞ்சுளா! ஏதாவது உடற் பயிற்சி செய்து வருகிறாயா? அல்லது 'டானிக்' சாப்பிட்டு வருகிறாயா? தயவு செய்து அந்த ரகசியத்தைச் சொல்லு மஞ்சுளா!'' என்று கெஞ்சினாள் மாலா.

'' மாலா! இதில் ஒன்றும் ரகசியமே இல்லை. நாங்கள் தான் ஏழை என்பது உனக்குத் தெரியுமே! சாப்பாட்டிற்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் நான் எப்படியடி 'டானிக்' வாங்கிச் சாப்பிட முடியும்? வீட்டு வேலைகளைக் கவனிக்கவும், அலுவலக வேலையைப் பார்க்கவுமே எனக்கு நேரம் போதவில்லை. இப்படியிருக்கையில் நான் உடற் பயிற்சி செய்து உடம்பை வலுவாகவும் வனப்பாகவும் வைத்துக் கொள்ள முடியுமா? செக்கச் சிவந்த தக்காளிப் பழம் போல் தளதளவென்று இருக்கின்றேன் என்று நீ சொல்லியது ஒரு வகையில் உண்மை. நான் இவ்வாறு ஆகியதற்கு, செக்கச் சிவந்த தக்காளியே மூலகாரணமாகும். எங்கள் வீட்டில் தொடர்ந்து தக்காளி பயிரிட்டு வருகின்றேன். நாள்தோறும் காலையிலும் மாலையிலும் தவறாமல் ஒரு தக்காளிப் பழம் சாப்பிட்டு வருகின்றேன். தக்காளிப்பழம் சாப்பிட்டு வருவதனாலேயே நான் இவ்வாறு ஆகியுள்ளேன். மாலா! மன்னித்துக் கொள்! மணி ஆகிவிட்டது! முன்னாடியே சென்றால்தான் பஸ்ஸில் இடம் கிடைக்கும். இல்லையெனில் அலுவலகத்திற்குக் காலங்கடந்துதான் செல்ல நேரிடும். நாளைக்கு ஞாயிற்றுக் கிழமை தானே, எங்கள் வீட்டுக்கு வாயேன். ஆற அமரப் பேசிக் கொள்ளலாம்'' என்றாள் மஞ்சுளா.

''சரி மஞ்சுளா! நாளை காலை 10மணிக்கெல்லாம் வந்துவிடுகின்றேன். நீ அலுவலகத்திற்குப் போ!'' என்று கூறி விடை கொடுத்தாள் மாலா.

''கண்டிப்பாக வரவேண்டும்; மறந்து விடாதே! அப்போ நான் புறப்படுகிறேன்'' என்று கூறி விடை பெற்றுக் கொண்டு விரைந்து நடந்தாள் மஞ்சுளா.

மஞ்சுளா நடந்து செல்லும் அழகைக் கண்டு அசையாமல் நின்று பார்த்துக் கொண்டே இருந்தாள் மாலா. மாலாவும், மஞ்சுளாவும் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டுவிட்டு அந்த வழியாக மோட்டார் சைக்கிளில் வந்த மாலாவின் மாமா டாக்டர் இளஞ்சேரன் சற்றுத் தூரத்தில் சைக்கிளை நிறுத்திவிட்டு மாலாவின் அருகே வந்தான். அவன், அருகில் வந்ததைக் கூடக் கவனிக்காமல் மஞ்சுளாவையே பார்த்துக் கொண்டிருந்தாள் மாலா. அது கண்ட இளஞ்சேரன் ''என்ன மாலா, அந்தப் பெண்ணைப் பார்த்து இப்படி அசந்து நின்றுவிட்டாய்! யார் அது?'' என்று கேட்டான்.

''மாமா! நல்ல நேரத்தில் வந்து சேர்ந்தீர்கள்! அந்தப் பெண்ணைப் பார்த்தீர்களா? அவளுடைய பெயர் மஞ்சுளா. மிகவும் அழகாய் இருக்கிறாள் இல்லையா மாமா?'' என்றாள் மாலா.

'' எனக்கு எந்தப் பெண் அழகாய் இருக்கிறாள் என்று பார்க்கும் வேலையா? நீ யாருடனோ வழியில் பேசிக்கொண்டு நிற்பதைக் கண்டதும் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு வந்தேன். அதற்குள் அந்தப் பெண் போய்விட்டாள். நான் பார்க்கவில்லையே! யார் அந்தப் பெண்?'' என்றான் இளஞ்சேரன்.

''அதையெல்லாம் அப்புறமா விவரமாகச் சொல்கிறேன். முதலில் சீக்கிரம் போய் அந்தப்பெண் அழகாய் இருக்கிறாளா, இல்லையா, என்பதைப் பார்த்து விட்டு வந்து சொல்லுங்கள்!'' என்று கட்டளையிட்டாள் மாலா.

எதிர்கால மனைவியாக வரப் போகிற மாலாவின் கட்டளையை மீற முடியாமல், இளஞ்சேரன் ஓட்டமும் நடையுமாக மஞ்சுளாவைப் பின் தொடர்ந்தான். மஞ்சுளா மாம்பலம் பேருந்து நிலையத்தில் 11-சி நிற்குமிடத்தில் நின்றாள். அவளருகில் சென்று சற்று நேரம் நின்று கவனித்தான் இளஞ்சேரன். மஞ்சுளா மிகவும் அழகாகவும் அடக்க ஒடுக்கமாகவும் இருப்பதைக் கண்டுகொண்டு மாலா நின்ற இடத்திற்குத் திரும்பி வந்தான்.

''மஞ்சுளா மிகவும் அழகாக இருக்கிறாள். அடக்கமாகவும் இருப்பாள் என்று கருதுகிறேன். தக்காளிப் பழம்போல தளதளவென்று இருக்கிறாள். எதற்காக அவளைப் பார்த்துவிட்டு வரச் சொன்னாய் மாலா?'' என்று கேட்டான் இளஞ்சேரன்.

''அவளைப்போல் நானும் ஆக வேண்டும். அவள் தொடர்ந்து தக்காளிப்பழம் சாப்பிட்டுத்தான் இப்படி ஆகியுள்ளாளாம். அதற்கு முன்பு என்னைப்போல் தான் எலும்பும் தோலுமாக இருப்பாள். விவரம் கூறுவதற்காக, நாளைக்கு அவள் வீட்டுக்கு என்னை வரச் சொல்லி இருக்கிறாள். நானும் அவளைப் போல் ஆக வேண்டும் மாமா! முடியுமா?'' என்று கவலையுடன் கேட்டாள் மாலா.

''அட கண்ணராவியே! இப்படி ஒரு ஆசையா உனக்கு! இதற்காகவா என்னை அலைய வைத்தாய்? நான், வேறு ஏதேனும் காரணமாக இருக்குமென்று அல்லவா நினைத்தேன்!'' என்றான் இளஞ்சேரன்.

''நீங்கள் எப்படி நினைத்தீர்கள்?''

'' அண்ணனுக்குத் திருமணம் நடந்தால்தானே நமக்குத் திருமணம் நடக்கும் என்று எண்ணி அந்தப் பெண்ணை உன் அண்ணனுக்குத் திருமணம் செய்து வைத்துவிடலாம் என்று நினைத்துத்தான் என்னைப் பார்த்து வரச் சொன்னியாக்கும் என்றல்லவா நினைத்திருந்தேன்!''

'' நானும் அப்படித்தான் நினைத்தேன். என்றால் அதை வெளியே சொல்ல முடியவில்லை. நீங்கள் ஆண்பிள்ளையாதலின் சொல்லிவிட்டீர்கள். நம் யோசனையை அண்ணன் ஏற்றுக் கொள்ள வேண்டுமே!''

''மாலா! அந்த வேலையை என்னிடம் விட்டுவிடு! நான் பார்த்துக் கொள்கின்றேன். நீ வீட்டுக்குப்போ; நான் மாலையில் வந்து பேசிக் கொள்கின்றேன்'' என்று கூறிவிட்டு, மோட்டார் சைக்கிள் ஏறி வேகமாகப் போய்விட்டான் இளஞ்சேரன்.

அன்று மாலை 6 மணிக்கு வீடு திரும்பிய இளஞ்சேரன் முதல் வேலையாக எழிலரசு தங்கியிருந்த மாடியில் உள்ள அறைக்குச் சென்றான். அமைதியாகப் படுத்திருந்த எழிலரசின் நெற்றியில் கையை வைத்துப் பார்த்து விட்டு ''என்ன மாப்பிள்ளே! தலைவலி என்று மாலை 3 மணிக்கே வீட்டிற்கு வந்து விட்டாயாமே! '' என்று கேட்டான்.

''ஆமாம்! மாமா! தலைவலி அதிகமாக இருந்தது. அதனால் வந்துவிட்டேன்'' என்றான் எழிலரசு.

''ஏதாவது மாத்திரை சாப்பிட்டாயா?'' என்று கேட்டான் இளஞ்சேரன்.

''இல்லை, மாமா! கொஞ்சம் தூங்கி எழுந்ததும் சரியாகிவிட்டது'' என்று பதிலளித்தான் எழிலரசு. அவர்களுடைய பேச்சு தொடர்ந்தது.

''உனக்கு ஏன் தலைவலி அடிக்கடி வருகிறது என்பது எனக்குத் தெரியும். உனக்குத் தலைவலியே வராமல் இருக்க ஒரு வழி சொல்கிறேன். கேட்கிறாயா?''

''என்னவென்று சொல்லுங்க மாமா!''

''செக்கச்சிவந்த தக்காளிப்பழம் போலத்தளதளவென்றுஒருபெண் இருக்கு. நேரில் பார்த்து விட்டாயானால், அந்தப் பெண்ணைத்தான் திருமணம் செய்து கொள்வேன் என்று நீ பிடிவாதம் பிடிப்பாய். நீ ஒப்புக்கொண்டால் நாளையே நாம் போய் அந்தப் பெண்ணைப் பார்த்து விட்டு வரலாம். என்ன சொல்கிறாய்?''

''எத்தனையோ பெண் பார்த்தாச்சு! எனக்குப் பிடித்தால் என் அம்மாவுக்குப் பிடிக்கவில்லை. என் அம்மாவுக்குப் பிடித்தால், என் அப்பாவுக்குப் பிடிக்கவில்லை. இப்படியே தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. மூன்று பேருக்குமே பிடித்தமாதிரி ஒரு பெண்ணும் கிடைக்காது ! எனக்கும் திருமணம் ஆகாது!'' என்று அலுத்துக்கொண்டான் எழிலரசு.



''அடேயப்பா! எழிலரசு, நீ எப்படித்தான் எம்.பி.பி.எஸ். படித்து டாக்டராக ஆனாயோ! நீ இந்தக் காலத்தில் பிறக்கவேண்டியவனில்லையடா! நூறு ஆண்டுக் காலத்திற்கு முன்பு பிறந்திருக்க வேண்டியவன் நீ! அவனவன் பெண் பிடித்திருந்தால், அப்பா அம்மாவுக்குத் தெரியாமல் திருமணம் செய்துகொண்டு திடீரென்றுஅப்பா அம்மாவிடம்வந்து ''மன்னித்து விடுங்கள்'' அல்லது 'ஆசீர்வாதம் செய்யுங்கள்' என்று கேட்கிறான். திருமணம் செய்து கொள்ளப் போகிறவன் நீ! உனக்குப் பெண் பிடித்திருந்தால் போதாதா? உன் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் பிடித்திருக்கவேண்டுமென்றால் முடியுமாடா? இந்தப் பெண் தான் பிடித்திருக்கு என்று உள்ளத்தைத் திறந்து சொல்லேண்டா!''

''நான் என்ன மாமா செய்வது? அப்பா அம்மாவை எதிர்த்துப் பேச எனக்குத் துணிவில்லையே!''

''அப்பா அம்மாவை எதிர்த்துப் பேசு என்று சொல்லவில்லையே நான்! உன் உள்ளத்தில் உள்ளதை மறைக்காமல் அப்பா அம்மாவிடம் கூறிவிடு என்று தானே சொல்லுகிறேன்! இதைச் சொல்லக்கூட உனக்குத் துணிவு இல்லையென்றால், நீ எப்படித்தான் பெரிய டாக்டராக ஆகப்போகிறாயோ! உங்க அப்பா--என் மாமா ஒரு கஞ்சன்! உங்க அம்மா—என் அக்கா ஒரு பத்தாம் பசலி! அவர்கள் இருவருக்கும் பிடித்த மாதிரியா பெண் கிடைக்கும் என்பது ஐயத்திற்குரியதே. உங்க அப்பா அம்மா பேச்சைக் கேட்டால் நீ விநாயகர் மாதிரி பிரம்மச்சாரியாகத்தான் வாழவேண்டி இருக்கும்! இது நிச்சயம்! நீயே சிந்தித்து முடிவு செய்து கொள்!''

''கேட்டியா மங்கம்மா! உன் தம்பி என்னைக் கஞ்சன் என்றும், உன்னைப் பத்தாம் பசலி என்றும் சொல்வதை! இந்தப் பயல் நம்ம பையனைக் கெடுத்து விடுவான் போலிருக்கே!'' என்று கோபமாகக் கூறிக் கொண்டே வந்தார் சிங்காரவேலர்.



''அவன்தான் எப்பவும் துடுக்காச்சே! கிடக்கிறான் விடுங்க'' என்று கூறிக்கொண்டே பின்னால் வந்த மங்கம்மாள் தன் மகன் எழிலரசின் அருகில் சென்று ''ஏம்ப்பா! உனக்கு எந்தப்பெண் பிடித்திருக்கென்று சொல்லியிருக்கலாமே!'' என்றாள்.

கையும் களவுமாக அகப்பட்டுக் கொண்ட திருடனைப்போல் எழிலரசு பதில் சொல்ல முடியாமல் விழித்தான். அதைக்கண்ட இளஞ்சேரன் ''அதெல்லாம் போகட்டும் விடுங்க அக்கா! இனிமேல் நடக்க வேண்டியதைப் பாருங்க! செக்கச் சிவந்த தக்காளி மாதிரி ஒரு பெண் இருக்கு ; நம்ம மாலாவுக்கு 'பிரண்டு'. அதைப்போய் பார்த்துவிட்டு வர எங்களை அனுமதியுங்கள்'' என்றான்.

''அந்தப் பெண்ணுக்கு என்ன சொத்து இருக்கு? மாப்பிள்ளைக்கு என்ன கொடுப்பார்கள்?'' என்றார் சிங்காரவேலர்.

''பெண்ணைப்பற்றிக் கேட்கும் பொழுது, 'எதுவரை படித்திருக்கு, அடக்க ஒடுக்கமாக இருக்குமா, பையனுக்குத் தகுந்தாற் போல் பொருத்தமாக இருக்குமா, என்றுதான் எல்லாரும் கேட்பார்கள். ஆனால் நீங்கள் எடுத்த எடுப்பிலேயே 'பெண்ணுக்கு என்ன சொத்து இருக்கு?' என்று தான் ஆரம்பிக்கின்றீர்கள். இதனால்தான் உங்களைக்கஞ்சன் என்று சொன்னேன். நான் சொன்னது சரியா இல்லையா என்பதை நீங்களே சொல்லுங்கள்'' என்றான் இளஞ்சேரன்.

''டேய்! என்னையே திட்டிவிட்டு என்னிடமே திட்டியது சரியா இல்லையா என்று கேட்கிறாயா?'' என்று கோபமாகக் கேட்டார் அவர்.

''மன்னித்துக் கொள்ளுங்கள் ! நாளை அந்தப் பெண்ணின் வீட்டுத் தோட்டத்தைப் பார்க்க மாலா போகிறாள். அந்தச் சாக்கில், நாங்களும் அவளுடன் போகலாம் என்று இருக்கிறோம். அதற்கு அனுமதி தேவை'' என்றான்.

''பெண் பார்க்கப் பெரியவங்க தாண்டா போகணும் ! நீங்க இரண்டுபேரும் டாக்டராகி விட்டதனாலேயே பெரியவங்களாகிவிட முடியாதுடா! நாளைக்கு முகூர்த்த நாள் தான். எல்லாருமே போய் அந்தப் பெண்ணைப் பார்த்துவிட்டு வரலாம்! காலை 10மணிக்குத் தயாராக இருங்கள்!'' என்று கூறிவிட்டு சிங்காரவேலர் போய்விட்டார். அவரைத் தொடர்ந்து மங்கம்மாவும் போய் விட்டாள். எழிலரசு பெருமூச்சு விட்டான்.

''மாப்பிள்ளே! கவலைப்படாதே! நாளைக்கு அந்தப் பெண்ணைப் பார்த்ததும் அப்பா அம்மா ஒப்புக் கொள்வார்கள் பாரேன்!'' என்று கூறிவிட்டு ''மாலா! மாலா!'' என்று கூப்பிட்டுக் கொண்டே மாடிப்படிகளில் மெதுவாகக்கீழே இறங்கினான். ''இதோ வருகிறேன் மாமா'' என்று கூறிக் கொண்டே மாலா மாடிப்படிகளில் வேகமாக ஏறி வந்தாள். அவள் அருகில் வந்ததும் மெதுவாக ''நாளை காலை 10 மணிக்கு அந்தப் பெண் வீட்டிற்கு எல்லாருமே போகிறோம் ! பெண்பார்க்க வருகிறோம் என்று சொல்லாமல், வேறு காரணம் சொல்லி எல்லாரும் வருகிறோம் என்பதைத் தெரிவித்து விடணும்'' என்றான். அவளும் ''சரி'' என்று சொல்லி விட்டாள்.

இளஞ்சேரனும் மாலாவும் சேர்ந்தே திட்டமிடுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்ட எழிலரசு ஏதும் புரியாமல் திகைத்துக்கொண்டிருந்தான். மாலாவைக் கேட்பதற்கோ வெட்கம். மறுநாள் எப்பொழுது வருமோ என்று ஏங்கினான்.

மறுநாள் எல்லாரும் மஞ்சுளா வீட்டிற்குக் காரில் போனார்கள். அவர்களைக் கண்டதும் மஞ்சுளா அன்போடு வரவேற்றாள். மஞ்சுளாவின் அப்பா—ஓய்வு பெற்ற ஆசிரியர்-சிங்காரவேலரை நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்தித்தது பற்றி மகிழ்ந்தார்; ஒருவரைப் பற்றி ஒருவர் நலம் விசாரித்துக் கொண்டிருந்தனர். எழிலரசு மஞ்சுளாவையே கவனித்துக் கொண்டிருந்தான். அதுகண்ட மஞ்சுளா வீட்டின் உள்ளே செல்ல முயன்றாள். மாலா தக்காளிப் பழம் பற்றிய பேச்சைத் துவக்கினாள். அவளது ஆர்வத்தைக் கண்ட மஞ்சுளா, ''மாலா முதலில் தக்காளிப் பழத்தோட்டத்தைப் பார்வையிடலாம் வா!'' என்று அழைத்தாள். ''நாங்களும் வரலாமல்லவா?'' என்று கேட்டார் சிங்காரவேலர். ''ஓ! தாராளமாக வாருங்கள்!'' என்று கூறிவிட்டு, வீட்டின் பக்கத்தில் உள்ள தோட்டத்திற்கு எல்லா



## விமானத்தில் 15 லட்சம் பேர்

இந்தியாவில் ஆண்டு தோறும் சுமார் 15 லட்சம் பேர் விமானம் மூலம் பயணம் செய்கிறார்கள்.

நாள்தோறும் 60 லட்சம் பேர் புகை வண்டியில் பயணம் செய்கின்றனர்.

ரையும் அழைத்துச் சென்று, காட்டினாள். அந்தத் தோட்டம் ஒரு சோலைவனம் போல் இருந்ததைக் கண்டதும், ''மஞ்சுளா! இவ்வளவும் உன் வேலை தானா?'' என்று கேட்டாள் மாலா.

''ஆமாம், மாலா! நாங்கள் காய்கறி வாங்குவதற்காக ஒரு பைசா கூடச் செலவு செய்வதே இல்லை. வீட்டுத் தோட்டத்திலேயே எல்லாம் கிடைக்கிறது. இந்தச்சிறிய தோட்டத்தில் ஆண்டு முழுவதும் காய்கறி பயிரிட்டு வீட்டுத் தேவை போக மீதியை விற்று மூன்றே ஆண்டில் கிட்டத்தட்ட ரூபாய் 2,000 சேர்த்து வைத்துள்ளேன்'' என்று கூறினாள் மஞ்சுளா.

''மூன்றே ஆண்டில் 2,000 ரூபாய் மீதப்படுத்தி வைத்திருக்கிறாயா? பரவாயில்லையே!'' என்று பாராட்டினார் சிங்காரவேலர்.

''மஞ்சுளா! தக்காளியில் எத்தனைவகை பயிரிட்டுள்ளாய்? ஒவ்வொரு பாத்தியிலும் ஒவ்வொரு மாதிரி இருக்கிறதே!'' என்றாள் மாலா.

''தக்காளியில் பல வகைகள் உண்டு. உருண்டை வடிவம், சட்டி வடிவம், பம்பர வடிவம் இப்படிப் பல வடிவங்களில் தக்காளிப் பழம் இருக்கும். உருவத்தில் வேற்றுமை இருப்பது போலவே தக்காளியின் நிறத்திலும் வேற்றுமை உண்டு. சிவப்பு, மஞ்சள், மஞ்சள் கலந்த சிவப்பு ஆகிய நிறத்திலும் தக்காளிப் பழ வகைகள் உள்ளன. இந்தத் தோட்டத்தில் 'பாண்டுரோசா', 'மார்குளோப்', 'பெஸ்ட் ஆப் ஆல்'





'ஆகஸ்கார்ட்', ஆர். இ. டி. சி. 1, கோயம்புத்தூர் 1, ஆகிய 6 வகைகள் உள்ளன'' என்று கூறினாள் மஞ்சுளா.

''ஏம்மா மஞ்சுளா! நீ தக்காளிப்பழம் சாப்பிட்டுத் தான் அழகாய் ஆகிவிட்டதாக மாலா சொன்னாள்! அது உண்மையா? தக்காளியில் என்ன சத்து இருக்கு?'' என்று கேட்டாள் மங்கம்மாள்.

''நான் மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து தினமும் தக்காளி சாப்பிட்டு வருகின்றேன். தக்காளி சாப்பிட ஆரம்பித்த பின்பு தான், எலும்பும் தோலுமாக இருந்த நான் இப்படி ஆகியுள்ளேன். தக்காளியில் வைட்டமின் ஏ, பி, சி ஆகிய சத்துக்களும், புரதச்சத்து, கொழுப்புச் சத்து, இரும்புச் சத்து, சுண்ணும்புச் சத்து, பாஸ்பரஸ் சத்து ஆகியவைகளும் உள்ளன. இச்சத்துக்கள் உடலுக்கு வலிவையும் வனப்பையும் தருகின்றன: அதனால்தான் மாலாவையும் தொடர்ந்து தக்காளிப்பழம் சாப்பிடுமாறு கூறினேன்'' என்று பதிலளித்தாள் மஞ்சுளா.

அப்பொழுது மாலா ஒரு தக்காளிப் பழத்தைப் பறித்து வந்து ''இதென்ன கோழி முட்டை மாதிரி இருக்கிறதே! இதுவும் தக்காளி தானா?'' என்று கேட்டாள்!

"இதுவும் தக்காளி தான்மாலா. இதற்கு ஆர். இ. டி. சி. 1 (R.E.T.C-1) என்று பெயர். இது கிருஷ்ணகிரி அணைக்கு அருகில் உள்ள கிராமிய விஸ்தரிப்புப் பயிற்சி நிலையத்தில் கண்டு பிடிக்கப்பட்ட புதிய ரகமாகும். இதைச் செடியோடு பார்க்காதவர்கள் தக்காளி அல்லவென்றே கூறுவார்கள். உருண்டு, நீண்டு முனை கூர்மையாக உள்ள இத் தக்காளிப்பழம் நன்றாக முதிர்ந்த நிலையில் 3 முதல் 4 அங்குல நீளமும், 2½ அங்குலச் சுற்றளவும்உடையதாக இருக்கும். பொதுவாகத் தக்காளிப்பழம் புளிப்பும் இனிப்பும் கலந்ததாக இருக்கும். ஆனால் இப் புதிய தக்காளியில் புளிப்பு மிகவும் குறைந்து, இனிப்பு அதிகமாக இருக்கும்; சதைப்பற்று மிகுந்து விதைகள் குறைவாக இருக்கும். செடிகள் நீண்டு உயரமாக வளரும். இந்த ரகப் பழங்கள் பல நாட்கள் வரை கெடாமலும் இருக்கும். தின்று பாரேன், மிகவும் சுவையாக இருக்கும்'' என்று மஞ்சுளா கூறினாள். மாலா அந்தப் பழத்தைத் தின்றுகொண்டே, ''அதுஎன்ன தக்காளி? செக்கச் செவேலென்று நல்ல சிவப்பு நிறமாக இருக்கிறதே'' என்று கூறிக்கொண்டே அருகிலிருந்த ஒருவகைத் தக்காளியை நோக்கிக் காட்டினாள்.

''இதுவும்ஒரு புதுரகத் தக்காளி தான் மாலா! இதற்குக் 'கோயம்புத்தூர்-1' என்று பெயர். இதையே 'கோ-1' தக்காளி என்றும் சுருக்கமாகச் சொல்வார்கள்.



கோ-1 தக்காளி

இப் புதுரகத் தக்காளி அதிக உயரம் வளருவதில்லை. செடிகள் சுமாராகப் படர்ந்து குட்டையாகவே இருப்பதால், 'கோ-1' தக்காளிச் செடிகளை மூங்கில் குச்சிகளுடன் இணைத்துக் கட்ட வேண்டிய அவசியமில்லை. பழங்கள் உருண்டையாக இருப்பதுடன் மிருதுவாக இருக்கும். பழுத்த பழங்கள் செடியிலிருந்து விழுந்து விடாது. இதனால் பழங்களில் ஏற்படும் சேதம் குறைவு. இந்த ரகத் தக்காளியின் காய்கள் கரும் பச்சையாகவும், பழங்கள் மற்ற ரகத் தக்காளிப் பழங்களை விட நல்ல சிவப்பாக —மிளகாய்ப் பழச் சிவப்பில்— இருக்கிறது பார்த்தாயா? இவ்வகைத் தக்காளி கொத்து கொத்தாய் காய்க்கின்றன. ஒரு கொத்தில் 8 காய்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பழமும் சுமார் 125 கிராம் எடை இருக்கிறது. எட்டுப் பழங்கள் சேர்ந்தால் ஒரு கிலோ ஆகிவிடுகின்றன. ஒவ்வொரு செடியும் 55 பழங்கள் வரை கொடுக்கின்றது. குறைந்தது ஒரு செடியில் இருந்து 3 முதல் 4 கிலோ பழங்கள் வரை கிடைக்கக் கூடும். இவ் வகைத் தக்காளிப் பழத்தில் அமிலச் சத்துக் குறைவாக இருப்பதால் பழங்கள் புளிப்பதில்லை. சதைப் பற்று மிகுந்து உள்ளது; ஆனால்

மற்றவைகளை விடக் குறைவான விதைகளே உள்ளன. ஏறத்தாழ 6 பழங்களிலிருந்தே ஒரு கிராம் விதை கிடைக்கும். பழத்தைத் துளைக்கும் புழுக்களாலும், இலைப் புள்ளி நோயாலும் இந்த ரகத் தக்காளி அதிகம் பாதிக்கப்படாது. மற்ற ரகங்களை விட இந்த ரகம் 35 சத அளவுக்கு அதிக மகசூல் அளிக்கும். ஒரு ஏக்கரில் 'கோ-1' தக்காளி பயிரிட்டால், 15,000 கிலோ கிராம் முதல் 20,000 கிலோ கிராம்வரை மகசூல் கிடைக்கும். இத்தகைய சிறந்த குணங்களைக் கொண்டிருப்பதால், 'கோ-1' தக்காளிப்பழம் சமையலுக்கும், பழரசம், ஜாம், கெட்சப் போன்ற பக்குவப்படுத்தப்பட்ட பதார்த்தங்கள் செய்யவும் ஏற்றது'' என்று மஞ்சுளா விளக்கினாள்.

மஞ்சுளாவிடம் பேச விரும்பிய எழிலரசு கேள்வி கேட்பதுபோல் ''கோ-1 தக்காளியின் வயது என்ன? எவ்வளவு நாளையில் காய்க்கும்?'' என்று கேட்டான்.

''கோ-1 தக்காளியின் வயது 135 நாட்கள் தானுங்க. விதைத்த 51-ம் நாளில் முதல் பூ தோன்றி விடும். விதைத்த 92-ம் நாளில் முதல் அறுவடை செய்யலாம். முதல் அறுவடையிலிருந்து 43 நாட்களில் முழு அறுவடையும் முடிந்து விடும். அறுவடைக் காலம் குறுகியதாக இருப்பதால், பூச்சி, புழுக்களாலும், நோய்களினாலும் ஏற்படும் சேதம் குறைகிறது. கோ-1 தக்காளி குறுகிய வயதுடையதாய் இருப்பதால் நீர்ப் பாசனம் செய்வதற்கும், பயிர்ப் பாதுகாப்பு மேற்கொள்வதற்கும் ஆகும் செலவு குறைகிறது'' என்று பணிவுடன் விளக்கினாள் மஞ்சுளா.

''சரி எல்லாருமே கேள்வி கேட்கிறார்கள். நானும் ஒரு கேள்வி கேட்கிறேன் தங்கச்சி! கோ-1 தக்காளியை நடுவதற்கு ஏற்ற பட்டம் எது?'' என்று கேட்டுக் கொண்டே எழிலரசனை குறும்பாக நோக்கினான் இளஞ்சேரன். எழிலரசு வெட்கத்துடன் தலைகுனிந்துகொண்டான்.

''கோ-1 தக்காளியை ஆண்டு முழுவதும் பயிரிடலாம் அண்ணே! ஆனால் அதிக மழை பெய்யும் பருவ காலத்தில் பழங்கள் அறுவடைக்கு வராமல் கவனித்து அதற்கேற்ப நடவு செய்ய வேண்டும். ஆடிப் பட்டத்திலும், தைப் பட்டத்திலும் பயிரிட்டால் மிகுந்த மகசூல் கிடைக்கும் அண்ணே!' என்று உரிமையுடன் விளித்துச் கூறினாள் மஞ்சுளா.

''கோ-1 தக்காளியை ஒரு ஏக்கரில் பயிர் செய்ய விரும்புகின்றேன். சாகுபடி முறை எப்படியம்மா?'' என்று கேட்டார் சிங்கார வேலர்.



ஆர். இ. டி. சி. 1 தக்காளி

''கால்வலிக்குதே, உட்கார்ந்து பேசுவோமே'' என்றாள் மங்கம்மாள்.

''வீட்டிற்குச் சென்று உட்கார்ந்துபேசலாமே'' என்றாள் மஞ்சுளா. ''சரி'' என்று அனைவரும் சொல்லவேஅவர்களை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தாள் மஞ்சுளா. எல்லாரும் ஆளுக்கு ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டனர். மஞ்சுளா நின்று கொண்டே பதில் சொல்ல ஆரம்பித்தாள்.

''ஒரு ஏக்கர் தக்காளி நடவு செய்ய 120 கிராம் விதைகளை ஒரு சென்ட் நிலத்தில் (54 அடி × 8 அடி) மேடைப் பாத்திகளை அமைத்து நாற்று விடவேண்டும்'' என்று மஞ்சுளா கூறிக்கொண்டிருக்கும் போது, ''நீயும் உட்கார்ந்து சொல்லம்மா'' என்றார் சிங்காரவேலர்.

''பரவாயில்லைங்க'' என்று கூறிவிட்டு மஞ்சுளா மேலே தொடர்ந்தாள்.

''தக்காளி நட வேண்டிய நிலத்தை இரும்புக் கலப்பையால் நன்கு உழவேண்டும். கடைசி உழவின் போது ஏக்கருக்கு 20 வண்டி மக்கின தொழு எருவும், 100 கிலோகிராம் அமோனியம் சல்பேட்டும், 90 கிலோகிராம் சூப்பர் பாஸ்பேட்டும், 45 கிலோகிராம் பொட்டாசியம் சல்பேட்டும் இட்டு மண்ணுடன் கலக்குமாறு உழுதுவிட வேண்டும். அதன் பின் 75 சென்டிமீட்டர் அதாவது $2\frac{1}{2}$ அடி தூரத்திற்கு ஒரு பார் வீதம் அமைக்க வேண்டும்.

''நாற்று விட்டு மூன்று வாரங்கள் ஆகிய பிறகு, நாற்றுக்களைப் பறித்து பார்களின் பக்கவாட்டில் செடிக்குச் செடி 60 சென்டிமீட்டர் (2 அடி) இடைவெளி விட்டு நடவு செய்யவும். அதாவது பாருக்குப் பார் 75 சென்டிமீட்டர் இடைவெளியும், பாரில் செடிக்குச் செடி 60 சென்டிமீட்டர் இடைவெளியும் இருக்கும்படி நடவு செய்ய வேண்டும்.

''நடவு செய்த ஒரு மாதத்திற்குப் பிறகு 50 கிலோகிராம் அமோனியம் சல்பேட் உரத்தை பார்களின் பக்கவாட்டில் செடிகளின் மீது படாதவாறு இட்டு, செடிகளுக்கு மண் அணைத்து நீர் பாய்ச்சவேண்டும். அவ்வப்போது தோன்றும் களைகளை அகற்றிவிட வேண்டும். தேவையான அளவுக்கு நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

''தக்காளியைப் பூச்சி புழுக்கள் தாக்காதிருக்க நடவு செய்த 15 நாட்களுக்கு ஒரு முறை 250 மில்லி லிட்டர் என்டரின் மருந்தை 360 லிட்டர் (80 காலன்) தண்ணீரில் கலந்து தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். இந்த மருந்துடன் $\frac{1}{2}$ கிலோ டைத்தேன் மருந்தையும் கலந்து தெளித்தால் இலைப் புள்ளி நோயையும் வாடல் நோயையும் கட்டுப்படுத்தலாம்'' என்று கூறிப் பேச்சை நிறுத்தினாள் மஞ்சுளா.

''ஒரு ஏக்கர் தக்காளியிலிருந்து எவ்வளவு பணம் கிடைக்கும்? அதையும் சொல்லிவிடு மஞ்சுளா'' என்றார் சிங்காரவேலர்.

''தங்கச்சி! மாமாவைப்பற்றி உனக்குத் தெரியாது! எப்பவும் எதைச் செய்தாலும் என்ன வருமானம் கிடைக்கும் என்பதிலே தான் மாமா மிகவும் குறியாக இருப்பார்! அதனால் இந்தக் கேள்விக்குச் சற்று விளக்கமாகப் பதில் சொல்லு தங்கச்சி! இந்த கேள்வி மிகமிக முக்கியம்!'' என்று கிண்டலாகச் சொன்னான் இளஞ்சேரன்.

''டேய்! சும்மா இருக்கமாட்டே'' என்று கண்டித்தார் சிங்கார வேலர்.

''மாமா பணத்தில் குறியாக இருப்பதில் தவறில்லை அண்ணே! 'ஆற்றில் போட்டாலும் அளந்து போடு!' என்று அந்தக் காலத்திலேயே சொல்லி உள்ளார்கள். பணத்தின் அருமை கஷ்டப்பட்டு சம்பாதிப்பவர்களுக்குத் தான் தெரியும்! அதனால் மாமா கேட்டது மிகவும் சரி என்று தான் நான் நினைக்கின்றேன் அண்ணே!' என்று கள்ளங் கபடமின்றிச் சொல்லிவிட்டாள் மஞ்சுளா.

''அப்படிச் சொல்லு மஞ்சுளா! டேய்! இளஞ்சேரா! நல்லா கவனிச்சியா மஞ்சுளா சொன்னதை! மஞ்சுளாவுக்குப் பணத்தின் அருமை தெரிந்திருக்கிற அளவுக்குக் கூட உனக்கும் எழிலரசுக்கும் தெரியவில்லை. டாக்டராகி என்ன பயன்? எப்படித்தான் பிழைக்கப் போகிறீர்களோ! '' என்றார் சிங்காரவேலர்.

''சக்சஸ்'' என்று வாய் தவறிச் சொல்லிவிட்டு இளஞ்சேரன் மாலாவையும், எழிலரசையும் பார்த்தான்.

''என்னடா சக்சஸ்'' என்று கேட்டார் சிங்காரவேலர்.

''ஒன்றுமில்லை மாமா!'' மஞ்சுளா உங்களை 'சப்போர்ட்' செய்து பேசிவிட்டதனாலே, உங்களுக்கு 'சக்சஸ்' என்று சொன்னேன். வேறு ஒன்றுமில்லை!'' என்று கூறி சமாளித்து விட்டு, மஞ்சுளாவை நோக்கி ''தங்கச்சி! மாமா யாரையும் புகழ்ந்து பேசி இதுவரை நான் கேட்டதே இல்லை. ஒரு அரை மணி நேரப் பழக்கத்திலேயே, மாமா உன்னைப்புகழ்ந்துவிட்டார். உனக்கு நல்ல நேரம் பிறந்து விட்டதென்று நினைக்கின்றேன். அதனால் அவருக்கு, தக்காளி பயிரிட்டால் என்ன இலாபம் கிடைக்கும் என்பதைத் தெளிவாகக் கூறி விடு!'' என்று கிண்டலாகச் சிரித்துக்கொண்டே கூறினான் இளஞ்சேரன்.

''அவன் எப்பவும் அப்படித் தான் ஏதாவது கிண்டல் செய்து கொண்டே இருப்பான். கூச்சப்படாமே நீ விவரமாகச் சொல்லு மஞ்சுளா'' என்றார் சிங்கார வேலர்.

''ஒரு ஏக்கரில் கோ-1 தக்காளி சாகுபடி செய்ய ரூபாய் 1,500 ஆகும். ஒரு ஏக்கரிலிருந்து சராசரியாக 16,000 கிலோகிராம் தக்காளிப் பழம் கிடைக்கும். அதை கிலோ கிராம் 25 பைசா வீதம் விற்றால் ஏக்கருக்கு ரூபாய் 4,000 கிடைக்கும். எனவே செலவு போக ஏக்கருக்கு ரூபாய் 2,500 நிகர லாபம் கிடைக்கும்'' என்றாள் மஞ்சுளா.

''எந்த ஊரிலம்மா தக்காளிப் பழம் கிலோ 25 பைசாவுக்குக் கிடைக்குது? கிலோ 60 பைசாவுக்குக் குறைந்து நான் இதுவரை வாங்கியதில்லையே!'' என்று கேட்டார் சிங்காரவேலர்.

''அதில்லை மாமா! தக்காளிப் பழ விலை ஏறலாம், இறங்கலாம்! நான் சராசரியாகக் கிலோ 25 பைசா என்று கூறினேன். விலை அதிகமாக விற்கும் பொழுது இலாபமும் அதிகமாகும்'' என்றாள் மஞ்சுளா.

'' அப்போ, கிலோ 50 பைசா என்று விற்றால், ஒரு ஏக்கரில் 4 மாதத்தில் தக்காளி மூலம் 6,500 ரூபாய் நிகர இலாபம் எடுக்கலாம் ! இந்த ஆடிப்பட்டத்திலே ஒரு ஏக்கரில் கோ. 1 தக்காளி பயிரிட்டுப் பார்த்து விடுகின்றேன் !'' என்று மெதுவாகத் தன் மனைவி மங்கம்மாவிடம் சிங்காரவேலர் கூறினார்.

அதைக் கூர்ந்து கவனித்துக் கேட்டுவிட்டு இளஞ்சேரன் திடீரென ''அக்ரமம்! அநியாயம்! பணக்காரர் மேலும் பணம் சேர்ப்பதற்கு வழி சொல்லித் தருகிறாயா மஞ்சுளா! இது நியாயமா ? ''என்று இறைந்தான்.

அவ்வாறு இளஞ்சேரன் கூறியதைக் கேட்டவுடன் மங்கம்மாள், மாலா, எழிலரசன், மஞ்சுளா ஆகிய அனைவரும் சிரித்துவிட்டனர். அதைக் கண்ட சிங்காரவேலரும் சிரித்து விட்டார். ஆனால் இளஞ்சேரன் மட்டும் முகத்தைக் கடுகடுவென்று வைத்துக் கொண்டிருந்தான்.

சிரிப்பு ஒலி அடங்கச் சற்று நேரம் பிடித்தது. அதன் பின் இளஞ்சேரன் ''மஞ்சுளா ! இப்ப மாமா இலட்சாதிபதியாகத் தான் இருக்கிறார். நீயே அவருக்கு மருமகளாக வாய்த்து விட்டால், ஓரிரண்டு வருடத்திலேயே கோடீசுவரராகி விடுவார்! இன்னும் என்னென்ன பயிரிட்டு இலாபம் சேர்க்கலாம் என்பதையும் ஒரேயடியாகச் சொல்லிவிடு!'' என்றான்.

உடனே சிங்காரவேலர் குறுக்கிட்டு, ''செக்கச் சிவந்த தக்காளிப்பழம் மாதிரி இருக்கு, மஞ்சுளா! எனக்கு மருமகளாக வர மஞ்சுளாவுக்குத் தகுதியில்லையா என்ன?'' என்று கேட்டார்.

மஞ்சுளா வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள். எழிலரசின் முகத்தில் மகிழ்ச்சி பிறந்தது.

''ஏதேது? மஞ்சுளாவை மருமகளாகவே ஆக்கிக் கொள்வீர்கள் போலிருக்கிறதே! அதற்கு எழிலரசு ஒப்புக் கொள்ள வேண்டாமா?'' என்று கூறி இளஞ்சேரன் சிங்காரவேலரைத் தூண்டி விட்டான்.

எழிலரசு முகத்தில் மகிழ்ச்சிக்களை தோன்றியதைக் கண்ட சிங்காரவேலர், ''இளஞ்சேரா! உனக்கு அந்தச் சந்தேகம் வேண்டாம்! மஞ்சுளாவையே மருமகளாக ஆக்கி விடுவதென்று முடிவு செய்துவிட்டேன்! எழிலரசு என்னடா ஒப்புக்கொள்வது? கட்டுடா கழுத்தில் தாலியை என்றால்,

கட்ட வேண்டியதுதான் அவன் வேலை!'' என்ருர் சிங்கார வேலர்:

''மாமா! உங்களுக்கு மயக்கம் ஒன்றுமில்லையே'' என்ருன் இளஞ்சேரன்.

''இல்லை! ஏண்டா அப்படிக் கேட்கிருய்?'' என்று கேட்டார் சிங்காரவேலர்.

''மஞ்சுளா ஏழைப் பெண்ணு! அது சம்பாதித்துத்தான் இந்தக் குடும்பமே நடக்குது. அதனுலே சீதனம் ஏதும் கிடைக்காது. நல்லா யோசித்துச் சொல்லுங்க'' என்ருன் இளஞ்சேரன்.



''ஏண்டா! என்னைப் பணப் பேய் என்று நினைத்துக் கொண்டாய்? சீதனமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்! மஞ்சுளா முகத்தில் லட்சுமி கடாட்சம் ஒளி விடுதடா. மஞ்சுளா நம்ம வீட்டு மருமகளாக வந்தால், லட்சுமியே நம் வீட்டிற்கு வந்த மாதிரி தான்! மஞ்சுளாவை மருமகளாகப் பெற நாமெல்லாம் கொடுத்து வைத்திருக்க வேண்டுமடா!'' என்று கூறிவிட்டு, மஞ்சுளாவைப் பார்த்து, ''மஞ்சுளா! உனக்குச் சம்மதம் தானே!'' என்று கேட்டார் சிங்காரவேலர்.

இந்தக் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்ல வெட்கப்பட்ட மஞ்சுளா ஏதும் கூருமல் வீட்டின் உள்ளே ஓடிவிட்டாள். நடத்தவைகளை எல்லாம் கேட்டுக் கொண்டு வீட்டின் உள்ளே படுத்திருந்த மஞ்சுளாவின் அப்பா அமிர்தலிங்கம் படுக்கையைவிட்டு எழுந்து வந்து ''நான் ஒருத்தன் இருக்கின்றேன் என்பதை மறந்து விட்டீர்களா?'' என்று கேட்டுக் கொண்டே தள்ளாடித் தள்ளாடி வந்தார்.

''உங்களை மறந்து விடவில்லை! நான் பார்த்துக் கொண்டு முறைப்படி வந்து உங்களைக் கேட்கிருேம்'' என்ருர் சிங்காரவேலர்.

''ஐயா! நீங்க பெரிய இடம்! நாங்கள் மிகவும் ஏழை! அந்தப் பெண்ணு சம்பாதனையில் தான் நானும் என் மகனும் சாப்பிட்டு வருகிருேம். என் மகனுக்கு ஒரு வேலை கிடைத்தபின்பு திருமணத்தை வைத்துக் கொண்டால் நல்லது'' என்ருர் அமிர்தலிங்கம்.

''இனிமேல் எதைப்பற்றியும் நீங்கள் கவலைப்பட வேண்டாம்! நிம்மதியாக இருங்கள்! நான் பார்த்துக் கொள்கிறேன்! அப்போ நாங்க புறப்படுகிருேம்'' என்று கூறி, சிங்காரவேலர் எழுந்தார்.

''இதைச் சாப்பிட்டுவிட்டுச் செல்லுங்கள்!'' என்று கூறிக் கொண்டே 6 குவளையில் தக்காளிப் பழரசத்தை ஊற்றி ஒரு தட்டில் எடுத்துக் கொண்டு வந்து மேசைமேல் வைத்து விட்டு வீட்டினுள் ஓடி விட்டாள் மஞ்சுளா.

பழரசம் பருகிய பின்பு, ''நாங்கள் வரட்டுங்களா ?'' என்று கூறிக்கொண்டே புறப்பட்டார் சிங்காரவேலர்.

''சரிங்க'' என்று கூறி இரு கை குவித்து வணங்கினுர் அமிர்தலிங்கம்.

''மாலா! உங்க அப்பா ஒரு ஏக்கரில் கோ-1 தக்காளி சாகுபடி செய்யப் போகிருர். அந்தப் பழத்தையெல்லாம் பழரசமாக ஆக்கி அடிக்கடி குடித்துக் கொண்டிருக்கணும்! அப்பத்தான் நீயும் சிக்கிரமாகச் செக்கச் சிவந்த தக்காளி மாதிரி தளதளவென்று ! ஆகமுடியும். அப்படி நீ ஆகாவிட்டால் உன்னைத் திருமணம் செய்து கொள்ள மாட்டேன் தெரியுமா?'' என்று கிண்டல் செய்தான் இளஞ்சேரன்.

இளஞ்சேரன் கிண்டலை எல்லாரும் ரசித்துச் சிரித்தனர்: மாலா வீட்டினுள் சென்று மஞ்சுளாவின் அருகில் நின்று ''செக்கச் சிவந்த தக்காளி மஞ்சுளாவே! வருங்கால அண்ணியே! வரட்டுமா ?'' என்ருள். மஞ்சுளா வெட்கத்துடன் ''சரி'' என்று மெதுவாகக் கூறினுள்.

எல்லாரும் புறப்பட்டு வெளியே வந்து காரின் அருகில் சென்றனர். எழிலரசு, சிங்காரவேலருக்குத் தெரியாமல் இளஞ்சேரனின் கையைப் பிடித்துக் குலுக்கி ''நன்றி'' என்று மெதுவாகக் கூறினுன். ''நன்றியை மாலாவுக்கு செரல்லு மாப்பிள்ளே!'' என்ருன் இளஞ்சேரன். ''நன்றியை எனக்குச் சொல்லுங்கடா!'' என்று கிண்டல் செய்தார் சிங்காரவேலர். ''மிக்க நன்றி மாமா'' என்று உடனே இளஞ்சேரன் கூறிவிட்டு, ''காரில் சீக்கிரம் ஏறுங்க! எனக்குப் பசிக்குது! மாமா மகிழ்ச்சியாக இருக்கிருர்! ஹோட்டலுக்குப் போய் மாமா செலவில் இனிப்புச் சாப்பிடணும்!'' என்று அவசரப்படுத்தினுன். ''உன் விருப்பப்படி செய்'' என்ருர் சிங்காரவேலர். எல்லாரும் காரில் ஏறிய உடன், இளஞ்சேரன் காரை ஓட்டிக் கொண்டு அவனுக்கு விருப்பமான ஹோட்டலை நோக்கிச் சென்ருன். எழிலரசு இன்பக் கனவில் மூழ்கி இருந்தான்.

அவர்கள் சென்ற பிறகு ''அப்பாடா!'' என்று பெருமூச்சுவிட்டு விட்டு மஞ்சுளாவைத் தேடித் தோட்டத்திற்கு வந்தார் அமிர்தலிங்கம். மஞ்சுளா எதுவுமே நடைபெருதது போல் தன் கடமையைச் செய்து கொண்டிருந்தாள்.

ஆமாம்! செக்கச் சிவந்த தக்காளிக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தாள். அதைக்கண்ட அமிர்தலிங்கத்தின் கண்களிலே மகிழ்ச்சிக் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது!





# மாணவர் அரங்கம்

'விளையும் பயிர் முளையிலே' என்பது பழமொழி. முளையிலேயே நன்கு வலுவாக வளர்ந்தால்தான் விளைவு நன்ருக இருக்கும் என்பார்கள்.

இன்றைய மாணவர்களே இந்நாட்டின் நாளைய நாயகர்களாகவும், நாடுகாக்கும் வல்லவர்களாகவும், நல்ல குடிமக்களாகவும் ( Good citizen ) மலரப் போகிருர்கள். எதிர் காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டிய இன்றைய மாணவர்கள், கூட்டுறவின் இன்றியமையாமை, நோக்கம், நன்மைகள் பற்றியெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நன்னேக்குடன் தமிழ் நாடு கூட்டுறவு ஒன்றியம், உயர் நிலைப் பள்ளி மாணவர்களுக்கெனக் 'கூட்டுறவு பற்றிய பேச்சுப் போட்டி' ஒன்றை நடத்தியது. தமிழ் நாட்டிலுள்ள 45 கல்வி மாவட்டங்களிலும் இப்பேச்சுப் போட்டியை நடத்தி, முதல் இரண்டு நிலையில் வெற்றி பெற்றவர்களைத் தேர்ந்தெடுத்தனர்;

"கூட்டு—உறவு என்ற இரண்டு சொற்களடங்கியதே கூட்டுறவு. கூட்டு மட்டும் என்ருல் இலாபம் மட்டும் என்றுதான் பொருள். உறவு அதோடு சேர்ந்தால்தான் தோழமையின் உண்மையான இலாபமற்ற நோக்கம் என்ருர் பேரறிஞர் அண்ணு'' என்று தொடங்கி,

'' தனி மனிதன் துயர் துடைக்க, தனி மனிதன் தவிப் படக்க, தனி மனிதன் தளர்வு நீக்க எழுந்த ஒப்பற்ற இயக்கம் கூட்டுறவு. அதேபோல் தனி மனிதன், தான் மட்டும் எல்லா வசதிகளும் பெற்று வாழ்வதைத் தடுத்து, மற்றவர்களும் வாழ வழி வகுப்பதே கூட்டுறவு'' என்று கூறித் தொடர்ந்து, '' நான் கண்ட கூட்டுறவு—வாடுகின்ற முகத்தோடு, பாடுகின்ற பாட்டாளி, கூடுகின்ற உணர்வோடு, நாடுகின்ற இன்பத்தைச் சாடுகின்ற இயல்பின்றித் தேடுகின்ற கூட்டுறவு: நான் கண்ட கூட்டுறவு சோர்வு நீங்கிட, சோபிதம் நிறைந்திட, உழைப்போர் பெருகிட, உண்டு களிப்போர் அருகிட, தீயவர் ஒழிந்திட, தீமைகள் அழிந்திட, வாழ்வு வளர்ந்திட, தாழ்வு தளர்ந்திட வகை செய்யும் கூட்டுறவு

பாட்டுக்குப் பாரதியார்!
காட்டுக்குக் கவின் சிங்கம் !
ஏட்டுக்கு இளங்கோ !
நாட்டுக்குக் கூட்டுறவு !''

என்று கூறி முடித்தார் திரு சுரேஷ் என்ற மாணவர்.

கூட்டுறவு அமைச்சரிடமிருந்து முதற்பரிசு பெறும் திரு சுரேஷ்



அவர்கள் இறுதிப் போட்டிக்கு அனுப்பப்பட்டனர். 1971-ஆம் வருடம் ஜூன் மாதம் 1-ஆம் தேதியன்று இறுதிப் பேச்சுப் போட்டி சென்னையில் நடைபெற்றது.

அந்தப் பேச்சுப் போட்டியில் தான் மேற்கண்டவாறு பேசினார் திரு சுரேஷ். அப்போட்டியில் அவருக்கே முதற் பரிசும் கிடைத்தது.

மூன்றாம் பரிசு :

திரு அப்துல்ரசாக்,
நகராட்சி உயர்நிலைப் பள்ளி,
விழுப்புரம்.

பரிசு அளிப்பு விழா தொழிலாளர் நல அமைச்சர் திரு என்.வி. நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வெற்றி பெற்றவர்களுக்குக்



கூட்டுறவு அமைச்சரிடமிருந்து இரண்டாம் பரிசு பெறும் செல்வி சுமதி

**பரிசு பெற்றவர்களின் விவரம்**

**முதற் பரிசு :**

திரு சுரேஷ்,
பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி,
காஞ்சீபுரம்.

**இரண்டாம் பரிசு :**

செல்வி சுமதி,
சாரதா வித்யாலயப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி,
சேலம்.

கூட்டுறவு அமைச்சர் திரு சி.பா. ஆதித்தனார் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

முதற்பரிசு பெற்றவருக்கு மின்சார விசிறியும், 2-ஆம் பரிசு பெற்றவருக்கு எவர்சில்வர் குடமும்; 3-ஆம் பரிசு பெற்றவருக்கு மேசைக் கெடிகாரமும் பரிசாக அளிக்கப்பட்டன.

கூட்டுறவில் மாணவர்கள் காட்டும் ஆர்வம் கண்டு அமைச்சர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.



## ஒரே ஆண்டில் 8 இலட்சம் டன் அரிசி அதிகமாக விளைவிக்கப்பட்டுள்ளது!

தமிழ்நாடு அரசின் தளராத முயற்சியும், தமிழ்நாட்டு உழவர் பெருமக்களின் ஓயாத உழைப்பும் காரணமாக ஒரே ஆண்டில் 8 இலட்சம் டன் உணவு தானியங்களை அதிகமாக விளைவிக்க முடிந்துள்ளது. இது தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே, ஏன் இந்திய வரலாற்றிலேயே இதுவரை ஏற்படாத மாபெரும் சாதனையாகும்.

1969-70-ஆம் ஆண்டில் 45 இலட்சம் டன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டது. அது 1970-71-ஆம் ஆண்டில் 53 இலட்சம் டன்னாக உயர்ந்து இருக்கிறது. அதாவது ஒரே ஆண்டில் 8 இலட்சம் டன் அரிசியைக் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இதற்குக் காரணம், தமிழ்நாட்டில் சென்ற ஆண்டு நெல் சாகுபடி செய்யப்பட்ட 66 இலட்சம் ஏக்கரில் 45 இலட்சம் ஏக்கரில் ஐ. ஆர். 8 முதலிய உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிட்டதேயாகும். இந்த ஆண்டில் மேலும் 5 இலட்சம் ஏக்கரில் அதாவது மொத்தம் 50 இலட்சம் ஏக்கரில் உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிடத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. எனவே தமிழ் நாடு அரசின் நல் முயற்சிக்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்கவேண்டியது நம் கடமையல்லவா?

# தமிழ் தந்த பரிசு





"தமிழ் நாட்டின் ஆட்சி மொழியாக அரியணையேறியுள்ள தமிழ் மொழியில் குறிப்புகளும் வரைவுகளும் எழுதமுடியுமா ?" என்று ஐயப்படுகிறவர்கள் பலர். ஆனால் தமிழ் மொழியில் நல்ல குறிப்புகளும், வரைவுகளும் எழுத முடியும் என்பதற்கோர் எடுத்துக் காட்டாய் விளங்குகிறார் திரு நா. இராமலிங்கம் என்ற இளைஞர்.

தமிழ்நாடு வேளாண்மைத் துறை இயக்குநர் அலுவலகத்தில் உதவியாளராகப் பணியாற்றும் திரு நா. இராமலிங்கம் அவர்கள் தமிழில் நல்ல குறிப்புகளும், வரைவுகளும் எழுதி, 1970-ஆம் ஆண்டிற்குரிய பரிசுத் தொகை ரூபாய் 500 பெற்றுள்ளார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் திறமையாகத் தமிழில் குறிப்புகளும், வரைவுகளும் எழுதுகிறவர்களில் முதன்மையான நிலையில் உள்ளவருக்கு ரூ. 500 பரிசு கொடுக்கப்படுகிறது. சென்னை மாநகரத்தில் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தோடு, பல்வேறு துறை அலுவலகங்களும் இருப்பதால் சென்னை மாவட்டத்திற்கு மட்டும் இரண்டு பரிசுகள் அளிக்கப்படுகின்றன.

தமிழில் நல்ல குறிப்புகளும், வரைவுகளும் எழுத வேண்டும் என்ற ஆர்வத்தை, எல்லா அரசு பணியாளர்களிடமும் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே, இப்பரிசுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

சென்ற ஆண்டு பரிசுத் திட்டத்தின்கீழ் சென்னை மாவட்டத்தில் பரிசு பெற்றவர்கள் இருவரில் ஒருவரான திரு நா. இராமலிங்கம் அவர்கள் தமிழ் வேண்டும் என்ற தணியாத ஆர்வமும் உள்ளவர், அவர். 'தமிழரசு' இதழுக்கு அளித்த பேட்டி இதோ :

"உங்களுடைய சொந்த ஊர் எது ?"

"வட ஆர்க்காடு மாவட்டம், ஆரணி வட்டத்தில் உள்ள தேவிகாபுரம்".

"எதுவரை படித்துள்ளீர்கள் ? எங்கே படித்தீர்கள் ?"



"பள்ளி இறுதிவகுப்பு வரை படித்துள்ளேன். போளூர் கழக உயர்நிலைப் பள்ளியில் படித்தேன்".

"எத்தனை ஆண்டுகளாக அரசாங்க வேலையில் உள்ளீர்கள்? எந்தெந்தத் துறையில் பணியாற்றி உள்ளீர்கள் ?"

"1962-ஆம் ஆண்டிலிருந்து அரசாங்க வேலையில் உள்ளேன். வேளாண்மைத் துறையிலேயே தொடர்ந்து பணியாற்றி வருகிறேன்".

"தமிழிலேயே குறிப்புகளும் வரைவுகளும் எழுத வேண்டும் என்ற ஆர்வம் எப்படி ஏற்பட்டது ?"

உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் பொழுதே தமிழில் ஆர்வம் உண்டு. ஆங்கில வார்த்தைகளை கலக்காமல் தமிழில் சரளமாகப் பேசும் தலைவர்களின் பேச்சுக்களைக் கேட்கும் பொழுதெல்லாம், அதுபோல் தமிழிலேயே நன்கு பேச வேண்டும், எழுத வேண்டும் என்று விரும்பினேன். தமிழ் ஆட்சி மொழியாக அரியணையேறிய பிறகே, தமிழில் பேசவும், எழுதவும் எனக்கு நல்ல வாய்ப்புகள் கிடைத்தன. எல்லாவற்றையும் ஏன் தமிழிலேயே எழுதி வைக்கக் கூடாது என்று என்னையே நான் கேட்டுக் கொண்டேன். அந்தக் கேள்வியில் பிறந்த முயற்சிதான், மிகவும் கடினமானவைகளையும் எளிய தமிழில் எழுத ஆர்வம் ஊட்டியது. ஆங்கிலத்தில் கடிதம் வந்தாலும், தமிழில் பதில் எழுதி வந்தேன். இதனால் எதிர்தரப்புக் கடிதங்களும் நாளடைவில் தமிழிலேயே வந்தன. இந்நிகழ்ச்சி என் ஆர்வம் என்னும் செடி வளர உதவும் நல்லுரமாகியது.

"தமிழிலேயே குறிப்புகளும் வரைவுகளும் எழுதி வைப்பது நடைமுறைக்கு எளிது என்று நினைக்கின்றீர்களா ?"

"முதலில் சற்றுக் கடினமாகத்தான் இருந்தது. இப்பொழுதெல்லாம் வெகு எளிதிலும் விரைவாகவும் தமிழிலேயே எழுத முடிகிறது. மிகவும் கடினமான நுண்கலைச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச்

சொற்களைப் போட்டு எழுத முடிகிறது. முயற்சி இருக்குமானல், தமிழிலேயே குறிப்புகளும், வரைவுகளும் எழுதுவது என்பது வெகு சுலபமான செயலாகும் ''.

'' நீங்கள் தமிழில் எழுதுவதற்கு உங்கள் துறை அலுவலர்கள் ஊக்கமளித்தார்களா ? ''

" வேளாண்மைத்துறை அலுவலர்கள் அளித்த ஊக்கத்தின் காரணமாகவே, எனக்கு மேலும், மேலும் தமிழில் எழுதும் ஆர்வம் எற்பட்டது. என் ஆர்வத்தை மேலும் தூண்டிவிட எண்ணிய எங்கள் துறை அலுவலர்கள், பரிசு அளிக்கும் திட்டத்தில் பங்கு பெறுவதற்காக நான் எழுதிய கட்டுக் கோப்புகளையும் அனுப்பி வைத்தனர். நான் பரிசு பெற்ற பின்பு, வேளாண்மைத்துறை இயக்குநர் திரு நா. ஹரிபாஸ்கர், ஐ.ஏ.எஸ். அவர்கள் '' உன்னல் பெருமை பெற்ருேம் '' என்ற பொருள்பட '' We are proud of you'' என்று கூறிப் பாராட்டினர்.

'' பரிசு கிடைக்கும் என்று எதிர்பார்த்தீர்களா ? ''

'' பரிசு கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை ''

'' ஏன் ? ''

" என்னைவிடத் திறமைசாலிகள் இருப்பார்கள். அதனல் எனக்குப் பரிசு கிடைப்பது எளிதல்ல என்று எண்ணிக்கொண்டிருந்தேன் "

'' பரிசு பெற்றதும் என்ன நினைத்தீர்கள் ? ''

'' மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். மேலும் நல்ல முறையில் திறமையாகவும், எளிமையாகவும் தமிழிலேயே குறிப்புகளும், வரைவுகளும் எழுத வேண்டும் என்று எண்ணிக் கொண்டேன். தமிழ் மொழிக்குச் செய்த தொண்டுக்காக எனக்குக் கிடைத்த பரிசாகவே அதைக் கருதினேன். நான் பெற்ற பரிசைக் தமிழ் தந்த பரிசாகவே எண்ணி உள மகிழ்ந்தேன் ''.






தமிழகம் அன்று தொட்டு இன்றுவரை வேளாண்மையில் சிறந்து விளங்கும் நாடு ; உழவர்க்கும் உழவுத் தொழிலுக்கும் உயர்ந்த இடத்தைத் தந்து விளங்கும் நாடு. பலவகைப் பொருளையும் பற்றி ஆய்ந்து கூறும்வள்ளுவனர் உழவுத் தொழிலைத் தவிர வேறு எத் தொழிலையும் பற்றித் தமது நூலிலே கூறவில்லை. முற்றுந்துறந்த முனிவர் தவமும், முடிசூடிய மன்னவன் ஆட்சியும் உழவர் இல்லையேல் இல்லையென அவர் சொல்லும் அழகு மிகவும் இனியது.

வள்ளுவர் பயிர்த் தொழிலுக்கு இன்றியமையா வித்தைப் பற்றிப் பேசுகிருர்

'' வந்த விருந்தினர்க்கு அகமும் முகமும் மலர்ந்து வழங்கிப் பின்னர் உண்ணும் இல்லறத்தான் தன் நிலத்தில் பயிர் செய்ய வித்திடலும் வேண்டியதில்லை ; விருந்தினரைப் பேணிய அறப்பயன் அங்கு விளைவைத் தரும் '' என்பது அவர் கருத்து ; விருந்தின் பயனே வித்தாய் விளைவிக்கும்.

> '' வித்தும் இடல் வேண்டும் கொல்லோ ; விருந்தோம்பி
> மிச்சில் மிசைவான் புலம்.''

என்பது அவர் வாக்கு.

நல்லொழுக்கம் நலங்களெல்லாம் நாம் அடைய விதையாக இருக்குமென்பதை '' நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் '' என வரும் குறட்பாவால் கூறி வாழ்க்கைப் பயிர் நன்கு பலன்தர நல்லொழுக்க வித்தை ஊன்றக் கூறுகிருர் ;

இங்ஙனம் உழவுக்கு ஒப்பற்றதோர் இடமளித்து அத் தொழிலுக்கு வித்தாகக் கூறும் வித்தின் பல வகைகளை நமது தமிழிலக்கியமொன்றில் காணும்போது நமக்கு மகிழ்ச்சியும் வியப்பும் ஏற்படுமல்லவா ? அந்த வித்துக்கள் தாம் எத்தனை எத்தனை விதம் !

## வித்து வகைகள்

பிணல்வாரி, பூம்பாளை, திருமங்கை ஆழ்வான், மச்சு முறித்தான், சொரிகுரும்பை, முத்துச்சம்பா, ஆனைக் கொம்பன், பெருவெள்ளைச்சம்பா, குலைவாழை, மறுவில்லிச் சம்பா, வில்லூன்றிச்சம்பா, கடுக்கன்சம்பா, இராசுவாணன்.

சித்திரக்காலி, வாலான் நெல், சிறை மீட்டான், மணல் வாரி, செஞ்சம்பா, கருஞ்சூரை, சீரகச் சம்பா, முத்துச் சம்பா, விளங்கி நெல், மலைமுண்டன், பொற்பாளை, நெடுமூக்கன், அரிக்கிராவி, மூங்கிற்சம்பா, கத்தூரிச்சம்பா, வாணன் நெல், காடைக்கழுத்தன், இரங்கல் மீட்டான், கல்லுண்டை, புத்தநெல், கருங்குறுவை, புனுகுச் சம்பா.

போதுமா ? இவற்றைஎல்லாம் பூமியில் விதைப்போம் ; பசுமைப் புரட்சி காண்போம் ; பஞ்சம் ஒழிப்போம் ; பசியும், பிணியும் பகையும் நீக்கி, வசியும், வளனும் சுரக்கும் நிலமாகத் தமிழகத்தைக் காண்போம்.






# ஏழையின் வீட்டுத் திருமணத்தைப் போல்

பொன்னி—ஏழைக் குடும்பத்தில் பிறந்த எழிலரசி! கண்டவர் நெஞ்சமெல்லாம் இனிக்கும் கட்டழகி! அழகுப் பெட்டகம்!

அவளுக்கென்று ஒரு மனம் இருக்கத்தானே செய்யும்! அது போலவே அவளது மனத்தைப் பறித்தவன் ஒருவன் இருப்பதில் வியப்பில்லை. இந்த நிலையைப் புரிந்து கொண்டார் பொன்னம்பலம்—பொன்னியின் தந்தை! காலத்தைக் கடத்தாமல் கடிமணத்தை முடிக்க எண்ணினார்! முயற்சியினை மேற்கொண்டார்.

தனது திருமணத்திற்குப் பிறகு தனது இல்லத்தில் நடைபெறும் பெருவிழா........ பொன்னியின் திருமணம். உற்றார், உறவினர், ஊரில் உள்ள அத்தனை நண்பர்களையும் அழைக்க வேண்டும். பொன்னியின் திருமணம் எண்ணி எண்ணி மகிழும் வகையில் இருக்கவேண்டும். ஏழை பொன்னம்பலத்தின் மனத்தில் எத்தனை எத்தனையோ எண்ணக் கோட்டைகள் தோன்றின!

அந்த நாளும் வந்தது. மணமகள் பொன்னிக்கு மங்கல நாண் அணிவித்தான் அவள் காதலன். விழா முடிந்தது—விருந்து படைக்கப்பட்டது. ஏழை வீட்டு விருந்து, எளிமையாக இருந்தது. விருந்து முடிந்தது. விழாவுக்கு வந்திருந்தோர் கலைந்தனர். இன்ப நினைவுகளோடு இளைப்பாறிக் கொண்டிருந்தார் பொன்னம்பலம்.

'என்ன கல்யாணச் சாப்பாடோ!—எது கேட்டாலும் இல்லைங்கறாங்க. பிறகு எதுக்கு சாப்பாட்டுக்கு அழைக்கணும்?'

'முதல் பந்தியோட நெய் தீர்ந்து போச்சாம்.'

'அது மட்டுமா? அடுத்த பந்தியிலே உட்கார்ந்தவர்களுக்கெல்லாம் அப்பளம் போடலே!'

'நல்ல வேளை சாப்பாடு தீர்ந்து போச்சுன்னு சொல்லலே!'

'சர்க்கரை சரியா போடலேன்னு—பாயசம்னு எதுக்கு சொல்லணும்?'

''பொன்னம்பலம் ரொம்பக் கெட்டிக்காரர். சம்பந்தி வீட்டாரை சரியா கவனிச்சுட்டார். மத்தவங்களெல்லாம் இருந்ததை சாப்பிட்டாங்க''

இப்படிப் பல விமர்சனங்கள் பொன்னம்பலம் வீட்டுத் திருமணச் சாப்பாட்டைப்பற்றிக் கூறப்பட்டன. மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்த பொன்னம்பலத்திற்கு இந்த விமர்சனங்கள் தெரிய வந்தவுடன் அவரது மகிழ்ச்சி மறைந்தது; மனம் கலங்கினார், பொன்னம்பலம்.

ஆனால் அவர் என்ன செய்வார் பாவம்! அவர் ஓர் ஏழை—எப்படியோ பொன்னியின் திருமணத்தை முடித்துவிட்டார்.

மணவிழாவிற்கு வந்தவருக்கெல்லாம் மனநிறைவு ஏற்படும்படி விருந்து படைக்க—பொன்னம்பலம் செல்வச் சீமானா என்ன!......

பொன்னம்பலத்தின் கண்கள் கலங்கின. அவரது உதடுகள் லேசாக அசைந்தன. ''ஏழை வீட்டுத் திருமணத்தில் எல்லாரையும் மனநிறைவு படுத்த முடியாது'' — பொன்னம்பலம் அமைதியாகக் கூறினார்!

ஏழை பொன்னம்பலத்தின் நிலையில்தான் இந்த ஏழை அரசு—தமிழகஅரசு இருக்கிறது. எல்லாருக்கும் நல்வாழ்வு அளிக்க வேண்டும். பிணியிலிருந்துமக்களைக் காக்கவேண்டும், என்ற உயர்ந்த லட்சியத்தோடு உழைத்து வருகின்றது தமிழக அரசு. இருக்கின்ற நிதி வசதியோ குறைவு. ஆனால் பெருகிவரும் மக்களின் தேவையோ வளர்ந்துகொண்டே செல்கின்றது. எனவே எத்தனை மருத்துவமனைகள் துவக்கினாலும்—மருத்துவ வசதியை முழுமையாகப் பெறாத மக்களின் தொகை கணிசமாக இருக்கின்றது. மக்கள் தொகைக்கேற்ற அளவு மருத்துவர்கள் இல்லை; மருத்துவ மனைகள் இல்லை; மருத்துவ மனைகளில் தேவைக்கேற்ற படுக்கைகள் இல்லை; இந்த நிலைமைகளை மாற்றி அமைக்க அரசு பலகோடி ரூபாய்களைச் செலவழித்து வருகிறது.

மருத்துவர்கள் பெருக வேண்டுமென்றால் முதலில் மருத்துவக் கல்லூரிகளில் எல்லாவிதமான வசதிகளும் பெருக வேண்டும். எனவே சென்னையில் உள்ள மூன்று மருத்துவக் கல்லூரிகளிலும், மதுரை, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரிகளிலும் பல்வேறு வகையான கட்டட வேலைகளை மேற்கொள்ள 1971-72-ல் ரூ. 31·77 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

மருத்துவ மனைகள், மருந்தகங்கள் ஆகியவை அடங்கிய திட்டங்களுக்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 823 இலட்சம் ரூபாய் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்காக 1971-72-ஆம் ஆண்டில் 186·80 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

1970-71-ஆம் ஆண்டில் 347 மருத்துவமனைகளும் மருந்தகங்களும் செயல்பட்டு வந்தன. 21,324 படுக்கைகள் இருந்தன. இவை 1971-72-ஆம் ஆண்டில் 355 மருத்துவ மனைகளும், மருந்தகங்களுமாக, 21,964 படுக்கைகளுமாக உயர, ஆக்கப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

'சென்னை அரசினர் மன நோய் மருத்துவ மனையில் முற்றிய நோயாளிகளைக்கவனிக்க புறநோயாளித் தொகுதி'

'சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் அவசரக் கால அறுவை மருத்துவக்கூடம்'

'அரசினர் பொது மருத்துவ மனையில் எக்ஸ்-கதிர் தொகுதி,' 'முட நீக்கியல் தொகுதிக்கான மூன்றடுக்குக் கட்டடங்கள்' 'அறுவைச் சிகிச்சை மருத்துவக் கூடத்திற்கும், அறுவை மருத்துவப் பின் பராமரிப்புப் பிரிவுக்கும், நரம்பியல் பிரிவிற்கும், குளிர்சாதன வசதி செய்து கொடுத்தது' — இவை யாவும் 1969-70-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்.

அரசினர் பொது மருத்துவ மனையில் மார்புக் கூடு சிகிச்சைப் பிரிவிற்குச் செயற்கைச் சுவாசக் கருவிகள் நடப்பு ஆண்டிலே வாங்கப்படும்.

1970-71-ல் ஆத்தூர், சிவகங்கை, திருமங்கலம், விழுப்புரம், உத்தமபாளையம் ஆகிய இடங்களிலுள்ள அரசு மருத்துவ மனைகளில் ரூ. 37,000 செலவில் எக்ஸ்-கதிர் பிரிவுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1969-70-ஆம் ஆண்டில் 32 வட்டாரங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டன. 1970-71-ஆம் ஆண்டில் 26 வட்டாரங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டன. எனினும் 1971-72-ஆம் ஆண்டு இறுதியில் 210 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கட்டட வசதி இன்றி இயங்கும். இதற்கெனச்செலவிட உத்தேசித்துள்ள தொகை 64·13 இலட்சம் ரூபாய். தொற்று நோய்களைத் தடுக்க 1971-72-ஆம்ஆண்டில் ரூ. 6·88 லட்சம் செலவு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மூலம் 1969-70-ஆம் ஆண்டு 87,239 சிறுவர்களுக்குமருத்துவம் பார்க்கப்பட்டது. 1970-71-ஆம் ஆண்டில் 97,358 சிறுவர்களுக்கு மருத்துவம் பார்க்கப்பட்டது.

அம்மை ஒழிப்புத் திட்டத்திற்காக 1971-72-ஆம் ஆண்டிற்கு ஒதுக்கிய நிதி 21·75 இலட்சம் ரூபாய். 1970-71-ல் 27·10 இலட்சம் பேருக்கு அம்மை குத்தப்பட்டது. 1971-72-ல் மேலும் 15 இலட்சம் பேருக்கு அம்மை குத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

முறைக்காய்ச்சல் ஒழிப்புத் திட்டத்திற்கு 1971-72-ஆம் ஆண்டிற்கு 185.40 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. தொழு நோயைக் கட்டுப்படுத்துவதற்காக 1971-72-ஆம்ஆண்டு 15·41 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. எலும்பு உருக்கி நோயைக் கட்டுப்படுத்த 1971-72-ஆம் ஆண்டிற்கு ரூ. 15 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

மக்கள் நல்வாழ்வுத் துறையினரால் ஆற்றப்படும் பல பணிகளில் சில மட்டுமே மேலே கூறப்பட்டுள்ளன. இன்னும் எத்தனையோ திட்டங்கள் மக்கள் நல்வாழ்விற்காக நிறைவேற்றப்படுகின்றன.

இருப்பினும், ஏழை வீட்டுத் திருமணத்தில் எப்படி எல்லாரையும் மனநிறைவு கொள்ளும்படிச் செய்ய முடியவில்லையோ அதுபோல இந்த அரசு ஆற்றி வரும் பணிகளுக்கு மேலாக மக்கள் பெருக்கம் உள்ள காரணத்தால், தேவையான அளவு மருத்துவம் பெற்றோம் என்ற மனநிறைவு எல்லாருக்கும் ஏற்படுத்த முடியவில்லை.

ஏழை பொன்னம்பலத்தின் தனிப்பட்ட வீட்டுப் பிரச்சினை—அவரது மகள் பொன்னியின் மணவாழ்விற்காக அளிக்கப்பட்ட விருந்து. ஆகவே எல்லாரையும் மன நிறைவு கொள்ளும்படிச் செய்ய முடியாதென அவர் விட்டுவிட்டார்.

ஆனால் நாட்டுப் பிரச்சினை அப்படி அல்லவே! அனைவருக்கும் மருத்துவ வசதி அளிக்க வேண்டும். ஆனால் நிதி வசதியோ வெகு குறைவு. அதற்காக நல்வாழ்வுக்கான நடவடிக்கைகளைத் தொடராமல் விட்டுவிட முடியுமா?

ஆகவே இப்படிச் செய்தால் என்ன என்ற வினாவை எழுப்புகிறார் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன்.

''உள்ளபடியே நாட்டில் மக்களுக்கு மருத்துவ வசதிகளைச் செய்ய நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் மக்கள் எல்லாவற்றையும் அரசாங்கத்திடம் எதிர்பார்ப்பது நியாயமான உரிமை அல்ல என்பதை நான் உணர்த்திக் காட்ட விரும்புகிறேன்.

''நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாவது ஒரு நாட்டுக்குப் பெருமையல்ல. ஆனால் அந்த நோயாளிகளுக்கு வைத்தியம் செய்யாமலிருப்பதும் நாட்டிற்குப் பெருமையல்ல. எனவே நாங்கள் முயற்சிப்போம், நீங்களும் ஒத்துழையுங்கள். அதுபோலத் திட்டமிட்டு ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய்க்குப் புதுக் கட்டடம் கட்டுகின்றோம். சேலம், தர்மபுரி மாவட்டத்தின் மருத்துவத் துறைக் கட்டடங்களையெல்லாம் கட்டுவதற்கான பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற நிர்வாகப் பொறியாளரைப் பார்த்த போது அவர் தெரிவித்தார். ஏறத்தாழ முப்பத்தைந்து இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டப்பட்டு வருகிறது. இன்னும் பத்து இடங்களில் கட்டுவதற்கு இடம் தேடிக் கொண்டு இருக்கிறோம். சில இடங்களில் பாதி ஆகிவிட்டது. சில இடங்களில் முக்கால் ஆகிவிட்டது. இரண்டு மாதத்தில் அவையெல்லாம் திறந்துவைக்க முடியும் என்று தெரிவித்தார். நான் சொல்வது பல்வேறு வகையான மருத்துவ மனைகள். குடும்பக் கட்டுப்பாடு நிலையம், ஆரம்பச் சுகாதார நிலையம்,

குடும்பக் கட்டுப்பாடு துணை நிலையம், இன்னும் அரசாங்க மருத்துவ மனையிலே சில பகுதிகள் இப்படிப் பலவற்றைக் கட்ட முயற்சிப்பது, நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. ஆனால் எவ்வளவுதான் நடைபெற்றாலும் போதவில்லை என்ற குறையைப் போக்க நான் உங்களிடத்தில் வேண்டிக் கொள்வேன். எங்கேனும் பொது மக்களுக்குத் தொண்டாற்றுகிற பெரியவர்களிடமிருந்து அவர்கள் வழி நடத்திச் செல்வதாக இருந்தால், ஒரு பத்துக் கிராமத்தை இணைத்து ஆயிரம் குடும்பத்தைச் சந்தாதாரர்களாகச் சேர்த்து ஒரு குடும்பத்துக்கு ஒரு ரூபாய் சந்தா வைத்து, வசதியுள்ளவர்கள் மாதம் ஐந்து ரூபாய், பத்து ரூபாய்களாகச் தந்து, மாதம் இரண்டாயிரம் ரூபாய் வசூலித்து ஒரு ஐநூறு-அறுநூறு பெறுகிற நல்ல தகுதியுள்ள டாக்டருக்குக்கூட டாக்டர் என்ற முறையில் ஒரு நாளைக்கு நாலுமணி நேரம் இந்த மருத்துவ மனைக்கு வரவேண்டிய முறையில் அவரை வரச்சொல்லி, முந்நூறு ரூபாய், முந்நூற்றைம்பது ரூபாய் வழங்கி அந்த நேரத்தில் அந்த மருத்துவ மனையில் அந்த ஆயிரம் குடும்பத்திற்குத் தேவையான எல்லா மருத்துவத்தையும் முறைப்படி அந்தக் குடும்பத்தை நன்றாகத் தெரிந்து கொண்டு நோய் நீக்கலாம்.

''தொழிலாளர்களுக்கென்று அவர்களுக்குத் தரப்படுகிற சம்பளத்தில் சிறு தொகையைப் பிடித்து வைத்து, திட்டத்தை ஏற்படுத்தி மேட்டூரில் இதற்கென மருத்துவமனை அண்மையிலே துவக்கி வைக்கப்பட்டது. குறிப்பிட்ட ஆலைகளில் வேலை செய்பவர்களாக இருப்பவர்களுக்கும், அதைப்போலத் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுக்கும் அவர்களின் வருமானத்திலிருந்து நூற்றுக்கு ஒரு பங்கு எடுத்து, அவர்களுக்கு நூற்றுக்கு ஐந்து பங்கு பலன் கிடைக்கக்கூடிய அளவிற்கு அந்தத் திட்டம் நிறைவேறுகிறது. ஆனால் கிராமத்தில் வாழுகின்ற மக்கள், ஏராளமான தொழிலிலே ஈடுபட்டுள்ள மக்கள், அவர்களெல்லாம் சேர்ந்து நடத்தக் கூடிய இந்தத் திட்டத்தைச் சென்னை நகரத்தில் அதற்குப் பக்கத்திலுள்ள பரங்கிமலையில் அங்கேயெல்லாம் ''வாலெண்டரி ஹெல்த் சர்வீஸ்'' என்ற பெயராலே நிறைவேறிக் கொண்டு இருக்கிறது. எனவே பொதுமக்களுக்கு நல்ல வசதிகளைச் செய்து தரவேண்டும் என ஆர்வமுள்ளவர்கள் ஒருமுறை, ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர், கூட ஒரு வட்டாரத்தைத் தேர்ந்தெடுத்து சிறு கிராமத்திலுள்ள ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்தாற் போல சில பகுதிகளைச் சேர்த்து, ஒரு மாதம் ஆயிரம், இரண்டாயிரம் சந்தா பிரிக்க ஏற்பாடு செய்து அந்த ஒவ்வொரு குடும்பத்திலுள்ளவர்களுக்கும், குழந்தைகளுக்கும், குழந்தைகளிலிருந்து பெரியோர்கள் வரை எந்த நோய் வந்தாலும் பக்குவமான மருத்துவத்தை வழங்குவதற்கு முயற்சிக்கலாம். அப்படி ஏதேனும் ஒரு திட்டம் உருவானால், அதை ஏற்றுக்கொண்டு எந்தத் தொகுதியில் செய்ய முற்பட்டாலும் அதை அரசாங்கம் எந்த வகையில் ஆதரிக்கலாம் என்பதை எண்ணிப் பார்த்து ஆதரவு தரும் என நான் தெரிவித்துக் கொள்கிறேன். இவையெல்லாம் நல்ல முற்போக்கான ஒரு சமுதாயத்தில் சாதாரணமாகும்.

''மருத்துவம் என்று சொன்னால் இலவசமாகத்தான் இருக்கவேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் மேல்நாட்டில்—ஓர் அளவுக்குக் கீர்த்தி பெற்ற நாட்டில் எளிய மருத்துவத்திற்கு அரசாங்கம் செலவழிக்கத் தேவையில்லை. 'நானே செலவழித்துக்கொண்டு நடத்திக் கொள்வேன்'—என்று சொல்வதைப் பெருமை என்று கருதுகிறார்கள். 'தன் உதவி' என்ற முறையில் தன் முயற்சி, தன் தொழில், தனக்குத்தானே காப்பாற்றிக் கொள்கிற திறமை உண்டு என்ற நம்பிக்கையின் அடிப்படையில் செயலாற்றுகிறார்கள்.

நம்முடைய நாடு பின்தங்கிக் கிடந்த நாடு. அறியாமையில் அகப்பட்டுக்கொண்ட நாடு. தெளிவான முன்னேற்றத்தைக் காணாத நாடு என்ற நிலையிலே இருந்த காரணத்தினால் அன்றைய சூழ்நிலைப்படி அரசாங்க மருத்துவ மனைகள் மட்டுந்தான் திறக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டன. எனவே தோன்றி இருக்கின்றன!

என் உயிரைக் காக்க நான் செலவழிக்கக்கூடாதா? என் உயிர் காக்க நான் என் வருமானத்தில் ஒரு பங்கு செலவழிக்கக் கூடாதா? என் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் செலவைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமா? நான் நூற்றுக் கணக்காகச் சம்பாதித்தால்கூட ஓர் ஐந்து ரூபாய் நோயாளிக்கு மருத்துவச் செலவுக்குப் பயன்படுத்தக் கூடாதா? என்று எண்ணிப் பார்க்கிற சமுதாயத்தில் இந்தச் செலவெல்லாம் வெகு சாதாரணம். சென்னையிலுள்ள ''வாலெண்டரி ஹெல்த் சர்வீசைப்'' பார்த்தோமேயானால் இந்த எண்ணத்தில் புது நம்பிக்கை பெறக்கூடும்.''

அமைச்சர் வழிகாட்டியுள்ளார். ஆக்கப் பணிகளைத் துவக்க வேண்டியது மக்களன்றோ!

அரசு கட்டிடும் மருத்துவ மனைகள் ஒருபுறம்! மறுபுறம் மக்களால் நிறுவப்படும் மருத்துவ மனைகள்!! இப்படி இரட்டைக் குழல் துப்பாக்கி வெடிக்க ஆரம்பித்தால் பிணிக்கு இங்கே இடமேது!




மிதக்கும் கலங்கரை விளக்கம் ஒன்று அண்மையில் பிரிட்டனில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது! இதனை, கடலுக்குள் எவ்வளவு தொலைவில் வேண்டுமானாலும் நிறுத்திவைத்து, நடுக்கடலில் செல்லும் கப்பல்களுக்குத் திசை காட்டப் பயன்படுத்தலாம். இது, தானே இயங்கக்கூடியது. இப்போது கடற் சோதனையில் உள்ளது.

இந்தக் கலங்கரை விளக்கத்தின் இயக்கத்தைத் தரையிலிருந்தே கட்டுப்படுத்த முடியும். தரையில் எழுப்பப்படுகிற கலங்கரை விளக்கத்திற்கு ஆகும் செலவில் பாதிதான் இந்த மிதக்கும் கலங்கரை விளக்கத்திற்கும் ஆகும். பராமரிப்புச் செலவிலும் மிகப் பெருமடங்கு குறையும்.



124


# டைதேன் எம் 45




லிமிடெட்
பம்பாய்-25, இந்தியா

# திருவாரூர் பொன்மொழியார்

'இளவல்'



"பஞ்ஜெ பல்லளெ ஹெறிகெய நோவன்னு"—இது கன்னடப் பழமொழி.

இதையே தெலுங்கில் சொல்லுவாங்க "கொட்டு ராலிகி தெலியுநா பிட்ட பாத" என்று.

—இப்படி இடம் தெரியாமல், நேரம் அறியாமல் தன்னுடைய பழமொழியில் பலமொழி அறிவைக் காட்டிக்கொள்ளும் வழக்கம் பூகம்பசாமிக்கு உண்டு. ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தில் காரணத்தோடுதான் பூகம்பசாமி பேசினார். தான் பேசுவது அருந்ததிக்குப் புரிந்துவிடக்கூடாது என்பதால்தான்.

'கல்லைக் கிள்ளினால் கைதான் நோகும்' என்னும் மொழி திடீரென்று நினைவுக்கு வந்தவராய் அருந்ததியுடன் மேலும் பேச்சைத் தொடராமல் பூகம்பசாமி சொன்னதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் வேகமாக வெளியே வந்தார், பொன்மொழியார்.

அருமை நண்பருக்கு ஆறுதல் சொல்லும் முறையில் அவரிடம் சொன்னார்"அந்தப்பழமொழியை மலையாளத்தில் 'மச்சி அறியுமோ சுற்று நோவு' என்பார்கள்."

பொன்மொழியார் பதிலேதும் பேசாது விறுவிறு என்று வீதியில் இறங்கி நடந்தார். அப்பொழுது தான் அருகில் அருந்ததி இல்லை என்பதை உணர்ந்து தன் பழமொழியைத் தமிழில் சொன்னார்: "மலடிக்குத் தெரியுமோ மகப்பேறு வருத்தம்' என்பதுதான் அந்தப் பழமொழியின் அர்த்தம். "அந்த அறிவுக் களஞ்சியங்களைப் பறி கொடுத்த துயரம் அருந்ததிக்குப் புரியுமா? இன்று அருந்ததியை எதிர்த்துப் பேசியது மாதிரி ஆரம்பத்திலேயே பேசியிருந்தால் இப்படி நடக்குமா?" என்று தொடர்ந்து பேசிக்கொண்டே பொன்மொழியாருடன் நடந்தார் பூகம்பசாமி.




பொன்மொழியார் எதுவும் பேசாமல் நடந்தார். எங்கே போகிறோம், எதற்காகப் போகிறோம் என்பது அறியாமல் போனார். ஆனால், அவருடைய இலக்கிய உள்ளம் 'இடுக்கண் வருங்கால் நகுக' என்று எடுத்துரைத்தது. 'ஆலை வாயிலே போன கரும்பாய்' தன்னுடைய புத்தகங்களாகிவிட்டனவே என்ற எண்ணத்துடன் நடந்தார். தள்ளாடினார். தள்ளாடிக் கொண்டே நடந்தார். மெதுவான குரலில் பேசத் தொடங்கினார்.

"பேய் செய்ய முடியாததைப் பெண்ணால் செய்யமுடியும்' என்பதை நிருபித்துவிட்டாள் அருந்ததி."

நண்பரின் மன வேதனையை உணர்ந்த பூகம்பசாமி, "பொன்மொழி, அங்கேரி நாட்டுப் பழமொழி என்று நீ அடிக்கடி ஒன்று கூறுவாயே,'நன்மை செய்தாலும் சரி, தீமை செய்தாலும் சரி, ஒருவன் அதைத் தனக்கே செய்கிறான்' என்று. அதுபோல இப்பொழுது அருந்ததி செய்திருக்கிறாள். வினை விதைத்தவள் வினைதான் அறுப்பாள்" என்று ஆறுதல் கூறினார்.

ஆறுதல் மொழியால் தேறிவிடுமோ பொன் மொழியாரின் வேதனை? அந்த வேதனை வார்த்தைகளாக வெடித்தது.

"பூகம்பம், மரம் கோடாரியைப் பார்த்துச் சொல்லிற்றாம்; 'நான் உனக்குக் கைப்பிடியைத் தராதிருந்தால், நீ என்னை வெட்ட முடியாது!' என்று. அதுபோல அருந்ததிக்கு நான் இடம் தராமலிருந்தால் இப்படி வேதனையை அனுபவிக்க வேண்டியிருந்திருக்காது. இப்ப நாம் என்ன செய்றது?" —வழக்கத்துக்கு மாறாக, செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றிப் பேசினார்.

"ஆமாம், வேறெ எங்கே அந்தப் புத்தகங்கள் இருக்கும். . . ? தட்டுத் தூக்கி தாமோதரன் கடையில் யாராவது வாங்கிக் கொண்டு போட்டிருக்க வேண்டும், அல்லது பஞ்சாமிர்தத்தின் பழைய பேப்பர் கடையில் இருக்கும்; அங்கேபோய்ப்பார்க்கலாம்."

3

151

திடீரென புத்திசாலித்தனத்துடன் பேசிய பூகம்பசாமியைத் திரும்பிப் பார்த்தார் பொன்மொழியார். அந்தப் பார்வை சொல்லிற்று "நீ பூகம்பசாமி தானா" என்று.

"சரி, சரி, வேகமாகப் போவோம்"என்றுமுதலில்தட்டுத் தூக்கி தாமோதரன் கடையை நோக்கிப்புளியந்தோப்புக்கு நடந்தார்கள்.

புளியந்தோப்பு தாமோதரன் கடை, அந்தப் பக்கத்தில் 'புகழ் வாய்ந்த' பழைய பேப்பர் கடையாகும். 'கடைசிப் பல் இருக்கும் வரை நரிக்குப் பக்தி ஏற்படாது' என்பார்களே, அது போன்று கடைசித் துண்டுத்தாள் இருக்கும் வரை அவர் தொழிலில் தொய்வு இருக்காது. சுவரிலிருந்து கிழிக்கப்பட்ட துண்டுத்தாள்களைக் கூட வாங்கக்கூடிய தாராள மனமுடையவர் தாமோதரன். அந்தக் காலத்தில் தட்டுத் தூக்கிப் பேப்பர் வாங்கியதால் தட்டுத் தூக்கி' தாமோதரன் கடை என்றால் புளியந்தோப்பு, சூளைப் பகுதியில் அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள்.

அவர் கடைநோக்கி, 'போகாத இடந்தனில் போவதைப்போல்' பூகம்பசாமி பின் வர முன் நடந்தார் பொன்மொழியார்.

அந்தக் கடையில் நுழையும் பொழுதே கண்ணீர் பொன்மொழியார் கண்ணில் திரண்டது. வழக்கம் போல 'சிரிக்கிற பெண்ணையும் அழுகிற ஆணையும் நம்பாதே!' என்ற ரஷ்யப் பழமொழியும் நினைவுக்கு வந்தது. ஆகவே, அழுகையைஅடக்கிக்கொண்டார்.

பொன்மொழியாருக்கு முன்னால் பூகம்பசாமிதான் கடையில் நுழைந்தார். தட்டுத் தூக்கி தாமோதரனுக்கும் பூகம்பத்துக்கும் பழைய நட்பு உண்டு! மசால் வடை நட்பு அது. அந்தக் காலத்தில் தெருக்கோடி மசால்வடைக் கடையில் இருவரும் மசால்வடை வாங்கிச் சாப்பிடுவார்கள். அந்த உரிமையுடன் தாமோதரனைப் பார்த்துப் பேசினார்.

"தாமோதரா! இன்று புதிய புத்தகங்கள் ஏதாவது உன் கடைக்கு வந்ததா? அவைகளை அப்படியே திருப்பி எடைக்கு எடுத்துக்கிறோம்".

"இப்ப எங்கே பூகம்பம், நமக்கு வியாபாரம் நடக்குது? பஞ்சாமிர்தம் தான் 10 பைசா கிலோவுக்கு அதிகமாகத் தருகிருனும். சிவகாசியிலே பட்டாசு செய்யப் பழைய பேப்பர் சப்ளை பண்ண அவன் காண்டிராக்ட் எடுத்திருக்கிருன். ஆகவே, அவன் கடையிலேதான் பழைய புத்தகங்கள் நிறைய வருது! எல்லாரும் அங்கே எடுத்துக் கொண்டுபோய்ப் போடுருங்க.."

"பஞ்சாமிர்தம் எதையும் அதிக விலை சொல்லுவானே.... சார், இருந்தாலும் நாங்க அங்கே பார்க்கிறேம்...." —பூகம்பம் புறப்பட்டார்.

தட்டுத் தூக்கி தாமோதரன், பொன்மொழியாரைப் பொருட்டாகவே மதிக்கவில்லை. பூகம் பத்தோடு பேசினுனே தவிர இவரைப் பார்க்கவில்லை. பூகம் பத்தைத் தெரிந்த அளவுக்குத் தன்னைத் தெரியவில்லையே என்று அந்த சோகமான நேரத்தில்கூடப் பொன்மொழியாருக்குத் தன்னைப் பற்றிய நினைவு வந்தது.

'கற்பூர மணத்தைப் பற்றி இந்தத் தாமோதரனுக்கு என்ன தெரியும்?' என்று தன்னைத்தானே தேற்றிக் கொண்டார்.

'பள்ளிக்கூடத்தில் போய் முட்டுவதால் படிப்பு வருவதில்லை'—என்ற அமெரிக்கப் பழமொழியை வாய்விட்டுச் சொன்னூர்.

"என்ன பொன்மொழி?"

"பழைய பேப்பர் கடைக்குப் போய்த்தேடினுல் மட்டும் பழைய புத்தகங்கள் கிடைத்துவிடுமா?"

"வேறே எங்கே கிடைக்கும்? பாத்திரக் கடையில் தேடினுல் பழைய புத்தகமா கிடைக்கும்! வா....பஞ்சாமிர்தத்துக் கடைக்குப் போவோம்."

இருவரும் பஞ்சாமிர்தத்தின் பழைய பேப்பர் கடையை நோக்கி நடந்தார்கள்.

பொன்மொழியாருக்கு நடந்து செல்லும்பொழுது அன்றைய நிகழ்ச்சிகள் முழுவதும் நினைவில் ஓடின.

பிற்பகலில் அவருக்குப் பாராட்டு விழா நடைபெற்றது.

வீட்டுக்கு வந்தபொழுது விவரம் தெரியாது மகிழ்ந்தார். உடனே வேதனையில் வீழ்ந்தார். பழைய புத்தகக் கடைகளைத் தேடி ஓடும் நிலை.

அப்பப்பா....இந்த உலக வாழ்க்கைதான் எவ்வளவு மோசமானது? 'ஒரு முட்டாள் கடலுக்குள் ஒரு கல்லை வீசினுல், நாற்பது அறிஞர்களாலும் அதை வெளியில் கொண்டுவர முடிவதில்லை'. அருந்ததி புத்தகங்களைத் தூக்கி எடைக்குப் போட்டு விட்டாள். எத்தனைபேர் தேடினுலும் உடனே கிடைத்துவிடுமா?

பூகம்பத்திற்கு, பொன்மொழி மௌனமாக நடந்து வருவது வேதனையாக இருந்தது. எனவே அவரைப் பேசவைக்க ஒரு கேள்வி கேட்டார்.

"சீனநாட்டுப் பழமொழி ஒன்று சொல்வாயே பொன்மொழி..?"

தன் துன்பத்தை மறக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பொன்மொழியும் பேசினூர்.

"அறியாமையைப் போன்றதொரு குருடுஇல்லை; "நோயைப் போன்றதொரு பகைவன் இல்லை"—என்ற பழமொழியா?"

"ஆமாம், ஆமாம், அதுதான்" என்ற பூகம்பத்துக்குத் தன்னைப் பற்றிச் சொல்வதாக இருந்தது. அடிக்கடி அவருக்குக் காக்கா வலிப்பு வரும் அதனுல்தான். 'தேன் இனிப்பாக இருந்தாலும் முள்ளோடு நக்க முடியுமா?' அந்தப் பழமொழி உண்மையாக இருந்தாலும் தன்னைப் பற்றிச் சொல்வது போன்று இருந்ததால் பூகம்பத்தால் அனுபவிக்க முடியவில்லை. ஆகவே பேச்சைத் தொடரவில்லை.

பஞ்சாமிர்தத்தின் கடைக்குக் கூட வந்து விட்டார்கள். கடையில் நுழைந்தவுடன் பொன்மொழியாரே கேட்டார்.

கிடைத்த பதிலோ! இன்றைக்கு ஏராளமாகப் புத்தகங்கள் வந்தன. எல்லாவற்றையும் லாரியில் போட்டுச் சிவகாசிக்கு அனுப்பிவிட்டோம்.

"இதோ கடைசி லாரி கூடப் புறப்பட்டு விட்டது"—இந்தச் சொற்களைச் சாதாரணமாகப் பஞ்சாமிர்தம் சொன்னுர்.

பஞ்சாமிர்தத்தின் வாயிலிருந்து வந்த ஒவ்வொரு சொல்லும் பாஷாணம் தோய்த்த அம்பாக, பொன்மொழியார் நெஞ்சில் பாய்ந்தது.

"இன்பமும் துன்பமும் விதியல்ல, தானுகத் தேடிக் கொண்டவை'—என்பதும் சீனத்துப் பழமொழிதான்" என்றூர் பொன்மொழியார்.

பூகம்பம் பதிலேதும் பேசவில்லை. பொன்மொழியாரின் புத்தகங்கள் கிடைக்கும். அதில் ஐந்தாறு புத்தகங்களை இரவல் என்ற பெயரில் வாங்கி வைத்துக் கொள்ளலாம் என்று திட்டமிட்டிருந்தார். அவர் எண்ணம் பாழாகிவிட்டது. 'திறமையான நீச்சல்காரனைத் தானே ஆறு அடித்துக்கொண்டு போகிறது!'

அன்றுதிருவனந்தபுரம்போகும் ரயிலில் சிவகாசிக்குப் போகப் புறப்பட்டார்பொன்மொழியார். வசதியாகப் படுக்க அவருக்கு இடம் கிடைத்தது. ஆனுல் அவர் மனம் அமைதி கொள்ளவில்லை. கண் உறக்கத்தைத் தேடவில்லை.

தங்கக் கட்டிலில் படுத்திருந்தால் நோயாளியின் நோய் தீர்ந்து விடுமா என்ன?

(தொடரும்)

# வெண்பாப் போட்டி

## 12. காவிரியைக் காத்திடுவோம் காண்.

அரசியல் காழ்ப்பகற்றி அன்னைத்தமிழ் நாட்டின்
உரிமையாம் சங்கொலிக்க ஒன்றிப்—பெருமைதரும்
மேவிநல் வேளாண்மை மேன்மேலும் மேன்மையுறக்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—முப்பாலிகை, நத்தம்.

காடு வயலாகக் கல்லணையைக் கட்டியவன்
பாடு பழுதாகப் பார்ப்போமோ—ஏடுகமழ்
பாவிரிக்கும் பாவலரின் நாவறட்சி யாகாமல்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—புலவர் துரை தில்லான், கோயிலூர்.

புக்ககம் போவாளைப் போகாதே என்பார்போல்
தக்கவளாம் பொன்னி தனைதடுக்கும்—சிக்கலுக்குச்
சாவி 'பரணி'யெனில் சங்கொலிக்கக் கைப்பிடித்த
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—அ. வே. காசிநாதன், அமிர்தராயன்கோட்டை.

மங்காப் புகழுடைய மன்னன் கரிகாலன்
பொங்கு கரையமைத்துப் போற்றினன்—இங்கேநாம்
நாவினிக்கப் பேசும் நமது முதல்வருடன்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—காங்கேயன், வெங்கல்பாளையம்.

உரிமைக் குரல்கொடுப்போம் உற்றஇடர் தீர்க்க
அரிமா நடையெடுப்போம்; அஞ்சோம்;—பரிசாகச்
சாவுவந்து நேர்ந்தாலும் சற்றும் சளைக்காது
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—நிலவமுதன், நரிக்கல்பட்டி.

போருக்கோ அஞ்சோம்; புகழுக்கோ மாண்டிடுவோம்
நீருக்குத் தீமையினை நேரவிடோம்—சீர்மிகுந்த
பாரதத்தின் ஒற்றுமைக்குப் பங்கமின்றி இம்மண்ணில்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—கோ. அரங்கபாசியம், திருச்சி.

வான்பொய்த்த போதும் வளம்பொய்க்காப் பொன்னியைத்
தான்துய்த்தால் போதுமென்னும் தன்னலம்—ஏன்வைத்தார்?
நாவிரிப்போம் நட்புக்கே! நாடாவிட் டாற்போரால்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—அ. வை. முத்துச்சாமி, அந்தியூர்.

இந்திரா காந்தியிடம் எப்படியும் நாம்சொல்லிப்
பந்தமுடன் வேண்டுவன பார்த்திட்டுச்—சொந்தமுடன்
பாவிரியச் செய்திட்ட பன்னலமார் நம்மருமைக்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—வித்துவான் உ. குமாரசாமி, பைம்பொழில்.

நீரைத் தடுத்து நெடுமணைகள் கட்டுவதை
நேரத்தே நாம்தடுப்போம்; நீரோடும்—ஓரத்தே
பூவிரிக்கும் காவிரித்துப் பொன்கொழிக்கும் பொன்னியெனும்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—சிவ. அம்பிகாபதி, சென்னை-16.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:
திரு முப்பாலிகை,
நத்தம் (அஞ்சல்),
திருப்பத்தூர் (வட்டம்),
வடஆர்க்காடு மாவட்டம்.

133

நாமவதி கொள்ளவொரு கல்லணைதான் கட்டியதை
ஏமவதித் திட்டமென்பார் மைசூரார்—தாமவதி
பாவியெனக் கொள்வார்காண்! கங்கை தலைக்கொணர்ந்து
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—மருதன், எம்.ஏ.பி.எட்., பழனி.

காவிரித் தோடுகின்ற காவிரியை மைசூரார்
தாவியே கட்டுகின்றார்! தண்டமிழீர்—ஆவிநிகர்
காவிரிநீர் இல்லையெனின் காடாகும் நம்நாடே
காவிரியைக் காத்திடுவோம் காண்!

—புலவர் அ. சுந்தரேசன், மேட்டுப்பாளையம்.

பசுமை நலந்தேக்கிப் பைந்தமிழர் பாட்டின்
இசையாய் இனிப்பவளை இன்று—நசையினால்
ஆவலுற்றுத் தாம்தடுத்தல் ஆகிடுமோ? வாதாடிக்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—எழில் மாறன், நரிக்கல்பட்டி.

தேனைத் தமிழில் தெளிக்கும் கலைஞனவன்
தானைப் படைகாக்கும் தங்கமகன்—ஆணையிட்டால்
ஆவி கொடுத்தேனும் ஆவி குடித்தேனும்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—இரா. வைரமுத்து, சென்னை-3.

துஞ்சினால் இந்நிலையில் துன்பம் நமைத்தொடரும்
எஞ்சா(தி) யாவரும்சூள் ஏற்றிடுக—அஞ்சாதீர்
ஆவி துறந்தும் அணையைத் தடுத்தேநாம்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—புலவர் குமரதன்ஞெளியான், கண்ணமங்கலம்.

நஞ்சை வளங்கொழித்து நாட்டின் பசிபோக்கத்
தஞ்சைத் தரணியிலே தான்பாய்ந்து—மிஞ்சுபுகழ்ப்
பாவினிலே சேர்ந்து பழம்பெருமை பேசிவரும்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—கோ. புகழேந்தி, புதுவை-4.

தாய்க்குத் தடைவிலங்கு தான்போட்டார் மைசூரார் !
சேய்கள்தாம் என்செய்யும்? செம்பயிரின்—பாய்விரிக்கும்
காவிரித்தாய் கண்ணோட்டம் காண்பரோ? எம்நாட்டீர்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—புலவர் முத்துவேங்கடேசன், திருமயம்.

கன்னித் தமிழகத்தின் காவெங்கும் பாய்ந்தோடி
செந்நெல் விளைத்தே செழிப்பாக்கி—என்றென்றும்
பாவிரிக்கும் பைந்தமிழ்ப் பாவலர்தம் நெஞ்சினிக்கும்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—பு. அ. துரைராஜா, இராஜபாளையம்.

ஏரார்ந்த மக்களெல்லாம் இன்பமுடன் வாழ்வதற்குச்
சீரார்ந்த தொண்டரெலாம் சேர்ந்திடுவீர்—ஆராய்ந்து
'பா'விரியச் செய்தே பயிர்களுக்குப் பாலூட்டும்
காவிரியைக் காத்திடுவோம் காண்!

—வே. சு. செல்லத்துரை, புள்ளான்விடுதி.

தஞ்சை திருச்சித் தரணிக்கு நீர்பாய்ச்சும்
நஞ்சைப் பசுமையின் நாயகியை—வஞ்சனையோ?
தாவாவை மீறித் தடுப்போரை நேர்ப்படுத்திக்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—துரைபாண்டுரங்கன், திண்டிவனம்.

குன்று விளைச்சல் கொடுக்கும் வளத்தஞ்சை
இன்றுபோ லென்றும் எழில்கொழிக்க—ஒன்றிஇவண்
ஆவி கொடுத்தும், அழியா வளம்விளைக்கும்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—ப. நாச்சிமுத்து, ஒட்டன்சத்திரம்.

எண்ணு திருக்கும் இளைஞர்காள் ! உங்களையான்
அண்ணு வழியில் அழைக்கின்றேன்—கண்ணுகப்
பாவிக்கும் பைந்தமிழர் பாழ்ங்குடரை வற்றடியாக்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—புலவர் கரு. சுப்பையா, ம. கல்லூரணி.

சிற்பிக்குக் கைவிலங்கா, தென்றல் வரத்தடையா,
விற்பிடிக்கும் கைக்கு விரற்பூட்டா,—சுற்றிவரும்
காவிரிக்குக் கட்ட அணைக்கட்டா? அதைநீக்கிக்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—இரா. செயபாலன், (முல்லைதாசன்), சின்னாளபட்டி.

கன்னித் தமிழர் கனக விசயரெனும்
மன்னர் கலங்கவைத்த மாவீரம்—சின்னமெனக்
கூவி நமக்குரிய கொள்கைக் குரல்கொடுத்தால்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—புலவர் சோ. பா. வேதாரண்யம்.

பூவிரிக்கும் சோலைகளும் பொன்விரிக்கும் நெல்வயலும்
பாவிரிக்கும் எங்கள் பரம்பரைதான்!—யார்பறிப்பார்?
நாவிரித்த நல்லறிஞர் நம்அண்ணன் மேலாணை
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—வெ. நடராசன், சுந்தராபுரம்.

ஆட்டனத்தி நீருடே செல்லுகையில் ஆதிமந்தி
பாட்டாலே பாடலுற்று வாட்டமுறக்—காட்டாறு
காவிரிதான் காரணமாய் வீற்றிருந்து பாவேற்க;
காவிரியைக் காத்திடுவோம் காண்!

—புலவர் விக்டர், அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.

பெண்ணுக்குக் குங்குமமாய்ப் பேசு தமிழ்நாட்டு
மண்ணுக்குப் பல்வளமாய், மாமழையாய்—எண்ணற்றோர்
ஆவியென நின்றாள்; அழுங்குழவித் தாயானாள்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—க. சரவணன், திருச்சி-1.

மஞ்சொருநாள் பொய்த்திடினும் மாவட்டத் தஞ்சையினில்
கொஞ்சுகின்ற நெல்மணிகள் குன்றிடுமோ!—செஞ்
[சொல்லாம்
காவியத்துள் ஓராறும் கன்னடத்தார் தேக்குகின்ற
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—இரா. முத்தம்மாள், உமையாள்புரம்.

பூவிரித்துப் புன்னகைப்பாள்! பூந்தமிழைத் தான்வளர்ப்பாள்
பாவிரிக்கும் பாவாணர் பண்பறிவாள்!—காவிரிப்பாள்!
தாவிநிதம் தான்மகிழ்வாள்! தாங்கரிய இன்னலினும்,
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

தக்கமுறை ஆற்றினிலே தண்ணீர் இலையானால்
மிக்கநல வேளாண்மை மேவிடுமோ?—இக்கொடிய
மாவறுமை சேர்க்க வருமிடரை நீக்குதற்கே
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—எம். சிவகுரு, கவரப்பட்டு.

பட்டாக நெல்விளையப் பாய்கின்ற பொன்னியைநாம்
கட்டாந் தரையாகக் காண்போமோ?—மொட்டாக
வாய்விரித்(து) ஏதுபயன்? வாள்விரிக்க நேர்ந்திடினும்
காவிரியைக் காத்திடுவோம் காண் .

—வ. பெ. ராமசாமி, சென்னை-18.

வீட்டிற் கொருவர் வேண்டின் வெளிவருவோம்
நாட்டின் நதிக்குழப்பம் நாம்தீர்ப்போம்—கேட்டிலரேல்
ஆவி உடலீந்தும் அன்னை எனப்போற்றும்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—சோ. பாலசுப்பிரமணியன், மணக்குடி.

சங்கத் தமிழிசைத்துச் சங்கீதம் பாடியே
பொங்கி வருமிந்தப் பூவாறு—எங்களின்
தேவியன்றோ! தையலவள் தெய்வீக நற்பெயராம்
காவிரியைக் காத்திடுவோம் காண்.

—மு. ஆ. நேயன், வெள்ளியூர்.

பொன்னியில் மைசூர் புதியவணை கட்டுவதால்
கன்னித் தமிழர் கலங்குகிறார்—மென்கொடியே
பாவிரிக்கும் சொற்கலைஞர் பாடிவிட்டார் போர்ப்பரணி
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—அ. மல்லிகா, கோவை-1.

தமிழர்க்குத் தாயாய்; தமிழ்க்கலையின் சாறாய்;
அமிழ்தம் பொழிகின்ற ஆறாய்த்—தமிழகத்தில்
பூவிரித்த மேலாடை போர்த்து நடைபயிலும்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—அ. குழந்தைவேலன், திருவப்பூர்.

தஞ்சைத் தரணி தமிழகத்தின் நெற்கோட்டை
பஞ்சப் பதியாகப் பார்ப்போமோ?—வஞ்சமுடன்
காவிரி யில்மைசூர் கட்டுமணை யைத்தடுத்துக்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—குழ. அண்ணாமலை, கோவை.

பொங்குமுலைப் பாலைப் புகட்ட வருந்தாய்க்குத்
தங்கிப்போ என்றோர் தடையாமோ?—எங்களுக்குத்
தாவிப்பா லூட்டவரும் தாயைத், தமிழ்மகளாம்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—ம. அரிமதி-தென்னகன், புதுச்சேரி-1.

தத்திவரும் வெள்ளலையில் தாவிவரும் பொன்நதியில்
புத்தணைகள் கட்டுவதைத் தானடக்கி—முத்தமிழாம்
பூவிதழால் ஆடையினைப் போர்த்திங் கெழில்கொஞ்சும்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

வரத சண்முகசுந்தரவடிவேலு, ஆத்தூர்.

தங்கம் எனவளர்க்கும் தாய்க்கு மகன் எதிரே
பங்கம்வரின் அங்கம் பதருதா ? —எங்களது
ஆவி கொடுத்தேனும் அன்னையாம் பொன்னியெனும்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—அ. பழனிசாமி, சேலம்-1.

நெல்மலையும் செங்கரும்பும் நித்திலமும் முக்கனியும்
நல்குமெழிற் காவிரியில் நாட்டுகின்ற—வல்லணையால்
தீவிரியும் பாலையெனத் தென்னாடு காயுமம்மா
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—சுப்பு சிவலிங்கம், பொன்னமராவதி.

பூவிரித்த பஞ்சணையில் பூவையரின் மெல்லுடலில்
பாவிரித்து வாழ்ந்ததெல்லாம் போதுமென்போம்—நாவியக் [கும்
காவிரியைக் காத்திடா தென்றால் களமேறிக்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—கயலரசன், மதுரை-9.

அஞ்சாமல் கூடி அணைகட்டி நம்மையெல்லாம்
வஞ்சிக்கப் பார்க்கின்றார் மைசூரார்—விஞ்சுபுகழ்
பூவிரித்துப் பொன்குவிக்கும் பொன்னியென்னும் அன்னைநிகர்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—ப. குருதேவன், தேவதானப்பட்டி.

பூவிரித்த பூம்பொழிலைப், போதவிழ்த்த தேமலரைக்,
காவிரித்த காவிரியைக் கன்னியென—ஆவலுடன்
பாவிரித்திங் கென்னபயன் பாவலரே! சாவிரித்தும்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—செ. பாலசுந்தரம், சென்னை-

எங்கள் சிலம்பில் இளங்கோ உரைத்ததுபோல்
பொங்கும் புதுப்புனலாய்ப் ''பொன்னி''யெனும்—மங்கை [யவள்
பூவிரித்து நஞ்சையெலாம் பொன்கொழிக்க வைப்பதெண்ணிக்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—நெல்லை ஆ. கணபதி, சைதாப்பேட்டை.

செந்தமிழ ரைப்பழித்த சேய வடவர்தம்
செந்தலையில் கல்லேற்றிச் சீர்பெற்ற—முந்தையர்மேல்
நாவிரிக்கும் சூளோடு நம்கலைஞர் பின்னேகிக்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—வாசுகி, மாங்குடி.

வீரமிகு வேந்தர் மடிவளர்ந்த இன்றமிழ்த்தாய்
ஆரமென மின்னும் அணிகலத்தை,—ஒரமெலாம்
பூவிரியுஞ் சோலைகளிற் பொன்வண்(டு) இசைபாடுங்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—கு. பிரான்சிஸ், சென்னை-11

ஆவி பிரிந்தாலும் அன்னை நதிகாக்கத்
தாவிக் குதித்தே தழலாவோம்—ஓவியமாம்
பாவை விடைகொடுக்கப் பைந்தமிழா நீவந்தால்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—அ. வைத்தியலிங்கம், மண்டபம் முகாம்

பூவிரித்துப் பொங்கும் புனலார்த்துப் பூமிதனில்
பாவிரித்துப் பாடவரும் பாவையே!—காவிரித்து
நாவிரித்துப் பாடவரும் நற்றமிழர் சீர்காக்கும்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—ஆ. சுப்பிரமணியன், அணியாப்பூர்.

வந்தாரை வாழ்விக்கும் வற்றா வளங்கொண்ட
செந்தமிழர் நாட்டுக்குச் சிக்கலா?—அந்நாளில்
பாவிரித்த பேரெல்லாம் பாழோ? உயிர்கொடுத்தும்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—ந. விசுவநாதன், திருச்சி-1

எல்லைக்கோ டிங்கில்லை எல்லாரும் இந்தியரே
சொல்லாதே பேதமென்று ''சொன்னவர்கள்''—இல்லையடா
பூரித்துப் பொன்னிதரும் நீரென்றால் போரிட்டுக்
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—புலவர் ஆடுவாசனைமரியான், தூத்துக்குடி.

ஏர்சிறக்கப் பாடுபடும் ஏர்மிக்க அன்னைதனைப்
பார்மேல் அணையிடும் பாங்குதனைக்—கார்முகிலும்
நாவிரித்தே ஓலமிட்டுக் கண்டு நடுங்கிடுமே
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—நா. பாலு, தேவகோட்டை.

பாவிரிக்கும் பாவலரும் பண்பொடுசேர் தோள்வலரும்
நாவிரித்துப் போராட நன்றுளரே!—பூவிரித்துக்
காவிரிக்கும் நற்புனலாம் கன்னித் தமிழாறும்,
காவிரியைக் காத்திடுவோம் காண் !

—சோ. முத்துமாணிக்கம், அமரபூண்டி.





அன்புக் குழந்தைகளே !

அருமை ஆசிரியர்களே !

எல்லாருக்கும் என் அன்பு வணக்கம். நான் சென்னை வானொலிக் கூடத்திலிருந்து பேசுகிறேன். நீங்கள் நம் மாநிலத்திலுள்ள பல பள்ளிகளிலிருந்து நான் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

கல்வி ஒலிபரப்பு கடந்த சில ஆண்டுகளாகப் பயனுள்ள திட்டமாக நம் தமிழ் நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டு உங்களுக்கு அப்படிக் கல்வி கற்பிக்கும் திட்டத்தை இந்த வானொலியின் மூலம் துவக்கி வைப்பதில் நான் கல்வி அமைச்சர் என்ற முறையில் பூரிப்படைகிறேன்! பெருமைப்படுகிறேன்!!

குழந்தைகளே ........!
நீங்கள் வானொலியின் மூலம் நாடகம் கேட்கலாம்; நாட்டுச் செய்தி அறியலாம்; பேச்சுக் கேட்கலாம்; கதை அறியலாம்; கவிதை கேட்கலாம்; காவியம் நுகரலாம்; இவற்றோடு கூட நீங்கள் கல்வியும் பயிலலாம்.

நீங்கள் பள்ளியில் பயிலும் பருவம் மிகவும் சிறப்புடையது. உங்கள் உடல் உறுப்புகள் நல்ல வளர்ச்சிபெற்று, பல இயல்பூக்கங்கள் உங்களைப் பல திக்குகளில் செலுத்த முற்படுகின்றன. மாணவப் பருவம் மீண்டும் கிடைக்காத பருவம். பொன்போல் போற்றிப் பயன்படுத்த வேண்டிய பருவம். கிடைத்தற்கரிய வாய்ப்புகளையுடைய பருவம். கற்க வேண்டியதெல்லாம் கற்றுப், பெற வேண்டிய திறமையை எல்லாம் பெற்று, தேடிக் கொள்ள வேண்டியன எல்லாம் தேடிக் கொள்ளத் தக்க பருவம். ஆகவே, இப்பருவத்தில் கல்வி என்ற செல்வத்தை நீங்கள் தவறாமல் பெற வேண்டும்.

" மாண்பினைப் பெறுபவர்கள் " என்ற பொருள் தருவது மாணவர்கள் என்ற பெயராகும். உங்களுடைய நன்மைக்காக நீங்கள் செயல்பட வேண்டுகிறேன். "வெட்டி வா" ! என்றால் கட்டி வரும் காளையர் நீங்கள். உங்களால் முடியாதது எதுவும் இல்லை. பள்ளி செல்லாமல் ஊர் சுற்றித் திரியும் மாணவர்களைப் பள்ளிக்கு அழைத்து வாருங்கள். நண்பனுக்கு உதவுகிறோம் என்ற நல்லுணர்வில் இதனைச் செய்யுங்கள்.

பள்ளிப் பருவத்தில் நன்றாகப் படியுங்கள். நாள்தோறும் பள்ளிக்குச் செல்லுங்கள். ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதைக் கேளுங்கள்; அதோடு அன்றாடம் வானொலி உங்களுக்குச் சொல்லிக் கொடுப்பதையும் உன்னிப்புடன் கேளுங்கள்.

பள்ளியில் ஆசிரியர் உங்களுக்குப் பல முறைகளைப் பின்பற்றிக் கற்பிக்க முயற்சிக்கின்றார். பாடத்திற்கு ஏற்ற துணைக் கருவிகளையும் பயன்படுத்துகின்றார். வாய்மொழி மூலம் கற்பிப்பதைவிடக் காட்சி, கேள்வி மூலம் கற்றல் மிகச் சிறப்புடையது. அதுவே கற்றலுக்குச் சிறந்த துணைக் கருவியாகும். வானொலி மூலம் நீங்கள் அறிவைப் பெறுவது மிக எளிய முறையாகும். பெற்ற அறிவை வைத்துக் கொண்டு அதனைச் சொல்லிக் காட்டவும், செய்து காட்டவும் நீங்கள் பழக வேண்டியிருக்கிறது.

அறிந்த அறிவை வெளிப்படுத்துவதே ஆற்றலாகும். அறிவையும், ஆற்றலையும் ஒழுங்குபடுத்திச் சீராக்கிச் செம்மைப்படுத்திப் பண்படுத்துவதே பண்பாடு ஆகும்.



வானொலியின் சிறப்புக் கூறுகளை நீங்கள் நன்கு அறிவீர்கள். சிறந்த பேச்சாளர்களின் சொற்பொழிவுகள் — வெளிநாடுகள் சென்றுதிரும்பியவர்களின் அனுபவங்கள்; நிலவுப் பயணத்தின் செய்திகள்; அறிவியல், மருத்துவம், தொழில் போன்ற பலவிதத் துறைகளில் ஏற்பட்டு வரும் கண்டுபிடிப்புகள்; நமது நாட்டின் பண்பாட்டினை வெளிப்படுத்தும் இசை இலக்கியம், நாடகம் போன்றவை; நாட்டின் வரலாற்று நிகழ்ச்சி ஆகிய அனைத்தும் வானொலியின் மூலம் உங்கள் வகுப்பறையில் கொண்டு வரப்பட்டு நீங்கள் அவைகளைப் பற்றிய பரந்த அறிவைப் பெற வாய்ப்புக்கள் அளிக்கப்படுகின்றன.

நீங்கள் பெறும் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு வானொலி சிறந்த ஓர் சாதனமாக அமைகின்றது. பெங்களூரில் உள்ள வட்டார ஆங்கிலக் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த நிபுணர்கள் ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையிலும் உள்ள ஆங்கிலப் பாடங்களை மாணவர்களுக்குக் கற்பிக்க முன் வந்துள்ளனர்.

சென்ற ஆண்டு ஜூலைத் திங்கள் முதல், வாரந்தோறும் திங்கள், புதன் கிழமைகளில் பகல் 2-10-லிருந்து 2-30 வரை தொடக்கப் பள்ளிகளில் 3, 4 5 ஆம் வகுப்புகளில் பயிலும் சிறார்களுக்கு உடல் நலம் பேணும் முறைகள், தேசிய ஒருமைப்பாடு, சேர்ந்து பாடுதல் போன்ற தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

எல்லாப் பகுதியிலும் உள்ள பள்ளி மாணவர்கள் பயன்பெற வேண்டி இந்த ஆண்டு இன்று முதல் (ஜூலை 12 ஆம் தேதி) தினமும் 11-40 முதல் 12 மணி வரையிலும் வானொலியில் கற்பிக்கப்படும் பாடச் செய்திகள் மறுமுறையும் மாலையில் 2-04 முதல் 3-20 வரையிலும் நீங்கள் எல்லாரும் கேட்டுப் பயன் பெறுவதற்கு ஒலி பரப்பப்படும். இவ்வாறு ஒரே பாடத்தைக் காலையும், மாலையும் ஒலி பரப்பும் திட்டம் இவ்வாண்டுதான் செயல்முறைக்கு வருகிறது. இதனால் பள்ளிகளில் பாட அட்டவணையில் வானொலிப் பாடம் கேட்கும் நிகழ்ச்சியைச் சேர்த்துக் கொள்ளவும், அதன்படி தவறாது வானொலிப் பாடங்களையும் கேட்கவும் உங்களுக்கு ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. இவ்வாய்ப்பினை அமைத்துக் கொடுத்துள்ள வானொலி நிலையத்தினருக்கு எனது பாராட்டு; நன்றி.

வானொலியில் கல்வி ஒலிபரப்பைத் துவக்கியபோது கல்வி அமைச்சர் ஆற்றிய உரை.



தொடக்கப் பள்ளியிலுள்ள ஆசிரியர்கள் இவ்வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வானொலிப் பெட்டிகள் உள்ள தொடக்கப் பள்ளிகள் இந்த நிகழ்ச்சிகளைத் தவறாது கேட்க வேண்டும். பள்ளிப் பாடத் திட்டத்தில் வானொலிக் கல்விப் பயிற்சித் திட்டமும் இடம் பெறும்படி ஒவ்வொரு துவக்கப்பள்ளியின் தலைமை ஆசிரியரும் பார்த்துக் கொள்ள வேண்டும். குழந்தைகளின் கல்வி சிறப்புடைய இந்த ஆண்டின் கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சியை மிக்க மகிழ்ச்சியோடு துவக்கி வைக்கிறேன்.

நன்றி! வணக்கம்!! வாழ்க!!!




ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தித்துறை இயக்குநர், தமிழ் நாடு அரசு. அச்சிடுபவர்: அச்சக எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1

# தமிழரசு

141









# தமிழரசு

மலர் 2 1-8-1971 இதழ் 3

## இந்த இதழில்

வளம் தரும் காவேரி
தாய்மை வெல்லும்
அரசு ஸ்டுடியோ
பருப்பு வகைகள் பயிரிடுவோம்
அரசு அலுவலகங்களுக்கு அள்ளித்தரும் அருவி
பதவி உயர்வு (சிறுகதை)
ஏன் இந்தக் காதல்? (தொடர்கதை)
மாணவர் அரங்கம்
வெண்பாப் போட்டி
முதல்வரின்
அண்ணாமலைப் பல்கலைக்கழகப்
பட்டமளிப்பு விழாப் பேருரை

முகப்பில் :
அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு 'டாக்டர்' பட்டத்தை, தமிழக ஆளுநர் கே. கே. ஷா தருகிறார்.

பின் அட்டையில் :
வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தைத் தொடங்கிய தொழில் அமைச்சர் திரு மாதவன் அவர்களை, முதல்வரும் ஏனைய அமைச்சர்களும் வழியனுப்பும் காட்சி.



# கல்லை வைரமாக்கும் கல்விமுறை தேவை!

பல்கலைக்கழக வேந்தரவர்களே!

இணைவேந்தரவர்களே!

துணைவேந்தரவர்களே!

பேராசிரியப் பெருமக்களே!

மாணவர்களே!

''இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப்புப் புன்செயில் எருவாக்கிப் போட்டு
மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம
வழக்கெலாம் குழிகொட்டி மண்மூடிப் போட்டு
தெருட்சாருஞ் சுத்த சன்மார்க்க நன்னீதி''

வழங்கிய அருட்சோதி வள்ளலார் காட்டும் தூயநெறி நின்று பணியாற்ற வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன் எனும் மகிழ்ச்சியுடன் அடிகளார் வாழ்ந்து சிறந்த தில்லை மூதூரில்;

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பாய்
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணாய்
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமாய்
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியாய்
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவாய்

எழுந்து நிற்கும் அறிவுக்கூடமாம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெறக் குழுமியுள்ள என் அன்பு உடன் பிறப்புக்களே! உங்களையெல்லாம்,

தனித்தனி முக்கனி பிழிந்து வடித்தொன்றுக் கூட்டிச்
சர்க்கரையும் கற்கண்டின் பொடியும் மிகக் கலந்தே
தனித்த நறுந்தேன் பெய்து பசும்பாலும் தெங்கின்
தனிப்பாலுஞ் சேர்த்தொரு தீம்பருப்பிடியும் விரவி
இனித்த நறுநெய் அளைந்தே இளஞ்சூட்டின் இறக்கி
எடுத்தசுவைக் கட்டியினும் இனித்திடும் தெள்ளமுதாம்

என் தமிழ்மொழியால் வாழ்த்துகின்றேன். அறிவுத் துறைக்கு ஆக்கம் சேர்த்த ஆல்பிரட் நோபல், ராக்பெல்லர் போன்ற கல்வித் துறைக்குக் கரம் சிவக்க வாரி வழங்கியவர் அண்ணாமலை அரசர். அந்த ஏந்தலின் புகழ்பாடும் எழில் மாளிகையாகத் திகழ்வதே இந்தப் பல்கலைக் கழகம். அந்தப் பெரியவரின் கீர்த்திக்கொடி வான் முட்டப் பறந்திட அரும் பணியாற்றிடும் ஆசிரியப் பெருமக்களும் மாணவ நண்பர்களும் தமிழுலகின் பாராட்டுக்குரியவர்களாவர் என்பதில் வியப்பேதுமில்லை.

விரிந்து மலர்ந்து தழைக்கும் அறிவுலகில் ஆற்றலாளர்களாய்ப் பீடுநடை போடப் பட்டம் பெறுகின்றீர் இன்று. உமக்கிடையே வாழ்த்துரை தந்திட வந்துள எனக்குமோர் பட்டமளிப்பினை நடாத்துகின்ற நிகழ்ச்சிக்கு எவ்வாறு நான் நன்றி கூறுவேன். சங்க காலத் தமிழகத்தில் விழுப்புண் படாது இயற்கையாக ஒருவன் இறந்திடுவானாயின் அவன் சடலத்தைப் புதைப்பதற்கு முன்னர் கத்தியால் ஓர் காயத்தைச் செய்து அவனை விழுப்புண் பெற்றவனாய் ஆக்குதல் மரபாம். அவ்வாறே இன்று எனக்கும் ஓர் பட்டத்தை அளித்து என்னையும் பட்டம் பெற்றவனாக ஆக்குகின்றீர் என எண்ணுகின்றேன். என் உழைப்பில் நான் மேலும் உற்சாகம் பெற்றிட—என் கொள்கைகளில் நான் மேலும் உறுதி கொண்டிட—இந்தச் சிறப்பு எனக்குத் தரப்பட்டுள்ளதாகக் கருதி, இந்த விருது தமிழ் உணர்வுக்கும், கலையார்வத்துக்கும், பண்பட்ட பகுத்தறிவுக் கொள்கைக்கும் அளிக்கப்பட்ட விருது எனக்கொண்டு, இந்தப் பெருமையை என்னருந் தமிழர்க்கும் எனை வளர்த்த தலைவர்க்கும் காணிக்கையாக்குகின்றேன்.

இந்தப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவிலே பேருரையாற்றிய அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்ட ஒன்றை நானும் இப்போது நினைவு கூர்கிறேன்.

''என்னுடைய வரம்புகள் எனக்குத் தெரிவது எனக்கு ஆறுதலாக இருக்கிறது. ஏனெனில் நான், புதிதாகச் சுயமாக என்னால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கருத்துக்களையோ தத்துவங்களையோ உங்களுக்கு இப்போது வழங்கப்போவதில்லை. அறிஞர் பல்லோரின் அறிவுரைகளையே உங்களுக்கு நினைவுபடுத்தப் போகிறேன். கல்வித் துறையில் சம்பந்தப்பட்ட வல்லுநர்களின் கருத்துக்களை, சாமான்ய மனிதனின் பார்வையிலே நோக்க விரும்புகிறேன். இது சாமான்யர்களின் யுகம். இது சிலருக்கு வருத்தம் தருவதாக இருக்கலாம். ஆனால் இது மறுக்க முடியாத உண்மை. நான் அந்தச் சாமான்யர்களின் பிரதிநிதி.''

இப்படி அண்ணா அவர்கள் தன்னைப் பற்றிக் கூறிக்கொண்டது முற்றிலும் எனக்கும் பொருந்துமென்றே மகிழ்கிறேன். நீங்கள் வழங்கிடும் ''டாக்டர்'' விருது மேலும் என்னை அடக்கமுடையவனாக ஆக்கிடும் என்று உறுதி கூறுகின்றேன்.

நம்நாடு, கல்வித் துறையில் வியத்தகு முன்னேற்றத்தைக் கண்டுவருகிறது. சமூகத்தில் செல்வமும் செல்வாக்கும் பெற்றிருந்த ஒரு சிலரின்—வசதியும் வளமையும் படைத்திருந்த உயர்குடி மக்கள் ஒரு சிலரின்—தனி உரிமையாகக் கல்வி இருந்த காலம் மாறி, இன்று சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள சாமான்யர்களும், தலைமுறை தலைமுறையாக அறிவாலயத்தில் நுழைய அருகதையற்றவர்களாயிருந்தவர்களும், கல்வி பயிலும் உரிமையும், வசதியும் பெற்று ஒளி விளக்குகளாய் மின்னிடும் காட்சி காணுகிறோம். தகுதி, திறமை என்பவை எந்த ஒரு பிரிவினருக்கும் ஏகபோகமானவையல்ல; உரிய வாய்ப்பும் வசதியும் ஊக்கமும் அளித்தால் உயர்வடையும் தகுதியுள்ள மாணவர்கள் சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றனர் எனும் உண்மை உணர்ந்து அவ்வழி செயல்படும் காலம் இது.

இன்று பழைய கொள்கைகளும் கோட்பாடுகளும் தங்கள் செல்வாக்கை இழந்துவிட்டன. ஆனால் அவற்றின் இடத்தில் புதிய குறிக்கோள்களும் இலட்சியங்களும் இன்னும் நிலைநிறுத்தப்படவில்லை. இன்று சமூகத்தில் நமக்கு ஏற்பட்டுள்ள பல சோதனைகளையும் சாதனைகளாக மாற்றும் அறைகூவலை ஏற்று, காலத்தோடு ஒட்டிய நெறிமுறைகளை—வாழ்க்கைப் பண்புகளை—வகுத்துக்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம். புதுமை வேகத்துடனும், புரட்சிக் கருத்துடனும் பொங்கிவரும் இலட்சியத் துடிப்புடனும் பொதுநல நோக்குடனும் இளைஞர் சமுதாயம் நாட்டின் நல்வாழ்வில் பங்கு கொள்ள வகைசெய்வதில் முன்னணியில் நிற்கவேண்டியவர்கள் மாணவர்களேயாவர்.

பல்கலைக் கழகம், தேசீய வாழ்க்கையின் கண்ணாடியாக இருக்க வேண்டும். சமுதாய வளர்ச்சியைப் பிரதிபலித்திட வேண்டும். மாறும் உலகிற்கேற்பப் புதிய தலைமுறையினரைத் தயாரிக்கவேண்டும்.





வாலிபம் ஒரு வசந்தம். மிக வசீகர மானதுங் கூட! ஆனால் அதில் உள்ள ஒரு குறை என்னவென்றால்; ஒவ்வொரு நாளும்—ஒவ்வொரு மணித் துளியும்—ஒவ்வொரு விநாடியும்—வாலிபத்தை, வயோதிகம் வாகை சூடிக்கொண்டே யிருக்கிறது. இளமை சிரஞ்சீவியாக இருக்கவேண்டு மெனில், அது உடலை விடுத்து உள்ளத்தை அடைக் கலம் புகுந்திட வேண்டும். ''வயதில் அறிவில் முதியோராய் வாய்மைப் போருக்கு என்றும் இளையோராய்'' தங்கள் சிந்தனை யோட்டத்தின் திசை திருப்பிட வேண்டும்.

ஏட்டுக் கல்வி, வளரும் தருவுக்கு வாகான உரம் என்பேன். அதற்காக உரம் மட்டுமே மரம் என இயம்பிடல் தவறன்றோ! கொடி பற்றும் கிளையும், கொழுந்தும் பழுப்புமாக இலையும், காய்கனிக் குலையும் கொண்டு, களைத்தோர்க்கு நிழலும் அளிப்பதன்றோ நன்மரமாகும்! கல்வியின் பயனும் அங் ஙனம் இருந்திடல் வேண்டும். பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை பயின்றாலும் பிறர்க்கு நம்மைப் பயன்படுத்தும் கல்வி பெரு விட்டால் நாட்டுக்கு ஏது நன்மை? ஏட்டறிவு மட்டும் போதாது; இயற்கை அறிவும் வளப் படுத்தப்பட வேண்டும்.

சிறந்த கல்வி மேதை திரு ஏ. எல். முதலி யார் அவர்கள் சுட்டிக்காட்டிய கருத்துப் பேழை ஒன்றினை உம் எதிரே திறந்திடல் பொருத்தமென எண்ணுகிறேன்.

"Success or failure at School or College supplies no standards by which the promise of the future may be estimated. Originality of thought or achievement is not measurable by the same units as those of absorbing power of a prescribed *Pabulum* usualy tested by a written examination. To be able to reproduce the words of others or to shuffle mathematical symbols rapidly may be creditable but it is not to be compared with the power of orginating ideas or devising new solutions to problems. A student may possess many examination certificates and yet be only a kind of *Text-Book Gramophone*.

"Unless he also acquires the desire to see and do things independently he knows nothing of the scientific spirit which yearns for new knowledge gained by new inquiry."

கூழாங் கற்களை வைரமாக்கும் கல்வி முறை வேண்டும்—வைரத்தில் எண்ணெய் இறங்கிட வைத்திடும் கல்வி முறை கூடாது. ''வைரமாக்குகின்றீர் எம்மை! ஏழையின் வீட்டில் வைரத்திற்கு மதிப்பு ஏது? சீமாட்டி யின் மூக்குத்தி போலி வைரமாயினும் கோகி னூர் என்பர்! குப்பை மேட்டில் வைரத் திற்குக் கௌரவம் உண்டோ?" எனக் கேட்டுப் பட்டை தீட்டப்பட்ட வைரமெனப் பட்டம் பெற்ற நீவிர்; வேலை எங்கே பணம் தேடிட எனக் குமுறுவது யாருக்கும் தெரியா மல் இல்லை. படிப்பின் இலட்சிய நோக்கு வேலை ஒன்று தான் எனக் கூறிட இயலா தாயினும் வேலை வாய்ப்பு அளித்திடும் திட்டத்தையும் விரைவுபடுத்தி விரிவுபடுத்தி னால்தான் நாடு வறுமைக் காடாகும் நிலையி லிருந்து விடுபடும் என்பதை உணர்ந்தே செயல்பட வேண்டும்.

பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு களைத் தேடித் தருவதற்குப் பல்கலைக் கழகத் தில் வேலை தேடித்தரும் தனிப் பிரிவு ஒன்றினை ஏற்படுத்துவது அவசியம் என்று இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டது. நம் நாட்டில் பல பல்கலைக் கழகங்களில் இத் தகைய பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய பிரிவினால் உருப்படியான நன்மை ஏற்பட வேண்டுமென்றால், பொதுத் துறை யிலும் தனியார் துறையிலும் இயங்கி வரும் தொழில் நிறுவனங்களிலுள்ள வேலை களுக்குத் தகுதியுடையோரைத் தேர்ந் தெடுக்கும் போது, இப்பிரிவின் தொண்டினைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.





பட்டம் பெற அணி வகுத்து வரும் மாணவ மணிகள்

மேனாடுகளில் தனியார் தொழில்களில் ஆட்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அத்தொழில் நிறுவனங்கள் கல்லூரிகளுடன் தொடர்பு கொண்டு, சிறந்த மாணவர்களைத் தேர்ந் தெடுத்து, அவர்கள் கல்லூரியிலிருந்து தேர்வு பெறுவதற்கு முன்பாகவே அவர் களுக்கு வேலைக்கு உத்தரவாதம் அளிக்க முன் வருகின்றன. அத்தகைய நிலை நம் நாட்டில் உருவாவதற்கு இன்னும் பல ஆண்டு கள் செல்லக்கூடுமென்ற போதிலும், இதில் உடனடியாக ஒரு தொடக்கம் காண்பது அவசியமாகிறது. பல்கலைக் கழகங்கள் வேலை தேடித்தரும் பிரிவை அமைக்கும்போது தனியார் தொழில் நிறுவனங்களின் அதிபர் களைக்கொண்டு ஆலோசனைக் குழு ஒன்றினை அமைத்தல் நலம். தென் பகுதியிலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களும் ஒன்று சேர்ந்து பொதுவான ஒரு குழுவினை அமைப் பது நல்ல பலன் தரும். தனியார் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான தேர்ச்சி யுடைய மாணவர்களைத் தயார் செய்யும் வகையினில் பல்கலைக் கழகங்கள் தம்முடைய பாடத் திட்டங்களையும் பயிற்சி முறைகளையும் திருத்தியமைத்துக்கொள்வது அவசியம்.

ஐந்தாண்டுத் திட்டப் பணிகளையொட்டி, வேலை வாய்ப்புகள் பெருகி வருகின்றன. இருந்த போதிலும் படித்தவர்கள் அனைவருக் கும் வேலை வாய்ப்பு அளிக்கும் நிலையினை நாம் உடனடியாக எய்திட முடியாது. இன்னும் ஒரு சில ஆண்டுகளாகிலும் படித்தவர்கள் அனைவரும், அரசாங்க அமைப்புகளிலோ தனியார் தொழில் நிறுவனங்களிலோ, வேலை கிடைக்கும் வாய்ப்பை மட்டும் எதிர் பார்த்துக்கொண்டிராமல் தாங்களே சொந்த மாகத் தொழில் முயற்சிகளைத் தொடங்கிடல் வேண்டும். அவ்வாறு தொழில் மேற் கொள்ள வரும் படித்தவர்களுக்குப் பண உதவி அளிப்பதற்கு இப்போது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் முன் வந்துள்ளன.

வேளாண்மைத் துறையில் பட்டம் பெற்ற வர்கள் கூடச் சொந்தத்தில் வேளாண்மைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயங்குதல் ஏனோ? இவர்கள் பயிற்சியும் படிப்பும் நாட்டுக்குப் பயனுள்ளவையாக அமைந்திட வேண்டுமென்றால், அவர்கள் வேளாண்மையில் ஈடுபட முன்வரவேண்டும். அது போலவே பொறியியல் பயிற்சியில் பட்டம் பெற்றவர்களும் கிராமங்களுக்குச் சென்று, சிறு சிறு தொழிற் கூடங்களும் பட்டறை களும் அமைத்துக் கொள்வது, அவர்களுக்கும் நல்லது; சமுதாயத்திற்கும் பெரும் உதவியா யிருக்கும். நம் வளர்ச்சித் திட்டங்களை யொட்டி, கிராமங்களில் பல்லாயிரக் கணக் கான நீர் இறைவை இயந்திரங்களும், பூச்சி மருந்து தெளிப்பான்களும், இதர முற்போக்கு வேளாண்மைக் கருவிகளும் வழங்கப் பட்டுள்ளன. இவற்றில் பல, இன்று பழுதாகியுள்ளதை நாம் காண்கிறோம். இந்த இயந்திர சாதனங்களுக்குத் தேவைப் படும் பழுதுபார்க்கும் வேலையைச் செய் வதற்கு உள்ளூரிலேயே திறமையுள்ளவர்கள் கிடைக்காத காரணத்தினால், இக்கருவிகள் பல, இயங்காமல் முடங்கிக் கிடக்கின்றன. இந்தக் குறையினைப் போக்கிட வேண்டு மென்றால், பொறியியல் பயிற்சி பெற்ற மாணவர்கள் கிராமப் புறங்களுக்குச் சென்று கிராமத்திலேயே தொழிற் கூடங்கள் அமைத்து, அங்குள்ள வேளாண்மைக் கருவிகளைப் பழுது பார்த்துச் செம்மையாக அவை இயங்குவதற்கு உதவி செய்திட முன் வரவேண்டும்.

இப்போது அறிவியல் படிப்பில் மாண வர்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இது வரவேற்கத்தக்கது. ஆயினும், அறி வியல் படித்த மாணவர்கள், வரலாறு, கலை யியல் ஆகியவற்றைப் பற்றி அக்கறை கொள்ளாத ஒரு நிலையையும், கலையியல் மாணவர்கள் அறிவியல் ஆர்வமோ ஆற்றலோ ஒரு சிறிதும் இல்லாத ஒரு நிலையையும், நாம் காண்கின்றோம். மாணவர்கள் முழுமை யான ஆற்றல் பெற்றிட இந்நிலை உகந்தது அல்ல. பள்ளிப் படிப்பு வரை, அறிவியல், கலையியல் எல்லாப் பாடங்களையும், பொது வாகக் கற்றுவரும் மாணவர்கள், கல்லூரி யில் புகுமுக வகுப்பு நிலைக்கு வந்தவுடன், கலையியல் பாடப் பயிற்சியையோ, அறிவியல் பாடப் பயிற்சியையோ தேர்ந்தெடுத்து, இரு தனிப் பிரிவுகளாகிச் சென்று விடுகின்றனர். கல்லூரி மட்டத்தில் கலையியல் பாடத்தை அவர்கள் படிக்கும்போது அறிவியல் அனுபவம்

பெறுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு எதுவுமே இல்லாமல் போய் விடுகிறது. அது போலவே அறிவியல் பயிற்சியைத் தேர்ந்தெடுப்பவர்கள், கலையியல், வரலாறு, பொருளியல், ஆகிய பாடங்களோடு சிறிதும் தொடர்பில்லாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. இந்த நிலையினைப் போக்கிட, அறிவியல் பாடங்களில் சிறப்பாகத் தேர்ச்சி பெறுபவர்களும், கலையியல், வரலாறு, பொருளியல், போன்ற பாடங்களில் ஒன்றினைக் கட்டாயமாகக் கல்லூரிப் பயிற்சிக் காலம் முழுவதும் படிக்கவேண்டுமென்று விதிப்பதும், வரலாறு, கலையியல் போன்ற பாடங்களைத் தேர்ந்தெடுத்தவர்கள், இயல்பியல், வேதியியல், உயிரியல், போன்ற அறிவியல் பாடங்களில் ஒன்றினைக் கற்றிடவேண்டுமென்று விதிப்பதும் அவசியம் என்று நான் கருதுகிறேன்.



ஒரு மாணவர் ஆளுநரிடம் பட்டம் பெறுகிறார்

இது பல்கலைக் கழகப் பாடத் திட்டத்திலேயே முற்றிலும் புதிய ஒரு மாறுதல் என்று சிலர் தயங்கலாம். ஆனால் நம்முடைய மாணவர்கள் ஒரு சீரான அறிவைப் பெற்று, எல்லாத் துறைகளிலும் ஓரளவு ஈடுபாடு கொண்டு, அதனை அடிப்படையாக வைத்துச் சில சிறப்புப் பாடங்களில் நுட்பத் தேர்ச்சி பெற வேண்டுமென்றால், இந்தச் சீர்திருத்தம் இன்றியமையாதது என்பது என்னுடைய திடமான எண்ணம். அறிவியல், கலையியல் இரண்டு துறைகளிலுமே இணைந்த அறிவு, மாணவர்களுக்கு இன்றியமையாததாகிறது. அந்த இரண்டு அறிவுகளையும் இணைத்து நாம் வழங்கத் தவறுவதால் தான், மாணவர்களிடையே தேர்ச்சிக் குறைவும், வேலை வாய்ப்புகள் பெறுவதில் சிரமங்களும் ஏற்படுகின்றன. கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்ட வல்லுநர், நான் கூறியுள்ள இக்கருத்தைப் புதிய கருத்து என்ற காரணத்திற்காகவே புறக்கணித்து விடாமல் அறிவியல், கலையியல் ஆகிய இரண்டு துறைகளிலும் மாணவர்களுக்கு முழுமையாகப் பயிற்சி அளிப்பதற்கு இப்போதுள்ள பாடத் திட்டங்களில் மாறுதல்கள் செய்திட முன்வர வேண்டும் என்று பணிவுடன் வேண்டுகின்றேன்.

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலே படித்த இளைஞர்கள் சமுதாயப் பணியில் ஈடுபடுவதற்காக, அமைதிப்படை இயக்கம், தொண்டர்படை இயக்கம் போன்ற இயக்கங்கள் இயங்கி வருகின்றன. இது போலவே நம் நாட்டு இளைஞர்கள் சமுதாய உயர்வுப் பணியினில் ஈடுபடத் திட்டங்களைத் தீட்டுவது அவசியமாகிறது. பட்டம் பெற்ற அனைவரும் ஓராண்டாகிலும் சமூகத் தொண்டினில் ஈடுபடுவதைக் கட்டாயமாக்க வேண்டுமென்று சிலர் ஆலோசனை கூறியுள்ளார்கள். தொண்டினைக் கட்டாயப் படுத்திச் செயல் படுத்திட முடியாது. அதே சமயத்தில், மாணவர்கள் கிராமங்களுக்குச் சென்று சேவை செய்யவேண்டுமென்று மேடையில் முழங்குவதாலும், அறிவுரைகள் கூறி, அறைகூவல் விடுவதாலும் மட்டுமே, நாம் எதையும் சாதித்துவிட முடியாது. உண்மையிலேயே உருப்படியான பலன் ஏற்பட வேண்டுமென்றால் மாணவர்களைத் தொண்டில் ஈர்த்துத், தாமாகவே விரும்பி முன்வந்து இந்த சேவைத் திட்டங்களில் பங்கு கொள்வதற்குச் சாதகமான சூழ்நிலையினை நாம் உருவாக்கித் தரவேண்டும். அதற்காக அவர்களுக்குப் பண உதவிகளும் சலுகைகளும் அளிக்க வேண்டும்.

இதை மனத்திற் கொண்டுதான் தமிழ் நாட்டில் 2,000 படித்த இளைஞர்கள் கிராமப் புறங்களுக்குச் சென்று தொண்டு செய்வதற்கு ஊக்கம் அளிக்கும் திட்டம் ஒன்றினைத் தமிழக அரசு இந்த ஆண்டு கொண்டுவந்துள்ளது. இலட்சியத் துடிப்பும், ஆர்வமும், ஆற்றலும் கொண்ட இளைஞர்கள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று விழைகிறேன்.

வேலை வாய்ப்புகள்—அதன் வாயிலாக வருவாய்—இவை யெல்லாம் இளந் தலைமுறையை இயந்திரமாகச் செய்துவிடல் கூடாது. தானுண்டு தன் பெண்டு பிள்ளையுண்டு என ஒவ்வொரு இளைஞனும் மாதந்தோறும் ஊதியக் கணக்கு வரவு-செலவுகளை மட்டும் பார்த்துக்கொண்டிருந்தால் நாட்டின் பொதுவான முன்னேற்றம் தடைபட்டுப் போய்விடும். அந்த முன்னேற்றம் முகிழ்க்க முனைந்துநிற்கவேண்டியது இளைஞர் பேரணியேயாகும்.

இளைஞர்கள்தான் முற்போக்கு எண்ணங்களின் முன்னோடிகள். இளைஞர்களின் அமைதியின்மை—இந்தியப் பிரச்சினை அல்ல; அனைத்துலகப் பிரச்சினை! ஒவ்வொரு பழைய தலைமுறையும், புதிய தலைமுறையைப் பழித்தே பழக்கப்பட்டிருக்கிறது. பிளேட்டோ காலத்திலிருந்து இப்படித்தான்; இன்று நேற்றல்ல!

"இந்தத் தலைமுறை முன்புபோல் இல்லை;
தரம் குறைந்து விட்டது."

இது நமது பாட்டனார் காலத்திலிருந்து பரம்பரை பரம்பரையாகச் சொல்லப்படும் குறை! குடுமித் தலையில் மாற்றம் ஏற்பட்ட போதும் குமுறல்—இப்போது உடலைப் பிடிக்கும் உடைகளைக் காணும்போதும் குமுறல்—நடையுடைகளில் ஏற்படும் மாற்றங்களல்ல; மனத்தில் ஏற்படும் மாற்றங்கள்தான் சமுதாயத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் புதிய கோணங்களை ஏற்படுத்த வல்லவை! ஒரு தலைமுறைக்கும் இன்னொரு தலைமுறைக்கும் வேறுபாடு இருப்பது தவறில்லை. ஆனால், இடையில் ஆக்க பூர்வமான வளர்ச்சி தழைத்திடல் தேவை. பிளேட்டோ காலத்தில் சில நூறு மாணவர்கள் இருந்தார்கள்; ஆனால் இன்று அமெரிக்க நாட்டின் மக்கட் தொகையில் பாதிப் பேர் மாணவர்கள்.



டாக்டர் கலைஞரும் தமிழக ஆளுநரும்

இந்தியாவில் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இருக்கும் மாணவர்களின் தொகை, பிரான்சு நாட்டு மக்கள் தொகைக்குச் சமம். மாணவர்களில் ஒருசிலரது உள்ளத்தில் தீவிரவாதம் பொங்கியெழுந்து வழிந்தோடுகிறது. நான் தீவிர வாதத்தின் பகைவனல்ல. முகத்திலே இருக்கும் பருக்கள் அழகைக் கெடுக்கின்றன. உண்மைதான். அதற்கு அடிப்படைக் காரணமுணர்ந்து மருந்திடல்தான் முறையே தவிரச் சந்திர பிம்பமெனும் வதனத்தை விகாரமாக்கும் பருக்களைக் கிள்ளி எறிகிறேன் என நகங் கொண்டு பெயர்த்தெறிந்தால் ரத்தம் கொப்பளிக்கும். தழும்புகள் தோன்றும். சில வேளைகளில் புண்பட்டுப் புரையோடி உயிருக்கே உலை வைக்கும். குறு மருக்களை அகற்றும் கொள்கையில் வேறுபாடில்லை. முறையில் தானே முரண்பாடு! இலட்சியத்தைப் போலவே இலட்சியத்தை அடையும் வழிமுறைகளும் நன் முறைகளாக இருத்தல் வேண்டும்.

பல்கலைக் கழகத்திற்கு வரும் பாதையிலே பால் வடியும் முகத்தினன்—மாணவன் ராஜேந்திரன் சிலையாக நின்று கொண்டிருக்கிறான். தன்னை வளர்த்த மொழியைக் காக்க அவன் தன்னுயிரைத் தாரை வார்த்தான். இலட்சியம் ஈடேறப் பிறரை வருத்தல்—பிறரை அழித்தல்—முறையல்ல! கூடாது! கூடவே கூடாது!

"கொலைவாளினை எடடா; மிகு
கொடியோர்
செயல் அறவே!"

என்றார் பாரதிதாசன். கவிதையை உற்றுக் கவனியுங்கள்! கொடியோர் செயல் அறவே; கொலைவாளினை எடடா என்றாரே தவிர; கொடியோர் தலை அறவே கொலைவாளினை எடடா எனக் கூறினார் இல்லை! சிலர் செயல் அறத்தான் அந்தச் சிங்கநாதம் செய்தார்.

அந்தச் சிங்கக் கூட்டத்தைத் தான் என் எதிரே காணுகின்றேன். இறும்பூதெய்துகின்றேன்.

கருமுகில் கண்டு திருமயில் ஆடுமென்பர்.
கதிரொளி கண்டு தாமரை மலருமென்பர்.
என் நிலையும் அதுதான்!
உமது விழியொளி கண்டு மகிழ்கின்றேன்
—விடை பெற முடியாது பிரிகின்றேன்.

வணக்கம்.

## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்.

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை-1.

தந்தி விலாசம் : 'அர்பாங்க்' தொலை பேசி எண் : 20367

தபால் பெட்டி எண் : 226

| | (வருடத்திற்கு சதவீதம்) |
|---|---|
| கரண்ட் அக்கௌண்ட் | 0·50 |
| சேவிங்ஸ் பாங் அக்கௌண்ட் | 4·00 |
| சீசன் டெபாஸிட்டுகள்—ரூ. 1000ம் அதற்கு மேலும். | |
| 15 நாட்கள் | 2·00 |
| 46 நாட்கள் | 3·00 |
| பிக்ஸெட் டெபாஸிட்டுகள் ரூ. 100ம் அதற்கு மேலும் | |
| 91 நாட்கள் | 4·75 |
| 6 மாதங்கள் | 5·25 |
| 12 மாதங்கள் | 6·25 |
| 2 வருடங்கள் | 6·75 |
| 3 வருடங்கள் | 7·25 |
| 5 வருடங்கள் | 7·50 |

குறைந்த பட்ச கால அளவாக ஓராண்டுக் காலத்திற்கு ரூ. 1000-க்கும் அதற்கு அதிகமாக உள்ள டெபாஸிட்டுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம, கல்வி ஸ்தாபனங்களில் டெபாஸிட்டுகளுக்கு மேலே குறிப்பிட்ட வட்டிவிகிதத்தை விட ½ சதவீதம் கூடுதல் வட்டி தரப்படும்.

ரெக்கரிங் டெபாஸிட்டுகள் : தவணைகளுக்குப் பெறும் மொத்தப்பணம்.

| மாதத் தவணை | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
|---|---|---|---|---|---|---|---|
| ரூ. 5-ம் அதன் மடங்குகளும். ரூ. | 62 | 128·50 | 201 | 278 | 362·50 | 452 | 548·50 |

ஆர். கனகசபை
தலைவர்.

பி. என். டி. சாரி,
செயலாளர்.



# நெய்வேலியும்...நமது நாடும்

**நெய்வேலி யூரியா:**
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரொஜன் ஊட்டப்பட்ட உரம் தமிழ் நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

யூரியா: பார்மால்டிஹைட் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.

**மின்விசை:**
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலையம்தான் முதலாவது.

சுட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லீக்கோ
வீடுகள்,ஓட்டல்கள்,பல்வேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திறம் மிக்கது–தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.



**நெகோலின்:**
சானிடரி சாதனங்கள்,பீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசையையும் ஏந்தித் தர வல்ல இன்ஸுலேடர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண். ஜவுளி, ரப்பர், மருந்துத் தயாரிப்பு,காகிதத் தொழில்களிலும் இது பயன்படுகிறது.

**தார்ப்பொருள்கள்:**
பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸால், ஸைலினல், பாலிவாலெண்ட் ஃபினால் கலவை.

**நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்., நெய்வேலி–1**

FDSNLC946TM


பிராட்வே என்று பெயர் அமைந்திருந்தபோதும் பெயருக்குப் பொருத்தமில்லாதவாறு குறுகலாக அமைந்திருக்கும் சாலை-அங்கே லோன் சதுக்கம் என்று சொல்லப்படும் சிறிய பூங்கா-அருகே சென்னை நகருக்கே தனித்தன்மையை உருவாக்கிக் கொடுக்கும் புகழ் பெற்ற கொத்தவால் சாவடி-அங்கிருந்து கணந்தோறும் சரக்குகளை ஏற்றிச் செல்லும் தனியார் சரக்கு ஊர்திகளின் பேரிரைச்சல் -தங்கச்சாலை, திருவொற்றியூர் நோக்கிச் செல்கின்ற-தியாகராய நகர், விவேகாநந்தர் இல்லம், நீதிமன்றம் நோக்கி வருகின்ற அரசுப் பேருந்துகளின் ஓட்டம்— இன்னும் இது போன்ற பல பரபரப்பான சூழ்நிலைகளுக்கு இடையிலே தான் கரிகால் மன்னனின் கடமையிலே வளம் பெற்ற காவிரி நதியைப் போலக் காட்சி தந்து கொண்டிருக்கும் 'காவேரி' சிறப்பு அங்காடி, வட சென்னையிலே வாழ்கின்ற மக்களுக்கு வளம் கொடுத்துக் கொண்டிருக்கிறது.




1969-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் துவக்கப்பட்ட இந்தச் சிறப்பு அங்காடிக்குக் 'காவேரி' என்ற அழகுப் பெயரை-வரலாற்றுப் பெயரை அன்புடன் சூட்டியவர் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு சி. பா. ஆதித்தனார் அவர்கள் ஆவார்கள்.

இந்த அங்காடி துவக்கப்பட்ட புதிதில் பலசரக்கு மட்டும் தான் விற்பனை செய்யப்பட்டதாம். அப்போது பொதுமக்கள் மிகுந்த அளவில் வரவில்லையாம். அங்காடியைப் பார்க்கும் அநேகரில் ஒரு சிலர்தான் துணிவுடன் உள்ளே நுழைவார்களாம். அவர்களிலும் ஒரு சிலர்தான் பலசரக்குப் பொருள்களை வாங்கிச் செல்வார்களாம். மிகப் பலர் சிறப்பு அங்காடியைக் கண்காட்சியாகக் கருதிச் சென்று விடுவார்களாம். ஆனால் இன்று வட சென்னை வாழ் மக்களுக்கு இந்தச் சிறப்பு அங்காடி ஜீவநதியாக விளங்குகிறது.

எழுத்தர்கள், விற்பனை உதவியாளர்கள், மற்றும் பலவித அலுவல் புரிவோர் அனைவரையும் சேர்த்து மொத்தம் 150 பேர்கள் பணிபுரியும் இந்தச் சிறப்பு அங்காடியில் பலசரக்குகள், அழகுச் சாதனங்கள், கைத்தறி ஆடைகள், மில் துணிகள், மருந்துகள், குழந்தைகளுக்குரிய பாலுணவு வகைகள், மின்சாரச் சாதனங்கள், காலணிகள், கண்ணாடிப் பொருள்கள், மரச் சாமான்கள், விளையாட்டுப் பொம்மைகள், காய்கறிகள் போன்ற பலவகைப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

ஜவுளி வகைகள் சென்னை மாநில நுகர்வோர் கழகத்தின் (Madras State Consumers Federation) வாயிலாகவும், பருப்பு வகைகள் தேசீய கூட்டுறவு நுகர்வோர் கழகத்தின் (National Co-oprative Consumer's Federation) வாயிலாகவும், அரிசி வகைகள் தமிழ்நாடு நுகர்வோர் கழகத்தின் (Tamil Nadu Consumer's Federation) வாயிலாகவும் கொள்முதல் செய்யப்படுகின்றன. ஏனைய பொருள்கள் டெண்டர் விடப்படுகின்றன. காய்கறி வகைகள் வெளிச் சந்தையில் கொள்முதல் செய்யப்படுகின்றன.

இங்கே விற்பனை செய்யப்படும் அழகு சாதனப் பொருள் ஒவ்வொன்றின் விலையும் வெளிச்சந்தையின் விலையை விட 5 பைசாவாவது குறைவாகவே இருப்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனைக் கழகத்திற்கு அரசு கொடுத்துள்ள 17 இலட்ச ரூபாயை மூலதனமாக வைத்துத் துவக்கப்பட்டது தான் இந்தக் 'காவேரி'. இந்த இரண்டாண்டுக் காலத்தில் இந்த அங்காடியில் பத்து ரூபாய் பங்குத் தொகை செலுத்திய உறுப்பினர்கள் பத்தாயிரம் பேர் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மாதத்திற்குச் சராசரி 6 இலட்சத்திலிருந்து 8 இலட்சம் ரூபாய் வரையிலும் இந்த அங்காடியில் விற்பனை நடைபெறுகிறது. கடந்த தீபாவளியின் போது மட்டும் பத்து இலட்சத்திற்கு விற்பனை நடைபெற்றிருக்கிறது. பட்டாசு மட்டும் 60 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை ஆகியிருக்கிறது.







பொதுவாக, மாதத்தின் முதல் வாரத்தில் இங்கே விற்பனை அதிக அளவில் நடைபெறுகிறது. அதிலும் சனிக்கிழமைகளில் இங்கே பொருள்கள் வாங்க வருகின்ற மக்கள் கூட்டம் கணக்கிலடங்காது. சில சமயங்களில் அலுவல் நேரத்தைக் கடந்து சுமார் ஒரு மணி நேரம் விற்பனை செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகிவிடுகிறது.

''எங்கள் 'காவேரி'யைத் தேடி வருவோர், பொருள்கள் வாங்க முடியாமல் ஏமாற்றமடைந்து திரும்பக் கூடாதே '' என்ற நல்லெண்ணத்தால்தான் அதிக நேரமாவதைப் பொருட்படுத்தாமல் எங்கள் ஊழியர்கள் பணி புரிகிறார்கள்''-என்கிறார் பொது மேலாளர் திரு ஆர். சேஷாத்திரி.

பொதுமக்கள், தங்களுக்குத் தேவையான பலசரக்குப் பொருட்களைத் தாங்களே தெரிந்து எடுத்துக் கொள்ளும் ( Self Service ) முறை இங்கே குறிப்பிடத்தக்கது. இந்த (Self service) முறை பொது மக்களைக் கவர்ந்திருக்கிறது என்பது, நாள்தோறும் இங்கு குடும்பத்துடன் வந்து இந்த முறையில் ஈடுபடும் ஏராளமானவர்களின் உற்சாகத்தால் அறிந்து கொள்ள முடிகிறது. சிறுவர் சிறுமியர்கள் கூட, இந்த முறையைப் பெரிதும் விரும்புகிறார்கள்.

சென்னை நகரத்துக்கே பெரிய வாணிபச் சந்தையாகக் கருதப்படும் கொத்தவால் சாவடி அருகில் இருக்கிறது. அங்கேயும் பொதுமக்கள் செல்கிறார்கள்; இந்தக் 'காவேரி'யையும் நாடிவருகிறார்கள். கொத்தவால் சாவடி போன்ற பெரிய சந்தையில் விலைகள் ஒவ்வொரு நாளும் வேறுபடலாம். ஒரு நாள் குறையலாம். மறுநாள் அதிகமாகலாம். பொதுமக்களின் தேவையை அறிந்து விலைகள் நிர்ணயிக்கப்படலாம் ; சூழ்நிலையை உணர்ந்து, விலைகளில் ஏற்ற இறக்கங்கள் தென்படலாம்; ஆனால் 'காவேரி'யில் அம்மாதிரிச் செய்ய முடியாது. கொள்முதல் விலையைக் கொண்டு அதிக இலாபம் கருதாத அளவில் ஒரு விலையை நிர்ணயித்துவிட்டால், பின்பு அதிகப்படுத்தவும் முடியாது—குறைக்கவும் முடியாது. நிமிடத்துக்கு நிமிடம் விலையேற்றமும் விலை இறக்கமும் நடைபெறுகின்ற வெளிச் சந்தையைப் போலக் 'காவேரி' இயங்க முடியாது. அப்படி இருந்த போதிலும் இங்கே அதிகமான விற்பனை நடைபெறுகிறது என அறியும்போது, பொது மக்களின் இதயத்தில் 'காவேரி' நன்னம்பிக்கை பெற்றிருக்கிறது என்பது உறுதியாகிறது.

'' எங்களுக்கு அதிக இலாபம் தேவையில்லை. 'காவேரிக்குச்' சென்றால் தரமான பொருள்கள் கிடைக்கும் என்று பொது மக்கள் கருதி வருகிறார்களே—அந்த ஒரே பெருமை எங்களுக்குப் போதுமானது ''—என்று கூறும் சிறப்பு அலுவலர் திரு மா. கனகசபை அவர்களின் சொற்களை நாம் ஆமோதிக்காமல் இருக்க முடியாது.

இந்தக் ' காவேரி' யின் உறுப்பினர்கள் உண்மையிலேயே பயன் பெறத்தான் செய்கிறார்கள். பத்து ரூபாயைப் பங்குத் தொகையாகச் செலுத்திய ஓர் உறுப்பினருக்கு, அவர் வாங்கும் பொருள்களின் விலையில் இரண்டு சதவீதம் தள்ளுபடி கொடுக்கப்படுகிறது. வெளிச் சந்தைகளில் எளிதாகக் கிடைக்காத பொருள்களும்—உண்மையான விலையை விட அதிக விலையில் விற்கப்படும் பொருள்களும் இங்கே எளிதில் கிடைக்கின்றன.

சில நேரங்களில் வெளிச்சந்தையில் வாணிபம் புரிவோர்கூட இங்கே வந்து சில பொருள்களை வாங்கிச் செல்கிறார்களாம். சில நாட்கள் கழித்து அந்தப் பொருள்களை அதிகமான விலைக்கு விற்று இலாபம் சம்பாதிக்கிறார்களாம்.

''இப்படிப் பட்டவர்களுக்கு இங்கே விற்பனை கிடையாது என்று நீங்கள் சொல்லக் கூடாதா?'' —நமது கேள்வி

'' எப்படிச் சொல்ல முடியும்? வெளியிலே அவர் வியாபாரியாக இருக்கலாம். எங்கள் சிறப்பு அங்காடிக்குள் நுழைந்துவிட்டால் அவர் வாடிக்கைக்காரர்களில் ஒருவர்—நுகர்வோரில் ஒருவர். அவர் கேட்கின்ற பொருளை அவருக்குத் தர முடியாது என்று நாங்கள் எப்படிக் கூற முடியும் ? பொதுமக்களுக்குச் சேவை செய்யத் துவங்கியுள்ள நாங்கள், மறுப்பது நியாயமா?'' என்று கூறிவிட்டு, சிறிது இடைவெளிக்குப் பின்னர், '' நாட்டுமக்கள் ஒவ்வொருவரும் பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும் ! பொது மக்களின் நலத்துக்காக உருவாகியுள்ள அமைப்பில் 'நம்மைப் போன்ற வியாபாரிகள் சென்று, பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மையை அபகரித்துக் கொள்ளக் கூடாது ' என்ற நல்ல மனப்பான்மை வியாபாரிகளுக்குத் தோன்ற வேண்டும்'' என்று மன வருத்தத்துடன் சொல்லி முடித்தார் மேலாளர்.



ரகம் ரகமாக அரிசி !

'' இங்கே பொருள்களை வாங்குவதற்கு, அதிக அளவில் அரசு ஊழியர்கள் வருகிறார்களா, அல்லது சாதாரணப் பொதுமக்கள் வருகிறார்களா '' என்றொரு வினாவைச் சிறப்பு அலுவலரிடம் கேட்டோம்.

'' இங்கே அதிக அளவில் வருவது அரசு ஊழியர்கள் அல்ல—சாதாரணப் பொதுமக்கள் ! '' என்றார் சிறப்பு அலுவலர். அவரது மறுமொழி நமக்கு வியப்பைத் தந்தது; அரசின் உதவியுடன் நடைபெறும் ஒரு கூட்டுறவுச் சிறப்பு அங்காடிக்கு அரசு ஊழியர்களே அதிக அளவில் வருவதில்லை என்பதை அறிந்த போது நமக்கு மன உளைச்சல் ஏற்படுகிறது.

வண்ண வண்ணக் கைத்தறி ஆடைகள் இங்கே விற்பனைக்கு உள்ளன. அரசு ஊழியருக்குக் கடன் வசதிகள் செய்து தரப்படுகிறது இங்கே. ரகம் ரகமான ஆலைத் துணிகளும் இங்கே உள்ளன. தயாரித்து வைக்கப்பட்டுள்ள உடனடி ஆடைகளும் (Ready Made Dresses) இங்கே விற்பனை செய்யப் படுகின்றன. தையலகமும் இங்கே இருக்கிறது. தையற் கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் இந்தப்பிரிவில் பணிபுரிகிறார்கள். பொது மக்களின் தேவையையும் விருப்பத்தையும் அறிந்து நவின காலத்திற்கேற்ற முறையிலும் விரைவாகவும் ஆடைகளைத் தயாரித்துக் கொடுக்கின்றனர்.

இந்தியன் ஆயில் நிறுவனத்தினரால் தயாரிக்கப்படும் 'இண்டேன்' காற்று உருளை ( Gas Cylinder ) இங்கே சிறந்த



வளமான வளர்ச்சிக்கும்

அதிக உற்பத்திக்கும் சிறந்தவை

# ரோவிமிக்ஸ்

மற்றும்

# ரோவிஸால் ஓரல்



**ரோவிமிக்ஸ்—சாதாரணமாகத் தேவைப்படும் விடமின்களுக்கு:**

உங்கள் கால்நடைகளுக்கு சாதாரணமாகத் தேவைப்படும் விடமின்களை சுலபமாகவும் சிக்கனமாகவும் அளிக்க கனிஜங்களால் கெடாத ரோவிமிக்ஸ் விடமின் பவுடர் வகைகளில் ஒன்றைத் தீனியுடன் கலக்கவும்.

**ரோவிஸால்—அதிகப்படியான விடமின்களுக்கு:**

ஒட்டுண்ணிகள் அல்லது தொற்று நோய் பற்றுதல், மருந்து ஊட்டுதல், அதிக சூடு, அதிக குளிர்ச்சி, ஈரம் அல்லது வரட்சி, சிறகுகளை உதிர்த்தல், துரிதமான வளர்ச்சி, ஓர் இடத்திலிருந்து மறு இடத்துக்குக் கொண்டு போதல் ஆகிய காலங்களில், பிராணிகளின் விடமின் தேவை சாதாரண அளவைவிட இரு மடங்குக்கும் அதிகமாகக் கூடும். எனவே, விடமின் அளவை அதிகரிக்க, தேவைக்கேற்ப, பிராணிகளுக்கு ரோவிஸால் ஓரல் கொடுக்கவும்.

தயாரிப்பாளர்கள்:

ROCHE ரோஷ் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்
பம்பாய்-34 WB

மற்ற விவரங்களுக்கு கீழ்க் காணும் ஏக விநியோகஸ்தர்களுக்கு எழுதுங்கள்:

VOLTAS வால்டாஸ் லிமிடெட்

கெமிக்கல்ஸ் டிவிஷன், த. பெ. 7803, பம்பாய் 33-DD

த. பெ. 125, பெங்களூர் 1 • த. பெ. 385, புது டில்லி 1
த. பெ. 1898, சென்னை 1 • த. பெ. 34, கொச்சி 3
த. பெ. 606, கல்கத்தா 1 • த. பெ. 35, கான்பூர் 1



முறையில் விற்பனை செய்யப்படுகிறது. பல வகைக் காற்றடுப்புகளும் இங்கே உள்ளன. ஓர் உருளைக்கு மூன்று ரூபாய் இலாபம் கிடைக்கிறதாம். ஏறக்குறைய 3,000 வாடிக்கைக்காரர்கள் உள்ளனர்; இந்தக் காற்று உருளைகளைத் தனது சொந்தச் செலவிலேயே வாடிக்கைக்காரர்களுக்கு அனுப்பி வைக்கிறது 'காவேரி.' மண்ணெண்ணெய் அடுப்பைவிட, இந்தக் காற்றடுப்பு, பலவகையிலும் வசதியாக இருக்கிறதாம். சுமார் மூன்று மணி நேரம் எண்ணெய் அடுப்பில் செய்யப்படும் சமையல் பணி, இந்தக் காற்று அடுப்பின் உதவியினால் $1\frac{1}{2}$ மணி நேரத்தில் முடிவடைந்து விடுகிறது.

தமிழகத்தில் எந்தச் சிறப்பு அங்காடியிலும் இல்லாத ஒரு புதுமை—பெருமை இந்தக் 'காவேரி'யில் உண்டு. நாள்தோறும் பகல் 12 மணியிலிருந்து ஒரு மணி வரை இங்கே ஒரு டாக்டர் உண்டு! இங்கே வரும் வாடிக்கையாளர்களுக்கு இந்த டாக்டர் இலவச மருத்துவ ஆலோசனைகளைத் தருகிறார். வாடிக்கையாளர்கள், தங்களுக்குரிய ஊசி மருந்துகளை வாங்கிக் கொண்டு வந்து தந்தால், கட்டணம் இல்லாமல் ஊசி போட்டனுப்புகிறார் இந்த டாக்டர். 'காவேரி'யில் கிடைக்கும் இந்த அரிய தொண்டின் காரணமாக இங்கே பொதுமக்கள் விருப்பமுடன் வருகிறார்கள். வாணிபமும் வளர்ச்சியுறுகிறது.

இங்கே, மருந்துப் பொருள்களும் நிறைய இருக்கின்றன. பொதுவாக வெளிச் சந்தையில் பல கடைகள் ஏறி இறங்கினால் கூடக் கிடைக்காத உயர்தர மருந்துகள் எல்லாம் இங்கே,



வாடிக்கையாளர்களுக்காக வரவழைக்கப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன.

அண்மையில் குமிடிப்பூண்டியில் செயல்படத் துவங்கியிருக்கும் நடமாடும் மருத்துவமனைக்குத் தேவையான மருத்துவக் கருவிகளில் பெரும்பான்மையானவை இந்தக் 'காவேரியின்' வாயிலாகவே வாங்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பொருள்களின் மதிப்பு சுமார் 50 ஆயிரம் ரூபாய் இருக்கும்,

ஏற்கனவே, குறைந்தவிலையில் நோட்டுப் புத்தகங்களை விற்பனை செய்து வந்த இந்தக் காவேரி, இந்த ஆண்டு முதல், அரசினர் வெளியிட்டுள்ள பாடப் புத்தகங்களை விற்பனை செய்யத் தொடங்கியிருக்கிறது.

நவீன நகைகள்—என்று சொல்லப்படும் தங்கமுலாம் பூசிய நகைகள் தமிழ்நாட்டிலேயே இந்தச் சிறப்பு அங்காடியில் தான் விற்பனை செய்யப்படுகின்றன. குறைந்த விலையில் நல்ல தரத்தில் உள்ள-முலாம் பூசப்பட்ட இந்த அணிகள், பொன்னணி கூடத் தோற்றுப் போகும் அளவுக்கு-உன்னத வேலைப்பாடு கொண்டு மிளிர்கின்றன. அமர் நிறுவனத்தின் தயாரிப்பு இந்த நகைகள்.

ஏற்கனவே, வேப்பேரி, தியாகராயநகர் ஆகிய பகுதிகளில் இந்தக் காவேரியின் கிளைகள், 'மினி காவேரி' (Mini Cauvery) என்ற பெயரில் இயங்கி வருகின்றன. விரைவில் மயிலையிலும் ஒரு புதிய கிளை திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது; அந்தக் கிளையில் மேலாளரைத் தவிர, மீதி எல்லா ஊழியர்களும் பெண்களாகவே இருக்கலாம் என்றும் ஒரு திட்டம் உள்ளதாம்.

" இந்த இரண்டாண்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க செய்தி ஏதாவது உண்டா ?" என்று கேட்டோம்.

உடனே, மேலாளர் ஒரு சில விநாடிகள் ஆலோசித்துப் பார்த்தார்; மறுகணம்.... "ஆங்! நினைவு வருகிறது...." என்று பேச்சைத் தொடர்ந்தார்:

" காவேரி துவக்கப்பட்ட காலத்தில் 25 ரூபாய்க்கு மேல் இங்கே வாங்குபவர்களுக்கு வெகுமதிக் கூப்பன் தந்தோம். அவற்றைக் குலுக்கி எடுத்தோம்; மைய அரசின் தொலைபேசித் துறையின் சென்னை அலுவலகத்தில் பணிபுரியும் ஓர் ஊழியருக்கு முதற் பரிசாகிய வைர மோதிரம் கிடைத்தது. அந்த மோதிரத்தின் விலை சுமார் ஆயிரம் ரூபாய் இருக்கும்.

ஏறக்குறைய 50 பரிசுகள் வைத்திருந்தோம். ஆண்டு விழாவின் போது அந்தப் பரிசுகளை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் ஆதித்தனார் அவர்கள் விநி

யோகம் செய்தார்கள். ஆந்திர மாநிலம், ராஜஸ்தானம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சிலரும் பரிசு பெற்றவர்கள் பட்டியலில் இருந்தனர். பரிசுகளை வாங்கிச் செல்வதற்கு அவர்கள் நேரில் வராததால், பரிசுப் பொருள்களை அவர்களுக்கு அனுப்பி வைத்துவிட்டோம்''—மேலாளர் சொன்னார்.

''ஆமாம்! பிற மாநிலத்தவர்க்கு இங்கே எப்படிப் பரிசு கிடைத்தது?'' என்று கேட்டோம்.

''அவர்கள் சென்னைக்கு வந்திருந்தபோது, எங்கள் 'காவேரிக்கும்' வருகை புரிந்திருக்கிறார்கள். 25 ரூபாய்க்கு மேல் சரக்குகள் வாங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு வெகுமதிக் கூப்பன் தரப்பட்டிருக்கிறது. அவர்களுக்கும் நல்வாய்ப்பு இருந்திருக்கிறது-பரிசு கிடைத்திருக்கிறது.'' —மேலாளர் விளக்கம் சொன்னார்.


தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு ரூ. 8.00

அரை ஆண்டு ரூ. 4.00

தனிப்பிரதி 35 காசுகள்

விவரங்களுக்கு


பரிசுச்சீட்டில் மட்டுமல்ல-சாதாரண வெகுமதிச் சீட்டிலும், தமிழ்நாடு பிற மாநிலங்களுக்குப் பரிசு தருகிறது என்ற செய்தி நமக்கு மகிழ்வைத் தருகிறது.

இவ்வளவு சேவை செய்தும்கூட இந்தக் 'காவேரிக்கு' ஒரு மனக்குறை இருக்கத்தான் செய்கிறது.

மிகவும் நெருக்கடியான பகுதியில் இந்த அங்காடி அமைந்திருப்பதால் நிறையப்பேர் வருவதற்குரிய வாய்ப்புக் குறைந்திருக்கிறது. அது மட்டுமல்ல; 'காவேரியை' நாடி நாள்தோறும் சொந்த உந்துகளிலும் ஊர்திகளிலும் வரும் செல்வந்தர்கள், ஊர்திகளை நிறுத்துவதற்குத் தகுந்த வசதிகள் இல்லாதது ஒரு பெருங்குறை. இந்த வசதி மட்டும் கிடைத்துவிட்டால், பிறருக்கு வளம் தரும் ''காவேரி'', தானும் மிகுந்த வளம் பெற்றுத் திகழ்வாள் என்பதில் ஐயமில்லை.


காலக் கண்ணாடி



சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா




# டி.எம்.வி.10.

உழவர் பெருமக்களின் வருவாயைப் பெருக்கவேண்டும் என்பதற்காகத், தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறையால் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ள நிலக்கடலை ரகத்தின் பெயர் டி.எம்.வி. 10 (திண்டிவனம்-10) என்று அழைக்கப்படுகிறது. இது அதிகம் படராத (Semi-spreading) வகையைச் சேர்ந்தது. இப்புதிய ரகம் மானாவாரியில் ஹெக்டேருக்கு 1,656 கிலோ மகசூல் கொடுக்கவல்லது. அதாவது ஏக்கருக்கு 670 கிலோவரை மகசூல் கொடுக்கக் கூடியது. இந்த ரகம் டி.எம்.வி. 1 நிலக்கடலையை விட 22·9 சதம் மணிலாவும், 32 சதம் பருப்பும், 39·3 சதம் எண்ணெய்யும் அதிகமாகக் கொடுக்கும் திறன் கொண்டது. டி.எம்.வி. 8 ரகத்தை விட 33·2 சதம் அதிகமாக மகசூல் அளிக்கும். இந்த ரகம் 54·4 சதவிகித எண்ணெய் கொடுக்கும் திறன் படைத்தது. கடலையை உடைத்தால் 77·7 சதம் பருப்புக் கொடுக்க வல்லது. இப்புதிய ரகத்தில் 37·5 சதம் புரதச்சத்து அடங்கியுள்ளது.

தமிழ்நாட்டின் எல்லாப் பாகங்களிலும், குறிப்பாகச் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களிலும், மதுரை மாவட்டத்தில் கம்பம் பகுதியிலும் சாகுபடி செய்வதற்கு இந்த ரகம் ஏற்றதென்று வேளாண்மைத்துறையால் பரிந்துரைக்கப்படுகிறது.

## சாகுபடிக் குறிப்புகள்

**வயது :** 120 முதல் 125 நாட்கள்.

**பருவம் :** ஜூலை - ஆகஸ்ட் மாதங்களில் மானாவாரியில் விதைப்பதற்கு ஏற்றது.

**விதையளவு :** ஒரு ஏக்கர் விதைப்பதற்கு 40 முதல் 45 கிலோ நிலக்கடலைப் பருப்பு (உடையாத பருப்பு) தேவைப்படும்.

**விதையுடன் மருந்து கலந்தல் :** ஒரு கிலோ நிலக்கடலைப் பருப்புக்கு 2 கிராம் கரிம பாதரசக் கலவை மருந்து விதம் கலந்து விதைக்க வேண்டும்.

**நிலம் தயாரித்தல் :** இரும்புக் கலப்பையால் நிலத்தை நன்கு உழவும்; ஆழ உழுவதைத் தவிர்க்கவும்.

**உரமிடுதல் :** ஏக்கருக்கு 2½ டன் (5 வண்டி) நன்கு மக்கிய தொழு எரு இட்டு மண்ணுடன் கலக்கச் செய்யவும். கடைசி உழவில் அல்லது விதைப்பதற்கு முன்பு ஏக்கருக்கு 22 கிலோ அமோனியம் சல்பேட், 60 கிலோ சூப்பர் பாஸ்பேட், 24 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தையோ 115 கிலோ 7-ஆம் எண் கலப்பு உரத்தையோ அடியுரமாக இட வேண்டும். மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏக்கருக்கு 7 கிலோ 'போராக்ஸ்' இடுவது நிலக்கடலை மகசூலை அதிகப்படுத்தும்.

**களையெடுத்தல் :** விதைத்து 20 முதல் 22 நாட்களுக்குள் முதலாம் களையும், அதன் பின் 15 முதல் 20 நாட்களில் இரண்டாம் களையும் எடுக்க வேண்டும்.

**பயிர்ப் பாதுகாப்பு :** ஏக்கருக்கு 5 கிலோ பி.எச்.சி. 10 சதத் தூளையும், 5 கிலோ டி.டி.டி. 5 சதத் தூளையும் கலந்து முதல் களை எடுத்த பின்பும், அதன் பின் மூன்று வாரம் கழித்து மறு முறையும் தூவ வேண்டும். சிவப்புக் கம்பளிப் புழு தாக்குவதைத் தடுக்க ஏக்கருக்கு 10 கிலோ பி.எச்.சி. 10 சதத் தூளையும் தூவ வேண்டும். அல்லது 360 மில்லி லிட்டர் பாரத்தியான் மருந்தை 360 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். 'டிக்கா' இலைப் புள்ளி நோய் தாக்குவதைத் தடுக்கத் தாமிரக் கலவை மருந்துகளைத் தெளிக்க வேண்டும்.

**அறுவடை :** நிலக்கடலை நன்கு முதிர்ச்சி அடைந்த பின்பு அறுவடை செய்ய வேண்டும்.

மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு டி.எம்.வி. 10 நிலக்கடலை ரகத்தை மானாவாரியாகச் சாகுபடி செய்தால், நிலக்கடலை உற்பத்தி பெருகிக் கடலை எண்ணெய் விலை குறைவதுடன், உழவர் பெருமக்களின் வருவாயும் பெருகும். எனவே பருவத்திலே டி.எம்.வி. 10 நிலக்கடலை பயிரிடுங்கள் என்று உழவர் பெருமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

# களைகளை அழித்திடுங்கள்...



## மான்ஸான்டோ கம்பெனியாரின் களைக் கொல்லி மருந்தான லாஸ்ஸோவை உபயோகித்து-

பருத்தி விளைச்சலைப் பெருக்குங்கள்.

பூண்டுகள் உரம், சூரிய வெளிச்சம், ஈரம் ஆகியவற்றை உங்கள் பயிர்களிடமிருந்து அபகரிக்கின்றன. மான்ஸான்டோ தயாரிக்கும் லாஸ்ஸோ முளைக்குமுன்னரே களைகளை அழிக்கும். களைகள் வேரூன்றுமுன்னரே லாஸ்ஸோ உபயோகித்து அவைகளை அழித்துவிடுங்கள். பயன்: போஷாக்கின் பூரண பலனையும் பெறுகின்றது உங்கள் பருத்திப் பயிர். விளைச்சல் புதிய வேகம் பெற்று, அதிக லாபத்தை அளிக்கிறது.

50% ஈஸி மற்றும் 10% குறுணைப்பாகவும் கிடைக்கிறது.

களைகளைப் போக்கி விளைச்சலைப் பெருக்குங்கள்




லாஸ்ஸோ.

Monsanto.

மான்ஸான்டோ கெமிகல்ஸ் ஆஃப் இந்தியா பி லிட்


# செய்திகள்!

# செய்திகள்! செய்திகள்!

## ஒற்றைத் தலைவலிக்கு மின்விசைத் தூக்கம்.

ஒற்றைத் தலைவலி காரணமாகவும், களைப்புக் காரணமாகவும் தொல்லைப்படுவோர் பலர் இருக்கின்றனர். இவ்விரு நோய்களையும் வருங்காலத்தில் இலேசான மின் அதிர்ச்சிகளால் தூண்டப்படும் அயர்ந்த தூக்கத்தின் மூலம் குணப்படுத்த முடியும் என்று ருமானிய மருத்துவர் ஒருவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேற்கூறிய இரு நோய்களாலும் அவதிப்பட்டவர்களில் சுமார் 300 பேருக்கு மின் அதிர்ச்சிகளால் சிகிச்சையளித்ததில் பாதிப் பேருக்குமேல் குணமடைந்திருக்கிருர்களாம்.

## கணவர்க்கான கருத்தடை மாத்திரை.

கருத்தடைக்கான பல்வேறு சாதனங்களில் மாத்திரைகள் உட்கொள்வதும் ஒன்று. இன்று பலவகையான கருத்தடை மாத்திரைகள் கடைகளில் விற்பனையாகின்றன. எனினும் இந்த மாத்திரைகள் அனைத்தும் பெண்களுக்காகவே உள்ளன.

தற்போது ஆண்களும் உட்கொள்ளக்கூடிய ஒருவகைக் கருத்தடை மாத்திரை பிரிட்டனில் தயாரிக்கப்பட்டுள்ளது. இலண்டனில் உள்ள பார்த்தோலோமியோ மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் டென்னிஸ் லெவி என்பார் இதனைக் கண்டு பிடித்துள்ளார்.

இந்தக் கருத்தடை மாத்திரையின் பிறவிளைவுகள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார் டாக்டர் லெவி.

எதிலும் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாகி வருகிருர்கள். கருத்தடை மாத்திரையிலும் அந்த நிலையை அவர்களுக்கு அளிக்கலாமே! பிள்ளை வேண்டாம் என்று கருதுகிறபோது கணவன் ஆறு மாதங்களுக்கும் மாறி மாறி மாத்திரை உட்கொள்ளலாம்; இந்தப் பொறுப்பையும் இருவரும் பகிர்ந்துகொண்டால் இல்லறவாழ்வு மேலும் மகிழ்ச்சியுடனும் அமைதியுடனும் இருக்கும் என்று கூறுகிருர்.

## பார்வையற்ருேருக்குக் கண்ணுடி

பார்வையற்றவர்கள் பயனடைய வேண்டுமென்பதற்காக புதுமையான மூக்குக் கண்ணுடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்தக் கண்ணுடியில் ஒரு மெல்லிய கம்பியை (Wire) இணைத்துக் காதில் மாட்டிக்கொண்டால் எதிரே வரும் கார், ஆள், மிருகம், மரம், கட்டடம் ஆகியவைகளை எளிதில் பார்வையற்றவர்கள் புரிந்துகொள்ள முடியும்.

அந்த மூக்குக் கண்ணுடி எதிர்ப்படும் பொருளுக்குஏற்ப— அதாவது கார் வருமானுல் ஒரு சத்தமும், மரம் இருந்தால் வேறு ஒரு சத்தமும் ஆக— ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு வகையான ஒலியை ஏற்படுத்தும். அந்த ஒலி பார்வையற்றவர்களின் காதில் மெல்லிய ஒலியாகக் கேட்கும்.

அந்த மூக்குக் கண்ணுடி அணிந்துகொண்டால் எதிரே என்ன பொருள் இருக்கிறது என்பதைப் பார்வையற்றவர்கள் எளிதில் புரிந்துகொண்டு நடக்க முடியும். அந்தக் கண்ணுடியை இங்கிலாந்து நிபுணர்கள் கண்டுபிடித்து உள்ளார்கள்.

## வானவெளியில் வளர்கிறது செடி!

வானவெளி ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ரஷியா விண்வெளிக்கு அனுப்பியுள்ளது. அந்த நிலையத்தில் 3 வானவெளி வீரர்கள் தங்கியிருந்து ஆராய்ச்சி மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் தங்களுடன் எடுத்துச்சென்ற சில விதைகளை அந்த ஆராய்ச்சி நிலையத்தில் முளைக்க வைத்துள்ளார்கள். வானவெளியின் எடையற்ற தன்மையில் அந்த விதைகள் முளைத்து இலைவிட்டு வளர்ந்து வருகின்றன.

கல்விச் செல்வம் காலத்தால அழியாதது, அந்தச் செல்வம் காட்டிலே — பாறைக்கடியிலே — சுரங்கத்தில் இருக்கும் தங்கக் கட்டிகளாக இருக்கக் கூடாது. அதை எடுத்துப் பயன்படுத்தி, பளபளப்புள்ள நல்ல ஒளியுள்ள தங்கமாக ஆக்கவேண்டும்.



# ஏன் இந்தக் காதல்?

அ. மறைமலையான்

## 2. நெஞ்சம் பதறுதே

மாதவனின் வார்த்தைகள் வழங்கிய அதிர்ச்சியால் தேன்மொழியின் மனம் குலுங்கியதைப் போலவே, அவள் ஓட்டிச் சென்ற அந்த ஒயிலான சிறிய காரும் 'கிரீச்' என்று ஒரு குலுங்குக் குலுங்கி நின்றது.

நெஞ்சம் முழுவதுமே தீப் பிடித்து எரிகின்ற நேரம் அது ; அந்தக் கொடிய உணர்ச்சிக் கொந்தளிப்பிலும் அவளால் எப்படித்தான் திருவல்லிக்கேணி—தீயணைப்புப் படை நிலையத்திற்கு எதிரே சாலையோரமாக—விபத்து ஏதும் விளைந்திடாதவாறு அவ்வளவு நிதானமாகக் காரை நிறுத்த முடிந்தது என்பதுதான் வேடிக்கையிலும் வேடிக்கையாகும்.

" ஏன் நிறுத்திட்டீங்க ? இங்கே ஏதாவது வாங்க வேணுமா ?"

—அருகில் உள்ள ஓர் ' இனிப்புப் பண்டக் கடையை ' எண்ணிய வண்ணமே கேட்டான் மாதவன்.

தேன்மொழிக்கோ திரும்பிப் பார்த்து விடை பகரக்கூட முடியாத அளவுக்குத் தெம்பே இல்லாத சோர்ந்த நிலை; தான் இறுக்கிப் பற்றியிருந்த ' ஸ்டீயரிங் ' ('சுழற்றுவான்') மீதே தன் நெற்றியைப் பதித்து முன்புறமாகச் சாய்ந்துவிட்டாள் அவள்.

" ஏன், தேன்மொழி? என்ன பண்ணுகிறது உடம்புக்கு ?"—

—உரத்த குரலில் பதற்றத்துடனேயே கேட்டான் மாதவன்.

" ஒண்ணும் இல்லே, தலையைச் சுற்றிக் கொண்டு மயக்கம் வரும்போல் இருக்கிறது."

மிக மெலிவாக மிதந்து வந்தன அவளது சொற்கள்.

" வெறும் வயிற்றோடு கிளம்பி இருப்பீங்க ; இந்தக் காலை வெயிலும் பித்தத்தைத்தான் கொடுக்கும்; பசியும் பித்தமும் சேர்ந்து விட்டால் பிறகு மயக்கம் வருவதற்குக் கேட்க வேணுமா?"

—தன்னுடைய சித்த மருத்துவ ஆராய்ச்சித் தெளிவுரைகளைச் (?) சிந்தியவாறே, மாதவன் காரை விட்டுக் கீழே இறங்கினான் ; அவள் அருகே விரைந்து சென்று,

" சரி, பின்னால் போய்ப் படுத்துக் கொள்ளுங்கள் நான் ஓட்டுகிறேன். " — என்றான்.

தன்னால் எழுந்திருக்கவே முடியாதோ என்று கூடத் தோன்றியது தேன் மொழிக்கு. தன் பக்கத்தில் கிடக்கும் மாலைகளையும் மல்லிகைச் சரத்தையும் பின் புறம் தூக்கிப் போட்டு விட்டு முன்னிருக்கையிலேயே சற்று நகர்ந்துதான் உட்காரலாமா என்றும் அவள் எண்ணினாள்.

ஆனால், அடுத்த கணமே ..

அந்த நினைவுக் கிளை அவளது மனத் தருவிலிருந்து முறிந்து விழுந்தது.

சில நிமிடங்களுக்கு முன்னர் மாதவனின் வாயிலிருந்து புறப்பட்டு வந்த கூரான ஈட்டிகளை—அவை துளைத்த துளைப்பை—அவை கொடுத்த தாங்கொணாத வலியை—அதற்குள் அவளால் மறந்து விட முடியுமா ? இந்தத் ' தலைச் சுற்றலே ' அவனுடைய சொல்லம்புகளுக்குப் பிறந்த 'தறுதலைப் பிள்ளை' தானே ?





பல்லைக் கடித்துக் கொண்டு, காரின் கதவைத் திறந்து, மெள்ள எழுந்து நின்ற தேன்மொழிக்கு ஒரேயடியாகத் தள்ளாடிற்று; மறு நொடியிலேயே தன் எதிரே நிற்கும் மாதவன் மீதே சரிந்து விழுந்தது அவளது கொடியுடல். அதனை ஏந்திப் பிடித்துக்கொண்ட அவன் கைப்பற்றுதலாக அவளைப் பின்னிருக்கைக்கு இட்டுச் சென்று சற்று முடங்கியவாறே படுக்க வைத்தான். அவளது காதருகே தனது முகத்தைத் தாழ்த்தி,

"பசிக் களைப்பாக இருக்கும் போல் தெரிகிறதே! முதலில் ஓர் ஓட்டலுக்குப் போய் ஏதாவது சாப்பிட்டு விட்டுப் பிறகு போகலாமா?"—என்று கேட்டான்.

"வேண்டாம்."

—என்று முணகினாள் தேன்மொழி.

"ஒரு சோடாவாவது வாங்கி வரட்டுமா?"

"ஊ....கூம்......"

மாதவன் பிறகு முன்னிருக்கைக்குச் சென்றமர்ந்து காரைக் கிளப்பினான்.

"ஆமா, வண்டியை இப்போ எங்கே திருப்புறீங்க?"

—உயிரைக் கொடுத்துக் கேட்டாள் தேன்மொழி.

"உங்கள் வீட்டிற்குத்தான்."

"அங்கே ஏங்க இப்போ? முதலில் என் தோழி துளசி வீட்டுக்குப் போகணுமே?"

"உங்கள் உடம்பு இருக்கிற நிலையிலே நீங்கள் இன்றைக்கு எங்குமே போகக் கூடாது; வீட்டிலே நன்றாக ஓய்வு எடுத்துக் கொள்ளணும்; டாக்டரையும் கூட்டி வந்து காட்டணும்."

மாதவன், அதற்குமேல் அவளது கட்டளை எதற்கும் காத்திருக்கவில்லை.

கார், சித்தார்த்தர் தெருவை நோக்கி மிக விரைவாகப் பறக்கலுற்றது.

முன்னிருக்கையில் கிடந்த மாலைகளும், மல்லிகைச் சரமுமோ....திருமண வயதையெல்லாம் தாண்டிவிட்ட' பேரிளம் பெண்'களைப் போல மெருகு மங்கி உலர்ந்துகொண்டிருந்தன.

* * *

'சென்னையிலே சித்தார்த்தர் தெரு' என்று உண்மையிலேயே ஒரு தெரு இருக்கிறதோ இல்லையோ நமக்குத் தெரியாது; ஆனால், நம்முடைய தேன்மொழி வாழும் மாபெரும் மாளிகை இருப்பது என்னவோ 'சித்தார்த்தர் தெருவில்'தான்!

அங்கே ஓட்டைக் குடிசைகளையோ, ஒட்டிய வயிறுகளையோ அழுக்கு உடைகளையோ ஆறாய்ப் பெருகும் வேர்வைத் துளிகளையோ நாம் காணவே முடியாது. பளபளப்பான மாடிக் கட்டடங்கள்—பசுமையான பூஞ்சோலைகள்,—பகட்டான ஆடைகள்—படகு போன்ற கார்கள்—இவற்றையே அங்கு நாம் பார்க்கலாம்.

'சித்தார்த்தர் எல்லாவற்றையும் துறந்தவராயிற்றே! அவர் பெயரில் உள்ள தெருவில் வாழ்கிறவர்களுக்கு அந்தத் 'தந்நல மறுப்பு' இல்லையா? அவர்களுக்கு அப்படியொரு சிறப்பான செல்வச் செழிப்பு எப்படித்தான் ஏற்பட்டது?' என்று சிலர் வியப்போடு வினவலாம். இதற்கு விடை அளிப்பது அப்படியொன்றும் கடினமான செயல் இல்லை. கள்ளச் சந்தை, கலப்படம், கொள்ளை இலாபம், குடி கெடுத்தல்—முதலான எல்லா வகையான இழி செயல்களும் ஒன்றாய்க் கூடித் தங்களை வாழ வைக்குமாறு அங்குள்ள 'பெரிய மனிதர்களை' வேண்டிக்கொள்ளும்பொழுது, பாவம் அவர்களால்தான் அந்த முறையீட்டை இரக்கம் இல்லாமல் எப்படிப் புறக்கணிக்க முடியும்? 'சித்தார்த்தர் தெரு'விலே செல்வங் கொழித்ததற்கு இதுதான் அடிப்படைக் காரணம்.

அந்தப் 'பெருந்தகையார்'களிலேயும் பெரும் புள்ளியாகத் திகழ்ந்தவர் பேரின்பமுத்து என்பவரே; அவர்தாம் நம்முடைய தேன்மொழியின் அருமைத் தந்தை ஆவார்.

தம்முடைய இருபதாவது வயதில் தாம் பிறந்த சிறிய கிராமத்தில் சாதாரண 'மாட்டுத் தரகுத் தொழிலில்தான்' அவருடைய வளமான வாழ்க்கை தொடங்கிற்று. அந்தத் 'தரகு வேலை' பிறகு ஒவ்வொன்றுக்காகத் தாவி நெல்மண்டிக்காரராக, அரிசி ஆலை சொந்தக்காரராக, நெடுஞ்சாலைக் 'காண்டிராக்டராக' கட்டடங்களுக்குத் தேவையான இரும்புச் சாமான்கள் விற்பனையாளராக, பின்னர் அவற்றையே ஓரளவு உற்பத்தி செய்பவராக, அவரை உயர்த்தி விட்டது.

சென்னை மாநகரிலே இப்போது அவர் செய்யாத தொழில் இல்லை; திரட்டாத சொத்தும் இல்லை; சுவைக்காத பொருளும் இல்லை; துய்க்காத இன்பமும் இல்லை.

ஆம், பேரின்பமுத்து பெரும் பெரும் இன்பங்களில் எல்லாம் முத்துக் குளிப்பவராகத்தான் மாறிவிட்டார். அதே சமயம், ஆன்மீக வாதிகளின் அகராதியில் வருமே 'பேரின்பம்' அதனை அடைவதற்கும் தம்மைத் தவிர வேறு 'சமயக் கொழுந்து' இல்லை என்கிற முறையிலே தம்மை விளம்பரப்படுத்திக் கொள்வதிலும் அவருக்கு நிகர் அவரேதான்!

தம்முடைய இரண்டடுக்கு மாளிகையைச் சுற்றிலும் தென்னை மரங்களையும், பன்னீர் மரங்களையும் எழுப்பும்பொழுதே சுற்றுச் சுவரை ஒட்டினாற் போல ஒரு பிள்ளையார் கோவிலையும் அவர் கட்டி வைக்கத் தவறவில்லை. அந்தப் பிரம்மச்சாரித் தெய்வத்தைக் கையெடுத்துக் கும்பிடாமல் எந்தக் காரியத்திலேயும் ஈடுபடுவதும் இல்லை.

பிள்ளையார் பெருந்தன்மையானவர்!

அவருடைய இரக்கத்தினால்தான் — அருள்பாலிப்பினால்தான் — தமக்கு அடுக்கடுக்காகச் செல்வங்கள் சேர்ந்து வருவதாகப் பேரின்பமுத்து எல்லாரிடமும் பேசி மகிழ்வார்; பெருமையும் அடித்துக்கொள்வார்!

சில சமயங்களில் மட்டும் 'இவற்றையெல்லாம் அனுபவிக்க நம்முடைய மனைவி இல்லாமல் போய்விட்டாளே!' என்கிற எண்ணம் அவரிடம் தலைநீட்டுவதுண்டு.

ஆனால் அவள் இப்போது உயிரோடு இருந்திருந்தால் தமது இச்சைப்படியெல்லாம் இப்போதைப் போல அவர் சிற்றின்பங்களிலே திளைத்துக் களித்திருக்க முடியுமா? இந்தக் கண்ணறாவிக் காட்சிகளையெல்லாம் காணவேண்டாம் என்று கருதித்தானோ என்னவோ இரண்டு ஆண் குழந்தைகளையும் மூன்றாவதாக ஒரு பெண்ணையும் பெற்றுப் போட்டுவிட்டு அவள் கண்ணை மூடிக்கொண்டு மண்ணுக்குள்ளே போய்விட்டாள் மகிழ்ச்சியினைத் தேடி! அவளைத் தொடர்ந்து இரண்டு ஆண்பிள்ளைகளும் அடுத்தடுத்துச் சாவினைத் தழுவிக்கொள்ளவே தேன்மொழி மட்டுமே தேங்கி நின்றாள்.



உறவினர்கள் சிலர் இரண்டாந் தாரமாக இன்னொருத்தியைக் கட்டிக்கொள்ளுமாறு பேரின்பமுத்துவை வற்புறுத்தினர்; அவருடைய சொத்துக்களை அனுபவிக்க ஆண் வாரிசு—வழித்தோன்றல்—இல்லாமல் போய் விடுமே என்கிற கவலை அவர்களுக்கு. ஆனால் அவரோ, "வருகின்றவள் தேன்மொழியைக் கண்கலங்குமாறு விட்டுவிட்டால் என்ன செய்வது? அதனால்தான் நான் மறுபடியும் திருமணம் செய்து கொள்வதாக இல்லை"—என்று அவர்களுடைய வாய்க்கெல்லாம் பூட்டுப்போட்டு விட்டார்.

உண்மையிலேயே அவர் மறுமணம் புரிந்துகொள்ள மனம் வைக்காததற்குக் காரணம் தம்முடைய ஒரே மகளின் மீதுள்ள ஒப்பற்ற பாசந்தானா? அல்லது இனிமேலாவது பிள்ளையாரின் வழியைப் பின்பற்றிப் 'பிரம்மசரிய விரதத்தைக் கடைப் பிடிப்போம்' என்கிற பக்தி மேலீடா?

இரண்டும் இல்லை.

மனைவி மங்களத்தோடு அவர் வாழ்ந்த வாழ்க்கை இருக்கிறதே அது அவர் எதிர்பார்த்தவாறு இனிப்பாக அமையவில்லை; கசப்பாகவே முடிந்தது. கசப்பு என்றால் சாதாரணக் கசப்பா?

எலுமிச்சம் விதையைக் கடித்து விட்டால் அது வாயில் மட்டுமே கசக்கும்; கண்டங்கத்தரிக்காயை மென்று பார்த்தாலோ அந்தக் கசப்பு தொண்டையோடுகூட நிற்காமல், வயிறுவரை சென்று குமட்டாதா?

மங்களத்தின் முன்கோபமும் முரட்டுப் போக்கும், குதர்க்க வாதமும் குத்தல் பேச்சும், ஆணவமும், அடக்குமுறையும் பேரின்பத்தைப் பெண்ணினத்தின்மீதே வெறுப்புக்கொள்ளத் தூண்டின. அந்த அனுபவங்களின் விளைவுகளை அவரால் எளிதில் மறந்து விட முடியவில்லை. மனைவி என்கிற பிணைப்பே ஆடவனின் கழுத்தை நெரித்துக் கொல்லும் சுருக்குக் கயிறாகவே அவருக்குத் தோன்றியது. அதேபோல, கணவன் என்கிற பிணைப்பும் எத்தனையோ பெண்களுக்குச் சுளுக்கியாகச் சித்திரவதை செய்யக்



---

என்னப்பா! தோசை ஒரே மாவா இருக்குது!

மாவா, ரவாவா? எது வேணும்னு கேட்டப்போ, மா தோசையே கொண்டு வான்னு நீங்கதானே சொன்னீங்க!



---

கோயம்புத்தூர் லெட்டருக்கு என்ன பதில் எழுதுறதுங்க?

"உங்க கடுதாசி கிடைச்சுது! நீங்க சொல்ற விலைக்கு எங்க சரக்குகளை அனுப்ப முடியாது! உங்களுக்கு சந்தேகம் இருந்தா இன்னும் நாலஞ்சு இடத்திலே விசாரிச்சுக்குங்க! கொள்முதல் விலையே ரொம்ப அதிகமா இருக்கு" அப்படின்னு ஒருவரியிலே எழுதிப்போடுய்யா.



கூடும் என்றெல்லாம் அவர் சிந்திக்கவில்லை. அப்படிச் சிந்தித்துத் தெளிவடைவதாலோ, சகித்துக் கொள்வதாலோ அவருக்கு என்ன இலாபம்தான் ஏற்படப் போகிறது? அவரைப் பொறுத்தவரை மீண்டும் ஒருமுறை அவர் 'மனைவி' என்கிற விலங்குக்குள்ளே மாட்டிக் கொண்டு திணற விரும்பவில்லை. அதோடு கணவன் என்கிற கூண்டுக்குள் மாட்டிக் கொண்டுவிட்ட ஆண் பிள்ளை தன் இச்சைப்படியெல்லாம் எல்லாக் கனிகளையுமே கொத்தித் தின்னத்தான் இயலுமா? அதனை 'அறம்' என்றுதான் இன்றைய உலகம் ஏற்றுக்கொள்ளுமா?

எனவேதான், தமக்கும் ஒரு பெண் இருக்கிறாள் என்கிற பொறுப்புக்கூட இல்லாமல் பூவுக்குப் பூ தாவும் பொன்வண்டாகத் தம் உடற்பசிக்குத் தேவையான உணவு வகைகளைத் தேடி அவர் அலையலானார்.

பேரின்பமுத்துவின் அகவாழ்வுதான் இப்படிச் சிதிலமடைந்து சீர்குலைந்ததே தவிர, அவருடைய புறவாழ்வோ—தொழில் துறைகளில் அவருக்குள்ள ஈடுபாடோ—கட்டுக்கோப்பு, உறுதிப்பாடு, ஒழுங்குமுறை முதலானவற்றை இம்மியும் மீறாமல் ஓங்கி வளர்ந்த வண்ணம் இருந்தது. கள்ளக் கடத்தல் புரிந்தாலும், கொள்ளை இலாபம் அடித்தாலும் அந்த வட்டத்திலும் தாம் ஒரு நாணயம் உள்ளவர்—நம்பிக்கைக்கு உரியவர்—என்கிற நற்பெயரை அவர் எப்படியோ எடுத்து வைத்திருந்தார்.

அவருடைய தொழில் துறைகள் தொடர்பான நிறுவனங்கள் சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளிலே சிதறிக் கிடந்தன; எனினும் அவற்றையெல்லாம் ஒருங்கிணைக்கக்கூடிய செயலகம் ஒன்றையும் அவர் ஏற்படுத்தியிருந்தார். அதிலே ஏறத்தாழ நூறு பேர்களாவது அலுவல் பார்ப்பார்கள். அவர்களில் ஒருவனே நம் மாதவன்.

உண்மையாகவும், சுறுசுறுப்பாகவும் உழைக்கக்கூடிய அவனைப் பேரின்பமுத்துவுக்கு எடுத்த எடுப்பிலேயே பிடித்துப்போனதில் வியப்பேதும் இல்லை.

தமது நிறுவனம் ஒன்றைப் பார்வையிடும் பொருட்டு, வாசலில் தமக்காகக் காத்து நிற்கும் 'பிளைமவுத்' காரிலே ஏறப்போன பேரின்பமுத்து தம்முடைய மகளுக்கென்று தாம் ஒதுக்கிய ஃபியட் வண்டியை மாதவன் ஓட்டிக் கொண்டு வருவதைக் கண்டதும் அப்படியே திகைப்பிலே ஆழ்ந்துபோனார்.

சுற்றுச் சுவரைக் கடந்து உள்ளே வந்து ஓர் ஒதுக்குப் புறமாகக் காரை நிறுத்தினான் மாதவன்; பிறகு கீழே இறங்கிப் பின்னிருக்கைக்குரிய கதவினைத் திறந்து அவன் உள்ளே எட்டிப் பார்த்ததுமே, தேன்மொழிக்கு ஏதோ தெரியவில்லை என்று திடமாகப் பட்டுவிட்டது பேரின்பமுத்துவுக்கு.

அவருடைய திகைப்பு அடுத்த கணமே திடுக்கிடாகவும் மாறிவிட்டது.

''ஏன், தேன்மொழிக்கு என்ன ஆச்சு?''

—என்று கேட்டவாறே அவர் அந்த ஃபியட் வண்டியை நோக்கி நடந்தார்.

அவள் காரின் உள்ளே மயங்கிக் கிடந்த அலங்கோல நிலையும், அவளது கலைந்த கேசமும், நீலம் பாரித்த வெள்ளை விழிகளும் அவரை மேலும் பதற வைத்தன.

(தொடரும்)


டாக்டர் பட்டம் பெற்ற தமிழக முதல்வர்
தஞ்சை கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு
எங்கள் வாழ்த்துக்கள் !

அகில இந்திய வர்த்தக சுற்றுலா

கலைப் பொருட்காட்சி

நாகை அவுரித் திடலில் 25–7–1971 முதல் தமிழ்நாட்டின் தலைவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தினசரியும் தமிழ்நாட்டின் பிரபல சினிமா நட்சத்திரங்களின்
நாடகங்கள், நடனங்கள், மெல்லிசைக் கச்சேரிகள்
மற்றும் ஏராளமான கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன !

ஸ்டால்கள் தேவைப்பட்டோர் விரைந்து வருக !

G. நவாப்ஜீ,
அமைப்பாளர், "காதரியா என்டர் பிரைசஸ்,"
நாகைப்பட்டினம்.

போன் : 328.

*** பல லட்சக்கணக்கான மக்கள் கூடும் இம்மாதிரிப் பொருட்காட்சிகளில் தமிழக அரசினர் சிறு சேமிப்பு, குடும்பக் கட்டுப்பாடு, போலீஸ் ஆகிய ஸ்டால்களை விசேஷமாக அமைத்து உதவ வேண்டுகிறோம்.

—பொருட்காட்சிக் குழுவினர்.

அரசன்.


# தரை உலகத் தாரகை



வீட்டில் காபிப் பொடியை வடிகட்டி டிக்காசனைக் கலந்தபின் காபிப்பொடியை வீசி எறிகிறோம். அழுகிய தேங்காய் என்றால் முகத்தைச் சுழித்துத் தூர வீசி எறிகிறோம். ஆனால் திருமதி சாந்தா நாராயணனிடம் இவை கிடைத்தால் வடிகட்டிய காபிப் பொடி வண்ணக் கோலத்திற்கான (ரங்கோலி) கலவைப் பொடியாகிவிடும். அழுகிய தேங்காயைத் துருவி சாயம் கலந்து, காய வைத்து சமுக்காளக் கோலம் வரைந்து விடுவார் இந்த சாந்தா நாராயணன்.

திரை உலகத் தாரகை பலரைத் திரைப்படங்களில் கண்டு ரசித்திருப்பீர்கள். அதே போன்று தரை உலகத் தாரகை திருமதி சாந்தா நாராயணன், சாதாரணமாக உள்ள எந்தத் தரையையும் தனது கலைத் திறனால் வண்ண வண்ணக் கோலம் வரைந்து அதனைக் கலைக் கூடமாக மாற்றி விடக்கூடியவர்.

சாந்தா நாராயணன் வண்ணத் தூள்களைக் கொண்டு தரையில் சமக்காளம் வரைந்தால் பார்ப்பவர்கள் அது சமுக்காளம் என்றே நினைப்பார்களே ஒழிய, அது வெறும் வண்ணப்பொடி என்று கருதமாட்டார்கள். அவ்வளவு தத்ரூபமாக இருக்கும்.

ஒருமுறை கோவையில் இவர் போட்டிருந்த சமுக்காளக் கோலத்தைப் பார்த்த ஒரு மூதாட்டி அது உண்மையிலேயே சமுக்காளம் என நினைத்துச் சுருட்டப் போய் விட்டாராம்.

15 ஆண்டுகளாக இக்கலையில் ஈடுபட்டுள்ள திருமதி சாந்தா வண்ணப் பொடிகளால் மட்டுமல்ல; தானியங்களாலும், பூக்களாலும் கோலம் போடுவார். நிலத்தில் மட்டுமல்ல; நீர் மேலும் கோலம் போடத் தெரியும் திருமதி சாந்தாவுக்கு.

பரிசுச் சீட்டு துவக்க விழாவின் போது இராசாசி மண்டபத்தில் இவர் நீர்க்கோலத்தில் வரவேற்பு (நல்வரவு) எழுதி இருந்ததைப் பார்த்து அண்ணாவும் முன்னாள் ஆளுநரும் பாராட்டினார்கள்.

வண்ணப் பொடியால் உருவாகிய "அண்ணா"



''ஒருமுறை அதிசய மனிதர் ஜி. டி. நாயுடு இந்த நீர்க்கோலத்தைப் பார்த்து விட்டு அதிசயப்பட்டார். 'தண்ணீரில் எப்படிக் கோலம் போடுகிறாய்? அந்த ரகசியத்தைச் சொல்! இல்லாவிட்டால் இன்று எனக்குத் தூக்கமே வராது' என்று சொன்னார்'' என்று பூரிப்புடன் தெரிவிக்கிறார் திருமதி சாந்தா.

திருமதி சாந்தாவின் கலைக் குழுவில் மற்றொரு அதிசயம். இவருடன் பணியாற்றும் இரு இளைஞர்களான திரு வி. பி. கிருஷ்ணமூர்த்தியும் திரு. துளசியும் பொறியியல் பட்டதாரிகள்.

திருமதி சாந்தா, சமுக்காளம் போடுவதிலும் நீர்க்கோலமிடுவதிலும் வல்லவரானால், அரசியல் தலைவர் படங்களை அப்படியே வரையக்கூடியவர் பி.எஸ்ஸி., பி.இ., பட்டதாரியான கிருஷ்ணமூர்த்தி. சமீபத்தில் இவர்கள் வரைந்த வண்ணக் கோலங்கள் சென்னை என்.கே.டி. கலா மண்டபத்தில் இடம் பெற்றிருந்தன. அதில் அரசியல் தலைவர்களையும், திரைப்படக் கலைஞர்களையும் அழகாக வண்ணக் கலவைகளால் உருவாக்கியிருந்தார். அண்ணாவும், கலைஞரும், நாவலரும், புரட்சி நடிகரும் அவரது கைவண்ணத்தால் அங்கு அழகு ஓவியமாகக் காட்சி தந்தனர்.

அரசியல் தலைவர் ஒருவர் படத்தினை இக்கோலத்தில் வரைய ஒரு நாள் ஆகிறது. வண்ணப் பொடிகளுக்கு ஆகும் செலவு சுமார் 20 ரூபாய்.

'ரங்கோலி கலாவல்லி' என்ற பட்டம் பெற்ற திருமதி சாந்தா, விவேகானந்தர் இல்லம் பகுதியில் முருகப்ப முதலித் தெருவிலுள்ள தனது இல்லத்தில் 30 மாணவ மாணவிகளுக்கு வண்ணக் கோலம் கற்றுத் தருகிறார். அதற்கு அவர் வாங்கும் கூலி வண்ணப் பொடிகளுக்கு ஆகும் செலவு மட்டுமே!

இவர் போடும் மற்றொருவகைக் கோலத்தின் பெயர் இசைக் கோலம். பாடிக்கொண்டே கோலம் போட வேண்டும். பாட்டு முடிந்ததும் கோலமும் முடிவடைய வேண்டும். இதுவே இசைக் கோலம்.




கண்டவுடன் ஆர்வம் பொங்க என்னை வரவேற்கும் என் அருமைச் செல்வியைக் காணவில்லை.

பார்த்தவுடன் ஓடிவந்து மார்புறத் தழுவிக் கொள்ளும் மொழி அறியா மழலைச் செல்வத்தைக் காணவில்லை !

அலுவலகத்திலிருந்து வருவதற்குச் சிறிது நேரம் தாமதமாகி விட்டால் கூட, வீட்டு வாசலிலேயே கால் கடுக்க நின்று கனிவுடன் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் என் அருமைக் கண்மணியை—என் வளர்ப்புப் பெண்ணைக் காணவில்லை !

நான்கு நாட்களாகிவிட்டன. எங்கெங்கோ தேடிப் பார்த்து விட்டேன். காவல் நிலயத்திலும் தகவல் சொல்லி வைத்து விட்டேன். ஏமாற்றம் தான் பதிலாகக் கிடைத்தது எனக்கு.

என் சிந்தனை பின் நோக்கிச் சென்றது !

* * *

மூன்றாண்டுகளுக்கு முன்பு ஒரு நாள்....! குழந்தையில்லாத எனது மனக்குறை அறிந்து, எனது நண்பரொருவர் அந்தப் பெண் குழந்தையை என்னிடம் தந்தார். பிறந்தவுடனேயே தன் தாயை விழுங்கிய அந்தக் குழந்தையைத் தன் வீட்டில் வைத்திருக்க மனமில்லாமல்தான் என்னிடம் ஒப்படைத்தார். நான் ஆர்வத்துடனும், அதிகப் பரிவுடனும் அந்தக் குழந்தையை என் வீட்டிற்கு அழைத்து வந்தேன்.

குழந்தையைக் கண்டவுடன் என் மனைவியின் உள்ளம் உவகைக் கடலில் மிதந்து விடும் என்ற நம்பிக்கையில்தான் வந்தேன். ஆனல் ......! அவள் கண்களிலே மகிழ்ச்சிக்குப் பதிலாக மிரட்சியே தெரிந்தது.

'' இது ...... '' என்று தொடங்கினாள்.

'' தாயை இழந்த சேய்; காப்பாற்றுவதாக வாக்குக் கொடுத்திருக்கிறேன் !'' நான் அமைதியாகச் சொன்னேன் .

'' நமக்கு எதற்கு?''—அவள் கேட்டாள்.

'' நமக்குக் குழந்தையில்லை அல்லவா ? அதற்காக ''—நான் பதிலிறுத்தேன்.

'' இன்று இல்லை என்றால் நாளை பிறக்காது என்று நினைத்துவிட்டீர்களா?''—கோபத்தைக் கக்கினாள்.

'' மணம் முடிந்து ஐந்தாண்டுகளாக உனக்குக் குழந்தை இல்லை; இனிப் பிறக்கும் என்ற நம்பிக்கை எனக்கில்லை !''—உறுதியுடன் சொன்னேன்.

இதைச் சொன்னதுதான் தாமதம் அவளது சிவந்த வதனம் மேலும் சிவந்து விட்டது. கண், நீரைக் கொட்டிவிட்டது. அன்று முதல் என் செல்வியின்மீது அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. செல்வியின்மீது ஓராயிரம் குற்றச்சாட்டுகளைத் தயாரித்து ஒப்புவிப்பாள். நான் அனைத்தையும் வலது காது வழியாக வாங்கி இடது காது வழியாக விட்டுவிடுவேன்.

என் இதயத்தில் இடம் பெற்றுவிட்ட என் அருமைச் செல்வியை எவராலும் பிரிக்க முடியவில்லை. உண்ணும்போதும், உறங்கும் போதும் என் அருகிலேயே இருந்து வந்தாள். அப்படி இருந்தவள் என்னைப் பிரிந்து எங்கோ சென்றுவிட்டதை எண்ணும்போது என் கண்கள் கலங்க ஆரம்பித்துவிட்டன.

கடந்த நான்கு நாட்களாக நான் ஆகாரம் கூட உண்ணவில்லை. ஆனல் என் மனைவியின் உள்ளமோ மகிழ்ச்சிக் கடலில் துள்ளிக் குதித்தது. என் மனைவியே என் வளர்ப்பு மகளை விரட்டி விட்டாளோ என்ற ஐயமே எனக்கு ஏற்பட்டது.

செல்வியைப் பற்றி அவளிடம் கேட்ட கேள்விகளுக்கு அவள் சரியாக விடையளிக்கவில்லை ; அவளது மௌனம் அவள் செய்த குற்றத்தை எதிரொலிப்பதாகவே எனக்குப் பட்டது. அதற்குமேல் எனக்குப் பொறுமை இல்லை. என் கரங்கள் அவளது முதுகில் விளையாடத் தொடங்கின. அந்த நேரத்தில் வீட்டின் வெளிக்கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். என்ன ஆச்சரியம் ! காணமல்போன என் வளர்ப்புப் பெண்—செல்வி என்னும் பெயருடையாள்—அன்பு ததும்ப என்னை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தாள், ''லொள் லொள்'' என்ற இசை முழக்கத்துடன்.

ஆம் ! என் நண்பர் கொடுத்த அன்புப் பரிசு—என் வளர்ப்புப் பெண்—ஆறறிவு படைத்த மனிதப் பிறவி அல்ல ! நன்றி உணர்வுக்குப் பெயர்போன நாலுகால் பிறவி—நாய்!



"முன்னேறி வரும் நமது நாட்டில், குழந்தைகளுக்குத் தேவையான அளவு புரதச் சத்து (Protein) மிகுந்த உணவுகளைக் கொடுத்து வளர்க்கா விட்டால், இன்னும் 20 ஆண்டுகளில் அறிவு வளர்ச்சி குன்றிய ஓர் மக்கள் சமுதாயமே தோன்றி விடும்" என்று புது டெல்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் இயக்குநர் டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் அவர்கள் எச்சரித்துள்ளார்.

" மனித சமுதாயத்தின் அறிவு வளர்ச்சி குன்றிப் போவதால் ஏற்படும் தீய விளைவுகளைத் தவிர்க்கப் புரதச் சத்து மிக்க பருப்பு வகைகளை அதிக அளவில் உற்பத்தி [செய்ய உழவர் பெருமக்கள் முன்வர வேண்டும் ;




அதற்கு அரசாங்கம் உதவ வேண்டும்'' என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மனித இனத்தின் மூளை வளர்ச்சிக்குப் பருப்பு வகைகளில் உள்ள புரதச் சத்து மிகவும் இன்றியமையாதது என்பது புதிய கண்டுபிடிப்பாகும்.

குழந்தைக்கு 2 வயது ஆகும் பொழுதே, அதன் மூளை உறுப்புகளின் பெரும் பாகம் முழு வளர்ச்சி பெற்று விடுகிறது. குழந்தையினுடைய மூளை பிறந்த 4 ஆண்டுகளில் 80 முதல் 90 சதவீதம் வளர்ச்சியடைந்து வருகிறது. குழந்தைக்கு 7 வயது ஆகும்பொழுது மூளையின் உறுப்புகள் முழு வடிவம் பெற்று விடுகின்றன. அதன் பின் மூளை வளருவதில்லை. எனவே, குழந்தைகளுக்குத் தேவையான அளவு புரதச் சத்தை அளிக்காவிட்டால் குழந்தைகளின் மூளை தகுந்த அளவு வளர்ச்சியின்றிப் போய் விடும். அதனால் குழந்தைகளின் நினைவாற்றல், புத்திக் கூர்மை, கற்பனை ஆற்றல் ஆகிய அனைத்தும் மந்தப்பட்டு விடும் என்று மருத்துவ வல்லுநர்கள் தெளிவு படுத்தியுள்ளார்கள். ஆகவே, குழந்தைகளுக்குப் புரதச் சத்து நிறைந்த பருப்புச் சோறு கொடுத்து வளர்க்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

அண்மையில் ரோம் நகரில் கூடிய உணவு வேளாண்மைக் கழகத்தின் (Food and Agriculture Organisation) புரதச் சத்து அறிவுரைக் குழு, முன்னேறி வரும் நாடுகளில் உள்ள 5 வயதுக்குக் குறைந்த குழந்தைகளில் 20 சதவிகிதக் குழந்தைகள் புரதச் சத்துக் குறைவினால் பாதிக்கப் பட்டுள்ளதாகவும், அதில் 3 சத விகிதக் குழந்தைகள் —அதாவது 1,20,00,000 குழந்தைகள் கடுமையான புரதச் சத்துப் பற்றுக் குறைவின் காரணமாக இறந்துவிடும் நிலையில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

பொதுவாக முன்னேறிவரும் நாடுகளில் சக்தி (கலோரி) பற்றுக் குறை நிலவி வருகிறது. எனவே, முன்னேறிவரும் நாடுகளிலெல்லாம் கிடைக்கும் புரதச் சத்தில் ஒரு பகுதி, சக்தியை வழங்குவதற்காகவே பயன்படுத்தப் படுவதால், தேவையான அளவு புரதச் சத்தும் கிடைப்பதில்லை.

புரதச்சத்துப் பற்றுக்குறையின் காரணமாக மூளை வளர்ச்சியின்மை, சாதாரண நோய தாக்குதலையும் தாங்கிக் கொள்ளாத தன்மை, இரைப்பை இருதய முரண்பாடுகள், தசைகளின் வளர்ச்சிக் குறைவு இயக்கம் குன்றல் போன்றவை ஏற்படுகின்றன. இதனால் குழந்தைகளின் சாவு பெருகி வருகிறது.

புரதச்சத்தை அதிக அளவு உட்கொண்டால், பிணிகளிலிருந்து விரைவில் குணமடைய முடியும் என்பதும் தெளிவாகியுள்ளது.

இன்றைய குழந்தைகள் எதிர் காலத்தில் விஞ்ஞான வித்தகர்களாகவும், அறிவிற் சிறந்த நிபுணர்களாகவும், மருத்துவ வல்லுநர்களாகவும். பொறியியற் கலைஞர்களாகவும், அரசியல்—பொருளாதார மேதைகளாகவும், நாடு காக்கும் வல்லுநர்களாகவும், நல்ல குடிமக்களாகவும் விளங்க வேண்டுமானால்; அவர்களுக்குத் தேவையான புரதச் சத்து மிகுந்த பருப்புக்கலந்த உணவுகளை அளிக்கவேண்டியது நமது கடமையாகும்.

புரதச்சத்து குழந்தைகளுக்கு மட்டுமே முக்கியமானது என்று எண்ணிவிடக் கூடாது. வயது வந்தவர்களுக்கும் புரதச்சத்து மிகவும் இன்றியமையாததாகும். எனவே புரதச்சத்துப் பற்றுக் குறையை நீக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

பொதுவாக, பருப்பு வகைகளில் புரதச்சத்து மிகுந்து உள்ளது. ஒவ்வொருவரும் சாப்பிடும் பருப்பு வகைகளின் அளவை உயர்த்தினால், இந்தியாவைப் பொறுத்த வரையில் புரதச்சத்துப் பற்றுக்குறையை அகற்றி விடமுடியும். ஆனால் தொடர்ந்து மக்கள் தொகை பெருகி வருவதால், இந்தியாவில் தனிப்பட்டவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பருப்பின் அளவு ஆண்டிற்கு ஆண்டு குறைந்து வருகிறது. 1959-ஆம் ஆண்டில் இந்தியாவில் ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்குச் சராசரியாக 74·7 கிராம் பருப்புகள் கிடைத்துள்ளன. ஆனால் இப்பொழுது கிடைப்பது 41·8 கிராம் பருப்புதான் என்பதை நினைக்கும்பொழுது, இந்தியாவில் பருப்புப் பற்றுக்குறை வளர்ந்து வருகிறது என்பது புலனாகிறது.

வயது வந்த ஒவ்வொருவரும் நாளொன்றுக்கு 85 கிராம் (3 அவுன்சு) பருப்பு சாப்பிட வேண்டும் என்று ஊட்டச்சத்து வல்லுநர்கள் (Nutrition Experts) வற்புறுத்துகிறார்கள். ஆனால் இந்தியாவில் ஒவ்வொருவருக்கும் இன்றைய நிலையில், தேவையில் பாதியளவு பருப்புக் கூடக் கிடைக்கவில்லை என்பது மேற்கண்ட புள்ளி விவரங்களால் தெரிய வருகிறது.




## பருப்பு உற்பத்தியும் குடும்பக் கட்டுப்பாடும்

''உணவில் புரதச்சத்துக் குறைவதற்கும், மக்கட்தொகை பெருக்கம் அதிகரிப்பதற்கும் நெருங்கிய தொடர்புள்ளது. மக்கள் அதிகமாகப் புரதச் சத்துள்ள உணவுகளை உட்கொண்டால் வியப்பூட்டும் வகையில் பெருகிவரும் மக்கட்தொகையைக் கட்டுப்படுத்த இயலும்'' என்று இந்திய மருத்துவச் சங்கத் துணைத்தலைவர் டாக்டர் ஜி. டி. கோபாலகிருட்டிணன் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். புரதச்சத்து மிகுந்த பருப்புகளை மக்கள் அதிகமாக உண்பதால், இயற்கையாகவே குடும்பக் கட்டுப்பாடு ஏற்பட்டு விடுமாதலின் பருப்பு உற்பத்தியைப் பெருக்குவது மேலும் அவசியமாகிறது.

## இந்தியாவும் பருப்பு உற்பத்தியும்.

உலகத்திலேயே இந்தியாவில் தான் பருப்புவகைப் பயிர்களின் பரப்பு அதிகமாக உள்ளது. தற்பொழுது இந்தியாவில் 2 கோடியே 40 இலட்சம் ஹெக்டேர் நிலத்தில், ஆண்டொன்றுக்கு 1 கோடியே 20 இலட்சம் டன் பருப்பு உற்பத்தியாகிறது. இக்கணக்கின்படி ஒரு ஹெக்டேர் (2·47 ஏக்கர்) நிலத்தில் உற்பத்தியாகும் பருப்பு ஆண்டொன்றுக்குச் சராசரி 400 கிலோவாகவே உள்ளது. 1949-ஆம் ஆண்டிலிருந்து 1965-ஆம் ஆண்டு வரையில் பருப்பு உற்பத்தி 1·86 சத அளவே உயர்ந்துள்ளது. இந்த உயர்வும் சாகுபடியாகும் பரப்பினை உயர்த்தியதால் ஏற்பட்டதேயாகும். ஹெக்டேர் ஒன்றுக்குக் கிடைக்கும் மகசூலில் குறிப்பிடத் தகுந்த உயர்வு இதுவரை ஏற்படவில்லை. மேற்கூறிய புள்ளி விவரங்களிலிருந்து பார்க்கும் பொழுது, பருப்பு சாகுபடியாகும் பரப்பை இரண்டு மடங்கிற்கும் மேலாக அதிகப்படுத்தினால்தான் பருப்பின் தேவையை ஈடுசெய்ய முடியும் ; அல்லது ஹெக்டேர் மகசூலை இரண்டு பங்கிற்கும் மேலாக உயர்த்தினால்தான், நம் நாட்டின் மக்களுக்குத் தேவையான பருப்பை உற்பத்தி செய்ய இயலும், என்பது புலனாகிறது. இது முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்ப்போமாக.

கிராமப் புறங்களில் உள்ள வளமில்லாத நிலங்களிலும் வளரக்கூடிய பயிராகவே பருப்பு வகைப் பயிர்கள் உள்ளன. உணவு தானியப் பயிர்களை விடப் பருப்புவகைப் பயிர்கள் வறட்சியைத் தாங்கிக் கொள்ளும் தன்மையுடையதாக இருப்பதால், மழை குறைவாகப் பெய்யும் பகுதிகளில் உழவர்களுக்குப் பருப்புவகைப் பயிர்களே கைகொடுத்து உதவுகின்றன. பருப்புவகைப் பயிர்களைப் பயிரிடுவது, இழந்துவிட்ட வளத்தை, நிலம், மீண்டும் பெறுவதற்கு வழிவகுக்கும் என்பதையும் நீண்ட காலமாகவே உழவர்கள் உணர்ந்துள்ளனர். ஆனால் இதுவரை பருப்பு உற்பத்தியில் ஓரளவு கவனமே செலுத்தப்பட்டு வந்துள்ளது. அதனால் ஒரு பக்கம் மகசூல் மிகவும் குறைவாக உள்ளதுடன், மறுபக்கம் பருப்புவகைப் பயிர்களைச் சாகுபடி செய்யும் பரப்பும் தனிப்பட்ட உழவர்களின் மனப்போக்கிற்கு ஏற்பக், கூடியோ குறைந்தோ வருகிறது.

உயர் விளைச்சல் தரும் தானிய வகைகள், கரும்பு போன்ற பயிர்கள் மிகுந்த இலாபம் தருவதாக உள்ளதால், உழவர்கள் பருப்பு வகைப் பயிர்களைச் செய்யத் தயங்குகிறார்கள்.

எனவே பருப்பு வகைப் பயிர்களின் சாகுபடிப் பரப்பை இரு மடங்கிற்கு மேலும் அதிகப் படுத்துவதென்பது இயலாத செயலாகும். ஆனால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மிகு விளைச்சல் தரும் குறுகிய காலப் பருப்பு வகைப் பயிர் ரகங்களை—ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை மேற்கொண்டு—சாகுபடி செய்தால் சராசரி ஹெக்டேர் மகசூலை இரண்டு மடங்கிற்கு

மேலும் அதிகப்படுத்த முடியும் என்பது பரிசோதனைகளின் மூலம் தெரிய வருகிறது. எனவே, பருப்பு வகைப் பயிர்களின் பரப்பையும், அவைகளின் ஹெக்டேர் மகசூலையும் அதிகப்படுத்தப் பெருமுயற்சி எடுப்பதே பருப்பு உற்பத்தியைப் பெருக்குவதற்குள்ள வழியாக உள்ளது.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் மேற்கொண்ட ஆராய்ச்சியின்படி, தகுந்த மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் 1974–75-ஆம் ஆண்டிற்குள் கூடுதலாக 1 கோடி மெட்ரிக் டன் அளவு பருப்பு உற்பத்தி செய்ய முடியும் என்பது உறுதியாகியுள்ளது.

பருப்பு உற்பத்தியைப் பெருக்க அரசு, உழவர் பெருமக்கள் ஆகிய இருசாராரும் மேற்கொள்ளும் தீவிர முயற்சியினால் தமிழ்நாட்டில் நிலவும் புரதப் பற்றுக்குறையை அகற்ற முடியும் என்பது திண்ணம்.

எனவே உழவர் பெருமக்கள் தானிய வகைப் பயிர்களை மட்டுமே சாகுபடி செய்வதை விட்டுவிட்டு, எதிர்கால சமுதாயத்தின் நலன் கருதியும், நாட்டின் செழிப்புக் கருதியும், வசதியும் வாய்ப்பும் உள்ள இடங்களில் புரதச்சத்து மிக்க பருப்பு வகைப் பயிர்களைச் சாகுபடி செய்யும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும், அப்பழக்கத்தை உழவர் பெருமக்களிடையே ஏற்படுத்தத் தமிழ்நாடு வேளாண்மைத்துறை அலுவலர்களும், ஊழியர்களும் ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

## தமிழ்நாடு அரசின் முயற்சி

தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவையான, பருப்பு வகைகளை வழங்க வேண்டுமானால் ஆண்டொன்றுக்கு 8 இலட்சம் டன் பருப்பு தேவைப்படுகிறது. ஆனால் தமிழ் நாட்டில் விளையும் பருப்பின் அளவு, தேவையில் 8-ல் ஒரு பங்காகவே உள்ளது. தேவையை ஈடுசெய்யத் தமிழ் நாட்டிற்குத் தேவையான பருப்புகள் வட மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்படுகின்றன. இதனாலேயே பருப்பு வகைகளின் விலை அதிகமாக உள்ளது.

பருப்பு வகைகளின் விலையைக் குறைக்கவும், புரதச்சத்து மிக்க பருப்புகளின் உற்பத்தியைப் பெருக்கித் தமிழ்நாட்டு மக்களுக்கு வளமான வாழ்வு அளிக்கவும் வேண்டியே, தமிழ்நாடு அரசு இந்த ஆண்டில் 9·46 இலட்சம் ஹெக்டேர்களில் (23·38 இலட்சம் ஏக்கர்) பருப்புவகைப் பயிர்களைச் சாகுபடி செய்ய ஆவன செய்து வருகிறது. இதனால் இந்த ஆண்டில் பருப்பு உற்பத்தி ஏறத்தாழ 6 இலட்சம் டன்களாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மீதி 2 இலட்சம் டன் பருப்புகள் மட்டுமே வெளி மாநிலத்திலிருந்து வரவழைக்கப்படும். படிப்படியாகப் பருப்பு வகைப் பயிர்களின் சாகுபடிப் பரப்பையும், தீவிரச் சாகுபடி முறைகளையும் அதிகப்படுத்தி, தமிழ்நாட்டிற்குத் தேவையான பருப்பு வகைகளின் முழு அளவையும் தமிழ் நாட்டிலேயே உற்பத்தி செய்யத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் இம்முயற்சி உண்மையிலேயே பெருமுயற்சியாகும். ஏனெனில், தமிழ்நாட்டில் சராசரியாக ஆண்டு தோறும் 1 இலட்சம் டன் பருப்பு மட்டுமே இதுவரை உற்பத்தியாகி உள்ளது.

1969–70-ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படித் தமிழ்நாட்டில் 4,39,000 ஹெக்டேரில் மட்டுமே பருப்பு வகைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு, 1,20,000 டன் பருப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஆண்டில் 9·46 இலட்சம் ஹெக்டேரில் பருப்பு வகைப் பயிர்களைப் பயிரிட்டு 6 இலட்சம் டன் பருப்பு உற்பத்தி செய்யத் தமிழ்நாடு அரசு முயற்சிசெய்து வருவதால், நாட்டு மக்களின் நல்வாழ்வில் தமிழ்நாடு அரசு கொண்டுள்ள அக்கறை தெளிவாகின்றதல்லவா? தமிழ்நாடு அரசின் இப்பெரு முயற்சிக்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பு நல்குவது நம் கடமையல்லவா? எனவேதான், 'தமிழரசு' இதழ் பருப்பின் அவசியத்தை விளக்கியதுடன், பருப்பு உற்பத்தியைப் பெருக்குவதற்குள்ள வழி முறைகளையும் கடமை உணர்ச்சியுடன் வெளியிட்டுள்ளது. படித்து வழிமுறைகளைத் தெரிந்து கொண்டு, பருப்பு உற்பத்தியைப் பெருக்குவது உங்கள் கடமையல்லவா?

## பருப்பு உற்பத்தியைப் பெருக்கும் முறைகள்

பருப்பு வகைகளில் மிகவும் முக்கியமானது துவரம் பருப்பு. "பருப்பில்லாத திருமணமா?" என்ற பழமொழி ஏற்படுமளவுக்குத் துவரம் பருப்பு முக்கியத்துவம் வாய்த்துள்ளது. அன்றாட வாழ்வில் ஏழைகளும் தவறாமல் சாம்பாரிலோ ரசத்திலோ பயன்படுத்துவது துவரம் பருப்பேயாகும். 1969–70-ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படி தமிழ் நாட்டில் 52,000 ஹெக்டேர்களில் மட்டுமே துவரை சாகுபடியாகியதாக அறிய முடிகிறது. அதிலிருந்து 30,000 டன் துவரை உற்பத்தியாகியதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த உற்பத்தியுடன் தமிழ்நாட்டின் தேவையை ஒப்பிட்டுப் பார்த்தால், தற்பொழுது உற்பத்தியாகும் துவரை மிகமிகக் குறைவென்பது தெளிவாகிறது. எனவே துவரம் பருப்பு உற்பத்தியைப் பெருக்குவதில் பெரும் கவனம் செலுத்த வேண்டியதுள்ளது.



புரதச்சத்துப் பற்றுக் குறையால் பாதிக்கப்பட்ட குழந்தை

துவரம் பருப்பு உற்பத்தியைப் பெருக்குவதற்குக் கீழ்க்கண்ட இரு முக்கிய வழிகள் உள்ளன.

1. துவரை சாகுபடியாகும் பரப்பை விரிவு படுத்துதல்.

2. இரசாயன உரமிட்டு, பொறுக்கு வித்துக்களை விதைத்து, பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொண்டு ஹெக்டேர் மகசூலைப் பெருக்குதல்.

தமிழ்நாட்டில் பெரும்பாலும் துவரை, சால் பயிராகவே நிலக்கடலை, சிறுதானிய வகைகளுடன் சாகுபடி செய்யப்படுகிறது. சால் பயிராகத் துவரை சாகுபடியாகும் பரப்பை விரிவு படுத்தத் தமிழ்நாட்டில் பெரும் வாய்ப்பு உள்ளது. பின்கண்ட முறைகளை மேற்கொண்டு துவரை சாகுபடியாகும் பரப்பை விரிவு படுத்தலாம்.

1. தமிழ்நாட்டில் ஆண்டு தோறும் சுமார் 8·6 இலட்சம் ஹெக்டேரில் நிலக்கடலைபயிரிடப்படுகிறது. இதில் 2 இலட்சம் ஹெக்டேரில் மட்டுமே துவரை சால்பயிராகச் சாகுபடியாவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 6·6 இலட்சம் ஹெக்டேரிலும் திருந்திய சாகுபடி முறையை மேற்கொண்டு துவரையைச் சால் பயிராகச் சாகுபடி செய்தால் ஏறத்தாழ 4·95 இலட்சம் டன் துவரை அதிகமாகக் கிடைக்கும்.



புரதச் சத்துப் பெற்ற பத்து மாதங்களுக்குப் பிறகு, அந்த குழந்தையின் அழகுத் தோற்றம்

2. தமிழ்நாட்டில் 7·68 இலட்சம் ஹெக்டேரில் ஆண்டு தோறும் சோளம் பயிரிடப்படுகிறது. இப்பரப்பு முழுவதிலும் சோளத்துடன் துவரையைச் சால்பயிராகப் பயிரிட்டால் ஏறத்தாழ 5·76 இலட்சம் டன் துவரை விளைவிக்க முடியும்.

3. அதுபோலவே தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் பயிராகி வரும் 2,60,000 ஹெக்டேர் வரகுடனும், 1,85,000 ஹெக்டேர் சாமையுடனும் துவரையைச் சால்பயிராக விதைக்கலாம். இதன்மூலம் 3·33 இலட்சம் டன் துவரை உற்பத்தியாகக் கூடும்.

4. தமிழ்நாட்டின் விஞ்ஞானி திரு ஜி. டி. நாயுடு அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள துவரையை வரப்புகளிலும், தோட்டங்களிலும், காலியாகக் கிடக்கும் இடங்களிலும் பயிரிடலாம். இத்துவரை மரம்போல் வளர்ந்து பல ஆண்டுகள் பயன்கொடுக்கவல்லது. இம்முறையிலும் குறிப்பிட்ட அளவில் துவரை உற்பத்தியைப் பெருக்க முடியும்.

மேற்கூறப்பட்ட முறைகளில் துவரையைச் சால்பயிராக விதைப்பதனால் மட்டுமே ஏறத்தாழ 14 இலட்சம் டன் துவரையைத் தமிழ் நாட்டில் உற்பத்தி செய்ய முடியும். இந்த அளவுக்குத் துவரை உற்பத்தியைப் பெருக்க வேண்டுமானால் தற்பொழுது கிடைத்துவரும் சராசரி ஹெக்டேர் மகசூலையும் பெருக்கவேண்டும். அப்பொழுது தான் மேற்கூறிய அளவு துவரை உற்பத்தியாகும்.

துவரையின் ஹெக்டேர் மகசூலைப் பெருக்கத், தமிழ்நாடு வேளாண்மைத்துறையால் கண்டுபிடிக்கப்பட்டு வெளியிட்டுள்ள 'எஸ். ஏ. 1' என்ற ரகத்தையோ கோ-1 (எண் 1141) என்ற ரகத்தையோ வாங்கி விதைப்பது தான் சிறந்தது.

எஸ். ஏ. 1 துவரை, வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூர் வட்டாரத்தில் பயிரிடப்படும் ஓர் உள்ளூர் ரகத்திலிருந்து உயர் வழித் தேர்வுமூலம் (Pure line Selection) கண்டுபிடிக்கப்பட்டதாகும். இதில் 20.7 சதவீதம் புரதச் சத்து உள்ளது.

கோ.-1 துவரை தென்காசிப் பகுதியில் சாகுபடியாகும் துவரையிலிருந்து உயர் வழித் தேர்வு மூலம் உருவாக்கப்பட்டதாகும். இது குறுகிய கால வயதுடையதாகும்.

மேற்கூறிய பொறுக்கு ரக விதைகளை வாங்கிக், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சாகுபடி முறைகளை மேற்கொண்டு பயிரிட்டால் தமிழ் நாட்டில் துவரை உற்பத்தி பெருகுவது திண்ணமே!

## எஸ். ஏ. துவரை சாகுபடிக் குறிப்புகள்

பருவம் :—ஜூலை முதல் ஆகஸ்ட் மாதம் வரை மானாவாரியாக விதைக்கலாம்.

வயது :—180 நாட்கள்.

விதையளவு :—தனிப் பயிராக விதைக்க ஹெக்டேருக்கு 10 கிலோ (ஏக்கருக்கு 4 கிலோ) விதையும், சால் பயிராக விதைக்க ஹெக்டேருக்கு 6 முதல் 7½ கிலோ (ஏக்கருக்கு 2½ கிலோ முதல் 3 கிலோ வரை) விதையும் தேவைப்படும்.

நுண்ணுயிர் கலந்தல் :—

துவரை விதையுடன் (Bacterial culture) கலந்து விதைத்தால் மகசூல் அதிகமாகும் என்பது ஆராய்ச்சியின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே துவரை விதையுடன் துவரைக்கென உள்ள நுண்ணுயிர்களை விதைப்பதற்கு முதல் நாளே கலந்து வைத்திருந்து விதைக்க வேண்டும். நுண்ணுயிர்கள் குடுவையில் (Flask) அடைத்து வைக்கப்பட்டிருக்கும். இக்குடுவைகளைக் கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரியில் உள்ள மண் இரசாயன வல்லுநர் அவர்களுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். ஒரு குடுவையில் உள்ள நுண்ணுயிர் 12 கிலோ விதைக்குப் போதுமானது.

உரமிடுதல் :—நன்கு மக்கிய தொழு எருவை ஹெக்டேருக்கு 5 டன் (ஏக்கருக்கு 2 டன்=4 வண்டி) வீதம் இட வேண்டும். கடைசி உழவில் ஹெக்டேருக்கு 140 கிலோ ஏக்கருக்கு 56 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரமிட வேண்டும். மானாவாரி நிலக்கடலை) சோளம், வரகு, சாமை ஆகியவைகளுக்கு இரசாயன உரமிடப்பட்டால் அவைகளில் சால் பயிராகத் துவரையை விதைக்கத் தனியே இரசாயன உரமிட வேண்டியதில்லை.

இடைவெளி :—தனிப் பயிராக விதைக்க வரிசைக்கு வரிசை 90 சென்டி மீட்டர் (3 அடி) இடைவெளியும் வரிசையில் விதைக்கு

விதை 30 சென்டிமீட்டர் (1 அடி) இடைவெளியும் விட வேண்டும். சால்பயிராக விதைக்க 6 அல்லது 8 அடிக்கு ஒரு சால் வீதம் விதைக்க வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு :— அசுவணி இலைப்புழு, வண்டுகள் தோன்றித் தாக்குவதைத் தடுக்க ஹெக்டேருக்கு 12½ கிலோ (ஏக்கருக்கு 5 கிலோ) பி.எச்.சி. 10 சதத் தூளையும், 12½ கிலோ டி.டி.டீ. 5 சதத்தூளையும் கலந்து தூவ வேண்டும். காய்ப்புழு தாக்குவதைத் தடுக்கத் துவரைச் செடி பூத்ததிலிருந்து 15 நாட்களுக்கு ஒரு முறையாக 3 தடவை, ஹெக்டேருக்கு 25 கிலோ (ஏக்கருக்கு 10 கிலோ) டி.டி.டீ 5 சதத் தூளையோ அலலது கார்பரில் 10 சதத் தூளையோ தூவ வேண்டும்.

மகசூல் :— தனிப் பயிரிலிருந்து ஹெக்டேருக்கு 1,250 கிலோ (ஏக்கருக்கு 500 கிலோ) மகசூல் கிடைக்கும். சால் பயிரானல் ஒரு ஹெக்டேரிலிருந்து 750 கிலோ (ஏக்கருக்கு 300 கிலோ) மகசூல் கிடைக்கக்கூடும்.

### கோ.- 1 துவரை
### சாகுபடிக் குறிப்புகள்.

பருவம்:— ஜூலை முதல், ஆகஸ்ட் வரை மானவாரியாகவோ பாசனப் பயிராகவோ விதைக்கலாம். பிப்ரவரி-மார்ச் மாதங்களில் பாசனப் பயிராக விதைக்கலாம்.

வயது :—135 நாட்கள் (4 மாதம்).

விதையளவு :— தனிப் பயிராக விதைக்க ஹெக்டேருக்கு 15 கிலோ (ஏக்கருக்கு 6 கிலோ) விதையும், சால்பயிராக விதைக்க ஹெக்டேருக்கு 7½ கிலோ (ஏக்கருக்கு 3 கிலோ) விதையும் தேவைப்படும்.

நுண்ணுயிர் கலத்தல் :— விதைப்பதற்கு முதல் நாளே ஒரு குடுவையில் உள்ள நுண்ணுயிர்களுக்கு 12 கிலோ விதை வீதம் கலந்து வைத்திருந்து விதைக்க வேண்டும்.

உரமிடுதல் :— தனிப் பயிராகச் சாகுபடி செய்ய ஹெக்டேருக்கு 5 டன் (ஏக்கருக்கு 2 டன் 4 வண்டி) தொழு எரு இட வேண்டும். கடைசி உழவில் ஹெக்டேருக்கு 110 கிலோ (ஏக்கருக்கு 45 கிலோ) அம்மோனியம் சல்பேட் அல்லது ஹெக்டேருக்கு 50கிலோ (ஏக்கருக்கு 20 கிலோ) யூரியாவையும், ஹெக்டேருக்கு 256 கிலோ (ஏக்கருக்கு 100 கிலோ) சூபர் பாஸ்பேட்டையும் அடியுரமாக இட வேண்டும்.

இடைவெளி :— தனிப் பயிராகச் சாகுபடி செய்ய வரிசைக்கு வரிசை 60 சென்டி மீட்டர் (2 அடி) இடைவெளியும், வரிசையில் விதைக்கு விதை 30 சென்டிமீட்டர் (1 அடி) இடை வெளியும் விட்டு விதைக்க வேண்டும். சால் பயிருக்கு 6 அடி தூரத்திற்கு ஒரு சால்வீதம் விதைக்க வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு :— எஸ். ஏ 1 துவரைக்குப் பரிந்துரைக்கப் பட்ட முறைப்படியே இந்த ரகத்திற்கும் செய்ய வேண்டும்.

மகசூல் :— தனிப் பயிராகச் சாகுபடி செய்யப்பட்டால் ஹெக்டேருக்கு 1,750 கிலோ (ஏக்கருக்கு 700 கிலோ) மகசூலும், சால்பயிராகச் சாகுபடி செய்யப் பட்டால் ஹெக்டேருக்கு 875 கிலோ (ஏக்கருக்கு 350 கிலோ) மகசூலும் கிடைக்கும்.

## உளுந்து

பருப்பு வகைகளில் துவரம் பருப்புக்கு அடுத்தபடியாக மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது உளுந்து. ஆனல் மானவாரியாக உளுந்து விதைப்பதற்கு செப்டம்பர், அக்டோபர் மாதமே ஏற்ற பருவமாகும்.

## பச்சைப் பயறு

பச்சைப் பயறு, உளுந்திற்கு அடுத்தாற்போல் முக்கியத்துவம் வாய்ந்தது. பச்சைப் பயறு உற்பத்தியைப் பெருக்க ஜூலை—ஆகஸ்ட் மாதங்களில் ''கோ -1'' பச்சைப் பயறு விதையை மானவாரியாக விதைக்கலாம். இதன் வயது 130 நாட்கள். இதில் 24 சத புரதச் சத்து உள்ளது.

எனவே, எதிர்காலச் சமுதாயம் அறிவும், ஆற்றலும், எழிலும், ஏற்றமும் பெற்று விளங்க, மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு துவரை, பச்சைப் பயறு ஆகியவைகளின் உற்பத்தியைப் பெருக்குமாறு வேண்டுகிறோம்.






# மாணவர் அரங்கம்



எங்கள் பச்சையப்பன் கல்லூரிக்குப் ' பைந்தமிழ்ச் சோலை ' என்ற சிறப்புப் பெயருண்டு.

'' படிக்கட்டும் பைந்தமிழ் பாடும் பச்சையப்பன் கல்லூரி '' என்று எங்கள் கல்லூரியைச் சிறப்பித்துக் கூறுவர்.

எங்கள் கல்லூரி, பேச்சுப் போட்டியில் இன்றளவும் சிறப்பிடம் பெற்று வருகிறது. சென்னை, மதுரை, அண்ணுமலை ஆகிய பல்கலைக் கழக மாணவர்களுக்கிடையே நடைபெற்ற பேச்சுப் போட்டியில் எங்கள் கல்லூரி மாணவர் இராமுதான் கடந்த மூன்றுண்டுகளாகத் தொடர்ந்து கோவை பூ.சா.கோ கலைக் கல்லூரி வழங்கும் சுழற் கோப்பையைப் பெற்று வருகிருர். இது தமிழகப் பல்கலைக் கழக அளவிலே மிகப் பெரிய சாதனையாகும்.

விளையாட்டுப் போட்டிகளிலும் எங்கள் கல்லூரி சிறப்பிடம் வகிக்கிறது. குறிப்பாக கிரிக்கெட், கால்பந்து போன்றவற்றில் சிறந்து விளங்குகிறது. சென்னைப் பல்கலைக் கழக மாணவர் கிரிக்கெட் குழுவில் எங்கள் கல்லூரி மாணவர்கள் சிறப்பிடம் வகிக்கிருர்கள்.

எங்கள் கல்லூரியில் 'அறுவை மன்றம் ' என்ற ஒன்று செயல்பட்டு வருகிறது. இது ஆண்டு தோறும் பேச்சுப் போட்டி நடத்தி அதில் முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப் படுபவருக்கு 'அறுவைச் சக்கரவர்த்தி' என்ற பட்டம் வழங்கி, ஒரு ரம்பத்தைப் பரிசாக வழங்குகிருர்கள். இரண்டாவது பரிசு பெறுபவருக்கு ' அறுவைப் பேரரசு ' என்ற பட்டம் வழங்கி, குத்துக் கத்தி ஒன்று பரிசாக வழங்கப்படுகிறது. மூன்றுவது பரிசைப் பெறும் மாணவருக்கு 'அறுவை மன்னன்' என்ற பட்டமளிக்கப்பட்டு பேனுக்கத்தி ஒன்று பரிசாக வழங்கப்படுகிறது. ஆறுதல் பரிசு பெறுபவருக்கு பிளேடுகள் வழங்கப்படுகின்றன. பட்டம் ஒன்றும் கொடுப்பது கிடையாது.

எங்கள் பச்சையப்பன் கல்லூரிக்கும், பச்சை வண்ணத்திற்கும் தொடர்பு அதிகம். எங்கள் கல்லூரியின் வாயிலில் உள்ள பெயர்ப் பலகையில் தமிழிலும், ஆங்கிலத்திலும் வடிக்கப்பட்டுள்ள எழுத்துக்களின் மேல் அடிக்கப்பட்டுள்ள வண்ணம் பச்சை, ' பச்சைப் பசேல் ' என்று வெட்டி விடப்பட்டிருக்கும் செடிகளின் நடுவில் அமைந்துள்ள பச்சையப்பர் சிலைக்கு அடிக்கப்பட்டுள்ள வண்ணம் பச்சை. எங்கள் கல்லூரி முதல்வர் பயன்படுத்தும் மையின் நிறம் பச்சை. கல்லூரிக் கடித ஏட்டிலுள்ள எழுத்துக்களின் நிறம் பச்சை. கலைக் கட்டடம், அறிவியற் கட்டடம் என்றிருக்கும் இரு கட்டடங்களுக்கு மேலே செதுக்கப்பட்டுள்ள ' பச்சையப்பன் ' என்ற சொல்லின் மேல் அடிக்கப்பட்டுள்ள வண்ணம் பச்சை.



எங்கள் கல்லூரியில் படித்தோரில் பெரும்பாலோர் இன்று அரசியல், இலக்கியம் போன்றவற்றில் புகழ் பெற்ரோராக விளங்குகின்றனர். தமிழக முன்னுள் முதல்வர் பேரறிஞர் அண்ணு அவர்கள் எங்கள் கல்லூரியில் பயின்றவர் தாம்:

எங்கள் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றியவர்களும் அரசியல் இலக்கியம் போன்றவற்றில் சிறந்து விளங்குகின்றனர். நலத் துறை அமைச்சராக இருந்து வரும் மாண்புமிகு பேராசிரியர் அன்பழகனும், மதுரைப் பல்கலைக் கழகத்துணைவேந்தர்-பண்டாரகர் மு. வரதராசனுரும் எங்கள் கல்லூரியில் பேராசிரியர்களாகப் பணியாற்றியவர்கள்.

எங்கள் கல்லூரியில் பயிலும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ-மாணவிகள், ஒருங்கு கூடஒரு கலையரங்கம் இன்றுவரை கிடையாது. அதுதான் எங்கள் கல்லூரியில் உள்ள மிகப்பெரிய குறை. எங்கள் கல்லூரியில் ஒரு கலையரங்கு கட்டி முடிக்கப்பட்டு விட்டால் எங்கள் கல்லூரி பட்டை தீட்டப்பட்ட வைரமாகப் பளபளக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

—ந. த. நடேசன்,
பி. ஏ. (இரண்டாம் ஆண்டு).




## தமிழ் நாடு அரசு
## காவல் துறை

### ஒப்பந்தப் புள்ளி அறிக்கை.

தமிழ் நாடு காவல் துறைக்குத் தேவையான உடை மற்றும் தளவாடங்களுக்குரிய பல்வகைப் பொருள்களை 1—7—1971 முதல் 31—3—1972 வரையுள்ள காலத்திற்கு வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் (டெண்டர்) கோரப்படுகின்றன.

(2) ஒப்பந்தப் புள்ளிகளை முத்திரையிட்ட கவர்களில் அனுப்ப வேண்டும். அந்தக் கவரின் மேலே சென்னை காவலர்களுக்குத் தேவையான உடை மற்றும் தளவாடங்களுக்குரிய பல்வகைப் பொருள்களை வழங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளி என்று எழுதி, பெறுநர் முகவரியில் திரு கே. ஸ்ரீகுமார மேனன், ஐ.பி.எஸ்., உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ்-II என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். அந்தக் கவர் 1971-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30-ஆம் தேதி மாலை 4·00 மணிக்குள் அவருக்குக் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். குறிப்பிட்ட நேரமும், தேதியும் கடந்த பின் வந்து சேரும் ஒப்பந்தப் புள்ளி கவனிக்கப்படமாட்டா.

(3) ஒப்பந்தப் புள்ளி வடிவம், ஒப்பந்த நிபந்தனைகள், தேவைப்படும் பொருள்களின் அட்டவணை ஆகியவைகளை ரூபாய் 2·06 (ரூபாய் இரண்டு, பைசா ஆறு மட்டும்) செலுத்தி, சென்னை-4-ல் உள்ள இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆப் போலீஸ் அவர்களது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

(4) மாதிரிப் பொருள்கள் அனுப்பப்பட்டதற்கான ரயில்வே ரசீதை, உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ்-II அவர்களுக்குப் பதிவுத் தபாலில் தனியே அனுப்ப வேண்டும்; பெறுநர் முகவரியில் அலுவலர் பெயர் மட்டுமே குறிப்பிட்டிருக்க வேண்டும். அனுப்பப்படும் மாதிரிப் பொருள்கள் இந்த அலுவலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட மாதிரிப் பொருட்களை ஒத்ததாக இருக்க வேண்டும்.

(5) ஒப்பந்தப் புள்ளிகளை 30—8—1971 அன்று மாலை 4·00 மணிக்கு, அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளி தாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

(ஒ-ம்.) கே. ஸ்ரீகுமாரமேனன்
ஐ.பி.எஸ்.
உதவி இன்ஸ்பெக்டர்-
ஜெனரல் ஆப் போலீஸ்.

---

### டெண்டர் அறிவிப்பு.

1—9—1971 முதல் 31—12—1971 வரையுள்ள காலத்தில் மருந்துகள் (drugs and medicines) சப்ளை செய்ய, புகழ்பெற்ற வட்டார நிறுவனங்களிடமிருந்து ''Tender for the supply of medicines due on 21—8—1971'' என்று

உறையின்மீது தலைப்பிடப்பட்ட டெண்டர்கள் 21—8—1971 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. டெண்டர் பாரம், அடியில் தரப்பட்ட முகவரியில் 20—8—1971 வரை எல்லா வேலை நாட்களிலும் கிடைக்கும். ''XXIII. Medical—J. Miscellaneous—Other receipts" என்ற தலைப்பில் டெண்டர் பாரத்தின் விலையான ரூ. 3-ஐ ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் கட்டி அந்தச் செலானைத் தந்து டெண்டர் பாரம் பெறலாம். 11 காசுக்கு தனியாக ஒரு செலான் ''XII Sales tax—Receipts under States Sales tax Act M. G. S. T. for sale of Tender Forms" என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும்.

மேற்கண்ட தலைப்பில் கட்டப்பட்ட கட்டணம் எந்தச் சூழ்நிலையிலும் டெண்டர் தாரர்களுக்குத் திருப்பித்தரப்பட மாட்டாது.

டாக்டர் (திருமதி)
எம். சாரதாமேனன்,
M.D.D.,P.M.,
கண்காணிப்பாளர்,
அரசினர் மனநோய் மருத்துவ மனை,
சென்னை-10.

## தமிழ்நாடு அரசு
## வேளாண்மைத் துறை

தோட்டக்கலை கற்றுக்கொள்ள விரும்புவோருக்கு ஓர் அரிய வாய்ப்பு.

தமிழக விவசாய இலாகா, காய்கறி பயிரிடும் முறைகள் பற்றியும், தோட்டக்கலை பற்றியும் பொதுமக்கள் தெரிந்து கொள்ள ஒரு பயிற்சி வகுப்பு விரைவில் தொடங்க இருக்கிறது. இதில் பயிற்சி பெற விரும்புவோருக்கு தமிழில் பேச எழுத போதிய தகுதியிருந்தால் போதும். பயிற்சி ஒரு மாத காலத்திற்குக் கொடுக்கப்படும். மேற்படி ஒவ்வொரு பயிற்சிக்கும் மொத்தம் 20 பேர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மேற்படி பயிற்சிக் காலத்திற்கு ரூ. 50 (ரூபாய் ஐம்பது மட்டும்) உதவித் தொகையாக அளிக்கப்படும். விருப்பமுள்ளவர்கள் கீழ்க்கண்ட விபரங்கள் அடங்கிய தங்கள் விண்ணப்பத்தைக் கலை நிபுணர், 5/31, எல்டாம்ஸ் ரோடு, தேனும்பேட்டை, சென்னை-18 என்ற முகவரிக்கு 16—8—1971-க்குள் அனுப்பி விடும்படி கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள். பயிற்சி முடிந்த பின் வேலை வாய்ப்புக்கு எவ்வித உத்திரவாதமும் அளிக்கப்பட மாட்டாது.

1. தோட்டக் கலைஞரின் பெயர்.
2. வயது.
3. அஞ்சல் முகவரி.
4. படிப்பு.
5. தற்சமயம் வேலை பார்க்கும் தோட்டச் சொந்தக்காரரின் பெயரும், முகவரியும்.

விவசாய இயக்குநர்,
சென்னை-5.

## தமிழ் நாடு அரசு

## தொழில், வணிகத் துறை

ரசாயன சோதனை, ஆய்வுக்கூடம், கிண்டி,

கனிப் பொருட்கள், தாதுப் பொருட்கள் மற்றும் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருட்கள், உற்பத்திப் பொருட்கள், ஆகியவற்றை சுரங்கவாயில்கள், துறைமுகங்கள், பிற ஏற்றுமதி இறக்குமதி நிலையங்கள் ஆகியவற்றில் அனைத்துலக நியதி முறைப்படி ரசாயன சோதனை செய்வதற்கும் சான்றிதழ்கள் வழங்குதற்கும் :

இச்சோதனைக் கூடம் உலோகங்களையும், உலோகக் கலவைகளையும் கீழ்க்கண்ட வகையில் சோதனை செய்யும் :

1. டென்சைல், கம்ப்ரஷன் ஹார்ட்னெஸ், அல்ட்ராசானிக் ஃப்ளா டிடெக்ஷன், மாகனட்டிக் க்ராக் டிடெக்ஷன், பெண்ட் டெஸ்ட், இம்பாக்ட் டெஸ்ட், இண்டஸ்டிரியல் ரேடியோக்ராஃபி, இரும்பு, இரும்பு அல்லாத உலோகங்களுக்காக, மைக்ராஸ்கோபிக் சோதனை.

2. ரப்பர், ப்ளாஸ்டிக்ஸ், தாள்கள், துணிகள் போன்றவைகளைச் சோதித்தல் (பிசிகல் டெஸ்ட்டிங்).

3. வார்ப்பிட மணல் ஆய்வு (பவுண்டரி சாண்டு டெஸ்டிங்).

தரம் குறைந்த தாதுப் பொருட்களுக்குத் தர மேம்பாட்டு வேலையும் இங்கு மேற்கொள்ளப்படுகிறது.

ரசாயன மற்றும் சார்புத் தொழில்கள் சம்பந்தமாக முன்னோடி ஆய்வு செய்வதற்காக, இச்சோதனைக் கூடத்தில் ரசாயன, பொறியியல் துறைப் பிரிவும் இணைக்கப்பட்டுள்ளது.

ரசாயனத் தொழில் சம்பந்தப்பட்ட சிக்கல்களைத் தீர்ப்பதில் தொழில் அதிபர்களுக்கு ஆய்வு சோதனைக் கூட உதவிகள் அளிக்கப்படும். ரசாயனத் தொழில்கள் தொடங்குவதற்கு ஏற்ற தொழில் நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படும்.

விவரங்களுக்குத் தொடர்பு கொள்க :

துணை இயக்குநர் (ரசாயனங்கள்)

ரசாயன சோதனை ஆய்வுக் கூடம்.

(கெமிக்கல் டெஸ்டிங்,

அனலிட்டிகல் லாபாரட்ரி)

சென்னை-32.

தொலை பேசி : 801646.

## தமிழ்நாடு அரசு வனத்துறை

அரசினர் தேயிலைத் திட்டம், குன்னூர்-2.

தமிழ்நாடு ஆளுநரின் சார்பாக கீழ்க்காணும் வேலைக்கான அரசு முத்திரையிடப்பட ஒப்பந்தப் புள்ளிகள் வனப் பாதுகாவலர், அரசினர் தேயிலைத் திட்டம், குன்னூர்-2 அவர்களால் 13—8—1971 காலை 11 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

| வேலையின் விபரம். | வேலையின் உத்தேச மதிப்பு. | உடன் வைப்புத் தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| கூடலூர் தாலூகா பந்தலூரில் ஒரு தங்கும் விடுதி கட்டுதல். | 50,000 | 1,500 |

ஒப்பந்தப் புள்ளி நமூனுக்களையும் முழு நிபந்தனைகளையும் பிரதி ஒன்றுக்கு ரூ. 4·12 செலுத்திக் கீழ்க்காணும் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

த. அச்சையா, I.F.S.

வனப் பாதுகாவலர்,

அரசினர் தேயிலைத் திட்டம்

குன்னூர்,

23—7—71.

## தமிழ்நாடு வனத்துறை

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மைலார் ரப்பர் கூப்பு 59 லிருந்து சுமார் 425 கன மீட்டர் தடிகளை ஏற்றி நாகர் கோவிலிலுள்ள வனமண்டிக்கு கொண்டு சேர்ப்பிக்க அரக்கு முத்திரையிட்ட டெண்டர்கள் 30—8—1971ம்நாள் மதியம்12—00 வரை மாவட்ட வன அலுவலரால் கோரப்படுகின்றன. இதன்பேரில் விவரங்களுக்கு குலசேகரத்திலுள்ள (மரங்கள் வெட்டும் பிரிவு) வனத்துறை அலுவலருக்கு எழுதவும்.

எஸ். கொண்டாஸ்,

மாவட்ட வன அலுவலர்,

திருநெல்வேலி தென் பிரிவு.

## மீனவர் பயிற்சி நிலையம் தூத்துக்குடி.

திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடி மீனவர் பயிற்சி நிலையத்தில் கீழ்க்கண்ட பயிற்சிகள் 15—9—1971 முதல் (10 மாத காலம்) அளிக்கப்படும்.

1. நவீன மீன்பிடி முறை.

2. சிறுதரக்கம்மியர் பயிற்சி (ஜூனியர் மெக்கானிக் பயிற்சி)

நவீன மீன்பிடி பயிற்சிக்கு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மீனவர்கள் மட்டும் தான் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரர்கள் 18 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் 35 வயதிற்கு உட்பட்டவர்களாகவும், கடலில் மீன்பிடி அனுபவம் உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். விண்ணப்பங்கள் 25—8—1971 மாலை 5 மணி வரை மீன்துறை உதவி இயக்குநர் மீனவர் பயிற்சி நிலையம், தூத்துக்குடி—1 அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும். மற்ற விபரங்களை மேற்கூறிய உதவி இயக்குநரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ச. சே. ஆரோக்கியசாமி,

மீன்துறை துணை இயக்குநர்,

தூத்துக்குடி.



## தமிழ்நாடு அரசு

## தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகம் (கட்டுமானங்கள் பிரிவு), கிண்டி, சென்னை—25.

### சீட்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை.

வேலையின் பெயர் :

வேலையின் எண் 1 .. .. மதுரைப் பல்கலைக் கழகத்தில் 30,000 காலன் திறனுள்ள ஆர். சி. சி. மேல்மட்ட தண்ணீர்த் தொட்டி கட்டுதல்.

வேலை எண் 2 .. .. மதுரை, மதுரை-தேனி சாலையில் மதுரைப் பல்கலைக் கழக மையத்தில் கணிதத் துறைக்காக ஃபேகல்டி கட்டிடம் கட்டுதல்.

வேலை எண் 3 .. .. மதுரை, மதுரை-தேனி சாலையில் மதுரைப் பல்கலைக் கழக மையத்தில் அஞ்சல் அலுவலகம் கட்டுதல்.

தமிழ் நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும், மேலே கண்ட வேலைகளைத் தொழில் நுட்பக் கல்விப் பகுதிகளில் மேற்கொள்ளுவதற்காக, உரிய பிரிவுகளில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக் காரர்களிடமிருந்து மேலே கண்ட அலுவலகத்தில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் 23—8—1971 பிற்பகல் 3-00 மணி வரை முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால், அதே நாளில் மாலை 3-30 மணிக்கு, வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் பிரிக்கப்படும்.

| | வேலை எண் 1. | வேலை எண் 2. | வேலை எண் 3. |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1 ஒப்பந்த வடிவம் .. .. | மொத்தத்தொகை. | மொத்தத்தொகை. | மொத்தத்தொகை· |
| 2 கட்டுத் தொகை ... .. | 1,875 | 4,000 | 1,375 |
| 3 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை பிளானுடன். | 20 (இத்துடன் விற்பனை வரி 3 சத விகிதம்.) | 20 (இத்துடன் விற்பனை வரி 3 சத விகிதம்.) | 20 (இத்துடன் விற்பனை வரி 3 சத விகிதம்.) |
| 4 வேலையை முடிக்க வேண்டிய காலம். | 6 மாதம். | 8 மாதம். | 6 மாதம். |
| 5 ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் மேலே கண்ட அலுவலகத்தில் அலுவல் நேரத்தில் கிடைக்கக் கூடிய தேதிகள். | 12—8—1971 முதல் 21—8—1971. | | |
| 6 ஒப்பந்தப் புள்ளிகள் அளிக்க தகுதி வாய்ந்த பதிவாளர் பிரிவு. | III-ம் பிரிவும் அதற்கு மேலும். | III-ம் பிரிவும் அதற்கு மேலும். | III-ம் பிரிவும் அதற்கு மேலும். |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்துக்குரிய கட்டணம் (எக்காரணம் கொண்டும் இது திருப்பித் தரப்படாது) அரசு கருவூலத்திலோ, அல்லது இந்திய ரிசர்வ் பாங்கிலோ " P. W. Remittances III other Remittances " என்ற தலைப்பில் மதுரை, பல்கலைக் கழக டிவிஷன் நிர்வாகப் பொறியாளர் கணக்கில் கட்ட வேண்டும். விற்பனை வரியை தனி சலானில், கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் பாங்கிலோ " XII. Sales-tax (b) Receipts under State Sales-tax Act. General Sales-tax " என்ற தலைப்பில் செலுத்த வேண்டும். சலான்கள் வந்த பின்னரே ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும். சென்னை, தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் கட்டுமானப் பிரிவில் ஏற்ற பிரிவில் பதிவு செய்து கொள்ளாத ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டா.

கட்டுத் தொகை, சலான் வடிவிலும், ஷெட்டியூல் பாங்குகளின் ' கால் டிபாசிட் ' தொகை வடிவிலும் பெற்றுக் கொள்ளப்படும். அரசு புரோ நோட்டுகள், மாநில மின்சார வாரிய ' பாண்டுகள் ' தேசிய சேமிப்புப் பத்திரங்கள் ஆகியனவும் கட்டுத் தொகைக்காக, விற்பனை மதிப்பில் 5 சத விகிதம் குறைவாக அல்லது நிர்ணய மதிப்பு, இதில் எது குறைவாக இருக்கிறதோ அந்த வகையில் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளி தர உத்தேசித்திருப்பவர்கள், உரிய வேலைப் பிரிவில் பெரியகட்டுமான வேலைகளை மேற்கொள்வதில் குறைந்த பட்சம் மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும். எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையும் அல்லது ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தையும் எவ்வித காரணமும் கூறாமல் நிராகரிக்க சென்னை-25, தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்கு அதிகாரம் உண்டு.

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்,

சென்னை.

## தமிழ்நாடு நீர் வழங்கல் வடிகால் வாரியம்

### சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை

வேலையின் பெயர் :—

ஆலந்தூர் நீர் வழங்கும் திட்டம் — இரண்டாம் கட்டம்—முதல் கட்டம்—இரண்டாவது பாகம்—2ஏ, 2பி, 3ஏ, 3பி பிராந்தியங்களுக்கு வினியோக முறைகள். சி. ஐ., ஏ.சி. பைப்புகள் ஸ்பெஷல்கள் அமைத்தல், இணைத்தல்.

தமிழ் நாடு நீர் வழங்கல், வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பாகவும் மேலே கண்ட வேலைக்கான துறைக்குரிய முறையான வடிவத்தில் முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளை, இந்தத் துறையின் அல்லது இதுபோன்ற அரசு நிறுவனத்தின், உரிய பிரிவிலுள்ள பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சூப்பிரண்டிங் இஞ்சினீயர், பொது சுகாதார இஞ்சினீயரிங் சர்க்கிள், சென்னை—8 அவர்கள் தமது அலுவலகத்தில் 30—8—1971 பிற்பகல் 3 மணி வரை பெற்றுக் கொள்ளுவார். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் பிற்பகல் 3—30 மணிக்கு மேல் சூப்பிரண்டிங் இஞ்சினீயர், பொது சுகாதாரத் துறை சர்க்கிள் அவர்களால் எண் 52, கெங்கு ரெட்டி சாலை, சென்னை—8-ல் அவ்வமயம் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்த வடிவம்—கே. 2.

கட்டுத்தொகை—ரூ. 4,540

(ரூபாய் நாலாயிரத்து ஐந்நூற்றி நாற்பது மட்டும்).

(அரசு கருவூல சலான் வடிவில் அல்லது ஒப்பந்தப் புள்ளி சம்பந்தப்பட்ட விதிகளில் குறிக்கப்பட்டுள்ளபடி, ஏற்கத்தக்க வேறு வடிவில் கட்டுத்தொகை கட்டப் பெற வேண்டும்)

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை—ரூ. 10–35

(பத்து ரூபாய் முப்பத்தி ஐந்து காசுகள் மட்டும்).

** ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்துக்குரிய கட்டணங்கள், நிர்வாக இஞ்சினீயர், பொது சுகாதார இஞ்சினீரிங் டிவிஷன் சென்னை—4—அவர்கள் கணக்கில் பி. டபிள்யூ III ஓ. ஆர். என்ற தலைப்பிலும், விற்பனை வரிக்கு XII விற்பனை டி. பல்வகை—I—பொது விற்பனை வரி என்ற தலைப்பிலும் தனித்தனி சலான்களில் சேர்க்கப்பட வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் கிடைக்குமிடம் .— நிர்வாக இஞ்சினீயர் (பொ. சு), பொது சுகாதார இஞ்சினீயரிங் டிவிஷன், 1/14, எட்வேர்டு எலியட்ஸ் சாலை, சென்னை—4 அவர்களுக்கு மனுச் செய்து பெறலாம்.

(ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்துக்குரிய கட்டணம் ரொக்கமாகவோ, பண அஞ்சல் மூலமோ செலுத்தப்பட வேண்டும்.)

வேலை முடிக்கவேண்டிய காலம்: 8 மாதங்கள்.

சூப்ரண்டிங் இன்சினீயர்,
பொது சுகாதார இன்சினீயரிங் சர்க்கிள், சென்னை—8.

---

## தமிழக அரசு நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை, மறு அறிவிப்பு.

தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாகவும், உத்தரவுப்படியும், கோயமுத்தூர் வட்டம் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்காக அரக்கு முத்திரையிடப்பட்ட டெண்டர்கள் 1971-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 18-ம் நாள் மாலை 3-00 மணி வரையில் கோயமுத்தூர் ரத்தின சபாபதிபுரம் வெங்கட்ரமணா சாலையில் மேற்படியார் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். மேற்படி டெண்டர்கள் அதே நாள் மாலை 3-15 மணி அளவில் (அலுவலக கடிகாரப்படி) திறக்கப்படும்.

| வரிசை எண் | வேலையின் பெயர் | கோட்டம் | முன்வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | கோயமுத்தூர் நகராட்சியின் எல்லைக்குள் சேலம் கொச்சி சாலையில் (தேசீய நெடுஞ்சாலை 47) (அவிநாசி சாலை) மைல் 328/7-ல் தற்போதைய ரயில் சந்திக்குப் பதிலாக ஒரு மேம்பாலம் கட்டுதல். | கோயமுத்தூர் | 82,200 |

டெண்டர் நிபந்தனைகள், வரைபடங்கள், பத்திரங்கள் ஆகியவற்றைக் கோவை கோட்டப் பொறியாளரிடமிருந்து மேற்கண்ட வேலைக்கு ரூ. 100 உடன் விற்பனை வரியும் செலுத்தி 4—8—1971 முதல் 17—8—1971 வரை பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. டெண்டர் நாளன்று டெண்டர் பத்திரங்களுக்கான மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேலே கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகையைக் கோவை கோட்டப் பொறியாளர் சார்பில் அவருடைய வரம்பிற்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின் கீழ் செலுத்தி செல்லு சீட்டை டெண்டருடன் இணைத்து அனுப்ப வேண்டும். பாங்கு காரண்டி முன்வைப்புத் தொகையாகப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமேயானல் ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் மேற்படி பாங்கு காரண்டிக்கான ஒப்புதலையும் சேர்த்து டெண்டருடன் இணைக்க வேண்டும்.

பா. சேக்உமர்,
மேற்பார்வை பொறியாளர் (நெ.கி.ப.)
கோவை—2



## தமிழ் நாடு குடிநீர்—வடிகால் வாரியம்

### சீட்-டெண்டர் அறிவிப்பு

தமிழ் நாடு குடிநீர்-வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும் கடித உறையின்மேல் கீழ்க்குறிப்பிடப்பட்ட பணியின் பெயர் எழுதப்பட்டு மூடி முத்திரையிடப்பட்ட டெண்டர்கள், மக்கள் நல்வாழ்வு பொறியியல் துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது அவைபோன்ற அரசுத் துறைகளில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து தமிழ் நாடு குடிநீர்-வடிகால் வாரிய மேற்பார்வைப் பொறியாளரால் (மக்கள் நல்வாழ்வு பொறியியல்) எண் 17, சர். பி. டி. ராஜன் ரோடு, மதுரை-2 . என்ற முகவரியிலுள்ள அவரது அலுவலகத்தில் 25—8—1971 அன்று மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன. அதே நாள் மாலை 3—30 மணிக்கு அவை பிரிக்கப்படும்.

வேலையின் பெயர் :

மக்கள் நல்வாழ்வு பொறியியல் பிரிவு, திருச்சி—நன்கு சோதனை செய்யப்பட்டு ISS /226/1962-லும் அதன் பின்பு திருத்தப்பட்ட விதிகளில் குறிப்பிட்டபடியுள்ள எம். எஸ். ராட்ஸ் சப்ளையும் டெலிவரியும் செய்தல்.

ஒப்பந்த வகை :

முழுத் தொகை.

முன் வைப்புத் தொகை :

ரூ. 6,000 (ஆறுயிரம் ரூபாய் மட்டும்.)

இந்தத் தொகை, டெண்டருடன் கஜானு செலானுக அல்லது டிமாண்ட் டிராப்டாக அல்லது தேசிய மயமாக்கப்பட்ட ஏதாவது ஒரு பாங்கில் நிர்வாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வு பொறியியல் கோட்டம், திருச்சி-3ன் கணக்கில் வழங்கக்கூடிய பாங்க் காரண்டியாக (guarantee) செலுத்தப்படவேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் செக் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வேலை முடிக்கப்பட வேண்டிய காலம் :

2 மாதம்.

டெண்டர் பத்திரங்களின் விலை :

ரூ. 15·45 (விற்பனை வரி உட்பட).

டெண்டர் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர், மக்கள் நல்வாழ்வு-பொறியியல் கோட்டம், B-15, தில்லைநகர் மெயின் ரோடு, திருச்சி-3 என்ற முகவரியில் கிடைக்கும். (21—8—1971 மாலை 5 மணி வரை.)

(ஒ—ம்) கே.கோவிந்த மேனன்,
மேற்பார்வை பொறியாளர்,
(P.H.E.).

மதுரை-2,
20—7—71.

---

## தமிழ் நாடு அரசு அறிவிப்பு

வேலையில்லாமலிருக்கும் மருத்துவப் பட்டதாரிகள் கவனத்திற்கு!

மருத்துவப் பட்டதாரி உதவியாளர் பணிக்காக (அசிஸ்டெண்ட்சிப்) மருத்துவப் பட்டதாரிகளிடமிருந்து (எம்.பி.பி.எஸ்.) அடியில் குறிப்பிட்ட அலுவலருக்கு 1971 ஆகஸ்டு 12ஆம் நாள் அல்லது அதற்கு முன்னதாக வந்து சேரும்படியாக விண்ணப்ப மனுக்கள் வரவேற்கப்படுகின்றன. இதற்கான மனுக்கள் குறிப்பிடப்பட்ட படிவங்களில் தமிழ் நாடு மக்கள் நல்வாழ்வு குடும்பநலத் துறை இயக்குநர் அலுவலகத்தில் கிடைக்கும்.

2. தகுதி:

(அ) தமிழ் நாட்டிலுள்ள மருத்துவ கல்லூரியில் படித்து எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) தமிழ் நாடு மருத்துவ மன்றத்தில் (மெடிக்கல் கவுன்சில்) பதிவு செய்திருக்க வேண்டும்.

3. உதவியாளராகப் பணிக் (அசிஸ்டெண்ட்சிப்) காலம் : ஓர் ஆண்டு.

4. படி விகிதம் (Fixed Allowance) : மாதம் ரூ. 250.

5. இந்த உதவியாளர் பணி, வட்ட (தாலூகா) தலைநகரிலுள்ள மருத்துவமனைகள் மற்றும், கிராம மருத்துவ நிலையங்களுடனும் இணைக்கப்படும். எந்த மருத்துவமனையில் இணைக்கப்பட விரும்புகிறார் என்பதை விருப்ப வரிசையில் (ஆர்டர் ஆப் பிரிபெரன்ஸ்) மனுதாரர் குறிப்பிடலாம்; ஆனல், அவரை எங்கு நியமிக்க வேண்டும் என்று நியமன அதிகாரி எடுக்கும் முடிவே இறுதியானது ஆகும்.

6. உதவியாளர் பணியினை, நியமனதாரரோ, நியமன அதிகாரியோ எந்தவித முன் அறிவிப்பு இல்லாமலும் காரணம் காட்டாமலும் நிறுத்திக் கொள்ளலாம். நியமன அதிகாரியின் முடிவே இறுதியானது ஆகும்.

குறிப்பு.—இந்த ஓராண்டுக் காலத்திற்குள், தான் இணைக்கப்பட்டுள்ள மருத்துவ நிலையத்தினைச் சுற்றியுள்ள வட்டாரத்தில் தனியாக மருத்துவத் தொழில் புரிய வழிவகை தேடிக்கொள்ள இந்தப் பட்டதாரி முயற்சிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இயக்குநர்,
மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத் துறை
சென்னை-6.

---

## பொறியியற் கல்லூரி, கிண்டி, சென்னை-25 அளிக்கும்

கம்பியூட்டர் மற்றும் மானேஜ்மெண்ட் பயிற்சி. 1971 செப்டம்பர் 2 முதல் அக்டோபர் 22 வரை.

தொழில் புரியும் பொறியாளர்கள், மானேஜர்கள், அரசுத் துறைகள், பொதுத் துறைகள், தனியார் துறைகளிலுள்ள தொழிற் கூடங்களில் பணியாற்றும் நிருவாகிகள் கலந்து கொள்ளலாம்.

தகுதிகள்:

பொறியியல் பட்டம் (Degree in Engineering) விஞ்ஞானத்தில் பட்ட மேல் படிப்பு (Post graduate Degree in Science) அல்லது அதற்குச் சமமானது.

மனுக்கள் பெறக் கடைசித் தேதி: 23—8—1971.

சம்பளக் கட்டணம்:

ரூ. 600.

மேல் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

டீன் (P. G. Studies),
பொறியியற் கல்லூரி,
கிண்டி, சென்னை-25.

இயக்குநர்,
தொழிற் கல்வி, சென்னை-25.

## நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை.

தமிழ் நாடு.

### ஒப்பந்த அறிவிப்பு.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட ஷெட்யூல் டெண்டர்களை மேற்பார்வை பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித் துறை), திருச்சிராப்பள்ளி, அவர்கள், சுப்பிரமணியபுரம், புதுக்கோட்டை ரோடு, திருச்சிராப்பள்ளி-1 விலாசத்தி லுள்ள அவருடைய அலுவலகத்தில் 26—8—1971 (வியாழன்) அன்று பிற்பகல் 3-30 மணி வரையில் தமிழ் நாடு கவர்னருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக் கொள்வார். இந்த டெண்டர்கள் அதே தேதியன்று பிற் பகல் 3-35 மணிக்குத் திறக்கப்படும்.

| எண். | வேலையின் பெயர். | டேவணித் தொகை டெபாஸிட். | டெண்டர் ஷெட்யூல் கிடைக்கும் விலாசம். |
|---|---|---|---|
| | | ரூ. | |
| 1 | கும்பகோணம் நகரசபை எல்லைக்குள் கும்பகோணம்—நீடாமங்கலம் சாலையில் மைல் 0/7-ல் ஒரு மேம் பாலம் கட்டுதல். | 21,000 | கோட்டப் பொறியாளர் (நெ.கி.ப.), தஞ்சாவூர். |
| 2 | முத்துப்பேட்டை — மீமிசல் சாலையில் கி.மீ. 58/2 (மைல் 36/3-ல்) ஒரு பாலம் கட்டுதல். | 7,350 | ஷ |
| 3 | முத்துப்பேட்டை— மீமிசல் சாலையில் கி.மீ. 65/8 (மைல் 41/1-ல்) ஒரு பாலம் கட்டுதல். | 5,500 | ஷ |
| 4 | பட்டுக்கோட்டை ஒன்றியம் பலத்தலை கிராமசாலையில் நரையாற்றின் குறுக்கே மைல் 0/8-ல் ஒரு தரைப் பாலம் கட்டுதல். | 3,000 | ஷ |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20·60 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள் வதன்மூலம் கோட்டப்பொறியாளர் அலுவலகம் (நெடுஞ் சாலை-கிராமப் பொறியியல் பணித்துறை) தஞ்சாவூர் விலா சத்திலிருந்து 11—8—1971 முதல் 25—8—1971 வரை யிலான வேலைநாட்களில் அலுவல் நேரங்களில் டெண்டர் நிபந்தனை விவரங்கள், நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம். இந்தத் தொகை திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள டேவணித் தொகை டிபா சிட்டை மேற்கண்ட கோட்டப்பொறியாளரின் (நெடுஞ் சாலை-கிராமப் பொறியியல் பணித்துறை) அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும், ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பில் செலுத்தியதற்கான சலானை டெண்டருடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சி களும், 12 வருட தேசிய தற்காப்பு அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும், தமிழ்நாடு மாநில மின்சார வாரியப் பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்ட் டிராப்டு களும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும் டேவணித் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

மாற்று வடிவ அமைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட் டாது.

பாங்கு காரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பேங்க் ஒப்புதலைப் பெற்று டெண்டருடன் இணைத்து அனுப்பப்படவேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத ஒப் பந்தம் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத டெண்டர்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

அ. தேவப்பிரியம்,
மேற்பார்வை பொறியாளர்
(நெ கி.ப).

---

### ஏல விளம்பரம்

ஒரத்தநாடு மாவட்டக் கால்நடைப் பண்ணையைச் சேர்ந்த கிழக்கு மற்றும் மேற்குப் பகுதித் தோட்டங்களில் உள்ள கீழ்க் கண்ட மரங்களிலிருந்து பலன்களைச் சேகரித்துக் கொள்ளும் உரிமையை ஒரத்தநாடு மாவட்டக் கால் நடைப் பண்ணைக் கண்காணிப்பாளர் அவர்களின் அலுவ லகத்தில் 1971-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26—8—1971 காலை 11-00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | மா மரங்கள் | — | — | — | 847 |
| 2 | புளிய மரங்கள் | .. | .. | .. | 238 |
| 3 | இலுப்பை மரங்கள் | .. | .. | .. | 479 |
| 4 | விளா மரங்கள் | .. | — | — | 22 |
| 5 | முந்திரி மரங்கள் | — | — | — | 48 |
| 6 | நெல்லி மரங்கள் | .. | — | — | 32 |
| 7 | கொய்யா மரங்கள் | | | | 17 |
| 8 | தென்னை மரங்கள் | | — | — | 877 |
| 9 | பலா மரங்கள் | — | — | — | 41 |
| 10 | பனை மரங்கள் | — | — | — | 1,849 |
| 11 | இலவம் பஞ்சு | — | — | — | 29 |

ஏலம் பற்றிய நிபந்தனைகள் மற்றும் விதிகளை ஒரத்தநாடு மாவட்டக் கால்நடைப்பண்ணைக் கண்காணிப்பாளர் அவர்கள் அலுவலகத்தில் எல்லா வேலை நாட்களிலும் வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

(ஒ-ம்) எஸ். கே. காளிமுத்து,
கண்காணிப்பாளர்,
மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு.

---

## தமிழ் நாடு அரசு

நெடுஞ்சாலை கிராமப்பணித் துறை
சென்னை வட்டம், சென்னை-25.

### குறுகிய கால ஒப்பந்த விளம்பரம்.

தமிழ் நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), சென்னை வட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 18—8—1971 அன்று மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| வ.எண். (1) | வேலை விபரம். (2) | முன்வைப்புத் தொகை. (3) |
|---|---|---|
| | | ரூ. |
| 1 | தேசிய நெடுஞ்சாலை எண் 46—கிருட்டிண கிரி —இராணிப்பேட்டை சாலையில் கி.மீ. 52·6 முதல் 65·6 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப் படுத்துதல். | 32,510 |
| 2 | தேசிய நெடுஞ்சாலை எண் 46, கிருட்டிண கிரி —இராணிப்பேட்டை சாலையில் கி.மீ. 75·0 முதல் 85·0 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப் படுத்துதல். | 26,100 |
| 3 | தேசிய நெடுஞ்சாலை எண் 46 கிருட்டிண கிரி—இராணிப்பேட்டை சாலையில் கி.மீ. 85·0 முதல் 95·0 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப்படுத் | 21,00 |
| 4 | தேசிய நெடுஞ்சாலை எண் 46—கிருட்டிண கிரி—இராணிப்பேட்டை சாலையில் கி.மீ. 96·0 முதல் 103·0 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப் படுத்துதல். | 24,820 |
| 5 | தேசிய நெடுஞ்சாலை எண் 46—கிருட்டிண கிரி—இராணிப்பேட்டை சாலையில் கி.மீ. 103·0 முதல் 110·0 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப் படுத்துதல். | 23,885 |
| 6 | தேசிய நெடுஞ்சாலைஎண் 46—கிருட்டிண கிரி——இராணிப்பேட்டை சாலையில் கி.மீ. 110·0 முதல் 115·135 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப் படுத்துதல். | 16,430 |

ஒப்பந்தங்கள் 18—8—1971 அன்றே மாலை 3-15 மணிக்கு திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனாக் கள், வரை படங்கள் முதலியனவற்றை கோட்டப் பொறியாளர், வேலூர் அவர்கள் அலுவலகத்தில் விற்பனை வரியுட்பட ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 51·50 கட்டி 6—8—1971 முதல் 17—8—1971 வரை அலுவலக நேரங் களில் பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத் தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலைக் கிராமப்பணித் துறை), வேலூர், அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் '' ரெவின்யூ டெபாசிட் '' என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ் சாலை கிராமப்பணித்துறை) வேலூர் பெயரில் செலுத்தி செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கி களின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்பவேண்டும்.

குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந் தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

மேற்பார்வைப் பொறியாளர்,
(நெடுஞ்சாலை.)

சென்னை 25
நாள் : 15—7—1971. சென்னைவட்டம், சென்னை-25.

# தமிழ் நாடு அரசு

## நிலநீர் இயக்குநர் அலுவலகம்

### ஒப்பந்தப்புள்ளி அறிக்கை.

**வேலையின் பெயர் :**—நிலநீர் இயக்குநர் அலுவலகத்திற்குத் தளவாடங்கள் வழங்கல்.

தமிழ் நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழ்க் கண்ட வேலைகளுக்காக, நிலநீர் இயக்குநர், சென்னை-4, அவர்களால் மேற்கூறிய அலுவலகத்தில் 30–9–1971-அன்று மாலை 3–00 மணி வரை முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள் நிலநீர் இயக்குநர் அவர்களால் மேற்கூறிய அலுவலகத்தில் அதே நாள் மாலை 4–00 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| எண். | உள் வேலை. | கட்டுத் தொகை ரூபாய். | ஒப்பந்தப் பத்திரங்களின் விலை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | பெர்கூசன் ரிக்குகளுக்கு (Rigs) சிறப்புக் கருவிகள் வழங்கல். | 9,000 | ரூபாய் 10 விற்பனை வரி 40 காசு. |
| 2 | (1) ரோட்டரி ரிக்கு சிறப்புக் கருவிகள் [துண்டுகள் மற்றும் துளை திறப்பான்கள்] வழங்கல். | 12,000 | ஷை |
| | (2) ரோட்டரி ரிக்கு சிறப்புக் கருவிகள் (மட் பம்பு மற்றும் குழாய் வெட்டும் கருவி) வழங்கல். | 3,000 | ஷை |
| | (3) ரோட்டரி ரிக்கு சிறப்புக் கருவிகள் (டவுன் தி ஹோல் ஹேமர்ஸ், பிட்டுகள்) வழங்கல். | 15,000 | ஷை |
| 3 | கேசிங் பைப்புகள், துணைப் பொருள்கள் வழங்கல். | 10,000 | ஷை |
| 4 | ஹைடிராலிக் ஜாக் பம்பு. ஜாக் வழங்கல். | 6,000 | ஷை |
| 5 | ஜியோபிசிக்கல் தளவாடங்கள் வழங்கல். | 21,400 | ஷை |
| 6 | ஜியோ கெமிக்கல் தளவாடங்கள் வழங்கல். | 3,200 | ஷை |
| 7 | போட்டோ ஜியாலஜிக்கல் தளவாடங்கள் வழங்கல். | 2,000 | ஷை |
| 8 | ஹைடிராலஜிக்கல் தளவாடங்கள் வழங்கல். | 6,000 | ஷை |
| 9 | ஹைடிரோ மீட்டிரியாலஜிக்கல் தளவாடங்கள் வழங்கல். | 2,000 | ஷை |
| 10 | ஹைடிரோ ஜியாலஜிக்கல் தளவாடங்கள் வழங்கல். | 15,200 | ஷை |
| 11 | வரை தளவாடங்களும் புகைப் படக்கருவியும் வழங்கல். | 400 | ஷை |

ஒப்பந்த வடிவம் : மெட்ராஸ் பைனான்சியல் கோடு, வால்யூம் 1-ன் வடிவம் 9.

**வேலையை முடிக்க வேண்டிய காலம் :**
3 மாதங்கள்.

மேற்கூறிய அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் ஒப்பந்தப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்குரிய தேதி. — 1–8–1971 முதல் 25–9–1971 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலையை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பி யளிக்க இயலாது) அரசாங்க கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் ''Public works Remittance III other Remittance'' என்ற தலைப்பிட்டு, நிர்வாகப் பொறியாளர், நிலநீர் கோட்டம், சென்னை-17 அவர்களின் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரியை, மேற்படி தொகை செலுத்தப்பட்ட அதே சலானில் "விற்பனை வரி (பி) மாநில விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் வரவினம், பொது விற்பனை வரி'' எனத் தலைப்பிட்டு செலுத்தப்பட வேண்டும். சலானைக் கொடுத்த பின்பு தான் ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

இயக்குநர்,
நிலநீர்.

# தமிழ் நாடு அரசு பணியாளர் தேர்வுக் கழகம்.

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான மனுக்கள் 1971-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14-ஆம் நாள் மாலை 5 மணி வரை தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் ஏற்றுக்கொள்ளப்படும் :—

1. போர்மென் இன்ஸ்ட்ரக்டர் (செராமிக்ஸ்)—ஒன்று.
   செராமிக் ட்ரெயினிங் ஸ்கூல்

2. செராமிக் அசிஸ்டண்ட் (கில்ன்)

சர்வீஸ் சென்டர் ஃபார் செராமிக் விருத்தாசலம்—ஒன்று சம்பளம் : ரூ. 400—15—475—20—575—25—650 மாதம் ஒன்றுக்கு

வயது : (1) போர்மன் இன்ஸ்ட்ரக்டர் (செராமிக்ஸ்)

1—7—1971-ம் நாளில் 40 வயதுக்குக் குறைவாக இருக்க வேண்டும்.

(2) செராமிக் அசிஸ்டெண்ட் (கில்ன்).

1—7—1971 நாளில் 45 வயதுக்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

தகுதிகள் (1) போர்மென் இன்ஸ்ட்ரக்டர் (செராமிக்ஸ்) வேலைக்கு.

(அ) (1) செராமிக்ஸ் பாடத்தில் பல்கலைக் கழக மானியக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம், கல்வி நிலையம், அல்லது மத்திய மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்ட நிலையங்கள் மூலம் பெற்ற பட்டம் அல்லது டிப்ளோமா, அல்லது விருத்தாசலத்தில் உள்ள செராமிக்ஸ் ட்ரெயினிங் ஸ்கூல் அளிக்கும் தகுதிச் சான்றிதழ் ஏதாவது ஒன்று பெற்றிருக்க வேண்டும்.

2. பட்டம் பெற்றவர்களாக இருந்தால் ஒரு ஆண்டுக்குக் குறையாமலும் டிப்ளோமா, அல்லது தகுதிச் சான்றிதழ் பெற்றவர்களாக இருந்தால் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமலும் செராமிக் பாக்டரி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(ஆ) (1) ஒரு செராமிக் பாக்டரியில் ப்ரொடக்ஷன் அசிஸ்டெண்டாக ஏழு ஆண்டுகளுக்குக் குறையாமல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

2 செராமிக் அஸிஸ்டெண்ட் (கில்ன்) பணிக்கு.

செராமிக்ஸ் பாடத்தில் பட்டம், அல்லது டிப்ளோமா அல்லது தகுதிச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

செராமிக் பாக்டரியில் கில்ன் பிரிவில் ஒய்ட் வேர்ஸ் மானுபாக்சரிங் பணியில் பட்டம் பெற்றவர்களானால் மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமலும் டிப்ளோமா, சான்றிதழ் பெற்றோர் ஐந்து ஆண்டுகளுக்குக்குறையாமலும் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்

அல்லது

செராமிக் பாக்டரியில் ஒய்ட் வேர்ஸ் உற்பத்தி செய்வதில் கில்ன் சூப்பர்வைசராகவோ அல்லது, போர்மேனாகவோ ஏழு ஆண்டுகளுக்குக் குறையாமல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

தமிழ்நாடு நெடுஞ்சாலை எஞ்சினீயரிங் சபார்டினேட் சர்வீசின் கீழ், ஹைவேஸ் ரூரல் ஓர்க்ஸ் துறையில் சூப்பர்வைசர் ரூரல் வாட்டர் சப்ளை போர்வெல்ஸ்—ஒன்று.

சம்பளம்: ரூ. 325—15—475—20—575— 25 — 650 மாதம் ஒன்றுக்கு

வயது : 1—7—1971-ம் நாளில் 25 வயதுக்குக் கீழ் இருக்க வேண்டும்

தகுதிகள் : (1) மெக்கானிக்கல் எஞ்சினீயரிங் படித்து பட்டம் பெற்றிருக்க வேண்டும்; அல்லது எல்.எம்.இ. அல்லது எல்.ஏ.இ. டிப்ளோமா வேண்டும்.

(2) தொழிற்சாலையில் 6 மாதங்களுக்குக் குறையாமல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

3 தமிழ்நாடு எலக்டிரிகல் இன்ஸ்பெக்டரேட் சப் ஆர்டினேட் சர்வீஸில் ஜூனியர் எலக்ட்ரிக்கல் இன்ஸ்பெக்டர்—எட்டு இடங்கள்.

சம்பளம் : ரூ. 400—15—475—20—575 — 25 — 650 மாதந்தோறும்.

**வயது :** 1—7—1971-ம் நாளில் 28 வயதுக்குக் கீழே இருக்க வேண்டும்.

தகுதி : பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பல்கலைக் கழகம் அல்லது கல்வி நிலையத்தின் மூலம் எலக்ட்ரிகல் இஞ்சினீயரிங் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

குறைந்த பட்சம் கேட்கப்பட்டுள்ள கல்வித் தகுதியைவிட அதிகமான தகுதி பெற்றுள்ள தாழ்த்தப்பட்டோர், மலை ஜாதியினர், பிற்பட்டோர் ஆகியவர்களுக்கு வயது வரம்பு கிடையாது. மற்ற தாழ்த்தப்பட்டோர் மலைஜாதியினர் விஷயத்தில் வயது மேல் வரம்பு ஐந்து ஆண்டுகள் தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு உத்திரவால் பாதிக்கப்பட்டவர்கள், பொற்கொல்லர்கள், அவர்களுடைய மகன், திருமணமாகாத மகள் ஆகியோருக்கும் 1—1—1963-ம் நாளிலோ அதற்குப் பின்னரோ தேசிய மாணவர் படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜர் இன்ஸ்ட்ரக்டர் பதவியில் முழு நேரப் பொறுப்பேற்றிருந்த முன்னாள் என். சி. சி. கேடட்கள் ஆகியோருக்கும் வயதைப் பொறுத்தவரை சலுகைகள் அளிக்கப்படும். 1—7—1971-ல் நாற்பது வயதுக்குக் குறைவாக இருக்கும் முன்னாள் ராணுவ வீரர்கள், 1—1—1964-க்குப் பிறகு கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வெளியேறி இந்தியாவுக்கு வந்தோர், இலங்கை, பர்மா ஆகிய நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டோர் ஆகியோருக்கு தகுதி, வயது இரண்டிலும் சலுகைகள் உண்டு.

மனுப்படிவங்களும் விளக்கத்தாள்களும் பெறுவதற்கு செயலாளர், தமிழ் நாடு அரசு பணியாளர் தேர்வுக்கழகம், சென்னை 2 என்ற முகவரிக்கு, 20 காசு அஞ்சல் தலை ஒட்டி சுய முகவரி எழுதி 23 சென்டிமீட்டர் ' நூல் அஞ்சல் ' என்றும் குறிப்பிடப்பட்ட நீளமுள்ள உறை ஒன்றினை உள் வைத்துக் கடிதம் அனுப்ப வேண்டும்.

# தமிழ்நாடு அரசு

## (வேளாண்மைத் துறை)

### ஒப்பந்தப்புள்ளி அறிக்கை.

தமிழ் நாடு ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும், திருச்சி வட்டார வேளாண்மைப் பொறியாளரால், நிறுவனங்களிலிருந்து கீழ்க்கண்ட பொருட்கள் வழங்குவதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 16—8—1971 மாலை 3 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

அந்த ஒப்பந்தப்புள்ளிகள் ஒத்தி வைப்பதாக விளம்பரப் படுத்தப்பட்டாலொழிய அதே நாள் 4 மணிக்கு, அப்போது வந்திருக்கும் டெண்டர்தாரர்கள் முன்னிலையில் திருச்சி, கோட்ட வேளாண்மைப் பொறியாளரால் பிரிக்கப்படும்.

| எண். (1) | தேவை. (2) | விளக்கம். (3) | விலை மதிப்பீடு. (4) (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | 5 | 20 'எச்பி.' மின்சார பம்புசெட் ஸ்டார்ட்டர், சுவிச் உள்ளதும், 40 அடிக்கு மேல் 6"×5" அளவில் நீர் உறிஞ்சி எடுக்க வல்லதும்—ஒவ்வொன்றும் 625 ஜி. பி. எம். நீர் இறைக்கக் கூடியதும் (விற்பனைவரி முதலியன அனைத்தும் சேர்த்து) | 48,000 |
| 2 | 2 | 15''×3'' அளவுள்ள ஜி. ஐ. டி. சப்ளை செய்வது முதலியன உட்பட. | |
| 3 | 11 | 12''×3'' அளவுள்ள ஜி.ஐ. டி. சப்ளை செய்வது முதலியன உட்பட. | |
| 4 | 3 | 9''×3'' அளவுள்ள ஜி.ஐ. டி. சப்ளை செய்வது முதலியன உட்பட. | |
| 5 | 20 | 3'' அளவுள்ள ஓர்ரிசெஸ் வால்வுகள் சப்ளை செய்வது, விற்பனை வரி முதலியன உட்பட. | |
| 6 | 16 | 3'' அளவுள்ள சுலுயிஸ் வால்வுகள் சப்ளை செய்தல். (விற்பனை வரி முதலியன உட்பட.) | |
| 7 | 4 | 9'' அளவுள்ள ஜி. ஐ. கேட் வால்வுகள் சப்ளை செய்தல் (விற்பனை வரி முதலியன உட்பட) | |
| 8 | 40 மீட்டர்கள் | 6'' விட்டமுள்ள ஜி.ஐ. குழாய்கள் சப்ளை செய்தல், விற்பனை வரி முதலியன உட்பட. | |
| 9 | 20 (மீட்டர்கள்). | 5'' விட்டமுள்ள ஜி. ஐ. குழாய்கள் சப்ளை செய்தல், விற்பனை வரி முதலியன உட்பட. | |
| 10 | 4 | 6'' விட்டமுள்ள கப்ளிங் சப்ளை செய்தல், விற்பனைவரிமுதலியன உட்பட. | |
| 11 | 20 | 6'' விட்டமுள்ள ப்ளாங்ஸ் சப்ளை செய்தல் (விற்பனைவரிமுதலியன உட்பட). | |
| 12 | 4 | 6'' விட்டமுள்ள ஜி. ஐ. பெண்ட் சப்ளை செய்தல், (விற்பனை வரி முதலியன உட்பட). | |
| 13 | 4 | 5'' விட்டமுள்ள ப்ளாங்ஸ் சப்ளை செய்தல் (விற்பனை வரி முதலியன உட்பட). | |

**டெண்டர் படிவம் விலை :—ரூ. 3 (3 சதவிகிதம் விற்பனை வரி)**

(1) ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், உதவி வேளாண்மைப் பொறியாளர், மண்வள பாதுகாப்புத் திட்டம், 75-ஏ, சாலை ரோடு, திருச்சி—3 என்ற அலுவலகத்திலிருந்து பெறலாம்.

(2) ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் வேலை நாட்களில் காலை 10—30 மணி முதல் மாலை 4 மணி வரை கிடைக்கும். பத்திரங்களுக்கான விலையை ரொக்கமாகவோ, மணியார்டர் மூலமாகவோ பத்திரம் தேவை என்று கோரிக்கை விடுத்துப் பெறலாம்.

(3) ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலைத் தொகை எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது.

(4) ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எந்தவிதக் காரணமும் காட்டாமல் தள்ளிவிடவோ ரத்து செய்துவிடவோ திருச்சி தோட்ட வேளாண்மைப் பொறியாளருக்கு முழு உரிமையும் உண்டு.

**கோட்ட வேளாண்மைப் பொறியாளர்,**
திருச்சி.

# தமிழ்நாடு நீர் வழங்கல்

## வடிகால் வாரியம்

### சீட்டு ஒப்பந்தப் புள்ளி அறிக்கை

தமிழ்நாடு நீர் வழங்கல், வடிகால் வாரியத்திற்காகவும் அதன் சார்பிலும், துறையின் முறைப்படி உள்ள வடிவத்தில், மேலுறைக்கு மேலே வேலையின் பெயர் குறிக்கப்பட்ட, முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளை பொது சுகாதார இஞ்சினீயரிங் துறையில் (த. நீ. வ. வா.), பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலை, கிராமப் பணித் துறை அல்லது அதுபோன்ற வேறு அரசுத் துறைகளில் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சூப்பிரண்டிங் இன்சினீயர் (பொ. சு. இ.) எண் 17, சர் பி. டி. ராஜன் சாலை, மதுரை-2-ல் தமது அலுவலகத்தில் 25—8—1971 புதன் கிழமை பிற்பகல் 3 மணி வரை பெற்றுக் கொள்ளுவார். அதே நாளில் பிற்பகல் 3-30 மணிக்கு அவை திறக்கப்படும்.

வேலையின் பெயர்:—

லப்பைக்குடிக்காடு நீ.வ.தி—இரண்டாம் கட்டம்—ஹெட் வொர்க்ஸ்—சப்மர்சிபிள் பம்பு செட்டுகள், துணைக் கருவிகள் சப்ளை, டெலிவரி, நிர்மாணம்.

ஒப்பந்த முறை.—

மொத்தத் தொகை.

கட்டுத் தொகை:—

ரூ. 1,400 (ரூபாய் ஒரு ஆயிரத்து நாநூறு மட்டும்)

ஒப்பந்தப் புள்ளியுடன், அரசு கருவூல சலான் வடிவிலோ அல்லது டிமாண்ட் டிராப்ட் வடிவிலோ அல்லது தேச உடைமையாக்கப்பட்ட ஏதாவது ஒரு பாங்கின் பாங்க் காரண்டி வகையிலோ நிர்வாக இஞ்சினீயர், பொது சுகாதார இஞ்சினீரிங் டிவிஷன்—பி. 15. தில்லை நகர் மெயின் ரோடு, திருச்சிராப்பள்ளி—3, அவர்கள் கணக்கில் இத்தொகை கட்டப்பட வேண்டும்.

வேலையை முடிக்கவேண்டிய காலம் 6 மாதங்கள்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரத்தின் விலை ரூ. 10-30 (பத்து ரூபாய்- முப்பது காசுகள் மட்டும்—விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரத்தை நிர்வாக இஞ்சினீயர், பொதுசுகாதார இஞ்சினீரிங் டிவிஷன், பி. 15. தில்லை நகர், மெயின் ரோடு, திருச்சிராப்பள்ளி—3 அவர்களிடமிருந்து 6—8—1971 மாலை 5 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

**கே. கோவிந்தமேனன்,**
சூப்ரண்டிங் இஞ்சினீயர்,
(பொ.சு.இ)

மதுரை—2.
நாள்; 15—7—1971.

# தமிழ்நாடு வனத்துறை

## மதுரை வடக்குக் கோட்டம்

### ஸ்டேஷன் வேகன் ஏல விற்பனை

1955 மாடல் MSY 2667 பதிவு எண் கொண்ட பழுதடைந்த ஸ்டாண்டர்டு வேன் கார்டு ஸ்டேஷன் வேகன் ஒன்று அது எங்கு எந்த நிலையில் உள்ளதோ அதே நிலையில் தமிழ் நாடு கவர்னர் சார்பில் மதுரை வடக்குப் பிரிவு மாவட்ட வன அலுவலர் (திண்டுக்கல்) அவர்களால் மதுரை காந்தி நகரிலுள்ள மதுரை மண்டல வனப் பாது காவலர் அலுவலகத்தில் 17—8—1971 அன்று காலை 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். விருப்பமுள்ள ஏலதாரர்கள் அந்த வேனை, மதுரை மேலூர் சாலையிலுள்ள மதுரை தெற்குப் பிரிவு மாவட்ட வன அலுவலர் பங்களா காம்பவுண்டில் பார்த்துக் கொள்ளலாம். விற்பனை நிபந்தனைகளுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு எழுதிக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

**(ஒ-ம்) கி. திருமலைராஜ்,**
மாவட்ட வன அலுவலர்,
மதுரை வடக்குக் கோட்டம்
திண்டுக்கல்

திண்டுக்கல்,
21—7—1971

# தமிழ்நாடு அரசு
## போக்கு வரத்துத் துறை, சென்னை-2.

### ஒப்பந்த விளம்பரம்.

தமிழ்நாடு அரசாங்க ஆளுநரின் சார்பில், தமிழ்நாடு அரசுபோக்குவரத்து இலாகாவின் கட்டிடப் பொறியாளரால், வரும் இரண்டு வருடத்திற்கு தமிழ்நாடு அரசுபோக்குவரத்துத் துறையிலுள்ள, விரைவு வண்டி பேருந்து ம[illegible]க்தில் (எஸ்பிளனேடு) ஒரு சிறிய க[illegible]த்தைக்கு விடப்படும். கடையில் உபயோகத்திற்கு தயார் செய்யப்பட்ட பங்க் ஒன்று (A pre-fabricated Bunk 10"×9",) இந்த இலாகாவினுல் கொடுக்கப்படும் முத்திரையிடப்பட்ட கவர்களில் டெண்டர்கள் 25—8—1971 மாலை 3 மணி முடிய கட்டிடப் பொறியாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, போக்குவரத்து இல்லம், சென்னை—2, அவர்களால் வரவேற்கப்படுகின்றன. டெண்டர்கள் அதே நாளில் மாலை 3-15 மணிக்கு திறக்கப்படும். டெண்டர் விதிமுறைகள் கட்டிட பொறியாளர் அலுவலகத்தில், எல்லா வேலை நேரங்களிலும் ரூ. 1·04 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இந்தப் பணம் திருப்ப[illegible]மாட்டாது.

**இயக்குநர்,**
(த. அ. போ. து.)









# அரசு அலுவலகங்களுக்கு அள்ளித்தரும் அருவி

அது ஓர் அரசு அலுவலகம், டக டக. . டக டக . . என ஓசை ஒலிக்க ஒரு பெண்மணி தட்டச்சினை இயக்குகிறார். அவர் பயன்படுத்தும் தட்டச்சு, தாள், பென்சில், ரப்பர் இத்தியாதி பொருள்கள் எங்கிருந்து அரசு அலுவலகங்களுக்குக் கிடைக்கின்றன ?

தமிழக அரசு எழுதுபொருள் கிடங்கு ஒன்று சென்னை துறைமுகப் பகுதியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக எல்லையில் இயங்கி வருகின்றது.

*1953*-ஆம் ஆண்டு வரை இக்கிடங்கு சென்னை மாவட்ட ஆட்சியாளரின் பொறுப்பில் இருந்து வந்தது. 15—7—1953 -லிருந்து 'எழுதுபொருள் அச்சுத்துறை' என்னும் பெயரில் தனித்துறையாக இயங்கி வருகிறது. எழுது பொருள் அச்சுத்துறை இயக்குநரின் நேர்முகப் பார்வையிலும் உதவி இயக்குநரின் பொறுப்பிலும் இந்தக் கிடங்கு செயல்பட்டு வருகின்றது.

இந்த அலுவலகத்தின் தலையாய பணி, தமிழக அரசின் தலைமைச் செயலகம் முதல், தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் எல்லா எழுதுபொருள்களும், தட்டச்சுகளும், கடைநிலை ஊழியர்களுக்கு உடைகளும் வழங்குதலாகும். மருத்துவ மனைகளில் பணியாற்றும் எல்லாக் கடைநிலை ஊழியர்களுக்கும் உடைகள் வழங்குவதும் இவ்வலுவலகம் தான்.

எழுதிடவும் அச்சடிக்கவும் பயன்படும் தாள்கள் — அட்டைகள், தட்டச்சுகள், படிவம் எழுதும் படிப்பெருக்கிகள், கதர்த்துணி, மற்றும் அரசு அச்சகம்—சிறைச்சாலை ஆகியவற்றில் தயாரிக்கப்படும் எழுது பொருட்கள் நீங்கலாக அலுவலகங்களுக்குத் தேவையான இதர எழுது பொருள்களையும் ஆண்டு தோறும் டெண்டர் முறையைக் கடைப்பிடித்து ஆறு உயர் அதிகாரிகள் அடங்கிய சரக்குக்கொள் முதல்குழுவினரால்—தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து வாங்கிச் சேகரித்துப் பின் பல்வேறு அலுவலகங்களுக்கும் அந்தந்த அலுவலகத் தேவைப் பட்டியலுக்கிணங்கவும், எழுது பொருள் நடைமுறை நூல் விதிகளுக்கிணங்கவும் விநியோகிக்கப்படுகின்றன. தாள்களும், அட்டைகளும் டெல்லியிலுள்ள மைய அரசின் பொதுப்பங்கீட்டு இயக்குநரின் ஒதுக்கீட்டின்படி. அவரால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு பேப்பர் ஆலைகளிலிருந்து கிடைக்கப் பெற்று, இருப்பில் வைத்து, மாநிலம் முழுவதும் உள்ள அலுவலகங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. அதே போன்று தட்டச்சுகளும், படிபெருக்கி இயந்திரங்களும் அவரால் நிர்ணயிக்கப்பட்ட விலையின்படி அந்தந்தத்தயாரிப்பாளர்களிடமிருந்து கிடைக்கப் பெற்று விநியோகம் செய்யப்படுகின்றன. தமிழக அரசு தலைமை அச்சகத்திற்கும், கிளை மற்றும் வட்டார அச்சகங்கள் அனைத்துக்கும் வேண்டிய அச்சடிப்பதற்கான தாள்கள் முழுதும் இந்த எழுதுபொருள் அலுவலகக் கிடங்கிலிருந்துதான் வழங்கப்படுகின்றன. மேலும்

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காக 1083 ரூபாயை தொழிலாளர் நல அமைச்சரிடம் சேர்ப்பிக்கிறார் அச்சக எழுதுபொருள் துறை இயக்குநர் திரு ஜி. ரங்காராவ் ஐ.ஏ.எஸ். அவர்கள்.



தலைமைச் செயலகம், அமைச்சர்கள் அலுவலகம், மற்றும் சென்னையிலுள்ள இலாகா தலைவர்கள் அலுவலகங்களில் உள்ள அனைத்துந் தட்டச்சுகளையும் பழுது பார்த்திடும் பொறுப்பினையும் இவ்வலுவலகமே கவனிக்கிறது. மாநிலத்திலுள்ள அனைத்து அலுவலகங்களுக்கும் தட்டச்சு விநியோகிக்க நிலையான உத்தரவு பெறுத நிலையிலும், புதிய தட்டச்சுகள் கையிருப்பில்லாத நேரத்திலும் கடனுக்குப் பழைய தட்டச்சுகள் அனுப்பிவைக்கப்படுகின்றன.

இவை தவிர அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தல் காலத்தில்—தேர்தலுக்கு வேண்டிய அனைத்து எழுதுபொருள்கள்—தட்டச்சுகள் வழங்கும் பணியையும், வாக்குச் சீட்டுகள் அச்சடித்து வழங்கும் பணியையும் குறிப்பிட்ட காலக் கெடுவிற்கு முன்னதாகவே இத்துறை செவ்வனே முடித்துக் கொடுத்து அரசின் சான்றையும் பெற்றிருக்கின்றது என்பதனை இங்குக் குறிப்பிடலாம்.

ஆண்டுக்குச் சுமார் 3,000 டன் தாள்கள், அட்டைகள் இதன் மூலம் பயன்படுத்தப்படுகின்றன.

1968–69-ல் 3,507 டன்கள் பேப்பர் ஆலைகளிலிருந்து வாங்கப்பட்டுள்ளது. 1969–70-ல் 2,669 டன்களும், 1970–71-ல் 3,864 டன்களும் வரப்பெற்றுள்ளன. 1971-72 ஆண்டிற்கான நமது 'பேப்பர்' தேவை 7,710 டன்கள்.

கடந்த மூன்று ஆண்டுகளில் அரசு அலுவலகங்களுக்குவழங்கப்பட்ட தட்டச்சுகளின் விவரங்கள் பின்வருமாறு:—

1968-69-ல் 429 ஆங்கிலத் தட்டச்சுகளும், 88 தமிழ் தட்டச்சுகளும் 1969–70-ல் 392 ஆங்கிலத் தட்டச்சுகளும், 152 தமிழ்த் தட்டச்சுகளும், 1970–71–ல் 585 ஆங்கிலத் தட்டச்சுகளும், 397 தமிழ் தட்டச்சுகளும் வழங்கப்பட்டுள்ளன.



தொழிலாளர் நலஅமைச்சர் திரு என். வி. நடராசன் அவர்கள் மருந்தகத்தைத் திறந்து வைக்கிறார்கள்.

இந்த எழுது பொருள்களுக்கான ஆண்டுச் செலவு எவ்வளவு தெரியுமா?

1967-68-ஆம்ஆண்டு பேப்பர், தட்டச்சு முதலியவை அடங்கிய எழுதுபொருள்கள் ஏறத்தாழ 86 இலட்ச ரூபாய்க்குக் கொள் முதல் செய்யப்பட்டன. மூன்று ஆண்டுகளில் இது அதிகரித்து 1969-70 ஆம் ஆண்டில் ரூபாய் ஒரு கோடியைத் தாண்டி விட்டது.

இந்த அலுவலகத்தில் 252 நிரந்தர அலுவலர்களும், 38 தற்காலிக அலுவலர்களும் பணியாற்றி வருகின்றனர்.

அயராது உழைக்கும் இவ்வலுவலக ஊழியர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் அரசின் எல்லாச் சலுகைகளையும் பெறுகின்றனர். அத்துடன் புதிய சலுகையாகச் சமீபத்தில் இங்கு மருந்தகம் ஒன்றும் திறக்கப்பட்டுள்ளது. எழுது பொருள் அச்சக இயக்குநர் திரு ரங்கராவ் ஐ. ஏ. எஸ் தலைமையில் தொழிலாளர் நல அமைச்சர் திரு என். வி. நடராசன் அவர்களால் இந்த மருந்தகம் திறந்து வைக்கப்பட்டது. எழுதுபொருள்—அச்சுத் துறைத் துணை இயக்குநர் திரு நாகராஜன் எம்.ஏ. அனைவரையும் வரவேற்றுப் பேசினார். எழுதுபொருள் உதவி இயக்குநர் திரு கோவிந்தராஜன் துறையின் செயல்முறை பற்றி எடுத்துக்கூறினார்.



அச்சக எழுதுபொருள்துறை துணை இயக்குநர் திரு நாகராசன் எம்.ஏ. வரவேற்றுப் பேசுகிறார்.

தமிழக அரசு தனது ஊழியர்களுக்குப் பெருத்த அளவில் சம்பள உயர்வைக் கொடுத்திருப்பதால் அனைத்து ஊழியர்களும், ஓய்வு பெறும் சமயத்தில் மிகவும் கணிசமான தொகையை ஊழியக் கொடையாகவும் பெறுவதோடல்லாமல், தொடர்ந்து ஓய்வு ஊதியத்தையும் மற்றும் பல சலுகைகளையும் ஓய்வு பெறுகின்ற காலத்தில் பெற்று, வளமான வாழ்வை நடத்த வழிவகை செய்துள்ளது. ஒவ்வொரு அரசு ஊழியரும் அவரது குடும்பமும் வாழ்நாள் முழுதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது என்பதை உள்ளபடி உணர்ந்து இவ்வலுவலகத்தைச் சார்ந்த அனைத்து ஊழியர்களும் தனிப்பட்ட முறையிலும், பொதுவாகவும், தங்களது பணிகளைப் புதிய உற்சாகத்துடனும், எழுச்சியுடனும் செயலாற்றி வருகின்றனர்.





# தாய்மை வெல்லும்

இல. பழனியப்பன்

தாய்மை தெய்வீகமானது. மிக மிகப் புனிதமானது. தாய்மைக்குத் தலை வணங்காதவர்களை அகில உலகத்திலும் காண்பது அரிது. கண்கண்ட தெய்வம் அன்னைதான். தாய்மையின் போதுதான் பெண்மை பெருமையடைகிறது. ஒரு தாயின் அன்பைத் தவிர, உலகத்தில் எதை வேண்டுமானாலும் விலைக்கு வாங்கிவிடலாம். ஒரு தாய் எந்த விதமான தியாகத்தையும்ஏற்றுத் தன் செல்வங்களைக் காப்பாற்றும் தன்மை படைத்தவள். மற்றவர்களால் ஒரு தாயின் உன்னத இடத்தைப் பெற முடியாது. நாம் வாழும் நாடு தாய் நாடு. நாம் பேசும் மொழி தாய் மொழி. அன்னைக்குப் பின் தந்தை. தாய்க்குப் பின் தான் தாரம். உலக சமயங்கள், உலக இலக்கியங்கள் அனைத்தும் தாய்மையின் புகழ் பாடுகின்றன. அத்தகைய தாய்மைக்கு உலகெங்கணும் கொஞ்ச காலமாகச் சோதனை ஏற்படத் தொடங்கியிருக்கிறது. அத்தகைய நிலை நீடித்தால் தாய்மையின் நிலை என்னவாகும் என்பதை நாம் சிந்திக்க வேண்டிய நேரம் வந்து விட்டது.

பழங்காலத்திலே நம் தாய்மார்கள் கர்ப்பிணியாக இருக்கும் பொழுது கடின வேலைகளைக் கூட மிக எளிதாகப் பார்க்க முடிந்ததே அந்நிலை இன்றுள்ளதா? தானாகப் பிறந்த குழந்தைகளை ஆயுதங்களின் உதவியுடன் வெளி உலகுக்குக் கொண்டுவரவேண்டிய நிலை இன்று சாதாரணமாக நிலவுகிறதே காரணமென்ன? தலைமுறை தலைமுறையாக வலிவோடும், பொலிவோடும் திகழ்ந்த நம் பெண்கள் இன்று உடல் மெலிந்து, உள்ளம் சோர்ந்து, வாழ்க்கையிலே விரக்தியோடும், வேதனையோடும் காணப்படுகிறார்களே? இந்நிலை நாட்டுக்கு நல்லதுதானா? வருங்காலச் சந்ததியினரை உருவாக்கும் தாய்க்குலம் தளர்ச்சியடையலாமா? இருபது வயதுப் பெண்மணிகூட முப்பது முப்பந்தைந்து வயது மதிக்கத் தக்க நிலையிலே களை இழந்து காணப்படுவதன் காரணமென்ன?

உடலிலே ரத்தமின்றி எலும்புக் கூடுகளாக நம் கண்முன் நடமாடும் தாய்மார்களின் எண்ணிக்கைதான் எத்தனை? எத்தனை? இப்படி அடுக்கடுக்காய் வரும் கேள்விக் கணைக்கு அடிப்படைக் காரணம் இடைவெளியற்ற மகப் பேறுதான் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

நம் இந்தியத் தாய்மார்கள் நாள் ஒன்றுக்கு 57,000 குழந்தைகளைப் பெற்றெடுக்கின்றார்கள். ஒன்றரை விநாடிக்கு ஒரு குழந்தை வீதம் பிறந்து கொண்டே இருக்கிறது. எத்தனை மகப் பேறு நிலையங்களையும், மருத்துவ மனைகளையும், தாய்-சேய்நல விடுதிகளையும் ஏற்படுத்தினாலும், பிரச்சினையைச் சமாளிக்க முடியவில்லை. மகப் பேற்றுக்கு மருத்துவ மனைக்குச் செல்லும் தாய்மார்களைக் குழந்தை பிறந்த சில நாட்களிலேயே வீட்டிற்கு அனுப்ப வேண்டிய நிலைதான் இன்றளவும் நிலவுகின்றது. இப்படி மக்கள் தொகையின் அபரிமிதமான வளர்ச்சிக்கு நம் தாய்மார்கள் அடிப்படைக் கருவியாகவும், காரணமாகவும் இருக்கின்ற நிலை நமக்கும் நல்லதல்ல. நாட்டுக்கும் நல்லதல்ல.





மகப் பேற்றுக் காலத்திலே மருத்துவ விடுதியில் தாய்மார்கள் பிரசவ வேதனையிலிடும் கூக்குரலைச் செவிமடுப்போர் எல்லாரும் வாயடைத்துப் போய்விடுவார்கள். குழந்தைகளை வெளிக் கொணர டாக்டர்கள் ஒரு பேராட்டமே நடத்த வேண்டியநிலைஏற்பட்டுவிடுகிறது. அப்படிப் போராட்டம் நடத்தி வெளி உலகுக்குக் கொண்டுவரப் பட்ட குழந்தைகளில் எத்தனை உயிருடன் இருக்கின்றன என்பது இன்றளவும் கேள்விக் குறியாக இருந்து வருகிறது. அப்படியே காப்பாற்றப்பட்டாலும் எத்தனை குழந்தைகள் நல்ல முறையில் வளர்ச்சி யடைகின்றன என்பதும் மிகவும் சிந்திக்க வேண்டியதொன்று.

பல தாய்மார்கள் மூன்றுவது குழந்தையோ, நான்காவது குழந்தையோ பெறுகின்றபோது, அவர்கள் உயிர் பிழைப்பதே அரிதாக உள்ளது. வெளிப்படையாகச் சொல்லப்போனல் இடைவெளியில்லாமல் மகப்பேற்றுக்கு இலக்காகும் தாய்மார்களில் பெரும்பான்மையோர் பிரசவ காலத்தில் இறந்து விடுகிறார்கள். அந்தத் தாய்மார்களின் கணவர்களுக்கு, வேறு மனைவிமார்கள்—மறு மணம் செய்து கொள்வதின் வாயிலாக எளிதில் கிடைத்துவிடலாம். ஆனல், தாயை இழந்த சேய்களின் நிலை மிகவும் பரிதாபகரமானது என்பதை நாம் மறக்கக் கூடாது. தாயன்பு இன்றி ஏங்கும் அக்குழந்தைகளின் முறையான வளர்ச்சி பெரிதும் தடைப்படுகின்றது. அவர்களின் எதிர் காலம் இருள்மயமாகிவிடுகிறது. ஆயிரக் கணக்கான குழந்தைகள் நாள்தோறும் தாயன்பிற்கு ஏங்கித் தவிப்பதை நாம் காண்கிறோம். பிரசவ காலத்தில்தான் பெரும்பான்மையான தாய்மார்கள் இறக்கின்றார்கள். இந்தப் பிரச்சினைக்கு விரைவில் நாம் தீர்வு காணவிடில் அனாதைக் குழந்தைகளின் பிரச்சினை புதிய உருப்

பெற்று நம் வருங்காலச் சந்ததியினரின் வளமான வாழ்வைப் பாதித்து விடும்.

ஒரு குழந்தைக்கும், மற்றொரு குழந்தைக்கும் குறைந்த அளவு மூன்றாண்டு இடைவெளி இருக்க வேண்டும் என்பதை மனத்தில் கொண்டுதான் நம் பெரியவர்கள், பிரசவத்திற்குத் தாய் வீடு வரும் பெண்களை, பிறந்த குழந்தைக்கு இரண்டு வயது தொடங்கிய பின்னர் கணவன் வீட்டிற்கு அனுப்புவார்கள். குழந்தைப் பேற்றுக்குப் பின், பிரசவ காலத்தில் இழந்த சக்தியை ஈடுகட்டப் பச்சிலை மருந்துகளைத் தாய்மார்களுக்கும், மற்ற மருந்துகளைக் குழந்தைகளுக்கும் கொடுத்து வந்தார்கள். உணவுப் பழக்க வழக்கங்களை முறைப்படுத்துதல், புதிதாகக் குழந்தை பெற்ற தாய்மார்களுக்குக் குழந்தை வளர்ப்பு பற்றிக் கற்றுக் கொடுத்தல் போன்றவற்றைத் தெரிந்து கொள்ளத் தாய் வீட்டிலுள்ள பெரியவர்கள் காரணமாயிருந்தார்கள். எதிர்காலத் தாய்மார்கள் அதாவது திருமண வயதில் தாய் வீட்டில் இருக்கும் பெண்களும் இதனால் பயனடைந்து வந்தார்கள். ஆனால், தற்காலப் பொருளாதாரச் சூழ்நிலையில் கணவனும், மனைவியும் எப்பொழுதும் சேர்ந்தே வாழ வேண்டிய நிலையுள்ளது. மனைவியைத் தாய் வீட்டிற்கு அனுப்பி விட்டுக் கணவன் உணவு விடுதிகளை நம்பி வாழ முடியாத நிலை ஒரு பக்கம், மகப் பேற்றுக்கு வரும் பெண்ணை அதிக நாள் வைத்துப் பராமரிக்க முடியாத பெற்றோர்களின் நிலை ஒரு பக்கம் காணப்படுகின்றது. அதனால் கணவன், மனைவி இல்லற வாழ்க்கையில் வாழும் காலம் அதிகமாகிவிட்டதால், சிறு குடும்ப நெறியைப் பின்பற்றுவதே தலைசிறந்த வழி. அளவான குடும்பமே ஆனந்தமான குடும்பம். திட்டமிட்டு வாழ்வோர் தெவிட்டாத இன்பத்



தைப் பருகி வருவதை நாம் நேரடியாகக் காண்கிறோம். பணக்காரர்களும், வாழ்க்கையில் எல்லா வசதி பெற்றவர்களும், சிறு குடும்ப நெறியைப் பின்பற்றி வாழத் தலைப்பட்டுவிட்டார்கள். ஆனால், வாழ்க்கையின் அடித்தளத்திலே உழன்றுகொண்டிருக்கும் நடுத்தர மக்களும், ஏழை எளிய மக்களும் இன்னும் சிறு குடும்ப நெறியைப் பின்பற்றாதிருப்பது மிகவும் வருத்தப்பட வேண்டியதொன்று. ஏழை, எளியவர்களுக்கும், நடுத்தர மக்களுக்கும்தான் சோதனையாக அதிகக் குழந்தைகள் பிறக்கின்றன. ஆகவேதான், ஏழை, எளிய மக்களும், நடுத்தர மக்களும் அதிகமாகவுள்ள நம் நாட்டில் நம் அரசாங்கமே குடும்ப நலத் திட்டத்தைத் தேசியத்




திட்டமாக உருவாக்கி அதிக முக்கியத்துவம் கொடுத்துச் செயலாற்றி வருகிறார்கள். 1,000-க்கு 41 ஆக உள்ள பிறப்பு விகிதத்தை ஆயிரத்திற்கு இருபத்தைந்தாக மிக விரைவிலே குறைக்க வேண்டும் என்பதே தேசிய குடும்ப நலத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள். தாய்மார்களின் நலம் நாடி, வருங்காலச் சந்ததியினரை வலிவுள்ளவர்களாக ஆக்குவதே இதன் அடிப்படை நோக்கம்.

உலக நிலப் பரப்பில் 2·4 சதவீதத்தைப் பெற்றுள்ள நம் நாட்டில், உலக மக்கள் தொகையில் 14 சத வீதம் பேர் வாழ்கின்றனர். உலக மக்களில் எழுவரில் ஒருவர் இந்தியர் என்றால் நம் நிலை என்ன என்பதை



நாம் தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய நிலை வந்துவிட்டது. நம் இயற்கை வளங்கள் நாளுக்கு நாள் குறைந்து வருகின்றன. நிலத்தின் அளவும் குறைந்து வருகின்றது. இருக்கின்ற நிலப் பரப்பில் விவசாயம் செய்வதற்கு ஒதுக்கப்பட்ட நிலம் போக, மீதி நிலங்களில் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி வருகின்றோம். அதைத் தொடர்ந்து தொழிலாளர் குடியிருப்பு முதலானவற்றை உருவாக்கி வருகிறோம். பருவ மழை அடிக்கடி தவறி விடுகின்றது. காட்டைத் திருத்தி நாடாக்குவதால் பல இயற்கை வளங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந் நிலையில் மக்கள் தொகை மட்டும் கணக்கிலடங்காமல் ஒவ்வொரு ஆண்டும் ஒரு ஆஸ்திரேலியா நாட்டையே நாம் உருவாக்குவது நல்லதுதானா என்ற கேள்வியை நமக்கு நாமே கேட்டுக்கொண்டு வாழ வேண்டிய நிலை வந்து விட்டது.

உலக நாடுகள் அனைத்தின் வளர்ச்சிக்கும் ஓர் கேள்விக் குறியாக, ஓர் தடையாக இருக்கும் அதிகமான மக்கள் தொகை வளர்ச்சி முறைப்படுத்தப்படுவதில் தான் தாய்மையின் வெற்றி அடங்கியிருக்கிறது. குழந்தைகள் பேசும் தெய்வங்கள் என்றால், தாய்மார்கள் நடமாடும் தெய்வங்கள். இவர்களின் தெய்வீக உணர்வு நிலைத்து நிற்கச் சிறு குடும்ப நெறியே தலை சிறந்த வழி. அவ் வழி நின்று நாடும் வீடும் நலம் பெற நம் நாட்டிலுள்ள பத்துக் கோடித் தம்பதிகளும் குடும்ப நலத் திட்டத்தைச் சமய, சாதிச் சார்பற்ற முறையில் ஏற்றுக் கொள்ளச் சூளுரை ஏற்க வேண்டும். தாய்மார்கள் வெறும் பிள்ளை பெறும் இயந்திரமாக இருக்கும் நிலை மாறினால்தான் தாய்மை பெருமை பெறும். அந் நாளே நம் நாட்டின் வரலாற்றிலே பொன்னாள் !




## 13. கொண்டாடச் சொன்னார் குறித்து

ஆக்கிப் படைக்கும் அருமைத் தொழிலாளர்
பூக்கள் கருகுதல்போல் போகாமல்—சீக்கிரத்தில்
அண்டந் தனிற்சிறக்க ஆணையிட்டு 'மே' தினத்தைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—சுப்பராயலு, பி.ஏ., பெரியகுளம்.

தெய்வத்திற் கேன்படையல் ? தேம்பி யழுமேழை
உய்யவழி செய்தல் உயர்பூசை ! —மெய்க்கலைஞர்
கண்டிடலாம் ஏழைக் களிப்பில் இறையென்று
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—அரிமதி-தென்னகன், புதுச்சேரி-1.

எண்ணிலாப் பண்டிகைகள் எந்தமிழர் கொண்டாட
மண்ணிலுண் டென்றறிந்த மாமேதை—அண்ணாதான்
தண்டமிழர் பொன்னாளாம் தைப்பொங்கல் நன்னாளைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—லலிதா அண்ணாமலை, கோயம்புத்தூர்.

இந்நாட்டி லில்லை யிரப்போரென் றேற்றமுடன்
எந்நாடும் போற்றும் எழில்திட்டம்—இந்நாளில்
கொண்ட தமிழ்முதல்வர் கோலா கலவிழவாய்க்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—புலவர் வே. அரசு, அதிகாரப்பட்டி.

கட்டுக் கலங்காணக் கற்றைப் படிகாணத்
திட்டத் துடனையா ரெட்டு' நெல்—இட்டமுடன்
கண்டுமுதல் செய்யக் கருதிப் பசும்புரட்சி
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—சு. பிச்சை, வடலூர்.

கொண்டவனுக் கேற்ற குணவதியாய் என்றென்றும்
மண்டலம் போற்றும் மதியுடையாள்—கண்டுவக்கும்
வண்டார் குழலி வடிவழகுப் பெண்ணரசைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—மா. பரமசிவம், வடுகப்பட்டி.

உலகத்துச் சான்றோர்கள் ஒன்றாகக் கூடிப்
பலவழியில் சிந்தித்துப் போற்றி—நிலவுலகில்
பண்பாட்டைக் கூறும் பயன்மிக்க வள்ளுவத்தைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—வெ. இரா. இராசகோபாலன், காவேரிநகர்.

இல்லங்கள் தோறும் இரந்துண்டு வாழ்ந்திடுவோர்
அல்லல் அறுக்கும் அறநாளாய்—நல்லமைச்சுத்
தொண்டாற்றும் நம்கலைஞர் தோன்றிப்பொன் னாளினையே
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—துரை. முருகு, திண்டுக்கல்-1.

அழகுச் சிலையெனினும் ஆறேழு பெற்று
நிழலின்றி வாடாமல் நெஞ்சே '—மழலைமலர்ச்
செண்டிரண்டே வீட்டில் சிரித்தாடக் கண்டதனைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—சி. சென. கருப்பன் செட்டி, திருச்சி-15.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :
திரு சுப்பராயலு பி.ஏ.,
பெரியகுளம்,
மதுரை மாவட்டம்.

குருதியுடன் சீழ்வடியுங் கூன்குருடு, குட்டர்,
மறுவாழ்வு பெற்றிடவே வைப்பேன்—உறுதியென்று
துண்டேந்தித் தந்நாளில் சூளுரைத்தே எம்முதல்வர்
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—சு. நாகநாததுரை, சென்னை-12.

மேலாடை மேலில்லை ! உள்ளாடை ஒப்புக்கே !
நூலாய் இளைத்த(து) இளமேனி !—தோலெலும்பைக்
கண்டாடும் காளையர்காள் ! ஏற்றுக்கோ பெண்ணுரிமை
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—சா. கா. சாகுல் அமீது, சித்தையன் கோட்டை.

ஆதியிலே சாதியில்லை ; அன்பினிலே பேதமில்லை
போதிமரப் புத்தனுமே போதித்தான்—வாதிட்டோர்
வண்டமிழர் ஓர்சாதி வள்ளுவத்தால் ஏற்றுலகைக்
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—அ. மலர்வேந்தன், அனுமந்தன் பட்டி.

தன்னுயிர்க்கு வாழாத் தகைகொண்ட தாயைப்போல்
மன்னுயிரைக் காக்க மனமிரங்கி—இன்னருளால்
தொண்டாற்றி வாழ்கின்ற தூய மனத்தோரைக்
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—அ. ஆறுமுகம், திருச்சி-15.

சாதிக்கொரு நீதி சாற்று மனுநீதி
நாதி இலாதொழிய நம்மரசார்—ஆதிகுறள்
உண்டாக்கித் தந்த ஒருபுலவன் வள்ளுவர்நாள்
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—புலவர் நா. கோபால கிருட்டிணன், திருச்சி-4.

இல்லார் பிணியுற்ருேர் ஏற்கும் இழிநிலையை
இல்லா தொழிக்கவே எம்முதல்வர்—நல்வழியில்
கண்டோர் வியக்கவே காசளித்துத் தம்நாளைக்
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—வித்துவான் பெ. அண்ணுமலை, சென்னை-1.

இம்மா நிலத்தில் இரப்பொழிக்க மக்களெல்லாம்
தம்மா லியன்றதொகை தானளித்து—நம்முதல்வர்
தண்டமிழ் ஆய்கலைஞர் தாம்பிறந்த நாளதனைக்
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—முத்துச்சோழன், கோவை-1.

தோழி :
வண்டாய் விழியிரண்டும் வட்டமிட்டுச் சுற்றுவதேன்?
கண்டாயோ காதலனைக் கானகத்து?—ஒண்டொடியே
தலைவி :
உண்டார் ; சுவைத்தார் ; உயிர்த்தார்பின் தோழிஎனக்
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—மு. பூங்கோவன், சென்னை-1.

கண்ணியமே இல்லாதார் காசிநகர் சென்ருலும்
புண்ணியமே இல்லையன்ருே? பொல்லாங்கே எண்ணியெண்ணித்
திண்டாட வேண்டாங்காண்! சித்தரெல்லாம், செந்நெறியைக்
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—புலவர் அ. வெ. காசிநாதன், அமிர்தராயன்கோட்டை.

இரப்போர்தம் தேவைகளை எம்மரசே ஏற்றுப்
புரப்பிற்குத் திட்டமிட்ட பொன்னுள்—உரன்கொண்ட
தண்டமிழ்ப்பொன் ஞட்டுத் தலைசிறந்த பொங்கல்போற்
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—இ. மஹபூப்ஜான், எருமப்பட்டி.

கொள்ளை அணியணிந்தே கொஞ்சும் எழிற்குமரி
நள்ளிரா நேரம் நடுக்கின்றி—மெள்ளநடை
உண்டாகி வீதிசெலும் ஓர்நாளைக் காந்திமகான்
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—புலவர் சி. வெ. இராமசாமி, பி.ஏ., பொள்ளாச்சி.

ஊரார்க்குப் பள்ளி ; உழைப்பார்க்கு நற்கூலி
காராளர் பெற்ருர் கடன்திட்டம்—சீராள
திண்டாடு வார்க்குச் சிறியமனை தந்தவரைக்
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—புலவர் அருணு-பொன்னுசாமி, திருச்சி.

ஓராண்டு சேவைதனில் ஓங்கு புகழ்படைத்(து)
ஈராண்டில் கால்வைத்து ஏற்றமாம்—பேராழித்
தொண்டு மிகவாற்றும் தூய 'தமிழரசை'க்
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—அ. பெ.அரங்கநாதன், நாமகிரிப்பேட்டை.

முப்பாலில் முன்னுளில் மூதறிஞன் சொன்னநெறி
தப்பாமல் வாழும் தமிழ்மகனே—எப்போதும்
பெண்டிருள் தெய்வமெனப் பேசியே பூந்தமிழர்
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—இரா. வைரமுத்து, சென்னை-30.

தான்பிறந்த நாட்டில் தடுமாறும் ஏழையரின்
கூன்நிமிர்த்த எண்ணிக் குலமுதல்வர்—சூன்மூன்றைத்
திண்டாடும் மக்கள் திசைதிரும்பும் பொன்னுளாய்க்
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—சு. நாராயணசுவாமி, திருச்சி-3.

உடுத்திட நல்லுடையும் உண்ண உணவும்
படுத்திடப் பாயுமின்றிக் கண்ணீர்—விடுத்தேழை
கண்கலங்கா நாளைக் கலைஞரவர் இன்பமுடன்
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—கி. சுப்புராம், தேனி.

ஏற்றுப் பிழைப்பவராய் என்றைக்கும் இன்னலுடன்
தேற்றல் இலராய் தெருவோரம்—சோற்றுக்குத்
திண்டாடும் மக்களுக்குத் தான்பிறந்த பொன்னுளைக்
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—புலவர் சி. சுவாமிநாதன், பந்தநல்லூர்.

கண்ணினிலே காணுகின்ற கண்மணி போன்றநம்
அண்ணவை எண்ணி அயர்ந்தேன்நான்—அண்ணுவோ
தண்மைசூழ் நன்மைபல சாரும் முதல்வரைக்
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—வேல். இளங்கோவன், ஆலம்பாடி.

தென்புலத் தெங்கும் திரிந்திரந்து துன்புறுவோர்
இன்புற்று வாழும் எழில்மிகுநாள்—இன்னேநாம்
கண்ணுரக் கண்டு களிக்கக் கலைஞர்தாம்
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—புலவர் பூமாலை நடராசன், சேத்துப்பட்டு.

மானே ! மணக்கவரும் மல்லிகையின் பூங்காற்றே!
தேனே! உனக்கொன்று தித்திக்க—நானுரைப்பேன்
மண்டும் இரப்பாளர் மறுவாழ்வு பெற்றிடுநாள்
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—கா. ஜெகதீசன், உமர்ஆபாத்.

ஞாலம் புகழ்ந்திடுதே! நாட்டில் இரந்திங்கே
ஓலமிட்டோர் வாழ்விங்(கு) ஒளிபெறவே—சாலவுமே
தொண்டாற்றச் சூளுரைத்துத் தான்பிறந்த நன்னுளைக்
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—க. தியாகராசன், நெய்வேலி-2.

அல்லும் பகலும் அயராமல் தானுழைத்தும்
சொல்லவொண்ணு வெம்பசியால் துன்புற்று—தொல்லுலகில்
திண்டாடும் தீனர்க்குச் சேவைசெயும் சீரியரைக்
கொண்டாடச் சொன்னர் குறித்து!

—அ. சுருளியாண்டிப் பாவலர், கோம்பை.

மங்காத பேரறிஞர் மாண்புமிகு சீரண்ணு
பொங்கல் திருநாளைப் போற்றுமா(று)—இங்குள்ள
தண்டமிழ் மக்களைத் தட்டி யெழுப்பியே
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—புலவர் இலமா. பூங்குன்றன், சென்னை-28.

'கொண்டுவா அம்மையே கூழொருவாய்' என்றுகெஞ்சித்
திண்டாடும் மக்கள் திருப்தியுற்று—வேண்டுவன
உண்டிருக்கும் நாளை ஒளிநாளாய் நம்கலைஞர்
கொண்டாடச் சொன்னர் குறித்து

—கு. பெருமாள்சாமி, அருவன்காட்டுவலசு.

வண்ணத் தமிழில் வனப்பூட்டி வாழ்வூட்டும்
எண்ணக் களஞ்சியமாய் ஈடின்றித்—தண்ணளிசேர்
தொண்டாற்றிக் கொண்டுவரும் தூய "தமிழரசைக்"
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—ஆர். இராசு, வல்லக்குண்டாபுரம்.

வண்டாருஞ் சோலை வளவயல்கள் எங்கெங்கும்
பண்பாடி யாடிப் பணியாற்றித்—தொண்டரென
எண்டிசையோ ரேத்த எழிலோங்கு வாழ்வமைத்துக்
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—வே. அரங்கராசன், சோழபுரம்.

ஊமைக் கனவாக உள்ளத்தி லுன்நினைவைச்
சேமித்து நான்வாழ்ந்த சேதியினைப்—பூமகளே
கண்டார்போ லென்பெற்ருேர் கைப்பிடிக்கும் நன்னுளைக்
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—இரா. இராகவன், வாணியம்பாடி-2.

ஏழைச் சிரிப்பில் இறைவனைக் காணுகின்ற
தோழன் செயற்கரிய தொண்டனடா—தோழா, கேள் !
திண்டாடும் ஏழைகளை வாழவைத்த தெய்வமெனக்
கொண்டாடச் சொன்னர் குறித்து.

—புலவர் சே. பெ. கோவிந்தசாமி, குன்றைவலம்.

வள்ளுவரீ ராயிரத்தை, மாண்பார் முதலமைச்சர்
உள்ளம் மகிழ்ந்திடவே ஊர்தோறும்—தெள்ளுதமிழ்
வண்பார்க்கும் சோலை வளமார் தமிழகத்தில்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—எஸ். எஸ். லயன், தேனி.

வங்கத்திற் போராடி வாடும் அகதிகளாய்
இங்குவந்த மக்களை ஏன்பாரீர்—பங்கமுறத்
திண்டாடும் பாகிஸ்தான் தேய விடுதலைநாள்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—கொ. மா. கோதண்டம், இராஜபாளையம்.

சாதனைக்குச் சாட்சியாய்த் தாய்மொழிக்கு மாட்சியாய்
நீதிகாக்கும் ஆட்சியாய் நித்தநித்தம்—தீதொழியத்
தொண்டாற்றும் இவ்வரசைத் தூயமனங் கொண்டோர்தாம்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

புன்னை மரத்தடியில் புல்லி இருந்தக்கால்,
அன்னை அழைத்தாள்; அதிர்ந்தோடி—அன்னைமுன்
திண்டாடி நின்றேன், திருமகளே! வாழ்கவெனக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—ஆ. கோவிந்தராசன், குடவாசல்.

வறுமை ஒழித்து வளத்தைப் பெருக்கிச்
சிறுமை தரும்பஞ்சம் தீர்க்கப்—பெருவிளைவு
உண்டாக்கித் தந்தே உதவும்ஐ. ஆர்.எட்டைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—புலவர் ந. ஜாபர், சித்தையன்கோட்டை.

ஏர்கொண் டுழநாளும் எல்லாரும் வாழ்வதற்குக்
கார்கொண்டு நெல்விளைக்கும் காருழவர்—சீர்பெறவே
பெண்டாட்டி பிள்ளையுடன் பொங்கல் திருநாளைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—மு. கண்ணப்பன், சென்னை-24.

அங்கங் குறைந்தவரின் அல்லலைப் போக்கிடப்
பொங்கி யெழுந்து பொருளீந்தே—எங்கெங்கும்
புண்பட்டோர் வாழ்வைப் புனிதஞ்செய் நன்னாளைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—வே. கருப்பையா, சேலம்-6.

வண்டாடிப் பூவுறங்கும் வார்கூந்தல் பூம்பாவாய் !
தண்டமிழே வாழ்வின் தனிச்செல்வம்!—மண்டுபுகழ்
கொண்ட தமிழ்க்கொள்கை கூறும் உயர்பண்பைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—புலவர். முத்து வேங்கடேசன், திருமயம்.

நல்ல தமிழ்ப்புகழை, நாடும் அரசினர்தாம்
எல்லவரும் போற்ற இறைமாண்பைச்—சொல்வளஞ்சேர்
தண்டமிழால் சாற்றித் தமிழர் வழிபாட்டைக்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—நா. சிவராமமுத்துக்குமாரவேல், தேனி.

இல்லாதோர் புன்சிரிப்பில் ஏற்றமிகக் காண்பதனால்
இல்லாதோர் இல்லை யெனும்நாளை,—நல்லதோர்
பண்பாடி எம்முதல்வர் பாரிலுளோர் போற்றிடவே
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—புலவர் அ. தங்கவேலு, வாணுபுரம்.

ஓராண்டுத் தொண்டில் உயர்ந்த 'தமிழரசு'
ஈராண்டு தன்னில் இலங்குவதை—நேராண்டு
கண்டாரின் உள்ளம் களித்திடும் வண்ணத்தில்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—புலவர் வெ. குமாரசாமி, பாலசமுத்திரம்

செந்தமிழைக் காக்கத் திருநாட்டை மேம்படுத்தத்
தந்தாரை முந்தித் தருநாளை—என்றலைவர்
எண்டிசையும் ஏத்தும் எழிலார் திருநாளாய்க்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—ச. தமிழ்வேலன், கோட்டூர்.

நாட்டைப் புதுப்பிக்கும் நற்பணியில் தங்களது
வீட்டுப் பிரச்சினையை விட்டவர்கள்—காட்டுகின்ற
தொண்டதனைப் போற்றத் தொழிலாளர் நாளென்று
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—அ. காந்தி, பி.எஸ்.சி.பிடி, தேவத்தூர்.

தான்பிறந்த நாளைத் தமிழ்க்கலைஞர் நம்முதல்வர்
'ஏன்பிறந்தோம்' என்றுதொழு நோயாலே—ஊன்சிதைந்து
திண்டாடு கின்றவர்தம் தீதகற்றும் நன்னாளாய்க்
கொண்டாடச் சொன்னார் குறித்து.

—புலவர் புதுமதியன், சின்னதாராபுரம்.


# 251-வது லட்சாதிபதியாக நீங்களே இருக்கலாமே!

இன்றே வாங்குவோம் தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு



தமிழ்நாட்டின் பரிசுத் திட்டத்தால் இதுவரை 250 லட்சாதிபதிகள் தோன்றியுள்ளனர். பரிசுத் திட்டத்தின் பெருமைதான் என்னே! 251-வது லட்சாதிபதியாக நீங்களே ஆகிவிடலாமே! ஒரு ரூபாய்தான். அது உங்களுக்கு உயர் வாழ்வு தருகிறது. நாட்டுக்கு நல்வாழ்வு அளிக்கிறது. வளம் சேர்த்து உங்கள் வீட்டையும், கல்வி, மருத்துவ, வீட்டு வசதிகள் மூலம் நாட்டையும் காக்கிறது.

## ரூ. 3,00,000 உங்களுக்கே கிடைக்கலாம்!

மொத்தப் பரிசுத் தொகை: ரூ. 17,50,000

மொத்தப் பரிசுகள் : 5328

தமிழ்நாடு தான் இவ்வளவு பெரிய பரிசுகளைத் தருகிறது.

திருத்தியமைக்கப்பட்ட புதிய பரிசுத் திட்டங்கள்

| சிறப்புப் பரிசுகள் | | சாதாரணப் பரிசுகள் | |
|---|---|---|---|
| முதல் சிறப்புப் பரிசு ஒன்று | ரூ. 3,00,000 | மூன்றாவது பரிசுகள் ஐந்து ஒவ்வொன்றுக்கும் ரூ. 10,000 : | ரூ. 50,000 |
| இரண்டாவது சிறப்புப் பரிசுகள் இரண்டு: (ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,00,000) | ரூ. 2,00,000 | நான்காவது பரிசுகள் பத்து ஒவ்வொன்றுக்கும் ரூ. 5,000 : | ரூ. 50,000 |
| | | ஐந்தாவது பரிசுகள் ஐம்பது ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,000 : | ரூ. 50,000 |
| (பொதுவாக எல்லா வரிசைகளுக்கும்) | ரூ. 5,00,000 | ஆறாவது பரிசு ஆயிரம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 100 | ரூ. 1,00,000 |
| | | (இது ஒவ்வொரு வரிசைக்கும்) | ரூ. 2,50,000 |



செலவு ஒரு ரூபாய்

வரவோ பல லட்ச ரூபாய்

குலுக்கல் நாள்: 30-8-1971

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

உடனே வாங்குங்கள். இல்லையேல் கிடைக்காது.

வெளியீடு: இயக்குநர், செய்தி, விளம்பரத் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2.

* 5 வரிசைகள் வெளியீட்டுக்கு உட்பட்டது

# கேளுங்கள் கொடுக்கப்படும்!

## வேளாண்மை பற்றிய வினாக்களே கேட்கப்படவேண்டும்

**வினா :** சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், இடைப்பாடிப் பகுதியில் (1) உருளைக்கிழங்கு, (2) கோதுமை, (3) மிளகு, (4) ஜாதிக்காய், (5) ஏலக்காய், (6) இலவங்கம், (7) கிராம்பு, ஆகியவைகளைப் பயிரிட முடியுமா? எந்தப் பருவங்களில் பயிரிட முடியும்? விதைகள் எங்கே கிடைக்கும்? விவரம் கூறவும்.

—மெய்வேலு, க.புதூர், இடைப்பாடி

**விடை:** இடைப்பாடிப்பகுதியில் உருளைக்கிழங்கு, கோதுமை, ஆகியவைகளைப் பயிரிடலாம். மிளகு, ஜாதிக்காய், ஏலக்காய், இலவங்கம், கிராம்பு ஆகியவைகளைப் பயிரிடக் குளிர்ச்சியான மலைச்சரிவுப் பகுதியே ஏற்றதாக உள்ளதால், அவைகள் இடைப்பாடிப் பகுதிக்கு ஏற்றதல்ல.

'கோ—சிம்லா' என்ற உருளைக்கிழங்கு ரகத்தைச் செப்டம்பர் மாதத்தில் சாகுபடி செய்யலாம். இதன் வயது 110 நாட்கள்.

சர்பதி சோனாரா (85 நாட்கள்), கல்யாண்சோனா (95 நாட்கள்), சேப்டுலெர்மா (100 நாட்கள்) என்ற கோதுமை ரகங்களை நவம்பர் மாதத்தில் விதைக்கலாம்.

விதைகள் கிடைக்க உங்கள் மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களை அணுகுங்கள். மேற்கூறிய ரகங்களின் சாகுபடிக் குறிப்புகளை விளக்கமாக அறிய 'தமிழரசு' 1970 ஜூலை 16, செப்டம்பர் 16 இதழ்களைப் படியுங்கள்.

* * *

**வினா :** வார இதழ் ஒன்றின் ஆசிரியர், ஒரு துணுக்கில் 'பயிர்களை நாசம் செய்யும் பூச்சிகளைக் கொல்ல விமானங்களில் இருந்து மருந்து தெளிக்கிறார்கள். இதனால் பூச்சி இறக்கும்; உணவு உற்பத்தி அதிகமாகும். ஆனால் இந்த மருந்து உணவுப் பொருள்களில் கலந்து இதனால் புற்று நோய் வரலாம். புற்றுநோய் வந்து கொண்டிருக்கின்றது!' என்று எழுதியுள்ளார். அந்த ஆசிரியரின் கூற்று சரியா? தவறா? தயவுசெய்து தெரியப்படுத்தவும்.

—மு. ஜெயராமன், மேல் முட்டுக்கூர்.

**விடை :** பூச்சி மருந்துகளைப் பயிர்களுக்கு விமானம் மூலம் தெளிக்கும்போது, மருந்து, உணவுப் பொருள்களில் கலந்து புற்றுநோய் வரலாம் என்ற கூற்றுக்கு அறிவியல் அடிப்படையான சான்று இல்லை. அவ்வாறு புற்றுநோய் வருகிறது என்பது உண்மையாக இருக்குமானால், விஞ்ஞானிகள் விமானம் மூலம் மருந்து தெளிப்பதை வரவேற்றிருக்கமாட்டார்கள். பொதுவாக, நெல், கோதுமை, கம்பு, சோளம் ஆகிய பயிர்களில் பூ பூப்பதற்கு முன்புவரைதான் மருந்து தெளிக்கும்படி பரிந்துரைக்கப்படுகிறது; பூ பூத்த பின் மருந்து தெளிக்குமாறு பரிந்துரைப்பதில்லை; ஆனால் ஒருசில குறிப்பிட்ட தூள் மருந்துகளைத் தூவும்படியே பரிந்துரைக்கப்படுகிறது. இவ்வாறு தூவப்படும் மருந்தின் சக்தி 15 நாட்கள் வரைதான் இருக்கும். எனவேதான் மருந்து தெளித்த அல்லது தூவிய 15 நாட்களுக்குப் பின்பு அறுவடை செய்யுமாறு கூறப்படுகிறது. மேற்கூறிய பயிர்கள் எதுவும் தெளித்த அல்லது தூவிய 15 நாட்களுக்குள் அறுவடைக்கு வராது. காய்கறிப் பயிர்களில் மருந்து தெளிக்கும்போது கூட, காய்களை அறுவடை செய்த பின்புதான் மருந்து தெளிக்கும்படி சொல்லப்படுகிறது.

மருந்து தெளித்த அல்லது தூவிய 15 நாட்களுக்குப் பிறகு தான் காய்கறி அறுவடை செய்ய வேண்டும் என்றும், அவ்வாறு அறுவடை செய்த காய்களையும் தண்ணீரில் நன்கு கழுவிய பின்பே பயன்படுத்துமாறும் உலகெங்கிலும் உள்ள பயிர்ப்பாதுகாப்பு நிபுணர்கள் பரிந்துரைத்து வருகிறார்கள். எனவே விமானம் மூலம் மருந்து தெளிப்பதனால் புற்றுநோய் வருகிறது என்பது அறிவியல் அடிப்படையில் ஒப்புக் கொள்ள முடியாத கூற்று என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

* * *

**வினா :** டிராக்டருக்கும், டில்லருக்கும் உள்ள வேறுபாடு என்ன?

—நே. து. இராசேந்திரன், கொழப்பலூர்.

**விடை :** டிராக்டரை பொதுவாக, விதைத்தல், உழுதல், அறுவடை செய்தல், போரடித்தல் ஆகிய எல்லா வகையான வேளாண்மை வேலைகளுக்கும் பயன்படுத்தலாம். டிராக்டர்கள் சாதாரணமாக, அதிக கனபரிமாணம் உள்ளதாகவும், நான்கு சக்கரங்கள் கொண்டதாகவும், அதிக அளவு வேலைத்திறன் கொண்டதாகவும் இருக்கும்.

'டில்லர்கள்' எனப்படும் விசை உழவுக்கருவிகள் சிறியதாக இருக்கும். விசை உழவுக் கருவிகள் சிறப்பாக உழுவதற்கும் பொதுவாக, தண்ணீர் இறைப்பது, மருந்து தெளிப்பது போன்ற வேலைகளுக்கும் பயன்படும். குறிப்பாக, குறைந்த அளவு நிலம் உள்ள உழவர்களுக்கு 'டில்லர்கள்' மிகவும் ஏற்றது.

டிராக்டரைவிட, விசை உழவுக்கருவியில் இழுக்கும் விசைக்குக் கிடைக்கும் பலனும், செயல்திறனும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே குறைந்த அளவு நிலமுள்ள உழவர்கள் நிறைந்த பலன்பெற 'டில்லர்' மிகவும் ஏற்றது. டில்லர் டிராக்டரைவிட விலை குறைவானது. டிராக்டரைவிட 'டில்லர்' உபயோகிப்பது சிக்கனமானதாகவும் உள்ளது. அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளில் பெரும்பரப்பில் சாகுபடி செய்ய டிராக்டர்களையே பயன்படுத்துகிறார்கள். ஜப்பான் போன்ற நாடுகளில் சிறு பரப்பில் சாகுபடி செய்ய விசை உழவுக் கருவிகளே மிகவும் பயனுடையதாகவும், சிக்கனமானதாகவும் உள்ளன.

* * *

**வினா :** கே. 1 மிளகாய் பற்றி கீழ்க்கண்ட விவரங்களைத் தெளிவாய்த் தெரிவிக்கவும்:—

(1) நாற்று தயார் செய்தல்; (2) நடவுவயல் தயார் செய்தல்; (3) அடியுரம், மேல் உரம்; (4) பயிர்ப்பாதுகாப்பு (5) வயது; (6) மகசூல்.

—ஆர். சங்கர மூர்த்தி, நெல்லை.

**விடை :** தங்கள் கேள்விக்குத் தெளிவாய் விளக்கமளிக்க வேண்டுமானால் 2 பக்கம் தேவைப்படும். இடநெருக்கடி கருதி மிகவும் சுருக்கமாகவே கீழே விளக்கியுள்ளோம் :

நாற்று தயார் செய்தல் : ஒரு ஏக்கர் மிளகாய் சாகுபடி செய்ய ஒரு சென்ட் நிலத்தில் நாற்றங்கால் அமைக்க வேண்டும். 6 அடி × 4 அடி அளவுள்ள மேட்டுப் பாங்கான பாத்திகளை அமைத்துக் கொள்வதே சிறந்தது. 500 கிராம் கே.1. மிளகாய் விதையை 1 கிராம் 'அக்ரசான்' மருந்துடன் கலந்து ஒரு சென்ட் நாற்றங்காலில் விதைக்கவும். விதைத்த பின்பு சலித்த தொழு எருவை மென்மையாகப் பரப்பி விதையை மூடி, பூவாளியால் தண்ணீர் தெளிக்கவும்.

நடவு வயல் தயார் செய்தல் : இரும்புக் கலப்பையால் நன்கு உழுது புழுதியாக ஆக்கவும். கடைசி உழவில் ஏக்கருக்கு 20 வண்டி தொழு எருவையும், கீழே குறிப்பிட்டுள்ள அடி உரத்தையும் இட வேண்டும். அதன்பின் பாத்திகளோ அல்லது பார்களோ அமைக்கவேண்டும்.

அடி உரம் : ஏக்கருக்கு 100 கிலோ சூப்பர் பாஸ்பேட், 25 கிலோ மூரியேட் ஆப் பொட்டாசு இட வேண்டும்.

மேல் உரம் : நாற்று நட்ட 50-வது நாள் 70 கிலோ அமோனியம் சல்பேட்டும், 75-வது நாள் 70 கிலோ அமோனியம் சல்பேட்டும் இடவேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு : 'சுருள்' விழுந்து காணப்பட்டால், ஏக்கருக்கு 10 கிலோ 'பி.எச்.சி 10 சதத் தூளைத் தூவ வேண்டும். அல்லது 'என்டரின்' அல்லது 'ரோகார்' மருந்து தெளிக்கலாம். வாடல்நோய், பழ அழுகல் நோய் தாக்குதல்களைத் தடுக்க 'பைட்டலான்' மருந்து தெளிக்கவும்.

வயது : 180 நாட்கள்.

மகசூல் : கே-1 மிளகாய், நாட்டு மிளகாய் வகைகளைக் காட்டிலும் 20 சதம்வரை அதிக மிளகாய் வற்றல் தரக்கூடியது. ஏக்கருக்கு 771 கிலோ உலர்ந்த மிளகாய் (சுமார் 52 மூட்டைகள் வற்றல்) கொடுக்கும். இந்த ரகம் சாத்தூர் சம்பா மிளகாயைக் காட்டிலும் 116 கிலோ வற்றல் (சுமார் 8 மூட்டை) அதிகமாகக் கொடுக்க வல்லது.

கே-1 மிளகாய் ஆடி, ஐப்பசி, பங்குனிப் பட்டங்களில் விதைப்பதற்கு மிகவும் ஏற்றது. முழு விளக்கமும் பெற 'தமிழரசு' 1970 டிசம்பர் 1, இதழைப் படியுங்கள்.

கே-1 மிளகாயை முதல்வரும் வேளாண்மை அமைச்சரும் பார்வையிடுகிறார்கள்



# அரசு ஸ்டுடியோ

ஆசியாவிலேயே மிகப்பெரிய ஸ்டுடியோவைப் பார்க்க விரும்புகிறீர்களா ?

வாருங்கள் ! சென்னை அடையாறுப் பகுதிக்குப் போவோம்.

என்ன திகைக்கிறீர்கள் ? அடையாறுப் பகுதியிலா ஆசியாவின் பெரிய படப்பிடிப்பு நிலையம் இருக்கிறது என்ற உங்கள் ஐயப்பாட்டிலும் நியாயம் உண்டு.

உங்கள் ஐயத்தை அகற்றுவதற்கு முன்பு அந்த ஸ்டுடியோவுக்கு நேரிலே செல்லலாம், வாருங்கள்!

* * *

கடற்கரை நெடுஞ்சாலை வழியாக அடையாறுப் பகுதிக்கு அடையாற்றுப் பாலத்தைக்கடந்து, பேருந்து நிலையத்தைக் கடந்து போய்க் கொண்டிருக்கிறோம். இன்னும் சில நூறு அடிகளுக்குள் அடையாறுப் பகுதியும் கிண்டிப் பகுதியும் இணைந்துவிடும். அதற்கு முன்னால், சாலையின் கீழ்ப் பகுதியில் கண்ணுக்கு எட்டிய வரையில் கட்டடங்களாகக் காட்சியளிக்கும் பல்வேறு தொழில்நுட்பக் கல்லூரிகளைக் காண்கிறோம். அந்த அறிவாலயங்களுக்குச் செல்லும் சாலையில் நாமும் திரும்புகிறோம்.

படகுப் போக்குவரத்திற்கு உரிய கால்வாய், அதை ஒட்டி மாமல்லபுரத்திற்குப் போகும் புதியசாலை; அதை அடுத்துச் செல்வது நாம் போகும் சாலை. சாலைகளின் அமைப்பே கண்ணுக்கு விருந்தாக அமைந்துள்ளது.




ஏறத்தாழ மூன்று கிலோ மீட்டர் தூரம் சென்றபிறகு தென்திசையில் திரும்புகிறோம். இரண்டு மூன்று கட்டடங்களைத் தாண்டிய பிறகு வருகிறது திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி. இங்குதான் அமைந்து வருகிறது, ஆசியாவில் மிகப்பெரிய ஸ்டுடியோவான அரசு ஸ்டுடியோ.

முன்னர் ' இன்ஸ்டியூட் ஆப் பிலிம் டெக்னலஜி ' ஸ்டுடியோ என்று வழங்கப்பட்ட ஸ்டுடியோதான் அண்மையில் 'அரசு ஸ்டுடியோ' என்ற புதிய பெயரைப் பெற்றுள்ளது.

மத்திய அரசுக்குச் சொந்தமான பூனைவில் உள்ள தொழில் நுட்பக் கல்லூரியை விட அடையாறிலுள்ள திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி பெரிது என்று சொல்லப்படுகிறது. ஆனால் பூனைவில்உள்ள திரைப்படத் தொழில்நுட்பக் கல்லூரி, மத்திய அரசின் தகவல் ஒலி பரப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி ' வருகிறது. ஆனால் சென்னைத் திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரிகள் அமைப்பில் ஓர் அங்கமாக இயங்கி வருகிறது. எனினும், தமிழ் நாடு அரசின் செய்திப் படங்கள் தயாரிக்கும் ' தமிழ் நாடு அரசு திரைப்படப் பிரிவு (Tamil Nadu Film Division)' வணிக முறையில் இயங்கும் அரசு ஸ்டுடியோவும் தமிழ் நாடு அரசு செய்தி விளம்பரத் துறையின் நேரடிப் பார்வையில் இயங்கி வருகின்றன.

செய்தி விளம்பரத் துறையின் பொறுப்பில் உள்ள அரசு ஸ்டுடியோவைப் பார்க்கத்தான் நாம் போய்க் கொண்டிருக்கிறோம். வணிக முறையில் இயங்கும் இந்தப் படப்பிடிப்பு நிலையத்தின் கட்டணங்கள் எல்லாம் சென்னையில் உள்ள ஏனைய ஸ்டுடியோக்களின் கட்டணங்களை விடக் குறைவானது. அத்தனைக்கும் நவீன வசதிகளைக் கொண்டது இந்த ஸ்டுடியோ.

முதலில் படப்பிடிப்புத் தளத்திற்குச் செல்லுகிறோம். பிரம்மாண்டமான அந்த ' ப்ளோரில் ' மேலே லைட்பாய்களுக்காகச் செய்யப்பட்டிருக்கும் வசதிகள் சென்னையில் வேறெந்த ஸ்டுடியோவிலும் கிடையாது. இது மட்டுமல்ல ' Cat-a-walk' என்று அழைக்கப்படும் மாடிப் பகுதியும் வேறு எந்த ஸ்டுடியோவிலும் கிடையாது. உச்சக் கட்டக் காட்சிகளுக்கும், வேறு சில காட்சிகளுக்கும், விளக்கு அமைப்புக்கும் அப்பகுதி மிகவும் பயனுள்ளதாகும்.



அரசு ஸ்டுடியோவில் படப் பிடிப்புக்காக உள்ள விளக்குகள் போல் நவீன வசதிகளை, விளக்குகளை வேறு எங்கும் காணமுடியாது. வரிசை வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் அந்த விளக்குகளைக் காணும்போதே ஓர் பிரமிப்பு ஏற்படுகிறது.

படப்பிடிப்புத் தளத்தை ஒட்டியே கலைஞர்களுக்கான ஒப்பனை அறைகளும், ஓய்வு அறைகளும் உள்ளன. தளத்தின் முன்பகுதியில் ' ஏர்-கண்டிஷன் ' செய்யப்பட்ட ஒப்பனை அறையும் உள்ளது. ' ரீ-ரிகார்டிங் ' அரங்கம் ஒன்றும் உள்ளது. இன்னொரு ' ரீ-ரிகார்டிங் ' அரங்கம் கட்டப்பட்டு முடிவடையும் கட்டத்தை எட்டியுள்ளது.

முதலில் பார்த்த படப்பிடிப்புத் தளத்தைத் தவிர இன்னொரு சிறிய படப்பிடிப்புத் தளமும் இங்கே உள்ளது.

ஸ்டுடியோவின் பின்திசையில் கண்ணுக்கு எட்டிய வரையில் தெரியும் நிலப்பரப்பு முழுவதும் அரசு ஸ்டுடியோவுக்குச் சொந்தமானதுதான். நம் கண்ணுக்கு எட்டிய வரை தெரியும் நிலப் பகுதியின் பரப்பு எவ்வளவு என்று வினவுகிறோம்.

''முப்பத்திரண்டு ஏக்கர். இவ்வளவு பெரிய நிலப்பரப்பு வேறு எந்த ஸ்டுடியோவுக்கும் கிடையாது '' —என்று பதில் வருகிறது.

மறுபடியும் நமக்கு ஒரு சிறு ஐயம். '' திரைப்

படத்தொழில் நுட்பக் கல்லூரிக் கட்டடங்கள், இப்போது உள்ள அரசு ஸ்டுடியோ கட்டடங்கள்—இவை அனைத்தையும் சேர்த்துத் தானே முப்பத்திரண்டு ஏக்கர் நிலப் பரப்பு?''—என்று மீண்டும் கேட்கிறோம்.

'' இல்லை, இல்லை! ஸ்டுடியோவின் தோட்டங்கள் அமையப் போகும் பகுதிமட்டும் 32 ஏக்கர் ''.

வியப்போடு அந்த நிலப் பரப்பின் மீது கண்களைச் சுழல விடுகிறோம். இப்பகுதியில் நவீன முறையில் தோட்டங்களையும், பூஞ்சோலைகளையும் அமைக்க அரசு முப்பது லட்ச ரூபாய் வழங்கியுள்ளது என்றும் அறிகிறோம்.





வடகிழக்குக் கோடியில் தோட்டம் அமைக்கும் பணிகள் ஓராண்டுக் காலத்திற்கு முன்பிருந்தே நடைபெற்று வருகின்றன. ஆளுயரத்திற்கு வளர்ந்திருக்கும் யூக்கலிப்டஸ் செடிகள், சலசலக்கும் நீரோடைகள், செய்குன்றங்களாக மாறிடும் பகுதிகள், சிறிய குளம், ஐந்தடி உயரம் வளர்ந்திருக்கும் கோரைகள், புதுவகை மரங்கள் முதலியன தோட்டம் அமைக்கும் பணிகள் விரைந்து நடைபெற்று வருவதை நமக்கு எடுத்துரைக்கின்றன.

இன்னும் சில ஆண்டுகளில் மாபெரும் தோட்டங்களும், பூஞ்சோலைகளும் உருவாகிடும் காட்சிகள் நம் கண்முன்னே தோன்றுகின்றன.

இப்பொழுதுள்ள தேவைகளை எண்ணிப் பாத்தால், விரைவில் புதிய படப்பிடிப்புத் தளங்கள் பல எழுப்பப்படும். அதுவும் நவீன வசதிகளுடன் எழுப்பப்படும் வாய்ப்புகள் ஏராளம் உண்டு. எனவே, மிக விரைவில் ஆசியாவில் மிகப் பெரிய ஸ்டுடியோவை இங்கு நாம் பார்க்கத்தான் போகிறோம்.





* * *

அரசு ஸ்டுடியோ உருவான வரலாற்றைக் கொஞ்சம் பார்ப்போமே .. .. ...

1945 ஆம் ஆண்டில் சென்னை தங்கசாலையில் திரைப்படத் தொழில் நுட்பப் பிரிவு சிறு அங்கமாகத் தோன்றியது.

1960 செப்டம்பர் 15 ஆம் நாளில் பெரிய அளவில் வளரத் தொடங்கியது. 1966 ஆம் ஆண்டு மே திங்களில் அடையாறுப் பகுதிக்குத் திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி மாற்றப்பட்டது.

திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரியில் வணிக முறையில் இயங்கும் ஸ்டுடியோ அமைக்கப் படுவதற்கு முன்பே—மாணவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள படப்பிடிப்புத் தளத்திலிருந்து முதலில் உருவாக்கப்பட்ட ஒரு தமிழ்ப் படம் 'தாலாட்டு' என்ற படமாகும். வணிகத்துறைப்பிரிவு அதாவது ' அரசு ஸ்டுடியோ ' 1969 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் தொடங்கப்பட்டது.

இதுவரை அரசு ஸ்டுடியோவில் அமிர்தா பிலிம்சின் தெலுங்குப் படமான ' செல்லலு காபுரம் ' சஞ்சீவி பிலிம்ஸ் ' நீதிரி ஜாயத்தி ' (தெலுங்குப் படம்); ' வெகுளிப்பெண் ' (தமிழ்ப்படம்); 'ஆடீஜாத்தியம்' (மலையாளப்படம்) முதலிய படங்களின் காட்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. கருணா பிலிம்சின் ' அன்புக்கு ஒரு அண்ணன் ' படத்தின் உச்சக்கட்டக் காட்சிகள் அரசு ஸ்டுடியோவில்தான் எடுக்கப்பட்டுள்ளன.

தமிழ் நாடு அரசு திரைப்படப் பிரிவின் செய்தி விளக்கப் படங்கள் எல்லாம் அரசு ஸ்டுடியோவில்தான் எடுக்கப்பட்டுள்ளன.

எல்லாராலும் பாராட்டப் பட்ட ' மியூசியம் ' (ஆங்கிலப் படம்) மீன் வளத் துறையின் 'நெடுங்கடல் மீது ' குடும்பநலத்துறையின் ''நாம் இருவர்; நாம் பெறுவது இருவர் '', போன்ற படங்கள் அரசு ஸ்டுடியோவில்தான் தயாரிக்கப் பட்டவை.

* * *

அரசு ஸ்டுடியோவைச் சுற்றிப் பார்த்து வரும்பொழுது ஒரு படத் தயாரிப்பாளரைச் சந்திக்கிறோம்.

'' அரசு ஸ்டுடியோவைப்பற்றி உங்கள் கருத்தைச் சொல்ல முடியுமா ? '' —கேட்கிறோம்.

' இந்த அமைதியான சூழ்நிலை வேறு எங்கே கிடைக்கும்? மற்ற ஸ்டுடியோக்களில் படப்பிடிப்பு நடந்தால் நடிகர், 'அடுத்த ஸ்டுடியோவில் அரை மணி நேரப் படப்பிடிப்பு—இதோ வந்துவிடுகிறேன்; கொஞ்ச நேரம் காத்திருங்கள்' என்று சொல்லிவிட்டுக் கிளம்பி விடுவார். ஆனால், இங்கே அப்படிச் செய்யமுடியாது '' என்று அவர் பேசிக்கொண்டே போகிறார்.

அடுத்து நாம் பார்க்க வேண்டிய இடங்கள் ஏராளமாக இருப்பதால் அவருடன் பேச்சைத் தொடராமல் விடை பெற்றுக் கொள்கிறோம்.

அரசு ஸ்டுடியோவுக்காகப் பல புதிய பகுதிகளை நிர்மாணிக்கக் கட்டட வேலைகள் விரைவில் துவங்கும் என்பதன் அடையாளமாக அடிப்படைப் பணிகள் நடைபெற்று வருவதைப் பார்க்கிறோம்.

அரசு ஸ்டுடியோ நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது என்பதைச் சுற்றுப்புற அமைப்புகளே நமக்குத் தெரிவிக்கின்றன.

இந்த வளர்ச்சியின் வேகம் இப்படியே தொடர்ந்தால் இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் ' ஆசியாவிலே மிகப் பெரிய ஸ்டுடியோ அரசு ஸ்டுடியோ ' என்ற பெயர் உருவாகியே தீரும்.

தமிழ்நாடு எத்தனையோ துறைகளில் வளர்ச்சி அடைந்திருக்கிறது. மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகவும் அமைந்து பல்வேறு பணிகளைச் செய்து வருகிறது.

அரசு ஸ்டுடியோ அந்த வகையிலும் ஒரு சிறந்த அமைப்பாக வளர்ந்து வருகிறது.

## வெண்பாப் போட்டி

**15. ஈற்றடி: இறையும் தமிழ்கேட்கும் இங்கு.**
முடிவுத் தேதி 10—8—1971

**16. ஈற்றடி: இனிக்குமே நெஞ்சம் எமக்கு.**
முடிவுத் தேதி 20—8—1971

பரிசு : ஓராண்டு ' தமிழரசு ' அன்பளிப்பு.

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
" தமிழரசு " அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை–2

குறிப்பு: நேரிசை வெண்பா மட்டுமே அனுப்ப வேண்டும். முடிவுத் தேதிக்குப் பின்னர் வரு[illegible]



# திருக்குளமே வாழி

புலவர் மு. சிக்கந்தர்



எங்கள் குலப் பெண்முகத்திற் குவமை யாகும்
எழில்மலரால் ஆதவனை வரவேற் கின்றாய்!
திங்களையும் அல்லியினால் வரவேற் கின்றாய்!
தேடிவந்த நீரையெலாம் தேக்கி வைப்பாய்!
அங்கிருந்தே வயல்களுக்குக் கொடைகொ டுப்பாய்!
ஆமை, நண்டு, மீன், தவளை எல்லாம் வாழ
இங்கிதமாய் இடமளிப்பாய்! குள்ள மாய்நீ
இருப்பதனால் குளமென்றார் போலும்! வாழி!

பறவையெலாம் உனைத்தேடி வருதல் கண்டால்
'பலி' கொடுப்பாய் உன்தகுதிக் கேற்ற வண்ணம்
நிறைகுளமாய் நீயிருந்தால் படகை ஓட்டி
நிம்மதியைப் பெறுவதற்கும் இடம ளிப்பாய்!
குறைந்துநீர் வற்றிடினும் குறையி டத்தில்
கொடைதருவாய் வெள்ளரியின் விதையைப் போட்டால்
கறைபோக்கிக் குளிப்பதற்கும் உதவு கின்றாய்
கருணைமிகு குளமேநீ வாழ்க! வாழ்க!

எப்பொழுதும் பசித்தபின்னர் உண்ணல் நன்றே
என்கின்ற நீதியினை உணர்த்தத் தானோ,
செப்பரிய திருக்குளமே நீரு மின்றிச்
சிலகாலம் நீயிருப்பாய்! எனினும் இங்கே
ஒப்பில்லாத் தென்றலுக்கும் விருந்து வைப்பாய்!
உலவவிட் டெனைத்தொட்டு மகிழ வைப்பாய்!
தெப்பத்தேர் சலுத்திடற்கு மக்கள் கூடும்
திருநாளுக் கேங்கிடுவாய்! வாழி! வாழி!




பாவம், இவருடைய பயிர்
முழுவதும் நோய்க்கு
இரையாகி விட்டது!

ரூ. 30 மட்டும்
செலவழித்து
இந்த மாபெரும்
நஷ்டத்தைத்
தவிர்த்திருக்கலாம்!



சொற்ப செலவில் டைதேன் Z-78
வாங்கி உபயோகித்தால் உங்கள்
விலைமதிப்பற்ற பயிருக்குப்
பாதுகாப்பளிக்க முடியும்.
டைதேன் Z-78 பயிர்களின்
நோய்களைக் கட்டுப்படுத்துவதில்
அதிசய சக்தி வாய்ந்தது. இது
செடிகளின் இலைகளுக்கோ,
பூக்களுக்கோ, காய்களுக்கோ
ஒருவித தீங்கும் விளைவிக்காது.
விளைச்சலைப் பெருக்க உதவுவதுடன்
இது பயிரின் தரத்தையும்
உயர்த்துகிறது.

இண்டோ:பில் கெமிக்கல்ஸ்
லிமிடெட்
பம்பாய்-25, இந்தியா

DITHANE என்ற பெயரும்
:ப்ளாஸ்க் சின்னமும்
ரோம் அண்ட் ஹாஸ் கோ/
பிலாடெல்பியா, பா., வின்
டிரேட் மார்க்குகள். இவை
யு. எஸ். ஏ. விலும் இதர
நாடுகளிலும்
ரெஜிஸ்டர்
செய்யப்
பட்டுள்ளன.

# அன்னைத் தமிழில் அறிவியல் நூல்கள்

கல்வி தாய்மொழி வாயிலாகக் கற்கப்படுகையில் அக்கல்வி கற்கின்ற மனத்தில் ஆழ்ந்து பதியும் என்பதும், மக்களிடையே துரிதமாகப் பரவும் என்பதும் கல்வியின் உண்மை நிலையினை அறிந்தோரின் முடிந்த கருத்தாகும். ஆனால் தமிழின் வாயிலாகக் கல்வி பயில வேண்டுமாயின் தமிழில் போதிய நூல்கள் இல்லாமை ஒரு பெரும் தடையாக இருந்து வருகிறது. இத் தடையைப் போக்கத் தமிழில் நூல்கள் இயற்ற வேண்டிய எல்லாவித முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மொழி பெயர்ப்பின்போது மொழியின் சில அடிப்படை உண்மைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். எழுத்து என்பது ஒலியின் குறியீடு. எழுத்து தானே ஓர் ஒலியைக் கொண்டிருப்பதில்லை. அம் மொழியின் வழக்கில் தொடர்ந்து ஓர் ஒலியை அதன் மீதேற்றிப் பயன்படுத்துகின்றனர். அதுபோன்றே சொல் என்பது பொருளின் சொல்லீடு. இதே அடிப்படையில்தான் அறிவியற் சொற்களும் அமைக்கப்படல் வேண்டும்.

ஆங்கில மொழியில் பயன்படுத்தப் பெறும் அறிவியற் சொற்கள் பெரும்பாலும் கிரேக்கம், இலத்தீன் ஆகிய மொழிகளில்உள்ள வேர்ச்சொற்களுடன் முன்னொட்டுகளையும், பின்னொட்டுகளையும் இணைத்து அமைக்கப்பட்டனவாயுள்ளன. அச்சொற்கள் சொல்லப்படவேண்டிய கருத்தை முழுதும் பிரதிபலிப்பதில்லை. பிரதிபலிக்கவும் இயலாது; எடுத்துக் காட்டாக (தாவர இயலில்) (Protoplasm) என்ற சொல் இரண்டு அசைகளைக் கொண்டது.

கிரேக்கம் {Proto—முன்னர்
{Plasma—வடிவம்.

**சண்முகசுந்தரம். எம்.எஸ்ஸி**

தமிழில் நேர் சொல்லாக்கம்செய்ய—முந்தை வடிவம் என்றாகும். இச்சொல் Protoplasm என்பதற்குக்கருதப்படவேண்டியஎல்லா விளக்கத்தையும்சொல்வதில்லை. பொருள், கொண்டு கூட்டியே எண்ணப்படுகிறது. மற்றொரு சொல் (தாவர இயல்) Bract; இச் சொல் (Bracket) என்பதன் மருஉ. பூக்காம்பை அடைத்தது போல் இருக்கிறது என்ற கருத்தில் அமைக்கப்பட்ட சொல். Bracket என்ற சொல் அடைப்பு என்ற பொருள் மட்டுமே உடையது.



ஆனால் இதற்கு இப்போதுள்ள மொழி பெயர்ப்பு பூவடிசெதில் என்பதாகும். இது ஒரு சொல்லீடாகாது. விளக்கமேயாகும். இது போன்ற பொருத்தமற்ற மொழியிலக்கணம் பிறழ்ந்த சொற்கள் இப்போதுள்ள தமிழாக்க நூல்களில் மலிந்துள்ளது. சொல்மொழி பெயர்ப்பாளர்கள் சொல் விளக்கம் தராமல் சொல்லீடுகளை உருவாக்க வேண்டும். சொல்லவேண்டிய கருத்துக்குத் தேவையான வேர்ச்சொல்லைக் கண்டறிந்து பின்னர் அதைப் பொருத்தமான விகுதி, ஈறு, முன்னொட்டு, பின்னொட்டு இவைகளுடன் இணைத்து இரண்டு மூன்று அசைகளுடன் சொற்களை அமைக்கவேண்டும்.

பிற மொழிகளைப் போலன்றித் தமிழில் அறிவியற் சொல்லீடுகளை உண்டாக்குவது எளிமை. ஏனெனில் பல ஆங்கிலச் சொல்லீடுகளின் வேர்ச் சொற்கள் தமிழில் உள்ள வேர்ச்சொற்களாகும். இந்த ஒற்றுமை, தாவர இயலில் பெரிதும் மலிந்துகிடக்கின்றன. எடுத்துக்காட்டாகச் சிலவற்றைக் காட்டுகிறேன்.

1. Poly என்ற சொல் பல என்பதைக் குறிக்கிறது. (கிரேக்கம்).

2. Gamy என்ற சொல்லின் வேர்ச்சொல் Gamos என்பதாகும். தமிழில் அதன் வேர்ச்சொல் காமன் என்பதாகும்.

Gamos—காமம், விருப்பம்,
புணர்ச்சி,

3. Iso என்ற சொல்லின் வேர்ச்சொல் Isos. தமிழில் அதன் வேர்ச்சொல்இசை.

Iso—ஒத்தது

இசை—ஒத்தது.

4. Heteros என்பது பிற, வேறு என்னும் பொருளுடையது. அதன் தமிழ் வேர்ச்சொல் எதிர் என்பதாகும். Heteros என்பதில் H எழுத்து ஒலி இன்றி நிற்கும்.

5. Allo என்பது தமிழ் வேர்ச்சொல்லான அல்லாத, அல்லா என்னும் சொல்லுடன் ஒப்புமையுடையது. இது போன்ற சொற்கள் ஏராளம்.

தமிழில் அறிவியற்சொல்லீடுகளை உருவாக்குகையில் கடைப்பிடிக்க வேண்டிய சில விதிகளை மனத்தில் கொண்டால் நல்ல சொற்கள் உருவாக இயலும்.

முதலாவதாக, முன்னர் குறிப்பிட்டுள்ளதைப் போல் ஆங்கில அறிவியற் சொற்களில் வேர்ச்சொல்லைக் கண்டறிந்து பின் அதற்கு ஒப்ப ஒரு தமிழ் வேர்ச்சொல்லுடன் விகுதி, ஈறு, முன்னொட்டு, பின்னொட்டு இவற்றுடன் இணைத்துச்சொல்லாக்குதல்வேண்டும். ஆங்கில வேர்ச்சொல் பொருத்தமன்றியிருப்பின் வேறு பொருத்தமான தமிழ் வேர்ச்சொல்லைப் பயன்படுத்துதல் வேண்டும்.

இரண்டாவதாக, அறிவியற் சொல்லீடுகள் பொதுவான வழக்குச் சொல்லாக இல்லாமல் இருப்பது நல்லது. எனவே வழக்கொழிந்த நல்ல தமிழ்ச் சொற்களைச் சிறிது உருமாற்றிப் பயன்படுத்தலாம்.

மூன்றாவதாக, ஆங்கில அறிவியற் சொற்கள் சிறப்புப் பெயரின் அடிப்படையில் தோன்றியிருப்பின் அதே சிறப்புப் பெயரைப் பயன்படுத்தித் தமிழில் சொல்லாக்கம் செய்ய வேண்டும்.

நான்காவதாக, சிறப்புப் பெயர்களை அப்படியே தமிழ் எழுத்தில் பயன்படுத்த வேண்டும். அவைகளுக்குத் தமிழ் சொல்லாக்கம் செய்யக் கூடாது. எடுத்துக்காட்டாக, Ranunculaceae—என்பது ஒரு தாவரக் குடும்பப் பெயர். அது அப்படியே தமிழ் எழுத்தில் கூடிய அளவில் ஒலி மாறாமல் எழுதப்படவேண்டும்.

ஆனால் சிறப்புப் பெயர்கள் எவை, பொதுப் பெயர்கள் எவை என்பதைக் கண்டறிவதில் ஐயம் ஏற்படக்கூடும். அவைகளின் வேறுபாட்டைக் கண்டறிய கீழ்க்கண்ட இலக்கணம் பெரிதும் பயன்படும். நிகழ்ச்சிகளின் பெயர்களும் உறுப்புகளின் பெயர்களும் பொது வழக்கில் அறியப்படும் பொருள்களின் பெயர்களும் மட்டுமே பொதுப் பெயர்களாகும். ஏனையவை சிறப்புப் பெயர்களாகும். இப்பொழுது இலக்கணத்திற்குச் சில ஒழிபுகள் உண்டு. மேற்கண்ட விதிகளைப் பின்பற்றி உருவாக்கப்பட்ட சொற்களில் சிலவற்றைக் கீழே தருகிறேன்.


நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண்: 52670 - 52671
52672 - 52673

தந்தி: MONARCH

Sarath


1. உயிர்கள் யாவும் நுண்ணிய மூலப் படிகளால் கட்டப்பட்டு ஒரு குறிப்பிட்ட அமைப்பைப் பெறுகின்றன. கட்டடங்கள், கற்களின் அடுக்குகளினால் உண்டாவது போல உயிர்களின் உருவங்கள்அமைக்கப்பட்டுள்ளன. அக்கற்கள்—மூலப் படிகள் ஆங்கிலத்தில் Cell எனப்படும்.

Cell—என்பதின் சொற்பொருள் வெற்றிட அறை என்பதாகும். இந்த Cell என்னும் பெயர் இதை முதன் முதலில் கண்டறிந்த ராபர்ட்ஹூக் என்பவரால் இடப்பட்டது. அவர் கொண்ட பொருள் வெற்றிட அறை என்பதேயாகும். Cell உயிர்ப்பொருளைத்தாங்கி நிற்கும் உயிர்மூலம் என்பதை அறிவியலார் உணர்ந்த பின்பும் வெற்றிட அறை என்னும் பொருளுடைய Cell என்னும் சொல்லே இன்னமும் பின்பற்றப்படுகிறது. ஆனால் Cell என்பது உயிர் மூலம் என்பதையுணர்ந்து—

வயம்

என்னும் பெயரைப் பயன்படுத்தலாம்.

வயம்—மூலம், வெற்றி, வலிமை, திறம்.

இதற்கு உயிர் அணு என்றும், செல் என்றும் நூல்களில் பயன்படுத்துகின்றனர். உயிர் அணு என்பதில் உள்ள உயிர், அணு ஆகியவை இரண்டும் அறிவியற் சொல்லாக வேறு துறைகளில் பயன்படுத்தப்படுகிறது. எனவே இது பொருத்தமன்று. மேலும் இது இரண்டு தனிச் சொற்களாகும். இம்முறையில் சொல்லாக்கம் செய்வது சரியல்ல.

2. உயிர்கள் காற்றை உள்ளிழுத்து வெளியிடுவதிலும் அதன் விளைவாக உட்கொண்ட உணவுகள் சிதைவுறுதலும் அதன்மூலம் உண்டாகின்ற சக்தி கொண்டு உயிர் இயக்கங்கள் நடைபெறுதலும் நிகழ்கின்றன. காற்றை உள்ளிழுத்து வெளிவிடும் செயல் ஆங்கிலத்தில் Respiration—எனப்படுகிறது. கிரேக்க வேர்ச்சொல்லான Spirare என்பதிலிருந்து இச்சொல் உருவாக்கப்பட்டுள்ளது.

Re—மறுபடியும்

Spirare—மூச்சுவிடுதல்.

இதற்குப் பொருத்தமான தமிழாக்கம் உயிர்ப்பு என்பதாகும். இப்போது சுவாசித்தல் என்ற சொல்லைத் தமிழ் நூல்களில் பயன்படுத்துகின்றனர்.

3. வேர்கள், தண்டு, கிளைகள், இலைகள் இவைகளின் தொகுதி ஆங்கிலத்தில் Shoot System எனப்படுகிறது.

Shoot—பாய்தல், சுடுதல், எழும்புதல்.

மறைந்திராது வெளிப்போந்து அமைகின்ற தொகுதி என்ற கருத்தில் இச்சொல் அமைக்கப் பட்டுள்ளது. இதற்குப் பொருந்திய தமிழ்ச் சொல் எடுப்பு என்பதாகும்.

Shoot System என்பதை எடுப்புத்தொகை என்று அழைக்கலாம். தமிழ் நூல்களில் பயன் படுத்தப்பெறும் சொல் தண்டுத் தொகுதி என்பதாகும். தண்டு என்ற சொல் ஆங்கி லத்தில் Stem என்பதையே குறிக்கும்.

4. தாவரங்களின் வெளியுறுப்புகளின் ஊடாக குறிப்பாக இலைகளின் வழியாக நீர் ஆவிநிலையில் வெளிப்படுதல் ஆங்கிலத்தில் Transpiration என்று அழைக்கப்படுகிறது. இதற்கு வேர்ச்சொற்கள் இலத்தீன் மொழியி லிருந்து எடுக்கப்பட்டவை.

Trans—குறுக்காக (எதிரிடையாக).

Spirare—மூச்சுவிடுதல்.

மூச்சுவிடுதலுக்கு எதிரான—வேறுபாடான ஒரு செயல் என்ற கருத்தில் இச்சொல் அமைக் கப்பட்டுள்ளது. இதன் பொருத்தமான சொல்லாக்கம் ஆவிப்பு என்பதாகும்.

ஆவி—நீராவி.

ஆவித்தல்—ஆவியாக வெளிப்போதல்.

(ஒப்பு நோக்குக)—உயிர்த்தல்—உயிர்ப்பு.

இதற்குத்தமிழ் நூல்களில் கையாளப்படும் சொல் ''நீராவிப் போக்கு'' என்பதாகும். இது ஒரு சொல் விளக்கமே யொழிய சொல் லீடாகாது. ஆங்கிலத்தில் Steam Passage என் பதற்குத்தான் நீராவிப் போக்கு என்ற சொல் லாக்கம் பொருந்தும்.

5. தாவரங்களில் ஒருவகைத் திசுத்தொகுதி நிலத்தினின்றும், நீர், கனிக உப்புக்கள் முதலி யவைகளை வேர்கள், தண்டு, கிளைகள், இலை கள் என்றவாறு கீழிருந்து மேல்நோக்கி எடுத் துச் செல்லும் பணியைச் செய்கிறது. இத் தொகுதி ஆங்கிலத்தில் Xylem எனப்படு கிறது. இதன் வேர்ச்சொல் கிரேக்கத்தின் (Xylon) என்பது. அது மரம் என்னும் பொருளுடையது. மரம் விளைவது என்பது இதன் அளவைக் கொண்டே கருதப்படுவதால் இச்சொல் அமைக்கப்பட்டுள்ளது. தமிழில் இதற்கு விளை என்பது மிகவும் பொருந்தி வரும்.

விளை—விளைவு.

இப்போதுள்ள தமிழ் நூல்களில் இதற்கு சைலம் என்று பயன்படுத்தப் படுகிறது. Xylem என்பது பொதுப் பெயரானதால் இச்சொல் தமிழாக்கம் செய்யப்படவேண்டும்.

தமிழ்ச் சொல்லாக்கத்தில் பெரும் பிரச்சினை சிறப்புப் பெயர்களை ஒலிமாற்றம் நேராமல் தமிழ் எழுத்துக்களைக் கொண்டு எழுதுவதா கும். இத்துறையில் இதுகாறும் செய்யப்பட்ட சொற்கள்போற்றக்கூடியனவாகஇல்லை. தொல் காப்பியத்தில் கூறப்பட்டவிதிகளைக் கடைப் பிடித்தால் சொல்லாக்கத்தில் பெரும் வெற்றி காணலாம். தொல்காப்பியத்தில் கூறப் படுவது ஒலி வடிவ இலக்கணமேயாகும். அது பொதுவானது. தமிழுக்கு மட்டுமே என்று கருதுவது தவறு. தமிழில் உள்ள சார்பு எழுத்துக்களான குற்றியலுகரம் குற்றியலி கரம், ஆய்தம் ஆகியவைகளுடன் அளபெடை யையும் இணைத்து ஆங்கிலச் சொற்களை ஒலி மாற்றம்நிகழாமல்தமிழில்எழுத ஆங்கிலத்தில் போலல்லாமல் தமிழில் ஒலி இலக்கணம் இல்லை. ஆனால் இன்றைய தேவையை உணர்ந்து ஆரம்பக் கல்வி நிலையிலிருந்து எழுத்து, ஒலி இலக்கணங்களை மாணவர் களுக்குப் பயிற்றுவித்தால் நமது முயற்சியில் பெரும் வெற்றி காணலாம். எடுத்துக் காட்டாக ஆரம்பப் பள்ளி மாணவன், கஃபு என்பதை ஆங்கில உச்சரிப்புடன் ஒலிக்கப் பழகவேண்டும். அவ்வாறே ஆங்கிலத்தில் எழுதுகின்ற அடிப்படை ஒலி வேறுபாடுகளைத் தமிழ் எழுத்தைக் கொண்டே அவன் ஒலிக்கப் பழகவேண்டும். எடுத்துக் காட்டாக Man என்பதை மேஅன் என்று எழுதி அதை Man என்பதற்கான சரியான ஒலி வடிவாக அவ னுக்குப் பழக்க வேண்டும். ஆரம்பக் கல்வி பயிலும் மாணவன் படிக்கும் அரிச்சுவடியின் அமைப்பே தவறாக உள்ளது. அது

அ, ஆ, இ, ஈ, உ, ஊ ஃ
க, கா . . . . . . . . . . . . . . க்
ங, ஙா . . . . . . . . . . . . . ங்
ச, சா . . . . . . . . . . . . . . ச்
. . . . . . . . . . . . . . . . .
ன, னு . . . . . . . . . . . . . ன்

என்ற வரிசையில் அமைக்கப்பட்டுள்ளது. இது பிழையுடையதாகும். சரியான அமைப்புக் கீழ் கண்டவாறு இருத்தல் வேண்டும். இதில்

அ, ஆ, இ, ஈ . . . . . . ஔ
க், க, கா, கி . . . . . . கௌ
ங், ங, ஙா, ஙி . . . . . . ஙௌ
ச், ச, சா, சி . . . . . . . . சௌ
. . . . . . . . . . . . . . . . . . . .
ன், ன, னு, னி . . . . னௌ

என்ற ஒரு தொடரும்.

ஃக, ஃச, ஃட . . . . . . . . . . . . . . . . . . . .
என்ற வல்லினங்களுக்கு ஒரு தொடரும் தனித் தனியாகக்கற்பிக்கப்பட வேண்டும். அத்துடன் குற்றியலுகரம், குற்றியலிகரம், அளபெடை இவைகளுடன் இணைந்த வெவ்வேறு சொற் களும், அவற்றின் ஒலிகள் ஆங்கில மொழியில் பெரிதும் வருகின்ற ஒலிகளுக்கு ஒப்ப வருவ தாக அமைத்துக் கற்பிக்க வேண்டும்.

இதுபோன்ற முறைகளைப் பின்பற்றி முயற்சி மேற்கொண்டால் தமிழில் நல்ல நூல்களை நிச்சயம் உருவாக்க இயலும். கற்றறிந்தோர் முயலுவாராக.




# பதவி உயர்வு

சோம. மகாதேவன்

கீழ்க்கட்டிலிருந்து, சங்கரியம்மாள் வாய் ஓயாது பேசிக் கொண்டிருப்பதை, மாடியிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த அமுதாவுக்கு ஆங்காரமே வந்து விட்டது. படிக்கட்டு விளக்கையும் போட்டு விட்டு, ஆவேசத்தோடு நாலு படிகள் இறங்கி, குனிந்து சங்கரியம்மாளைப் பார்த்தாள். அவளது உதடுகள் துடித்தன.

''அத்தோடதான் நிறுத்துங்க. மரியாதைக்குப் பேசாம இருந்தா நீட்டிக்கிட்டே போறீங்களே! பேரன் பேத்தி எடுக்கப்போற வயசிலே இது நல்லா இருக்கா ?'' என்று படபடப்போடு கேட்டாள்.

''நீ மாடி வீட்டுக்காரி. நீட்டி முழக்கிணுச் செல்லும். கீழே நிக்கறவ சொன்ணு எடுக்குமா ?'' என்று, கீழே நின்று கொண்டு, சங்கரியம்மாளும் இடைவெளி விடாமல் ஆரம்பித்தாள்.

அமுதாவுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

இந்த வயதில், இப்படியும். அடுத்த வீட்டுப் பொருளின் மீது ஆசை வைத்து ஆலாய்ப் பறப்பாளா ஒரு பெண்?

''இரவல் கொடுத்ததையெல்லாம் கேட்காம இருந்தா சிரிச்சுப் பேசுவீங்க. கேட்டா பொறுமிப் போறீங்களே'' என்ருள் அமுதா.

இவள்தான் சிறியவள். சங்கரியம்மாளுக்கு வயதுக்கான பக்குவம் இருப்பதில்லை.

'' ஆமடியம்மா ..........நீ பெரிய சீமாட்டி, உங்கிட்ட இரவல் வாங்கித்தானே பிழைக்க வேண்டியிருக்கு! அது என்ன மாயமோ—இந்தச் சின்ன உத்தியோகத்திலே, எங்கே இருந்துதான் வருதோ ரேடியோவும் பேனும்'' என்று சொல்லித் தொட்டதைத் தொடர்ந்தாள்.

அமுதாவுக்குக் கோபம் பொங்கி வந்தது.

' அப்படியே பாய்ந்து, சங்கரியம்மாளைக் கீழே தள்ளிப் புரட்டி எடுக்க வேண்டும்' என்றுதான் அவள் நினைத்தாள்!

இருந்தாலும் ஆபீசர் மனைவியாச்சே.

இந்த எண்ணத்தில் தானே இவள் இவ்வளவும் பேசுகிருள்!

'' நினைச்சதை வாங்க வக்கு, இல்லையின்ணு முட்டிக்கணும். அதுக்கு என்ன செய்யறது? உங்க முன்ணுலே குடி இருந்தாலே எரிச்சிப் போடுவீங்க'' என்று ஆத்திரத்தோடு சொன்ன அமுதா, திரும்பிப் படியேறி வந்து, முன் பக்கத்துத் தளத்திலேயே முழங்கால்களைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்து விட்டாள்.

இங்கே குடிவந்த நாளையிலேயிருந்து இப்படியா ?

மனதார, நினைத்த பொருள்களை வாங்கிக் கண்ணெதிரே கொண்டு வரமுடியாது. சுட்டெரித்துப் போடுகிருள் மகராசி. பின்ணுலேயே இரவல் கேட்டும் வந்து விடுவாள். கொடுப்பதைத் திருப்பிக் கேட்காமல் இருக்க முடியுமோ? கேட்கும்போது, இப்படித்தான் பொறுமல் வந்துவிடுகிறது.

ஒவ்வொன்ருக எங்கிருந்தோ வருகிறதாமே.

நினைவைத்தான் பாருங்களேன். இங்கே என்ன இந்த மாதச் சம்பளத்தை வைத்தா பிழைப்பு நடக்கிறது! பேசுகிருளே பெரிய மனுசி!



இன்றைக்கு எல்லாமே கூடித் தான் வருகிறது.

அவர் வரட்டும். இரண்டிலொன்று தீர்ந்தாக வேண்டும்.

கீமே அளரவம் கேட்டது.

அமுதா—எழுந்து எட்டிப் பார்த்தாள்.

கீழ்வீட்டு மேலதிகாரியோடு அவர் வந்து விட்டார். தினமும் இப்படித்தான்—இரவு பத்து மணிக்கு மேலாணுலும் இருவரும் ஒன்ருகவேதான் வருவார்கள்:

அடுத்தடுத்துக் குடியிருந்து கொண்டு, முன்ருல் எழுந்து வர முடியாதாமே!

உள்ளே நுழைந்ததும், இருவரும் படிக்கட்டின் பக்கத்திலே நின்று பேச ஆரம்பித்து விட்டார்கள்.

அடடா பக்கத்தில் நின்று பேசும்போது, இவருக்குத்தான் என்ன பணிவு—குழைவு.

புதுப்புது ரசனையோடு நாளும் எதைத்தான் பேசித்தொலைப்

பார்களோ! காலை கடுக்க நின்று னும், ரசித்து, இடையிடையே சிரித்துக் கேட்டுக் கொண்டிருக்கிறுரே இவர்! இந்தச் சாமர்த்தியம் வேறு யாருக்கு வரும். ஆனால் வீட்டிலொருத்தி பசியோடு காத்துக்கொண்டிருக்கிறுளே என்ற உணர்வு, இடையிலே சங்கரியம்மாள் வந்து நுழையும் வரையிலும், வரவே வராது.

சுந்தரம் வேகமாக மாடிப் படியேறி வந்தான்.

அமுதா சமையலறைக்குள் நுழைந்து கொண்டாள்.

இன்றைக்கு இரண்டிலொன்று தெரிந்தாக வேண்டுமே?

உடுப்பையும் களையாமல், அவனும் " அமுதா " என்றழைத்துக் கொண்டே அவளைத் தேடி வந்து விட்டான்.

அவள் கோபத்தோடு திரும்பினுள்.

" ஏன்—எங்கிட்டே வந்து பேசறதுக்கும் மிச்சம் வச்சிருக்கிங்களா?" என்று கேட்டாள்.

" ரொம்பக் கோபமாக்கும் " என்று சொல்லி நெருங்கி வந்தான் சுந்தரம்.

" ஆமா—நிறையவே பேச வேண்டியிருக்கு உங்ககிட்ட. முதல்லே சாப்பிடுங்க. எனக்குப் பசிக்குது " என்று சொல்லிச் சாப்பாடு போடுவதில் முனைந்தாள் அமுதா.

சுந்தரத்துக்குத் திகைப்பாக இருந்தது.

ஒரு நாளும் இல்லாது, இன்றைக்குக் கண்டிப்பாக உத்தரவு போடுகிறுளே அமுதா! சங்கரியம்மாளுக்கும் இவளுக்கும் சொற்போர் நடந்திருக்குமோ! நடந்திருக்கும். முகத்தைப் பார்த்தால் தெரியவில்லையா?

ஒன்றும் பேசாமலே சாப்பிட உட்கார்ந்தான் சுந்தரம்.

அமுதாவும் வாயைத் திறக்காமலே பரிமாறினுள்.

* * *

மனத்துக்குள் பரபரத்தவனுய்க் கட்டிலில் உட்கார்ந்திருந்தான் சுந்தரம்.

இவனுக்கு வாய்ப்பூட்டுப் போட்டுவிட்டு, அடுப்படியில் வேலையை முடித்துக்கொண்டிருந்தாள் அமுதா.

இவள் எப்போது வருவது?

எவ்வளவு ஆவலோடு—அந்த மகிழ்ச்சிகரமான செய்தியைச் சொல்லப் படியேறி வந்தான் சுந்தரம்?

அதைச் சொல்ல விடுகிறுளா இவள்?

என்ன செய்வது? இந்த ஈராண்டுகளில் இவனைத் தனக்குள்ளே சிறை வைத்திருக்கிறுளே!

கையில் பால் கிண்ணத்தோடு அறைக்குள் நுழைந்தாள் அமுதா.

அந்தக் கடுகடுப்பு மறைந்து முகத்திலே புன்னகை மலர்ந்திருக்கிறது.

சுந்தரத்துக்குத் தெம்பு வந்தது.

"வாயைத் திறக்கலாமா தேவியாரே " என்று சிரிக்காமல் கேட்டான்.

"வாயைத் திறந்து, முதல்லே இந்தப் பாலைச் சாப்பிடுங்க, ஆறிப்போகும்" என்று சொல்லி அவன் கையிலே பால் கிண்ணத்தைக் கொடுத்துவிட்டுக் கட்டிலிலே உட்கார்ந்தாள் அமுதா.

"இப்ப உனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் ஒரு செய்தியைச்



சொல்லப் போறேன் " என்று ஆரம்பித்தான் சுந்தரம்.

"நானும்தான் உங்களுக்கு முடிவா ஒண்ணு சொல்லப் போறேன் " என்று விடுகதை போட்டாள் அமுதா.

சுந்தரம் அவளைப் பக்கத்திலே இழுத்துக்கொண்டான்.

" எனக்கு ஒரு வாரத்திலே பதவி உயர்வு கிடைக்கப் போகுது " என்றுன் உற்சாகத்தோடு.

" எனக்குத் தெரியுமே, உங்களுக்குத் கிடைக்காம இருக்க முடியுமா?" என்று சாதாரணமாகவே சொன்னுள் அமுதா.

சுந்தரத்தின் முகம் வாடி விட்டது.

" எனக்கு உயர்வு கிடைப்பதில் உனக்கு மகிழ்ச்சியே இல்லையா?" என்று கேட்டான்.

அமுதா சிரித்தாள்.

" உங்களுக்கு வர்ற உயர்விலே எனக்குத்நான் முழுப் பங்கு இருக்கு " என்றவள், அவனது கழுத்தைத் தனது தளிர்க்கரங்களால் வளைத்துக் கொண்டு, "கொஞ்ச நாளாவே, நீங்க எப்படியெல்லாம் இருக்கணும், உங்க உருவத்துக்கு, உங்க படிப்புக்கு, சிறப்பைக் கொடுக்கக் கூடியது எந்தப் பதவின்னு யோசிச்சுக்கிட்டே இருந்தேன். முடிவும் செய்யதாச்சு. இதுக்கு முன்னலே நீங்க, இந்தப் பதவி உயர்வு அடையப் போறது எனக்கு ஒரு பொருட்டாவே தோணலே " என்றுள்.

" இப்ப—நமக்கு என்ன குறை இருக்கு " என்று கொஞ்சும் முகம் பார்த்துக் கேட்டான் சுந்தரம்.

" இந்த அலுவல் உங்களுக்குப் பிடிச்சுப் போச்சு. எனக்குப் பிடிக்கலே. கொஞ்ச நாளையிலே—யந்திரத்தோட யந்திரமா—எல்லாமே மரத்துப் போகும் " என்றுள் அவள்.

" வாழ்க்கையே இதுதானே, இதிலே சலிச்சுக்கிட்டா—என்ன ருசி இருக்கும் " என்று கேட்டான் அவன்.

"உங்களையே மறந்து, இந்த ஊழியத்திலே மூழ்கிப் போயிட்டீங்க. யாருக்கும் பணியாம நம்மாலே சுதந்திரமா வாழ முடியும் " என்ற அமுதா எழுந்து சென்று, பக்கத்து அலமாரியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து வந்து, 'நீங்க எப்படி இருக்கணுமோ—அப்படி இருக்கிறதுக்கு உத்தரவு வந்திருக்கு. படிச்சுப் பாருங்க. இனிமே நீங்கதான் இந்நாட்டு மன்னர் " என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே, கடிதத்தை அவன் கையில் கொடுத்தாள்—அமுதா.

இரவு வெகு நேரம் வரையிலும் அந்த அறையின் விளக்கு அணையவில்லை.

* * *

மறுநாள் காலை எட்டுமணியளவில், மாடியிலிருந்து இறங்கி வந்து, படிக்கட்டின் ஓரமாக நின்று கொண்டு " சார் " என்று குரல் கொடுத்தான் சுந்தரம்.

" என்ன சுந்தரம், அதுக்குள்ளே புறப்பட்டாச்சா?" என்று கேட்டுக் கொண்டே பனியனேடு வெளியே வந்தார் தெய்வநாயகம்.

" இல்லே சார், வந்து...." என்று, சொல்ல நினைப்பதைச் சொல்ல முடியாமல் தயங்கினுன் சுந்தரம்.

" என்ன— இன்றைக்கும் ஆபீசுக்கு மட்டமா? சுந்தரம் பிரமோசன் வர்ற சந்தர்ப்பத்திலே ரொம்பக் கவனமா இருக்கணும். நேற்றுக்கூட உனக்குச் சொல்லலையா?" என்று ஆரம்பித்தார் தெய்வநாயகம்.

சுந்தரம் குறுக்கிட்டான்.

" அதில்லே சார், இந்த வேலையையே ராஜினமா செய்யறதா முடிவு செய்திருக்கேன்" என்றுன்.

தெய்வநாயகம் திகைத்துப் போய் விட்டார்.

" வேலை கிடைக்கிறது கடினமா இருக்கிற காலத்திலே யாராவது கணக்கு இருக்கும் வேலையை விடுவாங்களா? நானே உன்னை எவ்வளவு தயார் பண்ணியிருக்கேன்! இப்ப என்ன வந்திருச்சு உனக்கு?" என்று படபடப்போடு கேட்டார் தெய்வநாயகம்.

சுந்தரம் மேலே ஏறிட்டுப் பார்த்தான்.

அமுதா படிகளில் இறங்கி வந்தாள்.

வீட்டிற்குள்ளிருந்து சங்கரியம்மாளும் வந்து நின்றுள்.

அமுதா, சுந்தரத்தின் பக்கத்தில் வந்து நின்று, தெய்வநாயகத்தைப் பார்த்துச் சொன்னுள்.

" இவர் வேலையிலே கண்ணு இருந்திட்டதிலுலே, தன்னைப் பற்றி எதுவுமே உங்க கிட்டச் சொல்லலே. எங்க அத்தைக்கு இவர் ஒரே பிள்ளை. சின்ன வயசிலேயே மாமா இறந்திட்டாரு. அத்தைதான் இவரை வளர்த்து ஆளாக்கிப் படிக்க வச்சாங்க. இப்ப அத்தை—கிராமத்திலே தனியா நின்று சிரமப்படுறப்ப, இவர் யாருக்காக உத்தியோகம் பார்க்கணும்?" என்று கேட்டாள்.

" இது என்னம்மா பைத்தியக்காரத்தனமா இருக்கு? அம்மாவையும் இங்கே அழைத்து வந்தால் போச்சு; அவங்க ஏன் அங்கே தனியா இருக்கணும்?" என்றுர் திகைப்பு நீங்காமலே.

அமுதாவே சொன்னுள்.

" எங்க கிராமத்திலே, ஆறு ஏக்கர் நன்செய் இருக்கு. முப்போகம் விளையுது. பெரிய மாடிவீடு, தென்னந் தோப்பு இருக்கு. எல்லாத்தையும் விட்டுவிட்டு அத்தை இங்கே வருவாங்களா? அதுனுலேதான், அத்தைக்குத் துணையா, இந்த வேலையை எழுதிக் கொடுத்திட்டு நாங்க போறேம். எங்க நிலத்திலே முறையோட பாடுபட்டா ஊருக்கே சோறு போடலாமே!" என்ற அமுதா திரும்பிப் பார்த்தபோது, சங்கரியம்மாள் 'பொசுக்'கென்று வீட்டிற்குள்ளே போய்விட்டாள்!



## காதலனைத் தின்னும் காதலி

" காதல் போயிற் சாதல் " என்றுர் பாரதியார். இதற்கு மாருக, காதல் கைகூடினுல் சாவை அணைத்துக் கொள்கிற ஒரு விந்தையும் இங்கு நடைபெறுகிறது!

ஆம். காதலித்துக் கூடி இன்பத்தில் திளைத்து அவ்வின்பத் திளைப்பிலிருந்து மீண்டதும் காதலனைப்பிடித்துக் காதலியே, கொன்று தின்றுவிடுகிற 'விந்தை'யை நாம் தேளின் வாழ்க்கையிலே காணலாம்.

ஆண் தேள், பெண் தேளை விரும்பி, அதன் அருகிற் சென்று, ஒரு வகையான காதல் நடனம் புரியும். பின்னர், ஆணும் பெண்ணும் கைகோத்துக் கொள்வதுபோல், ஆண் தேள் தனது கொடுக்குகளால் பெண் தேளின் கொடுக்குகளைப் பிடித்துக்கொண்டு, முன்னும் பின்னுமாகவும் சுற்றிச் சுற்றியும் நடந்து கொண்டிருக்கும். பின் இரண்டும் தமது வால்களை நிமிர்த்தி உராயச் செய்யும். அதன் பிறகு, ஆண் தேள், மண்ணில் ஒரு சிறிய பள்ளத்தை ஏற்படுத்தி, இரண்டு தேள்களும் அதில் இறங்கிக் காதல் கேளிக்கையில் ஈடுபடும். கேளிக்கை முடிந்ததும், பெண் தேள் ஆண் தேளைப் பிடித்துக் கொன்று விடும்.



# வழங்கியோர் பட்டியல்

| | ரூ. | காசு. |
|---|---|---|
| கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் | 5,68,606 | 09 |
| தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் | 44,943 | 18 |
| இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர். | 36,827 | 33 |
| நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் | 33,134 | 25 |
| மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் | 20,234 | 86 |
| கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் | 13,628 | 45 |
| தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் | 12,360 | 25 |
| தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் | 10,261 | 94 |
| மறை திரு. ஆர். அருளப்பா, சென்னை | 10,000 | 00 |
| திரு. இராமச்சந்திரன், புதுப்பேட்டை, பண்ணுருட்டி. (தொழில் அமைச்சர் அலுவலகம் மூலமாக) | 21 | 00 |
| தென்சென்னை மின்விநியோகக் கூட்டுறவு | 4,000 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கீழப்பாவூர், திருநெல்வேலி மாவட்டம். | 700 | 00 |
| வட்டார வளர்ச்சி அலுவலர், பாளையங் கோட்டை. | 1,400 | 00 |
| துணைப்பதிவாளர், கழுகுமலை | 64 | 50 |
| துணைப்பதிவாளர், அலிவார்த்திநகர் | 242 | 64 |
| மாவட்ட சுகாதார அலுவலர், திருநெல்வேலி | 45 | 00 |
| துணைப் பதிவாளர், திருச்செந்தூர் | 65 | 00 |
| லயன்ஸ் கிளப், அம்பத்தூர் | 104 | 00 |
| திரு. ஐ. துரையப்ப ஆசாரி, மேட்டுப்பாளையம். | 6 | 00 |
| திரு. வி. ஆர். சுப்ரமணியம், பெரியகுளம். | 5 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கோடைக் கானல். | 3,000 | 00 |

| | ரூ. | காசு. |
|---|---|---|
| காசில் அப்துல் காதர், அரசர்குளம் | 30 | 00 |
| பிடிட்டியூட்ஸ் சமூக சேவை நிலையம் | 395 | 80 |
| திருமதி பழனிசாமி பத்மாவதி, பொன்மலை | 5 | 00 |
| திரு ஆர். வி. தனபாலன், பி.ஏ., பி.எல். | 11 | 00 |
| திரு எ. எம். டி. நாச்சியப்பன், எம்.எல்.ஏ. (ஆத்தூர்). | 250 | 00 |
| சிட்டாடல், லாண்டன்ஸ் ரோடு | 5,000 | 00 |
| அமால்கமேட்டட் காப்பி எஸ்டேட் | 1,001 | 00 |
| கத்தோலிக்க அசோசியேஷன், சென்னை | 500 | 00 |
| டான்பாஸ்கோ மெட்ரிகுலேஷன் பள்ளி | 1,001 | 00 |
| திருமதி தனம் கதிர்வேலு (பெங்களூர்) | 5 | 80 |
| திரு சிப்பாய் சுப்பையா (அன்பூன்) | 10 | 00 |
| திரு என். எம். பழனியப்பச் செட்டியார் (மைசூர்). | 21 | 00 |
| தொழிலமைச்சர் அலுவலகம், விழுப்புரம் வகுல் | 5 | 00 |
| தோமன்பட்டி தையல்காரர் சங்கம், (பிற் பட்ட வகுப்புத்துறை அமைச்சர் மூலமாக.) | 5 | 00 |
| திரு. எஸ். மாதவன் | 500 | 00 |
| துணைப்பதிவாளர், எட்டையாபுரம் | 20 | 00 |
| செயலாளர், தமிழ்நாடு ஊழியர் கூட்டுறவு பண்டகசாலை லிமிடெட், உதகை. | 500 | 00 |
| பொதுமேலாளர், நீலகிரி கூட்டுறவு என்டர் பிரைசஸ் லிமிடெட், உதகை. | 1,000 | 00 |
| மாவட்ட நிருவாக இயக்குநர், தேவர்சோலை (நீலகிரி) தேயிலைத் தோட்டம். | 100 | 00 |

| | | |
|---|---|---|
| நிருவாக அலுவலர், அதிகாரத்தி ஊராட்சி, நீலகிரி. | 100 | 00 |
| துணைப்பதிவாளர், சாத்தான்குளம் | 133 | 50 |
| திரு எம். பி. காசி விசுவநாதன், துணைப்பதிவாளர் தூத்துக்குடி. | 269 | 00 |
| துணைப்பதிவாளர், சுயத்தாறு | 65 | 00 |
| துணைப்பதிவாளர், உடங்குடி | 42 | 00 |
| துணைப்பதிவாளர், பெருங்களூர் | 41 | 00 |
| துணைப்பதிவாளர், காயற்பட்டினம் | 65 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், மாவூர், நெல்லை. | 200 | 00 |
| துணைப்பதிவாளர், ஈரோடு | 76 | 00 |
| துணைப்பதிவாளர், திசையன்விளை | 80 | 25 |
| வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி ஒன்றிய ஆணையர். | 132 | 50 |
| துணைப்பதிவாளர், விளாத்திகுளம், திரு நெல்வேலி. | 87 | 75 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், ஆலங் குளம். | 100 | 00 |
| துணைப்பதிவாளர், புதுக்கோட்டை | 47 | 00 |
| வட்ட ஆட்சியாளர், செங்கோட்டை | 1,317 | 55 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், செங் கோட்டை. | 350 | 00 |
| சதர்ன் ஆட்டமாட்டிக் இன்டஸ்டிரீஸ், கிண்டி. | 51 | 00 |
| இன்டஸ்டிரியல் ரப்பர் புராடக்ட்ஸ், கிண்டி. | 25 | 00 |
| ஸ்டாண்டர்டு பென்சில் பாக்டரி, கிண்டி | 25 | 00 |
| மெட்டலிசிரோ பிரைவேட் லிமிடெட், கிண்டி. | 51 | 00 |
| லாமினுக்ஸ் கார்ப்பரேஷன், கிண்டி | 201 | 00 |
| எம். ஆர். எலக்ட்ரானிக் காம்பொனன்ட்ஸ். | 200 | 00 |
| ஜெம்கோ பிரைவேட் லிமிடெட் | 25 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், முசிரி | 430 | 00 |
| நிருவாக அலுவலர், ஷோலூர், ஊராட்சி ஒன்றியம். | 200 | 00 |

| | | |
|---|---|---|
| நிருவாக அலுவலர், கெட்டி ஊராட்சி ஒன்றியம். | 101 | 00 |
| நிருவாக அலுவலர், கோத்தகிரி, ஊராட்சி ஒன்றியம். | 250 | 00 |
| நிருவாக அலுவலர், ஊராட்சி ஒன்றியம், ஹலிகால். | 201 | 00 |
| ஸ்ரீ கணேஷ் டாக்கீஸ், குன்னூர் | 414 | 45 |
| அமிரிஷ் அண்டு ஹரிஷ் கம்பெனி, குன்னூர். | 343 | 60 |
| வட்டார ஆட்சியார், மேலூர் | 1,775 | 00 |
| உதவி மாவட்ட ஆட்சியாளர், செங்கற்பட்டு. | 2,026 | 00 |
| துணைப்பதிவாளர், பாடூர், திருநெல்வேலி | 15 | 00 |
| போர்ட்ஸ் அண்டு கம்பெனி, எண்ணூர் | 25 | 00 |
| நிருவாக அலுவலர், கீழ்க்குண்டல் ஊராட்சி ஒன்றியம். | 101 | 00 |
| நிருவாக அலுவலர், பிக்காத்தி ஊராட்சி ஒன்றியம். | 100 | 00 |
| மதிசன் பசன்குட் கம்பெனி லிமிடெட் | 200 | 00 |
| கவுடர் டாக்கீஸ், வெலிங்டன் | 200 | 77 |
| திரு அந்தோனிசுவாமி, குன்னூர் | 250 | 00 |
| டிலைட் டாக்கீஸ் | 313 | 80 |
| வி. என். தண்டபானி நாவலர் மண்டபம், (போக்குவரத்து அமைச்சர் மூலமாக.) | 5 | 00 |
| கால்நடை உதவி மருத்துவர்களும், மருத் துவ நிலைய உதவியாளர்களும்—வால் பாறை. | 25 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், எல்லபுரம். | 200 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருத்தணி. | 425 | 00 |
| மாவட்டத் துணை ஆட்சியாளர், புதுக் கோட்டை. | 200 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், கொர டாச்சேரி. | 1,028 | 00 |
| துணைப்பதிவாளர், ஸ்ரீவைகுண்டம் | 143 | 75 |
| நியூ ராயல் டாக்கீஸ், நெல்லை | 37 | 40 |
| நகரசபை ஆணையர், தூத்துக்குடி | 2,892 | 00 |
| நிர்வாக அலுவலர், கொளராத்துறை ஊராட்சி. | 100 | 00 |

(தொடரும்)







**இனியவை இருபது**

'இனியவை இருபது' என்று முதல்வர் கலைஞர் தலைப்புக் கொடுத்துக் கட்டுரை எழுதிய தன் பொருள் எனக்கு இப்போது தான் புரிகிறது. சரியாக 20 இதழுடன் கட்டுரையை முடித்து விட்டாரே!

—மு. சரவணன், கடலூர்.

'இனியவை இருபதை' இவ்வளவு விரைவில் முடித்துவிட்டாரே! இன்னும் எழுதுவார் என்று எதிர்பார்த்திருந்த எங்களை ஏமாற்றிவிட்டாரே!

—மல்லிகா, மனோன்மணி, தென்காசி.

''இனியவை இருபது'' பயணக் கட்டுரைத் தொடரைப் படித்து ரசித்தவர்களில் நானும் ஒருவன். சுவைமிகுந்த தொடர் கட்டுரை. அதற்குள் முடிவடைந்து விட்டதை எண்ணி ஏங்குபவர்களில் நானும் ஒருவன். விரைவில் நூல் வடிவில் வெளியிடுமாறு வேண்டுகிறேன்.

—எஸ். சுந்தரம், மதுரை-3.

**வறுவலுக்கு அச்சாரம்!**

'ஒட்டக வறுவல்' அற்புதம்! நமது நாட்டில் அந்த வறுவல் தயாரிக்க எந்த உணவு விடுதியாவது முன்வந்தால் இப்போதே 'அச்சாரம்' தருவதற்கு நான் தயார்!

—ப. மணிமாறன், பம்பாய்-19.

**கனவும் நனவும்!**

'அண்ணா கனவு நிறைவேறியதை'ச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துக் காட்டியிருப்பது பாராட்டுக்குரியது.

—பாண்டுரங்கம், காஞ்சிபுரம்.

**கவிதை மின்னல்!**

புலவர் பொன்னிவளவனின் 'நெருப்புச் சிரிப்பு' எனது இதயத்தில் மின்னிக்கொண்டே இருக்கிறது, சொல்வளம் மிக்க கவிதை.

—புலவர் பொன்னம்பலம், பழனி.

**தக்காளியால் வந்த....!**

தக்காளி பயிரிட நினைத்த நான் இப்போது தக்காளி போன்ற பெண்ணைத் தேடத் தொடங்கிவிட்டேன். எல்லாம் உங்கள் 'செக்கச் சிவந்த தக்காளியால்' வந்த வினை!

—ஏ. அம்புரோசு, தூத்துக்குடி.

**அப்பாவிக்கு அனுதாபம்!**

பாவம்! பொன்மொழியார்! எழுத்துலகத்துக்குச் சேவை செய்யும் அந்த மனிதருக்கு இப்படிச் சோதனை வரக்கூடாது. மனையரசியால் அல்லலுக்கு ஆளான அந்த அப்பாவிக்கு எனது அனுதாபத்தைத் தெரிவியுங்கள்!

—ச. கண்மணி, சென்னை-7.

**சிறுகதையின் சிறப்பு!**

'தலைவன் கட்டுகிறான் பாலம்'—கதை சிறியதுதான் என்றாலும் அதன் கருத்து, மிகமிகப் பெரியது! முதல்வரின் மாபெரும் திட்டத்தைச் சுவைபடத் தெரிவிக்கும் இந்தக் கதை என் இதயத்தைத் தொட்டுவிட்டது.

—ராதாமணி, வடகோவை.



“நாதர்முடி மேலிருக்கும்
நாகப் பாம்பே !
நச்ச்சுப் பையை வைத்திருக்கும்
நல்ல பாம்பே ”

என்று பாடிப் பரவசமடைந்தார் பாம்பாட்டிச்சித்தர் : நச்சுப் பையை வைத்திருக்கும் அந்நாகப் பாம்பைக் கண்டு விட்டால் எல்லாருக்குமே குலை நடுக்கம் தான். ‘பாம்பென்றால் படையும் நடுங்கும்’—என்பது தானே நம் நாட்டுப் பழமொழி!

இப்படிக் குலைநடுங்க வைக்கும் நாகப் பாம்பின் நஞ்சு, தீராத நோய் பலவற்றைத் தீர்க்கும் சிறப்பு மிக்க ‘சஞ்சீவி’ யாக—அருமருந்தாக இருக்கிறது என்றால் பலருக்கு வியப்பாக இருக்கும்; சிலருக்கு வேடிக்கையாக இருக்கும்.

நாகப் பாம்பின் விஷத்தில், மயக்கந்தரக் கூடிய இரு வகையான புரதச் சத்துக்கள் உள்ளன. நாகப் பாம்பு கடித்ததும் கடிபட்டவர் இறந்து போவதற்கு மயக்க மூட்டும் இந்தப் புரதச் சத்துக்களே காரணமாக உள்ளன. மேலே கூறிய இரு வகையான புரதச் சத்துக்களையும் தனித் தனியே பிரித்தெடுப்பதில் அறிவியலறிஞர்கள் வெற்றி பெற்ற பின்னர், இதிலிருந்து மயக்க மூட்டாத மற்றொரு புரதச் சத்தையும் பிரித்தெடுத்தனர்.

மயக்கமூட்டாத இந்தப் புரதச் சத்தைக் கொண்டு சிலவகையான புற்று நோய்களைக் குணப்படுத்த முடியும் என்று பம்பாயில் உள்ள புற்று நோய் ஆராய்ச்சி நிறுவனத்தினர் தெரிந்து தெளிவுபடுத்தியுள்ளனர். சோதனைக் குழாய்களிலும், சில விலங்கினங்களின் உடல்களிலும் செய்த ஆராய்ச்சிகள் மூலம் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர். இது தவிர, சில வகையான கொடிய சரும நோய்களைத் தணித்துக் குணப்படுத்தவும் நாகப் பாம்பின் நஞ்சு பயன்படுவதாக ஆராய்ச்சிகளின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

பாம்பின் நஞ்சு மஞ்சள் நிறமுடைய தடிப்பான நீர்போன்றிருக்கும்; அதற்கு மணமோ, சுவையோ இல்லை. இந்த நஞ்சு நம் உடம்பின் மேல்தோலிலுள்ள வெட்டுக்காயங்கள் அல்லது புண்களில் பட்டால் கெடுதி விளையும். இத்தகைய நாகப் பாம்பின் கொடிய நஞ்சுதான் புற்றுநோய்களைத் தீர்க்கப் பயன் படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உலகில் ஊர்வன இனத்தைச் சேர்ந்தவற்றுள் பாம்பும் ஒன்று. இந்தப் பாம்புகளில் நஞ்சுள்ளவை—நஞ்சற்றவை என இரு. பிரிவுகளுண்டு.

இந்தியாவில் 350 இனப் பாம்புகள் உள்ளன. இவற்றில் 70 இனங்கள் நஞ்சுடையன. இவ்வாறு நஞ்சுடைய பாம்புகளிலும் 30 வகையானவை கடலில் வாழ்வன. இவற்றில் ஒரு சாதிக் கடற் பாம்பைத் தவிர,



# நஞ்சும் அமுதாம்

ஏனைய யாவும் கொடு நஞ்சுடையன.

நிலத்தில் வசிக்கும் பாம்புகளில் 40 வகையான பாம்புகள் மனிதனுக்கு மரணத்தை விளைவிக்கும் நச்சுப் பாம்புகள். இவற்றில், நாகப் பாம்பு, கண்ணாடி விரியன், சுருட்டைப் பாம்பு, கட்டு விரியன் ஆகிய நான்கும் கொடு நஞ்சுடையன.

கொடிய நஞ்சுடைய பாம்புகளிலிருந்து நஞ்சை எப்படிச் சேகரிக்கிறார்கள் என்பதையும், அந்த நஞ்சை எவ்வாறு ‘புற்று நோய் நிவாரணி’ யாக மாற்றுகிறார்கள் என்பதையும் காணலாம்.

கொடிய நச்சுப் பாம்புகளை, கண்ணாடிக் கிண்ணங்களின் வாய்களை ரப்பரால் மூடிக் கட்டி, அந்த ரப்பரைக் கடிக்கச் செய்கிறார்கள். அவ்வாறு கடிக்கச் செய்யும் பொழுது, அவை நஞ்சைக் கக்குகின்றன. நஞ்சு, கிண்ணத்தில் விழுகின்றது. பின்னர் இந்த நஞ்சை வெய்யிலில் காயவைத்துக் கொள்வார்கள். பின்னர், இந்த நச்சுக் கட்டியைச் சிறிது சிறிதாகத் தண்ணீரில் கரைத்து, அந்தக் கரைசலைக் குதிரையின் உடம்பினுள் சிறுகச் சிறுகச் செலுத்துவார்கள். அப்போது, குதிரையின் உடம்பில் இந்தக் கொடிய நஞ்சை முறிக்கக் கூடிய ஒருவித ‘நஞ்செதிர்ப்புச்’ சத்துப் பொருள் உண்டாகிறது.

தொடக்கத்தில் குதிரையின் உடம்பிலே செலுத்தப்படும் நஞ்சின் அளவு மிகமிகக் கொஞ்சமாக இருக்கும். குதிரைக்கு இதனால் ஒருவிதக் கெடுதலும் உண்டாகாது. நாளாவட்டத்தில் நஞ்சின் அளவைச் சிறிது சிறிதாக அதிகப்படுத்திக் கொண்டே வருவர். பின்னர், அக் குதிரையைக் கொல்லக் கூடிய நஞ்சைவிட இருமடங்கு நஞ்சைச் செலுத்தினாலும் அக் குதிரைக்கு எத்தகைய கெடுதலும் உண்டாகாது. அவ்வளவு நஞ்சையும் முறிக்கக் கூடிய சத்து அக்குதிரையின் இரத்தத்தில் உண்டாகிவிடும்.

பிறகு, குதிரையின் இரத்தத்தை எடுத்து, அதனை நன்கு உறையச் செய்து, மேலே தேங்கி நிற்கும் நிணநீரைச் சிறு கண்ணாடிப் புட்டிகளில் அடைத்து வைக்கப் பெறும். இந்த நிணநீரில் பாம்பின் நஞ்சை முறிக்கக் கூடிய சத்து நிறைந்திருக்கும். இதனையே சில வகைப் புற்று நோய்களைத் தீர்ப்பதற்கான சிறந்த மருந்தாகப் பயன் படுத்துகின்றனர்.

இவ்வாறு சில வகையான புற்று நோய்களுக்கும், சில வகையான சரும நோய்களுக்கும் இணையற்ற மருந்தாகப் பயன்படுகின்ற நாகப் பாம்பின் நச்சு பற்றிய ஆராய்ச்சி வளர்ந்தால் இன்னும் அது எத்தனை எத்தனை நோய்களைத் தீர்க்கப் பயன்படுமோ !

—சாமி





# சேவல்

பொழுதின் விடிவைச் சொல்வதற்கே-மணிப்
பொன்னிறச் சேவல் கூவுதுபார்
அழகாய்த் தன்னிரு சிறகடித்தே-மிக
ஆனந்த மாகக் கூவுதுபார்.

செக்கச் சிவந்த பூங்கொத்தும்-ஒளித்
தீயெனக் கொண்டையில் மின்னுதுபார்
கொக்கரக் கோவென வாய்திறந்தே-அது
கூவிடும் அழகைக் கண்டிடுவாய்.

தலையைக் குனிந்தே விரைவாக-அது
தாவிக் குதித்துச் செல்வதுபார்.
தொலைவில் நின்றிடும் சேவலுடன்-அது
துடித்துச் சண்டைக்ள் செய்வதுபார்.

கடமை உணர்வைச் சேவலிடம்-நீ
கற்றுக் கொள்ளல் மிகநன்றும்
அடுத்தவ ரோடு சண்டையின்றி-மிக
அன்பாய்ப் பழகிடு அதுநன்றும்!

தமிழரசன்



தோப்பிலே கூட்டம் போடலாமா? நம்ப வீட்டிலேயே போட்டிருக்கலாம்!
வேலன் காலிலே அடிபட்டதற்கு முத்துதான் காரணம்!
தள்ளிவிட்டதுன்னு சொன்னே; இப்ப முத்து என்கிறே! குரங்கு பேரு முத்துவா?
முத்துதான் திருவள்ளுவர் மன்றச் செயலாளர்
நல்லபையன் என்று எல்லாரும் சொன்னாங்க... அவனு உன்காலில் தேங்காயைப் போட்டான்
முத்துதான் தோப்பிலே கூட்டம் போடச் சொன்னது அதனாலேதான்.....
குரங்கு போட்டதற்கு அவன் என்ன செய்வான்?
எங்களுக்கு என்னமோ முத்துவைப் பிடிக்கலே அப்பா!
அவசரப்பட்டு எதையும் முடிவு செய்யக் கூடாது... எல்லாருடனும் ஒற்றுமையாய் பழகணும்
அண்ணன் காட்டிய வழி * கதை: நம்பியின்தம்பி * படம்: குமார் 3
திருஞானம் உள்ளே போனதும்
வேலா அப்பா எப்பொழுதும் இப்படித்தான்! முத்து நல்ல பையனும்... நீதான் அடுத்து மன்றத்துக்குச்செயலாளரா வரணும்
ஆண்டுவிழா முடிந்தபிறகுதானே செயலாளர் தேர்தல் நடக்கும்!
நாங்கள் இருக்கிறோம்; எப்படியாவது உன்னைச் செயலாளராக ஆக்கிடுவோம
அதோ! எல்லாரும் இங்கே வர்றாங்க.
வேலா நீ ரொம்ப அடிபட்டதாக அந்த பெஞ்சிலே படுத்துக்க....
நான் போர்வை எடுத்தாறேன்
ஆ...அம்மா




நமது விளக்கம்
முதல்வர்
கலைஞர் மு.கருணாநிதி



# நமது விளக்கம்

தமிழக முதல்வர்

கலைஞர்

மு.கருணாநிதி

## நமது விளக்கம்

தமிழ் நாடு அரசின் 1971-72-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை 19—6—71 அன்று சட்டப் பேரவையிலும், சட்ட மன்றத்திலும் தமிழக முதல்வரும் நிதியமைச்சருமான கலைஞர் மு. கருணாநிதியவர்களால் அளிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து இரு அவைகளிலும் விவாதங்கள் நடைபெற்றன. இந்த விவாதங்களுக்கு விளக்கமான பதிலளித்து 29—6—71 அன்று சட்டப் பேரவையிலும், 30—6—71 அன்று சட்ட மன்றத்திலும் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரைகளைத் தொகுத்து இங்கே வெளியிடுகின்றோம்.

தமிழ் மக்கள் படித்துப் பயன்பெற விழைகின்றோம்.

சென்னை
21—7—1971

செய்தி விளம்பரத் துறை,
தமிழ் நாடு அரசு

## நமது விளக்கம்

தலைவர் அவர்களே!

இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை மீது மாமன்றத்து உறுப்பினர்கள் தங்களுடைய விழுமிய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கை பற்றி எதிர்ப்பான கருத்துக்களையும், ஆதரவான கருத்துக்களையும் தெரிவித்தமைக்காக,—அந்தக் கருத்துக்கள் ஏதாவது ஒரு வகையில் இந்த அரசின் காரியங்களுக்குப்பயன் படும் என்ற நிலையில் நான் நன்றி கூறி வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

எடுத்துக் காட்டப்பட்டுள்ள கருத்துக்கள் ஒவ்வொன்றிற்கும் இந்தப் பொது விவாதத்திலேயே நான் பதிலளித்து விடுவது என்பது இயலாத காரியம். உறுப்பினர்களுடைய உரைகளுக்கும் நான் தனித்தனியாகப் பதிலளிப்பதற்கு நேரம் இல்லை. இவற்றை அனுசரித்துத்தான், சென்ற ஆண்டிலிருந்து ஒரு புதிய முறையை நாம் வகுத்துக்கொண்டு பல்வேறு துறைகளிலுள்ள மிக முக்கியமான பிரச்சினைகள் பற்றிப் பேசுவதற்கு சட்ட மன்றத்திலேயும், பேரவையிலேயும் எந்தெந்த மானியங்கள் விவாதிக்கப்படுகின்றனவோ அவைகளைப்பற்றிய மொத்தக் கருத்துக்களை அங்கே விவாதிக்க வழிவகைகள் கண்டு, அவை நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. அத்துறைகய துறைகளைப் பற்றி இங்கே விவாதிக்கப்படுகின்ற நேரத்தில் தொடர்புடைய அமைச்சர் பெருமக்களும் அதற்கு நல்ல விளக்கங்களைத் தருவார்கள் என்று நம்புகிறேன்.

விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய உறுப்பினர்கள் பலர், இந்த நிதிநிலை அறிக்கை உண்மையிலேயே தங்களது உள்ளத்திற்கு மகிழ்ச்சியை அளிக்கும் என்று அவர்களது மனச்சாட்சியே கூறினாலும் இந்த மன்றத்திலே அவர்கள் எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருக்கின்ற காரணத்தினால் எதிர்க்க வேண்டிய அவசியத்திற்கு ஆளானார்கள் என்பதையும் நான் மறந்து விடவில்லை.

''இதிலே புரட்சி எதுவுமே இல்லை, புதுமை எதுவுமே இல்லை'' என்று பத்திரிகைச் செய்திக்குத் தலைப்புக் கொடுத்துவிட்டு நமது மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் தனது உரையை நிகழ்த்தினார்கள்.

இதிலே புரட்சியும் புதுமையும் இருக்கின்றதா இல்லையா என்பதை இந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிற திட்டங்கள்—நடைமுறைக்கு வருகின்ற நேரத்தில்தான் தெரியுமே அல்லாமல்—நான் நிதி நிலை அறிக்கையைப் படித்து முடித்ததும்—உடனடியாக இந்த மாமன்றம் தலைகீழாகச் சுழன்று ஒரு பெரிய புரட்சிகரமாக மாறும் என்று நானும் எண்ணவில்லை; மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்களும் எண்ணியிருக்க மாட்டார்கள்—என்றே நான் கருதுகின்றேன்.

### குளோரோஃபாம் கொடுக்கப்பட்டவர்கள் நிலை

பல உறுப்பினர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் புகழ்கின்ற நேரத்தில் நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். ''இதிலே புகழ்வதற்கு என்ன இருக்கிறது? மயக்க மருந்து உட்கொண்டவர்கள், அதாவது 'குளோரோஃபாம் கொடுக்கப்பட்டவர்களைத் தவிர மற்ற யாரும் புகழ முடியாது'' என்று சொன்னார்கள். 'குளோரோஃபாம்' கொடுக்கப்பட்டவர்கள் பேசவே முடியாது; நல்ல டாக்டர்களுக்கு இது தெரியும்!

ஆனால் என்ன காரணத்தினாலோ டாக்டர் ஹாண்டே அவர்கள் பட்ஜெட்டைப் பற்றிப் புகழ்பவர்கள் எல்லாம் 'குளோரோஃபாம்' மயக்கத்திலே இருப்பவர்கள் என்று குறிப்பிட்டார்கள்.

### வரிகள் பற்றி இரண்டு கருத்துகள்.

இது பொருளாதாரம் தெரியாமல் தயாரிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை என்று டாக்டர் ஹாண்டே குற்றம் சாட்டினார்கள். வரிகள் போடுவதால் விலைவாசி உயரும் என்கிற கருத்தும், உயராது என்கிற ஒரு கருத்தும் மேதைகளால் சொல்லப்பட்டிருக்கிறது. ''கீன்ஸ்மாஸ்கரேஸ்'' போன்ற பொருளாதார மேதைகள் வரிகள் போடுவதால் மக்களிடத்திலுள்ள பணத்தைக் குறைப்பதன் மூலம் விலைவாசி குறையும் என்ற தத்துவத்திற்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

### ஏழை-எளியோருக்கு நல்வாழ்வளிப்பதே எங்களுக்குத் தெரிந்த பொருளாதாரம்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்வதுபோல நான் பெரிய பொருளாதார மேதையல்ல; நான் அந்த மேதா விலாச அடிப்படையிலே இந்த அறிக்கையைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறேன் என்று நான் வாய்ப்பறை அடித்துக் கொள்ளவும் தயாராயில்லை!



நானும், எனது கட்சியும் கொண்டிருக்கிற பொருளாதாரம் எல்லாம் இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழை எளிய சாதாரண நடுத்தரப் பாட்டாளி மக்கள்—தொழிலாளி மக்கள் நல்வாழ்வைப் பெறவேண்டும்; அதற்கு ஏற்ற வகையிலே என்னென்ன திட்டங்கள் தீட்ட வேண்டும் என்கின்ற அடிப்படையிலே எதை யோசிக்கிறோமோ அதைத் தான் நாங்கள் கொண்டுள்ள அல்லது நாங்கள் சிறப்பாகப் போற்றுகின்ற பொருளாதாரமாகக் கருதிக் கொண்டிருக்கின்றோம்.

### நல் அரசின் இலக்கணத்திற்கொப்ப நமது நிதிநிலை அறிக்கை

மத்திய அரசு இன்றைக்கு இந்தமாநில அரசிற்கு இட்டிருக்கின்ற கட்டளையின்படி ஆண்டு ஒன்றுக்குத் திட்டத்தின் வாயிலாக 70 அல்லது 80 கோடி ரூபாய்தான் செலவிடலாமென்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழக அரசைப் பொறுத்த வரையில் அந்த 70கோடி ரூபாய் அல்லது 80கோடி ரூபாய் என்ற வரையறையில் திட்டங்களை வரையறுப்பது முடியாது என்ற காரணத்திற்காக, நமது ஓராண்டுத் திட்டத்தை 100 கோடியிலிருந்து 105 கோடி ரூபாய் வரையில் உயர்த்தி, அதற்காக நிதிவகைகளைக் கண்டு பிடிக்க வேண்டும் என்கின்ற நல்ல அரசினுடைய இலக்கணத்துக்கு உட்பட்டு, வழிவகைகளை எல்லாம் ஆராய்ந்து இந்த அறிக்கை அளிக்கப்பட்டிருக்கிறது.

### மூலதனக் கணக்கும்—முதலீடு செய்வதும்.

ரெவின்யூ கணக்கை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு அதற்கேற்ற வகையில் வரிகளைக் குறைக்கலாமென்று நண்பர் மாரிமுத்து ஒரு கருத்தைச் சொன்னார்கள். மூலதனக் கணக்கையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்த்துத்தான் மொத்த வருமானம் எவ்வளவு, மொத்தச் செலவு எவ்வளவு என்பதையும் சேர்த்து ஊதிய உயர்வை எப்படிச் சரிக்கட்டுவது என்று ஆராய்ந்து மூலதனக் கணக்கிலே தொழில் வளர்ச்சிக் கென்று நாம் முதலீடுகள் செய்ய வேண்டியிருக்கிறது.

### மக்கள் வசதிக்குத் தான் நிதிநிலை அறிக்கையே தவிர அரசுக்கு ஆதாயம் தேடுவதற்கல்ல!

கட்டடங்கள், பொதுத் துறை என்ற தலைப்பிலே பல்வேறு கட்டடங்கள் அரசுக்கு ஆதாயம் கிடைக்காத வகையிலேயும் பல்வேறு வசதிகளை இயற்ற வேண்டிய நிலையிலே இருக்கிறோம் நாம்.

இவைகளெல்லாம் மக்களுடைய வசதிக்காகத் தானே தவிர அரசுக்கு ஆதாயம் வரவேண்டுமென்ற நோக்கத்தில் நாம் நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கவில்லை.

எனவே இந்த மூலதனம் என்ற அம்சத்திலிருந்து நாம் தப்பித்துக்கொள்ளவோ, ஒளிந்து கொள்ளவோ முடியாத நிலையிலிருக்கிறோம். இது போன்ற மூலதனச் செலவுகளுக்கு வருவாய்க் கணக்கிலேதான் நிகர மிச்சத்தை நாம் கொண்டு வர வேண்டியிருக்கிறது. இதை நண்பர் மாரிமுத்து அவர்களுடைய சந்தேகத்திற்கு விளக்கமாகத் தெரிவிக்கிறேன்.

அந்த மிச்சம் போதாத காரணத்தினாலேதான் மொத்தமாக எல்லாக் கணக்கிலேயும் விழுகின்ற துண்டு எவ்வளவு என்று நாம் பார்க்க வேண்டியிருக்கிறது.

**வரவு-செலவுத் திட்டத்திலுள்ள வரவேற்கப்படும் திட்டங்கள்.**

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் உறுப்பினர்கள் வரவேற்கும் திட்டங்கள் ஏராளம். ஆனால் தோழமைக் கட்சியிலேயுள்ள சில பேர் கூட, குறிப்பாக திரு. மணலி கந்தசாமி அவர்களைப் போன்ற ஒரு சிலரைத் தவிர, மற்றவர்கள் மக்கள் நல்வாழ்வுக்காகப் போடப்பட்டிருக்கும் திட்டங்களைப், பாராட்டாமலிருப்பது, என்னைப் பொறுத்தவரை ஒரு மனக் குறைதான் !

ஒருவேளை முதல்வர் தஞ்சாவூர்க்காரரர் என்பதால் திரு. மணலி கந்தசாமி அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டியிருக்கக் கூடும்.

''இவ்வளவு நல்ல காரியங்களைச் செய்வதற்கு விற்பனை வரியிலே அரை சதவீதம் உயர்த்தினால்தான் என்ன '' என்று அவர்கள் கேட்ட நேரத்தில், எனக்கு மிகத் தெம்பாக இருந்தது.

இவ்வளவு தூரம் பழுத்த அனுபவம் வாய்ந்த ஒரு நல்லவருடைய—வல்லவருடைய ஆதரவு இந்த அரசுக்கு இந்த வரி விதிப்பிலே கிடைத்து விட்டது என்பதிலே எனக்கு நிறைய மகிழ்ச்சி !

ஆனால், மணலி பேசிய பிறகு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினர் தமக்கு இடையே நடத்திய இரகசியக் கூட்டத்திலே என்ன முடிவு எடுத்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. அவர்கள் நேற்றைய தினம் இந்த வரியை எதிர்த்துப் பேசியதோடு இன்றைக்கும் அதன் தொடர்பாகப் பேசியிருக்கிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையின் மீது நமது நண்பர் பிரஜா சோஷலிஸ்ட் கட்சிச் சார்பில் பேசிய திரு. ஆறுமுகசாமி அவர்கள் ''பல முழுமையான சோஷலிச நடவடிக்கைகளைக்



கொண்டது'' என்று குறிப்பிட்டார்கள். நான் இங்கே விவாதத்திற்குப் பதிலளிக்கிற நேரத்தில் அவர் சொன்னதையே எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

அந்த இலட்சியத்தைக் கொண்டுவரவேண்டுமென்ற முனைப்போடு இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை நல்லெண்ணம் கொண்டவர்கள், ஆர்வம் கொண்டவர்கள் எவரும் மறுக்க முடியாது என்று நம்புகிறேன்.

**ஏழைகள் ஏற்றம்பெற**

அதற்கேற்ற வகையிலேதான் இந்த நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு அம்சங்கள், ஏழை எளிய மக்களைத் தொழிலாளத் தோழர்களை, பாமர மக்களைப், பாட்டாளி மக்களைத் தொடக்கூடிய பல்வேறு அம்சங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. விவசாயத் தொழிலாளர்களை, அவர்கள் குடியிருக்கிற மனைகளிலிருந்து எந்த நேரத்திலும் வெளியேற்றப்படலாம் என்கிற கொடுமை நீண்ட பல ஆண்டுகளாக நிலவுகிறது.




அந்தக் கொடுமையிலிருந்து அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்கின்ற நல்ல நோக்கத்தோடு விவசாயத் தொழிலாளர்கள் வெளியேற்றப் படாமலிருக்க வேண்டும் என்பதற்காகத் திட்டம் தீட்டியுள்ளோம். அவர்கள் வெளியேற்றப்படாமலிருப்பது மாத்திரமல்ல, அவர்கள் குடியிருக்கின்ற மனைகள் அவர்களுக்கே சொந்தமாக்கப்பட வேண்டும் என்ற முடிவினை ஏற்றிருக்கின்றது எமது அரசு.

மாநில முழுவதிலும் இந்த நிலையை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம். அதற்கு முதற் கட்டமாகத் தஞ்சைத் தரணியில் இலட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களுக்குக் குடியிருக்கின்ற மனைகளை அவர்களுக்கே சொந்தமாக்குகின்ற அளவிற்கு ஒரு திட்டத்தை நான் இன்றைக்கு வகுத்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே அரசின் சார்பிலே வெளியிட்டிருக்கிறோம்.

இன்று இலட்சக்கணக்கான நிலமற்ற ஏழை விவசாயிகள் நிலப்பட்டா, மனைப்பட்டா இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிலப்பட்டா, மனைப்பட்டாவை இந்த அரசு செய்து கொடுத்திருக்கிறது என்றாலும் நான் பல முறை அறிவித்ததற்கிணங்கக் காடுகள் என்ற பெயரால், ஆனால் உண்மையில் காடுகளாக இல்லாமல் இருக்கிற நிலங்களைக்கூட நிலமற்ற விவசாயிகளுக்குத் தந்திட வேண்டும் என்கின்ற அடிப்படையை அமைத்து அந்தத் துறையினுடைய அமைச்சர் மாநிலத்திலே பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று ஆராய்ந்து பார்த்து வந்து, அந்த நிலையிலே இன்றைக்குக் காட்டு நிலங்களில் 50 ஆயிரம் ஏக்கரா வரையில் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு ஒப்படை செய்து கொடுப்பது என்ற முடிவினை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம்.



இதிலெல்லாம் கேரளாவைப் பின்பற்ற வேண்டுமென்று திரு கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூறினார்கள்.

### ஏழைகள் வாழ்வில் புதுமைகள், புரட்சிகள் !

கேரளத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி முதன் முதலாக ஆட்சிப் பீடத்தில் அமர்ந்த ஆண்டு 1957. அந்த ஆண்டிலேயிருந்து 1971-ஆம் ஆண்டுவரை கிட்டத்தட்ட ஒரு பதின்மூன்று, பதினான்காண்டுக் காலம்—அவர்கள் தொடர்ந்து ஆட்சிப் பீடத்திலே இல்லாவிட்டாலும்—அந்தக் கொள்கைகள் கேரள மாநிலத்தில் பரவலாக்கப்பட்டு, அதற்கு ஏற்றவண்ணம் அந்த மண் பக்குவப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது !

ஆனால் கேரளாவிற்குக் கிஞ்சிற்றும் சளைக்காத அளவுக்குப் புதுமைகளையும், அமைதியான புரட்சிகளையும், ஏழை எளியோர் வாழ்க்கையிலே செய்திட வேண்டும்; ஏழைகள் நிமிர்ந்து நடக்கவும் அவர்கள் முகத்திலே புன்னகை காணவும் வழி பிறக்கவேண்டுமென்று எண்ணிச் செயலாற்றுகின்ற இந்த அரசு, ஆட்சிப் பொறுப்பேற்று எத்தனை ஆண்டுக்காலமாகிறது என்பதனையும், இடையிலே எவ்வளவு சோகப்புயல்களை எல்லாம் ஆளும் கட்சி தாங்கிக் கொள்ள வேண்டும் என்பதனையும் உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள்.



### பேருந்துகள் தேசிய மயம்.

பயணிகள் பேருந்துகள் தேசிய மயமாக்கியிருப்பதை நீங்கள் வரவேற்றிருக்கிறீர்கள்; அவைகளுக்கு உச்சவரம்பு கட்டப்பட்டிருப்பதையும் வரவேற்றிருக்கிறீர்கள்.

பயணிகள் பேருந்துகளைத் தேசியமயமாக்கியது பற்றி—நாட்டுடைமை ஆக்கியது பற்றி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் முற்போக்கு எண்ணம் படைத்த வேறு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்.

நண்பர்கள் சுவாமிநாதன் போன்றவர்கள், நம்முடைய சுதந்திராக் கட்சியின் தலைவர் திரு கணேசன் போன்றவர்கள் எல்லாம், ''நீங்கள் இப்போது நடத்துகிற பேருந்து நிர்வாகத்தையே ஒழுங்காக நடத்த முடியவில்லை. இதையும் எடுத்துக் கொண்டு எப்படி நடத்தப் போகிறீர்கள்?'' என்று கேட்டார்கள்.

இப்படிக் கேட்டவர்களில் இரு சாரார் உண்டு: பொது உடைமை தேவை என்று கேட்டவர்களும் உண்டு; நீங்கள் நடத்த முடியாது—ஆகவே இந்தக் கொள்கை தேவையில்லை என்ற அடிப்படையில் கேட்டவர்களும் உண்டு.

அவர்கள் யார் யார் என்று பகுத்துச் சொல்ல நான் விரும்பவில்லை. நான் அன்றைக்கே விளக்கம் அளித்தேன். சென்னை நகரில் ஓடுகிற பேருந்துகள் மூலம் அரசுக்கு நட்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. வெளியூர்களில் ஓடிக்கொண்டிருக்கிற—பல ஊர்களை இணைத்துக் கொண்டு ஓடுகிற பயணிகள் பேருந்துகள் மூலமாக நமக்கு லாபம் தான் கிடைக்கிறது. இங்கே ஏற்படுகிற நட்டத்தை ஓரளவு சரிக்கட்டுகிற அளவுக்கு வெளி ஊர்களில் ஓடிக் கொண்டிருக்கிற பஸ்களின் மூலம் நமக்கு லாபம் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

இப்போது நாம் நாட்டுடைமையாக்குகிற பஸ்கள் எல்லாம் வெளியில் ஓடிக்கொண்டிருக்கிற பஸ்கள் என்கிற காரணத்தால் அவைகளையும் நாம் தனித்தனி நிர்வாகமாக நடத்த வேண்டியதில்லை என்ற காரணத்தால் நட்டம் ஏற்பட வழியில்லை.

நிர்வாகத்தில் இருக்கிற குறைபாடுகள் பற்றி நீங்கள் எடுத்துச் சொன்னதை நான் அப்படியே மறுக்கிறேன் என்று தவறாகக் கருத வேண்டாம். அந்த நிர்வாகத்தை மேலும் சீர்திருத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அதற்கான காரியங்களில் ஈடுபட்டிருக்கிறோம்.

நண்பர் சுவாமிநாதன் பேசுகிற நேரத்தில் அரசுக்குச் செலுத்த வேண்டிய வட்டி கூடக் கொடுக்காமல் கிட்டத்தட்ட ஒன்றரைக் கோடி ரூபாய் உங்களுக்கு நட்டம் ஏற்படுகிறது. அரசுக்குக் கொடுக்க வேண்டிய வட்டியும் சேர்த்தால் ரூபாய் இரண்டரைக் கோடி அளவுக்கு நட்டம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள்.

### நட்டம் ; ஒரு விளக்கம் !

நான் அவர்களுக்கு ஒரு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். அரசுக்குக் கொடுக்கப்பட வேண்டிய வட்டிக்காகக் கொடுக்க வேண்டிய வட்டித் தொகையைக் கொடுத்த பிறகுதான், இந்த நட்டமே தவிர வேறு அல்ல.

திரு கே. ராசாராம் : ஆனால் அரசுக்கு இந்தப் போக்குவரத்துத் துறை வருமான வரி செலுத்துவதில்லை. தனியார் ஓட்டுகிற பஸ் கம்பெனிகள் வருமான வரி செலுத்துகிறார்கள். இதை அரசு ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.




முதல்வர் : வருமானம் இருந்தால் வரி செலுத்துவார்கள். வருமானம் இல்லாமல் இருக்கிறதால் வருமான வரி செலுத்த முடியாது. ஆனால் மற்ற வரிகள் எல்லாம் செலுத்தப்படுகின்றன.

ஆகவே வட்டிக்காக அரசுக்குக் கொடுக்கப்பட்ட தொகை போக ஏற்படுகிற நட்டம்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறதல்லாமல் வட்டியும் கொடுக்காமல் நட்டம் ஏற்பட்டிருப்பதாகக் கருதுவது சரியல்ல.

நிர்வாகத்தில் உள்ள கேடு பாடுகள் எவை எவை, எந்த எந்தக் காரணத்தால் இந்தச் சீர்குலைவுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்திடவும், ஆராய்ந்திடவும் இப்போது பரீட்சார்த்தமாக, சில 'டிப்போக்களில்' ஆய்வுகள் நடை பெற்று வருகின்றன.

அவை மிக வேகமாக விரைவு படுத்தப்பட்டுத் தமிழக அரசுப் போக்குவரத்துத் துறை சீர்படுவதற்கு எங்களாலான எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்வோம்.



### வேலை வாய்ப்பு வசதிகள்.

வேலை வாய்ப்பிற்காக வழி செய்திருக்கிறோம் என்பதையும் இம்மாமன்றத்தின் உறுப்பினர்களாகிய நீங்கள் வரவேற்கிறீர்கள்.

காவல் துறைக்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் 1,000 பேர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இன்சினியர்கள் 3,000 பேருக்குச் சிறு தொழில் துவங்கக் கடனுதவி செய்யப்படும். பட்டதாரி மாணவர்கள் 2,000 பேருக்கு 'இளைஞர்கள் அணி' மூலமாக வேலைவாய்ப்புத் தரப்படும். கிராமப் புறங்களிலே, 15 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்க மத்திய அரசிடமிருந்து மாநில அரசிற்குக்கிடைக்கும் தொகை —போதாதென்று வாதாடி வருகிறோம். முடிவு தெரியும் வரையிலே காத்திராமல் நம் மாநில அரசின் மூலமாக மேலும் 15 ஆயிரம் பேருக்கும் வேலை வாய்ப்பளிக்கிறோம். ஆக 30 ஆயிரம் பேருக்குக் கிராமப்புறங்களிலே வேலை வாய்ப்புத் தருகிறோம். இவையன்றி, 150 மருத்துவர்களுக்கும், 200 செவிலியர்களுக்கும் வேலை வாய்ப்புத் தருகிறோம். இது போன்ற சூழ்நிலைகள் எல்லாம் இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கின்றன.

### தகுதி திறமை உள்ளவர்களுக்கே தேர்வு.

இதிலே கட்சிக் கண்ணோட்டம் இருக்கக் கூடாதென்று எதிர்கட்சித் தரப்பிலே யிருக்கின்றவர்களும் தோழமைக்கட்சியிலே உள்ளவர்களும் எடுத்துரைத்ததை நாங்கள் மறந்துவிட மாட்டோம். இதற்கெல்லாம் தகுதியானவர்கள்—இதற்கு ஆற்றல் படைத்தவர்கள் ஆகியவர்கள் தான் தேர்ந்தெடுக்கப்படுவார்களே தவிர இவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். இவர் இவரை அறிவார்; எனவே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்கிற அளவிலே—தேர்ந்தெடுக்கப்படமாட்டார்கள். கட்சிக் கண்ணோட்டம் இல்லாமல் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

தகுதி, திறமை யாருக்கிருந்தாலும்—அவர்கள் அதுவரை எந்தக் கட்சியிலே இருந்தாலும்—அவர்கள் உள்ளத்திலே எந்தக் கட்சி உணர்வு இருந்தாலும்—அவைகளைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல்—திறமைசாலிகள் தான்—இந்த அரசினுடைய கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றக் கூடிய ஆற்றலுள்ளவர்கள்தான்—தேர்ந்தெடுக்கப்படுவார்கள்; இது உறுதி !

மிக முக்கியமான வேலை வாய்ப்பு, வேலையில்லாத் திண்டாட்டம், இந்திய பூபாகம் முழுவதும் இன்றைய தினம் இது பரவிக் கிடக்கிறது என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசுகிற நேரத்திலே ''வேலை வாய்ப்புக்கு இந்த அரசு தீட்டியிருக்கிற திட்டங்களை நான் வரவேற்கிறேன். ஆனால் யானைப் பசிக்கு இது சோளப் பொரியாகப் பயன்படும். எனவே இந்தவேலை வாய்ப்புத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டு"மென்று நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே நல்ல சிந்தனையோடு குறிப்பிட்டார்கள்.

இதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இதைப் பிரச்சாரத்திற்காகப் பயன் படுத்துகிற நண்பர்கள் இதைக் காரணமாகக் கண்டுபிடித்துத் திரு ராஜாராம் நாயுடு வேலை வாய்ப்புத் திட்டத்தை யானைப் பசிக்கு சோளப் பொரி என்று பேசினார்கள் என்கிற அளவிலே பத்திரிகையில் போடுவார்கள் என்பது எனக்குத் தெரியும். அந்த அளவிற்கு இந்தத் திட்டம் பயன்படும் என்பதும் எனக்குத் தெரியும். என்றாலும் இந்த அரசு இந்த நிலையை உணர்ந்திருக்கிறது என்பதையாவது ஒப்புக்கொண்டார் ; அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.






**அவர்கள் ஒதுக்கியது எவ்வளவு ?**

இந்த அளவுதான் இந்த அரசால் முடிகிறது. மாநிலத்திலே நமக்கு இருக்கிற நிதி வாயில்களைக் கொண்டு,—நம்முடைய வருவாயைக் கொண்டு நமக்கு இருக்கிற அதிகாரங்களைக் கொண்டு—இதனைத்தான் நம்மாலே செய்ய முடிகிறது.




அவர்கள் சுட்டி காட்டியது போ 50 கோடி ரூபாயை இந்தியா முழுவதற்கும், கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு இந்தியப் பேரரசு ஒதுக்கியது. இதைக் கூடச் சரியாகப் புரிந்து கொள்ளாத நம்முடைய தமிழ் நாட்டுப் பத்திரிகையாளர்கள் ஏதோ தமிழ் நாட்டிற்கே 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கருதி அதைப் பற்றி விமரிசித்தார்கள்.

இந்த 50 கோடி ரூபாயிலே இவர்கள் யார் யாருக்கு எவ்வளவு பங்கு போட்டுக் கொள்ளப் போகிறார்களோ என்றார்கள். அதற்குள் ஓர் ஆதங்கம் அவர்களுக்கு ஏற்பட்டது. உண்மையில் 50 கோடி ரூபாய் என்பது இந்தியா முழுவதற்கும் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது. இப்படி ஒதுக்கப்பட்ட நேரத்திலே அவர்கள் மிகுந்த தந்திரத்தோடு மாவட்டத்திற்கு 15 ஆயிரம் பேர்களுக்கு என்று அல்ல, ஒரு மாநிலத்திற்கு 15 ஆயிரம் பேர்களுக்கு வேலை என்கிற அந்த அளவிலே வகுக்காமல், அல்லது கோட்டத்திற்கு, ஒரு பிளாக்கிற்கு இவ்வளவு பேருக்கு என்கிற அந்த அளவிலே வகுக்காமல், மாவட்டத்திற்கு ஆயிரம் பேர்களுக்கு வேலை என்று யாரோ மத்திய சர்க்காரிலே இருக்கிற ஒரு கெட்டிக்காரர் இந்தத் திட்டத்தை வகுத்துக் கொடுத்தார்.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில் மாவட்டங்கள் எண்ணிக்கையிலே குறைவு, பரப்பளவிலே பெரிது. ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டது போல வடபுலத்திலே இருக்கிற மாநிலங்களில் மாவட்டங்கள் எண்ணிக்கையிலே அதிகம். பரப்பளவிலே குறைவானவை.

சில இடங்களில் உத்தரப் பிரதேசம் போன்ற இடங்களில் 54 மாவட்டங்கள். மராட்டியம் போன்ற இடங்களில் 26-க்கு மேற்பட்ட மாவட்டங்கள் ;34-க்கு மேற்பட்ட மாவட்டங்கள் இருக்கின்றன.

அவ்வாறு மாவட்ட அளவிலே கணக்கிட்ட நேரத்தில் நமக்கு வர வேண்டிய தொகை நமக்கு வராமல் போய் விட்டது. ஆகவேதான் ஒரு கோடியே சொச்சம் என்கிற அளவிற்குத்தான் கிராமப்புற வேலைவாய்ப்புக்கு நமக்குப் பணம் ஒதுக்கப்பட்டது. அதிலே 15 ஆயிரம் கிராமப் புறத்து மக்களுக்குத்தான் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் ஊதியம் தரலாம் என்கிற அடிப்படையில் வேலைவாய்ப்பு நம்மாலே உருவாக்க முடிந்தது. அதிலே ஒரு மாவட்டத்திலே 10 பிளாக்கிற்குத்தான் கொடுக்க முடியும் என்கிற சூழ்நிலை உருவாயிற்று. ஆகவே மேலும் ஒரு கோடி ரூபாய் நமது மாநில அரசின் சார்பிலே செலவு செய்வது என்று தீர்மானித்து மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 பிளாக்குகள், 20 பிளாக்குகள் என்கிற அளவிலே நிர்ணயித்து 15 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு என்கிற அளவிற்கு இன்றைக்கு நாம் உருவாக்கியிருக்கிறோம். அவர்கள் சொன்னார்கள் அப்படி வேலைவாய்ப்புத் தருகிற நேரத்திலே முற்றிலும் வேலை வாய்ப்பு அற்ற குடும்பங்களுக்குத்தான் இதைத் தரவேண்டும்—முதல் சலுகை, முன் உரிமை தர வேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் இப்படிச் சொன்னார்கள் என்றாலும் இதற்கு முன்பே அதிகாரிக்கு, அந்தக் குழுக்களுக்கு, நாங்கள் தந்திருக்கிற ஆணையின்படி இதை அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறோம். வேலையில்லாமல், யாரும் வேலைவாய்ப்பு இல்லாமல், இருக்கிற குடும்பத்தில் இருக்கக் கூடியவர்கள் முன் உரிமை தர வேண்டுமென்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இதையே நாங்கள் முன்பே அதிகாரிகளுக்குத் தெரிவித்து விட்டோம் என்பதை நான் இங்கே தெரிவிப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

காவல்துறையில் எஸ்.எஸ்.எல்.சி. படித்துத் தேறியவர்கள் இரண்டாயிரம் பேர்களுக்குப் பதவி ஒதுக்கம் செய்யப்பட்டு அதிலே ஆயிரம் பேர்களை நேரிடையாக வேலைக்கு எடுத்துக் கொள்கிற ஒரு வேலை வாய்ப்புத் திட்டத்தை நாம் உருவாக்கியிருக்கிறோம். தொழில் கல்வி பயின்றவர்களுக்கு 30 ஆயிரம் பேர்களுக்கு அவர்கள் சிறுதொழில்களை உருவாக்கிக் கொள்வதற்குக் கடன் வசதி அளிக்க இந்த அரசு திட்டம் தீட்டியிருக்கிறது. பட்டதாரி மாணவர்களைக் கொண்டு இளைஞர் அணி என்ற ஒன்றைத் தயாரித்து நல்ல சமூக சேவை செய்வதற்குக் கிராமப்புறங்களில் நல்ல பணிகளைச் செய்வதற்கும், தீய பழக்க வழக்கங்களிலிருந்து கிராமப்புற மக்களை விடுவிப்பதற்கும் பட்டதாரிகள் நிறைந்துள்ள இளைஞர் அணியைப் பயன்படுத்த வேண்டுமென்றும், இரண்டாயிரம் இளைஞர்களை அந்த அணியில் திரட்டுவதற்கும் அவர்களுக்குப் பொறுப்புத் தரவேண்டும் அவர்களுக்கு மாத ஊதியமாக ரூபாய் 175 கொடுக்க வேண்டுமென்றும் இந்த வரவு செலவுத் திட்டத்திலே வகை செய்



யப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களில் 6,500 பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தரப்பட்டிருக்கிறது. அதில் சில குறைபாடுகள் சொல்லப்பட்டன என்றாலும் அது கிடைத்தால் போதும் என்கிற அளவிற்கு இன்றைய தினம் வேலைவாய்ப்பு அற்ற நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதை நாம் மறந்து விடுவதற்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் முத்துசாமி அவர்கள் என்று கருதுகிறேன்—தனியார் பள்ளிகளில் ஆசிரியர்கள் முழுச் சம்பளம் வாங்கிக் கொண்டதாகக் கையெழுத்துப் போட்டுவிட்டுப் பாதிச் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றார்கள். அந்த அளவிற்கு வேலை வாய்ப்புப் போதும் என்று ஆசிரியர்கள் இருக்கிறார்கள். தொழில் பயிற்சி மூலம் அவர்களுக்கு இந்த அரசின் சார்பில் தரப்படுகிற இந்த உதவியை அவர்கள் புறக்கணித்து விட மாட்டார்கள், ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அதே போல 2,400 பொறியாளர்களுக்கு நாம் வேலை வாய்ப்பு அளித்திருக்கிறோம். பின் தங்கிய அரிசன மக்களுக்கும் ஏராளமான



சலுகைகளை வழங்கியிருக்கிறோம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல ஏற்கனவே ஆரம்பித்த திட்டம் என்று அவர்கள் எடுத்துக்காட்டினாலும், அது விரிவுபடுத்தப்படுகிறது. சலவைத் தொழிலாளர்களுக்கும், முடிதிருத்துவோருக்கும் ஆயிரம் பேர்களுக்கு அவர்கள் தொழில் கருவிகள் வாங்குவதற்கு உதவி செய்வதற்காக இந்த வரவு செலவுத் திட்டத்திலே நாம் திட்டம் வகுத்திருக்கிறோம். இவை அவ்வளவையும் சொல்லிவிட்டு, இவைகள் போதாது என்று கூறிவிட்டு ஆனால் வரிகள் போடக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற காரணத்தினால் இப்படிச் சொன்னார்கள் என்பதை நான் நன்றாக அறிவேன். ஒரு காலத்தில் இந்தப் பக்கத்தில் இருந்தவர்; எதிர்க்கட்சியினர் வரிகள் போட்டதைக் கண்டித்துக் கேள்விக்கணைகளைத் தொடுத்த நேரத்தில் பதில் அளித்தவர். ஆகவே கேள்வி கேட்கிறவர்கள், பதில் சொல்கிறவர்கள் மாறி, மாறி வருகின்ற நிலைகள் ஜனநாயகத்திலே வியப்புக்குரியதல்ல. ஆகவேதான் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற காரணத்தினால் இவ்வளவையும் சொல்லிவிட்டு, யானைப் பசிக்குச் சோளப்பொரியைப் போட்டிருக்கிறீர்கள் என்று குறிப்பிட்டுவிட்டு, இன்னும் பல திட்டங்கள்

இங்கே நிறைவேற்றப்பட வேண்டுமென்று எல்லாத் திட்டங்களையும் வகுத்துக் கொடுத்து விட்டு, ஆனாலும் வரிகள் போடலாமா என்கிற ஒரு கேள்வியை இங்கே கேட்டிருக்கிறார்கள்.

### பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம்.

பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக ஒரு திட்டத்தை இந்த அரசு தயாரித்து, அதற்காக நிதியினைத் திரட்டி வருகிறோம்.

இதைப் பற்றிப் பொன்னப்ப நாடார் அவர்கள் ''நல்ல திட்டம்; இதில் ஊழல் நடந்து விடக்கூடாது'' என்று குறிப்பிட்டார்கள். எல்லாத் திட்டங்களையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கக்கூடாது.

நாம் நிதி சேர்க்கிறோம்—பிச்சைக்காரர்களுக்கு! அதிலேயே சில பேர் தவறு செய்கிறார்கள் என்றால் அவர்கள் பிச்சைக்காரர்களுக்குத் துரோகம் செய்கின்ற கொடியவர்கள்; தீயவர்கள் என்கின்ற கணக்கிலே எடுத்துக் கொள்ள வேண்டுமே அல்லாமல் இதற்கெல்லாம் ஏன் '' சீரியல் நம்பர் '' போடவில்லை என்று கேட்பதிலே அர்த்தமில்லை.

கொடி நாள் என்று எத்தனையோ ஆண்டுக் காலமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. அந்தக் கொடி நாளில் கொடிகளுக்கு விலை இவ்வளவு என்று குறிப்பிடப்படுகிறது.

அந்தக் கொடிகள், பள்ளிகளில் சிறார்களிடத்தில் குறிப்பிட்ட தொகைக்கு விற்கப்படுகின்றன. அப்படி விற்கப்படுகின்ற எந்தக் கொடிக்கும் சீரியல் நம்பர் போடப்பட்டதாக நான் கேள்விப்பட்டதில்லை. ஆகவே, அச்சடிக்கப்பட்ட அட்டைகள் எவ்வளவு என்பதற்குக் கணக்கு உண்டு. வேறு யாரும் அச்சடிக்க முடியாதபடி அதிலே என்னுடைய கையெழுத்துப் பதிக்கப்பட்டிருக்கிறது.

உத்தமர் காந்தியடிகள் தொழு நோய்ப் பிச்சைக்காரர் ஒருவருக்குச் சிகிச்சையளிக்கின்ற படம் இன்னொரு புறத்திலே பொறிக்கப்பட்டிருக்கிறது. இவைகளைக் கணக்கிட்டு, ஒவ்வொரு இடத்திலும் தரப்பட்டு, இதன் மூலமாக இந்த நிதிக்கு இவ்வளவு தொகை வரவேண்டும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இதிலே தவறு நடந்து விடாது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். தவறுகள் சுட்டிக்காட்டப்படுமேயானால் அரசு சார்பில் ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நான் தயாராயிருக்கிறேன்.

பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு என்கிற திட்டத்தைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பிச்சைக்காரர்களின் மேல் வைத்துள்ள அன்பின் காரணமாகவும், பற்றின் காரணமாகவும்—பற்றின் காரணமாக என்றால் அந்த வட்டாரத்திலே



உள்ளவர்களுக்கு அவர் மீது கோபம் பிறக்கும்—ஆகவே அவர்கள் பிச்சைக்காரர்கள் மேல் வைத்திருக்கிற அன்பின் காரணமாக—அவர்கள் முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளையெல்லாம்—நேருவின் பிறந்த நாளைக் குழந்தைகள் தினமாகக் கொண்டாடுவது போல—இதைப் பிச்சைக்காரர்கள் தினமாகக் கொண்டாடலாம் என்று சொன்னார்கள்.

ஐந்து ஆண்டுக் காலத்தில் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுப் பிச்சைக்காரர்களின் கூட்டமே தமிழ்நாட்டில் இல்லாதவாறு ஆக்க வேண்டுமென்று கருதுகிறேன்.

பண்டித நேரு அவர்கள் பிறந்த தின விழாவை குழந்தைகள் தினமாகக் கொண்டாட வழியிருக்கிறது. பண்டித நேரு மறைந்து பல ஆண்டுகளானாலும் குழந்தைகள் பிறந்து கொண்டிருக்கும்.

ஆனால் இந்தப்பிச்சைக்காரர்கள் பிரச்சினை சரிசெய்யப்பட்டு விட்டால் பிறகு பிச்சைக்காரர்கள் புனர்வாழ்வு தினத்தைக் கொண்டாட முடியாது என்பதை எதிர்க் கட்சித் தலைவர் புரிந்து கொண்டு வேறு ஒரு யோசனையைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

### குடிசை மாற்று வாரியம்.

நாம் இன்னும் பல பொறுப்புகளை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். சென்னை மாநகரத்தில் ரூ. 40 கோடியில் திட்டமிட்டு ஏழாண்டுக் காலத்தில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக ஏழை எளிய மக்களுக்கு நல்ல வீடுகளைக் கட்டித் தருவதற்கு நாம் பெரு முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

இது பல்லாண்டுக் காலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கிற ஒரு பயங்கரமான பிரச்சினை. அந்தப் பிரச்சினையை இந்த அரசு இன்றைய தினம் வெகு துணிவோடு ஏற்று, அதை நடத்திவைக்க வேண்டுமென்ற ஆர்வத்தின் காரணமாக இந்த ஆண்டு மாத்திரம் 4 கோடி ரூபாய் அதற்காகச் செலவழிப்பது என்று திட்டமிட்டு அந்தப் பணி நடைபெற்றுக்கொண்டு வருகிறது.



அதைப் போலவே தமிழ்நாட்டில் குடிநீர் வாரியம் ஒன்றின் மூலமாகப் பல கோடி ரூபாய் செலவில் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் இன்னும் சில பல ஆண்டுகளில் எல்லாக் கிராமப் புறத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென்பதற்காகத் திட்டம் தீட்டி அந்தத் துறையிலும் வெகு வேகமாகப் பல முற்போக்குக் காரியங்களைச் செய்திருக்கிறோம்.

இவைகளை யெல்லாம் எந்த அடிப்படையில் நாம் செய்து வருகிறோம் என்பதைத் தான் இந்த நிதிநிலை அறிக்கையைப் படிக்கிற நேரத்தில் எடுத்துக் காட்டினேன். ஏழை எளியவர்கள்—கிராமப்புறத்து மக்கள்—இது வரையில் தங்களையே சரிவர உணர்ந்து கொள்ள முடியாமல் எங்கோ அழுத்தப்பட்டு தள்ளப்பட்டுக் கிடந்த பிற்போக்கான நிலையில் உள்ள மக்கள், வாழ்வில் விடிவு ஏற்பட வேண்டுமென்பதற்காக இவ்வளவு முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

இந்த நிதிநிலை அறிக்கையிலே எடுத்துச் சொன்ன திட்டங்களால் மட்டும் நமது மாநிலத்தின் தேவைகள் பூர்த்தி அடைந்து விடுமா என்றால் இல்லை. இன்னும் ஏராளமான தேவைகள் இருக்கின்றன. அந்தத் தேவைகளையெல்லாம்—இங்கே பேசிய உறுப்பினர்கள்—தொகுதி வாரியாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

## மூவர் குழு.



இந்த நிதிநிலை அறிக்கை விவாதத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட இந்தப் பிரச்சினைகள் எல்லாம் மறுபடியும் நீங்கள் விரும்பினால் சட்டமன்ற நடவடிக்கைப் புத்தகத்திலிருந்து படித்துக் கொள்ளலாம் என்கிற நிலைமை இருந்து வந்திருக்கிறது. அவைகளில் சில மறந்தும் விடலாம்; கூடிய வரையில் இந்த நிலைமைக்கு இடம் தராத வகையில் தங்கள் தங்கள் தொகுதிகளைப்பற்றிக் கோடிட்டுக் காட்டுகின்ற எந்தப் பிரச்சினையானாலும் அவைகளை ஆராயத் தலைமைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், வாரிய உறுப்பினர்களில் ஒருவர், ஆக மூவர் கொண்ட குழு அமைக்கப்பெற்று, அந்தக் குழு, இங்கேபேசிய உறுப்பினர்களுடைய கருத்துக்களை எல்லாம் ஆராய்ந்து ஒவ்வொரு துறையின் தலைவர், துறையினருடைய செயலாளர்கள்—அலுவலர்கள் இவர்களோடு கலந்து ஆராய்ந்து, அமைச்சர் அவைக்கு அறிக்கைகளை அறிவித்து, அதிலே பெரும்பாலானவற்றை இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலேயே நிறைவேற்ற வழி வகைகள் வகுக்கும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



இதுபோன்ற தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதற்காகத் தான்—நாம் எப்படியும் தவிர்த்து விடலாம் என்று எண்ணினால்கூட வரிகளின் மூலம் அவற்றிற்குத் தேவையான நிதிவாயில்களைப் பெருக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

## உறுப்பினர்களின் ஊதியம்.

இடையில் நம்முடைய நண்பர் ஆறுமுகசாமி அவர்கள் எழுப்பிய கோரிக்கைக்கு நான் பதில் அளித்தாக வேண்டும் என்று கருதுகிறேன். அவர்கள் சொன்னார்கள்—அப்பட்டமாகச் சொல்லாமல்—எங்களைக் கொஞ்சம் கவனித்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள்.

எல்லா உறுப்பினர்களுக்கும் இந்த ஆசை இருப்பது தெரியாமல் இல்லை. அதில் யார் மணி கட்டுவது பூனைக்கு என்பதில் தான் ஒருவருக்கொருவர் போட்டியே தவிர, இதில் கொடுத்தால் வாங்கிக் கொள்ளலாம் என்ற எண்ணம் தான் எல்லோருக்கும் இருக்கிறது.

இதைப் போலவே ரூ. 150 இருந்த காலத்தில் ரூ. 250 ஆக உயர்த்தப்பட்டது. எல்லாக் கட்சியிலுள்ள உறுப்பினர்களும் அதை ஏற்றுக் கொண்டார்கள். அதைப் போலவே நம்முடைய நண்பர் ஆறுமுகசாமி அவர்களின் கோரிக்கையும் விரைவில் ஏற்கப்படும்.

எந்த அளவுக்குத் தொகை என்பதை நான் இப்போது கூற விரும்பவில்லை. ஏனென்றால் அதுபற்றிய மானிய விவாதம் வருகிற நேரத்தில் அதைப் பற்றி அந்த மானியத்தைப் பொறுப்பேற்றுக் கொள்ளுகிற அமைச்சர் வாயிலாக அது தெரிவிக்கப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தேவைகள் நமக்கு நிறைய இருக்கின்றன. மற்ற உறுப்பினர்களுக்கும் தேவைகள் இருக்கின்றன. அதையும் நிறைவு செய்ய வேண்டியிருக்கிறது. இன்னும் நிறைவு செய்யப்பட வேண்டிய தேவைகள் ஏராளம் இருக்கின்றன. அதையும் நான் உணர்கிறேன்.

அதற்காகத் தான் நிதி வாயில்களைப் பெருக்குவதற்கு வேறு எந்த வழியும் இல்லாத காரணத்தால் வரிகளை நாம் தேடிப் போக வேண்டியிருக்கிறது.

### கழக அரசின் வரிக்கொள்கை

அப்படி வரிகளைத் தேடிப் போகிற நேரத்தில் கூடுமான வரையில் தாங்கக் கூடியவர்களைத் தொடக் கூடியதாகவும், தாங்க இயலாதவர்களுக்குப் பாதகம் ஏற்படுத்தாத வகையிலும் அந்த வரிகள் இருக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். அதுதான் கழக அரசினுடைய வரிக் கொள்கையாகும்.

அதற்கேற்பத்தான் விற்பனை வரியை மூன்று சதவீதத்திலிருந்து மூன்றரை சதவீதமாக உயர்த்தியிருக்கிறோம். அதிலும் சட்டமன்றத்தில் நேற்றைக்கு முன் தினம் பல சலுகைகள் அளிக்கப்பட்டு மொத்த 'வணிக வரம்பு' ரூ. 15 ஆயிரம் என்று இருந்ததை ரூ. 25 ஆயிரம் என்கிற அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம். அதைப் போலவே 'கம்பவுண்டிங்' ரூ. 75 ஆயிரம் என்று இருந்ததை ஒரு லட்சம் என்கிற அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம்.

பல பெரிய நல்ல காரியங்களைச் செய்வதற்கு ஒரு சிறிய பளுவை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் இந்த வரியை உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

விற்பனை வரி, மேல்வரிப் பிரச்சினையிலும் பொதுமக்களுக்கு அதிகமாகக் கஷ்டங்கள் ஏற்படப்போவதில்லை. ஏதோ பத்திரிகைகளில் இங்கொன்றும் அங்கொன்றுமாக வணிகர்கள் கொந்தளிப்பு, வியாபாரிகள் புரட்சி என்ற செய்திகள் இரண்டொரு நாள் வரும். ஆனால், இது உண்மையிலேயே வியாபாரிகளைப் பெரிதும் பாதிக்கக் கூடிய வரியல்ல என்பதை நாம் மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

விற்பனை வரி, மேல்வரி பற்றியும் மன்ற உறுப்பினர்கள் கருத்தறிவித்தார்கள். வேறு சில உறுப்பினர்கள் இது சென்னைக்கு மட்டுமிருக்கின்ற காரணத்தால் இதைப் பயன்படுத்திக் கொண்டு சென்னையின் புறநகர்ப் பகுதிகளிலே இருக்கின்றவர்கள் இதை ஏமாற்றித் தப்பித்துக் கொள்ளக் கூடும் என்றெல்லாம் கூறினார்கள். ஆகவே, அதைப் பற்றியும் யோசித்துப் பார்த்தோம். சென்னைக்கு மட்டும்தான் இந்த வரியா ? கோவை, சேலம், மதுரை, திருச்சி போன்ற நகரப் பகுதிகளுக்கு இந்த வரி கிடையாதா என்றெல்லாம் உறுப்பினர்கள் கேட்டார்கள்.



ஆகவே சென்னையினுடைய புறநகர்ப் பகுதிகளுக்கும் கோவை-சேலம்-திருச்சி-மதுரை போன்ற நகரங்களையும்அதன் புறநகர்ப் பகுதிகளையும் இணைத்து இதே விற்பனை வரியை (சர் சார்ஜ்) விதிக்கலாமென்றும் உறுப்பினர்களின் கோரிக்கைகிணங்க 10 சதவீதம் என்றிருக்கும் மேல் வரியை 5 சதவிகிதமாகக் குறைத்து விதிக்கலாமென்றும் கருதுகிறோம்.

### நகரங்களில் நிலவரி.

சென்னை நகரிலும், மற்ற நகரங்களிலும் உள்ள பல்லாயிரக் கணக்கானவர்களில் ஒரு 'கிரவுண்ட்' வரை உள்ளவர்களுக்கு நகர்ப்புற நிலவரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

மனைவரியின் மூலமாகச் சென்னை நகரிலும் பிற இடங்களிலும் ஒரு 'கிரவுண்ட்' வைத்திருக்கிற பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வரிவிலக்குச் செய்யப்பட்டதன் மூலமாக அதன் மூலம் ஒரு சமதர்ம நோக்கோடு அவர்களெல்லாம் இந்த வரியிலிருந்து விடுபடக் கூடிய சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது.

வேளாண்மை வரி பற்றி, இந்த மன்றத்தில் நிதி நிலை அறிக்கை வைக்கப்பட்டதும் நிருபர்களிடத்திலே கருத்துத் தெரிவிக்கையில் (கம்.) உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள், கிராமங்களிலே அதிகமாகச் சம்பாதித்துக் கொண்டிருப்பவர்களை வரிகள் தொடவில்லை என்று சொன்னார்கள்.

வேளாண்மை மூலம் அதிக ஆதாயம் பெறக்கூடியவர்களை மட்டுமே பாதிக்கின்ற அளவுக்குச் சில மாறுதல் சம்பந்தப்பட்ட மசோதா இந்த மன்றத்திலே வரவிருக்கின்றது.

இந்த வரிகளை எல்லாம் குறிப்பிட்ட டாக்டர் ஹாண்டே அவர்கள், ஒரு கையால் கொடுத்துவிட்டு இன்னொரு கையால் திரும்பி வாங்கிக்கொள்கிறீர்கள் என்று குறிப்பிட்டார்கள்.

### மாநிலத்தின் மொத்த வருமானம்.

இந்த மாநிலத்தினுடைய மொத்த வருமானம் 2,400 கோடி ரூபாய். இந்த 2,400 கோடி ரூபாயில் அரசு ஊழியர்கள் ஊதியமாகப் பெறுகின்ற தொகை 100 கோடி ரூபாய். இது இந்த மாநில வருமானத்தில் 24-ல் ஒரு பங்காகும்.

இப்போது கூடுதலாக எழுப்புகின்ற வரிகள் மூலம்—நிதி வாயில்கள் மூலம்—கிடைக்கின்ற தொகை 25 கோடி ரூபாய் என்றால் அதில் ஒரு பங்கைத்தான்; அதில் ஒரு கோடி ரூபாய்க்கான வரிப் பளுவைத்தான் அரசு ஊழியர்கள் ஈர்க்க வேண்டியிருக்கிறது. அதே நேரத்தில் அவர்களுக்காக

இரண்டாவது ஊதியக் குழு சிபாரிசுப்படி 25 கோடி ரூபாய் ஊதிய உயர்வு தந்திருக்கிறோம். அதனை ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"அரியானா பற்றி நான் அறியேனா ?"

தமிழ்நாட்டிலே குறிப்பிட்ட காலத்திற்குள் 72-ம் ஆண்டு முடிவதற்குள்ளாகத் தமிழ் நாட்டிலே எங்கு பார்த்தாலும் மின்னொளி இல்லாத கிராமமே இருக்கக் கூடாது என்று சூளுரைத்து அத் திட்டத்தை நிறைவு படுத்துகிறோம்.




" இதுவரை தமிழ்நாடு முதல் இடம் வகித்து வந்தது. ஆனால் இப்போது அந்த வகையில் இரண்டாவது இடத்திற்கு வந்துவிட்டது. அரியானா முதல் இடத்திற்கு வந்துவிட்டது என்று திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசும்போது சொன்னார்கள்.

அது முதல் இடத்தில் இருக்கிறதா என்பதை வடக்கே உள்ளவர்கள்—பத்திரிகைகள்—வெகுவாக எழுதிக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் இன்னொரு மாநிலத்தின் பிரச்சினைகளில் தலையிடுவது நல்லதல்ல. அந்த சர்ச்சையில் நான் இறங்கவும் இல்லை.

அரியானா முதலிடம் பெற்றது என்றால் அது தமிழ்நாட்டின் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு ; தமிழக மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கு ! வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மூன்று மாவட்டங்கள் சேர்ந்த தொண்டை மண்டலம்தான் அரியானா !

மூன்றாண்டுகளிலே மூலைமுடுக்குகளிலெல்லாம் மின் ஒளி.

நாம் எல்லாக் கிராமங்களுக்கும் உண்மையிலேயே விளக்குப் போடத் தீவிர முயற்சி எடுத்து வருகிறோம். இன்னும் 2, 3 ஆண்டுகளில் ஒளி வசதி இல்லாத கிராமமே இல்லை என்ற நிலைக்கு ஏற்பாடுகள் செய்வோம் என்று சூளுரைத்து அதன் காரணமக உங்கள் பாராட்டுதலைப் பெறும் நிலைக்கு ஆளாவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாநிலத் திட்டக் குழு.

இந்த ஆண்டு நம்முடைய மாநிலத்தின் திட்டத்திற்குத் தேவையானதென்று எண்ணுகிற தொகை 100 கோடியிலிருந்து 105 கோடியாகும். மத்திய அரசு இந்த ஆண்டு திட்டத்திற்காக ஒதுக்கியிருக்கிற தொகை ரூ. 70 கோடியிலிருந்து 80 கோடி வரையில்தான் ஆகும்.

மது விலக்குப் பிரச்சினை பற்றிப் பேசிய நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதைப் போலத் திட்டச் செலவைக் குறைத்துக்கொள்வதா ? அது இயலாத காரியம் !

நலம் வாய்ந்த அரசு.

திட்டச் செலவுகள் குறைத்துக் கொள்ளப்படுமானால், இந்த நாட்டில் நாம் ஏழை எளிய மக்களுக்கு அளித்திருக்கிற வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது ஒரு நலம் வாய்ந்த அரசை நாம் உருவாக்க முடியாது.



மத்திய அரசு 70, 80 கோடி ரூபாய் இந்த ஆண்டுத் திட்டச் செலவிற்காகத் தந்திருந்தாலும் 100 கோடியிலிருந்து 105 கோடி வரையில் நாம் செலவிடுவதென்று அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

இந்தத் திட்டங்கள் எங்கிருந்து தீட்டப்பட வேண்டும்? பொதுவாகத் திட்டங்கள் மேலேயிருந்து தீட்டி, அவர்கள் இங்கே அனுப்பி வைத்து, நம்முடைய திட்டங்கள் செயல்படுவது ஒரு சரியான நல்ல சூழ்நிலையை நம்முடைய மாநிலத்தில் உருவாக்குவதற்கு ஏற்புடையதாக இல்லை என்ற காரணத்தால்தான் மாநில அளவில் ஒரு திட்டக் குழுவை நாம் உருவாக்கியிருக்கிறோம்.

நான் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை இந்த மன்றத்திலே வைத்த நேரத்தில் அதைப் பற்றி விளக்கியிருக்கிறேன். இப்போது திட்டக் குழு அமைக்கப்பட்டு அது தன். பணியைச் சிறந்த முறையில் ஆற்றத் தொடங்கியிருக்கிறது.

இந்தத் திட்டக் குழு மாநில அளவில் உருவாக்கப்பட்ட நேரத்தில் பத்திரிகைகளில் எல்லாம்—திட்டக் குழு பற்றி ஏதோ மத்தியத் திட்டக் குழுவிற்கு எதிராக மாநிலத்தில் திட்டக் குழு உருவாகிறது என்றெல்லாம் கணிக்கப்பட்டது.

இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் உருவாகியிருக்கிற திட்டக் குழுவைப் போல மற்ற மாநிலங்களிலும் திட்டக் குழு அமைக்க வேண்டுமென்ற முனைப்பு எல்லா மாநிலங்களிலும் ஏற்பட்டிருப்பதைக் காண மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

நம் மாநிலத்திற்கெனப் பத்தாண்டுகளில் என்னென்ன திட்டங்களை நிறைவேற்றினோம்? பத்தாண்டுகளில் மக்களின் நிலை எவ்வாறு இருக்கும்? கல்வித் தரம் எப்படி இருக்கும்? நம்முடைய பொருளாதார வளங்கள் எப்படி இருக்க வேண்டும்? நம் வளர்ச்சித் துறைகள் எவ்வாறு இருக்க வேண்டும்? இவற்றையெல்லாம் ஆராய்ந்து சரியான முறையில் மாநிலத்திற்கான திட்டத்தை வகுத்துக்கொண்டு, அதற்கான நிதி வாயில்களை மத்திய அரசிடமிருந்து பெற வேண்டுமென்பதற்காகத்தான் இந்த மாநிலத் திட்டக் குழு இன்றையதினம் அமைக்கப்பட்டுத் தன் பணியை ஆற்றத் தொடங்கியிருக்கிறது.

மாநிலத் திட்டக் குழு பற்றி இங்கே பேசப்பட்டது. திட்டக் குழுவின் பணிகள் என்ன என்று வரையறுக்கப்படவில்லை என்று திரு. தங்கமணி அவர்கள் கூறினார்கள். ஏற்கனவே திட்டக் குழுவின் பணிகள் பற்றிய பட்டியல் அறிவிக்கப்பட்டு அது இதழ்களில் வந்துள்ளது. அதை உறுப்பினர்களுக்கும் வழங்கச் செய்வேன்.

### நமது மாநிலத் திட்டக் குழுவைப் பிற மாநிலங்கள் பின்பற்றுகின்றன.

மாநிலத் திட்டக் குழு அமைக்கப்பட்ட நேரத்தில் இதை ஒரு அதிர்ச்சியுடன் மற்ற மாநிலங்கள் பார்த்தன. இன்றைக்கு ஒவ்வொரு மாநிலமும் திட்டக் குழு அமைக்க முன்வருகிற காட்சியைப் பார்க்கிறோம். திட்டக் குழு அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் இதை வரவேற்றுப் பேசியிருப்பது ஒரு நல்ல அம்சம் ஆகும்.

நமது திரு. சுப்பிரமணியம் அவர்கள் மத்தியில் அமைச்சராக இருந்தபோதுதான் நாணய மதிப்புக் குறைக்கப்பட்டது என்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். அவர்கள் திரு. சி. சுப்பிரமணியத்தைக் குறிப்பிட்டார்களே தவிர, திரு. அசோக் மேத்தாவும் அதற்குக் காரணம் என்பதைக் குறிப்பிடவில்லை. அவர் இப்போது எங்கிருக்கிறார் என்பது திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்குத் தெரியும், அவர் பக்கத்தில்தான் இருக்கிறார். அது தவிர பெருமதிப்பிற்குரிய தலைவர் காமராஜ் அவர்கள் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக இருந்தபோதுதான் இந்த நாணய மதிப்புக் குறைப்புச் செய்யப்பட்டது.



இது எந்தக் காலத்தில் செய்யப்பட்டது என்பது அல்ல; அப்போதெல்லாம் மத்திய அரசுக்கு வக்காலத்து வாங்குகிற அளவில் இந்த மாமன்றத்தில் இருந்தார்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள். ஆனால் எங்களுடைய ' அதிர்ஷ்டம் ' இப்போது மத்திய அரசைக் குற்றம் சாட்டும் அளவுக்கு வந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பூரிப்பு அடைகிறேன்; புளகாங்கிதம் அடைகிறேன்.

### நிர்வாகச் சீர்திருத்தக் குழு.

அதேபோல் நிர்வாகத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று நாம் எண்ணினோம். நம்முடைய திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கூட, கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் எடுத்துச் சொன்னார்கள்.

சிறு சிறு அலுவலகங்களில் கூட நிர்வாகம் எந்த அளவுக்கு நடைபெறுகிறது என்று, ஒரேவிஷயத்தைப் பற்றிய 11 கேஸ்களை எடுத்துக் காட்டினார்கள். இங்கே இன்னும் பல விஷயங்களை உள்ளடக்கியதான நிர்வாகச் சீர்திருத்தத்தை நாம் செய்தாக வேண்டும். தமிழ்நாட்டில் இன்றைய நிர்வாகம் போற்றுகிற அளவில் இருந்தாலும் குறைபாடுகள் இல்லாமல் இல்லை.

நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் வேலை இந்த நாட்டிலுள்ள பாமர மனிதன் மலிவாகவும், சுலபமாகவும், விரைவாகவும் தனது தேவையின் பலனை அடைய வேண்டுமென்ற அடிப்படைக் கருத்தோடு; இந்தக் குழு நிலைமைகளை ஆராய்ந்து, அறிக்கை தரவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது.

இதையொட்டி நம்முடைய மாநிலம் என்னதான் நிர்வாகத்தில் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்தாலும், திட்டம் தீட்டினாலும், சமதர்மக் கண்ணோடு பிரச்சினைகளை நோக்கினாலும், அவற்றையெல்லாம் அமலாக்குவதற்கு வேண்டிய, அளவுக்கு அதிகாரத்தைப் பெற்றாக வேண்டுமென்பது இன்றைய ஆளும் கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நெடுநாள் கோரிக்கையாகும்.

## மத்திய மாநில ஆய்வுக் குழு.

அந்த நெடுநாள் கோரிக்கைக்கு ஏற்ப 'ராஜமன்னார்' குழு அமைக்கப்பட்டு 1969 செப்டம்பர் திங்களில் அந்தக் குழு பணியைத் தொடங்கி அந்த அறிக்கை, மன்றத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

மத்திய-மாநில உறவுகளைப் பற்றிய ராஜமன்னார் அவர்களுடைய அறிக்கையை அநேகமாக அனைவரும் இங்கே வரவேற்றும் பேசியிருக்கிறார்கள்.

ஹாண்டே அவர்கள் இதிலே ஏதோ பெரிய அபிப்பிராயம் சொல்லப்போவதாகச் சொல்லிவிட்டு, ஏதும் சொல்லவில்லை. ஒருவேளை 'ராஜமன்னார் குழு' அறிக்கை விவாதத்துக்கு வரும் நேரத்தில் அதைப் பற்றிப் பேசுவார் என்று நான் கருதுகிறேன்.

நாம், மாநிலத்துக்குச் சுயாட்சியும், மாநிலத்துக்கு அதிக அதிகாரங்களும் வேண்டும் என்று கேட்கிற நேரத்தில் தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி கூட மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் பெற வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி இருப்பது உள்ளபடியே வரவேற்கத் தக்கது.

திருமதி டி. என். அனந்தநாயகி: என்னவோ இன்றைக்குக் கூடித் தீர்மானம் போட்டோம் என்பது சரியல்ல. 1967-லேயே எங்கள் கட்சித் தலைவர் காமராஜர் அவர்களால் இது கூறப்பட்டிருக்கிறது. பல மாகாணங்களிலும் இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டது. அகில இந்திய ரீதியில் இந்தத் தீர்மானம் போடப்பட்டது.

முதல்வர்: அதை யார் சொன்னாலும் சரி, போடப்பட்ட நேரம்தான் முக்கியம். யார் முன்னாலே சொன்னார்கள் என்பதல்ல. ஆனால் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் பெற வேண்டும்.

## மூதறிஞர் ராஜாஜி கருத்து.

மாநில சுயாட்சிபெற வேண்டும் என்கிற கருத்தைப் பற்றி மூதறிஞர் ராஜாஜி அவர்கள் 'கல்கி' ஏட்டில் ஒரு கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்.

தலைவர் அவர்களுடைய அனுமதியுடன் அதை நான் படித்துக் காட்ட விரும்புகிறேன்.



## ராஜாஜியும், பன்றிக்கறியும்

"சார்லஸ் லாம்ப்" என்ற பிரபல ஆங்கில எழுத்தாளர் கூறுகிற ஒரு வேடிக்கைக் கதை; ஆதிகாலத்தில் சீனத்தில் ஒரு வீடு பற்றி எரிந்தபோது அதிலிருந்த ஒரு பன்றியும் வெந்து மாண்டது. அந்தப் பிராணியைத் தொட்டவன் சூடு பொறுக்கமாட்டாமல் விரலை வாயில் வைத்துக் கொண்டான். வெந்த பன்றி மாமிசம் மிகச் சுவையாக இருப்பதாகக் கண்டான். உடனே பக்கத்திலிருந்தவர்கள் தங்களது வீடுகளை எல்லாம் கொளுத்தி, அங்கிருந்த பன்றிகளை வேக வைத்து ருசி பார்த்தார்கள். இப்படியாகத்தானே ஊனைச் சமைத்து உண்ணும் பழக்கம் ஏற்பட்டது. இந்த வேடிக்கைக் கதையை நினைவூட்டும் முறையில் சில முதல் மந்திரிகள் நடந்து கொள்கிறார்கள். அதாவது மத்திய சர்க்காருக்கு எதிராக ராஜ்ய சர்க்கார் அதிகச் சுயாதீன உரிமை பெற வேண்டும் என்ற தங்களது கருத்துக்குக் கிழக்கு வங்கத்தின் கோரிக்கை வலுவூட்டுவதால், பங்களா தேசக் கொந்தளிப்பை இந்த முதன் மந்திரிகள் வரவேற்கிறார்கள்" என்று அவர் சொல்லியிருக்கிறார்.




பன்றிக் கறியைத் தொட்டுச் சுவைத்துப் பார்ப்பதற்காக வீட்டைக் கொளுத்தியவர்கள் குற்றப் பட்டியலில், நேற்றைய தினம் கூடிய தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியையும் ராஜாஜி அவர்கள் கூற்றுப்படிச் சேர்த்து விட்டிருப்பதற்காக நான் வருந்துகிறேன்.

## பன்றிக் கறியை முதலில் சுவைத்தவர்.

ஆனால் பன்றிக் கறியை முதலில் தொட்டுப்பார்த்து, அது சுவைக்கிறது என்று சொன்னவர் யார் என்று பார்த்தால்—

"சமஷ்டி அமைப்பு உருவாவதைத் தவிர்க்க முடியாது என்பதை நாம் ஒப்புக் கொண்டேயாகவேண்டும். நாம் வகுத்த இந்திய அரசியலமைப்பு இதைக் கவனத்தில் கொள்ளத் தவறிடவில்லை.

ஆயினும் 1947-க்குப் பிந்திய இந்திய அரசியல் சரித்திரமோ, அதிகாரங்களை மத்திய அரசாங்கத்திடம் குவிக்கும் சபலம் எப்படி இடையருது இயங்கி வந்துள்ளது என்பதைக் காட்டுகிறது. பிரதேசங்களின் முக்கியத்துவத்தைப் படிப்படியாகக் குறைத்து அதிகாரங்களை மேலும் மேலும் மத்திய அரசாங்கத்திடம் குவிக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது" —இதைச் சொன்னவர் ராஜாஜி அவர்கள்.

ஆக, பன்றிக் கறி சுவைக்கிறது என்று முதலில் எடுத்துக் காட்டியவர் மூதறிஞர் ராஜாஜி அவர்கள். "நமது ஜன நாயகம்" என்ற புத்தகத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிருர்கள்.

பிரதேச ஆட்சியைப் பலவீனப்படுத்தும் போக்கு என்ற தலைப்பில் அந்தப் புத்தகத்தின் 53-ஆம் பக்கத்தில் எழுதியுள்ளதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேன்.

### 58-ல் ஆதரிப்பது ; 71-ல் எதிர்ப்பது—வேடிக்கை !

டாக்டர் எச். வி. ஹாண்டே : இதில் கருத்து வேறுபாடு இருக்கிறது. மாநிலத்துக்கு அதிக நிதி அதிகாரம் வேண்டுமென்று அப்போது ராஜாஜி கேட்டார். ஆனல் எதற்கெடுத்தாலும் மத்திய அரசோடு போரிடுவதைத்தான் ராஜாஜி எதிர்க்கிருர். இது மற்ற மாநிலங்களுக்குப் பரவினல் அது நல்லதல்ல.

முதல்வர் : இந்தப் புத்தகம் 58-ல் வெளியிடப்பட்டது. 58-லேயே காலம் பக்குவமாகக் கனிந்திருக்கிறது. ஆனல் 71-ல் காலம் பக்குவப்படவில்லை என்பது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது.

நாங்களும் மத்திய அரசு பலவீனப்பட்டுவிட வேண்டும் என்று சொல்லவில்லை. அவர் எங்களை விட ஒரு படி மேலாகச் சென்று கிழக்குப் பாகிஸ்தானுடைய விடுதலைப் போரை ஆதரித்துப் பாகிஸ்தானிலிருந்து விடுபட்டுத் துண்டாகப் பிரியவேண்டும் என்பதைக்கூட ஆதரித்துக் கொண்டிருக்கிருர்.

ஆனல் இங்கே நாம் கேட்கும் மாநில சுயாட்சி, அதிகார அளவில் அல்லாமல், தனியாகத் துண்டித்துக் கொண்டு போக வேண்டுமென்ற எண்ணம் சிறிதும் இல்லை என்பதை நினைவு படுத்துகிறேன். மத்திய அரசுடன் நமக்கு இருக்கும் உறவுகள், நட்புகளில் நமக்கு ஏற்படும் சங்கடங்களை அதன் அடிப்படையில் இடைக்கால வரவு செலவுத் திட்டத்



தில் விளக்கமாகக் கூறி அது பற்றி எழுந்த ஐயப்பாடுகளுக்கெல்லாம் நான் அந்த நேரத்திலே மிக விளக்கமான பதில் கூறியிருக்கிறேன். ஆகவே அதைப்பற்றி மீண்டும் ஒரு முறை விரிவாகச் சொல்வது அவசியமில்லை என்று கருதுகிறேன்.

### போராடிப் பெற்றவை.

மத்திய அரசோடு நாம் போராடவேயில்லை ; போராடி எதையும் பெறவேயில்லை என்று யாரும் கூறிவிட முடியாது. இன்றைக்குக் கூட ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை நான் சொல்ல முடியும்.

மத்திய அரசுடைய அனுமதி பெற்று, மத்திய அரசு உதவியுடன் திருத்துறைப்பூண்டி, குத்தாலம், பூதலூர், லால்குடி, காட்டுமன்னர்கோயில், பட்டுக்கோட்டை ஆகிய 6 இடங்களில் வேளாண்மை விற்பனைக் கூடம் அமைக்கவும் அவற்றோடு இணைந்து 56 கிராமச் சாலைகள் ஏற்படுத்தவும் ஒருங்கிணைந்த திட்டத்தைத் தொடங்க ஒன்றரைக் கோடி ரூபாயை மத்திய அரசு இரண்டு நாள் முன்பு நமக்கு அனுமதித்திருப்பதை நான் இங்கே மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆகவே, நாம், தேவைப்படும் நேரத்தில் எல்லாம், பின் வாங்காமல் மத்திய அரசோடு வாதாடிப் போராடி நமமுடைய மாநிலத்துக்கு உரியவைகளைப் பெறுவதிலே என்றைக்கும் சளைத்துவிடவில்லை.

### சுதந்திராக் கட்சியின் உண்மைத் தோற்றம் !

ஆனல், எதற்கெடுத்தாலும் "மாநில சுயாட்சி மாநில சுயாட்சி" என்று அதையே சொல்லி நீங்கள் மக்களிடத்திலிருந்து தப்பித்துக் கொள்கிறீர்கள்—கல்லூரி அனுமதியா, மருத்துவச்சாலை அனுமதியா, மருத்துவச் சாலைக்கு 2—3 புதிய படுக்கைகள் வேண்டுமா—இந்தக் கோரிக்கைகளுக்கெல்லாம் கூட நீங்கள் மாநில சுயாட்சியைக் காட்டித் தப்பித்துக் கொள்கிறீர்கள்" என்ற குற்றச் சாட்டை டாக்டர் ஹாண்டே அவர்கள் எடுத்துச் சொன்னர்

ஒருவேளை அவர்கள், மாநில சுயாட்சியை வரவேற்கக் கூடும். ஆனல் அதே நேரத்தில் எதற்கெடுத்தாலும் மாநில சுயாட்சியைக் காட்டுகிறேம் என்று எங்கள் மீது குற்றம் சாட்டவும் கூடும்.

'ராஜமன்னார் குழு' அறிக்கை மீது பேசுகிற நேரத்தில் தான் மத்திய மாநில அரசு உறவு பற்றிச் சுதந்திராக் கட்சியின் உண்மைத் தோற்றத்தை டாக்டர் ஹாண்டே மூலம் நாம் பார்க்க முடியும்.

டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு ராஜமன்னார் அறிக்கையை இங்கு எடுத்துக் கொடுத்தவர் திரு. பொன்னப்ப நாடார். அவர் எடுத்துக் கொடுத்து உதவி புரிந்தார். அவர் ராஜமன்னார் குழு அறிக்கை மீது பின்னால் பேசுகிறேன் என்று பீடிகை போட்டார். இன்று பிரமாதமான விமரிசனம் கேட்கலாம் என்று நினைத்து வந்த எனக்கு ஒரு கதைதான் ஞாபகத்திற்கு வந்தது.

**வால் மாத்திரம் பாக்கி !**

ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். ஒரு மாணவன் பாடத்தைக் கவனிக்காமல் சுவரைப் பார்த்துக் கொண்டிருந்தான். சுவரில் ஒரு சிறிய வளை. அதில் ஓர் எலி நுழைந்து கொண்டிருந்தது. ஆசிரியர் 'நான் சொன்னதெல்லாம் நுழைந்ததா?' என்று கேட்டார். 'வால் மாத்திரம் பாக்கி' என்று அவன் சொன்னான்.




அதைப்போல் ராஜமன்னார் அறிக்கையிலே அவர்கள் எல்லாவற்றையும் விட்டு விட்டு, முதல் பக்கத்திலே வெளியிடப்பட்டுள்ள முதலமைச்சருடைய படத்தை மாத்திரம் காட்டி, "இது தேவைதானா? 'பர்சனாலிட்டி கல்ட்' வளருகிறது!" என்று குற்றம் சாட்டி, இது ஏதோ ஆளும் கட்சியில் உள்ளவர்களே கூட அந்த உணர்ச்சியில் இருக்கிறார்கள் என்பதைப் போல் எல்லாம், இங்கேயும் ஏதாவது நடத்திப் பார்க்கலாம் என்ற எண்ணத்தோடு அவர்கள் பேசினார்கள்.

**'பர்சனாலிடி கல்ட்' தி. மு. க. வில் இல்லை.**

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை 'பர்சனாலிட்டி கல்ட்' இல்லை. நாங்கள் ஒருவருக்கொருவர், இவரை விட அவர் பெரியவர், அவரைவிட இவர் பெரியவர் என்று பார்க்கும் உணர்ச்சியை வளர்த்துக்கொண்டது கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகத்திலே



இருக்கிற தலைவனிலேயிருந்து தொண்டர்கள் வரை நாங்கள் ஒரே குடும்பம் என்று எண்ணி, அண்ணன்-தம்பிகளாகப் பழகி வருகிறவர்கள். ஆகவே இங்கே தனியார் தோத்திரம், தனியார் துதி என்பதற்கெல்லாம் எள்ளளவும் இடமில்லை என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் என்னுடைய அருமை நண்பர் வீராசாமி அவர்கள் மிகுந்த சிரமப்பட்டுப் புத்தகங்களைக் கொண்டு வந்து காட்டி, அதிலே காமராஜர் படம் இல்லையா? நேரு படம் இல்லையா? என்று கேட்டார்கள்.

டாக்டர் ஹாண்டே விரும்பியது அது அல்ல.

டாக்டர் ஹாண்டே பேசும்போது இப்படிச் சொன்னால் நேரு, காமராசர் படம் போடப்பட்டது; அதையும்தான் எதிர்த்திருக்கிறோம்; ஆகவே எதிர்க்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார். எனவே அவர் விரும்புகிற படத்தைக்காட்ட விரும்புகிறேன்.

**முதலமைச்சராக இருந்தபோது . . . . . . .**

"மெட்ராஸ் இன்ஃபர்மேஷன்" என்ற நமது சர்க்கார் பத்திரிகையில், 1952-ஆம் ஆண்டு ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது வெளிவந்த படம் இது. பர்சனாலிடி கல்டா? இல்லையா? எளியேனுக்குத் தெரியாது.

(அவையில் மேற்படி படத்தை எடுத்துக்காட்டினார் முதல்வர்).

அது மாத்திரம் இல்லை. புதியதாக மாநில கவர்னர் வருகிறார், அந்த நேரத்தில் கவர்னர் படத்தை முதலில் போட்டுவிட்டு அடுத்துப் போடப்பட்ட படம் ராஜாஜியின் படம்தான். இது 'பர்சனாலிடி கல்டா' இல்லையா என்பது எனக்குத் தெரியாது.

கலைமகள், கல்கி போன்ற பத்திரிகைகளில், அதிலும் முக்கியமாக அவருக்குத் தொடர்புடைய 'கல்கி'யில் அவர் கவர்னர் ஜெனரலாகப் பதவியேற்றுக் கொண்டபோது "அரியாசனத்தில் ஜனக மகாராஜர்", "ஜனக ராஜரிஷி" என்பதாக எல்லாம் வருணிக்கப்பட்டது.

**ராஜாஜியைக் கடவுளாக்கிய கதை !**

அதுமாத்திரம் அல்ல. 1952-ஆம் ஆண்டு இந்த மன்றத்திலே ஒரு நம்பிக்கைத் தீர்மானம் ராஜாஜி அவர்களால் கொண்டுவரப்பட்டபோது, நம்பிக்கைத் தீர்மானத்தின் மீது எதிர்த்தரப்பில் இருந்து திரு. அந்தோணிப்பிள்ளை பேசிய பேச்சை எடுத்துக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்:—

"இந்தத் தீர்மானத்தின் நோக்கம் என்ன? இந்த அமைச்சரவை, இதற்கு முன்பிருந்த அமைச்சரவைகளைப் போல் சாமானியர்களை—மதிப்பு ஏதுமற்றவர்களைக் கொண்டதல்ல; இந்த அமைச்சரவை அற்புதமானது, தலைசிறந்த ராஜதந்திரியின் தலைமையில் இயங்குவது என்பதை நிரூபிப்பதுதான் இந்தத் தீர்மானத்தின் நோக்கம்.

இப்போது காங்கிரசின் போக்கு என்னவென்றால், ஒரு தலைமை வழிபாட்டைத் துவக்குவதுதான். கடந்த தேர்தலிலும் இதைக் கண்டோம். காங்கிரஸ் ஐந்தாண்டுத் திட்டத்தின் மீதா ஓட்டுக் கேட்டது? கழுதையானாலும் குதிரையானாலும் காங்கிரஸ் வேட்பாளருக்குப் போடும் ஓட்டு—பெரும் தலைவரான நேருவிற்குப் போடும் ஓட்டு என்று கூறப்பட்டது. ஆனால் இந்தத் தலைமை வழிபாட்டுத் தத்துவம் தென்னாட்டில் எடுபடவில்லை. ஆகவே, ஒரு தென்னாட்டு ரட்சகரைத் தேட வேண்டிய அவசியம் காங்கிரசுக்கு ஏற்பட்டது. இந்தப் புதிய பூஜா முறையை ராஜாஜியே வளர்த்துவிட்டார். தான் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட கருவி—கடவுளின் முழு அதிகாரம் பெற்ற தூதுவர் என்றே தம்மைப் பற்றி ராஜாஜி கூறிக்கொண்டார்.

### "நானே கடவுள்."

இன்னும் சிறிது காலம் கழித்தால் ராஜாஜி 'நானே கடவுள்' என்று கூறிக்கொண்டால் கூட நான் வியப்படைய மாட்டேன். மழைக்காகப் பிரார்த்தியுங்கள் என்று ராஜாஜி கூறி—மழையும் பெய்து விடவே—சில காங்கிரசார் ராஜாஜியால்தான் மழை பெய்தது. ஆகவே அவர் கடவுள் என்றுகூடக் கூறத் துவங்கி விட்டனர்.

### செயற்கை மழைக்கு ஆராய்ச்சி ஏன்?

இது உண்மையானால், செயற்கை மழை வரவழைக்க, ஆராய்ச்சி நடத்த, மக்கள் பணத்தைச் செலவு செய்யாதீர் என்று மத்திய அரசுக்கு விசேடத் தீர்மானம் நிறைவேற்றலாம். எங்கேனும் வறட்சித் துயர் ஏற்பட்டிருந்தால், அங்கே ராஜாஜியை முதலமைச்சராக அனுப்பினால் போதும்" என்பதாகத் திரு அந்தோணிப் பிள்ளை அவர்களால் 'பர்சனலிடி கல்ட்' கூட அல்ல, கடவுளாகவே ராஜாஜி தன்னை ஆக்கிக்கொண்டிருக்கிறார் என்று குற்றம் சாட்டப்படுகிற நிலைமையில் அன்றைக்கு ராஜாஜி வளர்க்கப்பட்டார்.



### செய்தி ஏடுகள் முதல் சினிமாப் படம்வரை.

அது மாத்திரம் அல்ல—ஏ.வி.எம். தயாரித்த சினிமாப் படத்தில் ராஜாஜி ஏர் உழுவது போலக் காண்பிக்கப்பட்டது. பரம்பரை பரம்பரையாக ஏர் உழுது களைத்துப் போனவர் அல்லவா?

அது மாத்திரம் அல்ல, பல ஆங்கில ஏடுகளில் இன்னும் பூணூலைக் காதிலே மாட்டிக்கொண்டு அவரே துண்டு துவைப்பது போல் படம் போட்டுக் காட்டப்பட்டது.

### சுதந்திராக் கட்சியில் ராஜாஜிக்குப் பிறகு யார்?

'பர்சனலிடி கல்ட்' என்ற அந்தக் குற்றத்தை எங்கள் மீதும் எங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் மீதும் சுமத்திய நேரத்தில் நான் எண்ணிக்கொண்டேன். ராஜாஜி உயிரோடு இருக்கும் போதுதான் 'ராஜாஜி ஹால்' என்று பெயரிடப்பட்டது. ராஜாஜி உயிரோடு இருக்கும்போதுதான் இந்த மாமன்றத்தில் அவரது பெரிய படம் திறந்து வைக்கப்பட்டது என்பதை எண்ணிப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

சுதந்திராக் கட்சியினரைப் பொறுத்த வரையில் தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில், ராஜாஜி இல்லாவிட்டால் அதற்குப் பிறகு யார்! அது 'பர்சனலிடி கல்ட்' அல்லவா? அந்த முறையில் 'பர்சனலிடி கல்'டை வளர்த்துவிட்டார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தில் கருணாநிதி இல்லாவிட்டால், அதைஅடுத்துப் பலபேர்இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டாக்டர் ஹாண்டே: முதல்வரே தனி நபர் துதியை ஊக்கப்படுத்துகிறார் என்பதே எனது குற்றச்சாட்டு. முன்பு இந்த அவையில் சீமைச்சாமி பேசும்போது தலையா, வாலா என்று முதல்வர் கேட்டார். இந்த மனப்பான்மை மாறி ஜனநாயகவாதியாக ஆகவேண்டும் என்று சொன்னேன்.

முதல்வர்: ஜனநாயகம் உங்களிடம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பின்னால் பேசுகின்ற நேரத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

## பிரதமர் இந்திரா காந்தியின் கடிதம்.

'ராஜமன்னார் குழு' அறிக்கை டில்லி போய்ச் சேர்ந்த தாகக் கூடத் தெரியவில்லை என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். ராஜமன்னார் அறிக்கை அங்கே போய்ச் சேர்ந்து, 22-ஆம் தேதி அன்று பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் எழுதிய கடி தத்தை இங்கே படிக்கிறேன்.

New Delhi,
22nd June 1971.

Dear Thiru Karunanidhi,

I have received your letter of the 15th June with which you have sent me a copy of the Centre State Relations Enquiry Committee. Your Government will probably examine the recommendations of this Report. As you know, the Administrative Reforms Commission also went into this question and has already submitted a report, which is under our consideration. If the views of your Government on this matter are made available to us, they will also be taken into account. These are important issues and we intend to consult all the Chief Ministers.

With regards,

Yours sincerely,
(Sd.) INDIRA GANDHI.

பிரதமர் எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் வருமாறு :—

புது டில்லி,
ஜூன் 22, 1971.

அன்புள்ள திரு. கருணாநிதி அவர்களுக்கு :

தாங்கள் ஜூன் 15-ஆம் தேதியிட்டு எழுதிய கடிதமும் அதனுடன் அனுப்பிய மைய-மாநில உறவுஆய்வுக் குழு அறிக்கையின் பிரதியும் கிடைக்கப் பெற்றேன். உங்கள் அரசு இந்தப் பரிந்துரைகளைப் பரிசீலனை செய்யும் என்று நினைக்கிறேன். இது குறித்து நிர்வாகச் சீர்திருத்தக் குழுவும் ஏற்கனவே ஆராய்ந்து அறிக்கையினை அளித்திருக்கிறது. மேற்படி அறிக்கையை நாங்கள் பரிசீலித்து வருகிறோம்.



இந்தப் பிரச்சினையில் தங்களுடைய அரசின் கருத்துக்களை எங்களுக்கு அனுப்பினால் அவற்றையும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

இது முக்கியமான பிரச்சினை ஆகும். இதுபற்றி எல்லா முதல்வர்களையும் கலந்து பேசுவதாக இருக்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள,
இந்திரா காந்தி.

என்பதாக இந்திய முதல் அமைச்சருடைய கடிதத்தில் கூட இது பற்றிப் பரிசீலிப்பதற்கு இந்தியத் தலைமை அரசு தயாராக இருப்பதற்கு அறிகுறி காணப்படுவதைக் குறித்து நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

## காலம் தாழ்த்திக் கடிதத்தை வெளியிடக் காரணம்.

22-ஆம் தேதி வந்த கடிதத்தை இதுவரையில் வெளியிடாமல் நேற்றையதினம் வெளியிட்டதற்குக் காரணம், 28-ஆம் தேதி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் இருக்கிறதே என்பதற்காகத்தான். முதலில் வெளியிட்டால் ஒருவேளை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், இப்படி முதலமைச்சர்களை எல்லாம் கூட்டிப் பிரதமர் பேசுவதா? அப்படியானால் மத்திய அரசு வலுவிழந்து விடாதா? என்ற அளவில் தீர்மானம் வந்துவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாக வெளியிடாமல் இருந்தேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வாதத் திறமை மிக்கவர். ஆகவேதான் தீர்மானத்தையும் இந்திரா காந்தியின் கடிதத்தையும் ஒன்றாகச் சொல்லித் தீர்மானத்திற்குப் பிறகு கடிதம் வந்ததாக இருக்கட்டும் என்று பேசினார்கள்.



அதை நான் புரிந்துகொண்ட காரணத்தால்தான் கடிதம் வந்த விவரத்தை இங்கே தெரிவித்தேன்.

நம்முடைய மத்திய அரசோடு மாநில அரசுக்கிருக்கின்ற உறவுகள் எந்தெந்த வகையிலிருக்க வேண்டும். அதிகாரங்கள் எப்படியெல்லாம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று

கூறியுள்ள ராஜமன்னார் குழுவினுடைய அறிக்கை, பேரவையிலும், மேலவையிலும் மிக விரைவில் விவாதிக்கப்படும் சமயத்தில் உறுப்பினர்கள் நல்ல பல கருத்துக்களை வழங்கவிருக்கின்ற காரணத்தால், நான் அதைப் பற்றி இப்பொழுது விரிவாகப் பேச விரும்பவில்லை.

ஆனால் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் கூறுகின்ற மாநில சுயாட்சிக் கொள்கையை இன்றையதினம் எதிர்க்கின்ற சில பெரியவர்கள் கூட, ஒரு காலத்தில் சுயாட்சி தேவை என்பதற்கு அவர்கள் பல்வேறு கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள்.

நம்முடைய நண்பர் சுவாமிநாதன் அவர்கள் இங்கே பேசுகின்ற போது மாநில அரசு அதிகாரங்கள் அதிகமாகப் பெற வேண்டுமென்ற கொள்கைக்கு ஆதரவாகப் பேசியது வரவேற்கத் தக்க கருத்தாக இருந்தது. ஆனால் அவருடைய கட்சிக்குள்ளே இது விஷயத்தில் ஒருமித்த கருத்து இருக்கிறதா என்பது எனக்கு இன்னும் தெரியவில்லை.

பெரியவர் கே. சந்தானம் அவர்கள் " சுயராஜ்யா " பத்திரிகையில்' ராஜமன்னார் குழு' வினுடைய அறிக்கையைப் பற்றி ஆதரித்துக் கட்டுரை எழுதியிருக்கிறார். அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்திக் கூறி வருகின்ற மாநில சுயாட்சிக்கொள்கைக்கு மூதறிஞர் ராஜாஜி எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்.

இவை இரண்டும் ஒரேபத்திரிகையில் வருகின்ற காட்சியை நாம் கண்டுகொண்டிருக்கிறோம். இந்த நேரத்தில் நண்பர் சுவாமிநாதன் மாநில சுயாட்சிக் கொள்கையை ஆதரித்தும் பேசியிருக்கிறார்.

### ராஜாஜிக்குப் பதில் சொல்ல.

ஒருவேளை ராஜாஜி அவர்கள் பார்த்துவிட்டு ஏன் இப்படிப் பேசியிருக்கிறாய் என்று கேட்டால், பதில் சொல்ல, ராஜாஜி அவர்கள் எழுதிய புத்தகமே இருக்கிறதென்று நண்பர் சுவாமிநாதன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ' நமது ஜனநாயகம் ' என்ற புத்தகம், அதிலே சொல்லியிருக்கிறார்.

' இந்திய தேசிய வாழ்விலும், பண்பாட்டிலும் குடிகொண்டுள்ள பிரிவினைப் போக்குக் காரணமாக, சம அந்தஸ்துள்ள சுயாட்சி உறுப்புகள் அடங்கிய சமஷ்டி யூனியனை உருவாக்கவே நாம் உழைக்க வேண்டும். பிரிவினைப் பாடுகளில்லாத நாடு இந்தியா என்ற கருத்தினாலெழும் தேச பக்தி வேறு. எனவே சமஷ்டி அமைப்பு உருவாவதைத் தவிர்க்க



முடியாது என்பதை நாம் ஒப்புக்கொண்டேயாக வேண்டும்."
நேற்று நான் சட்டமன்றத்தில் பேசி, எடுத்துக் காட்டிப் பேசியது ஒரு பகுதி. இன்றையதினம் படித்துக் காட்டுவது ராஜாஜி அவர்கள் சுயாட்சிக்காகவே பாடுபட்டிருக்கிறார் என்பதற்காகத்தான் எடுத்துக் காட்டுகிறேன். இதற்கு ராஜாஜி அவர்கள் சமாதானம் சொல்லலாம். அன்று சொன்னதை இன்று மாற்றிக்கொள்ள எனக்கு உரிமையுண்டு என்று சொல்லலாம். அவருடைய முன்னுரையில் அவர் எழுதியிருப்பதை இங்கே எடுத்து வைக்கிறேன்.

' இதிலடங்கிய பிரச்சினைகள் பற்றி நான் சொல்லியிருப்பவை யாவும் எள்ளளவும் பட்சபாதமின்றித் தீர்க்க சிந்தனையின் பயனாக அடையப் பெற்ற முடிவுகள் என்பதை வாசகர்களுக்கு வலியுறுத்திக் கூறுகிறேன்.'

இது அவர்கள் முன்னுரையில் வெளியிட்டுள்ள கருத்து ! ' நமது ஜனநாயகம் ' என்ற புத்தகத்திலிருக்கிறது. ஒருவேளை நண்பர் சாமிநாதனைக் கேள்வி கேட்டால் இது நல்ல ஆயுதமாகவிருக்கும் என்பதற்காக இந்தப் புத்தகத்தின் தலைப்பையும் எடுத்துச் சொன்னேன்.

மத்திய அரசு, மாநில அரசுகளுடைய எல்லா விவகாரங்களிலும் இன்றைய தினம் தலையிட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் தலையிட வேண்டிய விவகாரங்களில் தலையிடுவதில்லை. அதைத்தான் நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வெகு வேகமாக எடுத்துச் சொன்னார்கள்.

### மத்திய அரசு காலதாமதம் செய்வது ஏன் ?

காவிரி நதிநீர்ப் பிரச்சினை, மத்திய அரசு என்றைக்கோ தலையிட்டுத் தீர்த்திருக்க வேண்டிய பிரச்சினை. 1968-ஆம் ஆண்டிலிருந்து இந்நாள் வரையில் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும், தீர்ந்து விடும் என்று சொல்லி, கேரள முதலமைச்சரும், மைசூர் முதலமைச்சரும், தமிழக முதலமைச்சரும் கூடிக் கூடிப் பேசுகின்ற காட்சிகள் தமிழ் நாட்டிலும், அதைப் போலவே டெல்லியிலும், மைசூரிலும் நடந்து நடந்து; கடைசியாகப் பேச்சு வார்த்தை முறிந்து விட்டது என்று பேச்சு வார்த்தைக்கு முன்னிலை வகித்த மத்திய அரசு அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் அவர்களே ஒத்துக் கொண்டு, பேச்சுவார்த்தை முறிந்து விட்டது, இனித் தொடரக் காரணமில்லை என்று கண்டு கொண்ட காரணத்தினால், இதை நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டுமென்று அவர் சொன்னார். சொன்ன பிறகும் கிட்டத்தட்ட ஓராண்டுக் காலமாகியும் நாள் கடத்தி வருகிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டது போல், மைசூரில் தேர்தல் நடைபெற்ற நேரத்தில், நாடாளுமன்றத்திற்குப் பொதுத் தேர்தல் நடைபெற்ற நேரத்தில், அதற்காக அப்பொழுது அங்கே சென்ற பிரதமர் இந்திரா காந்தி, நடுவர் தீர்ப்புக்கு இப்பிரச்சினையை விட்டு விடுவதென்று தைரியமாகச் சொன்னார்கள். இப்பொழுது இடையில் ஏன் குறுக்கிட்டு, அவர்கள் நடுவர் தீர்ப்புக்கு அதை விடுவதற்குத் தயங்குகிறார்கள் என்பது நமக்குப் புரியவில்லை.

நாங்கள் ஒரு காலத்தில் திராவிட நாடு திராவிடருக்கேயாக வேண்டும் என்ற பிரிவினையைக் கேட்ட கட்சியைச் சேர்ந்தவர்கள். ஆனால் நாட்டினுடைய பாதுகாப்பு, சூழ்நிலை இவைகளையெல்லாம் உணர்ந்து அந்தப் பிரிவினைக் கொள்கையையே கைவிட்டு விட்டவர்கள் நாங்கள். இன்றைய தினம் நாங்கள் இந்த அரசுப் பொறுப்பிலிருக்கிறோம். அதிகாரங்கள் எங்களுக்கு அதிகமாகத் தேவை என்று கேட்கிறோம். கேட்கின்ற உரிமை எங்களுக்குண்டு. ஆனால் அந்த அதிகாரங்களைப் பெறுகின்ற வரையில் அந்த அதிகாரங்களுக்குட்பட்டு நடக்கின்ற அடக்க உணர்ச்சியை இந்த அரசு பெற்றிருக்கிறதென்று உங்களுக்குத் தெரியும். வீராணம் திட்டத்திற்கு அண்ணா அவர்கள் காலத்தில் கால்கோள் விழா நடத்தினோம். ஆனால் அந்தத் திட்டத்திற்கு அனுமதி கொடுக்கக் கிட்டத்தட்ட $1\frac{1}{4}$ ஆண்டுக் காலமாகியது. அனுமதி கிடைக்கிறதோ இல்லையோ, எப்படியிருந்தாலும் தொடங்கலாமென்று நாங்கள் தொடங்கிடவில்லை. ஆனால் இன்றையதினம் மத்திய அரசு, மைசூரில் என்ன நடக்கிறதென்பதை ஏன் மறந்து விட்டதென்று நான் கேட்க விரும்புகிறேன்.

வீராணமாவது கொஞ்சம் பெரிய விஷயம். நான் உங்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இது சின்ன விஷயம். நம்முடைய கோட்டையைச் சுற்றி, கோட்டை மதகில், ஏராளமாகப் புல் பூண்டுகள் கிளம்பியிருந்தன. நம்முடைய அதிகாரிகளை வரவழைத்து அந்தப் புல்பூண்டுகளைச் செதுக்கி, அழகான செடிகளை வைக்கக் கூடாதா? வண்ண மலர்களை வளர்க்கக்கூடாதா ? ' என்று கேட்டேன். அதிகாரிகள் தலையைச் சொறிந்துகொண்டு உரைத்தார்கள் :- ' இந்தக் கோட்டை மத்திய அரசின் ராணுவத்திற்குச் சொந்தம். இந்தப் புல்பூண்டுகளைச் செதுக்க அவர்களிடமிருந்து அனுமதி பெற்றாகவேண்டு ''மென்று சொன்னார்கள். அதற்குப் பிறகு சென்னைக்கு வந்திருந்த அன்றையப் பாதுகாப்புத் துறையினுடைய உதவி அமைச்சர் திரு. கிருஷ்ணா அவர்களை நானே நேரில் அழைத்து வந்து கோட்டையைச் சுற்றிக்காட்டிக் கோட்டையின் முகப்புப் பக்கத்தில் முளைத்துக்கிடக்கும் புல் பூண்டுகளைச் செதுக்கிவிட்டு அங்கே நல்ல செடிகளை வளர்ப்பதற்கு எங்களுக்கு அனுமதி தாருங்கள்



என்று கேட்டேன். அனுமதி வழங்குகிறேன் என்று சொல்லி விட்டுப்போனார். அதற்கு ஒரு கடிதம் எழுதிவிட்டுப் பிறகு இரண்டொரு நினைவூட்டுக் கடிதங்கள் எழுதிய பிறகு சென்னைக்கு வந்திருந்தபோது மீண்டும் ஞாபகப் படுத்திய பிறகு, மத்திய சர்க்காரிடமிருந்து அனுமதி கிடைத்துப் புல் பூண்டுகள் செதுக்கப்பட்டு நல்ல செடிகள் வளர்க்கப்படுகின்றன. அந்தக் காட்சியினை நீங்கள் நாள்தோறும் பார்க்கிறீர்கள். கோட்டையைச் சுற்றியிருக்கிற புல் பூண்டுகளைச் செதுக்க மத்திய சர்க்காருடைய அனுமதியை நாங்கள் நாடினோம். ஆனாலும் எங்களுக்கென்று அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்தில் அவர்களுடைய அதிகாரத்திற்குட்பட்டு அடக்கத்தோடு நாங்களிருக்கிறோம். ஆனால் மத்திய அரசு மைசூரின் போக்கை ஏன் கண்காணிக்கவில்லை ? திட்டக்குழுவினுடைய ஒப்புதலைப் பெறாமல் இன்றைய தினம் அங்கே அணைகளைக் கட்டிக் கொண்டே போகிறார்கள்.

## திரைப்படத்துக்கு அனுமதி மறுப்பு.

ஹேமாவதி, கபினி, ஹரங்கி போன்ற அணைகள் அங்கே கட்டப்படுகின்றன. அதிலே இன்னொரு வேடிக்கை. அதைப் பற்றிப் பேச அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் கோட்டையில் நம்முடைய அமைச்சர்கள் அறையில் கூட்டப்பட்டது. அதை அரசு செய்திப்படமாக எடுத்தார்கள். அந்தச் செய்திப் படம் வெளியிடப்படுவதற்காகத் தணிக்கைக் குழுவிற்குச் சென்றது. தணிக்கைக் குழு அந்தச் செய்திப் படத்தை அனுமதிக்க மறுத்து விட்டது. என்ன காரணம் தெரியுமா ? காவிரி நதி நீர் தகராறில் '' மத்திய அரசு காலதாமதம் செய்வது குறித்து '' ஆராய்வதற்காக அனைத்துக் கட்சித்தலைவர்களுடைய கூட்டமென்று படத்தில் காட்டப்பட்டது. அதற்குப் பின்னால் ஒரு வரி. அந்த வார்த்தை கூடாதென்று சென்சார் போர்டார் நிராகரித்து விட்டார்கள். அனுமதி மறுக்கப்பட்டு விட்டது. இங்கேயிருந்து டெல்லியிலிருக்கின்ற தலைமை அதிகாரிக்கு உடனடியாக அந்தப் படத்தை அனுப்பி அங்கே அப்பீல் செய்தோம். ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்று மத்திய சர்க்கார் காலதாமதம் செய்து வருகிறது என்பதை எடுத்துவிடவேண்டும் என்றார். மத்திய சர்க்கார் காலதாமதம் செய்கின்றது என்ற வார்த்தைகள் இருக்கக் கூடாதென்று வெளியிட அனுமதி மறுத்து விட்டார்கள்.

பிறகு அனைத்துக் கட்சிக் கூட்டம் தமிழ்நாடு பூராவும் நடந்தது. சென்னையிலும் நடந்தது. நானும் மற்ற கட்சித் தலைவர்களும் சென்னையில் கலந்துகொண்டோம். அதுவும் செய்திப் படமாகப்பட்டு சென்சார் போர்டுக்குச் சென்றிருக்கிறது. அதையும் மறுத்து விட்டார்கள்.

இன்றைய தினம் அந்த அளவுக்கு சென்சார் போர்டினுடைய அதிகாரம் இருக்கிறது. மத்திய அரசு தாமதம் செய்கின்றதென்று சொல்லக் கூடாதாம்.

ஆனால் ஒரு திரைப் படத்தில் இந்திரா காந்தியைப் போலவே வேடம் போட்டு அந்த அம்மையாரைக் கிண்டல் செய்வதுபோல் படமெடுக்கலாமாம்? அதை இங்கேயிருக்கின்ற சென்சார் போர்டு பார்க்கின்ற போது தணிக்கை செய்தார்களா ?

## நம்மால் திருப்பிச் செய்ய முடியாதா ?

ஆனால், இன்றைக்கு மத்திய அரசு காலதாமதம் செய்கின்றது என்ற வார்த்தையை அனுமதிக்கவில்லை. ஆக, அவர்கள் அவைகளைப் பற்றிக் கூடக் கவலைப்படவில்லை மத்திய அரசின் அதிகார பீடம் இருக்கிறதே, அதற்கு ஒரு சிறு மாசும் யாரும் கற்பிக்கக் கூடாது என்று கருதுகிறார்கள். அதிலே வெட்கப்படுகிறவர்கள், காலதாமதம் செய்யாமலிருக்கட்டுமே ! காலதாமதமாவதைத் தவிர்க்கட்டுமே !

இவர்கள் ஹேமாவதியில், கபினியில், ஹரங்கியில், பேரணைகள் கட்டும் திட்டத்தைத் தடுக்க முற்படாவிட்டால், நாளைக்குத் தஞ்சாவூர் பிரகதீசுவரர் ஆலயத்தில் ராஜராஜசோழன் சிலையை வைக்கக் கூடாது என்று சொல்கிறார்களே, அதே இடத்தில் நாம் இராஜராஜ சோழனுடைய சிலையை வைக்க முடியாது என்று கருதுகின்றார்களா ?

அவர்களுடைய பொறுப்பிலிருக்கிற தீவுத் திடலில், அவர்கள் அனுமதி பெறாமலேயே அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்க முடியாது என்று கருதுகின்றார்களா ? அப்படி அறிவித்துக் கூட்டம் நடத்தினால், நமது போலீசாரை மத்திய அரசின் போலீசார் வந்து விரட்டிவிடுவார்களா ? எனக்குப் புரியவில்லை.

## இங்கும் ' இருண்டு ' போகவேண்டுமா ?

நாம் பண்போடு நடந்து கொள்கிறோம். அடக்கத்தோடு நடந்துகொள்கிறோம். அமைதியுடன் நடந்துகொள்கிறோம். பொறுப்போடு நடந்துகொள்கிறோம் ! அவைகளை எல்லாம் இழந்து விட்டு, மைசூரைப் போல நடந்து கொள்வதற்கு இங்கேயும் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தான் மத்திய அரசுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு நினைவில்லை. அது அஸ்ஸாமோ அல்லது மேற்கு வங்கமோ என்று—இரண்டிலொன்று என்று கருதுகிறேன்



அவர்களுடைய கோரிக்கை நிறைவேறாத காரணத்தால் ஓராண்டு ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி சுதந்திர நாளினைக் கொண்டாட முடியாது என்று அறிவித்தார்கள்.

அதேபோல, இன்றைய தினம், மைசூரில் எடுக்கப்படுகின்ற கபினி அணையால், ஹரங்கி அணையால், காவிரி வறண்டு போய், தமிழகம் பத்தாண்டுக் காலத்திற்குள் வறண்டு விடுமானால், அப்படி இருண்டுபோகின்ற தமிழகத்தை நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என்பதைக் காட்டுவதற்காக இந்த ஆண்டு சுதந்திர நாள் இருண்டு போய் விடட்டும் என்று கூறுவதற்கு நம்மாலும் முடியும் !

இவைகளெல்லாம் ஏற்படாதவாறு மத்திய அரசு பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்னும் நான் நம்புகிறேன் மத்திய அரசிடமிருந்து சாதகமான பதில் வருமென்று.

8-ஆம் தேதியன்று பேரவையிலும், 9-ஆம் தேதியன்று மேலவையிலும் காவிரி நதி நீர்த் திட்டம் பற்றிய தீர்மானம் நிறைவேற்றுவதற்கு முன்பு சாதகமான பதில் அங்கேயிருந்து கிடைக்குமென்று நான் கருதுகிறேன். நான் அந்த நம்பிக்கையின் அடிப்படையில் இதைப் பற்றியெல்லாம் 7-ஆம் தேதி எல்லாக் கட்சித் தலைவர்களோடும் கலந்து அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரவிருக்கிறேன்.

## மதுவிலக்குக் கொள்கை.

அடுத்தபடியாக இந்த மாமன்றத்தில் பேசப்பட்ட முக்கியமானது மதுவிலக்குக் கொள்கை பற்றியது. மதுவிலக்குக் கொள்கை இங்கே இருக்கிற நம்மால் மாத்திரம் அல்ல—உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளிலும்—பல்வேறு நாட்டு மக்களாலும், பல்வேறு நாட்டு அரசுகளாலும் சட்டபூர்வமாக அமல்படுத்தத் திட்டமிட்டுத் தோற்றுப்போய் இருக்கிறது. இதை வரலாற்றுச் சான்றுகள் நிறையக் காட்டுகின்றன.

## மற்ற நாடுகளில் மதுவிலக்கு.

அமெரிக்க நாட்டில் 1919-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 16-ஆம் நாள் அரசியல் சட்டத்தையே திருத்தி மதுவிலக்குச் சட்டத்தை அமலுக்குக் கொண்டுவந்தார்கள். பதினான்கு ஆண்டு காலம் அமல்படுத்தப்பட்டதில் கடைசியாகக் குற்றங்கள் அதிகமாயின. கள்ள மதுவைத் தடுக்க முடியவில்லை. கள்ளக் கடத்தல் அதிகமாயிற்று. மது

விலக்கை அமல்நடத்த வேண்டியவர்கள் லஞ்சப் பேயாளுர்கள் என்று கூறப்பட்டு 1938-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 20-ஆம் தேதி மதுவிலக்குச் சட்டம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

பின்லாந்து நாட்டில் 1907-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டம் கொண்டுவரப்பட்டு 1931-ஆம் ஆண்டு அந்தச் சட்டத்தின் பயனை ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டது. குடிவெறி அதிகமாகி இருப்பதாகவும், குற்றம் புரிவோர் தொகை அதிகமாகி விட்டதாகவும் அந்தக் குழு கூறியது. அந்த முடிவின்படி 1932-ல் அந்த நாட்டில் மதுவிலக்குச் சட்டம் ரத்து செய்யப்பட்டது.

நார்வே, 1919-ல் மதுவிலக்கைக் கொண்டு வந்தது. அது 1927-ல் ரத்துச் செய்யப்பட்டது.

நியூ பவுண்ட்லாந்து, 1915-ல் மதுவிலக்கை அமல் செய்தது. 1924-ல் அதை ரத்துச் செய்தது.

துருக்கி 1920-ல் மதுவிலக்கை அமல்படுத்தியது. 1924-ல் அதை ரத்துச் செய்தது மாத்திரமல்ல; 1926-ல் அரசாங்கமே அந்த வியாபாரத்தை மேற்கொண்டது.

நான் முஸ்லீம் லீக் உறுப்பினர்களுக்கு ஒன்றை ஞாபகப் படுத்த விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகமானாலும், காங்கிரசானாலும், கம்யூனிஸ்டானாலும், முஸ்லீம் லீக்கானாலும், பி.எஸ்.பி. கட்சியானாலும், தமிழரசுக் கழகம் ஆனாலும், சுதந்திராவானாலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் தமிழக அரசைப் பொறுத்த வரையில் மதுவிலக்கு, கொள்கை அளவில் ஒப்புக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று என்பதை நாம் யாரும் மறுக்கவில்லை. அதில் இருவேறு கருத்துக்களுக்கு இடம் இல்லை. ஆனால் அதைச் சட்டபூர்வமாக அமல்படுத்திவிட முடிந்ததா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

மத அடிப்படையில் மதுவிலக்கு....

அன்றே சொன்னேன். முஸ்லீம் மத அடிப்படையில் மதுவிலக்குக் கொள்கையைப் பொன்னேபோல் போற்ற வேண்டிய துருக்கி, சிரியா, ஈராக், ஈரான், எகிப்து, பாகிஸ்தான், மலேசியா, இந்தோனேசியா ஆகிய முஸ்லிம் நாடுகளில் சட்டபூர்வமாக மதுவிலக்கை அமல்படுத்த முடியவில்லை. அங்கெல்லாம் சட்டம் இல்லை என்பதற்காக நாட்டு மக்கள் அத்தனைபேரும் குடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று வாதிடவில்லை. அங்கேயும் தங்களது மத



மார்க்கத்திற்கு விரோதமான வகையில் இந்தக் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். உண்மையில் ஆதரவு இல்லை.

திரு. கே. எஸ். அப்துல் வஹாப்.—அரேபிய தேசத்தில் மதுவிலக்கு அமலில் இருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.

முதல்வர்.—அரேபிய தேசத்தில் மட்டுமிருந்தால் போதாது என்பது என் வாதம்.

இங்கும் சட்டம் தளர்த்தப்படுவதன் மூலம் இந்தியப் பேரரசு இந்தியப் பூபாகம் முழுமைக்கும் மதுவிலக்கை அமல்படுத்த முன்வருகிற நாள் வரை நாம் அந்தச் சட்டத்தை ரத்துச் செய்வது என்பது கூட இல்லை—அதற்கு ஓய்வு கொடுப்பதன் மூலம் தமிழ் நாட்டில் இருக்கிற அத்தனை பேரும் குடிகாரர்களாக மாறிவிடுவார்கள் என்று நாம்கூறிட முடியாது. அந்தக் கருத்தைத்தான் முஸ்லீம் லீக் உறுப்பினர் மொய்தீன் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள்.



மதுவிலக்கைப் பற்றி ஆராய்வதற்காக நீதிபதி தேக்சந்த் என்பவர் தலைமையில் மத்திய திட்டக் குழு ஒரு கமிட்டியை 1963-ல் நிறுவியது. இந்தக் கமிட்டி ஏன் நிறுவப்பட்டது என்றால் 1956-ல் நாடாளு மன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"This House is the opinion that Prohibition should be regarded as an integral part of the Second Five Year Plan and recommands that the Planning Commission shouldformulate the necessary programme to bring about nation-wide Prohibition speedily and effectively".

''இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பிரிக்க முடியாத அம்சமாக மதுவிலக்கு கருதப்படவேண்டும் என்று இந்த அவை கருதுகிறது. எனவே நாடு முழுவதும் தீவிரமாகவும் திறமையாகவும் மதுவிலக்கை அமல்படுத்தத் தேவையான நடைமுறைகளை வகுக்குமாறு திட்டக் குழுவுக்கு இந்த அவை பரிந்துரை செய்கிறது''.

## மத்திய அரசால் செயல்படுத்த முடிந்ததா?

*1963-ஆம் ஆண்டிலே இந்தக் குழு அமைக்கப்பட்டு, நாடு முழுவதிலும் மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்று முயற்சி செய்தார்கள். பல்வேறு ஆராய்ச்சிகளை இக்குழு நடத்தியது. 1963-லே ஓர் அறிக்கையைக் கொடுத்தது, அந்தக் கமிட்டியார் என்ன என்ன சிபாரிசுகளைச் செய்தார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அதில் முக்கியமான சிபாரிசு காது மருந்துகளில் ஆல்கஹால் இருக்கிறது. ஒரு மாநிலத்தில் மாத்திரம் ஆயிரக் கணக்கான பவுண்டுகள் அந்த மருந்து செலவாவதாகத் தெரிகிறது. ஒரு சில மாநிலங்களில் அதிக விற்பனையாகிறது. ஆகவே, இதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சிபாரிசு செய்தது. அடுத்தது அளவுக்கு மீறிய ஆல்கஹால் உள்ள 'டிஞ்சர்' உற்பத்தியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும் கமிட்டி சிபாரிசு செய்தது. இவையெல்லாம் மத்திய அரசால் செயல்படுத்த முடியவில்லை.*

*மருந்துகள் சட்டத்தில் பல திருத்தங்கள் செய்யவேண்டுமென்று 'தேக்சந்த் கமிட்டி' கூறியது. அதையும் மத்திய அரசு காது கொடுத்துக் கேட்கவில்லை. அஸ்வா, அரிஷ்டம் ஆகிய மருந்துகள் முறைப்படி தயாரிக்கப்பட்டால் அதில் 10 முதல் 12 பர்சென்ட் 'ஆல்கஹால்' தான் இருக்க முடியும். ஆனால் 80 முதல் 90 பர்சென்ட் வரை ஆல்கஹால் உள்ள அரிஷ்டங்கள், அஸ்வா போன்ற மருந்துகள் விற்பனைக்கு வருகின்றன. இதற்கு 'டிரக்ஸ் ஆக்ட்' திருத்தப்பட வேண்டும், என்று 'தேக்சந்த் கமிட்டி' கூறியது. அது செய்யப்படவில்லை.*

## கள் குடிக்கக் கட்டுப்பாடுகள்.

*அடுத்து, 'கள்ளச் சாராயத்தைவிடக் கள் ஆபத்து குறைந்தது' என்று அந்தக் கமிட்டி கூறியது. சில பாதுகாப்புகளுடன் கள்ளை அனுமதிக்கலாம் என்றும் அது கூறியது. கமிட்டியின் குறிக்கோள் மதுவிலக்குதான். ஆனால் இடையில் சில சிபாரிசுகளைக் கூறியது. அவை 5 சதவிகிதம் ஆல்கஹால் உள்ள கள்ளை அனுமதிக்கலாம். கள் புளித்து விடாமல் இருக்கக் குளிர்பதனச் சாதனங்களைப் பயன்படுத்தலாம். விற்பனையாகும் இடங்களில் மட்டுமே குடிக்க வேண்டும். வீட்டிற்கு எடுத்துச் சென்று குடிக்கத் தடை விதிக்க வேண்டும். கள் மீதுள்ள 'தீர்வை' குறைவாக இருக்க வேண்டும். அப்போதுதான் மக்கள் கள்ளச் சாராயத்தை நாடிப் போகமாட்டார்கள், எனப் பல சிபாரிசுகளை அந்தக் கமிட்டி செய்தது.*



## சட்ட அமலும் சாராய விற்பனையும்.

*நாடு முழுவதிலும் உள்ள கள்ளச் சாராயத்தின் விற்பனைக் கணக்குகளை அந்தக் கமிட்டி குறிப்பிட்டிருக்கிறது. 1963—64-ஆம் ஆண்டில் இந்தியா முழுவதும் கள்ளச் சாராய விற்பனை 52 கோடி ரூபாய். அதில் மது அருந்துகிற மாநிலங்களில் விற்பனை 9 கோடி ரூபாய். மதுவிலக்குச் சட்டம் அமலில் இருக்கின்ற மாநிலங்களில் கள்ளச் சாராய விற்பனை 43 கோடி ரூபாய். மொத்தம் 52 கோடியில் மது அருந்துகிற மாநிலங்களில் 9 கோடி ரூபாய்; மதுவிலக்கு அமலில் உள்ள மாநிலங்களில் 43 கோடி ரூபாய் விற்பனையாகிறது. இதில் கள்ளச் சாராயம் மாத்திரமே சேர்க்கப்பட்டிருக்கிறது. இதர மது வகையறுக்கள் சேர்க்கப்படவில்லை. இது அரசாங்கத்திற்கு வராமல் போகிற பணம் என்பதையும் அந்தக் குழு சுட்டிக் காட்டியிருக்கிறது.*

## மதுவிலக்கும், மக்கட்தொகை பெருக்கமும்.

*அடுத்து 'வெட் ஏரியா'வில் மதுவிலக்கிற்கு முன்பு 100 யூனிட்டுகளாக இருக்குமானால் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு சுமார் 20 சதவிகித மக்கட் தொகை அதிகரிப்பதற்கும் இதர நிலைகளுக்கும் பிறகு, அது 130 யூனிட்டாக உயர்ந்திருக்கிறது. 'டிரை ஏரியா'வில் 100 யூனிட்டாக இருந்தது பத்தாண்டுகளுக்குப் பின்பு 90 யூனிட்டாகக் குறைந்திருக்கிறது என்பதையும், இது எல்லாம் கள்ள மது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது எனவும் தேக்சந்த் குழு கூறியுள்ளது.*

*நாடெங்கும் மதுவிலக்கைக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை தந்த விவரங்கள்தான் நான் குறிப்பிட்டவை.*

## மதுவிலக்கும், காங்கிரஸ் கட்சியும்.

*1957-ஆம் ஆண்டும், 1962-ஆம் ஆண்டும் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரச்சாரத்தின்போது என்ன அறிக்கைகளை வெளியிட்டார்கள் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.*

"Prohibition has long been the Congress policy and it has been introduced in some parts of the country. Progressive steps will be taken to introduce it in other parts."

*''மதுவிலக்கு நீண்ட காலமாகவே காங்கிரசின் கொள்கையாக இருந்து வந்திருக்கிறது; அது நாட்டின் சில பகுதிகளில் அமுலாக்கவும்பட்டிருக்கிறது. அதை நாட்டின் மற்றப் பாகங்களிலும் அமல்படுத்தவும் முற்போக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.''*

*இது 1957-ஆம் ஆண்டின் காங்கிரஸ் தேர்தல் அறிக்கை.*

"The Congress Policy of Prohibition should be maintained and encouraged."

''காங்கிரசின் மதுவிலக்குக் கொள்கை பேணப்பட வேண்டும்; ஊக்குவிக்கப்பட வேண்டும்!''—

இது 1962-ஆம் ஆண்டின் காங்கிரஸ் அறிக்கை.

மதுவிலக்கும், மராட்டிய மாநிலமும்.

1962-ஆம் ஆண்டு காங்கிரஸ் அறிக்கைக்குப் பிறகு மராட்டிய மாநிலத்தில் முதலமைச்சர் அவர்கள் சட்ட சபையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். 1963-ல் அதாவது 'தேக்சந்த் கமிட்டி' நிறுவப்பட்ட சில மாதங்களுக்குப் பிறகு, மதுவிலக்குக் கொள்கையை மராட்டியம் தளர்த்தத் தொடங்கியது. அப்போது மாநில முதலமைச்சர் பேசுகையில் குறிப்பிட்டதாவது;

மராட்டிய முதல்வர் 1963 டிசம்பர் 31-ஆம் தேதி அறிவித்தது இது:

Beverages with an alcoholic content not exceeding 3·5 percent will be made freely available.

Toddy with alcoholic content not exceeding 3·5 percent will be made freely available.

3·5 சதவிகிதத்துக்கு மேற்படாத போதைப் பொருள் உள்ள குடிவகைகள் தாராளமாகக் கிடைக்கும்.



3·5 சதவிகிதத்துக்கு மேற்படாத போதைப் பொருள் உள்ள கள் தாராளமாகக் கிடைக்கும் என்கிற அளவுக்கு மராட்டிய மாநிலத்தில் மது விலக்கு தளர்த்தப்பட்டது.



மராட்டிய முதல்வர் மேலும் கூறியதாவது :

"However, the experience of the implementation of this policy over the last 14 years compels us to take a more realistic and rational view of the situation as it has developed. We find that the biggest factor which works against Prohibition is not the consumer who is only the victim of the evil of drinking but illicit distillor, the bottlegger and trafficker"

''கடந்த 14 ஆண்டுகளாக மதுவிலக்கை அமல் படுத்தியதில் ஏற்பட்ட அனுபவத்தினால் மேலும் யதார்த்த மான ஒரு கண்ணோட்டத்தை மேற்கொள்ள வேண்டிய நிலையை உருவாக்கியிருக்கிறது. மதுவிலக்குக்கு எதிரான பெரும் அம்சம், குடிப்பவர்கள் அல்ல—அவர்கள் பழக்கத்துக்கு இரையானவர்கள். ஆனால் கள்ளச் சாராயம் காய்ச்சுவோர்—கடத்தல்காரர்—விற்பனையாளர்கள் இவர்கள்தான் மதுவிலக்குக் கொள்கையின் எதிரிகள்'' என்று பேசி, 63-ஆம் ஆண்டு மதுவிலக்குக் கொள்கை மராட்டியத்தில் தளர்த்தப் பட்டது.

அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் தமிழ்நாடு காங்கிரசின் கருத்து.

1968-ஆம் ஆண்டு குனஹா நகரில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி மாநாட்டில் தேசம் முழுவதும் பூரண மதுவிலக்கு அமல் செய்ய ஏழு ஆண்டுக் காலம் அவகாசம் தரவேண்டும் என்ற ஒரு திருத்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அப்போது திரு. நிஜலிங்கப்பா அவர்கள்தான் தலைவராக இருந்தார். திரு. சி. சுப்பிரமணியம் தமிழ்நாட்டுப் பிரதிநிதியாக இருந்தார். திருமதி சுசீலா நய்யார் போன்ற காந்தியடிகளைப் பின்பற்றிய வீராங்கனைகளும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் 1968-ல் இருந்து இன்னும் 7 ஆண்டுக் காலத்தில் இந்தியா முழுமையிலும் மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்த வேண்டும் என்பது. அந்த மாநாட்டில் கலந்து கொண்ட தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், மது விலக்குப் பிரச்சினையை உணர்ச்சிப்பூர்வமாக அணுகக்கூடாது என்றும், நடைமுறையில் அமல் செய்யும் வகையில் அணுக வேண்டும் என்றும் குறிப்பிட்டார். அந்த நேரத்தில் தமிழ் நாட்டிலே உள்ள ஒரு பத்திரிகை எழுதிய தலையங்கத்தைத் தலைவரின் அனுமதியோடு படித்துக் காட்டுகிறேன்.

இந்த நாளிதழ் அன்று என்ன எழுதியது ?

'பஞ்ஜியில் நடைபெறும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலும், அதற்கு முன்னால் நடைபெற்ற காரியக் கமிட்டிக் கூட்டத்திலும் மதுவிலக்கு பற்றிக்

காரசாரமான விவாதங்கள் நடைபெற்றிருப்பதில் வியப்பில்லை. காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையில் மதுவிலக்கினை ஒரு அடிப்படைக் கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளோம். நமது அரசியல் சட்டமும் கட்டளைக் கொள்கைகள் பகுதியில் அதைத் தெளிவாக வற்புறுத்தியுள்ளது.

ஒன்றைக் கொளகையளவில் ஒப்புக் கொள்வது வேறு; அதை நடைமுறையில் அமல் செய்வது பற்றி அபிப்பிராய பேதங்கள் எழுவது வேறு.

பூரண மதுவிலக்குக் கொள்கையினை எப்போது அமல் செய்வது, எப்படி அமல் செய்வது என்பது பற்றிக் காங்கிரஸ் மேலிடத்தில் நிலவிடும் கருத்து வேற்றுமையினை யாரும் பெரிதுபடுத்தத் தேவையில்லை.

மதுவிலக்கு என்பது வெறும் ஒழுக்கக் கோட்பாடு மட்டுமல்ல. அதற்குப் பின்னே பொருளாதார விளைவுகளும் உண்டு. எனவே, மதுவிலக்கினை அமல் செய்யும் விஷயத்தில் பல்வேறு ராஜ்ய முதல்வர்களும் காட்டியுள்ள தயக்கத்தினை அலட்சியப்படுத்தவோ அல்லது மதுவிலக்கு விஷயத்தில் அவர்கள் தேவையான ஆர்வம் காட்டத் தவறிவிட்டார்கள் என்று விமர்சிப்பதோ அவர்களுக்கு நியாயம் வழங்கியது ஆகாது.

பூரண மதுவிலக்கோ அல்லது பகுதி மதுவிலக்கோ அமலாகும் ராஜ்யங்களிலேகூட அது முழு வெற்றியடைந்து விட்டதாகச் சொல்ல முடியாது. உதாரணமாகப் பூரண மதுவிலக்கு நடைமுறையிலிருக்கும் தமிழகத்தில் மது இறக்குவதும், விற்பதும் சட்டப்படி தடைப்படுத்தப்பட்ட காரியங்கள் ஆனாலும், ஆங்காங்கே பரவலான குடிசைத் தொழிலாக அது அமோகமாக நடைபெற்று வருவதைச் சட்டம் கண்ணை மூடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது அனைவரும் அறிந்த விஷயம். இப்படி ஒரு சட்டத்தையும் போட்டு, அது மீறப்படுவதைக் கையாலாகாத்தனத்தோடு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதை விட அப்படியொரு சட்டத்தை நிறைவேற்றாமல் இருப்பதே விவேகமான செயலாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தவிர மதுவின் தீமையையும் ஒழிக்க முடியாமல் அதனால் கிடைக்கும் வருமானத்தையும் இழப்பது, ஒழுக்கம், நிதி ஆகிய இரண்டு முனைகளிலும் பெரு நஷ்டம் என்பதனை எவரும் மறுக்க முடியாது.

கௌரவப் பிரச்சினையாகக் கருதிச் சில பல திட்டங்களை மேற்கொள்ளுவதை விட சமூகநலனுக்காகச் சாத்தியக் கூறுகளை மனத்தில் கொண்டு திட்டமிடுவதும் செயல்படுத்துவதும் வரவேற்கக் கூடியதாகும்.



மதுவிலக்கு கூடாது என்பதல்ல நமது வாதம், ஒழுங்காக அமல் செய்ய முடியவில்லையானால், நிதிநிலை வசதி கருதி அதைக் கைவிடுவதுகூடத் தவறு அல்ல என்பதே நமது நிலை.''

இது 'நவசக்தி'யின் தலையங்கம். 1968 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6ஆம் தேதியன்று 'நவசக்தி' பத்திரிகையில் எழுதியுள்ள தலையங்கம்.

ஆனால் இன்றைக்கு வேறே எழுதுவார்கள். எனினும் அன்றைக்குக் கைவிட்டுவிடுவது சாலப்பொருத்தம் என்றும், மாநில முதல்வர்களே பலர் அலட்சியப்படுத்தும் காரணத்தாலும், ஆர்வம் காட்டவில்லை என்பதாலும் அவர்கள் மீது குற்றம் கூறக் கூடாது என்றும் அன்றைக்கு 'நவசக்தி' பத்திரிகை எழுதியிருப்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அன்று அண்ணாவுக்கு மாசு தேடியோர்
இன்று அண்ணாவைப் பற்றிப் பேசுகிறார்கள்.

அண்ணாவைப் பற்றிச் சொன்னார்கள். அண்ணா வழியிலே வந்தவர்கள், அண்ணாவின் வழியில் முழுக்க முழுக்கப் பின் செல்லுபவர்கள், அதை மீறிப்போகலாமா என்றெல்லாம் கேட்டார்கள்.

அண்ணாவின் ஆன்மா கண்ணீர் விடும். அண்ணாவின் ஆன்மா சபிக்கும் என்று காங்கிரஸ் உறுப்பினர்களும் பேசினார்கள். நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அண்ணா அவர்கள் தீவிரமாக மதுவிலக்கை அமல்படுத்துவதாகச் சொன்ன போது குன்ஹா நகர் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், சட்டமன்றத்தின் முன்னாள் கொறடா என்ன பேசினார் தெரியுமா?

''குற்றம் செய்பவர்கள் கைது செய்யப்படக்கூடாது, அல்லது கோர்ட் முன் தாக்கல் செய்யப்படக்கூடாது என்று தமிழக முதன் மந்திரி உத்தரவிட்டுள்ளதாக'' அவர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் குற்றஞ் சாட்டினார்.

மதுவிலக்குக் குற்றம் செய்பவர்கள் கைது செய்யப்படக் கூடாது அல்லது கோர்ட் முன் தாக்கல் செய்யப்படக்கூடாது என்று தமிழக முதன் மந்திரி (அப்பொழுது அண்ணா முதலமைச்சர்) உத்தரவிட்டுள்ளதாகவும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் சொன்னார். அண்ணா தீவிரமாக மதுவிலக்கை அமல்படுத்துவதாகச் சொல்வதற்காக அவருக்குப் பரிசாக அந்தப் பேச்சு அமைந்திருந்தது!

இப்பொழுது வேண்டுமென்றே அண்ணாவை இழுக்கிறார்கள். அண்ணாவின் கொள்கையை மீறி விட்டீர்கள். 'நீ யார்?' என்றெல்லாம் டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள்.

நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இதே மாமன்றத்தில் 1968-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ஆம் தேதி எங்கள் தலைவர் அண்ணா அவர்கள் ஐந்தாண்டுக்காலத்தில் தமிழகத்திலுள்ள அரசுக் கல்லூரிகள் அனைத்திலும் தமிழ்தான் பாடமொழியாக இருக்கும் என்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள்.

அந்தத் தீர்மானத்தை நாங்கள் அமல் படுத்துவதற்காகச் செயல் வடிவத்திற்குக் கொண்டு வரக்கூடிய நேரத்தில் எழுந்த கிளர்ச்சிகளை நீங்கள் யாரும் அறியாதவர்கள் அல்ல.

அதற்காக 'லட்சுமணசாமி முதலியார் கமிட்டி போடப்பட்டது. அண்ணா அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்திற்குப் புறம்பாகத் தமிழகம் முழுவதும் எல்லா இடங்களிலும் தமிழே பாட மொழியாக இருக்கும் என்பதற்கு மாறாக—லட்சுமணசாமி முதலியார் சிபாரிசின் அடிப்படையிலே இன்றைய தினம் அரசுக் கல்லூரிகளில் கூட ஆங்கிலத்தைப் பாட மொழியாக விரும்புகிறவர்களுக்கு வாய்ப்பளிக்கும் நிலையில் வசதி செய்யப்பட்டிருக்கிறது என்றால், அண்ணா அவர்கள் காலத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை என்ன செய்தீர்கள் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் கேட்க வேண்டாமா? கேட்கவில்லை, காரணம், அவருக்குச் சாதகமான விஷயம்.

அண்ணா அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள்; கால வேறுபாடு, கால மாறுபாடு, நாட்டு நிலைகளை உணர்ந்து அனைத்துக் கட்சித் தலைவர்களையும் சந்தித்து முடிவெடுத்து, அந்தத் தீர்மானத்தைக் கொஞ்சம் மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுதும்கூட மதுவிலக்கை ஒத்தி வைத்திருக்கிறோம் என்றுதான் சொல்கிறோம்.

சுதந்திராக் கட்சியின் சார்பிலும் சிலர் மதுவிலக்கை ரத்துச் செய்வதை வரவேற்கிறார்கள். சாதிக் அலி காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவரும் மேலவையிலே வரவேற்றிருக்கிறார். கீழவையில் எதிர்க்கிறார்கள். மேலவையில் திரு ஈசுவரமூர்த்தி அவர்கள் வரவேற்றுப் பேசியிருக்கிறார்.

கடைசியாக நம்முடைய திரு பொன்னப்ப நாடார் அவர்களும் என்ன பேசினார்கள்? மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்யக்கூடாது என்ற கருத்தைப் பேசிவிட்டுக் கடைசியாக "சட்டத்தைப் போடுங்கள். ஜாக்கிரதையாக இருங்கள்" என்று சேலத்தைக் சுட்டிக் காட்டி, ஒத்தி வைத்ததற்கு அவரும் அனுசரணையாகத்தான் வந்தார் . . . . . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார்.—தலைவரவர்களே, நான் அனுசரணையாக இல்லை என்ற தன்னிலை விளக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மதுவிலக்கு இருக்க வேண்டு



மென்று பரிபூரணமாக நம்புகிறேன். அதற்குக் களங்கம் கற்பிக்க வேண்டுமென்று முதலமைச்சரவர்கள் நினைத்தால் அதற்கு நான் பொறுப்பு அல்ல.

முதல்வர்.—களங்கம் கற்பிக்கவும் மாட்டேன். காட்டிக் கொடுக்கவும் மாட்டேன்.

டாக்டர் ஹாண்டே.—இந்த குறிப்பிட்ட பிரச்சினையில் அண்ணாவின் பாதையிலிருந்து மாறுவதேன் என்பதுதான் எனது கேள்வி. இது தவிர மதுவிலக்கைத் தளர்த்துவதற்கு ஆதரவாக முதல்வர் அற்புதமான உரை ஆற்றியிருக்கிறார். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட மாறுதல் என்ன என்பதே என் கேள்வி.

### அண்ணா வழி என்ன?

முதல்வர்.—அண்ணா வழி ஒரு நல்ல ஜனநாயக வழி. அதைப் பின்பற்றுபவர்கள் நாங்கள். ஜனநாயக வழிகளில் ஒரு காலத்திலே சொல்லப்பட்ட கருத்துக்கள் வேறொரு காலத்திலே பரிசீலிக்கப்படலாம். அண்ணா அவர்கள் திராவிட நாடு கொள்கையில் அழுத்தந் திருத்தமாக இருந்தார்கள். பிறகு நாட்டின் நிலை, இந்தியாவின் பாதுகாப்பு இவைகளை உத்தேசித்துத் திராவிட நாடு கொள்கையை மறு பரிசிலனை செய்வதற்காகப் பொதுக் குழுவைக் கூட்டினார்கள். பொதுக்குழு ஆராய்ந்து, பரிசிலித்து, பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டுவிட வேண்டுமென்று கூறியது. அண்ணா அவர்கள் ஜனநாயகத்திற்குத் தலை வணங்கி அதை ஏற்றுக் கொண்டார்கள்.


சனநாயகவழி

அதைத்தான் நாங்களும் கடைப்பிடித்து வந்தோம். மறுபரிசிலனை செய்யவேண்டுமென்று பொதுக்குழு விரும்பியது பொதுக்குழு அமைச்சரவைக்கு இட்ட கட்டளைக்கு நாங்கள் தலை வணங்கினோம்.

அண்ணா அவர்கள் ஜனநாயகத்திற்குத் தலைவணங்கினார்கள். நாங்களும் ஜனநாயகத்திற்குத் தலைவணங்குகிறோம். ஆகவே, இது அண்ணா வழி தானே தவிர, வேறல்ல.

டாக்டர் எச். வி. ஹாண்டே.—அண்ணாவிற்கு மதிப்பளிக்கவில்லை, பொதுக்குழுவிற்குத்தான் மதிப்பளித்திருக்கிறீர்கள்,

முதல்வர்.—அண்ணா வணங்கிய பொதுக் குழுவிற்கு நாங்கள் தலைவணங்குகிறோம். நாங்கள் கல்கித் தோட்டத்திற்கு மாத்திரம் தலை வணங்குபவர்கள் அல்ல.

டாக்டர் எச். வி. ஹாண்டே.—அண்ணாவின் பெயரைச் சொல்லி ஊரை ஏமாற்றுகிறார்கள்.

*(பல உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினார்கள்.)*

பேரவைத் தலைவர்.—அதை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்து விடலாம்.

முதல்வர்.—தயவுசெய்து வேண்டாம். அண்ணாவின் பெயரைச் சொல்லி நாங்கள் ஊரை ஏமாற்றுகிறோம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். நாங்கள் ஊரை ஏமாற்றுகிறோமா, இல்லையா என்பது ஊருக்குத் தெரியும். உளறுவாயர்களுக்குத் தெரியவேண்டிய அவசியமில்லை.

*('ஷேம், ஷேம்' என்ற குரல்கள்.)*

டாக்டர் எச். வி. ஹாண்டே.—சொல்வதற்கு உங்களுக்கு என்ன யோக்யதை இருக்கிறது?

*(பல உறுப்பினர்கள் ஒழுங்குப் பிரச்சினை என்று சொல்லிக் கொண்டு எழுந்து நின்றார்கள்.)*

பேரவைத் தலைவர்.—எல்லாரையும் அமருமாறு கேட்டுக் கொள்கிறேன். ஊரை ஏமாற்றுகிறார்கள் என்று சொல்வதைச் சபைக் குறிப்பிலே இருக்கலாம் என்று முதலமைச்சரவர்கள் பெருந்தன்மையுடன் கூறியதால், என்ன வேண்டுமானாலும் சொல்லலாம் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள். கருதிக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது அவர் சொல்லியதை 'என்ன யோக்கியதை' என்று சொல்லியதைத் திரும்பப் பெற வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே.—எதை வாபஸ் வாங்க வேண்டும்?

பேரவைத் தலைவர்.—'என்ன யோக்கியதை இருக்கிறது' என்று சொல்லுவதை இந்த மன்றத்தின் மரபுக்கு முரணான வார்த்தையை வாபஸ் வாங்க வேண்டும்.

அமைச்சர் அன்பழகன்.—கனம் உறுப்பினர் அவர்கள் முதலில் அவைத் தலைவருக்குப் பணிய வேண்டும். அதன் பின்னரே, அவர் விளக்கம் எதுவும் தர விரும்பினால் அதைத் தனிப்பட்ட முறையிலே அவைத் தலைவரிடம் தெரிவிக்கலாம். அவைக்குத் தெரிவிக்க வேண்டியதில்லை. அவர் தன் உணர்ச்சிகளை இங்கே பரிமாற வேண்டியதுமில்லை.



டாக்டர் எச். வி. ஹாண்டே.—'என்ன யோக்கியதை இருக்கிறது' என்று சொன்னதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். ஆனால் . . . . . . . . . . .

## யார் உணர்ச்சியையும் புண்படுத்தமாட்டோம் !

முதல்வர்.—நான் மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்வது நல்லது அல்ல என்ற கருத்தை-உணர்ச்சியை எப்பொழுதும் புண்படுத்த விரும்பவில்லை.

டாக்டர் ஹாண்டே போன்றவர்கள் வேண்டுமானால் எங்கள் உணர்ச்சிகளைப் புண்படுத்த விரும்பலாம். ஆனால் நான் யாருடைய உணர்ச்சியையும் புண்படுத்த விரும்பவில்லை.

மதிப்பிற்குரிய திருப்பூர் மொய்தீன் அவர்கள் பேசினார்களே, அது திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்ட கருத்தா? அல்ல! தமிழரசுக் கழகத்தின் சார்பிலே சொல்லப்பட்டதும் முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்ட கருத்தா? பி.சோ. கட்சியினர் கூறிய கருத்து முன்னேற்றக் கழகத்தை எதிர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்ட கருத்தா? அல்ல!

அவர்களெல்லாம் உள்ளபடியே மதுவிலக்கில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவேதான் உணர்ச்சி பூர்வமாகப் பேசினார்கள். அந்த உணர்ச்சிகளுக்கு நான் என்றைக்கும் மதிப்பளிக்கத் தயாராக இருக்கிறேன்.

அதே நேரத்தில் நாம் ஒருவருக்கொருவர் மதிப்பளிப்பதற்குத் தயாராகிக்கொள்ள வேண்டும். ஒருவருக்கொருவர் மரியாதை கொடுக்கத் தயாராகிக் கொள்ள வேண்டும்.

இன்றைக்கு அண்ணாவின் வழியைப் பின்பற்றுகிறோம் என்று சொன்னால்—அண்ணாவின் வழி ஜனநாயக வழி; அந்த ஜனநாயக வழியைப் பின்பற்றுகிறோம். எந்தக் கருத்தையும் பொதுக் குழுவில் வைத்துப் பொதுக் குழுவின் கட்டளையை ஏற்றுக் கொள்வதுதான் அண்ணாவின் வழியாகும்.

அதே வழியைப் பின்பற்றித்தான் இந்தக் கொள்கையைப் பற்றிப் பொதுக் குழுவின் முன்னால் வைத்து ஆய்ந்து, பொதுக்குழுவின் கட்டளையை ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

ஆகவே இது அண்ணலின் வழியா, அண்ணலின் வழியா என்று கேட்டால் இந்தியாவில் இருக்கிற காங்கிரஸ் முதலமைச்சர்கள் மதுவிலக்கை ரத்து செய்து விட்டதால் அவர்கள் எல்லாம் காந்திய வழியில் நம்பிக்கையற்றவர்கள் என்றா அர்த்தம்?

## மதுவிலக்கில் விதிவிலக்கு

அன்று திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் 'சில பேருக்காவது மதுவிலக்கில் இருந்து விதிவிலக்கு செய்தாக வேண்டும். இராணுவ வீரர்களுக்கு மது கிடைக்கச் செய்யவேண்டும். இதில் எல்லாம் காந்தியைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. ஒரு காலத்தில் காந்தியார் இராணுவமே வேண்டாமென்று சொன்னார்கள். இராணுவமே இல்லாமல் இந்தியா வாழ முடியுமா ? ஆகவே, மது அருந்தும் உரிமைகள் இராணுவத்திற்கு அளித்தாக வேண்டும்' என்று குல்ஹாபூரில் நடந்த காங்கிரஸ் கட்சி மாநாட்டிலே பேசினார்.

இவர்கள் எல்லாம் பழைய காங்கிரசாக இருந்த போதுதான் மராட்டியத்திலே மதுவிலக்கு ரத்துச் செய்யப் பட்டது. மைசூரிலே மதுவிலக்கு ரத்துச் செய்யப்பட்டது. ஆந்திராவிலே மதுவிலக்கு ரத்துச் செய்யப்பட்டது. வேறு எந்த மாநிலத்தில் மதுவிலக்கு ரத்துச் செய்யப்படாமல் இருக்கிறது ?

அவர்கள் எல்லாம் காங்கிரஸ்காரர்களாக இருந்தாலும் அவர்கள் காந்திய வழிக்குப் புறம்பாக, காந்திக்கு மரியாதை தரக்கூடாது என்று செய்தார்கள்?

## அண்ணா எங்களை விட்டுவிடமாட்டார்!

அந்த அளவிலே இந்த அரசை, இந்த அரசில் இருக்கும் அமைச்சர்களை, அண்ணாவால் தயாரிக்கப்பட்ட எங்களை எண்ணிப் பார்க்க வேண்டும். அண்ணாவின் பெயரைப் பயன்படுத்தி எங்கள் மீது குற்றஞ்சாட்ட விரும்புகிறார்கள். அதற்கும் எங்கள் அண்ணாவைப் பயன்படுத்தி எங்களை ஒழித்து விடலாம் என்று நினைக்காதீர்கள். எங்கள் அண்ணன் எங்களை அவ்வளவு சாதாரணமாக விட்டுவிடமாட்டார்.

## அவலங்களை நிறுத்தத்தான் . . . . . !

கடைசிப் பகுதியை அவலம் (டிராஜடி) என்றார்கள். மதுவிலக்கு அமலில் இருந்தபோது எவ்வளவு அவலங்கள் நடந்திருக்கின்றன?

இதே சென்னையில் 7—8—1967 அன்று வார்னிஷ் குடித்து 113 பேர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு 51 பேர் இறந்தார்கள்.

காஞ்சிபுரத்தில் 145 பேர் வார்னிஷ் சாப்பிட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு 24 பேர் இறந்தார்கள்.



செங்கற்பட்டில் 151 பேர் மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டு 14 பேர் இறந்தார்கள்.

வாலாஜாபாத்தில் 84 பேர் மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டு 14 பேர் இறந்தார்கள்.

அந்த அவலங்களை நிறுத்தத்தான் இந்த 'டிராஜடி' என்றால், நான் இது 'டிராஜடி' என்பதை உள்ளபடியே ஏற்றுக் கொள்கிறேன்.

## தோல்வியை ஒத்துக்கொள்கிறோம்.

மதுவிலக்கு தோல்வியுற்று விட்டது. அந்தச் சட்டம் இங்கே வெற்றிகரமாக நடைபெற முடியவில்லை என்பதை இதற்கு முன் இருந்த அமைச்சர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். நாங்கள் அதைத் தாராளமாக ஒத்துக் கொள்கிறோம்.

அண்ணா உயிரோடு இருந்த நேரத்திலே தென்னை மரத்திலிருந்து பதநீர் இறக்குவதற்கு அனுமதி கொடுத்தார்கள். ஆனால் அது பதநீராக இறக்கப்படாமல் கிட்டத்தட்ட கள்ளைப் போன்று இறக்கப்பட்டு வந்தது. கிட்டத்தட்ட மதுவிலக்கை ரத்துச் செய்தது போன்றது தான் இது. இதை அனுபவத்தில் கண்டதால் நான் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் அந்த அனுமதியை ரத்துச் செய்து ஓர் உத்தரவு போட்டேன். உடனே அத்தனைபேரும் கோர்ட்டிற்குப் போனார்கள். அந்த உத்தரவை அமல் செய்ய முடியவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் வளர வளரத்தான் வேறு வழியில்லாமல் இந்த முடிவிற்கு வந்திருக்கிறோமே யல்லாமல் மாண்புமிகு உறுப்பினரின் உணர்ச்சிக்கு நாங்கள் கட்டுப்படாதவர்கள் அல்ல. யாருடைய உணர்ச்சிகளையும் நாங்கள் மதிக்காதவர்கள் அல்ல.

## கள்ளைப் பற்றிக் கம்பராமாயணம் !

சுதந்திராக் கட்சியின் சார்பில் நம்முடைய பெரியவர் சா. கணேசன் வெகு உருக்கமாகப் பேசினார். வள்ளுவர் பிறந்த நாட்டிலே குடி இருக்கலாமா என்று கேட்டார்கள். வள்ளுவர் பிறந்த நாட்டிலேதான் கம்பர் இராமாயணம் எழுதினார்.

கம்ப இராமாயணத்திலே கம்பர், மாதர்களும் குடித்தார்கள் என்று எழுதியிருக்கிறார். வள்ளுவர் பிறந்து குறளை எழுதியதற்குப் பிறகு தான் கம்பர் இந்த நாட்டிலே பிறந்து இராமாயணத்தை எழுதியிருக்கிறார்.

குறளைப் படித்து அறிந்த கம்பர் எத்தனையோ இடங்களில் இராமாயணத்தில், மக்கள் கள்ளைக் குடித்தார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அதையும் இலங்கையிலேயிருந்த அசுரர்கள் தான் மது அருந்தினார்கள்; மற்றவர்கள் அல்ல என்று வாதிக்கக்கூடும். மிதிலாபுரியிலும் குடித்தார்கள். கம்பர் பாடுகிறார்:—

பளிக்குவள் ளத்து பாக்கும் பசுநறுந் தேறல் மாந்தி
வெளிப்படு நகைய வாகி, வேறென மிழற்று கின்ற
ஒளிப்பினும் ஒளிக்க ஒட்டி ஊடலை உணர்த்து மாபோல்
களிப்பினை உணர்த்தும் செவ்விக் கமலங்கள் பலவும்
கண்டார்.

என்று கம்பர் பாடியிருக்கிறார். எனக்குப் பார்த்துத்தான் படிக்கத்தெரியும்.

தமிழ்நாட்டிலேதான் கம்பர் அயோத்தியைக் கண்டார்; மிதிலையையும் கண்டார் என்று சொல்கிறார்கள். கம்பர் ராமனைக் மாத்திரம் விடுதலை செய்துவிட்டார். வால்மீகி ராமனை குடியிலிருந்து விடுதலை செய்தார். அயோத்தியாபுரி, மிதிலையை விடுதலை செய்யவில்லை.

தசரதன் மிதிலைக்குப் புறப்பட்ட பொழுது, வழியில் சந்தித்த பலர் ''மதுக் கொண்டு மாந்தர் மடவாரில் ஓதை'' என்றெல்லாம் குறிப்பிடுகிறார்.

தசரதனுடன் சென்ற அயோத்திச் சேனைகள் கள்ளுண்டு, இன்பம் அனுபவித்து மகிழ்ந்தனர் என்று உண்டாட்டுப் படலம் கூறுகிறது. வள்ளுவர் எப்படியோ அதேபோல ஆற்றலுள்ள கம்பர் பார்த்தார்; அந்த நிலையை எடுத்துச் சொன்னார்.

கம்பரே சொல்கிறார். ஆகவே கொள்கை ரீதியில் ஒத்துக்கொள்ளவில்லை என்று கூறவில்லை. ஆனால் நிலைமைகளை எடுத்துச் சொல்கிறேன். இந்தியாவில் மட்டுமல்ல அனைத்துலகிலுமே தீமையை உணர்ந்து முயன்று பார்த்தார்கள். ஆனால் முடியவில்லை.

### இங்கிலாந்தில் உள்ளபடி இங்கும் செய்யலாமே!

சுதந்திராக் கட்சியின் தலைவர்களில் ஒருவராகப் போற்றப் படுகிறவரும் சிறந்த மேதையுமான பேராசிரியர் எம். ரத்தினசாமி எம். பி. அவர்கள் ஒரு கட்டுரையை எழுதி, அதை நம்முடைய சுகாதார அமைச்சருக்கும், தொழில் அமைச்சருக்கும், சட்ட அமைச்சருக்கும், அனுப்பியிருக்கிறார்கள். அந்தக் கட்டுரையில் அவர் என்ன குறிப்பிட்டிருக்கிறார்? ''நம் நாட்டுக் கள்ளுக்கடை அசுத்தம் மலிந்தது. வசதி



குறைந்தது. அதற்கு மாறாக இங்கிலாந்திலுள்ள மதுக்கடைகளில் மேஜை, பெஞ்சு போன்ற வசதிகள் உண்டு. சுவையுள்ள சிற்றுண்டியும் அங்குக் கிடைக்கும். குடித்துவிட்டு மட்டும் வெளியே வருபவனால் ஆபத்துகள் விளையலாம். ஆனால் குடியோடு, சிற்றுண்டி சாப்பிட்டு, நல்ல சூழ்நிலையிலிருந்து வீட்டுக்கு வெளிவருபவனால் ஆபத்துக் கிடையாதாம். அது மனோநிலை மாற்றம். இங்கிலாந்தில் உள்ளதை 'மதுக்கடை' என்று சொல்லுவதற்குப் பதில் 'காலம் போக்கும் விடுதி' என்று அழைப்பதே பெரிதும் பொருந்தும். அரசு நிதி வசூலிப்பதில் மட்டும் கண்ணோட்டம் செலுத்தாமல் மக்களின் நலனையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்'' என்று கூறிவிட்டு ''மதுவிலக்கை ரத்துச் செய்தாலும் செய்யாவிடினும் குடிப்பவன் குடித்துக் கொண்டேதான் இருக்கிறான். நல்ல சரக்குக் கிடைக்காவிடில் கண்டதையெல்லாம் குடிக்கிறான். அவதியுறுகிறான். திரு. ராஜகோபாலாச்சாரியார் கள்ளுக்கடையைத் திறந்தால் மனைவியை அடிக்கும் குற்றம் பெருகும் என்கிறார். குடிக்காதவன் மட்டும் மனைவியை அடிக்காமலா இருக்கிறான்? பெருவாரியான குடியர்கள் மனைவியை அடிப்பதில்லை. ஆம். சட்டம் என்பது இந்தப் பெருவாரியான எண்ணிக்கையினரது நலனுக்காக அமைதல் வேண்டும்'' என்றும் பேராசிரியர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

இன்னும் காங்கிரஸ் கட்சி தரப்பில் எந்த அடிப்படையில் பேசினார்கள்! ஏதோ தொலையட்டும் மதுவிலக்கை வரவேற்கிறேன் என்று நண்பர் ஈஸ்வரமூர்த்தி எடுத்துச் சொன்னார் என்றால், இருக்கும் நிலைமைகளை ஆராய்ந்து பார்த்துச் செய்கிறோமேயல்லாமல் வேறு அல்ல. ஏதோ மதுவிலக்குக் கொள்கையில் எங்களுக்குப் பற்றுப்போய்விட்டது என்று தயவு செய்து யாரும் கருத வேண்டாம். நாம் நியமித்த காவல்துறை கமிஷன், நாம் ஆராயச் சொல்லாவிட்டாலும்கூட ஒழுக்கங்கள் எப்படியெல்லாம் குறைகின்றன என்பதற்குச் சில சான்றுகளைச் சொல்லி அந்த அறிக்கையில் மதுவிலக்குப் பற்றியும் சில குறிப்புகள் எழுதினார்கள்.

அப்போது காவல் துறைக் கமிஷன் உறுப்பினராக இருந்த சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் மாத்திரம் மாறுபட்ட குறிப்பை எழுதினார்கள். மற்றவர்கள் எல்லாம் இருக்கும் நிலைமைகளைப் படம்பிடித்துக் காட்டி எழுதியிருக்கிறார்கள். ஆகவே அவைகளை எல்லாம் நாம் மறந்துவிடக்கூடாது என்று உங்களை மிகுந்த பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு 1967-ஆம் ஆண்டிலிருந்து மதுவிலக்குக் குற்றத்தின் காரணமாகக் கைது செய்யப்பட்டவர்கள் தொகை நமக்குத் தெரிகிறது. இந்த ஆண்டு மாத்திரம் இந்தக்

குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டவர்கள் கிட்டத்தட்ட மூன்றரை லட்சம் பேர். இன்றைக்குச் சிறையில் இருப்பவர்கள் கிட்டத்தட்ட 2,000 பேர். அதில் 164 பேர் பெண்களும் இருக்கிறார்கள். (கம்ப ராமாயணத்தைப்பின்பற்றியவர்கள்.)

பெர்மிட்டுகள் பெற்றவர்களில் பெண்களும் இருக்கிறார்கள். ஏறக்குறைய 150 பெண்கள் பெர்மிட் பெற்றிருக்கிறார்கள். மதுவைக் குடிக்கிற நேரத்தில் வாய் கமழுகிற மணத்தை நான் அறியாதவன் அல்ல. எல்லோரையும் சொல்லவில்லை. சிலரிடையே அந்த மணம் கமழ்வதைக் காணாதவன் அல்ல. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை. கிட்டத்தட்ட மூன்றரை லட்சம் பேர் இன்றைய தினம் கைது செய்யப்பட்டார்கள் என்றால் அதில் கைது செய்யப்படாமல் தப்பியவர்கள் எத்தனை பேர் ?

ஒரு வழக்கில் 10 பேர் என்றாலும், போலீஸ் இலாகாக் கணக்குப்படி 27 லட்சம் பேர் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அரிஷ்டம் சாப்பிட்டோ, கள்ளச் சாராயம் காய்ச்சியோ, வேறு போதைப் பொருள்கள் சாப்பிட்டோ லட்சம் பேர் அந்தக் குற்றத்தைச் செய்கிறார்கள். அவர்களால் வர வேண்டிய வருமானம் நமக்கு வரவில்லை. யார் யாருக்கோ போய் விடுகிறது.

## வேதனையான முடிவு.

ஒரு நாளைக்கு ரூ. 5 லட்சம் என்று கணக்கிட்டால் மாதம் ஒன்றுக்கு ஒன்றேகால் கோடி அல்லது ஒன்றேமுக்கால் கோடி! ஆண்டுக்குக் கிட்டத்தட்ட ரூ. 20 கோடி வருமானம். இந்த வருமானம் எங்கே போகிறது ? எங்கோ போகிற வருமானம் அரசுக்கு வரட்டும் என்ற முடிவே தவிர அவர்களைத் திருத்த முடியவில்லை.

இங்கு குன்றக்குடி அடிகளார் அவர்களும், திரு எம். சங்கரலிங்கம் அவர்களும் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். மதுவைச் சாப்பிட்ட வேண்டாம் என்று அறிவுரை செய்ய வேண்டும், மதுவிலக்குப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று.

நண்பர் ஆறுமுகசாமி குறிப்பிட்டது போல், பல ஆண்டுகள் மதுவிலக்குப் பிரச்சாரம் சரிவர நடைபெறாமல் இந்த அளவில் தீமைகள் ஏற்பட்டன. ஆகவே மதுவிலக்கு ஒத்தி வைக்கப்பட்டாலும் அதன் விளைவு, தீமைகள், அதிகக் குடியால் ஏற்படக் கூடிய தீமைகள் இவைகளைப் பற்றிப் பிரச்சாரம் செய்வதில் இந்த அரசு முனைந்து நிற்கும். அதற்



காக முனைந்து நிற்பவர்களுக்கு நிச்சயமாக ஆக்கம் அளிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உறுப்பினர்களின்—தோழமைக் கட்சி நண்பர்களின்—உணர்ச்சியை மதிக்கிறேன். பாராட்டுகிறேன். அவர்களில் சிலபேர் என்னைக் கெஞ்சிக் கூடக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மன்றாடிக் கேட்பதாகக்கூடச் சொன்னார்கள். அவர்களை எல்லாம்விட நான் வயதில் சிறியவன். அப்படி மன்றாடிக் கேட்டதை, கெஞ்சிக் கேட்டதைத் தயவுசெய்து திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஆகவே மிக உணர்ச்சியுடன் பேசியவர்களைக்கேட்கிறேன். இது உங்களை எல்லாம் புறக்கணித்துவிட்டு, உங்கள்உருக்குகிற நெஞ்சை உதறித்தள்ளிவிட்டு, வேண்டுகோளை விழலுக்கு இறைத்த நீராக்கிவிட்டு, நீங்கள் யார் சொல்ல, நான் யார் கேட்க, என்கிற அகந்தையோடு அல்ல, மிகுந்த வருத்தத்தோடு, மிகுந்த வேதனையோடு, இருக்கிற நிலைமைகளை எண்ணி இந்த முடிவைத் தவிர வழி இல்லை என்ற காரணத்தால்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம். அதுவும் ஒத்தி வைத்திருக்கிறோம்.

ஆகவே, அனைவரும் சேர்ந்து இந்திய அரசைக் கட்டாயப்படுத்தவும், இந்தியா முழுமைக்கும் நீங்கள் மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு 1956-ல் நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினீர்களே அதை அமல்படுத்துங்கள் என்று கேட்டுக் கொள்ளவும், அது இந்தியாவில் அமலாக்கப்படுகின்றவரையில் ஒத்தி வைப்புத் தவிர வேறு வழியில்லை என்று சொல்லி, இந்த ஒரு விஷயத்தில் உங்கள் வேண்டுகோளை ஏற்க முடியாமல் இருப்பதற்கு மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## நன்றி.

இந்த நிதிநிலை அறிக்கையின் பேரில் பல கருத்துக்களை எடுத்துக் கூறிய உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து, இடையில் சூடு ஏற்பட்டாலும் அந்தச் சூட்டைத் தமிழ்ப் பண்பின் காரணமாக நிச்சயமாக மறந்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, உங்களுக்கெல்லாம் நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.